॥ श्री देवीमाहात्म्यम् ॥

ஸ்ரீ தேவி மாஹாத்ம்யம்

தமிழுரை



B. S. & F. MART

MADRAS-1

॥ श्री देवीमाहात्म्यम् ॥

ஸ்ரீ தேவீ மாஹாத்ம்யம்

(மூலமும் தமிழில் விரிவான பதவுரை, பொழிப்புரை, கருத்துரைகளுடன் கூடியது)

உரையாசிரியர் :
வெ. ராமச்சந்திர சர்மா

திவான்பகதூர் ஸ்ரீ **K. S.** ராமஸ்வாமி சாஸ்திரியார்
அவர்களுடைய முன்னுரையுடன் கூடியது.

Publishers :

B. S. & F. MART,

High Class Stationers & Publishers,
" Pen Corner "

113, Armenian Street, Madras-1.

1957

முதற் பதிப்பு—1957.

விலை ரூ. 6—50

பாரதி விஜயம் பிரஸ்,
திருவல்லிக்கேணி,
சென்னை-5.

3-3

பொருளடக்கம்

॥ श्री महागणपति प्रातस्मरणस्तवः ॥

(१)

प्रातःस्मरामि गणनाथमनाथनाथं
सिन्दूरपूरपरिशोभितगण्डयुग्मम् ।
उद्दण्डविघ्नपरिखण्डन चण्डदण्ड-
माखण्डलादिसुरनायक बृन्दवन्द्यम् ॥

(२)

प्रातर्नमामि चतुराननवन्द्यमान-
मिच्छानुकूलमखिलं च वरं ददानम् ।
तं तुन्दिलं द्विरसनप्रिययज्ञसूत्रं
पुत्रं विलासचतुरं शिवयोः शिवाय ॥

(३)

प्रातर्भजाम्यभयदं खलु भक्तशोक-
दावानलं गणविभुं वरकुञ्जरास्यम् ।
अज्ञानकानन विनाशन हव्यवाह-
मुत्साहवर्धनमहं सुतमीश्वरस्य ॥

(४)

श्लोकत्रयमिदं पुण्यं सदा साम्राज्यदायकम् ।
प्रातरुत्थाय सततं यः पठेत्प्रयतः पुमान् ॥
सर्वविघ्नहरं देवं सर्वविघ्नविवर्जितम् ।
सर्वसिद्धिप्रदातारं वन्देऽहं गणनायकम् ॥



ஸ்ரீமஹாகணபதயே நம:

முகவுரை

सर्वचैतन्यरूपां तामाद्यां विद्यां च धीमहि ।
बुद्धिं या नः प्रचोदयात् ॥

संविद्रूपा पराशक्तिस्त्रिगुणानन्तरूपिणी ।
जगज्जन्मस्थितिध्वंससाक्षिण्यस्तु शिवाय नः ॥

ஸ்ரீதேவீமாஹாத்ம்யமென்பது பதினெண்புராணங்களில் ஒன்ருகிய மார்க்கண்டேய புராணத்தைச் சார்ந்ததாகும். அப்புராணத்திலே இது எழுபத்து நான்காவது அத்யாயம் முதல், எண்பத்து ஆருவது அத்யாயத்துடன் முடிவடைவது. இச்சிறப்பு வாய்ந்த சிறிய நூலானது மஹாமாயையாம் சண்டிகாதேவியினுடைய அரும் பெரும் சக்திகளேயும், லீலாவிபூதிகளேயும் வெளியிடுவதாகும். இதேபோல வேறு சில புராணங்களிலும், தந்த்ரங்களிலும் ஸ்ரீதேவியினுடைய லீலாவிபூதிகளே விளக்குகின்ற சரிதங்களேக் காணலாம். ஆனுல் மார்க்கண்டேய புராணத்தைச் சார்ந்த தேவீமாஹாத்ம்யத்திற்கே மந்த்ரவடிவாயமைந்திருக்கின்ற தனித்த பெருமையுண்டு. இந்நூல் எழுநூறு ச்லோகங்களேக் கொண்டதாகும். ஒவ்வொரு ச்லோகமும் ஒவ்வொரு மந்த்ரமாகும். இந்நூலுக்குப் பல ஆன்ருேர்கள் அத்யாத்ம வழியைத் தழுவியும், மந்த்ரோபாஸநா வழியைத் தழுவியும், காவ்யரீதியைத் தழுவியும் உரை வகுத்துள்ளனர். அவை நமக்குத் தெரிந்தவரையில் சுமார் நாற்பதுக்கு மேற்பட்டவை எனத் தெரியவருகின்றன.

இவைகளில் அறிவிற் சிறந்த மேதாவியும், ஸ்ரீதேவியை இரவும், பகலும் ஆராதித்து நேரில் காக்ஷி கொண்டு, அவளுடைய ஆசியைப்பெற்று, ஆஸேது ஹிமாசலம் வரையிலுள்ள (ஸேது முதல் ஹிமாலயம் வரையில்) பல தேசங்களில் ஸஞ்சாரம் செய்து, தனது அறிவின் முதிர்ச்சியால் ஆங்காங்குள்ள நாஸ்திகர்களை வாதில் வென்று மஹாமாயையாம் அன்னையினுடைய உபாஸநாதத்துவத்தை, வைதிகமதத்தைத் தழுவிய வழியிலே நிலைநாட்டியவரும் **ஸ்ரீ பாஸ்கரராயர்** ஆவர்.

இவர் இந்நூலுக்கு **குப்தவதீ** என்ற சிறந்த உரை ஒன்றும் வகுத்துள்ளார். அவ்வுரையானது பெரும் பாலும் **காத்யாயநீதந்த்ரத்தைத்** தழுவிய ப்ரயோக விமர்சநத்துடன் சாலச்சிறந்து விளங்குவதாகும்.

இதேபோல வேறு சிலரும் உரை வகுத்துள்ளனர். ஆனால் அவைகளெல்லாம் குப்தவதியைப்போல தெள்ளிய முறையிலே, மந்த்ரவிநியோகங்களுடைய விதிகளை விளக்குவதில் சிறப்புள்ளவைகளாகா. மேலும் ஹோமவிதிகளைச் சிறந்த வழியிலே எடுத்துக் கூறி, ஆங்காங்கு ச்லோகங்களுக்கும் பொருள் விளக்கம் கொடுக்கும் பண்பு இக் குப்தவதிக்கே உரியதாகும்.

மற்றும் இந்நூலுக்கு, **கூடார்த்ததீபிகை, தீபிகை, விவரணம், கௌமுதீ, மந்த்ரகைரவம்** என ஐந்து உரைகளுண்டு. இவ்வைந்து உரைகளும் அச்சாகவில்லை. இவைகளில் முந்தியது மூன்றும் ஆழ்ந்த கருத்துக்களுடன் அத்யாத்மவிஷயங்களை விளக்குவன. பிந்தியது இரண்டும் ஒவ்வொரு ச்லோகத்திற்கும் மந்திரங்களைப் பிரித்துக் கொடுத்து காத்யாயநீ தந்த்ரத்தைத் தழுவியே குப்தவதியைப்போன்று இயற்றப்பட்டதாகும். இவ்வுரைகளின் நடுவே முக்யமான சில மந்த்ரங்களுக்கு ஆங்காங்கு பிரயோக விளக்கங்களும்

கொடுக்கப்பட்டிருக்கின்றன.* எனவே இந்த ஐந்து உரைகளுடன் வெகு நாளைக்கு முன்பு பம்பாயில் பிரசுரித்த துர்காப்ரதீபம், குப்தவதீ, சதுர்தரீ, சாந்தநவீ, நாகேச பட்டீயம், தம்சோத்தீரம், ஜகச்சந்த்ரசந்த்ரிகா என்ற ஏழு உரைகளையும் ஒப்புநோக்கியே இந்தத் தமிழுரை வெளிவருவதாகும்.

இச்சிறு நூல் அன்னையாம் மஹாமாயையி னுடைய அரும்பெரும் சக்திகளை, மக்கள் எளிதில் உணர்ந்து உபாஸிக்கும் வண்ணம் ஸுமேதஸ், ஸுரதன், ஸமாதி இவர்களுடைய ஸம்வாதரூபமாக எடுத்துக்காட்டப் படுவதோடு, ஆழ்ந்தகருத்துக்களையும் கொண்டது என்பதை எவரும் உணராமல் இருக்கமுடியாது.

உலகில் மக்கள் ஸாதாரணமாக மஹாமாயையாம் சக்தியினுடைய உபாஸனையைப் பலவிதமாக அநுஷ்டித்து வருகின்றனர். ஒரு சிலர் கேவலம் இவ்வுலக இன்பமே சாலச்சிறந்தது எனக்கருதி, அதற்காக இரவும் பகலும் அர்ச்சனை, ஹோமம், தர்ப்பணம் முதலியவைகளைச் செய்து காம்ய பலன்களை அடைந்து மகிழ்கின்றனர். வேறு சிலர் அஜ்ஞானம் அழியவும், ஞானம் பெருகவும் பிறவித்துன்பத்தை விட்டுப் பிரிந்து அன்னையின் சரணாரவிந்தங்களில் ஒன்றாக லயித்து நிற்கின்ற பேரின்பமாம் பெருங்கடலில் மூழ்கித் திளைத்து நிற்க விரும்புகின்றனர்.

இவர்களில் எவரும் ஸ்ரீகுருவினுடைய உபதேசத்தை முறைப்படி அடைந்து, பரம்பரையாகக் கிடைத்துள்ள குருக்களின் வழியைப் பின்பற்றி அன்னையை வழிபட வேண்டுமேயல்லாது வெறும் பெருமைக்காக உபதேசம்

---

* இவைகளிலுள்ள பிரயோகங்கள் சிலவற்றைத்திரட்டி ப்ரயோக பரிமளத்துடன் கூடிய எமது தேவீமாஹாத்ம்யம் மூலத்தில் அநுபந்தமாகச் சேர்க்கப்பட்டுள்ளன.

என்ற ஒன்றைப் பெற்று உபாஸிக்க முடியாது என்பது உறுதி. அப்படிச் செய்தால் அது உலகை ஏமாற்றுவதோடு பாபத்தையும் ஸம்பாதித்துக் கொள்ளுவதாகும். மேலும் இவ்வுபாஸனைக்கு அத்யாத்மஞானம் அவசியம் என்பதைப் பல நூல்களிலிருந்தும் தெரிந்து கொள்ளலாம். அந்த ஞானமும் ஸ்ரீகுருவினுடைய பரிசர்யையினால் (ஸேவை) உண்டாகவேண்டுமேயல்லாது வெறும் புத்தகத்தைப் பார்த்து படித்தால் உண்டாகிவிடாது. குருசிஷ்யக்ரமம், உபதேசக்ரமம, தீக்ஷாக்ரமம், முதலியவைகளுடைய விதிகளைப் பல உபநிஷதங்களிலும், ஆகமங்களிலும், தந்த்ரங்களிலும் விரிவாகக் காணலாம். எனவே இவ்வளவு நியமங்களைக்கொண்டு இவ்வுபாஸனையானது தக்க நெறியைக் கடைப்பிடித்துச் செய்யவேண்டுவது அவசியம் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

சென்ற சில தினங்களாக இச்சிறப்புவாய்ந்த தேவீ சரிதத்தைத் தமிழில் மொழிபெயர்க்கவேண்டுமென்ற முயற்சியானது அன்னையின் திருவருளால் என் மனதிலே தோன்றி வந்தது. அதற்காகப் பலவிடங்களிலும் சென்று பல உரைகளைச் சேகரித்து, அவைகளையும் ஒப்பு நோக்கியே எனது சிற்றறிவிற்கு எட்டியவரையில் இதை ஒருவாறு மொழிபெயர்க்கலானேன்.

இதை மொழிபெயர்க்கத் தொடங்கியதும் இது மந்த்ரவிஷயமானதே இதை எவ்விதம் மொழிபெயர்த்து வெளியிடுவது என்ற ஐயமொன்றும் மனதிலே நிகழ்ந்தது. ஆயினும் பொருள் விளக்கம் ஒன்றும் இல்லாமல் பல அன்பர்கள் சிரத்தையின் மிகுதியால் அநுதினமும் பாராயணம் செய்து வருவதைக் கண்டு, அவர்களுக்கு உதவியாகப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை முதலியவைகளுடனும் ஆங்காங்கு விசேஷப் பொருள் விளக்கங்களுடனும், யாவற்றையும் ஒன்று

திரட்டி இதை வெளியிடத்துணிந்தேன். இதற்கு இடையூறுகள் பல. எனினும் அன்னையாம் மஹாமாயை யினுடைய திருவருளால் இந்த மொழிபெயர்ப்பு ஒரு வாறு முற்றுப்பெற்றது. இந்நூல் ஸம்ஸ்க்ருதத்தில் அதிகப் பரிசயமில்லாத ஆஸ்திக சகோதர சகோதரி களுக்கு மிகவும் உதவியளிக்குமென்பது அடியேனுடைய தாழ்மையான அபிப்பிராயம். அவர்களுக்கு எந்த வழியில் உதவியளிக்கக் கூடுமென்பதைப் பலதடவை சிந்தித்தே இதை எழுதலானேன்.

நிற்க, தற்காலத்தில் ஒருசிலர் தமிழிலும் ஏன் ச்லோகங்களை எழுதலாகாது என வினவுகின்றனர். இவ்விதம் எனக்குப் பல கடிதங்களும் கிடைத்துள்ளன. அவர்களுக்கு நான் சொல்லுவது யாதெனில், ஸ்ரீதே வியை உபாஸிக்கவேண்டுமென்ற அவாவுடன் மந்த்ரோப தேசம் பெற்று, அதை இரவும் பகலும் ஜபம் செய்யும் அன்பர்கள் ஸமஸ்க்ருத எழுத்தைப் பிழையின்றி உச்சரிக் கக்கற்றால் அது குற்றமாகாது என்பதேயாகும். மேலும் ஒவ்வொரு எழுத்தையும் அவைகளுக்குள்ள ஒலியுடன் உச்சாரணம் செய்தால்தான் அவைகளுக்குரிய பலன்கள் கிடைக்குமென்பது நமது வேதங்களிலே விதித்த கட்டளை யுமாகும். இக்காலத்தில் ஹிந்தி பரவிவருவதால் ஆண் பெண் பலரும் ஸமஸ்க்ருதத்தையுச்சரிப்பது கடினமா யிராது என்பதும் எனது தாழ்மையான அபிப்பிராயம். தமிழ் எழுத்தைக்கொண்டு ஸ்ம்ஸ்க்ருத பதங்களைச் சரி யாக உச்சரிக்க முடியாது. ஆகவே வாசகர்களுக்கு எனது வேண்டுகோள் இது ஒன்றேயாகும். அதாவது பொருளை யறிவதற்கு இது பெரிதும் பயன்படுவதோடு, மூலத்தை அக்ஷரப் பிழையின்றி அந்த அந்த அக்ஷரங்களுக்குரிய ஒலியுடன் உச்சரித்துப் பாராயணம் செய்து நற்பயனை யடைய முயற்சிக்க வேண்டுமென்பதேயாகும்.

இனி இச்சக்தியாம் ஸ்ரீதேவீயுபாஸனை எவ்விதமென் பதைச் சற்று ஆராய்வோம். ஒரு சிலர் ஸ்ரீவித்யோ பாஸனையானது வேதப்ரமாணமாகாது. அது வேதத் திலே சொல்லப்படவில்லை எனவும் கூறுகின்றனர். இந்த ஆதாரமற்ற கூற்றுக்களுக்கு விளக்கம் கொடுக்க முயன்றால் முகவுரை பெருகிவிடும். ஸ்ரீசிவாநந்தயதி, ஸ்ரீலக்ஷ்மீ தராசார்யர், ஸ்ரீகைவல்யாச்ரமீ, ஸ்ரீபாஸ்கரராயர், ஸ்ரீஸிம்ஹராஜர், ஸ்ரீகாமேச்வரஸூரி முதலிய பல ஆன்றோர்கள் தக்க ஆதாரங் களுடன் பல சாக்தக்ரந்தங்களுக்கு உரை வகுக்கும் வகை யிலே, ஸ்ரீவித்யோபாஸனையானது வைதிக மதத்தை யவலம்பித்ததேயாகும். இது அத்வைத மதத்தைப் போல ஞானமார்க்கத்தையே பெரிதும் பின்பற்றிய மோக்ஷ வழிக்கு ஹேதுவாகும் என்பதையும் ஸ்தாபித்துள்ளனர். அவ்வுரைகளை நடு நோக்குடன் ஆராய்ந்தால் உண்மை விளங்காமற்போகாது.

மேலும் ப்ரஹ்மதத்துவத்திற்கும், சக்திதத்துவத் திற்கும் வேறுபாடானது ஒன்றும் கிடையாது என உப நிஷதங்கள் முறையிடுகின்றன. இவ்விதமிருக்க, சக்தியு பாஸனையானது எவ்விதம் வைதிகமாகாது என்பதுதான் விசித்ரமாயிருக்கிறது. ப்ரஹ்மம் இரண்டற்றது அது யாவற்றினும் சிறந்து விளங்குவது. இதற்குச் சான்றாக உபநிஷத்திலே ஒரு கதையுண்டு.

முன்பு ஒரு ஸமயம் உலகம் சூந்யமாயிருந்ததாம். அச்சமயம் ப்ரஹ்மமானது தான் ஒன்றாகத் தனித்துநின்ற பொழுது, தன்னுடைய நிலையையுணர்ந்து, தனக்குத் துணையாக ஒன்றை உண்டாக்க நினைத்ததாம். அப்பொ ழுது, "सोऽकामयत, बहु स्यां प्रजायेयेति—அந்த ப்ரஹ்மம் விரும் பியது. நான் பலவிதமாகப் பெருகுவேன்" என ஸங்கல்பம் செய்துகொண்ட அளவிலே, தனது சக்தியின் பெருமிதத் தால் முதலில் ஒன்றை, தனக்கு இரண்டாவதாக உண்டு

பண்ணியதாம். அதுவே தான் மஹாமாயையாம். இந்த மஹாமாயை ப்ரப்ரஹ்மத்தின் இரண்டாவது தோற்றமே யாகும். இதற்குச் சக்தியெனவும் வழக்குண்டு. அதாவது யாவற்றையும் இயங்கச் செய்வது என்பது பொருள். உலக வழக்கிலும் "நான் சக்தியுள்ளவன், நான் சக்தி யற்றவன்" எனச் சொல்லுவதையும் காணலாம். இந்த மஹாமாயா சக்தியே ப்ரக்ருதி என சாஸ்த்ரங்கள் சொல்லுகின்றன. இதைத் தோன்றச் செய்தவன் மஹேச்வரன் ஆவன். "मायां तु प्रकृतिं विद्यात् मायिनं तु महेश्वरम् – மாயையை ப்ரக்ருதியென அறியவேண்டும், மாயீ மஹேச்வரன்" என ச்வேதாச்வதரமும் கூறும்.

ஆகவே இந்த மஹாமாயைதான் பிரபஞ்சத் தோற்றங்களுக்கு முக்யகாரணமாகும். இந்த மஹாமாயையைத் தான் வேதாந்திகளாலும், மீமாம்ஸகர்களாலும், நையாயிகர்களாலும், வைசேஷிகர்களாலும், பாதஞ்ஜலர்களாலும், வையாகரணிகளாலும், பாஞ்சராத்ரிகளாலும், சைவர்களாலும், தத்தம் அறிவின் முதிர்ச்சிக்கும் அநுபவத்திற்கும் ஏற்றவாறு ப்ரக்ருதி, சக்தி முதலிய பதங்களைக் கொண்டு, வேதோபநிஷதங்களுடைய கருத்துக்கள் முரண்படாவண்ணம் தத்தம் மதத்தை ஸ்தாபித்துக் கொள்ளப்படுவதுமாம்.

மற்றும் சக்தியென்பது ப்ரஹ்மத்தை ஆஶ்ரயித்து நிற்கின்ற ஒருவிதத் தோற்றமேயாகும். அதாவது ப்ரஹ்மத்தின் வெளித்தோற்றம் எனவும் சொல்லலாம். இவ்விதச் சக்தியையே அறிஞர் ஸத்வம், ரஜஸ், தமஸ், என்ற முக்குணங்களுடைய ஸாம்யாவஸ்தை யென்றும், அவ்யக்தமென்றும் (புலப்படாதது) ப்ரதாநம் (எல்லாத் தோற்றங்களுக்கும் முக்கியமானது) எனவும், மஹாமாயை எனவும் கூறுவர்.

இங்கு ஸ்ரீஅப்பய்யதீக்ஷிதேந்த்ராள் தமது ரத்நத்ரயபரீக்ஷையில் பின் வருமாறு வர்ணித்துள்ளதையும் குறிப்பிடலாம்.

"नित्यं निर्दोषगन्धं निरतिशयसुखं ब्रह्म चैतन्यमेकं
धर्मो धर्मीति भेदद्वितयमिव पृथग्भूय मायावशेन ।
धर्मस्तत्रानुभूतिः सकलविषयिणी सर्वकार्यानुकूला
शक्तिः स्वेच्छादिरूपा भवति गुणगणस्याश्रयस्त्वेक एव ॥"

"ப்ரஹ்மமானது நித்யமாயும், தோஷலேசமற்றதாயும், நிரதிசயவடிவாகவும், இரண்டற்ற சைதந்யவடிவாகவும், மாயாவசத்தால், தர்மம், தர்மீ என இருவகையாகப் பிரிந்திருப்பதுமாம். அப்படிப் பிரிந்திருக்குமிடத்தில் தர்மமானது ஸகல கார்யங்களுக்கும் அநுகூலமாகவும், எல்லாவிஷயங்களைப்பற்றியதாயும், அநுபவவடிவாயுமுள்ளதாம். சக்தியானது ஸ்வதந்த்ரவடிவாயிருப்பதுமாம். ஆனால் குணங்களுக்கு ஆதாரம் ஒன்றேயாகும்" மேலும்,

"कर्तृत्वं तत्र धर्मं कलयति जगतां पञ्चसृष्ट्यादिकृत्ये
धर्मः पुंरूपमाप्त्वा सकलजगदुपादानभावं बिभर्ति ।
स्त्रीरूपं प्राप्य दिव्या भवति च महिषी स्वाश्रयस्यादिकर्तां
प्रोक्तौ धर्मप्रभेदावपि निगमविदां धर्मिवद्ब्रह्मकोटी ॥"

"அவ்விடத்தில் உலகங்களுடைய ஐம்பெருந் தொழில்களிடத்திலே கர்த்ருத்வம் (தலைவனது தன்மை) என்றதையே தர்மமெனச்சிலர் எண்ணுகின்றனர். புருஷவடிவாயும், தர்மவடிவாயுமுள்ள ஆத்மா ஸகலஜகத்தினுடைய உபாதாநபாவத்தைத் தாங்கி நிற்பதாகும். அதுவே பெண்மையையடைந்து தனக்கு ஆதாரமாயுள்ள ஆதிகர்த்தாவுக்கு ப்ரகாசத்தைக் கொடுக்கின்ற மஹிஷீ (மனைவி) யெனவும் வழங்கப்பெறுவது என்பது வேதங்களை யுணர்ந்தவர்களுடைய தர்மியைப்போன்ற ப்ரஹ்

மத்தின் வாதமானது தர்மத்தினுடைய பெரிய பேதத்திலும் சொல்லப்படுகிறது'' எனக்கூறுவதும் பொருத்தமாகும்.

இந்த தர்மம் தர்மீ என்பதைச் சக்தியுபாஸகர்கள் **பிரகாசம், விமர்சம்** என அழைப்பர். மற்றும், ஸத்தான ப்ரஹ்மமானது, அஸத்தான ப்ரபஞ்சத்தைக் காட்டிலும் விலக்ஷணமானது (வேறானது) என்றும் கூறுகின்றனர். அந்த சக்தியினுடைய பொருளோ இயங்குதல், திறமை முதலியன என முன்பு கூறப்பட்டது.

இத்தன்மைவாய்ந்த சக்தியானது ரஜோகுணத்தையடைந்ததும், ஜீவராசிகளைப் படைக்கும் சக்தியாகவும், ஸத்வகுணத்தையடைந்ததும், பாலநம் (ரக்ஷா-காப்பாற்றல்) செய்யும் சக்தியாகவும், தமோகுணத்தையடைந்ததும், அழிக்கும் சக்தியாகவும் காணப்படுவதாம். மேலும் **ப்ராஹ்மீ, நாராயணீ, ரௌத்ரீ** முதலிய சக்திகளும் மேற்கூறிய ப்ரஹ்மத்தின் வெளிப்படையான ஒருவிதத் தோற்றங்களேயாகும். அறிகிருன், விரும்புகிருன், செய்கிருன் என்ற வ்யவஹாரத்தின் ப்ரமாணத்தால் **ஞாநம். இச்சை, க்ரியை** என்ற வடிவாயுமுள்ளது இச்சக்தியேயாகும்.

மற்றும் மஹத்தத்துவம், அஹங்காரம், ஐம்பெரும் பூதங்கள் இவைகள் யாவும் சக்தியின் வடிவங்களேயாகும். ஞாநேந்த்ரியங்கள், கர்மேந்த்ரியங்கள், மனஸ், புத்தி, ப்ராணன், கண்ணுல்அறிதல், காதால் கேட்டல், முகர்தல், ருசித்தல், தொடுதல், பேசுதல், எடுத்தல், போகுதல், நினைத்தல், விடுதல், முதலிய பலவகையான செயல்களும் சக்தியினுடைய வடிவங்களேயாகும். இவ்விதம் விளங்குகின்ற சக்தியினுடைய நுட்பத்தன்மையை ஆராய்ந்து அறிந்து கொள்ளு

வதாலேதான் விடுதலைப்பேறு உண்டாகுமென்பதும் பரமஸித்தாந்தமாகும்.

உண்மையில் சக்தியென்பது ஸாமர்த்யம்-திறமை-என்னும் ஒளியேயாகும். அதை, சரீரத்தைச்சார்ந்து உள்ளேயிருந்து கொண்டு தன்னைக் காட்டிலும் வேறுபடாத ஒருவிதத் திறமையெனவும் கூறலாம். அச்சக்தியே பரிணமிக்கும் (விரிவு) பொழுது வெளியேயுள்ள வஸ்துக்களின் வடிவாகவும் திகழ்வதாம். எனவே ஸ்ரீஆசார்யாள் சொன்னது போல ஜீவவிலக்ஷணமான பராப்ரக்ருதியென்ற வடிவுமாம். இது அந்தக் கரணத்தின் உபாதியான ஜீவனே பராசக்தி என்ற சொல்லைக் கொண்டு சுட்டுவதுமாம்.

இவ்விடத்தில் சக்தன்-ப்ரஹ்மன், சக்தி-ஜீவன் "कार्योपाधिरयं जीवः कारणोपाधिरीश्वरः-இந்த ஜீவன் கார்யோபாதி, ஈச்வரனே காரணோபாதி' என்ற ந்யாயத்தை யநுஸரித்து, கர்த்ருத்வம், போக்த்ருத்வம் முதலிய ஸம்ஸாரதர்மங்கள் யாவும். கார்யவடிவாயமைந்த அவித்தையினுடைய உபாதியைக் கொண்டு சிதாபாஸ வடிவாயும், த்வம்பத வாச்யத்திற்கு (குறிப்பு) இலக்காயிருப்பதும் இந்த ஜீவசக்தியேயாம். "परास्य शक्तिर्विविधैव श्रूयते स्वाभाविकी ज्ञानबलक्रिया च - இச்சிறப்புவாய்ந்த ப்ரஹ்மத்தினுடைய சக்தியானது பல படியாகக் கேட்கப்படுகிறது. அவை இயற்கை, ஞானம், பலம், செயல் என்பனவாம்" என ச்வேதாச்வதரம் கூறும்.

ஆகவே கர்த்ருத்வம், போக்த்ருத்வம் முதலிய தர்மங்களிலிருந்து விடுபட்டவனும், ஜனன மரண வடிவாம் ஸம்ஸாரபந்தத்திலிருந்து விடுபட்டவனும், காரணமென்ற உபாதியைக் கொண்டவனுமான ஈச்வரன் தத் பதவாச்யத்திற்கு இலக்கானவன் என்பதும் கிடைக்கப்பெறும்.

இவ்வித குணங்கள் நிறைந்த சிதாபாஸவடிவான ஜீவனுக்கும், சித்தின் வடிவாயமைந்த ஈச்வரனுக்கும் (சக்திக்கும்-சக்தனுக்கும்) சந்த்ரனுக்கும் சந்த்ரிகைக்குமுள்ள இடையருத ஸம்பந்தமுமுள்ளதென்பதுவும் கிடைக்கின்றது.

த்வம்பதத்தால் குறிக்கப்படுகின்ற சைதந்யமும், தத்பதத்தால் குறிக்கப்படுகின்ற சைதந்யமும் அஜ்ஞாந தசையில் வேருகக் காணப்பட்டாலும், உண்மையான ஞாநதசையில் அவையிரண்டும் ஒன்றேயாகும் என்பது தத்த்வமஸி என்ற மஹா வாக்யத்தின் உட்பொருளுமாகும் என ஸித்தமாகிறது. இதுவேதான் ப்ரக்ருதிபுருஷ விவேகமென்பதும்.

இவ்வாறு சக்தியென்பது மனதால் நினைக்க முடியாததாயும், கண்ணுல் காணமுடியாததாயும், உருவமற்றதாயும், லக்ஷணங்களால் அறிய முடியாததாயும், எப்பால் எனச் சொல்லமுடியாததாயும், தொடக்கம், (ஆதி) நடுநிலை (மத்யம்) முடிவு (அந்தம்) என மூன்றும் அற்றதாயிருந்தாலும், சக்தி எனப் பெண்பாலான சொல்லால் சுட்டிக் காட்டப்படுவதிஞலேயே அது பெண்பால் என்பதும் கிடைப்பதாகும்,

எனவே இந்த சக்தியைப் பூஜை செய்யும் பக்தர்கள், தத்தம் மனதால் ஸங்கல்பம் செய்து உருவகப்படுத்திய கைகால் முதலிய அவயவங்களைக் கொண்டு உபாஸனையின் பலத்தாலும், தங்களுக்குக் கிடைத்த அநுக்ரஹ விசேஷங்களாலும், பகைவர்களை வெல்லும் வகையிலே பல மந்தரங்களை யமைத்துக்கொண்டு, அம்மந்த்ரங்களுக்குரிய தீக்ஷாவிதிகளையும், புரஶ்சரணங்களையும் தொகுத்துக்கொண்டு, மன உறுதியுடன் உபாஸித்துப் பெரும் பேறுகளையடைய முடியும் என்ற நம்பிக்கையுடன், சக்திக்

குப் பல குணுதிசயங்களையும், பல உருவங்களையும் உருவ கப்படுத்தி அர்ச்சாமார்கத்தைத் தழுவி, சக்தியை ஒரு முக்ய தேவதையாகவே கருதி வழிபட்டும் வரலாயினர்.

நாளடைவில் இவ்வுபாஸகர்கள், தத்தமக்குரிய வேத விஹிதமான கர்மாக்களைச் செய்வதும் கடினமெனக் கருதி அக்கர்மாக்களையும் புறக்கணித்து, இது ஒன்றே எல்லா விதமான பலன்களையும் கொடுக்க வல்லது என நினைத்ததோடு, இவ்வுபாஸனையையே தங்களுடைய வாழ்க்கையின் முக்யலக்ஷ்யமெனக் கொண்டு, பல உபாஸகர்களையும் தங்களுக்குச் சாதகமாக ஏற்படுத்திக் கொண்டு, கௌலம் முதலிய அறுபத்துநான்கு கலைகள் அடங்கிய தந்த்ரங்களையவலம்பித்து, அவைகளில் கூறியபடியே தங்களுடைய கர்மாக்களைச் செய்யவும் முனைந்தனர். சிறிது சிறிதாக இக்கௌலர்களுக்கு வர்ணாஶ்ரமதர்மத்தை அநுஷ்டிக்க வேண்டுமென்ற எண்ணம் ஒரு சிறிதும் இல்லாமல் போய்விட்டது. கேவலம் அர்ச்சாமார்க்கத்தையே தழுவிவந்ததோடு, அவைகளிலுள்ள பலவகையான ஆபிசார ப்ரயோகங்களையும் செய்து ஸித்திபெற்று, ஸ்திரமில்லாத அற்பபலன்களை யடைந்து ஆநந்தத்தையு மடைகின்றனர்.

இவர்கள் இதற்காக குருவின் உபதேசம் பெற்று தங்களுடைய விருப்பங்கள் நிறைவேறும் வகையிலே அந்த குருவால் சொல்லப்பட்ட புரஶ்சரணத்தையே அநுஷ்டித்தும் வருகின்றனர். இவர்கள் தீவ்ரமாக இருந்து கொண்டு உபாஸிப்பதால் தேவதாநுக்ரஹத்தையும் ஓரளவு அடைந்து மகிழ்ச்சி யடைகின்றனர். இவ்வித உபாஸனையிலே ஈடுபட்டவர்களை **வாமாசாரர்கள்** எனச் சொல்லுவார்கள். அதாவது விபரீதமான ஆசரணையையுடையவர்கள் என்பது. இவர்கள் வேதத்திலே விதிக்கப்பெற் கர்மாக்களைப் புறக்கணித்து, பல உபாஸகர்களால் கற்

பிக்கப்பட்ட தந்த்ரங்களையே நம்பிக்கொண்டு, அவைகளைப் பின்பற்றி தேவதைகளைத் திருப்தி செய்து வருவது ஒன்றையே சிறந்த வழியெனக் கொண்ட காரணத்தாலேயே இவர்கள் கௌலர்கள் எனவும், வாமாசாரர்கள் எனவும் உலக வழக்கிலே அழைக்கப்பெறுகின்றனர்.

மேலும் இவர்கள் தாங்கள் செயலாற்றும் காலங்களில் வெவ்வேறு தேவதைகளைக் குறிப்பிடுகின்ற மந்த்ரங்களிலும் தங்களுடைய இஷ்டதேவதையையே முக்ய மாகக் கொண்டு ஸங்கல்பம் செய்து அதையே நிலைத்த மனதுடன் ஆராதித்து, அந்த தேவதையினுடைய அநுக்ரஹத்தைப் பெறுவதற்காக, அதை த்ருப்தி செய்யும் வகையிலே ; மத்யம், மாம்ஸம், மத்ஸயம், மது, மைதுனம் என்ற ஐந்து மகாரங்களை யுட்கொண்ட வஸ்துக்களையும் நிவேதித்து வழிபட்டும் வருகின்றனர். இதன் மூலம் அத்தேவதையினுடைய அநுக்ரஹமானது விரைவில் கிடைக்குமெனவும் நம்புகின்றனர்.

மற்றும், இவர்கள் இம்மானிட உலகிலுள்ள எல்லா விதமான ஸுகங்களையும் வெகு விரைவில் அடைந்தும் இன்பமடைகின்றனர். ஆனால் அப்பலன்கள் யாவும் நிலையற்றன. ஏனெனில் இவர்கள் தேவதைகள், ரிஷிகள், பித்ருக்கள் என்ற இம்மூவர்களுடைய கடன்களை (கடமைகளை) தீர்க்கவல்ல பஞ்சயஜ்ஞங்களைச் செய்யத்தவறியதால் எவ்வளவு உறுதியாக இவர்கள் உபாஸித்தாலும் இல்லறத்துன்பத்தினின்றும் விடுதலை பெறுவது சிரமமான காரியம் என்பதை வேதங்கள் முறையிடுகின்றன.

இக்கருத்தைக்கொண்டே ஸ்ரீபாஸ்கரராயர் தமது லலிதாரஹஸ்யபரிஶிஷ்டத்தின் துவக்கத்தில் பின்வருமாறு கூறுவர்—

"ऋणमिष्टमदत्त्वैव त्वन्नाम जपतो मम ।
अपर्णेत्यभिधां वोढुं न जिह्रेषि कथं शिवे ॥

ஓ மங்களவடிவே ! தேவரிஷிகளுக்குரிய கடன்களைக் (கடமை) கொடுக்காமலேயே உனது நாமாவை ஜபம் செய்துவருகிற என் பொருட்டு 'அபர்ணு' என்ற பெயரை நீ வஹித்துக் கொண்டிருப்பதில் எவ்விதம் லஜ்ஜை அடையாமல் இருக்கிறுய்? ஸ்ரீதேவிக்கு அபர்ணு என்ற பெயர் இருப்பதை முன்னிட்டு, கடன்களைத் தீர்க்காமல் அவளுடைய நாமங்களை ஜபிப்பது பயன்படாது என்பது இதனுல் வலியுறுத்தப்படுகிறது. இக்கௌலர்களுக்குத் துன்பம் மிகுந்த இப்பிறவிக்கடலைக் கடக்கவேண்டு மென்ற எண்ணமும், அதற்குள்ள வழிகளை ஆராய வேண்டுமென்ற சிந்தையும் கிடையாது. எனவே இக் கௌலமார்க்கமானது, வேதங்களையும், அவைகளைப் பின்பற்றும் ஸ்மிருதிகளையும், ஆன்ருேர் வழிவந்த வைதிகாசாரங்களையும் நம்புகின்ற நற்குணங்கள் நிறைந்த சிலர்களால் போற்றப்படாததோடு, நாஸ்திகம் நிறைந் திருப்பதால் அதைப் பின்பற்றுவது பாபஹேதுவாகு மென்பதும் சில வைதிக உபாஸகர்களுடைய அபிப்பிராய மாகும்.

வைதிகர்களான இவ்வுபாஸகர்களோ, வேதத்திலே விதிக்கப்பட்ட கர்மாக்களை வழுவாது செய்து கொண்டு ஸ்ரீதேவியை ஆராதிப்பவர்கள். இவர்கள் இப்பிறவிக் கடலைக் கடப்பதற்கு அன்னையின் சரணுரவிந்தங்களே தக்கதோர் கருவியாகுமென நினைத்து, வேதமார்கத்திற்கு ஒரு சிறிதும் முரண்பாடு இல்லாமல் உபாஸனையைச் செய்து வருகின்றவர்கள். இவர்களுடையஆசாரமானது ப்ரஹ்ம - க்ஷத்ரிய-வைச்ய - சூத்ரவர்ணங்களுடைய பாகு பாட்டிற்கு உட்பட்டது. மேலும் அவரவர்களுக்குரிய

வைதிககர்மாக்களை, வேதத்தைத் தழுவிய ஸ்ம்ருதிகளிலே சொல்லியவாறு அநுஷ்டிப்பதில் சிரத்தையுள்ளவர்களாயிருந்து கொண்டும், ஸ்நானம், ஸந்த்யாவந்தனம், ஜபம், வேதாத்யயனம், தேவதாபூஜை, அதிதிபூஜை என்ற ஆறுவிதமான கர்மாக்களை எக்காரணம் கொண்டும் வழுவாது ஆசரிப்பதில் ஆர்வமுள்ளவர்களாயிருந்து கொண்டும், தேவபூஜை செய்வதில் ச்ரௌதஸ்மார்த்த கர்மாக்களுக்கு விரோதமில்லாமல் தங்களுடைய மனோபாவங்களுக்குகந்த ஸாத்விக தேவதையை உருவகப்படுத்தி விசேஷமாகவும் வழிபட்டு வருபவர்கள்.

இவர்கள் ஆதித்யன், அம்பிகை, விஷ்ணு, விநாயகர், மஹேச்வரன் என்ற, தோல், கண், காது, நாக்கு, மூக்கு, என்று ஐந்து கரணங்(பொறிகள்)களுக்கும் அதிஷ்டான தேவதைகள் போன்ற மூர்த்திகளையும் உபாஸிக்கின்றனர். இவர்களில் சிலர் இங்கு கூறப்பட்ட எல்லா தேவதைகளையுமோ அல்லது தனித்தனியாகவோ உபாஸிக்கவும் செய்கின்றனர். மேலும் இவர்கள் காயத்ரீ மந்த்ரத்தை யுபதேசம் பெற்ற காரணத்தாலேயே மந்த்ர தீக்ஷைகளால் உண்டாகக்கூடிய பலன்கள் கிடைக்குமெனவும் நம்புகின்றனர்.

இவர்களிலே மற்ற மந்த்ரதீக்ஷையையும் முக்யமாகக் கருதுகின்ற வேறு சிலரும், தக்க குருவை நாடிச்சென்று, அவரிடமிருந்து பரம்பரையாகக் கிடைக்கக் கூடிய மந்த்ர தீக்ஷையைப் பெற்று, ஸாத்விக குணத்தையே பெரிதும் ப்ரதானமாகக் கொண்ட ஸ்ரீவித்யை முதலிய **தசமஹாவித்தைகள்** என்ற மந்தரங்களுக்குள் தங்களுக்கு விருப்பமான மந்த்ரத்தை உபதேசம் செய்துகொண்டு, அதற்குரிய பூஜாக்ரமத்துடன் அக்குருவினுடைய கட்டளைப்படி அவர் காட்டிய வழியைக் கடைப்பிடித்து, அன்னையாம் ஸ்ரீமஹாதேவியை ஆராதித்து, அவளுடைய திவ்யாநுக்

ரஹத்தையும் பெற்று ஆத்ம சிந்தனையாம் ஆநந்த வெள் ளத்தில் திளேக்கின்றனர்.

இவ்வாறு நமது பாரத தேசத்தில் வாமாசாரம், தக்ஷிணசாரம் என சக்திவழிபாடு இரண்டு விதமாக நடைபெற்று வருகிறது. பெரும்பாலும் நமது தக்ஷிண தேசத்திலே வைதிகாசாரம் முக்யமாக நடைபெற்று வரு வதைக் காணலாம். வாமாசாரம் வடதேசத்தில் நிகழ்ந்து வருவதாகும். நாம் பரம்பரையாக வைதிககுலத்திலே தோன்றி, வேதத்தையே நமது வாழ்க்கைக்குப் பெரிய உதவியாக மதித்து, அவைகளில் விதித்த கர்மாக்களேச் செய்து வருவதால், நாம் வாமாசாரத்தை ஒருக்காலும் அநுஷ்டித்து வரவியலாத காரியமாகும்.

எனவே நமது வைதிக தர்மப்படி நமக்குக் கிடைத்த பாரம்பர்யக்ரமமான தீக்ஷையை ஸ்ரீகுருவினிடமிருந்து பெற்று, அவர் காட்டிய வழியைப் பின்பற்றி, ஸாத்விக குணத்தையே முக்யமாகக் கடைப்பிடித்துச் செய்து வரு வதே சாலச்சிறந்ததென ஆன்ருேர்கள் வழிவகுத்துள்ள னர் ஆதலின் வாமாசாரத்தை நாம் கனவிலும் கருத லாகாது. அதைப் பின்பற்றிஞல் நமது குலப்பெருமை குன்றுவதோடு, என்றும் அழிவிலா பாபமூட்டை களேச் சுமக்கவும் நேரிடுமென்பதை ஆஸ்திக அன்பர்கள் அறிந்து கொண்டு, வைதிக முறைப்படியே மஹாமாயை யாம் ஸ்ரீமஹாதேவியை வழிபட்டு வர வேண்டுகிறேன்.

இந்த உபாஸனேயானது ஸகுணம், நிர்குணம் என இரு வகையாகும். ஸகுணத்தையே முறைப்படி வழு வாது உபாஸனே செய்து, நாளடைவில் மனத்தேர்ச்சி பெற்ற பிறகே நிர்குணேபாஸனேயைச் செய்யத் துவங்க வேண்டுமென்பது பல க்ரந்தங்களுடைய பரமஸித்தாந்த மாகும். மனிதனுக்குச் சித்தசுத்தி அவசியம். அது,

தங்கத்திலுள்ள அழுக்கை எடுப்பதற்கு அத்தங்கத்தை உலையில் நன்ருகக் காய்ச்சி அடித்தால் அதனுடைய உண்மையான ஒளியை அது பெறுவது போல, நமது சித்தத்திலுள்ள அழுக்கை எடுப்பதற்கு, சீலம், வ்ரதம், உபவாஸம், பூஜை, பாராயணம், த்யாநம் முதலியவைகளைக் கொண்டு நன்ருகச் சுத்தம் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் இந்த சித்தம் ஒரு நிலையிலே நிற்கச்சம்மதிக்கும். ஆதலின் முதலில் ஸ்ரீகுருவையடைந்து, அவருக்கு ஸேவைசெய்து, அவருடைய ஆசியுடன் கூடிய மந்த்ரோபதேசதீக்ஷையைப் பெற்று, அவர் காட்டிய நெறியின்றும் வழுவாது ஸகுணோபாஸனையைச் செய்வதே நம்போன்றவர்களுக்குத் தக்கதோர் உபாயமாகும்.

தற்காலத்தில் இந்த தீக்ஷாமுறையைப் பலர் பலபடி கையாண்டு வருகின்றனர். அவர்கள் இம்முறையைப் பொருளீட்டும் வகையிலே பயன்படுத்திக் கொள்ளுகின்றனர். இவ்விதம் செய்தால் மந்த்ரோபதேசத்திற்குரிய பெருமை குன்றுவதோடு, குருவுக்கும் சிஷ்யனுக்கும் குறித்த பயனும் உண்டாகாது. சிஷ்யன் தாஞகவே தனது சக்திக்குத் தக்கவாறு குருவுக்குக் காணிக்கைகளைக் கொடுக்க வேண்டுமே யல்லாது அக்காணிக்கைகளை குரு எதிர்பார்த்திருப்பது பாபமேயாகும். ஸ்ரீகுருவானவர் சிஷ்யனுடைய அஜ்ஞாநம் அழிந்து, ஞாநம் உண்டாகவேண்டுமென்ற சிந்தை ஒன்றையே மனதில் கருதி வரவேண்டும். அதேபோல சிஷ்யனும் எந்த எந்த வகையிலே ஸ்ரீகுருவை ஸேவித்தால் அவர் மனம் நம்மிடத்தில் பற்றுதலையடைந்து, அவருடைய அநுக்ரஹம் எப்பொழுது கிடைக்குமென்ற சிந்தையுடன், ஸேவை முதலியவைகளினுல் அவரை இடைவிடாது பின் தொடர்ந்து அவருடைய கட்டளையைத் தாங்கி நிறைவேற்றி வரவேண்டும். இவ்விதமே உபநிஷதங்களும் கூறும். இந்த

நியமங்களை இருவரும் உணர்ந்து நடந்துகொண்டால் பரஸ்பரம் சிரேயஸ்ஸும் (புகழ்) உண்டாகும்.

இனி இந்த தேவீ மாஹாத்ம்யத்தில் குறிப்பிடுகின்ற **ஸ்ரீசண்டிகாதேவியை** எவ்விதம் உபாஸனை செய்து வர வேண்டுமென்பதையும் சற்று சிந்தனை செய்வோம். ஒரு சிலர் சண்டிகாதேவியை உபாஸிப்பது கூடாது எனவும், வேறு சிலர் சண்டிகையை உபாஸிப்பதற்கு தாமஸகுணங்கள் நிறைந்த வழியைப் பின்பற்றியும் வருகின்றனர். இதற்குச் சான்று சில க்ரந்தங்களிலும், இந்த மாஹாத்ம்யத்திலும் பலிகளைப்பற்றிச் சொல்லியிருப்பதும் ஒரு காரணமாகும். உண்மை அவ்விதமல்ல, ப்ரஹ்ம-க்ஷத்ரிய-வைச்ய-சூத்ரர்களுக்கு அவரவர்களுடைய வர்ணாச்ரம தர்மமுறைப்படி பலிகள் விதித்திருப்பதே யல்லாது வேறொன்றுமில்லை. ப்ராஹ்மணன், ஸாத்விக பூஜையை செய்துவர வேண்டும். அவன் பலிகளைக் கொடுப்பது கூடாது என்பது பல க்ரந்தங்களில் கூறப்பட்டிருக்கிறது.

மேலும், வழிவழியாகத் தோன்றிய ஆசார்யர்களும் இவ்விதமே 'செய்வது கூடாது' என்பதை தத்தம் க்ரந்தங்களில் ஸ்தாபித்துள்ளதையும் ஆங்காங்கு விஸ்தாரமாகக் காணலாம். எனவே பலிவிதாநம் எவ்வகையிலும் அந்தணனுக்குச் சிறந்ததல்ல. அது மற்ற மூன்று வர்ணத்தவர்களுக்குமே உரித்தானது என்பதும் நிரூபணம் செய்யப்படுவது போல, மகாரபஞ்சகமும் அந்தணர்களுக்கும், அதிலும் வைதிக மார்கத்தைத் தழுவியவர்களுக்கும் விதிக்கப்படவில்லை என்பதையும் அறிந்து கொள்ள வேண்டும்.

இனி **'சண்டிகா'** என்ற சொல்லுக்குப் பொருள் யாது என்றால், அச்சொல்லுக்குப் பல பொருள்களுண்டு. அவைகளுடைய விளக்கங்களை இந்நூலின் துவக்கத்திலே கொடுக்கப்பட்டிருப்பதால் அங்கே கண்டு தெரிந்து

கொள்ளலாம். பரப்ரஹ்மத்தினுடைய பரம சக்தியின் வடிவாய்த் தோன்றுவதையே சண்டீ, சாமுண்டா, மஹாமாயா, யோகநித்ரா என்ற பல பெயர்களால் அழைக்கப்படுகிறது என்பதையும் இங்கு முன்னர் விளக்கப்பட்டுள்ளது.

இவ்விதச் சிறப்பு வாய்ந்த மஹாமாயையினுடைய காரியமோ உலகைத் தோற்றுவித்து, தன்னால் படைக்கப்பட்ட ஜீவராசிகளிடத்தில் அந்தர்யாமியாய்(மறைந்து) இருந்து கொண்டு, அவைகளை இயங்கச்செய்து, ஸுக துக்க வடிவான ஒரு நிலையையும் உண்டு பண்ணி, ஊழிக் காலத்திலே தன்னிடத்திலே அவைகளை லயிக்கச் செய்வதுமாகும். அவளே உலகை ஆக்குவதும், நிலைநிறுத்துவதும், அழிப்பதுமான முத்தொழிலையும், முறையே ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற புருஷவடிவத்துடனிருந்து கொண்டு நடத்துபவள் என்பதையும் இந்நூலில் வர்ணித்திருப்பதைக் காணலாம்.

மற்றும் இந்த மஹாமாயையேதான் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண வடிவங்களையும் கொண்ட மஹா-ஸரஸ்வதீ, மஹாலக்ஷ்மீ, மஹாகாளீ எனவும் சொல்லப்படுகின்றவள். மஹாஸரஸ்வதீ ஞாநவடிவம் கொண்டவள், மஹாலக்ஷ்மீ க்ரியாவடிவம் கொண்டவள். மஹாகாளீ இச்சாவடிவம் கொண்டவள், மேலும் மஹாஸரஸ்வதீ சித்தின் வடிவம். மஹாலக்ஷ்மீ ஸத்தின் வடிவம். மஹாகாளீ ஆநந்தவடிவம். ஆகவே இவைபோன்ற பல விஷயங்களும் இந்நூலிலேயே கூறப்பட்டுள்ளன என்பதையும் அறியலாம். எனவே இம்மூன்று தத்துவங்களுடைய சேர்க்கையான ஸமஷ்டியேதான் சண்டீ, சாமுண்டா என்பதுமாகும்.

தவிர இந்நூல் மஹிஷாஸுரனையும், சண்டமுண்டர்களையும், சும்பநிசும்பர்களையும் வதம் செய்யும் கதைகளையே

பெரிதும் ஆதாரமாகக் கொண்டு மூன்று சரிதங்களாக வகுக்கப்பட்டுள்ளன. இவை முறையே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடைய நிகழ்ச்சிகளையும் உட்கொண்டு நிகழ்வன என்பதையும் குறிப்பிடுவதாகும். மேலும் இவைகளுடைய உட்பொருள் விளக்கங்கள் பலபடியாக உண்டு.

உதாஹரணமாக, சண்டர், முண்டர் என்பதை முறையே தூலாவித்யை, மூலாவித்யை எனவும் கொள்ளலாம். இந்த இருவித அவித்யைகளையும் அழியச் செய்வது ஞானமென்னும் வித்தையேயாகும். இதேபோல இந்நூலில் குறிக்கப்படுகின்ற தேவியினுடைய ஆயுதங்களுக்கும், மற்றும் பல அவதாரங்களுக்குமுள்ள உட்பொருள் விளக்கங்களை பல உரைகளிலும் பரக்கக் காணலாம். எந்த மஹாமாயை அவித்தைக்கு ஆதாரமாயிருந்துகொண்டு ஜீவராசிகளைப் பிறவிக்கடலில் மூழ்கி தவிக்கச்செய்கிருளோ, அந்த மஹாமாயையே தான் ஞானத்திற்கும் ஆதாரமாயிருப்பவள். ஆதலால் ஆத்மஞானம் உண்டாவதற்கு அவளை உபாஸித்துப் பிறவித்துன்பத்தையும் கடக்க முடியும். இவ்விஷயமும் இந்நூலில் **ஸுமேதஸ், ஸுரதன், ஸமாதி** என்ற மூவருடைய ஸம்வாத ரூபமாக விளக்கப்பட்டுள்ளது.

அதாவது—ஸுமேதஸ் என்ற அந்தணன், ஸுரதன் என்ற (அரசன்) க்ஷத்ரியன், ஸமாதி என்ற வைச்யன் என இம்மூன்று பாத்திரங்களை உருவகப்படுத்தி, இந்த **தேவீசரிதத்தை** மேதையிற் சிறந்த **ஸ்ரீவேதவ்யாஸர்** கதையைத் துவக்கிச் செல்லுவது வெகு அழகாயுள்ளது. இது பாரமார்த்திக வழியிலே பல பொருள்களையும் தன்னுள்ளே கொண்டு விளங்குவதுமாம். இது வெறும் பொழுது போக்குக்காக எழுதப்பட்ட கதையல்ல. முன்பு கூறிய மூன்று பதங்களுக்கும் உட்பொருள் வருமாறு—

"ஸுமேதஸ் என்பது பரிபக்குவமடைந்த புத்தியைக் குறிக்கும். ஸுரதன் என்பது-ஆத்மாவுக்கு ஆஶ்ரயமான சரீரத்தைக் குறிக்கும். இது எவ்விதமெனில், இச்சரீரம் தேருக்கு (ரதம்) ஒப்பானது என்பதை உபநிஷதங்களும், ஸ்ம்ருதிகளும்; "आत्मानं रथिनं विद्धि शरीरं रथमेव च— ஆத்மாவை ரதத்தைச் செலுத்தும் ஸாரதியாகவும், சரீரத்தை ரதமாகவும் அறியவேண்டும்" என வலியுறுத்தும். எனவே சரீரத்தில் கட்டுண்ட பரமாத்மாவின் உபாதியான ஜீவாத்மாவைக் குறிப்பதாகக் கொள்ளலாம். ஸமாதி என்பது சித்தத்தினுடைய ஏகாக்ர நிலையான பாவனை—அதாவது ஸமாதியிலே நிலைத்திருக்கும் சித்தத்தின் தன்மை—எனவும் கொள்ளலாம்.* மக்களுக்கு இவ்விதச் சித்தநிலையே தான் ஞானத்தைக் கொடுப்பது. இந்நிலையிலே தான் ஜீவாத்மாவை பரமாத்மாவோடு ஐக்யாநுஸந்தாநம் செய்யமுடியும். இதுவே தான் விடுதலையுமாம்.

இந்த விடுதலைக்கு வேறு உபாயமொன்றும் கிடையாது. ப்ரபஞ்சத்திலுள்ள பற்றுதல், அஹங்காரம், மமகாரம், ராகம், த்வேஷம், மோஹம், துக்கம், இவற்றில் முழுகச் செய்வது மஹாமாயையாதலால் அவளை ஆராதித்து, ஞானத்தைப் பெற்று இந்த ப்ரபஞ்சபந்தத்தை யகற்றுவதுதான் சிறந்த வழியாகும். அரசையிழந்தும் பிரஜைகளுக்காக வருந்தும் ஸுரதனும், பொருள்களிடத்தேயுள்ள ஆசையினால் தனது பந்துக்களால் கானகத்துக்குத் துரத்தப்பட்டும், பிள்ளை, பெண்டிர் முதலியவர்களுடைய க்ஷேமத்திற்காக மனம் வருந்திய ஸமாதியும் மஹாமாயையால் கவரப்பட்டவர்களன்றோ!

---

* இந்த பாவநாவிசேஷங்களை எமது பாவநோபநிஷத்தினுடைய தமிழுரையில் விரிவாகக் காணலாம்.

இவர்கள் இருவரும் தங்களுக்கு உண்டாகிய அழியா அஜ்ஞானத்தையும், உலகப்பற்றையும் குறித்து, ஸுமேதஸ் என்ற மஹர்ஷியிடம் முறையிட்டுக் கொண்டு, அஜ்ஞானம் அழியவும், ஞானம் பெருகவும், அன்னையாம் மஹாமாயையை ஆராதிக்கும் வழிகளையும் தெரிந்து கொண்டனர் என்பது இந்நூலின் ஸாரம்.

மேலும் மஹாமாயையானவள் பரமஞானிகளாயினும், பாமரர்களாயினும் அவர்களை மோஹமடையச் செய்வதில் மிகவும் திறமை வாய்ந்தவள். இதற்குச்சான்று ஸுரத ஸமாதிகளேயாவர். இந்நூலிலும் "ப்ரஹ்மாதிகளாயினும் அவர்களை மோஹமடையும்படி முக்காலத்திலும் என்னால் செய்யமுடியும்" என்பதை தேவியினுடைய வசநவாயிலாக அமைந்திருப்பதையும் அறியலாம். ஆகவே அத்யாத்ம ஞானத்தைப் பெறவும், விடுதலைக்குரிய வழிகளையறியவும், ஆத்மாவை ஆஶ்ரயித்துப் பல தொல்லைகளைக் கொடுக்கக் கூடிய அரிஷட்வர்களின் வடிவாயமைந்த (காமம், க்ரோதம். லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம்) அஜ்ஞானத்தை அகற்றுவதிலும் இந்நூல் தலைசிறந்து விளங்குவது என்பதை, ஒவ்வொரு ச்லோகத்தின் பொருளையும் உண்மையில் உணர்ந்தால் விளங்காமற் போகாது என்பதும் தெளிவாகும்.

இவ்விதப் பெருமை வாய்ந்த இந்த மஹாமாயா தேவியே வித்யாவடிவாகவும் இருப்பவள். அவ்விதமே இந்த தேவீமஹாத்ம்யமும் ஞானவித்தையின் வடிவாயமைந்தது. முக்திமார்கத்திற்கும் உபாயத்தை உண்டு பண்ண வல்லது. ஆயினும் பாரமார்த்திக போகங்களை அளிக்கவல்ல பரதேவதையே, தனது லீலாவிபூதிகளினால் பல்வேறு சக்திகளுடைய வடிவாய்த்திகழ்ந்து கொண்டு, உபாஸகர்களுடைய தாரதம்யஞானத்திற்குத் தக்கவாறு, ஐஹிகபோகங்களான ஸம்பத்துக்களையும்

கொடுத்து அருளுவதில் மிகத்திறமைவாய்ந்தவளாயிருப்பதால், அவளுடைய வழிபாடே இஹபரஸாதநங்களுக்குகந்தது என்பதும் தெளிவாகும்.

தவிர, ப்ரஹ்மாதிகளான தேவர்களையும் தன்னுடைய சக்தியின் பெருமிதத்தால் மோஹிக்கச் செய்து தன்னைத் துதிக்கச் செய்தவள் என்றால், மானிடர்களாகிய நாம் எம்மாத்திரம்? எனவே அன்னையாம் ஸ்ரீமஹாதேவியினுடைய வழிபாடே சாலச்சிறந்து விளங்குவதாகும். இப்பெருமை வாய்ந்த தேவியினுடைய வழிப்பாட்டிற்கு இந்நூல் மிகவும் உதவியளிக்குமென்பதை தினந்தோறும் பாராயணம் செய்யும் அன்பர்கள் அறியாமலிருக்கமுடியாது. கேவலபாராயணத்தோடு மாத்திரமில்லாமல், தக்க குருவினுடைய துணைகொண்டு புரஸ்சரணாதிகளையும், ஹோமம் முதலியவைகளையும் செய்து வந்தால் இக்கலியிலும் கூட ப்ரத்யக்ஷபலனையளிக்குமென்பது வெள்ளிடைமலைபோல் விளங்கும்.

இக்கலியில் மற்ற யுகங்களைக்காட்டிலும் சீக்ர (விரைவில்) பலன்கள் உண்டாகுமென்பது பல சாஸ்த்ரங்களின் கொள்கையுமாம். எனவே பாராயணம், மூலமந்த்ரம், ஹோமம், புரஸ்சரணம் முதலியவைகளை இடைவிடாது நிலைத்த சித்தத்துடன் செய்து வந்தால் பலவிதமான தோஷங்களும், வியாதிகளும் விலகிவிடுமென்பது உறுதி.

மேலும் இக்கலியில் பகவத்கீதை, விஷ்ணுஸஹஸ்ரநாமம், ஸ்ரீலலிதாஸஹஸ்ரநாமம் என்றவைகளை அநுஸந்தாநம் செய்து வந்தால் சீக்ரபலப்ராப்தியுண்டாகுமென்பதும் சாஸ்த்ரங்களுடைய ஸித்தாந்தமுமாகும்.

இந்நூலுக்குரிய ப்ரயோகவிதிகள், நவாக்ஷரியினுடைய விளக்கங்கள் முதலியன போன்ற பல விஷயங்கள் இந்நூலின் துவக்கத்திலே விரிவாகக் கொடுக்கப்பட்டுள்

ளனவாதலால் இங்கு குறிக்கப்படவில்லையென்பதையும் வாசகர்கள் உணர்ந்து கொள்ளவேண்டும்.

மஹாமாயையாம் அன்னையினுடைய தலைசிறந்த இப் பணியினைச் செய்து முடிக்க வழக்கம்போல என்னுடன் பலவழிகளிலும் ஒத்துழைத்த எனது ஆத்ம நண்பரும், அன்னையின் திருப்பணி ஒன்றையே தனது வாழ்க்கை யிலே குறிக்கோளாகக் கொண்டவருமான ஸ்ரீஸீதாராம அய்யர் அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவன். பல காரியங்களுக்கு இடையே முயற்சி தளராது இதனை முடித்துக் கொடுத்த எனது நண்பர் ஸ்ரீராமய்யர் அவர் களுக்கும் என்னுடைய ஹ்ருதயபூர்வமான நன்றி உரித் தாகும்.

முடிவாக ஸம்ஸ்க்ருதத்தில் அதிக பரிசயமில்லாத ஆண் பெண் அனைவரும், இந்தத் தமிழுரையுடன் கூடிய **தேவீமாஹாத்ம்யத்தைத்** தக்கவழியிலே பயின்று அதனுடைய பொருள்விளக்கங்களையும் மனதிலே நன்கு பதியவைத்துப் பாராயணம் செய்து, அன்னையாம் மஹாமாயையினுடைய லீலாவிபூதிகளில் இடைவிடாது ஒன்றிய மனோநிலையுட னிருந்து கொண்டு, இஹபரஸாதனங்களையும் பெற்று, அன்னையினுடைய அநுக்ரஹத்திற்குப் பரிபூர்ணமான பாத்திரர்களாகும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். சிவம்.

विष्णुमायां परां देवीं विष्णुनेत्रकृतास्पदाम् ।
नमामि परया भक्त्या भवरोगप्रशान्तये ॥

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।
नमस्तस्यै नमस्तस्यै नमस्तस्यै नमो नमः ॥

ஸித்தாஶ்ரமம்
ஹேமலம்ப ஆண்டு
கடக மாஸம் கஅ

இங்ஙனம்
வாதூல. வே. ராமசந்த்ர சர்மா.

FOREWORD

I feel it to be a signal honour to write a foreword to this valuable and much needed work. The author Sri V. Ramachandra Sarma has made available in Tamil with explanatory notes and elucidatory expositions one of the most famous and venerated of spiritual works in India.

After prolonged study and profound reflection I have come to the conclusion that the concept of the motherhood of God is inherently sound and uplifting as that of the Fatherhood of God. Bhagavān Sri Krişņa says in the Gita,

पिताहमस्य जगतो माता धाता पितामहः

If you can import name and form into the concept of Godhead, I do not see what is inappropriate in importing sex into the concept. After all the concepts of the Fatherhood and the Motherhood of God mean only that He is law as well as Love, Justice as well as Grace.

I feel also that all the theoretical cobwebs about the mother cult in the Sumarian civilisation in Harappa and Mohanjo-Daro having

been taken over into the Aryan religion have no strength or substance. The concept of Aditi is probably the oldest in the world. The concepts of Śakti, Prakṛti, Bhūdevī, Māyā, Umā, Haimavatī, Durgā, Sarasvatī, Śridharī etc., are also very ancient. The various Sūktas (Śri-sūktam, Durgā-sūktam, Nīlā-sūktam, Bhūsūktham, are equally ancient. In the Sāma-vidhāna-Brāhmaṇa of Sāma-Veda, the words " शिखण्डिनीं कन्यां कुमारीम् " occur, just as in the Kenopaniṣad the words, " उमां हैमवतीम् " occur. Thus the shrines at the two ends of India, these concepts and hymns were elaborated and given a synthesised philosophic basis in the Kenopaniṣad and the Śvetāśvatara-Upaniṣads and in the Śakta-Upaniṣads (Tripurā, Tripurā-tāpinī, Annapūrṇā-Devi, Bahvṛca, Bhāvanā, Sarasvathī-rahasya, Sīta and Saubhāgyalakṣmī-upaniṣads. The fourth pāda of Gāyatri, " परो रजसे सावदोम् " helped to lift the form-aspect to the formless-aspect of Divinity. "बहु शोभमानां हैमवतीम्" (Kenopaniṣad) " देवात्मशक्तिं स्वगुणैर्निगूढाम् " "अजामेकां लोहित-शुक्ल-कृष्णाम्" " परास्य शक्तिर्विविधैव श्रूयते " "मायां तु प्रकृतिं विद्यान्मायिनं तु महेश्वरम्" (Śvetāśvatara-Upaniṣad) " साब्रवीत् अहं ब्रह्मस्वरूपिणी । मत्तः प्रकृतिपुरुषात्मकं जगत् "

(Devi-Upaniṣad) "देवी ह्येकाग्रआसीत्। सैव जगदण्डमसृत" (Bhāvvanopaniṣad) "नवरन्ध्ररूपो देहा नवशक्तिमयं श्रीचक्रम्" (Bahvṛcopaniṣad)

"या साङ्गोपाङ्गवेदेषु चतुर्ष्वेकैव गीयते ।
अद्वैता ब्रह्मणः शक्तिः सा मां पातु सरस्वती ॥"

(Saraswatī-rahasyopaniṣad)

"देहाभिमाने गलिते विज्ञाते परमात्मनि ।
यत्र यत्र मनो याति तत्र तत्र परामृतम् ॥"

(Saraswatī-rahasyopaniṣad)

"श्रीराम सांनिध्यवशाज्जगदानन्दकारिणी ।
उत्पत्तिस्थिति संहारकारिणी सर्वदेहिनाम् ॥"

(Sītopaniṣad)

"निष्कामानामेव श्रीविद्या सिद्धिः"

(Saubhāgyalakṣmi-Upaniṣad)

It is this fundamental idea of Brahman as Śtatic Śakti and of śakti as dynamic Brahman that is elaborated in the itihāsas, purāṇas, āgamas and Yāmalas etc. There is no question of higher and lower as between Brahman and Śakti or as among the Trimūrtis or Triśaktis. The recent bigoted fanatical baseless exaltation of one of these above others is unacceptable and is a foe of integral Hinduism (Pūrṇādvaita or Śāktādvaita, as distinguished from Kevalā-

dvaita Viśṣṭādvaita, Dvaita, Dvaitādvaita (Śuddhadvaita etc.) In Lalitā-Upākyāna the glory of Devī is delineated well. In the Bhāgavata (10th Skandha) Śrī Viṣṇu before He incarnates as Śrī Kṛṣṇa asks Devī Yoga-Māya to incarnate as Yeśoda's daughter and tells her that her worship will be Universal in the Kaliyuga.

" अर्चिष्यन्ति मनुष्यास्त्वां सर्वकामवरेश्वरीम् ।
धूपोपहारबलिभिः सर्वकामवरप्रदाम् ॥

नामधेयानि कुर्वन्ति स्थानानि च नरा भुवि ।
दुर्गेति भद्रकालीति विजया वैष्णवीति च ।
कुमुदा **चण्डिका** कृष्णा माधवी कन्यकेति च ।
माया नारायणीशानी शारदेत्यम्बिकेति च ॥ "

The Devi-Bhāgavata is entirely devoted to an exposition of the glory of Devī.

The Śakta-Āgamas are sixty four in number and are staggering in size and variety. Arthur Avalon (Sir John Woodroffe) has done much to popularise them and India must be eternally grateful to him for such work. Let me quote here one sentence from his *Mahā Māya*.

" The modern dynamic view of the constitution of matter, a view that has tended to dematerialise matter, a view that sees in the atoms of matter a vast magazine of power a view that

is faced with a residual element of the inexplicable in all its mechanistic explanations. A view that sees in radio-activity the drafting of new and pratically inexhaustible energy into the hitherto supposed closed and constant realm of physical energies already shows that physical science has taken vast strides towards Śākta Position which (a) makes power to be the essence of everything (b) makes power in reality immeasurable in everything and in the Universe for the matter of that and (c) makes the 'Dynamic Point' the perfect magazine of power (hence making the atom also a vast magazine). As regards the further and higher view of Vedanta that this power manifesting as matter is essentially consciousness. Power which is measureless joy expressed in an restricted play, physical science has as such nothing to say at present, but if one were logically to work out what is now implicit in its position and imagine the promise contained therein fulfilled particularly in consonance with the results and promises of Biological and Psychical Sciences, one might feel that Science has unconsciously taken an even long stride than one would imagine towards the final position of Sākta-Vedantism". (Pages 221, 222).

"As the Creatrix of Forms the Divine mother is Māyā and as the Produced individual from Avidyā (ignorance). As liberatrix from the ignorance of the forms which are of her making she is Mahā-Māyā" (page 239).

Thus the Śākta world view is the acme of Science as well the acme of Religion.

The Devi-Māhātmyam or Caṇḍī Saptaśati consists of chapters 81 to 96 in the Mārkaṇḍeya-Purāna. It is capable of conferring all the objectives of life viz. Dharma, Artha, Kāma, and Mokṣa. It can give us material happiness as well as spiritual happiness. The word Caṇḍī refers to the divine rulership of Devi and the reverence and fear which her supremacy inspires ("भीषास्माद्वातः पवते" etc.) She is also the Supreme Beauty, the Supreme Wisdom, the Supreme Bliss, the Supreme Grace. Śri Samkaracārya says that she is the Supreme Mahāmāyā also, is the queen of Parabrahma and that Sarasvatī and Lakṣmi and Umā are aspects of Her Glory.

"महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि"

(Saundarya-Laharī)

She is thus Mahā-Kālī, Mahalākṣmī ānd Maha-Sarasvati. She is called also Cāmuṇḍī as she destroyed the demons Caṇda and Muṇda. She

is called also Lalithā Parameśvari and Parā-śakti. Her nine-lettered (Navākṣarī) Mantra is the supreme means of salvation and liberation.

Bhāskarāraya has written an illuminating commentary called Guptavti on Saptaśati. There are also other commentaries. But mere study alone cannot help us. We must get the Dīkṣā from a Guru along with his grace.

The supreme beauty and value of the Saptaśati and other śākta works is that they elevate the matrix of the universe to a position of supreme height. Parabrahma and Parāśakti or Śiva and Śakti are two yet one, one yet two. The static numeron belongs Śiva-Śakti by inner dynamism and Śakti performs pañcakṛtya and creates, protects and destroys the Universe and veils and unveils ParaBrahman as the comrade and queen of Śiva and is Iccha-Śakti and Jñāna-Śakti and Kriyā-Śakti

"क्रीडाते लोचना देवी सखा ते चिन्मयः शिवः ।
आहारस्ते सदानन्दः वासस्ते हृदयं सताम् ॥"

In the later works such as Śri Durvāsa's Lalitā-stava-ratna (Aryādviśati, ŚrīGauda-pāda's Subhagodaya, Śrī Śamkarācāryā's Saun-darya-Lahari and Laitā - Triśati - Bhāśa and Sarva - Vedānta - siddhānta - sārasaṁgraha etc,

in the Mūka - pañcaśati, in Lakṣmīdara's Anuṣṭhāna - Sudhārṇava, in Bhāskararāya's commentary in Lalitā-Sahasranāma and other works, Tripurā-Rahasyam, Varivasyā - Rahasyam etc., we find a final and systematic and irrefragable exposition of the Śākta system of philosophy and religion.

It is with such a background that we must realise the glory of Devī-Māhātmyam or Cāṇḍi-saptaśatī,

"अस्य श्रीसप्तशतीस्तोत्रमहामन्त्रस्य, ब्रह्म-विष्णु-रुद्रा-ऋषयः गायत्र्युष्णिगनुष्टुभश्छन्दांसि। श्रीमहाकाली-महालक्ष्मी-महा सरस्वत्यो देवताः।"

It is the highest and sublimest peak amidst many surroundings equally lofty Himalayan peaks. It is a garland or Mantra-Śāstra, mythology, ethics, philosophy and religion. It contains such topics as Navāṅga-vidhi, Nyāsa, the invocation of the goddess (Āvāhana, the names of the goddess (Nāma), Argala, Kīlaka, Hṛdaya, Dala, Dhyāna, Kavaca, Devī-Navākṣari Mantra etc. etc. etc. The main text is followed by various valuable appendices containing various sūktas and stotras.

Sri. V. Ramachandra Sarma's translation is clear and concise and correct and his expositions are informative and attractive. I wish his

work ever increasing public recognition and appreciation.

I wish to conclude with three verses from the work and also with two other famous verses.

"रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ।
देहि सौभाग्यमारोग्यं देहि देवि परं सुखम् ।
विधेहि देवि कल्याणं विधेहि परमां श्रियम् ।
विद्यावन्तं यशस्वन्तं लक्ष्मीवन्तं जनं कुरु ।
पुत्रान् देहि धनं देहि सर्वकामांश्च देहि मे ।
नमो देव्यै महादेव्यै शिवायै सततं नमः ।
नमः प्रकृत्यै भूतायै नियताः प्रणताः स्म ताम् ॥
दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः ।
स्वस्थैः स्मृता मतमतीव शुभां ददासि ।
दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय दयार्द्र चित्ता ॥
पातय वा पाताले स्थापय वा सकलभुवनसाम्राज्ये ।
मातस्तव पदयुगलं नाहं मुञ्चामि नैव मुञ्चामि ॥
शब्दब्रह्ममयी चराचरमयी ज्योतिर्मयी वाङ्मयी
नित्यानन्दमयी निरञ्जनमयी तत्त्वंमयी चिन्मयी ।
तत्त्वातीतमयी परात्परमयी मायामयी श्रीमयी
सर्वैश्वर्यमयी सदाशिवमयी मां पाहि मीनाम्बिके ॥

Madras
26—8—57.

K. S. RAMASWAMI SASTRI.

அணிந்துரை

இந்நூலின் சிறப்பையும், உட்பொருள் விளக்கங்களேயும் ஸ்ரீ சர்மா அவர்கள் முகவுரையிலே தெளிவாக விளக்கிவிட்டார். ஜகன் மாதாவின் கருணையால் ஆகாதது ஒன்றும் கிடையாது. பலனை எதிர்பாராது நிஷ்காமத்துடன் உபாஸிப்பவர்களுக்கு நித்ய மங்களத்தைக் கொடுத்துதவும் தேவியை விதி வழியே வழிபடுவதற்கு நமது ஸ்ரீ சர்மா அவர்களின் வெளியீடு மிகவும் உதவியாயிருக்குமென்பதில் ஐயமில்லை. நிபுணர்கள் பார்த்து ஆமோதிக்க வேண்டிய நூலைப்பற்றி நான் மொழிவது பொருத்தமில்லை. ஆயினும் ஸ்ரீ சர்மாவினுடைய தேவீ பக்தியையும், முயற்சியையும் பார்த்து மிகவும் சந்தோஷிக்கிறேன். அவருடைய முயற்சி லோகோபகாரமான காரியம் ; தேவீ அருள்புரிய வேண்டுகிறேன்.

ஆதி முதல் மந்த்ரங்கள் நிறைந்த வேதமதம் நமது மதமாகும். இதிஹாஸங்களிலும், புராணங்களிலும் ஆகமங்களிலும் தேவீமந்த்ரங்கள் நிரம்பிக்கிடக்கின்றன. பல யுகங்களிலும், மந்த்ரங்களாலும், ஹோமங்களாலும் வேள்விகளாலும் பெருமக்கள் தேவியினிடம் ஈடுபட்டு இகபர ஸௌபாக்யத்தை யடைந்திருக்கின்றார்கள். இக்காலத்திலும் பல பெருமக்கள் தேவீ மந்த்ரத்தையும் உபாஸித்து பரப்ரஹ்மத்தினிடமும் ஈடுபட்டு நற்கதி யடைந் திருப்பதையும் காண்கின்றோம்.

இச்சாரதா நவராத்திரி ஸமயத்தில் ஸ்ரீ தேவீ மாஹாத்ம்யத்தையும், அதன் பொருள்களையும் விளக்க

மாகத் தமிழில் விளங்கச் செய்த ஸ்ரீ ராமசந்த்ர சர்மா அவர்களுக்கு ஆஸ்திகர்கள் மிகவும் கடமைப்பட்டவர்களாவார்கள்.

ஆஸ்திக அன்பர்கள் இவ்வரிய நூலை வாங்கிப் படித்து அன்னையாம் ஜகன்மாதாவினுடைய திருவருளைப் பெற வேண்டுகிறேன்.

மயிலை
9—9—'57. } திருப்புகழ் மணி T. M. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.

உ

ஸ்ரீ கணபதி துணை

பதிப்புரை

திருவளருலகில் கருவினிலுதித்தோர்
வரும்வினையகற்றும் கரிமுகன் துணையே.

பார்த்திடவே நந்தீசர் மூலத்தீசர்
பண்பான அகத்தீசர் சட்டைநாதர்
கோர்த்திடவே பதஞ்சலியார் வியாக்கிரபாதர்
கோரக்கர் கமலமுனி கூழைக்கண்ணர்
கார்த்திடவே இடைக்காட்டார் சண்டிகேசர்
கைலாய போகருடன் சுந்தரர் சிவாயசித்தர்
போர்த்திடவே காலாங்கி புண்ணாக்கீசர்
புகழ் மச்சர் கொங்கணவர் காப்புத்தானே.

(கருவூரார்)

இமயம்முதல் கன்னிவரையில் இந்நாட்டில் குன்றுகள் தோறும் சுனைகளும் அதையடுத்துக் குகைகளும் உண்டு. அங்கு வாழ்ந்து வரும் சித்தர்களைப்பற்றிக் கூறாத நூல்கள் இல்லை. தாயுமான ஸ்வாமியும், "வித்தகச்சித்தர் கணமே" என்று பாடியிருக்கிறார். அருணகிரியாரும், சித்து வகுப்பு பாடியதோடு ஆங்காங்கு திருப்புகழ்களில் சித்தர்களைத் துதித்துமிருக்கிறார். ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாமத்திலும், ஸ்ரீஅம்பிகை ஸதஸில் கொலுவிலிருந்த பொழுது அங்கு, ப்ரஹ்மா, ஸரஸ்வதி, நாராயணன்,லக்ஷ்மி ருத்ரன் ரௌத்ரீ முதலியவர்களோடு, தேவர்களும், சித்த புருஷர்களும் வந்தமர்ந்திருந்ததாகக் கூறப்பட்டுள்ளது.

இத்தகைய சித்த புருஷர்களில் ப்ரஸித்தர்களான பதினெட்டு பெயர்களும் மேலே காப்புச்செய்யுளில் கூறப் பட்டுள்ளது. இவர்களைச் சார்ந்த இன்னும் அநேக சித் தர்களும் உண்டு. இவர்கள் யாவரும் ஞானசித்தி, யோக

சித்தி பெற்றதுடன் காயசித்தியும் பெற்றவர்கள். இவர்கள் இயற்றிய நூல்கள் இலக்ஷக்கணக்கில் தமிழ்நாட்டில் நிலவுகின்றன. இந்நூல்களைக் கவனித்தால் இவர்கள் தமிழ் தோன்றிய நாள்முதல் இருப்பதாகத் தெரியவருகிறது. ஸ்ரீயூகிமுனி என்னும் சித்தர் குரு பரம்பரையைச் சொல்லும்போது :—

ஆதியாய் வட மொழியிற் சொன்னமார்க்கம்
வகையாகச் சிவன் தானு முமைக்கோத
நீதியாய் நந்திதான் கேட்டுக்கொண்டு
நிலவரமாய் விச்வினியும் அசுவினிக்கு முரைக்க
சோதி பெற தன்வந்தரி கேட்டுத்தேறி
சுயமாக அகஸ்தியர்க் குபதேசிக்க
பாதி சேர் அகஸ்தியரும் புலஸ்தியர்க்குப்
பண்பாகச்சொல்லிவிட்டார் பாரில்தானே
தானென்ற புலத்தியரும பார்த்துத் தேறி
தப்பாமல் தேரையற்கு மோத
வானென்ற தேரருமே பார்த்து த்தேறி
வகையாக யூகி முனிக் குபதேசிக்க
நானென்ற யூகி முனி உலகத்தோர்க்கு
நாடியே குருவருளால் சொன்னேன் பாரே

(யூகிமுனி வாதகாவியம் 1000.)

மற்றும் நந்தீசர் தாம் பாடியுள்ள நூல்களில் ;
சித்தியாம நந்தி தேவனென் பேராம்
அத்தனர் கூப்பிட்டருளினர் வாதம்

(நந்தீசர் கருக்கிடை சூத்திரம்),

மானென்ற யென்னப்பன் யென்தாய் சொன்ன
மர்மமிது விள்ளாதே. (நந்தீசர் நிகண்டு 300)

ஆகவே சித்தர்கள் யாவரும், யோகஞான காயசித்தி சாஸ்திரங்களை அன்னையாம் உமாதேவியினிடமிருந்து நந்தீகேசுவரர் மூலமாகவே கற்றதாகத் தெரியவருகிறது.

இதேபோல ஆகம நூல்கள் யாவற்றிற்கும் அரன் (சிவபெருமான்) ஆதிநாதன். அவர் உமைக்குக்கூறியது அல்லது உபதேசித்தநூல்களே ஆகமங்கள். இவற்றினை ப்ரயோக விளக்கங்களுடன் விரிவாகக் கூறுவது தந்திர சாஸ்திரங்கள்.

தொடர்ந்து இவ்விருவகை நூல்களையும் கவனித்தால் ஸமஸ்கிருத மொழியிலுள்ள ஆகமதந்திரங்களுக்கும், தமிழ் மொழியிலுள்ள சித்தர் நூல்களுக்கும் ஆதிநாதன் அருளிய வழியும் தொடர்பும் ஒருமுகமாகவே இருப்பது பற்றி இவ்விரண்டும் குறிப்பான கொள்கைகளைக்கொண்ட ஞானமார்க்கங்களைப் பின்பற்றியது என்பது தெளிவு.

இனி இவ்வாகமதந்திரங்களில் காணப்படும் உபாஸனைகளைப்பற்றியும், அவர்கள் குறிக்கோளாகக்கொண்ட தெய்வம் ஸ்ரீதேவீ பராசக்தி என்பதைப்பற்றியும், அதன் தொடர்புகள் பற்றியும் எமது ஆசிரியருடைய முன்னுரையில் விவரமாகக் காணலாம்.

இங்கு சித்த சாஸ்திரங்களையனுசரித்து இவர்கள் வழிபடுகின்ற மரபு, தெய்வம் யாது என்பதைப்பற்றி, சற்று கவனிப்போம்.

1. வாலைக்கு மேலான தெய்வமில்லை
   பாலுக்கு மேலான பாக்கியமில்லை

(கொங்கணர் வாலைக்கும்மி)

2. வாமியவள் பாதம் பூசைபண்ணு
   மற்றொன்றும் பூசையல்ல மக்காள் சொன்னேன்

(அகத்தியர் ஞானம் 13)

3. உறுதியுள்ள அகத்திய மாமுனியே கேளு
   உண்மையுள்ள சத்தியை நீ பூசைபண்ணு
   (சுப்பிரமணியர் அகத்தியற்குபதேசித்த

ஞானம் 500-ல்

4. வாலையடா சித்தருக்குத் தெய்வந்தானே
தெய்வமல்லோ குலதெய்வம்
சித்தர்கலெல்லாம், சிறுபிள்ளை பத்துவயதான
தேவி (கொங்கணர் பூஜா விதி)

5. வாமியென்ற நாமமது யாருக்காச்சு
மறுவி நிறை சித்த யோகிதமக்காச்சு
மகத்தான மெய்ஞானி பெரியோர்க்காச்சு
மற்றவர்க்கு பசுவென்ற நாமம்தானே

(கொங்கணர் 15)

6. தேரவே தேவியுட பூசைவிட்டால்
தெரு மண்ணாய் போகுமடா சித்தியெல்லாம்

(உரோமரிஷி கருமானச்சுருக்கம்)

7. தேனென்ற மொழிச்சியவள்
சித்தர்க்கெல்லாம் சிறுபிள்ளை தேவிதேவி

(சூரியானந்தர் பூஜாவிதி)

8. ஆமப்பா எட்டிரண்டும் பத்தாய் நின்ற
மனோன்மணியாள் வாலையாச்சே

(நந்திகேசுவர் சூத்திரம்)

9. வாமியவள் வாலை வைத்து பூஜை செய்ய
மதியுனக்கு வேணுமடா அதிகமாக
காமியவள் வெகு காமி சிவகாமி ரூபி
ஆமிவளையறிந்தவர்கள் சித்தர் சித்தர்

(கருவூரார்)

சித்தர் வயக்கிரமத்தில், சமீபகாலத்தில் சித்தி பெற்ற திருவள்ளுவர், தாம் இயற்றிய ஞான வெட்டி (ஞான-மார்க்கம்) யெனும் நூலில்,

10. வானத்திலுள்ள வாலாம்பிகையை
மதியாலறிந்து கதி பெருமலும்-வீணில்
பூசை செய்தேன் காண்.........என்கிறார்

11. உத்தம மாலாங்கா தேவிபதத்தை பூசைசெய்

(திருமூலர் சூத்திரம் 300)

இப்படி எல்லாச் சித்தர்களும் வாலை அல்லது வாலாம்பிகையே தெய்வம், மற்றதெல்லாம் தெய்வமாகாது என்றும் அந்த வாலாம்பிகையை அறிந்தால்தான் நற்பதம் கிடைக்குமென்று கூறியுள்ளார்கள். ஆனால் அது "லகுவல்ல-வாய்ப்பேச்சல்ல" என்று சுப்பிரமணியர் அகத்தியர்க்குத்தாமுறைத்த ஞானநூலில் கூறுகிறபடி இந்த வழி பாட்டில் தேறுவது மெத்த கடினம் என்பதும் தெளிவு.

சாதனமின்றி சாதிப்பாரில்லை என்றபடி இந்த தேவியின் வழிபாடு, (1) சரீர உழைப்பு, கட்டுப்பாடு, எனவும் (2) தேவியைப் பூசித்தல், துதித்தல் எனவும் (3) மானஸபூஜை யோகம் எனவும் பல பிரிவுகளுண்டு. இவைகள் ஒவ்வொன்றிலும் அநேகம் பிரிவுகள் உண்டு. இவற்றினில் முக்கியமாக ஸாதகனின் சுய நடத்தை, ஆஹாரம் முதலியவை பரமஸாத்விகமாகயிருக்கவேண்டும் என்பதை பின்வருமாறு வலியுறுத்தும்.

வகையோடு பிரம்மவித்தை கிடைக்கவென்றால்
சாதகமாய் புத்தியுள்ள தன்மை வேண்டும்
மெய்மயக்கம் போதை வஸ்து விலக்க வேண்டும்
வீறான ஆங்கார வொடுக்கம் வேண்டும்
மை விழியாள் கல்வியையகற்ற வேண்டும்
சிறந்த குரு பராபரியைப் போற்றவேண்டும்.

என்று கவுபாலசித்தரர் என்பவர் கூறுகிறார்.

இச்சக்தி வழிபாடு ஸாத்விகம், தாமஸிகம் என இரு வகையாக நடந்து வருகிறது. சத்தியை வழிபடுகின்ற ஒரு சிலர் மகாரபஞ்சகம் என்று சொல்லக்கூடிய மது (Toddy) மத்ஸ்யம் (Fish) மாம்ஸம் (Mutton etc.) முத்திரை

Gestures) மைதுனம் (sexual happiness) என்னும் ஐந்து வகையான வாமாசார மார்க்கத்தைக்கையாண்டு வருகின்றனர். இம்முறையை சித்தர்கள்மிகவும் கண்டிப்பதுடன், தக்க சான்றுகளும் கூறி தவிர்க்கச் சொல்லுகிருர்கள்.

9. போதை வஸ்துக்களை ஏன் தள்ள வேண்டும் என்ருல்—

பாரப்பா போதமயமாக வென்று பண்கெட்டசாராயம்
குடித்தால், வீரப்பா தான்மீறி பித்தங் கொண்டு
மெய்மறந்து பித்த நீர் மேலே சென்று தேக
மெல்லாம் அரிப்பு மீறி உண்டதொரு கற்பமெல்லாம்
விஷமாய்ப்போகும் உதரமது தடித்து நல்ல
நிங்காத நரை திரையால் கெடுவான்பாரே.

(அகத்தியர் சௌமியசாகரம்)

மேலும்,

பித்தநிர் சிரசிற் கொண்டு கண்ணொளியும்
மங்கிப் போகும், எழுந்திருக்க ஒட்டாது
மயக்கித்தள்ளும், சேர்க்கையுடன்
அனல்மீறி புலம்புவிக்கும் செடந்தளர்ந்து

வாசியது சீறும், சீறுமே ரவி தேய்ந்து
மதியில் நின்று மோனநிலை தான்மறந்து
கெடுவான்பாரே.
இப்படியாக தன்னிஷ்டம்போலபேர்தையைக்
கொண்டதினல்

கண்மறைந்து கள்ளு சாராயத்தால் செத்தவர்கள்
அனந்தங்கோடி, வீணப்பா
இதுரண்டும் தள்ளு, வீணருடன் பேசாதே
சாராதே, மொழியாதே, தானப்பா என்ற

மதந்தன்னை கொள்ளாதே, மதியமுதம்
கொள்ளவே முந்து முந்து

எனறு கூறியுள்ளார்கள்.

உபாஸகன் உண்ணவேண்டிய உணவு பற்றி கூறும் பொழுது :—

கேளப்பா சிறு கீரை பொன்னுங்காணி
கெடியான புளியாரை மிளகு சீனி,
வாளப்பா பசும்பயரு கட்டு முப்பு
வாற் குருவை சாதமடா பாலுமாகும்
கேளப்பா மற்றதொன்றுங் கொள்ளவேண்டாம்
குடிலமாய் தேகத்தைக் கெடுத்துப்போடும்
வேலப்பா இதுவரை கைமுறை தானும்
விள்ளார்கள் சட்டை முனி நான் விளம்பினேனே.

(சட்டைமுனி ஞானம் 100)

மேலேகண்டபடி ஸாத்விக ஆஹார நியமம் அவசியம் என்று மற்றும் பல சித்தர்களும் வற்புறுத்தியுள்ளார்கள்.

யோகமார்க்கத்தை அப்பஸிக்கும் பொழுது :—

பாரப்பா நாக்கையுந்தான் அண்ணுக்கேத்தி
பார்தனிலே பார்த்தவர்க்குப பலிதமில்லை
ஆரப்பாகண்கள் வெடித்து தேகம் போகும்
அடயோக மென்பார்கள் ஆகாதப்பா.

இஃதேபோல இவர்கள் கணக்கற்ற ஆஸனங்கள் போடும் முறையைக் கண்டித்து, அதனல் உடலுக்குக் கெடுதல் நேரிடும் என்றும் கூறி, ஸுகாஸனம், பத்மாஸனம் இரண்டையும் முக்கியமாகவும், மற்றும் இரண்டொரு ஆஸனங்களை சில குறிப்பிட்ட காலங்களிலும் கூறியிருக்கிறுர்கள்.

பூஜை செய்வது அதாவது ஸகுணேபாஸனையைப் பற்றிக் கூறும்பொழுது

காணப்பா பூஜை செய்ய முறையைக் கேளு
கைமுறையாய்ச் சுவடிவைத்துப் பூஜை செய்வார்

பூணப்பா சித்தர்கள் தான் தீபம் வைத்துப்
புகழாகப் பூஜைசெய்வார் என்போல
நாணப்பா சக்கரத்தைப் பூஜை செய்வார்
தானென்ற மேருவைத்தான் பூஜை செய்வார்
(சட்டைமுனி நிகண்டு)

உத்தம உபாஸகர்களுடைய பூஜைக்குரிய ஸாதனங்கள், தீபம், சக்ரம், (ஸ்ரீசக்ரம், சிதம்பரசக்ரம்) என்றும்; மற்றையோர்கட்கு மூர்த்தியும் சிறந்தது எனவும் கூறியுள்ளார். பெண்ணை வைத்து பூஜை செய்யும் வாமாசாரிகளைக் கண்டிப்பதுடன், அதனாலேற்படும் தீங்குகளையும் கீழே காணும் வரிகளில் முறையே குறிப்பிடுகிறார்கள்

செப்பலாம் பூசையது சக்தி பூஜை
சிலமடையர் வஸ்துவைத்து பூசை செய்வார்
அப்பம், பலகாரம், இறைச்சி வடை தோசை
கும்பலாயிவைகளெல்லாம் குவித்து வைத்து
குறிப்பாக மது வைத்து பெண்ணும் வைப்பார்
நெய்பாலாம், இது வெல்லா மன்னை ஏற்காள்
வீணரப்பா செய்தொழிலிதை விரும்பிடாதே

என்று கூறி, மேலும் இத்தகைய வழிபாடு என்ன பலனைக் கொடுக்கும் எனில்—

விரும்பாதே வீணர்கள் தான் பூசைசெய்து
விருதாவாய் திரிவார்கள் மெய்த்திடாதே
சுரும்பாதே சக்தியென்பான் பெண்மேலாசை
சுற்றிடுவான் காவியப்பா பாழாய்ப்போவான்
அரும்பாதே யவன் முகத்தில் விழித்திடாதே
அப்பனே பாவியென்று தள்ளு தள்ளு
குரும்பாதே குருத் துரோகங்கொண்டுபோவான்
கொள்ளாத நோய்வந்து கொல்லும்பாரே.

கொல்லுமடா நோய் வந்து கடிதிலே தான்
கோபிப்பான் சண்டாளன் குணங்கேடென்றான்
சொல்லுமடா அவன் குலமும் நாசமாகி
சிதறுமடா அவன் தனமும் வீடும் பாழாம்

வெல்லுமடா பெரியோர்கள் சாபமெய்தும்
விசையாகப் பஞ்சமா பாபமெய்தும்
மல்லுமடா உலகத்தோர்பழிப்பாரப்பா
மாய்கையிலே விழுந்தவனும் மாளுவானே.

(நந்தீசர் ஞானம்).

இவ்விதமான கெட்ட மார்க்கங்களை யெல்லாம் தவிர்த்து ஸாத்விகமுறையில் தேவியைப் பூஜை செய்ய வேண்டும் என்பதை எல்லா சித்தர்களும் வற்புறுத்துகிறார்கள். அந்த பூஜையும் தானாகவே துவக்குவது கூடாது. குருவினுடைய துணைகொண்டு, துறையோடும் முறையோடும் கற்கவேண்டும். அப்படி ஓர் உத்தம குரு கிடைப்பாரானால் அவரை ;

காரப்பா பன்னிரண்டு வருஷங் காரு
கல்நெஞ்சாயிருந்தாலும் கரைந்து போகும்*

என்றபடி பன்னிரண்டு வருஷமானாலும் பொறுமையுடன் காத்திருந்து கற்கவேண்டும்.

அந்த குருவும் நல்லநாள் முஹூர்த்தம் பார்ப்பதுடன் சிஷனது கிரக நிலை, ஸாமுத்திரிகா லக்ஷணம், அறிவுநுட்பம், சரிதம் இவைகளையும் கவனித்துச் செய்வார் என்பதைக் கீழே குறிக்கிறார்—

" காரையாய் பன்னிரண்டு வருஷம் காரு
கார்த்தாக்கால் மனத்தையல்லோ சோதிப்பார்
சோதித்து தீட்சை வைப்பார்

என்வும், சிஷ்யனின் தன்மையைக் கூறும்பொழுது—

தீட்சை வைப்பதா ரையென்றால்,
தாய்தந்தைதனைத் தொழுதானை, விரதங்
கொண்டானை,

---

* இதிலிருந்து ஒருவன் 12 வருஷகாலம் ஒருமொழியைக் கற்றால் அவன் அதில் தேர்ச்சி பெறுவான் என்பது துணிவு.

கானென்ற சிவனடியார் தனக்கன்பாகி கால் பூசி
யன்ன மிட்டோனே, இரக்கமுள்ளோனே,
தேனென்ற மொழியுடையோன், மனதிறப்போன்
சிவபூசை மறவாத சிந்தையுள்ளோன்றனே,
யிப்படியே யான் பார்த்து தீட்சைவைத்தேன்,
நம்போல சிஷவர்க்கம் நல்கிடீரே...

(கொங்கணர் தமது சிஷ்யருக்குக் கூறுகிறார்)

இப்படியாக நல்ல ஒழுக்கம். ஆசாரம் முறையான பூஜை இவைகளை, குரு முகமாகக்கற்று முறையே தேவீ பூஜை செய்யவேண்டும்.

பூஜை முடிந்ததும் தோத்திரங்களும், ஜபமும் செய்ய வேண்டும்என்றும் குறிப்பிட்டிருக்கிறது. அந்தமுறையில் அன்னையைத் துதிக்கும்பொழுது அவளுடைய பெருமைகளைச் சொல்லி, ஒருஸ்தலத்துக்கு நான்கெல்லை கட்டுவது போல் அவளது பராக்கிரமங்கள், வீரச்செயல்கள், அன்பர்களுக்காதரவளிக்கும் பண்பு இவற்றினைப் புராதனமாக ஏற்பட்டுள்ள புராணங்களில் கண்டபடி துதித்தல் அவசியம் என்பதில், பாராயணம், நாம பாராயணம், கடிகா பாராயணம், அக்ஷர பாராயணம் முதலியவையும் அடங்கியதாகும்.

அத்தகைய துதிமொழிகளை சித்த புருஷர்களில் போகர், கொங்கணர், அகத்தியர், சுந்தரானந்தர் முதலியோர் விரிவாகக் கூறியுள்ளார்கள். அவற்றினை சித்தர் நூல்களில் காணலாம்.

இனி வைதிகமுறையில், மஹரிஷிகளால் துதிக்கப்பட்டதும் வேத மார்க்கங்களை யநுஸரித்ததும், முன்ன

---

*தேவியைப் பூசித்தலும் சிவனைப் பூசித்தலும் ஒன்றே என்பதை வலியுறுத்த.

மேயே பல பக்தர்கள் பாராயணம் செய்து நற்பயன் பெற்றதுமாகக் கருதப்படும் நூல்களில் தலைசிறந்து விளங்குவது ஸ்ரீதேவீ மாஹாத்மயம்*.

இந்த கிரந்தத்தினுடைய பாராயண முறையைப் பற்றி ஆசிரியர் முன்னுரையில் விரிவாகக் விளக்கியிருக்கிறார்.

ஸ்ரீ தேவீ மாஹாத்ம்யம்

வேதங்கள்,வேதாங்கங்கள், உபநிஷத்துக்கள், ஸ்மிருதிகள் இவைகளில் சொல்லிய கொள்கைகளை ஜன ஸமூகத்திற்குத் தெளிவுபடுத்துவதற்காகவே பல வேதங்களுடைய உதாஹரணங்களுடனும், அந்த கருத்துக்களைப் புகட்ட ஏற்பட்ட நூல்கள் புராணங்கள்.

இப்படி முக்கிய புராணங்கள் பதினெட்டும்† உப புராணங்கள் பதினெட்டும் இருக்கின்றன. முக்கிய புராணங்கள் மொத்தம் நானூறு ஆயிரம் கிரந்தங்கள் கொண்டவை. அவற்றில் ஏழாவது புராணம் மார்க்கண்டேயம். இது ஒன்பதாயிரம் கிரந்தங்கள் கொண்டது.

பொதுவாகப் புராணங்கள் யாவும், மங்வந்த்ரங்கள், ரிஷிகள், ஜனஸமூகத்தினுடைய இயல்பு முதலியவைகளைச் சொல்லுவன. மேலும், ஒரு சிலருக்கு காலவசத்தால் துன்பம் ஏற்படல். அத்துன்பம் நீக்க அவர்கள்

---

*இது பதினெட்டு அத்யாயங்களைக் கொண்டது என்பதை எமது வேறு பதிப்பில் விரிவாக விளக்கப்படும்.

†பிரமம், பதுமம், வைஷ்ணவம், சைவம், பாகவதம், பவிஷ்யம் மார்க்கண்டேயம், ஆக்நேயம், பிரம்மகைவர்த்தம், லிங்கம், வராகம் ஸ்காந்தம், வாமனம், கூர்மம், மத்ஸ்யம், காருடம், பிரம்மாண்டம் இவை முக்கிய புராணங்கள்.

ஏதாவதொரு தெய்வத்தை வழிபடுவதற்கும், அந்த வழி பாடுகளுக்குரிய முறைகளையும் சொல்லுவன.

இந்த மார்க்கண்டேய புராணமும் இவ்விதமே யமைந்துள்ளது. இது மகாபாரத காலத்திற்கு பிறகு ஏற்பட்டது. ஏற்பட்ட ஸ்தலம் முதலில் மேற்குக் கடற் கரையும், பிறகு விந்திய பர்வதமுமாகும். ஜைமினி என்னும் மகரிஷி மார்கண்டேயரை அணுகி சில ஸந்தேகங்களை வினவுகிறார். அவர் தாம் நேரில் பதில் சொல்லாமல் நான்கு பறவைகளைக் காட்டுகிறார். அவை கள் பதில் சொல்லுகின்றன. இவ்விதம் கதையி னுடைய ஆரம்பம் காணப்படுகிறது. இப்புராணத்தி னுடைய முற்பகுதியில் தத்தாத்ரேயமாஹாத்ம்யமும் பிற்பகுதியில் இந்த தேவீமாஹாத்ம்யமும் அடங்கி யுள்ளது.

இதில் ஸுரதன் என்னும் அரசன், ஸமாதி என்னும் வைசியன் ஆக இவ்விருவர்களும், சிற்சில காரணங் களால் அவரவர்கள் இருப்பிடத்தை விட்டு துரத் தப்பட்டு கானகத்தை அடைகின்றனர். அடைந்த பொழுதிலும் அவர்களுக்குத் தத்தம் இல்லங்களிலும் ராஜ்யத்திலும் வெறுப்பு எற்படவில்லை. திரும்பவும் அவைகளைப் பெறவே விரும்புகின்றனர். அவர்களை ஸுமேதஸ் என்ற மஹரிஷி தேற்றி இவைகளெல்லாம் மஹாமாயையின் செயல். ஆகையால் நீங்கள் அந்த மஹாமாயையை வழிபட்டால் திரும்பவும் தத்தம் ராஜ் யமும், வீடும் கிடைக்கும் எனக் கூறி அந்த மஹாமா யையின் செயல்களை, முன்னொரு காலத்தில் நடந்த கதையிது என்று துவக்கி மதுகைடபன், மஹிஷா ஸுரன், சும்பன், நிசும்பன், சண்டன், முண்டன், சண் டிகை முதலியவர்களின் விவரங்களடங்கிய இந்த தேவீ

மாஹாத்ம்யம் என்னும் கிரந்தத்தை உபதேசிக்கிறார். அவர்களும் அவ்வாறே அம்மஹாமாயையாம் தேவியை உபாஸித்துத் திரும்பவும், தத்தம் மனோரதங்களை அடையப் பெற்று ஸுகஜீவிகளாக வாழ்ந்து வந்தார்கள் என்பது கதை.

வேறு நூல்களிலும் இந்த தேவீ மாஹாத்ம்யம் கூறப்பட்டிருக்கிறது. கதை ஒரு புறமிருக்க அநேகர் இதை ஒரு உயரிய மந்திர சாஸ்திரமாகவும் மந்திரங்களாகவும் கருதி, பாராயணம் செய்து நற்பயன் பெற்றிருப்பதாக இதற்கு உரைகளை யியற்றிய பல பெரியோர்களும் கூறியுள்ளார்கள்.

இவ்வரிய நூலின் மூலத்தை மட்டும் பாராயணம் செய்பவர்கட்கு பயன்பெறும் வகையிலே ப்ரயோக விளக்கங்களுடன் முன்பு வெளியிட்டுள்ளோம்.

இதற்குக் கோர்வை நூல்களாகக் கொள்ளக் கூடிய நாமபாராயணம் கடிகாபாராயணம் முதலிய கிரமங்களை விவரிக்கும் லகுஸ்துதியும். மற்றும் இந்த உபாஸனையை அனுஸரித்த† உபநிஷத்துக்களும், சில முக்கிய* ஸ்தோத்திரங்களும் நாம் முன்னமேயே மூலத்தோடு தமிழில் விரிவான உரைகளுடனும், குறிப்புக்களுடனும் வெளியிட்டுள்ளோம்.

இந்த நூலுக்கு இதுகாறும் தமிழ் மொழிபெயர்ப்பு வெளி வரவில்லை. ஆஸ்திகர்கட்கும் அதிலும் தேவீ உபாஸகர்கட்கு இந்த சரிதம் பயனளிக்கும் வகையில்

---

† [1] பாவனோபநிஷத், [2] அருணோபநிஷத், [3] அதர்வசிர உபநிஷத், [4] பஹ்வ்ருசோபநிஷத், [5] ஸ்ரீசக்ரோபநிஷத் முதலியன.

* தேவி வேதஸாரஸ்தவம், ப்ராதஸ்மரண ஸ்தோத்ரம், தேவீ நவமணிமாலா ஸ்தோத்திரம், தேவிமாஹாத்ம்ய ஸ்தோத்ரம் முதலியன.

எளிதில் பொருளறிந்து தினமும் பாராயணம் செய்து வந்தால் ஐயமற்ற ஐஹிகபலன்களை யடைவார்கள் என்ற நோக்கத்துடன், இம்மொழி பெயர்ப்புடன் கூடிய இச்சரிதம் வெளிவருகிறது.

ஆதலின் இவ்வரிய நூலின் உட்பொருள்களைத் தெள்ளிய முறையில் ஆஸ்திகர்கள் எளிதில் உணரும் வண்ணம் எமது ஆசிரியர் ஸ்ரீ சர்மா அவர்கள் இப்புனிதப் பணியை மேற்கொண்டு சுமார் இரண்டு வருஷங்களாக இடைவிடா ஊக்கத்துடன் ஸம்ஸ்கிருதத்திலுள்ள பதினேறு உரைகளையும் ஒப்பு நோக்கி இதற்குப் பதவுரை, பொழிப்புரை, கருத்துரை முதலியவைகளுடன் ஒரு விரிவான தமிழுரையையும் எழுதி அளித்துள்ளார். அஃதினை ஆஸ்திகர்கட்குப் பல வழிகளிலும் பயன்படும் பொருட்டு வெளியிட்டுள்ளோம்.

"ஏரப்பா உழுதால் வெள்ளாமையாகும்,
ஏரில்லான் அறுத்தடித்த உண்மை உண்டோ"

என்றபடி, இந்நூலிலுள்ள ஒவ்வொரு மந்த்ரத்தையும் உள்ளபடி யுணர்ந்து தக்க ஆசாரியனைத் துணைகொண்டு பாராயணத்தையோ, மந்த்ர ஜபத்தையோ, ஹோமம், புரஸ்சரணம் இவைகளையுமோ செய்து வந்தால் குறித்த பலன்கள் உண்டாகாமற் போகாது என்பது உறுதி.

"பூசித்தே யிப்படியே தோத்திரஞ் செய்வாய்,
பூரணத்தே கேசரத்தே வார்த்தை சொல்வாள்
ஆசித்தே கன்னியுட மாதந்தன்னிலப்பனே

நவராத்திரி யன்றைக்கேதான் பாகித்தே, தசமி
மட்டுந் தேவிபூசை பண்பாகச் செய்திடிலோர்
மவுனந்தங்கும் மைந்தா கேள்"

(கொங்கணர் கடைக் காண்டம் 500)

என்றபடி சாரத நவராத்ர புண்யகாலங்களில்

> கேளப்பா உதயாதி சிவத்தைப் பூசி,
> கெணிதமாய் மத்தியமத்தில் போஜனஞ்செய்து
> நாளப்பா மாலேதனில் உகாரதீட்சை
> நன்மையுள்ள சத்தியை நீ பூசைபண்ணு"

(அமிருதகலேக் ஞானம் 1500)

மேலும்,

> நவக்கிரகம் பொல்லாதப்பா
> அதை அனுக்கிரகம் ஆக்கிக்கொள்ளு"

என்ற அகஸ்தியர் வாக்குப்படியும் ஆஸ்திகர்கள் ஸாதாரணமாகவும் முக்கியமாக சாரத நவராத்ர புண்ய தினங்களிலும், காலேயில் நவக்கிரக ஆராதனே, சிவபூஜை முதலியவற்றையும், இரவில் ஸ்ரீதேவீ பூஜையையும் செய்து அவ்வப்பொழுது இந்நூலேயும், மற்றும் முன்பே கூறப்பட்ட கோர்வை நூல்களேயும் பாராயணம் செய்து கோரிய பலன்களேப் பெற்றுத் தங்களுடைய குற்றங்கள் குறைய வாலே, திரிபுரை, புவனே என்றும், மற்றும் எண்ணற்ற நாமங்கள் கொண்டவளும், மஹாமாயையும், அரூபியும், ரூபியுமான அந்த அன்னேயினுடைய திருவருளேப்பெற வேண்டுகிறோம்.

இவ்வரிய பணியை நேயர்கட்கு அளித்துத்தந்த எமது ஆசிரியர் அவர்களுக்கு ஆஸ்திகர் சார்பாக எமது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்ளுகிறோம். ஸ்ரீதேவியினுடைய பக்தியில் சிரத்தை கொண்டவரும், "வித்யா ப்ரகாச" என்று ஸ்ரீகாஞ்சி காமகோடி பீடாதிபதிகளால் கௌரவிக்கப்பட்டவரும், சீலங்கள் நிறைந்தவருமான திவான்பகதூர் ப்ரம்மஸ்ரீ **K. S.** ராமஸ்வாமி சாஸ்திரியார் அவர்கள் மனமுவந்து அளித்த முன்னுரைக்கு யாம் மிகவும் கடைமைப்பட்டிருக்கிறோம்.


ஸ்ரீகுமரகுருபரன் முருகன்பால் அன்பு செலுத்தி அவரது நாமாவை இடைவிடாது ஜபம் செய்துகொண்டு அவனுடைய புகழைப் பாடும் பணியே உடம்பெடுத்த தாலான பயனுகக்கருதி வருபவரும், முருகனடியார்களின், அண்ணல் எனத்தகும் மாஜி நீதிபதியும், சீலம் நிறைந்த வழக்கறிஞருமாகிய ஸ்ரீ "திருப்புகழ் மணி" T. M. கிருஷ்ணசுவாமி அய்யர் அவர்கள் அணிந்துறை ஒன்றை அளித்ததற்கும் எமது நன்றியை தெரிவிக்கின்றோம்.

இப்புனித சாரத நவராத்திரியை முன்னிட்டும், உபாஸகர்களுடைய உபயோகத்தின் பொருட்டும் வெளி வருகின்ற இந்நூலை, அந்த மஹாமாயையாம் அன்னை ஸ்ரீ வாலாம்பிகையினுடைய திருவடித் தாமரைகளில் ஸமர்ப்பணம் செய்கிறோம்.

'பொங்கும் மங்களம் எங்கும் தங்குக'

"நித்யகல்யாணி"
13. மாணிக்கேசுவரி ரோடு
கீழ்பாக்கம், சென்னை.
13-9-1957

ஸ்ரீவத்ஸ ஸீதாராமன்.



SRI BHASKARARAYA MAKHIN

B. S. & F. Mart "Pen Corner" 113, Armenian St. Madras.

श्रीः

ॐ नमश्चण्डिकायै

ஸ்ரீதேவீமாஹாத்ம்யம்

மூலமும்

ப்ரகாசிகா என்ற தமிழுரையும்

தோற்றுவாய்

हृदि स्थिता सदा सयं जन्मकर्मावलीस्तुतिः ।
एतां द्विजमुखाज्ज्ञात्वा ह्यधीयानो नरः सदा ।
विधूय निखिलां मायां सम्यग्ज्ञानं समश्नुते ।
सर्वसंपद आप्नोति धुनोति सकलापदः ॥

लक्ष्मीतन्त्रम्—

"அவதாரம், லீலாவிபூதி முதலியவைகளைப் புகழ்வதான இந்த தேவியினுடைய ஸ்தவமானது, நன்கு ஒருவனுடைய ஹ்ருதயத்திலே நிலைத்திருக்கும் பொழுது, இந்த ஸ்தவத்தை அந்தணர் வாயிலாக

அறிந்து எப்பொழுது எவன் பாராயணம் செய்கிருனே, அவன் எல்லாவிதமாக அஜ்ஞானத்தையு மகற்றி, தெளிந்த அறிவைப் பெறுகிருன் ஸ்கல ஸம்பத்துக்களையுமடைகிருன்-'' என்பது லக்ஷ்மீ தந்த்ரம்.

''ஓ அந்தண! இந்த தேவீமாஹாத்ம்யம் உனக்குச் சொல்லப்பட்டது. இது உபநிஷதங்களிலும், வேதங்களிலும் ப்ரஹ்மவாதிகளால் நிச்சயம் செய்யப்பட்டதாகும். தனித்தும், எங்கும் நிரம்பியதும், நுண்ணியதும், மூலகாரணமாயுள்ளதும், அசைவற்றதும், அழிவற்றதுமான ஸ்ரீதேவியினுடைய சிறந்ததான அந்த ஸ்தாநத்தை யோகிகள் அறிகின்றனர். தேவியினுடைய அச்சிறந்த ஸ்தாநமானது எல்லேயற்றதாயிருந்து கொண்டு ப்ரக்ருதியில் லயத்தை யடைகிறது. தேவியினுடைய அந்த சிறந்த ஸ்தாநமானது ஆத்மாவை அடைவதற்கும் காரணமாயுள்ளது'' என்பது கூர்ம புராண வசநமாகும்.* இவ்விதமே ''இந்த நாரஸிம்ஹீ மாயையே யாவள். இத்தோற்றங்களை யெல்லாம் இவளே உண்டுபண்ணுகிருள். இவைகளைக் காப்

---

* ''एतत्प्रदर्शितं विप्र देवीमाहात्म्यमुत्तमम् ।
सर्ववेदान्तवेदेषु निश्चितं ब्रह्मवादिभिः ॥
एकं सर्वगतं सूक्ष्मं कूटस्थमचलं ध्रुवम् ।
योगिनस्तत्प्रपश्यन्ति महादेव्याः परं पदम् ॥
अनन्तं प्रकृतौ लीनं देव्यास्तत्परमं पदम् ।
आत्मोपलब्धिविषयं देव्यास्तत्परमं पदम् ॥''

कूर्मपुराणम् १२ अ.

பாற்றுகிருள். இவைகளை யெல்லாம் தன்னிடத்தில் மறைத்துக் கொள்ளுகிருள். ஆகையால் இந்த மாயையை சக்தியென உணரவேண்டும். எவனெருவன் இந்த மாயையை சக்தியென உணர்ந்து கொள்ளு கிருனே அவன் ம்ருத்யு(மரணம்)வைக் கடக்கிருன். அவன் பாபத்தைத் தாண்டுகிருன். அவன் அம் ருதத்தை (மரணமில்லாத்தன்மை) அடைகிருன். பெருகிய மங்களத்தையும் பெறுகிருன்'' என உப நிஷதம் கூறும்.*

இவ்விதம் தந்த்ரங்களும், புராணங்களும், உப நிஷதங்களும், ஸ்ரீதேவியினுடைய உபாஸனையைச் சிறப்பித்து யாவற்றினும் மேம்பட்டதாகக் கூறுவ தோடு, பரமபதத்திற்கும் காரணமாயுள்ள உத்தம மார்கமெனவும் கோஷிக்கின்றன. இந்த தேவீ உபா ஸனையும் பாலா, லலிதா, சண்டிகா எனப் பலபேதங்க ளோடு பலவகையா யிருக்கின்றன. இவைகளில் சிறந்தது சண்டிகோபாஸனையும், அதிலும் முக்கிய மானது சண்டிகாபாடம்—அதாவது தேவீமாஹாத்ம்ய பாராயணம் — தலைசிறந்து விளங்குவதாகும்.

ஏனெனில் தேவீமாஹாத்ம்ய பாராயணம் விதி வழிவழுவாது பொருளுணர்ச்சியுடன் பாராயணம்

---

* "माया वा एषा नारसिंही सर्वमिदं सृजति, सर्वमिदं रक्षति, सर्वमिदं संहरति। तस्मान्मायामेतां शक्तिं विद्यात्। य एतां मायां शक्तिं वेद स मृत्युं तरति। सोऽमृतत्त्वं च गच्छति, महतीं श्रियमश्नुते॥"

तापनीयोपनिषत्.

செய்யவேண்டிய மஹாமந்த்ர வடிவாயமைந்த நூலாகு மென்ற பெருமையேயாம். இவ்விதம் ஒருவன் பாரா யணம் செய்து வந்தால் அவனுக்கு ஸித்திகள் யாவும் கைகூடுமெனத் தந்த்ரசாஸ்தரங்கள் முறையிடுகின் றன. அப்படி முறையோடு செய்யத் தவறினுல் விபரீத பலன்களும் உண்டாகுமாம்.

உதாஹரணமாக "பார்யாம் ரக்ஷது பைரவீ" என்ற இடத்தில் 'பார்யையை — மனைவியை - பைரவீ காப்பாற்றுவதாக -' என்பது பொருள். இதை யுண ராது ரக்ஷது - என்பதற்குப் பதிலாக பக்ஷது என்று படித்து வந்தால் காப்பாற்றுவது என்ற பொருள் கிடைக்காது, அதற்கு பதிலாக புசிப்பது - உண்பது - என்ற பொருள் கிடைப்பதாகும். இதுபோலவே 'வ்ருத்ர ப்ராணஹரே' என்ற விடத்திலும் வ்ருத்ரன் என்ற அஸுரனுடைய ப்ராணனை அபஹரித்தவள் என்பது பொருள். இதற்கு மாருக வ்ருத்ர - என்ற விடத்தில் 'புத்ர' எனத் தவறிப் படித்துவிட்டால் புத்ரனுடைய ப்ராணனை அபஹரிக்கின்றவள் என்பது கிடைக்கும். இது விபரீதமாக புத்ரசோகத்தை விளைப்பதாகும். மற்றும், 'உத்தாய ச மஹாஸிம்ஹம் தேவீ சண்டமதாவத" என்ற விடத்தில் 'தேவீ பல முள்ள ஸிம்ஹத்தின்மீது உட்கார்ந்துகொண்டு சண் டனைப் பின்தொடர்ந்து ஓடினுள்!' எனச் சிலர் உரை கூறுகின்றனர். உண்மையில் அதற்குப் பொருள் வரு மாறு - "தேவீ வலியதான தனது வாளை உயர்த்திப் பிடித்து ஹம் என்ற பயங்கர சப்தத்தோடுகூட சண் டனைப் பின் தொடர்ந்தாள்" என்பதேயாம். மஹாஸிம் ஹம் என்ற விடத்தில் மஹாஸிம் - மஹ - மஹத்தான- அஸிம்-வாள்-என்று பதம்பிரித்துக் கொள்ளவேண்டும்.

இவ்விதம் பல விதத்திலும் தலைசிறந்த இம் மாஹாத்ம்யம் ஆழ்ந்த உட்கருத்துக்கள் அமைந்து, மந்த்ரங்களின் தனிப் பெருமையும் கொண்டு விளங்குவதாகும்.

இந்நூல் நமது தக்ஷிண தேசத்தில் வழிவழியாகத் தோன்றிய பெரியோர்கள் முன்னிலையில் உபதேசம் பெற்று, தினந்தோறும் பாராயணம் செய்யப்பட்டு வருகின்ற பல குடும்பங்களை இன்றும் காணலாம். அவர்களிற் சிலர் பொருள்விளக்கம் கொள்ளப் போதிய உதவியில்லாது சிரத்தையின் மிகுதியால் மூலத்தை மட்டும் விடாது பாராயணம் செய்து வருகின்றனர். இன்னோரன்ன ஆஸ்திக அன்பர்களுக்கு எளிதில் பொருள் விளக்கம் வேண்டுவது அவசியமெனக் கருதி இந்நூலை தேவநாகரியிலும், தமிழிலும் மூலச்லோகங்களோடு பதவுரை, பொழிப்புரை, குறிப்புரை முதலியவைகளை, ஸம்ஸ்க்ருத்திலுள்ள பல உரைகளையும் தழுவி எனது சிற்றறிவிற்கு எட்டிய வரையில் ஒருவாறு மொழி பெயர்த்துக் கொடுக்க முன் வந்துள்ளேன்.

இந்நூல் எழுநூறு மந்த்ரங்கள் கொண்டு சிறந்து விளங்கும் உத்தமோத்தமமான பாராயண க்ரந்தமாகும். ஒவ்வொரு ச்லோகமும் ஒவ்வொரு பலனை யுபதேசிப்பதுமாகும். இதைத் தினந்தோறும் விதிப்படி பாராயணம் செய்தாலும், அல்லது தக்க ஆசாரியனுடைய துணை கொண்டு ஹோமம் செய்துவந்தாலும் ஸகல காரியங்களும் கைகூடுமென்பதில் ஒரு சிறிதும் ஐயமில்லை.

இந்நூலுக்குப் பல தந்த்ரசாஸ்த்ரங்களிலும், குறிப்பாக **காத்யாயநீதந்த்ரம், டாமரதந்தரம், வாராஹீ**

தந்த்ரம், லக்ஷ்மீதந்த்ரம், முதலிய தந்த்ரங்களிலே ப்ரயோக விதிகள் பலவாருகக் காணப்படுகின்றன. ஸ்ரீலக்ஷ்மீதரர் இந்நூலுக்கு அநுஷ்டாந-ஸுத்ரார்ணவம் என்ற உரை யொன்றை வகுத்துள்ளார். அதில் மந்த்ரம், யந்த்ரம், மருந்து என்றபடி இம்மூன்றையும் ஆதாரமாகக் கொண்டு ப்ரயோகங்களை வெகு அழகாக எடுத்துக் காட்டி, ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் விஸ்தாரமாக ப்ரயோகவிதிகளையும், அவைகளுடைய ஸித்திகளையும் சொல்லுகிருர். அவர் தன்னுடைய உரையில் மேற்கோளாக ப்ரயோகபரிமளம் என்ற நூலைக் கொள்ளுவதிலிருந்து, அதுவும் இந்நூலுக்கு ஒரு உரையெனத் தெரியவருகிறது. அந்நூலும் கிடைத்திலது.

இந்நூலுக்குச் சாக்தாகமங்களின் கரையைக் கண்டவரும், அன்னையாம் ஸ்ரீலலிதாதேவியை நேரில் காக்ஷி கொண்டவருமான ஸ்ரீபாஸ்கரராயர் குப்தவதீ என்ற சிறந்த உரையை இயற்றியுள்ளார். இதைத் தவிர தூர்காப்ரதீபம், சதுர்தரீ, சாந்தநவீ, நாகோஜி பட்டீயம், தம்சோத்தாரம், ஜகச்சந்த்ர சந்த்ரிகா, தீபிகை, விவரணம், கௌமுதீ, கூடார்த்ததீபிகை, கைரவம் என்பன போன்ற பல உரைகளும் காண்கின்றன.

இவைகளை ஒப்புநோக்கி எனது அல்ப அறிவுடனும், ஆசாரியனுடைய துணைகொண்டும், எனது அநுபவத்தையும் கொண்டு, ஆஸ்திகர் அனைவரும் பொருளுணர்ந்து கொள்ளும் வகையிலே, எனது இச்சிறு உதவி யமையவேண்டும் என்ற பேரவாவுடன் இப்பணியில் யான் ஈடுபட்டேன். இந்நூலில் குறைகள் பல காணலாகும். அவைகளை யகற்றி 'குணத்தையே

குறிக்கோளாகக் கொள்ளவேண்டுவதும் சீலர்களின் சிறிய முறையாகும், என்பதற்கிணங்க என்னுடைய உழைப்பைப் பயனுள்ளதாகவும் செய்வார்களென நம்புகிறேன்.

"ஆராதிக்கத்தக்க அத்தேவீ மனிதர்களுக்கு இவ்வுலகிலே போகங்களையும், அவ்வுலகிலே மோக்ஷத்தையும் கொடுப்பவளாகஇருக்கிருள்" † என்று ஸுமேதஸரிஷி ஸுரதனுக்குச் சொல்லியதுபோல இந்நூலை அநுதினமும் அநுஸந்தாநம் செய்யும் அன்பர்கள் இதனுடைய பொருளை உள்ளபடி உணர்ந்துகொண்டு அவரவர்களுடைய காமனை(விருப்பம்)களுக்குத் தக்கவாறு ஜபமோ, பாராயணமோ, அல்லது ப்ரயோகமோ செய்து, ஸகல மங்களங்களையும் அடையவேண்டுமென்று ஸர்வமங்கள வடிவாயமைந்த அன்னையாம் ஸ்ரீ சண்டிகா தேவியை வேண்டுகிறேன்.

ஓர் விஜ்ஞாபநம்

"படைப்புக்கு முன்பு தேவீ ஒருவளே இருந்தாள். அவளே இவ்வண்டங்களைப் படைத்தாள்"* என்பது பஹ்வருசோபநிஷத். "ஸ்ரீதேவியினுடைய கவசத்தை முதலில் ஜபம் செய்து, பிறகு மாஹாத்ம்யத்தைப் பாராயணம் செய்கிறவனுக்கு மலைகள், காநகங்கள் இவைகளோடு கூடிய இப்பரந்த பூமண்டலத்தை ஆதிசேஷன் எவ்வளவு காலம் வரையில் தரித்துக் கொண்டிருக்கிருனே, அவ்வளவு காலம் வரையில் மக்கட்பேறுடன் கூடிய பெருகிய ஸம்பத்துக்கள் நிலை

---

† आराधिता सैव नृणां भोगस्वर्गापवर्गदा ।

* देवी ह्येकाग्र आसीत् । सैव जगदण्डमसृजत ।

பெற்று விளங்குவனவாம். அவ்வுபாஸகன் முடிவில் மஹாமாயையினுடைய அநுக்ரஹத்தால் தேவர் களுக்கும் கிடைக்கத்தகாத அழிவற்றதான ஆநந்த நிலயமாம் பரமபதத்தையும் அடைகிறான்''* என்று கவசஸ்தோத்திரத்தினுடைய முடிவிலே சொல்லி யிருப்பதுபோல் எப்பொழுதும் வேதத்தினுடைய கட்டளையை நிறைவேற்றுவதில் கண்ணும் கருத்தும் கொண்டு, அவ்வேதத்திலே விதிக்கப்பட்ட கர்மாக் களில் உத்ஸாஹத்தோடு கூடிய ஹ்ருதயத்தையுடைய உத்தம சீலர்களே! உங்களுக்கு நான் சொல்லப் போகும் விஷயம் புதியதும், தெரியாததுமல்ல.

வேறு ஒரு அபேக்ஷையையும் கருதாது கடமை எனப் பாராயணம் செய்கின்றவர்களுக்கு, தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் (அறம் - பொருள் - இன்பம் - வீடு) என்ற நான்கு புருஷார்த்தங்களையும் அடைவதற்குள்ள பெருமையோடு கூடியதென உலகம் முழுவதும் பெரும் பறைசாற்றி வரும் 'துர்கா ஸப்த சதீ' என்ற பெயருடன் மிகச் சிறந்து விளங்குவதான இத்தேவீமாஹாத்ம்யமே யாகும். இது உபாஸகர் களுக்கு ஒரு காமதேநுவைப்போல கோரிய பலன்களை வரையாது கொடுப்பதாகும். இதனுடைய பெரு மையோ இப்பூமண்டலம் முழுவதும் ஆபாலகோபாலம் அறிந்ததேயாம்.

---

* यावद्भूमण्डलं धत्ते सशैलवनकाननम् ।
तावत्तिष्ठति मेदिन्यां संततिः पुत्रपौत्रिकी ॥
देहान्ते परमं स्थानं यत्सुरैरपि दुर्लभम् ।
प्राप्नोति पुरुषो नित्यं महामायाप्रसादतः ॥

இந்த ஸ்தவத்தினுடைய அநுஷ்டான முறையானது மஹான்களால் அநுதினமும் அநுஷ்டிக்கப் பட்டு ராஜமார்க்கம்போல் எங்கும் குறைவுருது பிரகாசிப்பதாகும். இக் கலிகாலத்திலும் பலவிடங்களில் ஆஸ்திகர் அநேகர், தாரித்ரியம், ரோகம், துக்கம், பயம், முதலிய தீராத நோய்களால் துயரங்கள் உண்டாகும் பொழுது அந்த அந்த துன்பங்கள் விலகுவதற்கு அவ்வப்பொழுது தாஞகவோ, அல்லது தக்க ப்ராஹ்மணர்களைக் கொண்டோ, பாராயணம், ஹோமம் முதலியவைகளைச் செய்து பலனையடைகின்றனர். இவர்கள் தாம் பெற்ற நற்பலன்களைக் கண்டு மற்றவர்களையும் இதில் ஈடுபடச் செய்தும் வருகின்றதை இன்றும் நமது தேசத்தில் காணலாம்.

இதைப் பாராயணம் செய்யும்பொழுது சிலருக்குத் தாங்கள் விரும்பிய பலன் கைகூடாது போனுல் அதற்குக் காரணம் விதிமுறை விலகியதுதான் என்பதையும் உணரவேண்டுவது அவசியமாகும். இதனுடைய அநுஷ்டாநம் போதிய அறிவும், உபதேசமும், அநுபவமும் இல்லாதவர்களுக்கு ஸுலபமாக விளங்காது. எனவே இதை முறைப்படி உணர்ந்து கொண்டு, தகுந்த குருவை யடைந்து உபதேசம் பெற்று, அவரிடமிருந்து அநுஷ்டான முறையை யுணர்ந்து செய்வது நல்லது. அவ்விதமல்லாது தனது இஷ்டப்படி செய்தால் விபரீத பலன்களே உண்டாகும். ஆகவே அறிவுள்ள உபாஸகன் பாராயண விதியையும், ஹோம விதியையும் நன்கு உணர்ந்துகொள்ள வேண்டுவது அவசியமாகிறது.

மேலும் பாராயணம் செய்யும்பொழுது, "ராகத் தோடும், வேகமாகவும், தலையை யசைத்தும், அவ்

விதமே எழுதி வாசிப்பதும், பொருளை யுணராது படிப்பதும், சிறிய குரலில் படிப்பதுமான இந்த ஆறு செய்கைகளையுடையவர்கள் பாராயணம் செய்வதற்கு அர்ஹதையற்றவர்களாவர் '' என்பது ப்ரமாணவசநமாகும். ஆகையால் இவைகளையும் நன்கு உணர்ந்து கொள்ளவேணும். ஒரு சிலர் திறமையும், அறிவுமில்லாது தான்தோன்றியாயிருந்து கொண்டு இவைகளில் ஒரு ஸித்தியையும் காணப்பெறாது கலக்கமடைந்து, பிறரிடத்திலும் தமது குற்றத்தை ஆரோபணம் செய்து வருகின்றனர். வேறு சிலர் இதைத் தங்களுடைய பொருள் வருவாய்க்கு ஒரு கருவியாகக் கருதி பிறரை ஏமாற்றியும் வருகின்றனர். இவர்கள் இவ்வாறு செய்து வருவது பெரிய பாபத்தை ஸம்பாதித்துக் கொள்வதோடு, முடிவில் இருவரும் சீரழிகின்றனர். ஆகவே ஆஸ்திக அன்பர்கள் அனைவரும் ஒருவருக்கொருவர் ஒருவித ப்ரதி ப்ரயோஜநத்தையும் கருதாது அந்த அந்த தோஷங்களுக்குத் தக்கப்படி பரிசுத்த மனதோடு பாராயணமோ, அல்லது ஹோமமோ செய்து வந்தால் ஸகல ஸித்திகளும் உண்டாகாமற் போகாது.

இல்லற வாழ்க்கையிலே வழிவழியாகத் தோன்றி வரும் தொலையாத் துயரங்களை யநுபவித்துக்கொண்டு, ஸம்ஸாரமென்னும் கடலில் பல வழிகளிலும் பரவசமடைந்து, இரவும் பகலும் மேலும் கீழுமாக மூழ்கி எழுந்துகொண்டு கரைகாண வழி யொன்றும் காணாத மக்களுக்கு, இந்த ஸ்தவதமானது ஓர் அம்ருதஸஞ்சீவிநீ போன்றதாகும். இவ்வுண்மையை யுணர்ந்து தூய உள்ளத்துடன் அநுஸந்தாநம் செய்து வந்தால் துயரங்

களிலிருந்து விடுதலை பெறுவதோடு, வீடு பேறு பெறுவதற்கும் தோன்ருத் துணையா யிருக்குமென்பதில் ஒரு ஸந்தேஹமும் கிடையாது. எனவே அன்பர்கள் இச்சிறு நூலைத் தக்கபடி பயன்படுத்திக்கொள்ளவேண்டுகிறேன்.

(க) சண்டிகாசப்தத்தினுடைய பொருள் விளக்கம்.

சண்டபாஸ்கரன், சண்டமாருதம் என்பன போன்ற பெயர்களுக்கு முன்பு 'சண்ட' என்ற பதம் உபயோகிப்பதை ஸர்வஸாதாரணமாகக் காணலாம். இப்பதத்திற்குப் பொருள் யாதெனில் அஸாதாரண - விசேஷ - மான - குணத்தோடு கூடியது என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. இதுமட்டுமல்ல. தேசம், காலம், வஸ்து இவைகளுடைய பரிச்சேதம் (பிரித்தல்) காரணமாக மூன்று வகையாகவும் கொள்ளலாம். எனவே இந்த பரிச்சேதத்தோடு கூடியதும், விசேஷ குணத்தோடு கூடியதும் ப்ரஹ்மம் ஒன்றேயாகும். அந்த ப்ரஹ்மத்தினுடய லக்ஷணமும் இதுவேயாகும். ஆகவே 'சண்டி' என்ற பதத்திற்கு ப்ரஹ்மத்தினுடைய பட்டமஹிஷீ என்பதும் பொருந்தும். ''பயத்தின் காரணமாகக் காற்று வீசுகிறது, பயத்தின் காரணமாகவே ஸூர்யன் உதயமாகிருன். பயத்தின் கராணமாக அக்நி, இந்திரன், யமன், முதலியவர்கள் ஓடுகின்றனர்''* என்ற இந்த ச்ருதி வாக்யத்தால் ப்ரஹ்மத்திற்கு இயற்கையாகவே கோபம் உண்டு என்பது ஸித்த

---

* भीषास्माद्वातः पवते । भीषोदेति सूर्यः । भीषास्मादग्निश्चेन्द्रश्च । मृत्युर्धावति पञ्चमः ।

மாகிறது. மேலும் "நமஸ்தே ருத்ர மந்யவே"† என்ற விடத்தில் மந்யுவுக்கு (கோபத்திற்கு) நமஸ் காரம் என்று சொல்லப்படுவதும் இதற்குத் தக்க சான்ருகும். இவ்விதமுள்ள கோபமானது "சண்டி" என்ற தாதுவினுடைய முக்கிய விருத்தியாகும். சண்டதே-கோபிக்கப்படுகிறது - சண்ட என்பதாகும். சண்டியே - சண்டிகை - கோபமுள்ளவள் - என்பது பொருளாகும். இந்த சண்ட சப்தம் வாசகமும், பர ப்ரஹ்மமஹிஷீ வாச்யமுமாகும். இச்சண்டிகையே, "அது பார்த்தது, அவன் விரும்பினுன், அது தவம் செய் தது."‡ என உபநிஷத்துக்களில் ப்ரஸித்தமான ஞானம்-இச்சை-க்ரியை என்ற ஸமஷ்டிரூபமாயிருக்கிற ப்ரஹ் மத்தினுடைய ப்ரதம - முதல் - வீக்ஷணமான தர்மம் எனவும், ஆதிசக்தி எனவும் சொல்லப்படுகிருள்.

மேலும் மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ-மஹாஸரஸ்வதி என்ற நாம ரூபங்களைக் கல்பித்து வ்யஷ்டியாக வ்ய ஹாரம் செய்யப்படுகிற சக்திரஹஸ்யங்களில் துரீயா என்ச் சுட்டிக்காட்டப்படுபவளும் இந்த சண்டிகா தேவியே யாகும். ஸ்ரீசங்கரபகவத் பாதரும்;

"ஓ பரப்ரஹ்மமஹிஷி! வேதங்களுடைய உட் கருத்துக்களை முற்றுமுணர்ந்த வியாஸர் முதலிய வர்கள் உனது திருவடியை ப்ரஹ்மனுடைய மனைவி யாகிய ஸரஸ்வதி யெனவும், மஹாவிஷ்ணுவின் மனைவியாகிய மஹாலக்ஷ்மி யெனவும், சிவபத்நியாகிய

---

† नमस्ते रुद्र मन्यवे ।

‡ तदैक्षत, सोऽकामयत, तत्तपोऽकुरुत ।

பார்வதி யெனவும் சொல்லுகின்றனர். உனது திருமேனியின் மஹிமையை உணருவதற்கும் முடியாத பெருமையோடு, நிர்வசனம் செய்ய முடியாத துரீயா என்ற நான்காவதான மஹாமாயா வடிவாயிருந்து கொண்டு இப்பிரபஞ்சம் முழுவதையும் நீ பரவசமடையச் செய்கிறாய்''* எனத் தமது ஸௌந்தர்ய லஹரியில் கூறுகிறார்.

பரப்ரஹ்மமஹிஷியாயும், துரீயயாயுமிருக்கிற இச்சண்டிகா தேவீ இங்கு மூன்று சரிதங்களுக்கும் ஸமஷ்டி தேவதையென்று இத்தேவீமாஹாத்ம்யம் முழுவதும் விளக்கப்பட்டவளும், ''யாவற்றிற்கும் முதலாவதாக இருப்பவள் மஹாலக்ஷ்மீ'' † என்றும், ''மஹாலக்ஷ்மீயே ஸர்வேச்வரேச்வரியாவள்'' ‡ என்றும் ப்ராதாநிக்ரஹஸ்யத்திலும், ''ஸதாசிவனுடைய மடியையடைந்து சக்தியென்று அழைக்கப் பெறுகின்ற சிவா (மங்களவடிவு) என்பவளே ஸமஸ்ததேவகுணங்களோடு கூடிய மஹாலக்ஷ்மியெனச் சொல்லப்படுகிறாள்'' ** என்பதும் சிவபுராணவசனமாகும். தேவீ

---

* गिरामहुर्देवीं द्रुहिणगृहिणीमागमविदो
हरेः पत्नीं पद्मां हरसहचरीमद्रितनयाम् ।
तुरीया कापि त्वं दुरधिगमनिःसीममहिमा
महामाया विश्वं भ्रमयसि परब्रह्ममहिषि ॥

† सर्वस्याद्या महालक्ष्मीः ।

‡ महालक्ष्मीरेव . . . . . . सर्वेश्वरेश्वरी ।

** सदाशिवाङ्कमारूढा शक्तिरित्याह्वया शिवा ।
महालक्ष्मीरिति ख्याता सर्वदेवगुणान्विता ॥

மாஹாத்ம்யத்தில் உபாஸிக்கத் தக்க தேவதையாயும், மஹாகாளீ முதலிய ஸச்சிதாநந்த ரூபிணியாயும், மூல சக்தியாயும், துரீயயாயும், சண்டிகை என்ற பெயருடன் கூடியவளாய் இருப்பவளும் இம்மஹாலக்ஷ்மியே யாவள். இம்மஹாலக்ஷ்மியினுடைய பெருமைகளை ப்ராதாநிக ரஹஸ்யத்தில் விரிவாகக் காணலாம்.

(உ) நவாக்ஷரீமந்த்ரோத்தாரம்

இவ்விதம் நாம-ரூப - உபாதிகளோடு கூடிய சக்தியின் வடிவாயமைந்த ப்ரஹ்மத்தின் உபாஸனையானது பல தந்த்ரங்களிலும் பலவிதமாக சொல்லப்பட்டிருக்கிறது. எனினும் அவைகளில் உத்தமமானது 'நவாக்ஷரீ மந்த்ரம், ஸப்தசதீஸ்தோத்ரம் என்ற இரண்டுமே யாகும். "எல்லா தேவர்களும் ஸ்ரீதேவியை யணுகி, ஓ மஹாதேவி! நீ யார்?* எனக் கேட்க, அதற்கு "தேவீ விடை கூறினள், நான் ப்ரஹ்ம வடிவம் கொண்டவள், என்னிடமிருந்து ப்ரக்ருதி புருஷ வடிவான இவ்வுலகம் தோன்றியது"† என்பதாக தேவி அதர்வசிர உபநிஷதம் கூறும்.

மேலும் ஸகுணமாகவும், நிர்குணமாகவுமுள்ள ரூபபேதங்களைக் கொண்டு ஸ்ரீதேவிக்கு ஸர்வதேவ வடிவத்தை ஸ்தாபித்து, அத்தேவர்கள் மறுபடியும் "ஸ்ரீ தேவியின் பொருட்டு நமஸ்காரம், மஹாதேவியின் பொருட்டு நமஸ்காரம்"‡ என்பதான ச்லோகங்

---

* सर्वे वै देवा देवीमुपतस्थुः । कासि त्वं महादेवि ।

† सा अब्रवीत् अहं ब्रह्मस्वरूपिणी । मत्तः प्रकृतिपुरुषात्मकं जगत् ।

‡ नमो देव्यै महादेव्यै ।

களேயும், வேதமந்த்ரங்களேயும் கொண்டும் நமஸ்காரங்களேச் செய்து, ஸ்ரீவித்யாமந்த்ரத்தையும் உத்தாரம் செய்து 'வாக் - காம - சக்தி பீஜங்களோடு கூடிய பாலாமந்த்ரமானது ஸ்ரீவித்தையிலுள்ள மூன்று கூடத்தினுடைய ரூபாந்தரமாகுமென்றும், சக்திபீஜம் தான் முக்கியம் எனவும் வர்ணித்திருக்கிறது. அந்த சக்திபீஜமும், வாக் - காம - பீஜங்களுமடங்கிய நவாக்ஷரீமந்த்ரமானது அடியில் வருமாறு உத்தாரம் செய்யப்பட்டிருக்கிறது. அது எவ்விதமெனில்—

" வாங்மாயா ப்ரஹ்மஸூஸ்தஸ்மாத்
ஷஷ்டம் வக்த்ர ஸமந்விதம் |
ஸூர்யோऽவாமச்ரோத்ர பிந்து :
ஸம்யுதாஷ்டாத் த்ருதீயகம் ‖
நாராயணேந ஸம்யுக்தோ
வாயு : சாத்ர ஸம்யுத : ‖
விச்சே நவார்ணகோऽர்ண :
ஸ்யாந் மஹதாநந்ததாயக : ‖

என்பது ச்ருதி - இவ்விடத்தில்; வாக் - வாக்பவபீஜம், **மாயா** - சக்திபீஜம், ப்ரஹ்மஸூ :- காமபீஜம்; தஸ்மாத் அந்த காமபீஜத்திலுள்ள ககாரத்திலிருந்து, ஷஷ்டம் ஆருவது அக்ஷரம் ' ச ' என்பது. வக்த்ரஸமந்விதம்— மாத்ருகாந்யாஸத்தில் முகவ்ருத்தாக்ஷரத்தோடு - ஆகாரத்தோடு - கூடியது. எனவே ' சா ' எனக் கிடைப்பதாகும். ஸூர்ய :- மகாரம். அவாமச்ரோத்ரபிந்து :- உகாரத்தோடும், பிந்துவோடும் கூடியது. எனவே ' மும் ' எனக் கிடைப்பதாகும். டாத்த்ருதீயகம் - டகாரத்திலிருந்து மூன்ருவது அக்ஷரம் (ட) காரம். நாராயணேந

ஸம்யுக்த:; ஆ என்ற ஸ்வராக்ஷாத்தைச் சேர்க்க ஆது '(ஶா-டா)' என்பதாகும். வாயு: ச அதரஸம்யுத:— யகாரம். ஐ என்ற ஸ்வரத்தைச் சேர்க்க அது 'யை' என்பதாகும், விச்சே - என்பது வடிவத்தை யுணர்த்து வது. நவார்ணகோऽர்ண: ஸ்யாத் - இந்த அக்ஷரங்களை யெல்லாம் சேர்க்கும்பொழுது ஸ்ரீசண்டிகையினுடைய மூல மந்த்ரமான நவார்ணம் என்ற மந்த்ரமாக ஆகும், மஹாநந்ததாயக:- இந்த நவார்ணமானது உபாஸகர் களுக்கு பெருகிய ஆநந்தமாம் ப்ரஹ்மஸாயுஜ்யத்தைக் கொடுக்கவல்லது. இந்த நவாக்ஷரத்திற்கு முன்பு ப்ரணவமும் அதாவது 'ஓம்' என்ற பதத்தையும், கடைசியில் 'நம:' என்ற பதத்தையும் சேர்க்க வேண்டு மென்பது ஸம்ப்ரதாயமாகும். ஆகவே இவைகளை யெல்லாம் ஒன்று சேர்க்க "ஓம் ஐம் ஹ்ரீம் க்லீம் சாமுண்டாயை விச்சே நம:" என்பதாகும். இதுவே நவாக்ஷரீ யென்பதுமாகும்.

இவ்விதம் மஹாலக்ஷ்மிக்கு 'ஸ்ரீம்' என்ற பீஜம் பிரஸித்தமாயிருக்கும்பொழுது மந்த்ரத்தில் சக்தி பீஜத்தை லக்ஷ்மீ வாசகமாகச் சொல்லியது கொண்டும், சகார ஹகாரங்கள் இரண்டும் ஊஷ்மங்கள் எனக் கொண்டும், "ஹ்ரீ: ச தே லக்ஷ்மீ: ச பத்ந்யௌ"* என்ற ச்ருதியில் வேறு சாகையில் ஹ்ரீ என்ற பதத்தி னுடைய ஸ்தாநத்தில ஸ்ரீபதத்தை வைத்துப் பாரா யணம் செய்வதினாலும் இது பொருத்தமேயாம். இது போலவேதான் காமபீஜமாகிய 'க்லீம்' என்னும் பதத்தி லுள்ள லகார ஸ்தாநத்தில ரேபத்தை - ரகாரத்தை-

---

* ह्रीश्च ते लक्ष्मीश्च पत्न्यौ ।

சேர்த்து, லகாரம் ரேபம் இவ்விரண்டையும் மத்ய மங்களாகக் கொண்டால் 'க்ரீம்' என்ற காளீபீஜம் உத்தாரம் செய்வதாகும்.

மேலும், "முதலாவதான 'ஐம்' பீஜமானது சந்த்ரகாந்தி போன்ற நிறமும், இரண்டாவதான 'ஹ்ரீம்' பீஜமானது ஸூர்யகாந்தி போன்ற நிறமும், 'க்லீம்' என்ற மூன்ருவது பீஜமானது அக்நிகாந்தி போன்ற நிறமுமாகும், இவை அளவு கடந்த ஸுகத்தைக் கொடுக்கவல்லதால் அதன் பொருட்டு சிந்திக்கத் தக்கதாம். நான்காவதான 'சா' என்ற பதமானது உருக்கிய தங்கம் போன்ற நிறமும், ஐந்தாவதான 'மும்' சிகப்பு நிறமும், 'ண்டா - டா' என்ற ஆருவது பதமானது நீல நிறமுமாகும். இவை உபாஸகனுடைய துன்பத்தை துடைப்பதாகும். ஏழாவதான "யை" என்ற பதமானது கருப்பு நிறம். இது பகைவர்களை நாசம் செய்யும். 'வி' என்ற எட்டாவது அக்ஷரம் வெண்மை நிறம், இது எல்லாவித ஸித்திகளையும் கொடுக்கவல்லது. ஒன்பதாவதான "ச்சே" என்ற அக்ஷரமானது தூம (புகை) நிறமுமாகும். இவ்விதமாக இந்த நவாக்ஷரிகளுடைய நிறங்களைச் சிந்தனை செய்ய வேண்டுமென்பது உணர்த்தலாயிற்று.

நவாக்ஷரீமந்த்ரத்தினுடைய பொருள் விளக்கம் (௩)

இவ்விதம் நவாக்ஷரியினுடைய பெருமையும், மந்த்ரங்களுடைய விளக்கங்களும் டாமரம் முதலிய தந்திரங்களிலே அடியில் வருமாறு வர்ணித்துள்ளன. அது எவ்விதமெனில்—வாக்பவபீஜம் - சித்தின் வடிவமான மஹாஸரஸ்வதியினுடையதாகும். சக்திபீஜம் ஸத்தின் வடிவான மஹாலக்ஷ்மியினுடையதாகும்.

காமபீஜமானது ஆநந்தவடிவான மஹாகாளியி னுடையதாகும். சாமுண்டா பதம் மோக்ஷத்திற்குக் காரணமான நிர்விகல்பவிருத்தியின் வடிவாகும். மற்றும் சமும் - என்ற சொல்லுக்கு ஆகாசம் முதலிய பஞ்சபூதங்களின் வடிவான ஸேனைகளையும், 'டகார லகாரங்களுக்குப் பேதம் கிடையாது' என்ற நியமத்தை யநுஸரித்து, லாதி - தன்னதாக பாவித்து, தன் னிடத்திலே லயிக்கச் செய்கின்றவள் என்பது பொருளாகும். "ஓ தேவி சண்டன், முண்டன் என்ற இரண்டு பசுக்களை உனக்கு காணிக்கையாகக் கொண்டு வந்தேன்" என்று காளிகாதேவி சொல்ல, "எக்காரணத்தால் சண்டனையும், முண்டனையும் பிடித்துக்கொண்டு வந்தாயோ, அக்காரணத்தால் நீ இன்று முதல் உலகில் 'சாமுண்டா' என்ற பெயருடன் விளங்கப்போகிருய்" என்று தேவீ சொல்லிய தாக ஏழாவது அத்தியாயத்தில் கூறியிருக்கிறது. இவ் விடத்தில் 'பசூ' என்றது த்விவசனமான பொழுதி லும் அப் பதங்களைக் குறிக்கின்ற சாண்டமுண்ட பதங்களுக்கு பலதிறப்பட்ட அவித்யைகள் என ஸூக்ஷ்மதரிசிகள் பொருள் கூறுவர். ஆதலால் சாமுண்டா பதத்திற்கு அகண்டப்ரஹ்ம வித்யா என்ற பொருளாவது. அல்லது புத்திகளுடைய அல்லது ஸுகங்களுடைய முண்டம் - சிரஸ் - போல இருப்பவள் என்பதுமாம். எனவே யாவற்றினும் சிறந்தவளும், சரமவிருத்தி வடிவாகவுமிருப்பவள் என்பது ஸாரம். விச்சே - என்ற பதத்தில் வித் - ச - இ என்ற மூன்று அக்ஷரங்களுண்டு. அவைகளில் முறையே வாக்பவம், சக்தி, காமம் இவைகளையும், உபயோகித்தால் சித்து, ஸத்து, ஆநந்தம் இவைக

ளுடைய ஸம்போதந வடிவங்களாகும். ஈ என்ற ஸம்போதநத்தில் நெடில் லோபித்து இ என்று குறிலாக ஆகும். எனவே ஓ ஆநந்தப்ரஹ்மமஹிஷி! என்ற பொருள் கிடைக்கும். வித் என்ற பதமானது ஞாநத்தையும், சகாரம் ஸத்தியத்தையும் குறிப்பதாகும். இக்கருத்தையே, "சித்தன் வடிவான ஓ மஹாஸரஸ்வதி! ஸத்தின் வடிவான ஓ மஹாலக்ஷ்மி! ஆநந்த வடிவான ஓ மஹாகாளி! உனது தத்துவ ஞாநஸித்தியின் பொருட்டு, ஓ சண்டிகே! நாங்கள் உன்னை எங்களுடைய ஹ்ருதய கமலத்தில் அநுஸந்தாநம் செய்கிறோம்" என்பதும் வலியுறுத்தும்.

ஐம்காரவடிவாகவும், ஞாநவடிவாகவும் இருக்கிற மஹாஸரஸ்வதியாயும், ஹ்ரீங்காரவடிவாகவும், நித்யயாயும் இருக்கிற மஹாலக்ஷ்மியாகவும், க்லீங்கார வடிவாகவும், ஆநந்தவடிவாயுமிருக்கிற மஹாகாளியாயும் விளங்குகிற சண்டிகையை எங்களுடைய ஹ்ருதய கமலத்தில் த்யாநம் செய்கிறோம் என்பது கருத்து.

ஞாநத்தின் உதவியால் அடியோடு அழிக்கப்பட்ட எல்லா அஜ்ஞாநத்தோடும் கூடிய மஹாஸரஸ்வதி! முக்காலத்திலும் அழிவில்லாதவளும், கல்பிதமான ஆகாசம் முதலிய ப்ரபஞ்சத்திநுடைய நிராஸத்தோடு கூடிய மஹால்க்ஷ்மி! ப்ரஹ்மாநந்த வடிவமான மஹாகாளி! சித், ஸத், ஆநந்தம் இவைகளுடைய வடிவங்களோடு கூடிய தேவி! ப்ரஹ்ம ஞாநத்தின் பொருட்டு நாங்கள் உனது திருவடியை எப்பொழுதும் ஹ்ருதயகமலத்தில் த்யானம் செய்கிறோம். மூன்று பீஜங்களும் அவ்யயமாம் சண்டிகாயை என்பது நான்காவது வேற்றுமையைக்

குறிப்பதோடு மூன்று பீஜங்களுடைய ஒற்றுமையை யும் குறிப்பதாகும். விச்சே என்பது அவ்யயம், மோசனம் - விடுதலை - என்பது பொருள்.

வ்யஷ்டி வடிவங்களான மஹாகாளிக்கும், மஹாலக்ஷ்மிக்கும், மஹா ஸரஸ்வதிக்கும், ஸமஷ்டி வடிவான சண்டிகைக்கும் நமஸ்காரம் என்பது திரண்ட பொருளாம். ஓ அன்னையே! அஜ்ஞாந (அறியாமை) யென்ற கயிற்றால் கட்டுண்ட இந்த ஹ்ருதயத்திலிருக்கும் இருளை யகற்றி என்னை விடுதலை செய்யவேண்டும் என்ற மோக்ஷத்தை விரும்புவதான வேண்டுகோளாகும் என்பது ஸார மாகும்.

இவ்விதம் இந்த விஸ்தாரமானதும், கல்யாண வடிவானதுமான யாதொரு நவாக்ஷரீ உண்டோ, அதன் பெருமையினுடைய ஒரு அணுவையும் கூட யாவராலும் வர்ணிக்க முடியாதன்றோ. ''பிறவி பிறவியாகத் தோன்றி முடிவிலே பாக்கியத்தின் காரணமாகவே இந்த நவாக்ஷரியினுடைய பொரு ளானது குருவினிடமிருந்து அடையப்பெற்று, அக் குருவுக்குக் காணிக்கையும் கொடுத்து, அவரது ஆசியையும் பெற்று, மந்த்ரஸித்தியையும் அடைய முடியும்'' என்பது பிரமாண வசனமாகும்.

தேவிமாஹாத்ம்யத்தினுடைய பாராயணமுறை (௪)

மூன்று சரித்திரங்களோடு கூடிய தேவீ மாஹாத்ம்யமானது ச்லோகவடிவாயமைந்த மந்த்ரங்க ளாகும். இந்தக் கதையையே தான் வாமநபுராணம், தேவிபாகவதம், மார்க்கண்டேயபுராணம், லக்ஷமீதந்ரம்

முதலிய நூல்களிலே பல விதமாக வர்ணிக்கப் பட்டுள்ளது. எனினும் மார்க்கண்டேய புராணத்தில் எஉ - வது அத்தியாயம் முதல் அசு - வது அத்தியாயம் வரையில், "மார்க்கண்டேய உவாச" என்று ஆரம்பித்து, "ஸாவர்ணிர் பவிதா மநு:" என்று முடிவு பெறுகிற கூ அத்தியாயங்களை, வாராஹீதந்த்ரம், காத்யாயநீதந்த்ரம், மரீசிதந்த்ரம், ஹரகௌரீதந்த்ரம், முதலியவைகளில் ஒரேமுகமாக புருஷார்தத்தைக் கொடுக்கக் கூடியவை யென்றும், யாவற்றினும் தலைசிறந்து விளங்குவதெனவும் சிறப்பித்துக் கூறப்படுகின்றன.

கவசம், அர்கலம், கீலகங்கள், நவாக்ஷரீமந்த்ரம், ராத்ரிஸூக்தம், இவைகளை முதலிலும், நடுவில் தேவீ மாஹாத்ம்யம் பதின்மூன்று அத்தியாயங்களையும், கடைசியில் தேவீஸூக்தம், நவாக்ஷரீமந்தரம், ப்ராதாநிகரஹஸ்யம், வைக்ருதிரஹஸ்யம், மூர்த்திரஹஸ்யம், இவைகளையும் படிப்பது மரபு. இவ்விதமே நித்யமாகச் செய்யும் பாராயணவிதிகள் தந்த்ரங்களிலேயும் கூறப்படுகின்றன.

பாராயணம் செய்யும்பொழுது ராகாலாபனம் செய்வதும், மிகவும் வேகமாகப் படிப்பதும், தலையை யசைப்பதும், பொருளை (அர்த்தத்தை) யுணராது படிப்பதும், அல்பமாக உச்சாரணம் செய்வதும், ஒவ்வொரு சரித்திரமும் முழுவதும் படிக்காது பாதி படித்து நிறுத்துவதும் கூடாததாகும். (முதல் அத்தியாயம் ப்ரதமசரிதம். இரண்டு முதல் நான்கு வரையில் மத்யமசரிதம். ஐந்து முதல் பதின்மூன்ருவது அத்தியாயம் வரையில் உத்தமசரிதமுமாகும்) ஒரு அத்தியாயத்தை ஆரம்பித்து அதை நடுவில் நிறுத்தினுல் மறுபடி

யும் அதை முதலிலிருந்து ஆரம்பித்துப் படிக்கவேண் டும். ஆயிரம் ச்லோகத்திற்கு அதிகமாயிருந்தால் புஸ்தகத்தைப் பார்த்தும், ஆயிரத்திற்குக் குறைவாக இருந்தால் புஸ்தகம் பாராமலும் பாராயணம் செய்ய வேண்டும். இந்த ஸ்தவமானது ஆயிரத்திற்குக் குறை வாகையால், (எ00 மந்த்ரங்களாகையால்) "பிறகு செய்யப்பட்ட குவித்த கைகளோடுகூட இந்த சரிதங் களினல் ஸ்தோத்ரம் செய்யவேண்டும்" என்று வைக் ருதிரஹஸ்யத்தில் சொல்லியிருப்பதுபோல முடிந்தால் புஸ்தகத்தைப் பார்க்காமலேயே பாராயணம் செய்வது உத்தமமாகும். இதைச் செய்ய முடியாதவர்கள், "புஸ்தகத்தைத் தரையின்மீது வைக்காமல், ஒரு பலகையின்மீது (அதாவது சிக்குப்பலகை) வைத்துக் கொண்டு அதைப் பார்த்துப் பாராயணம் செய்ய வேண்டும். இவ்விதம் செய்யாது கையில் வைத்துக் கொண்டு பாராயணம் செய்தால் பாதி பலன்தான் கிடைக்கும். மனதால் பாராயணம் செய்வதைக் காட்டிலும் வாசிகமாக நன்கு அக்ஷரங்களை உச்சா ரணம் செய்து பாராயணம் செய்வது சிறந்ததாகும். இவ்விதம் பாராயணக்ரமத்தை யுணர்ந்து உபாஸகன் விதிப்படி அநுஷ்டித்து வந்தால் இக் கலியுகத்தில் அவன் விரும்பும் பலன்கள் யாவும் விரைவில் ஸித்தி யாகும் என்பது துணிவு.

நவாக்ஷரீமந்த்ரஸாதநம். (ரு)

தேவீமஹாத்ம்யமும், நவாக்ஷரீமந்த்ரமும் அங் காங்கி பாவமாகும். தேவீமஹாத்ம்யம் அங்கியும், நவா க்ஷரீமந்த்ரம் அங்கமும் ஆகுமென்பது சிலரும், மந்தரம் அங்கியும், மாஹாத்ம்யம் அங்கமும் ஆகுமென்பது

வேறு சிலருடையயவும் அபிப்ராயமுமாகும். ஏனெனில் ஸ்ரீசண்டிகையை தேவீமாஹாத்ம்யத்தால் உபாஸிக்க வேண்டியிருக்கிற காரணத்தால் இவ்விடம் மந்த்ரத்தை அங்கமாகவே உபாஸிக்கவேண்டும், " குங்குமம், அகில், சந்தனம் இவைகளால் ஒரு அஷ்டதளபத்மமும், அதனுடைய நடுவில் ஒரு ஷட்கோணமும் வரையவேண்டும். ஷட்கோணத்தினுடைய நடுவில் முதலாவீதாக மூன்று பிஜாக்ஷரங்களேயும், ஒன்று முதல் ஆறு கோணங்களிலும் ப்ரதக்ஷிணமாக அநுஸ்வாரத் (பிந்து)தோடு கூட மற்றுமுள்ள ஆறு பீஜாக்ஷரங்களேயும் வரையவேண்டும்.

இந்த நவாக்ஷரீயந்த்ரத்தில் சண்டிகா தேவியை பக்தியோடுகூட ஒருமுகமாக த்யாநம் செய்து பஞ்சோபசாரம் கொண்டு பூஜை செய்து, நவாக்ஷரியை ரிஷி, சந்தஸ் முதலியவைகளாலும் விந்யாஸம் செய்து, " இவ்விதம் நான்கு லக்ஷம் ஜபம் செய்து, அதனுடைய தசாம்சம் (பத்தில் ஒருபங்கு) பாயஸாந்நத்தினுல் அக்நியில் ஹோமமும் செய்யவேண்டும். இந்த நான்கு லக்ஷம் ஜபமும் ஸப்தசதியையும் சேர்த்து ஜபம் செய்ய வேண்டுவதாகும் ; " மார்க்கண்டேய புராணத்தில் சொல்லியபடி தினந்தோறும் சண்டிகையின் ஸ்தவத்தை படித்து, அதாவது ஸ்பதசதீமந்த்ரமானது நவாக்ஷரியில் எவ்விதம் ஸம்புடிதாகாரமாக உண்டாகுமோ அவ்விதம் பாராயணம் செய்யவேண்டுமென்பது கருத்து. அப்படிச் செய்யும் நவாக்ஷரீ ஜபத்தினுல் விரும்பிய பலன்கள் யாவும் கைகூடும்.

இவ்விடத்தில் ஸம்புடிதம் என்றுல், முதலில் விதிப்ரகாரம் தேவீமாஹாத்ம்யத்தைப் பாராயணம்

செய்து, நடுவில் ஸங்கல்பத்தை யநுஸரித்து நவாக்ஷரீ மந்த்ரத்தையும் ஜபம் செய்து, மறுபடியும் முன் போலவே மாஹாத்ம்யத்தைப் பாராயணம் செய்ய வேண்டும் என்பதாம். "முடிவில் மஹாலக்ஷ்மியை த்யாநம் செய்து, ஆறு அங்கங்களையும் செய்து, நூற்றெட்டு ஆவ்ருத்தி நவாக்ஷரியை ஜபம் செய்து, பூஜையை தேவதையின் பொருட்டு ஸமர்பணம் செய்யவேண்டும்" என்ற டாமர தந்தரத்தினுடைய வசனத்தை யநுஸரித்து இந்த நூற்றெட்டு ஆவ்ருத்தியையும் பூஜைக்கு அங்கமாகக்கொண்டு ப்ரதான மான ஜபஸங்க்யையோடு சேர்த்து கணக்காகும். இது நவாக்ஷரியினுடைய ஒரு புர:சாணமாகும். "கார்த்திகை மாஸத்தில் சுக்ல பக்ஷத்தில் ப்ரதமை முதல் அஷ்டமி வரையில் நவாக்ஷரியை ஒரு லக்ஷம் மேலே சொன்ன ஸ்பதசதீஸ்தோத்ர ஸம்புடிதமாக ஜபம் செய்தும், பதினுயிரம் ஆவ்ருத்திஹோமமும் செய்ய வேண்டுவதாகும்" இதுவும் நவாக்ஷரியினுடைய ஒரு புர: சரணமாகும்.

நாபியளவு (இடுப்பு) ஜலத்தில் நின்றுகொண்டு நவாக்ஷரீ மஹாமந்த்ரத்தை ஆயிரம் தடவை ஜபம் செய்தால் கவிதா சக்தியும், பதினுயிரம் தடவை ஜபம் செய்தால் ஸங்கடங்களிலிருந்து விமோசநமும் உண்டாகும் என்று டாமரகல்பம் கூறும். "இந்த நவாக்ஷரீ மந்த்ரத்திற்கு அதிதேவதை மஹாலக்ஷ்மியாவள். ஆகையால் உபாஸகர்களுக்கு எல்லா திக்குகளிலும் பரவிய புகழுடன் கோரியஸித்திகள் யாவும் நிலைக்கும்" என்று சொல்லப்படுவதால் இந்த நவாக்ஷரீமந்த்ரம் மற்ற மந்த்ரங்களைக் காட்டிலும் சிறந்தது என்பதுவும் கிடைப்பதாகும்.

விதிப்படி ஸங்கல்பம் செய்துகொண்டு சண்டிகையைப் பூஜித்து, நவாக்ஷரீமந்த்ரத்தால் ஹ்ருதயாதி ந்யாஸங்களைச் செய்து பாராயணத்தை ஆரம்பிக்க வேண்டும். ஈதிபாதா சமநத்திற்கு மூன்று ஆவ்ருத்தியும், க்ரஹதோஷ சாந்திக்காக ஐந்து ஆவ்ருத்தியும், மஹாபயமுண்டாகும்பொழுது ஏழு ஆவ்ருத்தியும் பாராயணம் செய்யவேண்டும். ஒன்பது ஆவ்ருத்தி கொண்டு சாந்தியும், ப்ராண பயத்தினின்றும் ரக்ஷையுமுண்டாகும். ராஜவசியத்திற்கும், ஐச்வர்யத்தையடைவதற்கும் பதினொன்று ஆவ்ருத்தி பாராயணம் செய்யவேண்டும். பன்னிரண்டு ஆவ்ருத்தி பாராயணம் செய்தால், கோபநிவ்ருத்தியும், சத்ருநாசமும் உண்டாகும். பதினான்கு ஆவ்ருத்தி பாராயணம் செய்தால் சத்ருவச்யமும், ஸ்த்ரீவச்யமும் உண்டாகும். பதினைந்து ஆவ்ருத்தி செய்தால் ஸௌக்யமும், ஐச்வர்யமுமுண்டாகும். பதினாறு ஆவ்ருத்தி செய்தால் புத்ர பௌத்ரதநதாந்யங்களுடைய வரவும் கிடைக்கும். அரச பயத்திற்கு பதினேழு ஆவ்ருத்தியும், உச்சாடநத்திற்கு பதினெட்டு ஆவ்ருத்தியும் பாராயணம் செய்யவேண்டும். பந்தனத்திற்கு (விலங்கு) இருபத்தைந்து ஆவ்ருத்தி செய்தால் விடுதலையுண்டு. பெருகிய துக்கம், ஜாதி ப்ரம்சம் (நழுவுதல்), குலநாசம், ஆயுர்நாசம், முதலியவைகளுக்கு நூறு ஆவ்ருத்தி செய்தால் மங்களமுண்டாகும். ஆபத்துக்களும் நாசமடையும். மோக்ஷம் கிடைக்கும். நூற்றெட்டு ஆவ்ருத்தி செய்தால் மனதில் நினைத்த காரியம் ஸித்தியாகும். நூறு தடவை செய்த அச்வமேதமென்ற யாகத்தினுடைய பலன்களும் கிடைக்கும். ஆயிரம் ஆவ்ருத்தி பாரா

யணம் செய்தால், அந்த உபாஸகனை மஹாலக்ஷ்மி தானே அடைகிருள். அவனுடைய விருப்புங்களெல்லாம் நிறைவேறும். முடிவில் மோக்ஷமும் கிடைக்கும். அவன் ஜீவன் முக்தனுகவும் ஆகிருன்.

யாகங்களில் எவ்விதம் அச்வமேதம் என்ற யாகம் சிறந்ததோ அது போலும், தேவர்களில் எவ்விதம் விஷ்ணுவோ அது போலவும், ஸ்ரீதேவியினுடைய ஆவிர்பாவம், சரிதம், ஸ்துதிகள் இவை மூன்றையும் கொண்டதான இந்த ஸப்தசதீஸ்தவம் எல்லா ஸ்தவங்களிலும் சாலச் சிறந்ததாகும். மேலும், "ஸம்பத்தையோ, உடல் நலனையோ விரும்புகிற ஒரு உபாஸகன் ஸ்ருஷ்டி கிரமமாக முதலில், நான்கு முதல் பத்து வரையிலுள்ளதையும், பிறகு ஒன்று முதல் மூன்று வரையிலுள்ளதையும், பிறகு எட்டு, பதினென்று முதல் பதின்மூன்று வரையிலுள்ள அத்தியாயங்களையும், சாந்தியை விரும்புகிறவன், ஸ்திதிக்ரமமாக ஒன்று முதல் கடைசி வரையிலும், துன்பம் தொலைய கடைசியிலிருந்து முதல் வரையிலும் பாராயணம் செய்யவேண்டும்" என்று ஹரகௌரீதந்த்ரம் சொல்லும்.

இனி காந்யாயநீதந்த்ரத்திலே காண்கின்ற சில ப்ரயோக விதிகளையும் இங்கே கூறுவோம்.

(க) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியிலும் அவஸாநத்திலும் (முடிவிலும்) நவாக்ஷரீமந்த்ரத்தையும் சேர்த்துப் பாராயணம் செய்வதால் மந்த்ரஸித்தியுண்டாகும்.

(உ) ப்ரணவமும் அநுலோமமான (நேராக) வ்யாஹ்ருதியும் (ஓம் பூ: புவ: ஸுவ: என்பது) ஆதியிலும், இந்த வ்யாஹ்ருதியையே ப்ரதிலோமமாக

(தலைகீழாக ஸுவ: புவ: பூ: என்று) அவஸாநத்தி லும் ஒவ்வொரு ச்லோகத்தோடு சேர்த்து நூறு தடவை பாராயணம் செய்தால் மிக விரைவில் கோரிய ஸித்திகளுண்டாகும்.

(௩) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியில் "ஜாதவேதஸே" என்ற ரிக்கைச் சேர்த்துப் பாரா யணம் செய்தால் எல்லாக் காமனைகளும் பூர்த்தி யாகும்.

(௪) தேவீமாஹாத்ம்யபாராயணத்தினுடைய ஆதியிலும், அவஸாநத்திலும் த்ரியம்பகமந்த்ரத்தை நூறு ஆவ்ருத்தி ஜபம் செய்தால் அபம்ருத்யு நிவாரணமுண்டாகும். அதாவது அகால மரணமுண் டாகாது என்பதாம்.

(ரு) ஒவ்வொரு ச்லோகத்திலும், த்ரியம்பக மந்த்ரத்தைச் சேர்த்துச் செய்தாலும் அபப்ருத்யு நிவாரணமாம்.

(௬) ஒவ்வொரு ச்லோகத்திலும், 'சூலேந பாஹி நோ தேவி' என்ற ச்லோகமும் சேர்த்து பாரா யணம் செய்தால் அபம்ருத்யு நாசமாகும்.

(எ) 'சூலேந பாஹி நோ தேவி' என்ற ச்லோகம் மாத்திரம் லக்ஷம் ஆவ்ருத்தியோ, பதினாயிரமோ, அல் லது ஆயிரமோ, நூறோ ஜபம் செய்தாலும் அபம்ருத்யு நிவாரணமாகும்.

(அ) ஒவ்வொரு ச்லோகத்திலும் 'சரணாகத தீனார்த்தே' என்ற ச்லோகத்தையும் சேர்த்துப் பாரா யணம் செய்தால் ஸர்வகார்யங்களும் ஸித்தியாகும்.

(கூ) ஒவ்வொரு ச்லோகத்திலும் 'கரோது ஸா ந:' என்ற ச்லோகத்திலே பூர்வார்த்தம் (முதல் பாதி) மாத்திரம் சேர்த்துப் பாராயணம் செய்தால் ஸர்வ கார்ய ஸித்திகளுண்டாகும்.

(கய) ஒவ்வொரு ச்லோகத்திலும் 'ஏவம் தேவ்யா வரம் லப்தெள' என்ற ச்லோகம் சேர்த்துப் பாரா யணம் செய்தால் நினைத்த காரிய ஸித்திகள் கைகூடும்.

(கக) ஒவ்வொரு ச்லோகத்திலும், 'துர்கே ஸ்ம் ருதா ஹரஸி பீதிம்' என்ற ச்லோகம் சேர்த்துப் பாரா யணம் செய்தால் எல்லா ஆபத்துக்களும் நிவ்ருத்தி யாகும்.

(கஉ) 'துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிம்' என்ற ச்லோகம் மாத்திரம் லக்ஷமோ, பதினாயிரமோ, ஆயிரமோ, நூற்றே ஜபம் செய்தாலும் முன் சொல்லிய ஆபத்துக்கள் யாவும் விலகும்.

(கஙு) 'ஸர்வாபாதா ப்ரசமநம்' என்ற ச்லோ கத்தை லக்ஷம் ஆவ்ருத்தி ஒவ்வொரு ச்லோகத்திலும் சேர்த்து ஜபம் செய்தால் சத்ரு நாசமுண்டாகும்.

(கச) 'இத்தம் யதா யதா' என்ற ச்லோகத்தை ஜபித்தால் மஹாமாரி சமநமடையும்.

(கரு) 'ததோ வவ்ரே ந்ருபோ ராஜ்யம்' என்ற ச்லோகம் லக்ஷம் தடவை ஜபம் செய்தால் ராஜ்ய லாபமுண்டாகும்.

(கசா) முதலாவதாக ஆதிமுதல் அவஸாநம் வரை யிலும், இரண்டாவதாக தலைகீழாக அவஸாநம் முதல் ஆதிவரையிலும், மூன்றாவதாக மீண்டும் ஆதிமுதல்

அவஸாநம் வரையிலும் (இவ்விதம் மூன்று ஆவ்ருத்தி) பாராயணம் செய்தால் விரைவில் கார்யஸித்திகள் உண்டாகும்.

(கஎ) 'துர்கே ஸ்ம்ருதா ஹரஸி பீதிம்' என்ற ச்லோகத்தினுடைய பூர்வார்தம் ஆதியிலும், பிறகு, "யதந்தியச்ச தூரகே" என்ற ரிக்கை மத்தியத்திலும், முடிவில், '-தாரித்ரிய துக்க பயஹாரிணி, என்ற உத்தரார்த்தத்தையும் சேர்த்து லக்ஷமோ, பதினாயிரமோ, ஆயிரமோ, நூறோ ஆவ்ருத்திகள் ஜபம் செய்தால் எல்லா ஆபத்துக்களும் நிவ்ருத்தியாகும்.

(கஅ) "காம்ஸோஸ்மி" என்ற ஸ்ரீஸூக்தத்தின் ரிக்கை ஒவ்வொரு ச்லோகத்தோடும் சேர்த்து பாராயணம் செய்தால் லக்ஷ்மீகடாக்ஷமும், ஐச்வர்ய ப்ராப்தியுமுண்டாகும்.

(கக) ஒவ்வொரு ச்லோகத்திலும் "அந்ருணா அஸ்மின்" என்ற ரிக்கைச் சேர்த்து பாராயணம் செய்து வந்தால் கடன் தொல்லைகளிலிருந்து விடுதலை பெறலாம்.

(உம) 'ஞாநிநாமபி சேதாம்ஸி' என்ற ச்லோகம் மாத்ரம் ஜபித்தால் அந்த க்ஷணத்திலேயே மோஹனமடைவான் என்பது அநுபவஸித்தம்.

(உக) அல்லது; "ஞாநிநாமபி சேதாம்ஸி" என்ற ச்லோகம் மாத்திரம் ஒவ்வொரு ச்லோகத்திலும் சேர்த்து ஜபம் செய்தால் அந்த க்ஷணத்திலேயே மோஹனமுண்டாகும் என்பது உறுதி.

(உஉ) "ரோகாநசேஷான்" என்ற ச்லோகத்தை ஒவ்வொரு ச்லோகத்திலும் சேர்த்து ஜபித்தாலும்,

அல்லது அந்த ச்லோகத்தை மாத்திரம் ஜபித்தாலும் ஸகல ரோகங்களும் நாசமாகும்.

(உ௩) ஒவ்வொரு ச்லோகத்திலும், 'இத்யுக்த் வா ஸா ததோ தேவீ' என்ற ச்லோகத்தைச் சேர்த்துப் பாராயணம் செய்தாலும், அந்த ச்லோகம் மாத்திரம் பாராயணம் செய்தாலும், வித்யாப்ராப்தியும், வாக்கின் வைக்ருதிநாசமும் பவமாகும்.

(உ௪) 'பகவத்யா க்ருத்ம் ஸர்வம்' என்ற முதல் மூன்றரை ச்லோகம் (௧௧௨ அக்ஷரங்கள் கொண்ட மந்த்ரம்) ஜபம் செய்யப்பட்டால் எல்லாவித காமனை களும், எல்லாவித ஆபத்துக்களுடைய நிவாரணமும் உண்டாகும்.

(உ௫) 'தேவி ப்ரபந்நார்த்தி ஹரே' என்ற ச்லோகத்தை ஒவ்வொரு ச்லோகத்தோடும் சேர்த்துப் பாராயணம் செய்தாலும், கார்யாநுஸாரத்தின் பயனாக லக்ஷமோ, பதினாயிரமோ, ஆயிரமோ, நூறோ ஜபம் செய்தாலும் எல்லா ஆபத்துக்களுடைய நிவாரணமும், எல்லா காமனைகளுடைய நிறைவும் உண்டாகும்.

உ௬) இந்த ப்ரயோகங்களில் தீபத்தை வைத்து, ஒவ்வொரு ச்லோகம் தோறும் நமஸ்காரம் செய்து வந்தால் உபாஸகன் விரும்புகின்ற பலன்கள் யாவும் வெகு விரைவில் நிறைவேறுவதாகும்.

(உ௭) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியிலும் அவஸாநத்திலும் காமபீஜத்தைச் (க்லீம்) சேர்த்து ௪௧ தினங்கள் மூன்று ஆவ்ருத்தி வீதம் பாராயணம் செய்துவந்தால் எல்லாக் காரியங்களும் நிறைவேறும்

(உஅ) முன்பு சொன்னதுபோலவே தினந்தோறும் கஙு ஆவ்ருத்தி பாராயணம் செய்துவந்தால் வசீகரண முண்டாகும்.

(உக) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியிலும் அவஸாநத்திலும், மாயாபீஜத்தைச் (ஹ்ரீம்) சேர்த்து, பிறகு 'फट्- பட்' என்பதையும் சேர்த்து எட்டு நாள் பதின்மூன்று ஆவ்ருத்தி வீதம் பாராயணம் செய்து வந்தால் உச்சாடந ஸித்தியுண்டாகும்.

(ஙௗ) இதேபோல நான்கு தினங்கள் பதினொன்று ஆவ்ருத்தி வீதம் பாராயணம் செய்து வந்தால் எல்லா உபத்திரவங்களும் நாசமாகும்.

(ஙக) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியிலும் அவஸாநத்திலும் லக்ஷ்மீ (ஸ்ரீம்) பீஜத்தையும் நாற்பத்தொன்பது தினங்கள் பதினைந்து ஆவ்ருத்தி வீதம் பாராயணம் செய்தால் லக்ஷ்மீ கடாக்ஷமும், ஐச்வர்ய ப்ராப்தியும் உண்டாகும்.

(ஙஉ) ஒவ்வொரு ச்லோகத்தினுடைய ஆதியிலும் ஆவஸாநத்திலும் வாக்பவஐம்பீஜத்தைச் சேர்த்து நூறு ஆவ்ருத்தி பாராயணம் செய்து வந்தால் வித்யாப்ராப்தி யுண்டாகும்.

இவ்விதம் தலைசிறந்த இந்த ஸ்ரீதேவீமஹாத்ம்யத்திற்கு வேறு தந்த்ரங்களிலும் ப்ரயோக விதிகள் எண்ணிறந்தவைகளாகக் காண்கின்றன. அவைகள் எல்லாவற்றையும் இவ்விடம் எழுதினுல் புத்தகம் பெருகிவிடும். இந்த மாஹாத்ம்யத்திற்கு ஸ்ரீலக்ஷ்மீதரர் ப்ரயோகபரிமளம் என்ற நூலை ஆதாரமாகக் கொண்டு செய்தருளிய அநுஷ்டாநஸுதார்ணவம்' என்ற சிறந்த

தோர் உரையின் வடிவாயமைந்த பிரயோகம் ஒன்றுள்ளது. அது முற்றிலும் கிடைக்கவில்லை. அது கிடைத்தால் இந்நூலின் பெருமை இன்னும் பன்மடங்கு பெருகும். இதுபோன்ற நூல்கள் ஆதரிப்பாரற்று செல்லுக்கு இறையாவதும் வருந்தத்தக்கதேயாம். மேலும் இந்த உரை முழுவதையும் அன்பர்கள் எவரேனும் கிடைத்து அனுப்பினுல் அதை எமது அடுத்த பதிப்பில் பல பொருள் விளக்கங்களுடன் வெளியிட முயலுவோம்.

ॐ

शिवाभ्यां नमः

श्रीगणेशशारदागुरुभ्यो नमः

ॐ नमश्चण्डिकायै

॥ श्रीदेवीमाहात्म्यम् ॥

ஸ்ரீ தேவீ மா ஹா த் ம் ய ம்

संकल्पः—

अथ श्रीमहाकालीमहालक्ष्मीमहासरस्वतीप्रसादसिद्ध्यर्थं देवीसप्तशतीपाठाख्यं कर्म करिष्ये। तदङ्गत्वेनादौ नवाङ्गपूर्वकं क्रमेण रात्रिसूक्तपठनमन्ते देवीसूक्तरहस्यपठनं च करिष्ये।

नमो देव्यै महादेव्यै शिवायै सततं नमः।
नमः प्रकृत्यै भद्रायै नियताः प्रणताः स्म ताम्॥

लमित्यादिभिः पञ्चपूजां कुर्यात्।

अथ नवाङ्गविधिः—

न्यासमावाहनं चैव नामान्यर्गलकीलकम्।
हृदयं च दलं चैव ध्यानं कवचमेव च॥

माहात्म्यं च जपेन्नित्यमष्टम्यां च विशेषतः।
सौभाग्यं च लभेन्नित्यं नरो मुच्येत संकटात्॥

அத நவாங்கவிதி :—

ந்யாஸம், ஆவாஹநம், நாமங்கள், அர்கலம், கீலகம், ஹ்ருதயம், தளம், த்யாநம், கவசம், மாஹாத்ம்யம் இவைகளை தினந்தோறும் பாராயணம் செய்ய வேண்டும். விசேஷமாக அஷ்டமியன்று செய்து வந்தால் மனிதன் ஸகல ஸௌபாக்யங்களையுமடைவதோடு துன்பங்களினின்றும் விடுதலை பெறுகிறான்.

अथ न्यासः—

अस्य श्रीन्यासमहामन्त्रस्य मार्कण्डेय ऋषिः। अनुष्टुप् छन्दः। महाकालीमहालक्ष्मीमहासरस्वत्यो देवताः। ह्रीं बीजम्। श्रीं शक्तिः। क्लीं कीलकम्। इष्टकाम्यार्थसिद्ध्यर्थे जपे विनियोगः। पादयोर्वाराह्यै नमः। जङ्घयोर्ब्रह्माण्यै नमः। ऊर्वो रुद्राण्यै नमः। नितम्बे नारसिंह्यै नमः। नाभौ चामुण्डायै नमः। जठरे पार्वत्यै नमः। उरसि शिवदूत्यै नमः। दक्षिणभुजे वैष्णव्यै नमः। वामभुजे माहेश्वर्यै नमः। दक्षिणकक्षे रक्तदन्तिकायै नमः। वामकक्षे काल्यै नमः। हृदये शिवायै नमः। कण्ठेमाहेन्द्र्यै नमः। मुखे कात्यायन्यै नमः। शिरसि वाराह्यै नमः। पृष्ठे शताक्ष्यै नमः। भूमौ शाकंभर्यै नमः। अन्तरिक्षे कौशिक्यै नमः। सर्वाङ्गेषु श्रीचण्डिकायै नमः।

अकारादिक्षकारान्तबीजाक्षरमहेश्वरी ।
यक्षरक्षसवेतालशाकिनीडाकिनीगणैः ॥ १ ॥
भूतप्रेतपिशाचैश्च विद्याधरसमन्विता ।
कालरात्री जगन्मूर्तिः सदानन्दस्वरूपिणी ॥ २ ॥
ऐं ह्रीं क्लीं कवचाश्चैव त्रिवृद्धाद्याश्च शांभवी ।
विन्यसेन्मूर्ध्नि कामाक्षीं दुर्गां देवीं ललाटके ॥ ३ ॥
भ्रुवोर्मध्ये भद्रकालीं चक्षुर्मध्ये महेश्वरीम् ।
वाराहीं नासिकायां च कौमारीमोष्ठयोर्न्यसेत् ॥ ४ ॥
दन्तेषु नारसिंहीं च जिह्वायां चण्डिकां न्यसेत् ।
श्रोत्रद्वये न्यसेद् गौरीं कण्ठमध्ये तु वैष्णवीम् ॥ ५ ॥
हृदये च महालक्ष्मीं स्तनमध्ये तु पार्वतीम् ।
वक्षःस्थले भगवतीं बाहुमूले तु शांभवीम् ॥ ६ ॥
बाहुमध्ये भद्रकालीमङ्गुलीषु च मालिनीम् ।
ब्रह्माणीं नाभिमध्ये तु कटिमध्ये तु यक्षिणीम् ॥ ७ ॥
जङ्घाद्वये तथा गौरीं जानुमध्ये तु शांकरीम् ।
गुल्फद्वये च मातङ्गीं विजयां पादयोस्तथा ॥ ८ ॥
चामुण्डां रोमकूपेषु चर्मादिषु च भैरवीम् ।
रुधिरादिषु चेन्द्राणीं पुष्टाङ्गीं सर्वसंधिषु ॥ ९ ॥
सर्वाङ्गेषु च वाग्देवीं पृष्ठे ज्येष्ठां न्यसेत्क्रमात् ।
इति न्यासः ॥ १ ॥

ந்யாஸ மஹாமந்த்ரத்திற்கு மார்கண்டேயரே ரிஷியாவர். சந்தஸுகளில் ஒரு வகையான அநுஷ்டுப்பே சந்தஸ். மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வதீ இவர்களே இதற்கு தேவதைகள், ஹ்ரீம் என்பது பீஜம், ஸ்ரீம் என்பது சக்தியாகும். க்லீம் என்பது கீலகமாம். விநியோகம் உபாஸகன் எதை விரும்புகிறானே அதுவேயாகும்.

இரண்டு பாதங்களிலும் வாராஹீதேவதைக்கு நமஸ்காரம். முழங்கால்கள் இரண்டிலும் ப்ரஹ்மாணீ தேவதைக்கு நமஸ்காரம். இரண்டு தொடைகளிலும் சண்டிகைக்கு நமஸ்காரம். பின்புறத்தில் நாரஸிம்ஹிக்கு நமஸ்காரம். நாபியில் (தொப்பூழ்) சாமுண்டைக்கு நமஸ்காரம். வயிற்றில் பார்வதிக்கு நமஸ்காரம். மார்பில் சிவதூதிக்கு நமஸ்காரம். வலது தோளில் வைஷ்ணவிக்கு நமஸ்காரம். இடது தோளில் காமாக்ஷிக்கு நமஸ்காரம். வலது கக்ஷத்தில் ரக்ததந்திகைக்கு நமஸ்காரம். இடது கக்ஷத்தில் காளிக்கு நமஸ்காரம். ஹ்ருதயத்தில் சிவா என்ற தேவிக்கு நமஸ்காரம். கழுத்தில் மாஹேந்த்ரீதேவதைக்கு நமஸ்காரம். முகத்தில் காத்யாயனிக்கு நமஸ்காரம். சிரஸி (தலையில்) வாராஹிக்கு நயஸ்காரம். இரண்டு புறங்களிலும் சதாக்ஷிக்கு நமஸ்காரம். பூமியில் (பாதங்களின் கீழே) சாகம்பரிக்கு நமஸ்காரம். அந்தரிக்ஷத்தில் (தலைக்கு மேலே) கௌசிகைக்கு நமஸ்காரம். எல்லா அங்கங்களிலும் சண்டிகைக்கு நமஸ்காரம்.

அகாரம் முதல் க்ஷகாரம் வரையிலுள்ள பீஜாக்ஷரங்களின் வடிவான மஹேச்வரியும், யக்ஷர்கள், ராக்ஷஸர்கள்; வேதாளங்கள், சாகினிகள், டாகினிகள்

இந்த கணங்களோடும், பூதங்கள், ப்ரேதங்கள், பிசாசங்கள், வித்யாதரர்கள் இவர்களோடும் கூடிய உலக வடிவாம் ஸதாநந்தஸ்வரூபிணியான காலராத்ரீ தேவியும், ஐம், ஹ்ரீம் க்லீம் என்ற கவசங்களையும், மேல், கீழ் குறுக்கு என்றவைகளையும், சாம்பவீ தேவியும், சிரஸிலுள்ள ஐந்து இடங்களை காமாக்ஷீ தேவியும், துர்கை நெற்றியையும், இரண்டு புருவங்களின் நடுவில் பத்ரகாளியும், இரண்டு கண்களில் நடுவில் மஹேச்வரியும், வாராஹீ நாசியையும், கௌமாரீ உதட்டையும், பல் வரிசைகளின் மேலும் கீழும் நாரஸிம்ஹியும், நாக்கின் நுனியில் சண்டிகையும், இரண்டு செவிகளில் மஹாகௌரியும், கழுத்தில் வைஷ்ணவியும், ஹ்ருதயத்தில் மஹாலக்ஷ்மியும், ஸ்தநங்களுடைய நடுவில் பார்வதியும், மார்பில் பகவதியும், கைகளுடைய மூலத்தில் சாம்பவியும், கைகளுடைய நடுவில் பத்ரகாளியும், விரல்களில் மாலினியும், தொப்பூழ் நடுவில் ப்ரஹ்மாணியும், இடுப்பின் நடுவில் யக்ஷிணியும். இரண்டு முழங்கால்களில் கௌரியும், கணுக்கால்களின் நடுவே சாங்கரியும், இரண்டு (பாதங்களுடைய) குறடுகளில் மாதங்கியும், இரண்டு பாதங்களிலும் விஜயையும், ரோமத்வாரங்களில் சாமுண்டையும், சர்மம்(தோல்) முதலியவைகளில் பைரவியும், இரத்தம் முதலியவைகளில் இந்த்ராணியும், ஸமஸ்த ஸந்திகளில் புஷ்டாங்கியும், ஸமஸ்த அவயங்களிலும், வாக்தேவியும், இரண்டு பக்கங்களிலும் ஜ்யேஷ்டா, என்றவர்களும் இருந்து கொண்டு ரக்ஷிப்பதாக.

இவ்விதம் ந்யாஸம் முற்றும். (க)

——:——

आवाहनम्

अथावाहनम्—

मन्त्राक्षरमयीं देवीं मातृकारूपधारिणीम् ।
नवदुर्गात्मिकां साक्षात्कन्यामावाहयाम्यहम् ॥

[इति मन्त्रेण हृदयकमलमध्ये देवीमावाह्य पञ्चोपचारं कृत्वा नामानि जपेत् ।]

इत्यावाहनम् ॥ २ ॥

ஆவாஹநம் :—

மந்த்ராக்ஷரவடிவாகவும், மந்த்ரங்களைத் தரிப்பவளாகவும், நவதுர்கை என்ற பெயருள்ளவளும், ஸாக்ஷாத் உமையின் வடிவானவளும், ப்ரகாசிப்பவளுமான கந்யகையை நான் ஆவாஹநம் செய்கிறேன். (இந்த மந்த்ரத்தினுல் ஹ்ருதய கமலத்தின் நடுவில் ஸ்ரீதேவியை ஆவாஹநம் செய்து, ஐந்துவித உபசாரங்களையும் செய்து நாமங்களை ஜபம் செய்யவேண்டும்.)

இவ்விதம் ஆவாஹநம் முற்றும். (௨)

अथ नामानि—

श्रीदेवीनाम्नामगस्त्यऋषिः । महाविराट् छन्दः । चिन्तामणिमहाविद्येश्वरी देवता । ऐं बीजम् । क्लीं शक्तिः । सौः कीलकम् । महामायाप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः ॥

ॐ ऐं—

दिव्ययोगी महायोगी सिद्धयोगी गणेश्वरी ।
प्रेताशी डाकिनी काली कालरात्री निशाचरी ॥ १ ॥
झंकारी चोर्ध्ववेताली पिशाची भूतडामरी ।
ऊर्ध्वकेशी विरूपाक्षी शुष्काङ्गी नरभोजिनी ॥ २ ॥
राक्षसी घोररक्ताक्षी विश्वरूपी भयंकरी ।
चामुण्डी वीरकौमारी वाराही मुण्डधारिणी ॥ ३ ॥
भ्रामरी रुद्रवेताली भीष्मरी त्रिपुरान्तकी ।
भैरवी ध्वंसिनी क्रोधी दुर्मुखी प्रेतवाहिनी ॥ ४ ॥
खट्वाङ्गी दीर्घलम्बोष्ठी मालिनी मन्त्रयोगिनी ।
कौशिकी मर्दिनी यक्षी रोमजङ्घाप्रहारिणी ॥ ५ ॥
कालाग्निग्रामणी चक्री कङ्काली भुवनेश्वरी ।
फट्कारी वीरभद्रेशी धूम्राक्षी कलहप्रिया ॥ ६ ॥
कण्टकी नाटकी मारी यमदूती करालिनी ।
सहस्राक्षी कामलोला काकदंष्ट्री त्वधोमुखी ॥ ७ ॥
धूर्जटी विकटी घोरी कपाली विषलङ्घिनी ।
चतुःषष्टिः समाख्याता योगिन्यो वरसिद्धिदाः ॥ ८ ॥
नित्यं स्मरणमात्रेण सर्वपापक्षयो भवेत् ॥

इति नामानि ॥ ३ ॥

——:——

அத நாமாநி—

இந்த தேவீ நாமங்களுக்கு அகஸ்தியர் ரிஷியாவர், சந்தஸ் மஹாவிராட் என்பதாகும். சிந்தாமணிமஹா வித்யேச்வரியே தேவதை. ஐம் என்பது பீஜம். க்லீம் என்பது சக்தி: ஸௌ: என்பது கீலகம்: மஹாமாயை யினுடைய ப்ரஸாத்தத்தின் பொருட்டு விநியோக மாகும்:

ஓம் ஐம்; திவ்யயோகீ, மஹாயோகீ, ஸித்தயோகீ, கணேச்வரீ, ப்ரேதாசீ, டாகிநீ, காளீ, காளராத்ரீ, நிசாசரீ, ஜங்காரீ, ஊர்த்வவேதாளீ, பிசாசீ, பூதடாமரீ, ஊர்த்வகேசீ, விரூபாக்ஷீ, சுஷ்காங்கீ, நரபோஜிநீ, ராக்ஷஸீ, கோரரக்தாக்ஷீ, விச்வரூபீ, பயங்கரீ, சாமுண்டீ, வீரகௌமாரீ, வாராஹீ. முண்டதாரிணீ, ப்ராமரீ, ருத்ரவேதாளீ, பீஷ்மரீ, த்ரிபுராந்தகீ, பைரவீ, த்வம்ஸிநீ, க்ரோதீ, துர்முகீ, ப்ரேதவாஹிநீ, கட்வாங்கீ, தீர்கலம்போஷ்டீ, மாலிநீ, மந்த்ரயோகிநீ கௌசிகீ, காலாக்நிக்ராமணீ, சக்ரீ, கங்காளீ, புவநேச்வரீ, பட்காரீ, வீரபத்ரேசீ, தூம்ராக்ஷீ, கலஹப்ரியா, கண்டகீ, நாடகீ, மாரீ, யமதூதீ, கராளிநீ, மர்திநீ, யக்ஷீ, ரோமஜங்காப்ரஹாரிணீ. ஸஹஸ்ராக்ஷீ காமலோலா, காகதம்ஷ்ட்ரீ, அதோமுகீ தூர்ஜடீ, விகடீ, கோரீ, கபாலீ. விஷலங்கிநீ, இவ் விதமுள்ள இந்த அறுபத்து நான்கு யோகிநிகளும் சிறந்த ஸித்திகளை கொடுக்கக் கூடியவர்கள். தினந் தோறும் இவர்களை நினைத்த அளவிலே எல்லா பாபங்களும் நாசமாகும்.

இவ்விதம் நாமங்கள் முற்றும். (௩)

——:——

अर्गलम् *

अथार्गलम्—

अस्य श्रीअर्गलस्तोत्रमहामन्त्रस्य स्वर्णाकर्षणभैरव ऋषिः। अनुष्टुप् छन्दः। श्रीमहालक्ष्मीचण्डिका देवता। अं बीजम्। गं शक्तिः। लं कीलकम्। श्रीमहालक्ष्मीचण्डिकाप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः। अं गं लमित्यादिभिः षडङ्गन्यासः।

அதார்களம் :—

இந்த அர்களஸ்தோத்ரமஹாமந்த்ரத்திற்கு ஸ்வர்ணாகர்ஷணர் என்றவரே ரிஷியாவர் - அநுஷ்டுப்பே சந்தஸாகும். ஸ்ரீமஹாலக்ஷ்மீசண்டிகையே தேவதையாம். அம் என்பது பீஜமாகும். கம் என்பது சக்தியாகும். லம் என்பது கீலகம். ஸ்ரீமஹாலக்ஷ்மீ சண்டிகையினுடைய ப்ரஸாதத்தை அடைவதற்கான ஜபபாராயணத்தில் விநியோகமாகும். அம், கம், லம் இவைகளினுல் ஆறுவித அங்கந்யாஸங்களையும் செய்ய வேண்டும்.

ध्यानम्—

प्रकाशमध्यस्थितचित्स्वरूपां वराभये संदधतीं त्रिनेत्राम्।
सिन्दूरवर्णाङ्कितकोमलाङ्गीं मायामयीं तत्त्वमयीं नमामि॥

---

* **अर्गलम्**—தாழ்ப்பாள் : இப்பதம் இங்கு அரண் என்ற பொருளில் ஔபசாரிகமாக (குறிப்பாக) வழங்கப் பெறுவது.

த்யாநம் :—

ஒளியின் நடுவே யிலங்கும் சித்தின் வடிவாயிருப்பவளும், வரமுத்ரை, அபயமுத்ரை இவ்விரண்டையும் கைகளில் தரித்தவளும், மூன்று கண்களையுடையவளும், அழகிய சிவந்த திருமேனியையுடையவளும், தத்துவவடிவாயிருப்பவளும், மாயாவடிவாயிருப்பவளுமான ஸ்ரீமஹாலக்ஷ்மிக்கு நமஸ்காரம்.

अर्गलं कीलकं चादौ पठित्वा कवचं पठेत् ।
जपेत्सप्तशतीं पश्चात्क्रम एष शिवोदितः ॥

अर्गलम् - அர்களத்தையும்; **कीलकं च** - கீலகத்தையும்; **आदौ** - முதலில்; **पठित्वा** - படித்து விட்டு; **कवचम्** - கவசத்தை; **पठेत्** - படிக்கவேண்டும். **पश्चात्**; பிறகு; **सप्तशतीम्** - ஸப்தசதியை; **पठेत्** - ஜபம் செய்யவேண்டும்; **एषः** - இந்த; **क्रमः** - முறையானது; **शिवोदितः** - சிவனால் சொல்லப்பட்டது.

முதலில் அர்களத்தையும், கீலகத்தையும் படித்துவிட்டு, பிறகு கவசத்தைப் படிக்கவேண்டும். அதற்குப் பிறகு ஸப்தசதியை ஜபம் செய்யவேண்டும். இந்த முறையானது ஸ்ரீபரமசிவனால் சொல்லப்பட்டதாகும். (௧)

अर्गलं दुरितं हन्ति कीलकं फलदं तथा ।
कवचं रक्षते नित्यं चण्डिकात्रितयं पठेत् ॥

अर्गलम् - அர்களமானது; **दुरितम्** – பாபத்தை; **हन्ति** - நாசம் செய்யும்; **तथा** - அவ்விதமே; **कीलकम्** - கீலகமானது; **फलदम्** - பலனைக் கொடுக்க வல்லது;

कवचम् - கவசமானது; **रक्षते** - காப்பாற்றுவதாகும்; **नित्यम्** - எப்பொழுதும்; **चण्डिकात्रितयम्** - சண்டிகா தேவியினுடைய மூன்று சரிதங்களையும்; **पेठत्** - படிக்க வேண்டும்.

அர்களம் பாபத்தை நாசம் செய்யும். கீலகமானது கோரிய பலனைக் கொடுப்பதாகும். கவசம் காப்பாற்றுவதாகும். எப்பொழுதும் சண்டிகா தேவியினுடைய மூன்று சரிதங்களையும் படிக்கவேண்டும். (௨)

अर्गलं हृदये यस्य तथानर्गलवानसौ ।
भविष्यतीति निश्चित्य शिवेन रचितं पुरा ॥

यस्य - எந்த உபாஸகனுடைய; **हृदये** - ஹ்ருதயத்தில்; **अर्गलम्** - அர்களமானது; (நிலைத்திருக்கிறதோ) **तथा** - அதனாலே; **असौ** - அவன்; **अनर्गलवान्** - தடையில்லாமலிருப்பவனாக; **भविष्यति** - ஆகப்போகிறான்; **इति** - என்று; **निश्चित्य** - நிச்சயம் செய்து; **पुरा** - முதலில்; **शिवेन** - பரமசிவனால்; **रचितम्** - செய்யப்பட்டது.

எந்த உபாஸகனுடைய ஹ்ருதயத்தில் அர்களமானது நிலைத்திருக்கிறதோ; அந்த உபாஸகன் எங்கும் தடையில்லாது ஸ்வதந்த்ரமாக இருப்பானென நிச்சயம் செய்து, ஸ்ரீபரமசிவனால் முதலில் இந்த அர்கள ஸ்தவமானது செய்யப்பட்டது. (௩)

कीलकं हृदये यस्य स कीलितमनोरथः ।
भविष्यति न संदेहो नान्यथा शिवभाषितम् ॥

यस्य - எந்த உபாஸகனுடைய ; **हृदये** - ஹ்ருதயத்தில் ; **कीलकम्** - கீலகமானது. (நிலைத்திருக்கிறதோ), **सः** - அவன் ; **कीलितमनोरथः** - விருப்பங்கள் யாவும் நிறைந்தவனாக ; **भविष्यति** - ஆவான். **संदेहः**- ஸந்தேஹமானது ; **न** - இல்லை என்று **शिवभाषितम्** - சிவனால் சொல்லப்பட்டது; **अन्यथा**-வேறாக ; **न** - ஆகாது.

எந்த உபாஸகனுடைய ஹ்ருதயத்தில் கீலகஸ்தவமானது நிலைத்திருக்கிறதோ ; அவன் விருப்பங்கள் யாவையும் அடைந்தவனாக ஆவான். இவ்விஷயத்தில் ஸந்தேஹம் கிடையாது. ஏனெனில் சிவனால் சொல்லப்பட்ட வார்த்தையானது வேறு விதமாக ஆகாதல்லவா? (௪)

कवचं हृदये यस्य सर्वत्र कवची खलु ।
ब्रह्मणा निर्मितं पूर्वमिति निश्चित्य चेतसा ॥

यस्य - எவனுடைய ; **हृदये** - ஹ்ருதயத்தில் ; **कवचम्** - கவசமானது (நிலைத்திருக்கிறதோ) **सर्वत्र** - எங்கும் **कवची खलु** - கவசத்தை யணிந்தவனாகவே ஆகின்றான். **पूर्वम्** - முதலில் ; **ब्रह्मणा** - ப்ரஹ்மாவினால் ; **निर्मितम्** - இயற்றப்பட்டது ; **इति** - என்று **चेतसा** - மனதால் ; **निश्चित्य** - உறுதி செய்து (ஜபம் செய்யவேண்டும்).

எவனுடைய ஹ்ருதயத்திலே கவசமானது நிலைத்திருக்கிறதோ, அவன் எங்கும் கவசத்தை (ரக்ஷையை) அணிந்தவனாக ஸஞ்சாரம் செய்கிறான். முதலில் ப்ரஹ்மாவினால் இது இயற்றப்பட்டதென மனதால் உறுதி செய்துகொண்டு ஜபம் செய்யவேண்டும். (ரு)

या देवी स्तूयते नित्यं विबुधैर्वेदपारगैः ।
सा मे वसतु जिह्वाग्रे ब्रह्मरूपा सरस्वती ॥

या - யாதொரு; **देवी** - தேவியானவள்; **वेदपारगैः**- வேதங்களை முற்றுமுணர்ந்த - **विबुधैः** - பண்டிதர்களால்; **नित्यम्** - எப்பொழுதும்; **स्तूयते** - துதிக்கப்படுகிருளோ; **ब्रह्मरूपा** - ப்ரஹ்மவடிவாயிருப்பவளான; **सा** - அச்சிறப்பு வாய்ந்த; **सरस्वती** - ஸரஸ்வதிதேவியானவள்; **मे** - என்னுடைய; **जिह्वाग्रे** - நாவின் நுனியால்; **वसतु** - வாஸம் செய்யட்டும்.

எந்த தேவியானவள் வேதவேதாங்கங்களின் கரைகளைக் கண்டறிந்தவர்களான பண்டிதர்களால் துதிக்கப்படுகிருளோ, ப்ரஹ்மவடிவாம் அச்சிறப்பு வாய்ந்த ஸரஸ்வதி தேவியானவள் என்னுடைய நாவின் நுனியில் நிலைத்திருக்கட்டும். (சு)

जय त्वं देवि चामुण्डे जय भूतापहारिणि ।
जय सर्वगते देवि कालरात्रि नमोऽस्तु ते ॥

देवि - ஓ தேவி; **त्वम्** - நீ; **जय** - சிறப்புடன் விளங்குவாயாக. **चामुण्डे** - ஓ சாமுண்டே; **जय** - சிறப்புடன் விளங்குவாயாக; **भूतापहारिणि** - ப்ராணிவர்க்கங்களை அபஹரிக்கின்றவளே; **जय** - சிறப்புடன் விளங்குவாயாக; **सर्वगते** - எங்கும் நிறைந்தவளே; **देवि** - ஒளியுடன் விளங்குபவளே; **कालरात्रि** - காலராத்ரி வடிவாயிருப்பவளே; **ते** - உனக்கு; **नमः** - நமஸ்காரமானது; **अस्तु** - இருக்கட்டும்.

ஓ தேவி அன்னையே! நீ சிறப்புடன் விளங்குவாயாக; ஓ சாமுண்டே! நீ சிறப்புடன் விளங்குவாயாக. ஊழிக் காலத்தில் ப்ராணிவர்கங்களை அபஹரிக்கின்றவளே! நீ சிறப்புடன் விளங்குவாயாக. எங்கும் நிறைந்தவளே! ஒளியுடன் விளங்குபவளே! காலராத்ரிவடிவா யிருப்பவளே! உனக்கு நமஸ்காரம். (எ)

मार्कण्डेयः—

एकापि त्रिविधाख्याता सप्तधा सैव कीर्तिता ।
तस्या भेदा ह्यनन्ताश्च तन्माहात्म्यं शिवोदयम् ॥

मार्कण्डेयः—மார்கண்டேயர் (சொன்னார்.)

एका-अपि-ஒருவளாக இருந்தபொழுதிலும்; **त्रिविधा**-மூன்று விதமாக; **आख्याता** - சொல்லப்பட்டாள்; **सा एव** - அந்த ஒருவளே; **सप्तधा** - ஏழுவிதமாகவும்; **कीर्तिता** - சொல்லப்பட்டாள்; **तस्याः** - அந்த தேவியினுடைய; **भेदाः च** - பேதங்களும்: **अनन्ताः** - முடிவற்றவைகள்; **तत् महात्म्यम्** - அவளுடைய பெருமையானது; **शिवोदयम्** - சிவனிடமிருந்து உண்டாகியது.

தேவி ஒருவளாயினும் முதலில் மூன்று விதமாக (மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வதீ) சொல்லப்பட்டாள். பிறகு அவளொருவளே ஏழு விதங்களாகவும்; (ஸப்த மாத்ருகா வடிவங்களாக) சொல்லப்பட்டாள். அத் தேவியினுடைய பேதங்களோ முடிவற்றவை. அவளுடைய பெருமையோ சிவனிடமிருந்து உண்டாகியதாம். (அ)

—:—

அர்களம்

जयन्ती मङ्गला काली भद्रकाली कपालिनी।

दुर्गा क्षमा शिवा धात्री स्वधा स्वाहा नमोऽस्तु ते ॥ १ ॥

मार्कण्डेयः - மார்கண்டேயர் ; **उवाच** - சொன்னார்—

जयन्ती - ஜயந்தியாகவும் ; **मङ्गला** - மங்களையாகவும் ; **काली** - காளியாகவும்; **भद्रकाली** - பத்ரகாளியாகவும் ; **कपालिनी** - கபாலினியாகவும் ; **दुर्गा** - துர்கையாகவும்: **क्षमा** - க்ஷமையாகவும்; **शिवा** - சிவையாகவும் ; **धात्री** - தாத்ரியாயும் ; **स्वाहा** - ஸ்வாஹா எனவும் ; **स्वधा** - ஸ்வதையாகவுமிருக்கின்ற ; **ते** - உனக்கு ; **नमः** - நமஸ்காரம் ; **अस्तु** - இருக்கட்டும்.

ஓ அன்னையே! உனது திருமேனி ஜயந்தீ, மங்களா, காளீ, பத்ரகாளீ, கபாலிநீ, துர்கா, க்ஷமா, சிவா, தாத்ரீ, ஸ்வாஹா, ஸ்வதா என்ற திருநாமங்கள் கொண்டு அவைகளுக்குரிய குணங்களும் ஒருங்கே யமையப்பெற்று விளங்குவதால் உனது திருவடித் தாமரைகளுக்கு என்னுடைய நமஸ்காரம் இருக்கட்டும்.

இங்கு முதலாவதாக உத்தேசிக்கப்பட்ட தேவதையினுடைய குணங்கள் த்யாநத்திற்கு உபயோகமாகும் வண்ணம் சொல்லப்படுகின்றன.

जयन्ती—ஜயந்தீ ; மிகவும் மேன்மையுடன் விளங்குபவள். ஸத்வரஜஸ்தமோகுணங்களுடைய ஸமானமான அவஸ்தையோடு (இருப்பு)கூடிய ப்ரஹ்மஸ்வரூபிணியாயிருக்கின்ற ஸ்ரீபகவதியானவள் எல்லாவற்றிற்கும் மூலகாரணமாயிருப்பதால் யாவற்றினும் சிறந்தவள்.

मङ्गला—மங்களா ; மங்களத்தை ; (**मङ्गं लातीति**) ஜனன - மரண - வடிவான ஸம்ஸாரத்தை ; (பக்தர்களுக்கு) லாதி - நாசம் செய்பவள். இவ்விதமுள்ளவள் மோக்ஷத்தைக் கொடுப்பவள் எனத் தாத்பர்யம், "அதனுடைய ப்ராணங்கள் வெளிச் செல்லுவதில்லை." * என்பது உபநிஷதமாகும்.

काली—காளீ ; ப்ரளயகாலத்தில் இந்த சராசர வடிவங்களான உலகங்களையெல்லாம் புசிப்பவள்.

भद्रकाली—பத்ரகாளீ ; பத்ரத்தை - மங்களத்தை அல்லது ஸுகத்தை ; கலயதி - ஸ்வீகரிப்பவள் - எடுத்துக் கொள்ளுபவள், அதாவது பக்தர்களுக்கு தானம் செய்பவள் என்பது கருத்து. ரஹஸ்யாகமத்தில் "பத்ரகாளீ ஸுகத்தைக் கொடுப்பவள்" எனவும் பொருள் கூறப்படுகிறது.

कपालिनी—கபாலிநீ ; கபாலத்தோடு கூடியவள் ; கபாலம் - தலையோடு ப்ரஹ்மன் முதலியவர்களை நிக்ரஹம் செய்து, அவர்களுடைய தலையோடுகளை எடுத்துக் கொண்டு ப்ரளயகாலத்தில் ஸஞ்சாரம் செய்பவள். அல்லது, (**कं पालयतीति**) "ப்ரபஞ்சமென்னும் தாமரை

---

* न तस्य प्राणा उत्क्रामन्ति ।

ப்புஷ்பத்தைக் கையில் கொண்டவள். "ப்ரபஞ்ச மென்னும் தாமரையைக் கையில் கொண்டவளான பராசக்தி கபாலிநீ எனச் சொல்லப்படுகிறுள்"* என்பது ரஹஸ்யாகமம்.

दुर्गा (दुःखेन गम्यते सा दुर्गा)—துர்கா. அஷ்டாங்க யோகவடிவாயும்; ஸர்வகர்மோபாஸநாரூபமாயுமிருக் கின்ற துக்கத்தாலேயே (சிரமப்பட்டு) எவள் அடையத் தக்கவளோ அவளே துர்கை. "சிரமப்பட்டு அறியத் தக்கவளான அந்த துர்கா தேவியை"† என்பது தேவீ அதர்வசிரஸாகும்.

क्षमा—க்ஷமா; பக்தர்களுடைய அபராதங்கள் அனைத்தையும் பொறுப்பவள். யாவற்றையும் தன்னிட மிருந்து தோற்றுவிப்பதால் வியக்கத்தக்க கருணு மூர்த்தியின் வடிவாயிருப்பவள் என்பது தாத்பர்யம்.

शिवा—சிவா; சித்தின் வடிவாயிருப்பவள். "ஓ அந்தணர்களே! சித்தை ஆச்ரயித்த மாயையினுடைய சக்தி வடிவத்திலே, எந்த தேவியானவள் உடனடியாக பிரவேசித்தாளோ, அவள் ஸம்வித் எனவும், நிர் விகல்பை எனவும், ஸ்வயம்ப்ரபை எனவும், ஸத்தின் வடிவமெனவும், பரமாநந்த வடிவமெனவும், ஸம் ஸாரத்தை நாசம் செய்யக் காரணமாயுள்ளவளென வும், சிவா எனவும், பரமா எனவும், சிவாபின்ஞு (சிவனைக்காட்டிலும் வேறுபட்டவள் அல்ல) எனவும்

---

* प्रपञ्चाम्बुजहस्ता च कपालिन्युच्यते परा ।

† तां दुर्गां दुर्गमां देवीम् ।

சிவங்கரீ'' * (மங்களத்தைச் செய்பவள்) எனவும் அழைக்கபடுகிருள்.

धात्री—தாத்ரீ; தோற்றமளிக்கும் இந்த ப்ரபஞ்ச மனைத்தையும் தரிப்பவள். *

स्वाहा—ஸ்வாஹா; தேவர்களைப் போஷிப்பவள்.

स्वधा—ஸ்வதா; பித்ருக்களைப் போஷிப்பவள்.

இவ்விதமாக முன்பு சொல்லிய உத்தம குணங்கள் நிறைந்தவளாக நீ இருக்கின்ற காரணத்தால் உனக்கு என்னுடைய நமஸ்காரம் என்பது கருத்து.

मधुकैटभविद्रावि विधातृवरदे नमः ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ २ ॥

मधुकैटभविद्रावि - மதுகைடபர்களை அழித்தவளே! **विधातृवरदे** - ப்ரஹ்மாவுக்கு வரத்தைக் கொடுத்தவளே! **नमः** - நமஸ்காரம். **रूपम्** - ரூபத்தை, **देहि** - கொடுப்பாயாக; **जयम्** - ஜயத்தை; **देहि** - கொடுப்பாயாக; **यशः** - புகழை; **देहि** - கொடுப்பாயாக. **द्विषः** - பகைவர்களை; **जहि** - அழிப்பாயாக.

இவ்வரலாறு தேவீபாகவதம் முதல் ஸ்கந்தத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. ரூபம் என்பது, ரூப்யதே

---

* **चिन्मात्राश्रयमायायाः शक्त्याकारे द्विजोत्तमाः ।**
अनुप्रविष्टा या संविन्निर्विकल्पा स्वयंप्रभा ॥
सदाकारा सदानन्दा संसारोच्छेदकारिणी ।
सा शिवा परमा देवी शिवाभिन्ना शिवंकरी ॥

அறியப்படுகிறது. பரமாத்மவஸ்து எனப்பொருளாகும். "தீவ்ரசக்தியாகிய பிந்துவே ரூபமாம்"* என்பது ஆகமமாகும். அல்லது பக்தர்களுக்கு மோஹநவடிவாகவும், பகைவர்களுக்குப் பயங்கரவடிவாகவுமுள்ள ரூபமாம். அல்லது ஸௌந்தர்யமாம்.

ஜயம்; ஆத்மசக்தியினுல் எது ஜயிக்கப்படுகிறதோ, அதுவே ஜயமாம். ச்ருதிகள், ஸ்ம்ருதிகள் இவைகளுடைய ஸமூஹம்மாம். "பிறகு ஜயத்தைச் சொல்லவேணும்"† என்பது ஆர்ஷ வசனமாகும்.

யசஸ்; குருசிஷ்யர்களாகிய நம்மிருவருக்கும் யசஸ் உண்டாவதாக" ‡ என்று உபநிஷத் ப்ரஸித்தமான தத்துவ ஞானத்திலிருந்து உண்டாகிய கீர்த்தியாகும்.

இவ்விடத்தில் த்விஷோ ஜஹி என்ற பதத்திற்கு காமக்ரோதாதிகளான பகைவர்களை நாசம் செய்யவேண்டுமென்பதும் தாத்பர்யமாகும். ** (௨)

महिषासुरनिर्नाशविधात्रि वरदे नमः ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ३ ॥

---

* रूपं भवेद्बिन्दुरमन्दकान्ति ।
† ततो जयमुदीरयेत् ।
‡ सह नौ यशः ।

** இது முதல் இருபத்தோருவது ச்லோகம் வரையில் பிற்பகுதி திரும்பத்திரும்ப வருவதால் தனியாக பதவுரை எழுதவில்லை.

महिषासुरनिर्नाशविधात्रि! - மஹிஷாஸுரனை அடியோடு நாசம் செய்தவளே! **वरदे** - வரத்தைக் கொடுப்பவளே! **नमः** - நமஸ்காரம்.

அடியோடு மஹிஷாஸுரனை நாசம் செய்தவளே! வரதானம் செய்பவளே! உனக்கு நமஸ்காரம். ரூபம், ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (௩)

वन्दिताङ्घ्रियुगे देवि देवि सौभाग्यदायिनि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ४ ॥

वन्दिताङ्घ्रियुगे - ப்ரஹ்மாதிகளால் வணங்கப்பட்ட இரண்டு சரணங்களையுடையவளே! **देवि** - ப்ரகாசிப்பவளே! **सौन्दर्यदायिनि** - ஸௌந்தர்யத்தைக் கொடுப்பவளே! **देवि** - ஓ அன்னையே!

ப்ரஹ்மன் முதலியவர்களால் வணங்கப்பட்ட சரணங்களையுடையவளே! ஸௌந்தர்யத்தைக் கொடுப்பவளே! ஓ தேவி உனக்கு நமஸ்காரம். ரூபம், ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (௪)

रक्तबीजवधे देवि चण्डमुण्डविनाशिनि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ५ ॥

रक्तबीजवधे - ரக்தபீஜனை நாசம் செய்தவளே! **चण्डमुण्डविनाशिनि** - சண்டமுண்டர்களை நாசம் செய்தவளே! **देवि!** - ஓ தேவி!

ரக்தபீஜனை வதம் செய்தவளே! சண்டமுண்டர்களையும் நாசம் செய்தவளே! ஓ தேவி! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (௫)

अचिन्त्यरूपचरिते सर्वशत्रुविनाशिनि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ६ ॥

अचिन्त्यरूपचरिते - சிந்தைக்கும் எட்டாத வடிவத்தையும், சீலத்தையும் கொண்டவளே! **सर्वशत्रु-विनाशिनि** - எல்லாப் பகைவர்களை நாசம் செய்கிறவளே!

சிந்தைக்கும் எட்டாத வடிவத்தோடும், சீலத்தோடும் கூடியவளும் ஸகல சத்துருக்களையும் நாசம் செய்பவளுமான ஓ தேவி! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக.

" எவ்விடமிருந்து வாக்குகள் மனதோடு கூடாது திரும்புகின்றனவோ " * என்ற உபநிஷத் வாக்கிய பிரகாரம் வாக்குக்கும் மனதுக்கும் விஷயமாகாததாம் ஸ்ரீதேவியின் வடிவம் என்பது கருத்து. (சு)

नतेभ्यः सर्वदा भक्त्या चण्डिके प्रणताय मे ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ७ ॥

चण्डिके - ஓ சண்டிகே! **सर्वदा** - எப்பொழுதும், **भक्त्या** - பக்தியோடு கூட; **नतेभ्यः** - வணங்குகின்றவர்களுக்கும்; **प्रणताय** - வணங்குகிற; **मे** - எனக்கும்;

ஓ சண்டிகே! எப்பொழுதும் பக்தியோடு கூட வணங்குகின்றவர்களுக்கும், வணங்குகின்ற எனக்கும் ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (எ)

---

* यतो वाचो निवर्तन्ते ।अप्राप्य मनसा सह ।

स्तुवद्भ्यो भक्तिपूर्वं त्वां चण्डिके व्याधिनाशिनि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ८ ॥

भक्तिपूर्वम् - பக்தியை முன்னிட்டுக் கொண்டு; **त्वाम्** உன்னை; **स्तुवद्भ्यः** - துதிப்பவர்களுக்கு; **व्याधि - नाशिनि!** - வியாதியை நாசம் செய்பவளே! **चण्डिके!** ஓ சண்டிகே!

பக்தியை முன்னிட்டுக் கொண்டு உன்னைத் துதிப்பவர்களுக்கு; வியாதிகளை நாசம் செய்கின்ற ஓ சண்டிகே! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (அ)

चण्डिके सततं ये त्वामर्चयन्तीह भक्तितः ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ९ ॥

चण्डिके! - ஓ சண்டிகே! **ये** - எவர்கள்; **त्वाम्** - உன்னை; **सततम्** - எப்பொழுதும்; **भक्तितः** - பக்தியோடு கூட; **इह** - இவ்வுலகில்; **अर्चन्ति** - அர்ச்சனை செய்கின்றனரோ.

ஓ சண்டிகே! உனது திருவடியை எப்பொழுதும் பக்தியோடு கூட இவ்வுலகில் எவர் அர்ச்சனை செய்கின்றனரோ, அவர்களுக்கு ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (௯)

देवि सौभाग्यमारोग्यं देहि देवि परं सुखम् ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १० ॥

देवि! - ஓ தேவி! **सौभाग्यम्** - ஸௌபாக்யத்தையும்; **आरोग्यम्** - ஆரோக்யத்தையும்; **देहि** - கொடுப்பா

யாக, **परम्** - உத்க்ருஷ்டமான (சிறந்ததான) ; **सुखम्**- ஸுகத்தையும் ; **देहि** - கொடுப்பாயாக.

ஓ தேவி! எனக்கு ஸௌபாக்யத்தையும், ஆரோக்யத்தையும், யாவற்றினும் சிறந்ததான ஸுகத்தையும், ரூபம் ஜயம் முதலியவற்றையும் கொடுப்பாயாக. (௧௰)

विधेहि द्विषतां नाशं विधेहि बलमुच्चकैः ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ ११ ॥

द्विषताम् - பகைவர்களுடைய ; **नाशम्** - நாசத்தை ; **विधेहि** - செய்வாயாக. **उच्चकैः** - மிகவும் சிறந்ததான ; **बलम्** - பலத்தை ; **विधेहि** - செய்வாயாக.

எனக்குப் பகைவர்களுடைய நாசத்தைச் செய்து, மிகவும் சிறந்ததான பலத்தையும் (உண்டாகும்படி) செய்து, ரூபம் ஜயம் முதலியவற்றையும் கொடுப்பாயாக. (௧௧)

विधेहि देवि कल्याणं विधेहि विपुलां श्रियम् ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १२ ॥

देवि! - ஓ தேவி! **कल्याणम्** - கல்யாணத்தை ; **विधेहि** - செய்வாயாக. **विपुलाम्**-விபுலமான (அதிகமான) **श्रियम्** - ஐச்வர்யத்தை ; **विधेहि** - செய்வாயாக.

ஓ தேவி! மங்களத்தையும், திரண்ட ஐச்வர்யத்தையும் உண்டாகச் செய்து, ரூபம் ஜயம் முதலியவற்றையும் கொடுப்பாயாக. (௧௨)

विद्यावन्तं यशस्वन्तं लक्ष्मीवन्तं जनं कुरु ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १३ ॥

जनम् - (உன்னை உபாஸிக்கின்ற) பக்தனை ; **विद्यावन्तम्** -வித்தையோடு கூடியவனாகவும், **यशस्वन्तम्** - புகழுடன் கூடியவனாகவும், **लक्ष्मीवन्तम्** - ஐச்வர்யத்தோடு கூடியவனாகவும் ; **कुरु** செய்வாயாக.

ஓ தேவி! உனது திருவடியை ஸேவிக்கின்ற பக்தனை (என்னை) வித்தையோடு கூடியவனாகவும், புகழுடன்கூடியவனாகவும், ஐச்வர்யத்தோடு கூடியவனாகவும் செய்வதோடு ரூபம் ஜயம் முதலியவற்றையும் கொடுப்பாயாக. (கங)

प्रचण्डदैत्यदर्पघ्नि चण्डिके प्रणताय मे ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १४ ॥

प्रचण्डदैत्यदर्पघ्नि! - மிகவும் பராக்ரமசாலிகளான அஸுரர்களுடைய அஹங்காரத்தை அழிப்பவளே! **चण्डिके** - ஓ சண்டிகே! **प्रणताय**-நமஸ்காரம் செய்கின்ற ; **मे** - எனக்கு.

மிகவும் பராக்ரமசாலிகளான அஸுரர்களுடைய அஹங்காரத்தை அழிப்பவளே! ஓ சண்டிகே! வணங்குகின்ற எனக்கு ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (கச)

चतुर्भुजे चतुर्वक्त्रसंस्तुते परमेश्वरि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १५ ॥

चतुर्भुजे! - நான்கு கைகளுடன் கூடியவளே; **चतुर्वक्त्रसंस्तुते!** - நான்முகனுல் நன்கு துதிக்கப்பட்டவளே! **परमेश्वरि** - ஓ பரமேச்வரி!

நான்கு கைகளுடன் கூடியவளும், நான்முகனுல் நன்கு துதிக்கப் பெற்றவளுமான ஓ பரமேச்வரி! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (கரு)

कृष्णेन संस्तुते देवि शश्वद्भक्त्या त्वमम्बिके ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १६ ॥

शश्वत् - அடிக்கடி; **भक्त्या** - பக்தியேடு கூட; **कृष्णेन** - கிருஷ்ணனுல்; **तथा** - அவ்விதமே; **संस्तुते** - நன்கு துதிக்கப்பட்ட; **देवि!** - ஓ தேவி! **अम्बिके!** - அன்னையே!

ஸ்ரீகிருஷ்ணனுல் அடிக்கடி பக்தியோடு கூட நன்கு துதிக்கப்பெற்ற ஓ தேவி! ஓ அன்னையே! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (கசு)

हिमाचलसुतानाथपूजिते परमेश्वरि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १७ ॥

हिमाचलसुतानाथपूजिते! - பரமசிவனுல் பூஜிக்கப்பட்டவளே! **परमेश्वरि!** ஓ பரமேச்வரி.

பரமசிவனுல் பூஜிக்கப்பட்ட ஓ பரமேச்வரி! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (கஎ)

सुरासुरशिरोरत्ननिघृष्टचरणेऽम्बिके ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १८ ॥

सुरासुरशिरोरत्ननिघृष्टचरणे - தேவர்களாலும் அஸுரர்களாலும் நமஸ்காரம் செய்யப்பட்ட பாதங்களோடு கூடியவளே! **अम्बिके** - ஓ அன்னையே!

தேவர்களாலும், அஸுரர்களாலும் வணங்கப் பட்ட சரணங்களை யுடையவளே! ஓ அன்னையே! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (கஅ)

इन्द्राणीपतिसद्भावपूजिते परमेश्वरि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ १९ ॥

इन्द्राणीपतिसद्भावपूजिते - இந்த்ராணியால் பதியின் ஸத்பாவத்தின் பொருட்டு ஆராதிக்கப்பட்ட! **परमेश्वरि!** ஓ பரமேச்வரி!

இந்த்ராணியினால் ஆஸ்திக்ய புத்தியுடன் பதியின் ஸத்பாவத்தின் பொருட்டு ஆராதிக்கப் பட்டவளே! ஓ பரமேச்வரி; ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப் பாயாக. * (கக)

देवि प्रचण्डदोर्दण्डदैत्यदर्पविनाशिनि ।
रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ २० ॥

प्रचण्डदोर्दण्डदैत्यदर्पनिवाशिनि ! - மிகவும் சக்தி யுள்ள தோள்வலிமைபெற்ற அஸுரர்களுடைய கர்வத்தை அழிப்பவளே! **देवि!** - ஓ தேவி!

---

* தேவேந்த்ரன் ஒரு ஸமயம் காலக்ஷேபத்தின் காரணமாக ஒரு தாமரைக் குளத்தில் தாமரையின் தண்டினுள் வெகுகாலம் வாஸம் செய்ய நேர்ந்தது. அப்பொழுது இந்த்ராணியானவள் ஸ்ரீதேவியை ஆராதித்து அந்த இடத்தைக் கண்டு பிடித்தாள் என்பதை புராணங்களில் காணலாம்.

மிகவும் சக்திவாய்ந்த தோள்வலிமை பெற்ற அஸுரர்களுடைய கர்வத்தை அடியோடு அழிக்கின்ற ஓ அன்னையே! ரூபம் ஜயம் முதலியவற்றைக்கொடுப்பாயாக. (உ0)

देवि भक्तजनोद्दामदत्तानन्दोदयेऽम्बिके ।

रूपं देहि जयं देहि यशो देहि द्विषो जहि ॥ २१ ॥

भक्तजनोद्दामदत्तानन्दोदये - பக்தர்களில் சிறந்தவர்களுக்குக்கொடுக்கப்பட்ட ஆநந்தத்தினுடைய உதயத்தையுடையவளே ; **देवि!** - ஓ தேவி !

பக்தர்களிற் சிறந்தவர்களுக்கு ஆநந்தத்தை-மோக்ஷத்தை - கொடுக்கின்ற ஓ தேவி! ரூபம் ஜயம் முதலியவற்றைக் கொடுப்பாயாக. (உக)

पत्नीं मनोरमां देहि मनोवृत्तानुसारिणीम् ।

तारिणीं दुर्गसंसारसागरस्य कुलोद्भवाम् ॥ २२ ॥

मनोवृत्तानुसारिणीम् - மனோவிருத்தியை அநுஸரிக்கின்றவளும், **दुर्गसंसारसागरस्य** - கடக்கமுடியாத ஸம்ஸாரமென்ற ஸமுத்திரத்தினுடைய ; **तारिणीम्** - கரையைக் கடக்கச் செய்பவளும் ; **कुलोद्भवाम्** - நற்குடியிற் பிறந்தவளும் ; **मनोरमाम्** - மனதிற்குகந்தவளுமான ; **पत्नीम्** - மனைவியை ; **देहि** - கொடு.

மனோவிருத்தியை அநுஸரிப்பவளும், கடக்கமுடியாத ஸம்ஸாரமென்னும் ஸமுத்திரத்தினுடைய கரையைத் தாண்டுவதற்கு அநுகூலமாயிருப்பவளும்

நற்குடியிற் தோன்றியவளும், மனதைக் கவரும் வனப் புள்ளவளுமான மனைவியைக் கொடுப்பாயாக. (உஉ)

इदं स्तोत्रं पठित्वा तु महास्तोत्रं पठेन्नरः ।
स तु सप्तशतीसंख्यावरमाप्नोति संपदः ॥ २३ ॥

नरः - மனிதன் ; **इदम्** - இந்த ; **स्तोत्रम्** - ஸ்தோத்ரத்தை ; **पठित्वा** - படித்துவிட்டு ; **महास्तोत्रम्** - தேவீமாஹாத்ம்யத்தை ; **पठेत् तु** - படித்தானேயாகில் ; **स तु** - அவனே ; **सप्तशतीसंख्यावरम्** - ஸப்தசதீபாராயணத்தினுல் கிடைக்கக் கூடிய பலன்களுக்குக் குறைவில்லாத ; **संपदः** - ஸம்பத்துக்களை ; **आप्नोति** - அடைகிறுன்.

மனிதன் இந்த அர்க்கள ஸ்தவத்தை படித்துவிட்டு, தேவீமாஹாத்ம்யத்தைப் பாராயணம் செய்தால், அவன், ஸப்தசதீ பாராயணத்தால் எவ்வளவு பலன்கள் கிடைக்கக்கூடுமோ, அப்பலன்களுக்குச் சிறிதும் குறைவில்லாத ஸம்பத்துக்களை யடைகிறுன்.

ஆகவே அர்கள ஸ்துதிக்கும் ஸப்தசதியினுடைய அங்கத்வம் உண்டு என்பது ஸ்தாபிதமாக்கப்பட்டது. எவன் இவ்விதம் அர்களஸ்துதியை படித்துவிட்டுப் பிறகு ஸப்தசதியைப் பாராயணம் செய்கிறுனே; அவன் ஸப்தசதியினுடைய ஜபஸங்கியையினுல் உண்டாகும் பலன்களை அடைகிறுன். அவ்வளவு ஸம்பத்துக்களையும் அடைகிறுன். ஆகவே அவச்யம் அர்களஸ்தவம் பாராயணம் செய்யவேண்டியதாகும். அர்களம் தாழ்ப்பாள் எனப் பொருள்.

அர்கள ஸ்தோத்ரம் இவண் முற்றும்.

——:——

कीलकम् *

अथ कीलकम्—

अस्य श्रीकीलकस्तोत्रमहामन्त्रस्य विशुद्धज्ञानऋषिः। अनुष्टुप् छन्दः। श्रीचण्डिका देवता। क्लां बीजम्। क्लीं शक्तिः। क्लूं कीलकम्। श्रीचण्डिकाप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः। क्लामित्यादिभिः षडङ्गन्यासः।

அத கீலகம்—

ஸ்ரீகீலகமென்னும் இந்த மஹாஸ்தோத்ரத்திற்கு விசுத்தஞானரென்பவரே ரிஷியாவர் - அநுஷ்டுப்பே சந்தஸ். ஸ்ரீசண்டிகையே தேவதையாவள். க்லாம் என்பது பீஜம். க்லீம் என்பது சக்தி. க்லூம் என்பது கீலகம். ஸ்ரீசண்டிகாதேவியினுடைய அநுக்ரஹத்தின் பொருட்டு ஜபத்தில் விநியோகமாகும்.

ध्यानम्—

शोणप्रभं सोमकलावतंसं पाणिस्फुरत्पञ्चशरेक्षुचापम्।
प्राणप्रियं नौमि पिनाकपाणेः कोणत्रयस्थं कुलदैवतं नः॥

சென்னிறமான காந்தியை யுடையதும், ஸோம கலையை (பாதிமதியை) அலங்காரமாகக் கொண்டதும், பிநாகம் என்ற தநுஸைக் கொண்ட பரமசிவனுடைய

---

* कीलकम्—ஆணி-இப்பதம் இங்கு ரக்ஷை என்ற பொருளில் ஔபசாரிகமாக வழங்கப் பெறுவது.

ஜீவிதம் போன்றதும், முக்கோணத்தில் வாஸம் செய்வதுமான எங்களுடைய குலதேவதையை நமஸ்காரம் செய்கிறேன்.

ऋषिरुवाच—

विशुद्धज्ञानदेहाय त्रिवेदीदिव्यचक्षुषे ।
श्रेयःप्राप्तिनिमित्ताय नमः सोमार्धधारिणे ॥ १ ॥

ऋषिः - மஹர்ஷி ; **उवाच** - சொன்னார்—

विशुद्धज्ञानदेहाय - விஷயவாஸனைகளையகற்றிய சரீரமுள்ளவனும் ; அத்யயநத்தால் ஸித்தமான வேதப் பொருளின் வடிவாகவும் ; **त्रिवेदीदिव्यचक्षुषे** - மூன்று வேதங்களென்னும் திவ்யமான கண்களோடு கூடியவனும்; ஐஷ்டிகம் (இஷ்டி ஸம்பந்தமானது) பாசுகம் (பசு ஸம்பந்தமானது) ஸௌமிகம் (ஸோம ஸம்பந்தமானது) என்ற மூன்று கண்களோடு கூடியதும் ; **श्रेयःप्राप्तिनिमित्ताय** - மோக்ஷத்தையடையக் காரணமாயிருப்பவரும் ; ஸ்வர்கத்தையடையக் காரணமாயிருப்பதும் ; **सोमार्धधारिणे** - சந்த்ரகலையைத் தரித்துக்கொண்டவனுமான ஸ்ரீபரமேச்வரனுக்கு ; ஸோமரஸத்தை முக்கியமாகக் கொண்ட ஸோயாகத்திற்கு ; **नमः** - நமஸ்காரம்.

நிர்விஷய சைதன்ய சரீரத்தையுடையவனும், மூன்று வேதங்களாகிற திவ்ய நேத்ரங்களையுடையவனும், மோக்ஷத்தையடையவதற்கு மூலகாரணமாயிருப்பவனும். பாதிமதியைச் சூடியவனுமாகிய ஸ்ரீ பரமேச்வரனுக்கு நமஸ்காரம். அல்லது ; அத்யயநத்தினல் ஸித்தமான வேதப் பொருளின் வடிவாயமைந்த

சரீரமுள்ளதும், ஐஷ்டிகம், பாசுகம், ஸௌமிகம், என்ற மூன்று வேதிகைகளாகிற மூன்று கண்களை யுடையதும், ஸ்வர்கப்ராப்திக்குக் காரணமானதும், ஸோமரஸத்தை ப்ரதானமகக் கொண்டதாயுமிருக்கிற ஸோமயாகத்திற்கு நமஸ்காரம். (க)

सर्वमेतद्विजानीयान्मन्त्राणामभिकीलकम् ।

सर्वमन्त्राणाम् - எல்லா மந்த்ரங்களுக்குடைய ; **अभिकीलकम्** - ஸித்திக்குத் தடங்கலான சாபவடிவங் களா யிருக்கின்ற கீலகங்களை நாசம் செய்கிற ; **एतत्** - இந்த ஸப்தசதீஸ்தோத்திரத்தை ; **विजानीयात्** - உபா ஸிக்க வேண்டும்.

எல்லா மந்த்ரங்களுடைய ஸித்திக்குத் தடங்கல் களாக சாபவடிவங்களாயிருக்கின்ற கீலகங்களை நாசம் செய்வதான இந்த ஸப்தசதீ ஸ்தோத்ரத்தை உபா ஸிக்கவேண்டும். (உ)

सोऽपि क्षेममवाप्नोति सततं जाप्य तत्परः ।
सिद्ध्यन्त्युच्चाटनादीनि वस्तूनि सकलान्यपि ॥ ३ ॥

सततम् - எப்பொழும் ; **जाप्यतत्परः** - ஜபத்தை முக்கியம்ாகக் கொண்ட; **सः, अपि** - அவனும் ; **क्षेमम्** - க்ஷேமத்தை ; **अवाप्नोति** - அடைகிருன் . **उच्चाटनादीनि** - உச்சாடனம் முதலியவைகளும் ; **सकलानि** - கிடைக்கத் தகாத எல்லாவிதமான ; **वस्तूनि अपि** - வஸ்துக்களும்; **सिद्ध्यन्ति** - ஸித்திக்கின்றன.

எப்பொழுதும் வேறு மந்த்ரங்களையே முக்கிய மாகக் கொண்டு ஜபம் செய்து வருகின்ற அவனும்

க்ஷேமத்தை அடைகிறுன். அவன் உச்சாடனம் முதலியவைகளையும், அவ்விதமே கிடைக்கத்தகாத எல்லாவிதமான வஸ்துக்களையும் அடையப் பெறுகிறுன். (௩)

एतेन स्तुवतां देवी स्तोत्रमात्रेण सिद्ध्यति ॥ ४ ॥

एतेन - இந்த ; **स्तोत्रमात्रेण** - ஸ்தோத்திரத்திஞல் மாத்திரம் ; **स्तुवताम्** - ஸ்தோத்ரம் செய்கின்றவர்களுக்கு; **देवी**-தேவியானவள் ; **सिद्ध्यति**-அநுக்ரஹம் செய்கிருள்.

இந்த ஸப்தசதீ ஸ்தோத்ரத்திஞல் மாத்திரம் முக்கியமாக ஸ்தோத்ரம் செய்கின்றவர்களுக்கு ஸ்ரீ தேவியானவள் அநுக்ரஹம் செய்கிருள். (௪)

न मन्त्रो नौषधं तत्र न किंचिदपि विद्यते ।
विना जाप्येन सिद्ध्येत सर्वमुच्चाटनादिकम् ॥ ४ ॥
समग्राण्यपि सिद्ध्यन्ति . . . . ।

तत्र - அவன் ; **मन्त्रः** - மந்த்ரமும் ; **औषधम्** - ஔஷதமும் ; **न किंचित् अपि** - வேறு யாதொன்றும் ; **न विद्यते** - காண முடியாது ; **जाप्येन विना** - வேறு மந்த்ர ஜபத்தோடு இல்லாத ; **सर्वम्** - எல்லாவிதமான ; **उच्चाटनादिकम्** - உச்சாடனம் முதலிய எல்லா கார்யங்களும், **सिद्ध्येत**-ஸித்திக்கும். **समग्राणि अपि** - பரிபூர்ணங்களான விருப்பங்களும், **सिद्ध्यन्ति** - ஸித்திபெறுகின்றன.

இந்த ஸப்தசதீஸ்தோத்ரத்தை மாத்திரம் பாராயணம் செய்பவன், மந்த்ரமும், மருந்தும் மற்ற யாதொன்றும் காரியஸித்திக்காக உபயோகப்படுத்த வேண்டாம். அவன் வேறுமந்த்ரஜபங்களோடு கூடாத

உச்சாடனம் முதலிய கார்யங்களை யெல்லாம் ஸம்பாதித்துக் கொள்வதோடு, பரிபூர்ணமான விருப்பங்கள் யாவும் ஸித்தியடையப் பெறுகிறுன்.

எனவே லகுவான உபாயத்தோடு கூடிய இந்த ஸப்தசதியை விட்டு, மிகவும் சிரமஸாத்தியமான மற்ற மந்த்ரங்கள் யாவும் வீணேயாகும் என்பது கருத்தாகும். (ச)

. . . . लोकशङ्कामिमां हरः ।

कृत्वा निमन्त्रयामास सर्वमेवमिदं शुभम् ॥ ५ ॥

हरः - பரமேச்வரன் ; **इमाम्** - இந்த ; **लोकशङ्काम्** - ஜனங்களுடைய (இரண்டு விதமான) ஸந்தேஹத்தை ; **कृत्वा** - உணர்ந்து ; **एवम्** - இவ்விதம் கீலகத்தை நிர்மாணம் செய்து ; **इदम्** - இந்த ; **सर्वम्** - வேறு மந்ரங்கள் யாவற்றையும் ; **शुभम्** - பிரயோஜன முள்ளவையாக ; **निमन्त्रयामास** - நியமித்தார்.

ஸப்தசதீ உபாஸனை கொண்டும், வேற்றுமந்த்ரோபாஸனை கொண்டும், ஸமஸ்த மங்களங்களும் ஸித்தியாகும் என்ற ஜனங்களுடைய இருவகையான அபிப்பிராயத்தையுமுணர்ந்து, அச்சங்கையை நீக்குவதற்காக ஸ்ரீபரமேச்வரன் கீலகத்தை நிர்மாணம் செய்து, இதனுல் வேறு மந்த்ரங்களையும் பிரயோஜனமுள்ளவைகளாகச் செய்தார்.

அதாவது ஜனங்கள் ஸப்தசதீபாராயணத்தை மாத்ரம் செய்து கிருதார்த்தர்களாகி தர்மார்த்தகாமமோக்ஷங்களை விளக்குகின்ற சாஸ்த்ரங்களையும்,

மந்த்ரங்களையும் உதாஸீநம் செய்வார்கள். எனவே அச்சாஸ்த்ரங்களுக்குண்டான பிரயோஜனமற்ற தன்மையை யுணர்ந்து ஸ்ரீபரமேச்வரன், அவைகள் யாவும் பிரயோஜனமுள்ளவைகளாக இருப்பதற்கு ஸப்தசதீஜபம் கொண்டு உண்டாகின்ற ஸித்திகளுக்கு தடங்கல் இல்லாமலிருப்பதற்கு இவ்விதம் கீலகத்தை நிர்மாணம் செய்தார். இதுதான் முன்பு சொன்ன நான்கு ச்லோகங்களுடைய தாத்பர்யமாகும். (ரு)

स्तोत्रं वै चण्डिकायास्तु तच्च गुह्यं चकार सः।
समाप्तिर्वै न च पुण्यस्य तां यथावन्नियन्त्रणाम्॥ ६॥

सः - பரமசிவனும் **चण्डिकायाः तु** - சண்டிகையினுடைய; **तत्** - அந்த; **स्तोत्रं वै** - ஸ்தோத்ரத்தையும்; **गुह्यम्** - ரஹஸ்யமாகச் செய்தார்; **पुण्यस्य** - ஸப்தசதிபாராயண புண்யத்தினுடைய; **समाप्तिः** - முடிவானது; **न च** - கிடையாது (அதனல்) **ताम्** - அந்த பாராயணக்ரமத்தை; **यथावत्**-உள்ளவாறு; **नियन्त्रणाम्** - மறைமுகமான உபாயத்தையுடையதாகவும்; **चकार** - செய்தார்.

அந்த பரமேச்வரனும் ஸப்தசதீஸ்தோத்ரத்தை ரஹஸ்யமாகச் செய்து, அதனுடைய பாராயணத்தாலேற்படும் புண்யத்திற்கு முடிவில்லாதது கொண்டு பாராயணக்ரமத்தை மிகவும் மறைமுகமாகவும் இருக்குமாறு செய்தார்.

அதாவது ஸ்ரீபரமசிவன் சண்டிகாஸ்தோத்ரத்தை ப்ரசாரத்தோடு கூடாததாகச் செய்து, அல்பப்ரசாரம்

கொண்டு அளவுகடந்த பலமுண்டாகும் வண்ணம் பாராயணக்ரமத்தை ரஹஸ்யமான உபாயத்தோடு கூடியதாகவும் செய்தார் என்பது தாத்பர்யம். (கூ)

सोऽपि क्षेममवाप्नोति सर्वमेव न संशयः ॥ ७ ॥

सः अपि - அவனும் ; **सर्वम्** - ஸமஸ்தமான ; **क्षेमम्- एव**-க்ஷேமத்தையும் ; **अवाप्नोति** - அடைகிறான் ; **न संशयः**- ஐயமில்லை.

அந்த ரஹஸ்யோபாயத்தை யறிந்து ஸப்தசதியைப் பாராயணம் செய்கின்ற அவனும் ஸமஸ்தமான க்ஷேமத்தையும் முழுவதுமான புண்யத்தையும் அடைகிறான். (எ)

कृष्णायां वा चतुर्दश्यामष्टम्यां वा समाहितः ।
ददाति प्रतिगृह्णाति नान्यथैषा प्रसीदति ॥ ८ ॥

कृष्णायाम् - கிருஷ்ணபக்ஷத்திலுள்ள ; **अष्टम्याम्** - அஷ்டமியிலாவது ; **चतुर्दश्यां वा** - சதுர்தசியிலாவது ; **समाहितः** - ஏகாக்ர சித்தத்துடன் ; **ददाति** - கொடுப்பதும் ; **प्रतिगृह्णाति** - வாங்குவதுமான கர்மவிதியை யநுஷ்டிக்கவேண்டும். **अन्यथा** - இல்லாவிடில் ; **एषा** - இந்த ஸப்தசதீதேவீ ; **न प्रसीदति** - அநுக்ரஹம் செய்யமாட்டாள்.

கிருஷ்ணபக்ஷத்தில் அஷ்டமியிலாவது, சதுர்தசியிலாவது நிலைநிறுத்திய சித்தத்தோடுகூட தான ப்ரதிக்ரஹ வடிவமான கர்மவிதியை அநுஷ்டித்து வரவேண்டும். இல்லாவிடில் ஸப்தசதீதேவீ அநுக்ரஹம் செய்யமாட்டாள். (அ)

इत्थंरूपेण कीलेन महादेवेन कीलितम् ।
यो निष्कीलां विधायैनां नित्यं जपति संस्फुटम् ।
स सिद्धः स गणः सोऽपि गन्धर्वो जायतेऽवने ॥ ९ ॥

इत्थंरूपेण - இவ்விதம் முன்பு சொல்லியது போல; **कीलेन**-ஓர் ஆணியைக்கொண்டு; **महादेवेन**-மஹாதேவனால் **कीलितम्** - அடிக்கப்பட்டது. **यः**-எவனொருவன் - இந்த ஸப்தசதியை; **निष्कीलाम्**-(தானப்ரதிக்ரஹம்என்ற) ஆணி இல்லாததாக; **विधाय** செய்து; **नित्यम्**-தினந்தோறும்; **संस्फुटम्** - வ்யக்தமாக; **जपति** - ஜபம் செய்கிறானோ; **सः** - அவன், **सिद्धः** - ஸித்தனாகவும்; **सः** - அவன்; **गणः** தேவியினுடைய கணமாகவும்; **सः** - அவன்; **अवने**-ரக்ஷணத்தில்; **गन्धर्वः अपि**-கந்தவனாகவும்; **जायतेः**-ஆகிறான்.

மேலே சொன்னது போல ஓர் ஆணியைக்கொண்டு ஸ்ரீபரமேச்வரனால் அடிக்கப்பட்ட இந்த ஸப்தசதியை எவனொருவன் தானப்ரதிக்ரஹமென்னும் கர்மம் கொண்டு அந்த ஆணியோடு கூடததாகச் செய்து தினந்தோறும் வ்யக்தமாக ஜபம் செய்கிறானோ, அவன் ஸித்தனாகவும், தேவியினுடைய பரிசரனாகவும், ரக்ஷணத்தில் கந்தர்வனாகவும் ஆகிறான். (௯)

न चैवाप्यटतस्तस्य भयं क्वापीह जायते ।
नापमृत्युवशं याति मृतो मोक्षमवाप्नुयात् ॥ १० ॥

अटतः - ஸஞ்சாரம் செய்கின்ற; **तस्य** - அவனுக்கு; **इह** - இவ்வுலகில்; **क्व, अपि** - ஒரு இடத்திலும்; **भयम्** - பயமானது; **न जायत एव च** - ஒரு பொழுதும் உண்டாகாது. **मअपमृत्युवश** - அபம்ருத்யுவிற்கு அதீனமாக;

न याति - போகமாட்டான்; **मृतः** - மரித்தாலும்; **मोक्षम्** - மோக்ஷத்தை; **अवाप्नुयात्** - அடைகிறுன்.

விதிப்ரகாரம் ஸப்தசதியை பாராயணம் செய்கிறவன், இவ்வுலகில் எங்கு ஸஞ்சரித்தாலும் அவனுக்கு ஒரு இடத்திலும் ஒரு பொழுதும் பயமுண்டாகாது. அவன் அபம்ருத்யுவசம் ஆகமாட்டான், மரித்தாலும் மோக்ஷத்தையடைகிறுன். (கய)

ज्ञात्वा प्रारभ्य कुर्वीत ह्यकुर्वाणो विनश्यति ।
ततो ज्ञात्वैव संपन्नमिदं प्रारभ्यते बुधैः ॥ ११ ॥

ज्ञात्वा - நன்கு உணர்ந்து; **प्रारभ्य** - ஆரம்பித்து; **कुर्वीत** - செய்ய வேண்டும். **अकुर्वाणः** அப்படிச் செய்யாதவன்; **विनश्यति हि** - நாசத்தை அடைகிறுனன்றே; **ततः** - ஆகையால்; **बुधैः** - பண்டிதர்களால்; **ज्ञात्वा-एव**-(பாராயணக்ரமத்தை) நன்கு உணர்ந்தே; **इदम्** - இதை; **संपन्नम्** - தோஷமற்றதாகச் செய்து; **प्रारभ्यते** - ஆரம்பிக்க வேண்டும்.

கீலகஸம்ப்ரதாயத்தை நன்கு உணர்ந்து அதனுடைய பரிஹாரத்தைச் செய்து, பாராயணத்திற்கு ஆரம்பிக்க வேண்டும். அவ்விதம் செய்யாதவன் ஸித்திகளைப் பெறுவதில்லை, ஆகையால் பண்டிதர்களின் வாயிலாக இதனுடைய பாராயணக்ரமத்தை அறிந்து கொண்டு, இதை தோஷமற்றதாகச் செய்து ஆரம்பிக்க வேண்டும். (கக)

सौभाग्यादि च यत्किंचिद्दृश्यते ललनाजने ।
तत्सर्वं तत्प्रसादेन तेन जाप्यमिदं शुभम् ॥ १२ ॥

ललनाजने - ஸ்த்ரீ ஜனங்களில்; **सौभाग्यादि च** - ஸௌந்தர்யம் முதலிய; **यत् किंचित्** - சிறிது குறைவான குணங்கள்; **दृश्यते** – காணப்படுகின்றதோ; **तत् सर्वम्**; அவை முழுவதும்; **तत् प्रसादेन** - அந்த தேவீ ப்ரஸாதத்தினல் (உண்டாகவேண்டும்). **तेन** - அக் காரணத்தால்; **शुभम्** - மங்களகரமான; **इदम्** - இந்த ஸ்தோத்ரம்; **जाप्यम्** - ஜபிக்கப் படவேண்டும்.

பாராயணக்ரமத்தை யுணராத ஸ்திரீ ஜனங்களில் ஸௌந்தர்யம் முதலிய சில குறைவுள்ள குணங்கள் (எவைகள்) காணப்படுகின்றதோ, அவைகளெல்லாம் தேவியினுடைய ப்ரஸாதம் கொண்டு உண்டாக வேண்டும். அக்காரணத்தால், மங்களகரமான இந்த ஸ்தோத்ரத்தை விதிப்ரகாரமோ, விதியோடு கூடாததாகவோ ஜபம் செய்யவேண்டும். (கஉ)

शनैस्तु जप्यमानेऽस्मिंस्तोत्रे संपत्तिरुच्चकैः।
भवत्येव समग्रापि ततः प्रारभ्यमेव तत्॥ १३॥

अस्मिन् - இந்த; **स्तोत्रे** - ஸ்தோத்தரமானது; **शनैः तु** - மெதுவாக; **जप्यमाने** - ஜபிக்கப்படும்பொழுது; **सपत्तिः**–ஸம்பத்தானது (உண்டாகும்); **उच्चकैः** - உரக்க ஜபித்தால்; **समग्रः-अपि** - நிறைந்த ஐச்வர்களும்; **भवति-एव** - உண்டாகுமென்பது நிச்சயம். **ततः** - அக் காரணத்தால்; **तत्** - அது; **प्रारभ्यम् एव** - உரக்கப் பாராயணம் செய்து ஆரம்பிக்க வேண்டியதேயாகும்.

இந்த ஸப்தசதீ ஸ்தோத்ரத்தை மெதுவாக ஜபம் செய்தால் ஐச்வர்ய முண்டாகும். உரக்க ஜபம் செய்

தால் ஸம்பூர்ணமான ஐச்வர்யங்களும் உண்டாகும். இது நிச்சயம். ஆகையால் அந்த ஸ்தோத்ரத்தை உரக்க பாராயணம் செய்ய வேண்டியதே யாகும். (கங)

ऐश्वर्यं यत्प्रसादेन सौभाग्यारोग्यसंपदः ।
शत्रुहानिः परो मोक्षः स्तूयते सा न किं जनैः ॥ १४ ॥

यत्-प्रसादेन - எந்த தேவியினுடைய அநுக்ரஹத்தினால் ; **ऐश्वर्यम्**-ஐச்வர்யமும் ; **सौभाग्यारोग्यसंपदः**-ஸௌபாக்யம்; ஆரோக்யம், ஸம்பத்துக்கள் இனவைகளும்; **शत्रुहानिः** - பகைவர்களுடைய நாசமும் ; **परः** - சிறந்த தானமோக்ஷமும் (உண்டாகுமோ) **सा**-அந்த தேவீ **जनैः**-ஜனங்களால் ; **किं न स्तूयते**-ஏன் துதிக்கப்படமாட்டாள்.

எந்த தேவியினுடைய அநுக்ரஹத்தினால் ஐச்வர்யம் ; (பொருள்) ஸௌபாக்யம்; (அழகு) ஆரோக்யம் ; (நோயற்ற நிலை) ஸம்பத்து ; பகைவர்களது நாசம் ; தலைசிறந்த மோக்ஷம் இவைகள் யாவும் உண்டாகின்றனவோ, அந்த தேவியை ஜனங்கள் ஏன் துதிக்க மாட்டார்கள்? நிச்சயமாகத் துதிப்பார்களன்றோ! (கச)

इदं स्तोत्रं पठित्वा तु महास्तोत्रं पठेन्नरः ।
स रहस्यर्चनोपेतः समस्तफलमश्नुते ॥ १५ ॥

इति कीलकम् ॥ ५ ॥

नरः- மனிதன் ; (உபாஸகன்) **इदम्**-இந்த ; **स्तोत्रम्**-ஸ்தவத்தை ; **पठित्वा तु** - படித்துவிட்டு ; **महास्तोत्रम्** - மஹாஸ்தவத்தை (ஸப்தசதியை) ; **पठेत्** - படிக்க வேண்டும் ; **सः** - அவன் ; **रहति** - தனிமையில் ; **अर्चनो-**

पेतः सन् - அர்ச்சனையோடு கூடியவனுகவும் இருந்து கொண்டு; **समस्तफलम्** - எல்லாவிதமான பலன்களை யும்; **अश्नुते** – அடைகிருன்.

எந்த உபாஸகன் இந்த ஸ்தவத்தைப் படித்து விட்டு ஸப்தசதியை படிக்கிருனே அவன் தனிமையில் அர்ச்சனையோடு கூடியவனுகவும் இருந்து கொண்டு ஸகல விதமான பலன்களையும் அடைகிருன். (கரு)

தேவீ கீலகம் இவண் டூற்றும்.

——:——

गुरुकीलकम्

अथ गुरुकीलकम्—

पुरा सनत्कुमाराय दत्तमेतन्मयानघ ।
संवर्ताय ददौ तच्च स चान्यस्मै ददौ च तत् ॥ १ ॥

अनघ - ஓ பாப மற்றவனே ! **एतत्** - இந்த கீலக ஸ்தோத்ரம் ; **पुरा** - பண்டு ; **मया** - என்ஞல் ; **सनत्कुमाराय** - ஸநத் குமாரனின் பொருட்டு ; **दत्तम्** - கொடுக்கப் பட்டது ; **सः** - அவன் ; **तत् च** - அதையும் ; **संवर्ताय** - ஸம்வர்த்தன் என்பவருக்கு ; **ददौ** - கொடுத்தார். **सः च** - அவனும் ; **अन्यस्मै** - மற்றவருக்கு **ददौ च** - கொடுத்தார்.

शिवः - சிவன் ; **उवाच** - சொன்ஞர்—

அத குருகீலகம்—

சிவன் சொன்ஞர்—

ஓ பாபமற்றவனே ! இந்த கீலகஸ்தோத்ரம் பண்டு என்ஞல் ஸநத்குமாரனுக்குக் கொடுக்கபட்டது. அந்த ஸநத்குமாரனும் அதை ஸம்வர்த்தன் என்பவருக்குக் கொடுத்தான். அவனும் அதை மற்றவர்களுக்குக் கொடுத்தான். (க)

सर्वत्र चण्डीपाठस्य प्राचुर्येण महीतले ।
ब्रह्मकाण्डः कर्मकाण्डस्तन्त्रकाण्डश्च सर्वथा ॥ २ ॥
अभूत्प्रतिहतोऽनेन शीघ्रसिद्धिप्रदायिना ॥ ३ ॥

सर्वत्र - எல்லாவிடத்திலும், **महीतले** - பூமண்டலத்தில் ; **चण्डीस्तोत्रस्य** - ஸப்தசதியினுடைய ; **प्राचुर्येण** -

பிரசாரத்தினுல் ; **ब्रह्मकाण्डः** - ப்ரஹ்ம காண்டமும் ; **कर्मकाण्डः** - கர்ம காண்டமும் ; **तन्त्रकाण्डः च** - தந்த்ர காண்டமும் ; **सर्वथा** - எல்லா விதத்திலும் ; **शीघ्रसिद्धि-प्रदाप्रयिना** - விரைவில் ஸித்தியைக் கொடுப்பதான, **अनेन** - இந்த ஸப்தசதியைக் கொண்டு ; **प्रतिहतः** - பிரயோஜன மற்றதாக ; **अभूत्** - ஆகியது.

இவ்விதம் பூமண்டலம் முழுவதும், சீக்கிரமாக பல ஸித்தியைக் கொடுப்பதான சண்டிகா ஸ்தோத்தி ரத்தினுடைய பிரசாரத்தினுல் ப்ரஹ்மகாண்டமும், கர்ம காண்டமும், தந்த்ரகாண்டமும் பலவிதத்திலும் பிரயோ ஜனமற்றதாக ஆகியது அதாவது. இந்த சாண்டீஸ் தவ பாடமானது எல்லா சாஸ்திரங்களைக் காட்டிலும் சிறந்ததென்பதாம். (உ)

तदा तेषां च सार्थक्यं कर्तुकामेन भूतले ।
दानप्रतिग्रहाख्येन मन्त्रोऽयं कीलितो मया ॥ ४ ॥

तदा - அப்பொழுது **तेषां च** - அவைகளுக்கு ; **भूतले** - பூவுலகில் ; **सार्थक्यम्** - பிரயோஜனத்தை ; **कर्तु कामेन** - செய்ய வேண்டுமென்ற ஆசையுள்ளவனுன ; **मया** - என்னுல் ; **अयम्** - இந்த ; **मन्त्रः** - மந்தரமானது. **दानप्रतिग्रहाख्येन** - தானப்ரதிக்ரஹ மென்ற (கொடுக்கல் வாங்கல் என்ற) **कीलितः** - ஆணி வைக்கப்பட்டது.

அப்பொழுது நான் பூமியில் அவைகளுக்கு ப்ரயோ ஜனத்தை யுண்டு பண்ணவேண்டுமென்ற ஆசையினுல் தானப்ரதிக்ரஹவடிவமான கீலகம் கொண்டு இந்த

ஸ்தோத்ரத்தில் ஓர் ஆணியை (முளையை) வைத்தேன். (௪)

दानप्रतिग्रहाख्यं यत्कीलकं समुदाहृतम् ।
तदारभ्य च मन्त्रोऽयं कीलकेनाभिकीलितः ।
न सर्वेषां भवेत्सिद्ध्यै ये कीलकपराङ्मुखाः ॥ ५ ॥

दानप्रतिग्रहाख्यम् - தானப்ரதிக்ரஹம் என்று சொல்லப்பட்ட; **यत्** - யாதொன்று உண்டோ; **तत्** - அது; **कीलकम्** - கீலகம் என்று; **उदाहृतम्** - சொல்லப் பட்டது. **तदारभ्य** - அது முதல் **अयम्** - இந்த; **मन्त्रः** - மந்த்ரம்; **कीलकेन** – ஆணியினால்; **कीलितम्** - அடிக்கப் பட்டதாக; **आस** - ஆகியது. **ये** - எவர்கள்; **कीलकपराङ्मुखाः** - கீலகத்தில் உதாஸீனமாக இருக்கின்றனரோ; **(तेषाम्) सर्वेषाम्** - அவர்கள் எல்லோருக்கும், **सिद्ध्यै** - ஸித்தியின் பொருட்டு; **न भवेत्** - உண்டாகாது.

தானப்ரதிக்ரஹ வடிவமான கர்மாவை கீலகம் என்று சொல்லப்பட்டது. அதுமுதல் இது கீலகத்தோடு கூடியதாக ஆகியது. கீலகத்தில் உதாஸீனமாக எவர் இருக்கினறனரோ, அவர்களுக்கு எத்தகைய ஸித்தியும் கைகூடாது. (௫)

ये नराः कीलकेनेमं जपन्ति परया मुदा ।
तेषां देवी प्रसन्ना स्यात्ततः सर्वाः समृद्धयः ॥ ६ ॥

ये - எந்த; **नराः** - மனிதர்கள்; **इमम्** - இந்த ஸப்தசதியை; **कीलकेन** - கீலகத்தோடு கூட; **परया** - மிக

வும்; **मुदा** - ஸந்தோஷத்தோடு கூட; **जपन्ति** - ஜபம் செய்கின்றனரோ; **तेषाम्**-அவர்களுக்கு; **देवी**-ஸ்ரீதேவீ; **प्रसन्ना** - ப்ரஸந்நமாக; **स्यात्** - இருப்பாள். **ततः** - பிறகு **सर्वाः** - ஸமஸ்தமான **समृद्धयः** - ஐச்வர்யங்களும் (உண்டாகும்.)

எவர்கள் கீலகத்தோடு கூட மிகவும் ஸந்தோஷமாக இதை ஜபம் செய்கின்றனரோ, அவர்களுக்கு ஸ்ரீதேவியானவள் பிரஸன்னமாயிருந்து கொண்டு ஸகல ஐச்வர்யங்களையும் கொடுக்கிறாள். (சு)

त्वत्प्रसूतस्त्वदाज्ञप्तस्त्वद्दासस्त्वत्परायणः ।
त्वन्नामचिन्तनपरस्त्वदर्थेऽहं नियोजितः ॥ ७ ॥

त्वत् प्रसूतः - உன்னால் உண்டானவனும்; **त्वत् आज्ञप्तः** - உன்னால் கட்டளையிடப் பட்டவனும்; **त्वत् दासः**-உன்னுடைய தாஸனும்; **त्वत् परायणः** - உன்னையே தஞ்சம் புகுந்தவனும்; **त्वत् नामचिन्तनपरः**-உன்னுடைய மந்த்ரங்களையே ஜபம் செய்கிறவனுமாகிய; **अहम्**-நான்; **त्वत् अर्थे** - உன் பொருட்டு; **नियोजितः** - ஸமர்பணம் செய்யப்பட்டவனாக இருக்கிறேன்.

உனது திருமேனியால் உண்டானவனும், உனது திருவடிகளால் கட்டளையிடப்பட்டவனும், உனது திருவடிகளின் தாஸனும், உனது திருமேனியையே அடைக்கலமாகக் கொண்டவனும், எப்பொழுதும் உனது திருவடிகளின் மந்த்ரங்களையே ஜபம் செய்பவனுமான நான் உனது திருவடியின் பொருட்டு ஸமர்பணம் செய்யப் பட்டவனாக இருக்கிறேன். (எ)

मयार्जितमिदं सर्वं तव स्वं परमेश्वरि ।
राष्ट्रं बलं कोशगृहं सैन्यमन्यच्च साधनम् ॥ ८ ॥
त्वदधीनं करिष्यामि यत्रार्थे त्वं नियोक्ष्यसि ।
तत्र देवि सदा वर्ते तवाज्ञामेव पालयन् ॥ ९ ॥

परमेश्वरि - ஓ பரமேச்வரி! **मया** - என்னால்; **आर्जितम्** - ஸம்பாதிக்கப்பட்ட **इदम् सर्वम्** - இதெல்லாம்; **तव** - உன்னுடைய; **स्वम्** ஸொத்தாகும். **राष्ट्रम्** - ராஜ்யமும்; **बलम्** - பலமும்; **कोशग्रहम्**-பொக்கிஷமும்; **सैन्यम्** - ஸைந்யமும்; **अन्यत्** – மற்ற; **साधनम् च** - ஸாதனமும்; **त्वत् अधीनम्** - உனக்கு அதீனமாக; **करिष्यामि** - செய்கிறேன். **देवि** -. ஓ தேவி! **त्वम्** - நீ **यत्र अर्थे** - எது விஷயத்தில்; **नियोक्ष्यसि** - (என்னை) நியமிக்கிறாயோ; **तव** - உன்னுடைய; **आज्ञाम्** - கட்டளையை; **पालयन्** - காப்பாற்றிக்கொண்டு; **सदा** – எப்பொழுதும்; **तत एव** - அதிலேயே; **वर्ते** - இருப்பேன்.

ஓ பரமேச்வரி! என்னால் ஸம்பாதிக்கப் பட்ட இந்த ஸம்பத்துக்கள் யாவும் உனது திருவடிகளினுடையதேயாகும். நான் ராஜ்யம், பலம், பொக்கிஷம், ஸைந்யம் மற்றுமுள்ள ஸகலஸாதநங்கள் யாவையும் உனது திருவடிகளுக்கே அதீனமாக (அர்பணமாகச்) செய்கிறேன். ஓ அன்னையே! நீ எந்தக் காரியத்தில் என்னை நியமனம் செய்கிறாயோ, உன்னுடைய அக்கட்டளையை நான் எப்பொழுதும் காப்பாற்றிக் கொண்டிருப்பேன். (அ, க)

इति संचिन्त्य मनसा स्वार्जितानि धनानि च ।
कृष्णायां वा चतुर्दश्यामष्टम्यां वा समाहितः ॥ १० ॥

समर्पयेन्महादेव्यै स्वार्जितं सकलं धनम् ।
राष्ट्रं बलं कोशगृहं नवं यद्यदुपार्जितम् ॥ ११ ॥
अस्मिन्मासि मया देवि तुभ्यमेतत्समर्पितम् ॥ १२ ॥

इति – இவ்விதம்; **मनसा** – மனதினால்; **संचिन्त्य** – நான்கு சிந்தனைசெய்து; **स्वार्जितानि**-தன்னால்ஸம்பாதிக்கப் பட்டவைகளான **धनानि च** - தனங்களையும்; **कृष्णायाम्** - கிருஷ்ணபக்ஷத்திலுள்ள; **अष्टम्याम्** – அஷ்டமியிலோ; **चतुर्दश्यां वा** – சதுர்தசியிலோ; **समाहितः** - ஏகாக்ரசித்தத் தோடு; **महादेव्यै** - ஸ்ரீமஹாதேவியின் பொருட்டு; **समर्पयेत्** – ஸமர்பணம் செய்ய வேண்டும். **देवि** - ஓ அன்னையே! **अस्मिन्** - இந்த; **मासि** - மாதத்தில்; **मया** - என்னால்; **स्वार्जितम्** - ஸம்பாதிக்கப் பட்ட; **सकलम्** - ஸமஸ்தமான; **धनम्**–தனமும் **राष्ट्रम्**-ராஜ்யமும், **बलम्** - பலமும்; **कोशगृहम्** – பொக்கிஷமும்; **यत् यत्** – எது எது; **नवम्** - புதியதாக; **उपार्जितम्** - ஸம்பாதிக்கப் பட்டதோ; **एतत्** – இதையெல்லாம்; **तुभ्यम्** - உன் பொருட்டு; **समर्पितम्** - ஸமர்பணம் செய்யப்பட்டது.

இவ்விதம் மனதினால் நன்கு சிந்தனை செய்து, தன்னால் ஸம்பாதிக்கப்பட்ட ஸம்பத்துக்களை கிருஷ்ண பக்ஷத்தின் அஷ்டமியிலாவது, சதுர்தசிலாவது, ஏகாக்ர சித்தத்தோடு ஸ்ரீமஹா தேவியின் பொருட்டு ஸமர் பணம் செய்ய வேண்டும். ஓ அன்னையே! இம்மாதத் தில் என்னால் ஸம்பாதிக்கப்பட்ட ஸகல ஸம்பத்துக் களும், ராஜ்யமும், பலமும், பொக்கிஷமும், ஸைங்யமும் இன்று நான் புதிது புதிதாக எதை எதை ஸம்பாதிக்கி

றேனே அதையெல்லாம் உனது திருவடியில் ஸமர்பணம் செய்கிறேன். (கங-கஉ)

इति ध्यात्वा ततो देव्या प्रसादात्प्रतिगृह्य च ।
विभज्य पञ्चधा सर्वं त्र्यंशान्स्वार्थ प्रकल्पयेत् ।
देवपितृतिथीनां च क्रियार्थं त्वेकमादिशेत् ॥१३॥
एकांशं गुरवे दद्यात्तेन देवी प्रसीदति ॥ १४ ॥

इति - இவ்விதம்; **ध्यात्वा**-த்யானம் செய்து; **ततः**- பிறகு; **देव्याः** - ஸ்ரீதேவியினுடைய; **प्रसादात्** - அநுக்ரஹம் கொண்டு; **प्रतिगृह्य च** - எடுத்து; **सर्वम्** - அந்த தனங்கள் முழுவதையும்; **पञ्चधा** - ஐந்தாக; **विभज्य** - விபாகம் செய்து; **त्र्यंशान्** - மூன்று பாகங்களை; **स्वार्थम्** - தனக்காக; **प्रकल्पयेत्** - செய்து கொள்ள வேண்டும். **एकम् तु** - ஒரு பாகத்தை; **देवपितृतिथीनाम् च**-தேவதைகளுடையவும், பித்ருக்களுடையவும், அதிகளுடையவும்; **क्रियार्थम्** - கார்யங்களின் பொருட்டும்; **एकांशम्** - ஒரு பாகத்தை; **गुरवे**-குருவின் பொருட்டும்; **दद्यात्** - தானம் செய்ய வேண்டும். **तेन**-அக்காரணத்தால்; **देवी**-ஸ்ரீதேவீ; **प्रसीदति** - ஸந்தோஷத்தையடைகிருள்.

இவ்விதம் த்யானம் செய்து, பிறகு தேவினுடைய அநுக்ரஹத்தைப் பெற்று எடுத்துக்கொண்டு அந்த ஸம்பத்துக்கள் முழுவதையும் ஐந்து பாகமாகச்செய்து, மூன்று பாகங்களைத் தனக்காகவும், ஒரு பாகத்தை தேவர்கள், பித்ருக்கள், அதிதிகள் இவர்களுடைய கர்மங்களைச் செய்வதற்காகவும், மற்ருெரு பாகத்தை ஸ்ரீகுருவுக்கும் தானம் செய்ய வேண்டும். இப்படிச்

செய்தால் ஸ்ரீதேவீ ஸந்தோஷத்தை அடைகிறாள்.

तस्य राज्यं बलं सैन्यं कोशः साधु विवर्धते ।
नानारत्नाकरः श्रीमान् यथा पर्वणि वारिधिः ॥ १५ ॥

नानारत्नाकरः - பலவித ரத்நங்கள் உண்டாகுமிடமும்; **श्रीमान्** - ஸ்ரீமானுகவு மிருக்கிற; **वारिधिः** - ஸமுத்ரமானது; **पर्वणि** - பௌர்ணமியில்; **यथा** - எவ்விதமோ; **तथा** - அவ்விதம்; **तस्य** - அவனுடைய; **राज्यम्** - ராஜ்யமும்; **बलम्** - பலமும்; **सैन्यम्** - ஸைந்யமும்; **कोशः** - கோசமும்; **साधु** - நன்ருக; **विवर्धते** - வளருகிறது.

பலவித ரத்தனங்கள் உண்டாகுவதற்கு இருப்பிடமாயும். ஸ்ரீமானுகவு மிருக்கிற ஸமுத்ரமானது எவ்விதம் பௌர்ணமியில் பொங்கி எழுகின்றதோ, அவ்விதமே, அவனுடைய (உபாஸகனுடைய) ராஜ்யமும், ஸைன்யமும், பலம், கோசம் முதலியவைகள் நன்ருகப் பொங்கி வளர்ச்சியடையும். (கரு)

ज्ञात्वा नवाक्षरं मन्त्रं जीवब्रह्मसमाश्रयम् ।
तत्त्वमस्यादिवाक्यानां सारं संसारभेषजम् ॥ १६ ॥
सप्तशत्याख्यमन्त्रस्य यावज्जीवमहं जपम् ।
कुर्वन् ततो न प्रमादं प्राप्नुयामिति निश्चयम् ॥ १७ ॥
कृत्वा प्रारभ्य कुर्वीत ह्यकुर्वाणो विनश्यति ।

तत्त्वमस्यादिवाक्यानाम् - 'தத்வமஸி' முதலிய மஹா வாக்யங்களுடைய; सारम् - ஸாரமானதும்; संसार-भेषजम् - ஸம்ஸார நாசத்திற்கு ஔஷதம் போன்றதும்; जीवब्रह्मसमाश्रयम् - ஜீவப்ரஹ்மத்தின் ஐக்யமாயுமிருக்கிற; नवाक्षरम् - நவாக்ஷரம் என்ற; मन्त्रम् - மந்த்ரத்தை; ज्ञात्वा - (உபதேசவாயிலாக) உணர்ந்து; अहं - நான்; यावज्जीवम् - ஜீவித்திருக்கும் வரையில்; सप्तशत्याख्य - मन्त्रस्य - ஸப்தசதி என்ற பெயருள்ள மந்த்ரத்தினுடைய; जपम् - ஜபத்தை; कुर्वन् - செய்து கொண்டு; ततः - அதிலிருந்து; प्रमादम् - நழுவுதலை; न प्राप्नुयाम् - அடைய மாட்டேன்; इति - என்ற; निश्चयम् - உறுதியை; कृत्वा - செய்து; प्रारभ्य - ஆரம்பித்து; कुर्वीत - செய்து வரவேண்டும். हि - ஏனெனில்; अकुर्वाणः - செய்யாதவன்; नश्यति - நாசத்தை யடைகிறான்.

'தத்வமஸி' முதலிய மஹா வாக்கியங்களுடைய ஸாரமாயும், ஸம்ஸாரதாபத்திற்குத் தக்கதோர் மருந்தாகவும், ஜீவப்ரஹ்மத்தின் ஐக்யவடிவாயு மிருக்கிற நவாக்ஷர மென்ற மந்த்ரத்தை ஸ்ரீ குருவின் உபதேச வாயிலாக உணர்ந்து "நான் ஜீவத்திருக்கும் வரையில் ஸப்தசதியை பாராயணம் செய்வேன் என்ற இந்த ஸங்கல்பத்தினின்றும் நழுவாமல் இருப்பேன்" என உறுதியுடன் ஆரம்பித்துச் செய்து வரவேண்டும். ஏனெனில் அப்படிச் செய்யாதவன் நாசத்தை அடைகிறான். (கசு-கள)

नाहं ब्रह्म निराकुर्यां मा मा ब्रह्म निराकरोत् ।
अनिराकरणं मेऽस्तु अनिराकरणं मम ॥ १८ ॥

इति वेदान्तमूर्धन्ये छान्दोग्येऽस्य प्रपञ्चनात् ।
प्रारभ्य तत्परित्यागो न तस्य श्रेयसे मतः ॥ १९ ॥

अहम्-நான் ; ब्रह्म - ப்ரஹ்மத்தை ; न निराकुर्याम् - நிராகரணம் (உதாஸீனம்) செய்ய மாட்டேன். माम् - என்னை ; ब्रह्म - அந்த ப்ரஹ்மமும் ; मा निराकरोत् - உதாஸீனம் செய்ய வேண்டாம் ; मे - என்னுடைய ; अनिराकरणम् - ஆதரவு ; अस्तु - இருக்கட்டும் ; अनिराकरणम् - ஆதரவு ; मम-எனக்கும் ; (இருக்கட்டும்) इति- என்று ; वेदान्तमूर्धन्ये-உபநிஷதங்களில் தலைசிறந்ததான ; छान्दोग्ये - சாங்தோக்யோபநிஷத்தில் ; अस्य-இதனுடைய; प्रपञ्चनात्-விஸ்தாரமானது சொல்லப்படுவதால்; प्रारभ्य - ஆரம்பித்து ; तत् परित्यागः - அதனுடைய பரித்யாகமானது ; तस्य - அவனுக்கு ; श्रेयसे - கீர்த்தியின் பொருட்டு ; न मतः - ஆகாது.

"நான் ப்ரஹ்மத்தை உதாஸீநம் செய்ய மாட்டேன். ப்ரஹ்மும் என்னை உதாஸீநம் செய்ய வேண்டாம். என்னுடைய ஆதரவும் ப்ரஹ்மத்திற்கு இருக்கட்டும்; எனக்கு ப்ரஹ்மத்தினுடைய ஆதரவும் உண்டாகட்டும் என்ற வேதாந்தசிரோத்நமாக விளங்கும் சாங்தோக்யோபநிஷத்தில் நிராகரண-பரித்யாக - விஷயத்தைக் குறித்து விஸ்தாரமாகச் சொல்லப்படுவதால், உபாஸகன் ஆரம்பித்து அதை பரித்யாகம் செய்வது அவனுடைய சிரேயஸ்ஸுக்கு (கீர்த்தி) அழகல்ல. (கஅ, கக)

नाब्रह्मवित्कुले तस्य जायते हि कदाचन ।
न दारिद्र्यं कुले तस्य यावत्स्थास्यति मेदिनी ॥ २० ॥

तस्य – அவனுடைய ; कुले - வம்சத்தில் ; कदाचन - ஒரு பொழுதும் ; अब्रह्मवित् - ப்ரஹ்ம ஞானியல்லாதவன் ; न जायते च - உண்டாகவும் மாட்டான். तस्य - அவனுடைய ; कुले - வம்சத்தில் ; मेदिनी - பூமியானது ; यावत् - எவ்வளவு காலம் ; स्थास्यति - இருக்கிறதோ ; (அவ்வளவு காலம்) दारिद्र्यम् - வறுமையும் ; न - கிடையாது.

இவ்விதச் சிறப்பு வாய்ந்த பாராயணத்தை நிறுத்தாமல் தொடர்ச்சியாகச் செய்து வருகின்ற உபாஸகனுடைய வம்சத்திலே ஒருக்காலும் ப்ரஹ்மஞானமில்லாதவன் உண்டாகமாட்டான். எவ்வளவு காலம் பூமியிருக்கிறதோ அவ்வளவு காலம் வறுமை யென்பதும் உண்டாகாது. (உ0)

प्रतिसवत्सरं कुर्याच्छारदं वार्षिकं तथा ।
तेन सर्वमवाप्नोति सुरासुरसुदुर्लभम् ॥ २१ ॥
अन्यच्च यद्यत्कल्याणं जायते तत्क्षणे क्षणे ॥ २२ ॥

प्रतिसंवत्सरम् - ஒவ்வொரு வருஷமும், शारदम् - சரத்காலத்திலும் ; तथा - அவ்விதமே ; वार्षिकम् - வர்ஷாகாலத்திலும் ; कुर्यात् -(பூஜை) செய்யவேண்டும். तेन - அதனுல் ; सुरासुरसुदुर्लभम् - தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் கிடைக்கத்தகாத ; सर्वम् - எல்லா ஸித்திகளேயும் ; अवाप्नोति - அடைகிருன். अन्यत् च - மற்றும் ; यत् यत् - कल्याणम् - எந்த எந்த மங்களமானது உண்டோ ; तत् - அதுவும் ; क्षणे क्षणे-ஒவ்வொரு க்ஷணமும் ; जायते - உண்டாகிறது.

ஒவ்வொரு வருஷமும் சரத்காலத்திலும் வர்ஷா காலத்திலும் பூஜை, மஹோத்ஸவம் முதலியவைகளைச் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும் கூட கிடைக்கத்தகாத ஸித்திகள் யாவும் கிடைக்கின்றன. மற்றும் எந்த எந்த மங்கள மானது உண்டாகிறதோ, அதுவும் ஒவ்வொரு க்ஷணமும் உண்டாகிறது. (உக-உஉ)

सत्यं सत्यमिदं सत्यं गोपनीयं प्रयत्नतः ।
पुत्राय ब्रह्मनिष्ठाय पित्रा देयं महात्मना ।
अन्यथा देवता तस्मै शापं दद्यान्न संशयः ॥ २३ ॥

इति गुरुकीलकम् ॥

इदम् - இது ; **सत्यम्-सत्यम्-सत्यम्** - உண்மை; உண்மை, உண்மை ; **प्रयत्नतः** - முயற்சியோடு கூட, **गोपनीयम्** - ரஹஸ்யமாக வைக்கவேண்டும். **महात्मना**- மஹாத்மாவாகிய ; **पित्रा** - பிதாவினல் ; **ब्रह्मनिष्ठाय** - ப்ரஹ்மத்தின் வழி நிற்கும் ; **पुत्राय**-புத்ரனின் பொருட்டு; **देयम्** - கொடுக்கப்பட வேண்டும். **अन्यथा** - இல்லா விடில் ; **तस्मै** - அவன் பொருட்டு ; **देवता** - தேவியான வள் ; **शापम्** - சாபத்தை ; **दद्यात्** - கொடுக்கிருள் ; **न संशयः** - ஸந்தேஹமில்லை.

இது ஸத்யம். முக்காலும் ஸத்யம். பெரிய முயற்சி யுடன் இதை ரஹஸ்யமாக வைத்துக் கொள்ள வேண்டும். மஹாத்மாவாகிய தந்தையினுல், ப்ரஹ்ம ஞானத்தின் வழி நிற்கும் புத்திரனுக்குக் கொடுக்கப்பட

வேண்டும். இல்லாவிடில் தேவியின் சாபம் அவனுக்குக் கிடைக்கும். (௨௬)

தேவீமாஹாத்ம்யத்தினுடைய குருகீலகம்
இவண் முற்றும்.

——:——

हृदयम्

अथ हृदयम्—

अस्य श्रीचण्डिकाहृदयस्तोत्रमहामन्त्रस्य, मार्कण्डेय ऋषिः। अनुष्टुप् छन्दः। श्रीचण्डिका देवता। ह्रां बीजम्। ह्रीं शक्तिः। ह्रूं कीलकम्। श्रीचण्डिकाप्रसादसिद्ध्यर्थे जपे विनियोगः। ह्रामित्यादिभिः षडङ्गन्यासः।

ஹ்ருதயம்

அத ஹ்ருதயம் :—

இந்த ஹ்ருதயஸ்தோத்ரமஹாமந்திரத்திற்கு மார்கண்டேயரே ரிஷியாவர். அநுஷ்டுப்பே சந்தஸாகும்; ஸ்ரீசண்டிகையே தேவதை. ஹ்ராம் என்பது பீஜம். ஹ்ரீம் என்பது சக்தி. ஹ்ரூம் என்பது கீலகம், ஸ்ரீ சண்டிகையினுடைய அநுக்ரஹத்தின் பொருட்டு ஜபத்தில் விநியோகமாகும். ஹராம் ஹ்ரீம் என்பவைகளால் ஷடங்க(ஆறு) ந்யாஸங்கள் செய்யவேண்டும்.

ध्यानम्—

सर्वमङ्गलमाङ्गल्ये शिवे सर्वार्थसाधिके।
शरण्ये त्र्यम्बके गौरि नारायणि नमोऽस्तु ते॥

தியாகம் :—

எல்லாமங்களுக்கும் மங்களவடிவாயிருப்பவளே! கல்யாணவடிவே! எல்லாக் காரியங்களையும் ஸாதித்துக்

கொடுப்பவளே! அடைக்கலம் புகுந்தவர்களை ஆதரிப் பவளே! மூன்று கண்களைக் கொண்டவளே! வெண் ணிறம் கொண்டவளே! நாராயணனுடைய ஸஹோ தரியே! உனக்கு நமஸ்காரம் இருக்கட்டும்.

ब्रह्मोवाच—

अथातः संवक्ष्यामि विस्तरेण यथातथम् ।
चण्डिकाहृदयं गुह्यं शृणुष्वैकाग्रमानसः ॥

ப்ரஹ்மன் சொன்னர்:—

பிறகு நீ கேட்கின்ற காரணத்தினல் ரஹஸ்யமா யுள்ள சண்டிகையினுடைய ஹ்ருதயஸ்தோத்தி ரத்தை உள்ளது உள்ளவாறு விஸ்தாரமாகச் சொல்லு கிறேன். நிலைநிறுத்திய மனதோடுகூட கேழ்ப்பாயாக.

ऐं ह्रीं क्लीं, ह्रां ह्रीं ह्रूं । जय जय चामुण्डे, चण्डिके, त्रिदशमणिमकुटकोटीसंघट्टितचरणारविन्दे, गायत्रि, सावित्रि, सरस्वति, महाहिकृताभरणे, भैरवरूपधारिणि, प्रकटित-दंष्ट्रोग्रवदने, घोरे, घोरानने ज्वलज्ज्वलज्ज्वालासहस्रपरिवृते, महाट्टहासबधिरीकृतदिगन्तरे, सर्वायुधपरिपूर्णे, कपालहस्ते, गजाजिनोत्तरीये, भूतवेतालवृन्दपरिवृते, प्रकम्पितचराचरे, मधुकैटभमहिषासुरधूम्रलोचनचण्डमुण्डरक्तबीजशुम्भनिशु-म्भादिदैत्यनिष्कण्टके, कालरात्रि, महामाये, शिवे, नित्ये, इन्द्राग्नियमनिर्ऋतिवरुणवायुसोमेशानप्रधानशक्तिभूते, ब्रह्म-विष्णुशिवस्तुते, त्रिभुवनाधाराधारे, वामे, ज्येष्ठे, वरदे,

रौद्रि, अम्बिके, ब्राह्मी-माहेश्वरी-कौमारी-वैष्णवी-शङ्खिनी-वाराहीन्द्राणी-चामुण्डा - शिवदूती - महाकाली - महालक्ष्मी-महासरस्वतीस्वरूपे, नादमध्यस्थिते, महोग्रविषोरगफणामणि-घटितमकुटकटकादिरत्नमहाज्वालामयपादबाहुकण्ठोत्तमाङ्गे, मालाकुले, महामहिषोपरि गन्धर्वविद्याधराराधिते, नवरत्न-निधिकोशे तत्त्वस्वरूपे, वाक्पाणिपादपायूपस्थात्मिके, शब्द-स्पर्शरूपरसगन्धादिस्वरूपे, त्वक्चक्षुश्श्रोत्रजिह्वाघ्राणमहाबुद्धि-स्थिते, ॐ ऐंकारह्रींकारक्लींकारहस्ते, आं क्रों आग्नेयनयन-पात्रे, प्रवेशय प्रवेशय, द्रां शोषय शोषय, द्रीं सुकुमारय सुकुमारय, श्रीं सर्वं प्रवेशय प्रवेशय, त्रैलोक्यवरवर्णिनि, समस्तचित्तं वशीकुरु वशीकुरु, मम शत्रून् शीघ्रं मारय मारय, जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्थास्वस्मान् राजचोराग्निजलवात-विषभूतशत्रुमृत्युज्वरादिस्फोटकादिनानारोगेभ्यो नानापवा-देभ्यः परकर्ममन्त्रतन्त्रयन्त्रौषधशल्यशून्यक्षुद्रेभ्यः सम्यङ् रक्ष रक्ष।

ॐ ऐं ह्रां ह्रीं ह्रूं ह्रैं ह्रौं ह्रः, स्फ्रां स्फ्रीं स्फ्रूं स्फ्रैं स्फ्रौं स्फ्रः, मम सर्वकार्याणि साधय साधय हुं फट् स्वाहा—
(इदमेकविंशतिवारं जपेत्)

ஐம், ஹ்ரீம், க்லீம் ; ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம் ஓ சாமுண்டே! சண்டிகே! சிறப்புடன் விளங்குவா யாக. சிறப்புடன் விளங்குவாயாக. ரத்நகிரீடங்க-

ளால் சிறந்து விளங்குகின்ற தேவர்களுடைய தலைமுடிகளையுடைய தாமரை போன்ற சரணங்களை யுடையவளே! காயத்ரியின் வடிவம் கொண்ட வளே! ஸாவித்ரியின் வடிவம் கொண்டவளே! ஸரஸ் வதியின் வடிவம் கொண்டவளே! ஸர்பங்களை ஆப ரணமாயணிந்தவளே! பைரவவடிவம் தாங்கியவளே! கோரைப் பற்களால் விளங்கும் வதநத்தையுடைய வளே! பயங்கரி! பயங்கரமான முகத்தையுடைய வளே! ஜ்வலித்துக் கொண்டிருக்கிற அக்நி ஜ்வாலைக ளால் சூழப்பட்டவளே! பெரிய அட்டஹாஸத்தினுல் திக்குகளை நடுங்கச் செய்பவளே! எல்லா ஆயுதங்களும் நிறைந்து விளங்குபவளே! கபாலத்தைக் (மண்டை யோடு) கையில் கொண்டவளே! யானைத் தோலைத் தரித்தவளே! பூதங்களாலும் வேதாளங்களாலும் சூழப்பட்டவளே! சராசரங்களை நடுங்கச் செய்ப வளே! மது, கைடபன், மஹிஷாஸுரன், தூம்ரலோச னன், சண்டன், முண்டன், ரக்தபீஜன், சும்பன், நிசும் பன் முதலிய அஸுரர்களை அழித்தவளே! காலராத்ரி வடிவம் கொண்டவளே! மஹாமாயை வடிவம் கொண் டவளே! மங்களவடிவே! அழிவற்றவளே! இந்தரன், அக்நி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, ஸோமன், ஈசானன் முதலியவர்களுடைய முக்ய சக்தியாக விளங்குபவளே! ப்ரஹ்மன், விஷ்ணு, சிவன் இவர்க ளால் துதிக்கப் பெற்றவளே! மூன்று உலகங்களுக் கும் ஆதாரமாயிருக்கிற ஆதிசேஷனுக்கும் ஆதாரமா யிருப்பவளே! வாமா, ஜ்யேஷ்டா, வரதா, ரௌத்ரி, அம்பிகா, ப்ராஹ்மீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ் ணவீ, சங்கிநீ, வாராஹீ, இந்த்ராணீ, சாமுண்டா, சிவதூதீ, மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வதீ

முதலியவர்களுடைய வடிவாய் விளங்குபவளே ! நாதத்தின் நடுவேயிருப்பவளே ! மிகவும் கொடியதான விஷத்தைக்கொண்ட ஸர்பத்தினுடைய தலையில் விளங்கும் நாகரத்நக் கற்கள் இழைக்கப்பட்ட கிரீடம், தோள்வளையம் முதலியவைகளால் மிகவும் பிரகாசிக்கின்ற சரணங்களோடும், கைகளோடும், கழுத்தோடும் விளங்குகின்ற சரீரத்தையுடையவளே ! மாலைகளால் விளங்குபவளே ! மஹத்தான மஹிஷத்தின்மேல் கந்தர்வவித்யாதரர்களால் ஆராதிக்கப்பட்டவளே ! நவரத்ந நிதிகளுக்கும் இருப்பிடமாக விளங்குபவளே ! தத்வவடிவே ! கர்மேந்திரிய வடிவே ! சப்தம், ஸ்பர்சம், ரூபம், ரஸம், கந்தம், முதலிய வடிவாய் விளங்குபவளே! தோல், கண், செவி, நா, மூக்கு, மஹா புத்தி இவைகளில் நிலைத்திருப்பவளே ! ஓம் ஐம்கார ஹ்ரீங்காரக்லீங்காரங்களோடு கூடிய திருக்கரங்களையுடையவளே ! ஆம் க்ரோம், அக்நிமயமான கண்களையுடையவளே. ப்ரவேசய, ப்ரவேசய, த்ராம் சோஷய, சோஷய, த்ரீம் ஸுகுமாரய, ஸுகுமாரய, ஸ்ரீம் ஸர்வம் ப்ரவேசய, ப்ரவேசய, மூவுலகிலும் சிறந்து விளங்குபவளே ! எல்லோருடைய சித்தத்தையும் வசீகுரு, வசீகுரு. என்னுடைய பகைவர்களை விரைவில் மாரய, மாரய, விழிப்பிலும், ஸ்வப்நத்திலும், உறக்கத்திலும் எல்லா ஸமயங்களிலும் எங்களை அரசன், திருடன், நெருப்பு, ஜலம், காற்று, விஷம், பூதங்கள், பகைவர்கள், மரணம், ஜ்வரம், முதலியவைகளிலிருந்தும், ஸ்போடகம் முதலிய பலவித ரோகங்களிலிருந்தும், பலவித ஆபிசாரங்களிலிருந்தும், பலவித அபவாதங்களிலிருந்தும், வேறான மந்த்ரம், யந்த்ரம், தந்த்ரம், ஔஷதம், ஏவல், சூந்யம், க்ஷுத்ரம் (பில்லி)

முதலியவைகளிலிருந்தும் நன்கு காப்பாற்றுவாயாக, காப்பாற்றுவாயாக.

ஓம் ஐம் ஹ்ராம், ஹ்ரீம், ஹ்ரூம் ஹ்ரைம், ஹ்ரௌம், ஹ்ர: ஸ்ப்ராம், ஸ்ப்ரீம், ஸ்ப்ரூம், ஸ்ப்ரைம், ஸ்ப்ரௌம் ஸ்ப்ர: மம ஸர்வகார்யாணி ஸாதய ஸாதய; ஹூம் பட் ஸ்வாஹா. (இதை இருபத்தொருதடவை ஜபம் செய்யவேண்டும்.)

राजद्वारे श्मशाने वा विवादे शत्रुसंकटे ।
भूताग्निचोरमध्यस्थे मयि कार्याणि साधय-स्वाहा ॥

அரச ஸபையிலும், ச்மசானத்திலும், விவாதத்திலும், பகைவர்களுடைய உபத்ரவத்திலும், பூதங்கள், அக்னி, திருடர்கள், இவர்களுடைய நடுவிலும் (நான் இருக்கும்படி நேரிட்டால்) என்னுடைய காரியங்களை ஸாதித்துக் கொடுப்பாயாக.

चण्डिकाहृदयं गुह्यं त्रिसंध्यं यः पठेन्नरः ।
सर्वकामप्रदं पुंसां भुक्तिं मुक्तिं प्रयच्छति ॥

इति हृदयम् ॥ ६ ॥

மிகவும் ரஹஸ்யமாயுள்ளதும், மனிதர்களுக்கு ஸகல காமனைகளையும் (விருப்பங்கள்) கொடுக்கவல்லதான இந்த சண்டிகாஹ்ருதயத்தை எந்த மனிதன் படிக்கிறானோ, அவனுக்கு இவ்வுலகில் போகத்தையும் அவ்வுலகில் முக்தியையும் (தேவீ) கொடுக்கிறாள்.

இவ்விதம் ஹ்ருதயம் முற்றும்.

दलम्

अथ दलम्—

ॐ नमो भगवति जय जय चामुण्डे, चण्डि, चण्डेश्वरि, चण्डायुधे, चण्डरूपधारिणि, ताण्डवप्रिये, कुण्डलीभूतदिङ्नागमण्डलीकृतगण्डस्थले, समस्तजगदण्डसंहारकारिणि, परे, अनन्तानन्तरूपे, शिवे, नरशिरोमालालंकृतवक्षःस्थले, महाकपालभालोज्ज्वलन्मणिमकुटचूडावतंसचन्द्रखण्डे, महाभीषणे, देवि, महामाये, षोडशकलापरिवृतोल्लासिते, महादेवासुरसमरनिहतरुधिरार्द्रीकृतालम्बिततनुकमलोद्भासितकरे, संपूर्णरुधिरशोभितमहाकपोलवक्त्रहासिनि, दृढतरनिबद्ध्यमानरोमराजीसहितहेमकाञ्चीदामोज्ज्वलितवसनारुणीभूतनूपुरप्रज्वलितमहीमण्डले, महाशंभुरूपे, महाव्याघ्रचर्माम्बरधरे, महासर्पयज्ञोपवीतिनि, महाश्मशानभस्मोद्धूलितसर्वाङ्गगात्रे, कालि, कङ्कालि, महाकालि, कालाग्निरुद्रकालि, कालसंकर्षिणि, कालनाशिनि, कालरात्रिनभोभक्षिणि, नानाभूतप्रेतपिशाचगणसहस्रसंचारिणि, नानाव्याधिप्रशमनि, सर्वदुःखशमनि, सर्वदारिद्र्यनाशिनि, घगघगेत्यास्वादितमांसखण्डे, गात्रविक्षेपकलकलायमानकङ्कालधारिणि, मधुमांसरुधिरावसिक्तविलासिनि, सकलसुरासुर-

गन्धर्वयक्षविद्याधरकिंनरकिंपुरुषादिभिः स्तूयमानचरिते, सर्वमन्त्राधिकारिणि, सर्वशक्तिप्रधाने, सकललोकपावनि, सकलदुरितप्रक्षालिनि, सकललोकैकजननि, ब्राह्मि, माहेश्वरि, कौमरि, वैष्णवि, शङ्खिनि, वाराहि, इन्द्राणि, चामुण्डे, महालक्ष्मि, महाविद्ये, योगेश्वरि, योगिनि, चण्डिके, माये, विश्वरूपिणि, सर्वाभरणभूषिते, अतलवितलसुतलरसातलतलातलमहातलपातालादिभूर्भुवःसुवर्महर्जनस्तपःसत्याख्यचतुर्दशभुवनैकनाथे, महाक्रूरे, प्रसन्नरूपधारिणि, ॐ नमः पितामहाय, ॐ नमो नारायणाय, ॐ नमः शिवायेति सकललोकजप्यमानब्रह्मविष्णुमहेश्वररूपिणि, दण्डकमण्डलुधारिणि, सावित्रि, सर्वमङ्गलप्रदे, सरस्वतिण, पद्मालये, पार्वति, सकलजगत्स्वरूपिणि, शङ्खचक्रगदापद्मधारिणि, परशुशूलपिनाकटङ्कधारिणि, शरचापशूलकरवालखड्गडमरुकाङ्कुशगदापरशुतोमरभिण्डिपालभुसुण्डीमुद्गरमुसलपरिघायुधदोर्दण्डसहस्रे, चन्द्रार्कवह्निनयने, इन्द्राग्नियमनिर्ऋतिवरुणवायुसोमेशानप्रधानशक्तिहेतुभूते, सप्तद्वीपसमुद्रोपर्युपरिव्याप्ते, ईश्वरि, महाप्रपञ्चमालालंकृतमेदिनीनाथे, महाप्रभावे, महाकैलासपर्वतोद्यानवनविहारिणि, नदीतीर्थदेवतायतनालंकृते, वसिष्ठवामदेवादिमहामुनिगणवन्द्यमानचरणारविन्दे, द्विचत्वारिंशद्वर्णमाहात्म्ये, पर्याप्तवेदवेदाङ्गाद्यनेकशास्त्राधारभूते, शब्दब्रह्ममयि, लिपिदेवते,

मातृकादेवि, चिरं मां रक्ष रक्ष, मम शत्रून् हुंकारेण नाशय नाशय, भूतप्रेतपिशाचादीनुच्चाटयोच्चाटय, समस्तग्रहान् वशीकुरु वशीकुरु, मोहय मोहय, स्तम्भय स्तम्भय, मोदय मोदय, उन्मादयोन्मादय, विध्वंसय विध्वंसय, द्रावय द्रावय, श्रावय श्रावय, स्तोभय स्तोभय, संक्रामय संक्रामय, सकलारातीन् मूर्ध्नि स्फोटय स्फोटय, मम शत्रून् शीघ्रं मारय मारय, जाग्रत्स्वप्नसुषुप्त्यवस्थास्वस्मान् राजचोराग्निजलवातविषभूतशत्रुमृत्युज्वरादिनानारोगेभ्यो नानाभिचारेभ्यो नानापवादेभ्यः परकर्ममन्त्रतन्त्रयन्त्रौषधशल्यशून्यक्षुद्रेभ्यः सम्यङ्मां रक्ष रक्ष। ॐ श्रीं ह्रीं क्ष्मौं मम शत्रुसर्वप्राणसंहारकारिणि हुं फट् स्वाहा।

इति दलम् ॥ ७ ॥

தளம்

அத தளம் :—

ஓம் ஓ அன்னையே நமஸ்காரம். ஓ சாமுண்டே! சிறப்புடன் விவங்குவாயாக! சண்டிகே! சண்டேச்வரி! கொடியதான ஆயுதங்களைத் தாங்கியவளே! கோப வடிவம் கொண்டவளே! தாண்டவத்தில் பிரியமுள்ளவளே! கர்ணாபரணங்களாகச் செய்யப்பட்ட திங்நாகங்களால் சூழப்பட்ட கண்டஸ்தலத்தையுடையவளே! ஸமஸ்தசராசரங்களையும் ஸம்ஹாரம் செய்பவளே! சிறப்புள்ளவளே! கணக்கற்ற பல வடிவங்கள் கொண்டவளே! மங்களவடிவே! மண்டையோடுகளாலான மாலைகளினால் அலங்கரிக்கப்பட்ட மார்பையுடையவே! பெரிய கபாலமாலையோடு விளங்குகின்ற ரத்நகிரீடத்தில் அலங்காரமாகச்சூடிக்கொண்ட பாதிமதியையுடையவே! பயங்கர வடியவே! பிரகாசிப்பவளே! மஹாமாயாவடிவே! பதினாறுகலைகளாலும் சூழப்பட்டு பிரகாசத்தொடு விளங்குபவளே! மஹாதேவனால் போரில் வீழ்ந்தப்பட்ட அஸுரர்களுடைய ருதிரத்தினால் நனைந்த சரீரமென்னும் தாமரையினால் விளங்கும் கைகளையுடையவளே! உதிரம் நிறைந்து விளங்கும் கபோல வக்த்ரஹாஸிநி! நன்கு பிணைக்கப்பட்ட உரோம ஸமூஹங்களோடு கூடிய தங்கமயமான ஒட்டியாணத்தோடும், மாலைகளோடும், விளங்குகிற சிவந்த வஸ்த்ரத்தையணிந்து கொண்டு காற்சிலம்புகளால் விளங்குகிற மஹீமண்டலத்தையுடையவளே! மஹாசம்புவின் வடிவே! பெரிய புலித்

தோலே வஸ்த்ரமாயணிந்தவளே! பெரிய ஸர்பங்களே யஜ்ஞோப விதமாகத் தரித்தவளே! மஹாச்மசாநத்தி லுள்ளபஸ்மங்களே(சாம்பல்)பூசிக்கொண்ட சரீரத்தை யுடையவளே! காளி! கங்காளி! மஹாகாளி! காலாக்நி-ருத்ரகாளி! கால ஸங்கர்ஷணி! கால நாசிநி! நபோ பக்ஷிணி! பலவித பூதப்ரேதபிசாசங்களுடைய கூட்டங்களோடு ஸஞ்சாரம் செய்பவளே! பல வியாதி களேயும் சமநம் செய்பவளே! எல்லா துக்கங்களேயும் சமநம் செய்பவளே! எல்லா விதமான வறுமைகளேயும் சமநம் செய்பவளே! தகதக என விளங்கும் மாம்ஸ கண்டத்தை யுடையவளே! சரீரவிக்ஷேபத்திஞல் கல கல என சப்திக்கின்ற கங்காலவடிவத்தைத் தரித்த வளே! மது, மாம்ஸம், உதிரம் இவைகளால் நனேக்கப் பட்ட விலாஸத்தோடு கூடியவளே! ஸகல விதமான தேவர், அஸுரர், கந்தர்வர், யக்ஷர், வித்யாதரர், கிந்நரர், கிம்புருஷர் முதலியவர்களால் துதிக்கப்பட்ட சரிதத்தை யுடையவளே! எல்லா மந்த்ரங்களுக்கும் தலேவியாயிருப்பவளே! எல்லா சக்திகளுக்கும் முக்யமா யிருப்பவளே! எல்லா உலகங்களேயும்பரிசுத்தம் செய்ப வளே! ஸகல பாபங்களேயும் அகற்றுபவளே! எல்லா உலகங்களேயும் படைப்பவளே! ப்ராஹ்மி,! மாஹேச் வரி! கௌமாரி! வைஷ்ணவி! சங்கிநி! வாராஹி! இந்த் ராணி! சாமுண்டே! மஹாலக்ஷ்மி! மஹாவித்யே! யோகேச்வரி! யோகிநி! சண்டிகே! மாயே! விச்வ (உலகம்) வடிவே! எல்லா விதமான ஆபரணங்களேயு மணிந்தவளே! அதல - விதல - ஸுதல - ரஸாதல - தலாதல - மஹாதல - பாதாளம் முதல், பூர் - புவர். ஸுவர் - மஹர், ஜநஸ்-தப: - ஸத்ய என்ற பதிஞன்கு புவநங்களுக்கும் (உலகங்கள்) தலேவியாய் விளங்கு

பவளே! பயங்கர வடிவம் கொண்டவளே! அநுக்ரஹ வடிவம் கொண்டவளே! ஓம் நம: பிதாமஹாய ஓம் நமோ நாராயணய! ஓம் நம: சிவாய! என்று எல்லா உலகங்களாலும் ஜபம் செய்யப்படுகிற ப்ரஹ்ம - விஷ்ணு - மஹேச்வர வடிவாக விளங்குபவளே! தண்டத்தையும், கமண்டலுவையும் தரித்தவளே! ஸாவித்ரி! எல்லா மங்களங்களையும் கொடுப்பவளே! ஸரஸ்வதி! பத்மாலயே! பார்வதி! ஸகல உலக வடிவாய் விளங்குபவளே! சங்கம், சக்ரம், கதை, பத்மம், இவைகளைத் தரிப்பவளே! பரசு, (கோடாலி) சூலம்,பிநாகம், டங்கம் முதலிய ஆயுதங்களைத் தாங்கியவளே! சரம், (அம்பு) சாபம், (வில்) சூலம், கரவாலம் (பிச்சுவா) கட்கம் (கத்தி) டமருகம், அங்குசம் (மாவட்டி) கதை, பரசு, தோமரம், பிண்டிபாலம், புஸுண்டீ, முத்கரம், முஸலம், (உலக்கை)பரிகம், முதலிய ஆயுதங்களைத்தரித்துக்கொண்டிருக்கின்ற அநேகம் கைகளையுடையவளே! இந்த்ரன், அக்நி, யமன், நிர்ருதி, வருணன், வாயு, குபேரன், ஈசானன் இவர்களுடைய ப்ரதானசக்திக்குக் காரணமா யிருப்பவளே! ஏழு த்வீபங்களோடு கூடிய ஸமுத்ரத்திற்கு மேலும் வியாபித்தவளே! ஈச்வரி! மஹாப்ரபஞ்சமென்னும் மாலையினால் அலங்கரிக்கப்பட்ட மேதினிக்கு(பூமி)தலைவியே! மஹாமஹிமையுடையவளே! மஹாகைலாஸபர்வதத்திலுள்ள உத்யாநவனத்தில் விளையாடுபவளே! நதிகளாலும், தீர்த்தங்களாலும், ஆலயங்களாலும் அலங்கரிக்கப்பட்டவளே! வஸிஷ்டர், வாமதேவர் முதலிய மஹா முநிகணங்களால் வணங்கப்பட்ட சரணாரவிந்தங்களையுடையவளே! நாற்பத்திரண்டு அக்ஷரங்களுடைய மஹிமையுடன் விளங்குபவளே! வேதம்,

வேதாங்கம் முதலிய அநேக சாஸ்த்ரங்களுடைய நிறைவுக்கு ஆதாரமா யிருப்பவளே! சப்தப்ரஹ்ம வடிவே! அக்ஷரவடிவே! மாத்ருகாதேவி! என்னை ரக்ஷிப்பாயாக. ரக்ஷிப்பாயாக. என்னுடைய சத்துருக்களை ஹுங்காரத்தினுல் நாசம் செய்வாயாக. பூதப்ரேத பிசாசங்களை உச்சாடநம் செய்வாயாக. எல்லா க்ரஹங்களையும் வச்யம் செய்வாயாக. மோஹிக்கச்செய்வாயாக. ஸ்தம்பநம் செய்வாயாக, ஸ்தம்பய ஸ்தம்பய மோதய மோதய, உந்மாதய, உந்மாதய, வித்வம்ஸய வித்வம்ஸய, த்ராவய, த்ராவய, ச்ராவய, ச்ராவய, ஸ்தோபய, ஸ்தோபய, ஸங்க்ராமய ஸங்க்ராமய, ஸகலசத்ருக்களையும் சிரஸில் ஸ்போடய ஸ்போடய, என்னுடைய பகைவர்களை மாரய மாரய, விழிப்பிலும், ஸ்வபநத்திலும், உறக்கத்திலும் எங்களை அரசன், திருடன் நெருப்பு, ஜலம், காற்று, விஷம், பூதங்கள், பகைவர்கள், காலன், ஜ்வரங்கள் முதலான பல ரோகங்களிலிருந்தும், பலவித ஆபிசாரங்களிலிருந்தும், பலவித அபவாதங்களிலிருந்தும், பிறருடைய செய்கைகளினுல் ஏவப்பட்ட மந்த்ரம், தந்த்ரம், யந்த்ரம், மருந்து, சல்யம், சூந்யம் முதலிய க்ஷுத்ரங்களிலிருந்தும் நன்கு ரக்ஷிப்பாயாக. ரக்ஷிப்பாயாக. ஓம் ஸ்ரீம் ஹ்ரீம் க்ஷ்மௌம் மம சத்ருஸர்வப்ராணஸம்ஹாரகாரிணி ஹும் பட் ஸ்வாஹா.

இவ்விதம் தளம் முற்றும்.

——:——

ध्यानम्

अथ ध्यानम्—

मातर्मे मधुकैटभघ्नि महिषप्राणापहारोद्यमे
हेलानिर्जितधूम्रलोचनवधे हे चण्डमुण्डार्दिनि ।
निःशेषीकृतरक्तबीजदनुजे नित्ये निशुम्भापहे
शुम्भध्वंसिनि संहराशु दुरितं दुर्गे नमस्ते ऽम्बिके ॥

த்யாநம்

அத த்யாநம் :—

மதுகைடபர்களை அழித்தவளும், மஹிஷாஸுர னுடைய ப்ராணனை அபஹரிப்பதில் முயற்சியுள்ள வளும், தூம்ரலோசனர்களை விளையாட்டாகவே (அநாயாஸமாக) ஜயித்தவளும், சண்டமுண்டர்களை அழித்தவளும், ரக்தபீஜன் முதலியவர்களை மிச்சமில் லாமல் செய்தவளும், நிசும்பனை யழித்தவளும், சும்பனை தவிடுபொடியாகச் செய்தவளும், அழிவற்றவளுமான ஓ அன்னையே! துர்கே! அம்பிகே! என்னுடைய பாபத்தை விரைவில் நாசம் செய்வாயாக. உனக்கு நமஸ்காரம். (க)

भुजाष्टयुक्तां महिषस्य मर्दिनीं
सशङ्खचक्रां शरशूलधारिणीम् ।
तां दिव्ययोगीं सहजातवेदसीं
दुर्गां सदा ऽहं शरणं प्रपद्ये ॥ २ ॥

எட்டுக் கைகளுடன் கூடியவளும், மஹிஷனை மர்தநம் செய்தவளும், சங்கம், சக்ரம், இவைகளோடு சரம், சூலம் முதலியவைகளைத் தரித்தவளும், திவ்ய யோகியாயும், ஜாதவேதஸோடு கூடியவளுமான அந்த ப்ரஸித்தமான துர்காதேவியை நான் எப்பொழுதும் சரணமடைகிறேன். (உ)

महिषमस्तकनृत्तविनोदन-
स्फुटरणन्मणिनूपुरमेखला ।
जननरक्षणमोक्षविधायिनी
जयतु शुम्भनिशुम्भनिषूदिनी ॥ ३ ॥

மஹிஷாஸுரனுடைய மத்தகத்தின்மீது நின்று கொண்டு விநோதமாக ந்ருத்தம் செய்வதாலுண்டான வியக்தமாக சப்திக்கின்ற மணிகளோடு கூடிய காற் சதங்கை, ஒட்டியாணம் இவைகளோடு கூடியவளும், சும்பநிசும்பர்களை வதம் செய்தவளும், ஆக்கல், நிலை நிறுத்தல், அழித்தல் இவைகளைச் செய்பவளுமான அன்னையாம் துர்கை சிறப்புடன் விளங்குகிருள். (ங)

ब्रह्माणी कमलेन्दुसौम्यवदना माहेश्वरी लीलया
कौमारी रिपुदर्पनाशनकरी चक्रायुधा वैष्णवी ।
वाराही घनघोरघर्घरमुखी दंष्ट्री च वज्रायुधा
चामुण्डा गणनाथरुद्रसहिता रक्षन्तु मां मातरः ॥ ४ ॥

தாமரையைப் போன்றதும், சந்த்ரனைப் போன்றதுமான அழகிய முகத்தையுடைய, ப்ரஹ்மாணியும், விளையாட்டோடு கூடிய மாஹேச்வரியும், பகைவர்களுடைய கர்வத்தை நாசம் செய்கிற கௌமாரியும், சக்ராயுதத்

தைத் தாங்கிய **வைஷ்ணவியும்,** நெருக்கமாயும், பயங்கர மாயும், கூர்மையாயுமுள்ள கோரைப்பற்களோடு கூடிய முகத்தையுடைய **வாராஹியும்,** வஜ்ராயுதத்தை யுடைய **நாரஸிம்ஹியும்,** ருத்ரகணங்களோடு கூடிய **சமுண்டா** தேவியுமான ஸப்தமாத்ருகா தேவிகளும் என்னை ரக்ஷிப்பதாக. (௪)

उद्धतौ मधुकैटभौ महिषासुरं च निहत्य तं
धूम्रलोचनचण्डमुण्डरक्तबीजसुवधाद्दते ।
दुष्टशुम्भनिशुम्भमर्दिनि नन्दितामरवन्दिते
विष्टपत्रयतुष्टिकारिणि भद्रकालि नमोऽस्तु ते ॥ ५ ॥

மிகவும் கர்வத்தையடைந்தவர்களான மதுகைடபர் களையும், பிரஸித்திபெற்ற மஹிஷாஸுரனையும் நாசம் செய்து, தூம்ரலோசனன், சண்டன், முண்டன், ரக்த பீஜன், இவர்களையும் நாசம் செய்தவளே! துஷ்டர்க ளான சும்பநிசும்பர்களை அழித்தவளே! ஆநந்த மடைந்த அமரர்களால் வணங்கப்பட்டவளே! மூன்று உலகங்களுக்கும் ஸந்தோஷத்தைச் செய்பவளே! ஓ பத்ரகாளி! உனக்கு நமஸ்காரம். (௫)

लक्ष्मीप्रदानसमये नवविद्रुमाभां
विद्याप्रदानसमये शरदिन्दुशुभ्राम् ।
विद्वेषिवर्गविजयेऽपि तमालनीलां
देवीं त्रिलोकजननीं शरणं प्रपद्ये ॥ ६ ॥

(பக்தர்களுக்கு) ஐச்வர்யத்தைக் கொடுக்கும் ஸமயத்தில், புதிய பவழம் போன்ற சிவந்த காந்தியை யுடையவளும், கல்வியைக் கொடுக்கும் ஸமயத்தில் சரத்காலத்திலே திகழ்கின்ற சந்த்ரனைப்போன்ற

வெண்ணிறத்தை யுடையவளும், பகைவர்களுடைய ஸமூஹத்திற்கு விஜயம் செய்யும்பொழுது கருமை நிறத்தைக் கொண்டவளும், மூன்று உலகங்களையு முண்டுபண்ணுபவளுமான அன்னையாம் துர்கா தேவியை சரணமடைகிறேன். (சு)

चन्द्रहासं त्रिशूलं च शङ्खचक्रगदास्तथा ।
धनुर्बाणं च मुसलं परिघं मुष्टिमेव च ॥ ७ ॥

கத்தியையும், த்ரிசூலத்தையும், அவ்விதமே சங்கம், சக்ரம், கதை இவைகளையும், தநுஸ், பாணம் இவைகளையும், முஸலத்தையும், பரிகையையும், முஷ்டியையும்; (எ)

पाशाङ्कुशेषुबाणं च मुद्गरं परशुं तथा ।
वज्रायुधं च कुन्तं च खट्वाङ्गं च हलायुधम् ॥ ८ ॥

பாசம், அங்குசம், அம்பு இவைகளையும், முத்கரத்தையும், பரசுவையும், அவ்விதமே வஜ்ராயுதத்தையும், குந்தாயுதத்தையும், கட்வாங்கத்தையும், ஹலாயுதத்தையும்; (அ)

भ्रमणं क्षुरिकां द्रोण तोमरं पानपात्रकम् ।
प्रासपट्टसनागाश्च भुसुण्डीं वज्रदण्डके ॥ ९ ॥

ப்ரமணத்தையும், க்ஷுரிகையையும், த்ரோணத்தையும், தோமரத்தையும், பாநபாத்ரத்தையும், ப்ராஸம், பட்டஸம், நாகம் இவைகளையும், புஸுண்டியையும், வஜ்ரத்தையும், தண்டத்தையும்; (கூ)

दर्पणं रुद्रवीणां च बिभ्रद्द्वात्रिंशदोस्तलाम् ।
एवं स्थितां महाकालीं भजे महिषमर्दिनीम् ॥ १० ॥

கண்ணுடியையும், ருத்ரவீணையையும், முப்பத்திரண்டு கைகளிலும் தரித்துக்கொண்டு இவ்விதம் காக்ஷியளிக்கும் மஹிஷனை மர்தநம் செய்த மஹாகாளியை நான் ஸேவிக்கிறேன். (௧௦)

पद्मरागप्रभां देवीं बालार्ककिरणारुणाम् ।
दशपादाम्बुजां देवीं दशमण्डलपूरिताम् ॥ ११ ॥
दशाननां त्रिनेत्रां च समुन्नतपयोधराम् ।
रक्तवस्त्रपरीधानां रक्तमाल्यानुलेपनाम् ॥ १२ ॥
एवं ध्यायेन्महाज्वालां महिषासुरमर्दिनीम् ।
महासिंहादिवाहां तां सर्वालंकारभूषिताम् ॥ १३ ॥

பவழத்தைப்போன்ற காந்தியையுடையவளும், பாலஸூர்யனுடைய கிரணங்களைப்போல் செந்நிறமுள்ளவளும், தாமரையைப்போன்ற பத்துக் கால்களையுடையவளும், பத்து திக்குகளில் வியாபித்தவளும், பத்துமுகங்களையுடையவளும், மூன்றுகண்களையுடையவளும், நன்கு உயர்ந்த கொங்கைகளையுடையவளும், செந்நிறச் சேலையை யணிந்தவளும், சிவந்த மாலைகளை யணிந்தவளும், பெரிய ஜ்வாலை போன்றவளும், மஹிஷாஸுரனை நாசம் செய்தவளும், பெரிய ஸிம்ஹத்தின் மீதமர்ந்திருப்பவளும், பலவித அலங்காரங்களை யணிந்தவளுமான அச்சிறப்பு வாய்ந்த தேவியை இவ்விதம் த்யாநம் செய்யவேண்டும். (௧௧—௧௩)

मातृकाष्टकमध्यस्थामष्टभैरवपूजिताम् ।
चिन्तामणिं महादुर्गां सर्वशत्रुविनाशिनीम् ॥ १४ ॥
ब्रह्माण्डमध्यजिह्वां तां महावक्त्रकरालिनीम् ।
शतहस्तशतां देवीं नानाशस्त्रास्त्रधारिणीम् ॥ १५ ॥

विचित्रायुधसंनद्धां विश्वरूपां शिवात्मिकाम् ।
संपूर्णयौवनां लक्ष्मीं कालिकां कमलाननाम् ॥ १६ ॥
दानवान्तकरीं देवीं रक्तबीजवधोद्यताम् ।
रक्तवस्त्रधरां चण्डीं भीषणामतिभैरवाम् ॥ १७ ॥

அஷ்ட (எட்டு) மாத்ருகைகளின் நடுவில் அமர்ந் திருப்பவளும், அஷ்ட (எட்டு) பைரவர்களால் பூஜிக் கப்பட்டவளும், பகைவர்கள் எல்லோரையும் அழிப்ப வளும், நினைத்ததைக் கொடுக்கவல்ல சிந்தாமணி வடிவாய் விளங்குபவளும், மஹாதுர்கையாகவும், ப்ரஹ்மாண்டத்தையே தனது நாவின் நடுவே நிலைக்கச் செய்பவளும்; பயங்கரமான முகத்தை யுடைய வளும், நூறு கைகளையுடையவளும், அநேக விதங்க ளான சஸ்த்ரம், அஸ்த்ரம் முதலிய ஆயுதங்களைத் தரித்தவளும், விசித்ரங்களான ஆயுதங்களைக்கொண்ட வளும், உலகவடிவங்கொண்டவளும், மங்களவடிவங் கொண்டவளும், யௌவநம் நிரம்பியவளும், தாமரை யைப் போன்ற முகத்தையுடையவளும், காளிகா வடிவம் கொண்டவளும், லக்ஷ்மீவடிவாகவும், அஸுரர்களை அழிப்பவளும், ப்ரகாசமுள்ளவளும், வெகு முயற்சியோடு கூட ரக்தபீஜனை யழித்தவளும், செந்நிறச் சேலையை யணிந்தவளும், மிகவும் பயங்கர மாகவும், கோரவடிவாகவுமுள்ள சண்டிகை வடி வாகவும்; (கசு—கஎ)

महाब्रह्माण्डमालाङ्गीं सर्वाभरणभूषिताम् ।
वेतालवाहनारूढां सिंहव्याघ्रादिवाहनाम् ॥ १८ ॥

பெரிய ப்ரஹ்மாண்டத்தையே மாலையாக அணிந்த வளும், ஸகலவிதமான ஆபரணங்களை யணிந்தவளும்,

வேதாளவாஹநத்தின்மீதமர்ந்தவளும், ஸிம்ஹம், புலி முதலியவைகளை வாஹநமாகக் கொண்டவளும்; (கஅ)

मधुकैटभसंहारीं महिषासुरमर्दिनीम् ।
चण्डमुण्डशिरश्छेत्रीं सर्वदैत्यनिषूदिनीम् ॥ १९ ॥

மதுகைடபர்களை ஸம்ஹாரம் செய்தவளும், மஹிஷாஸுரனை மதநம் செய்தவளும், சண்டமுண்டர்களுடைய சிரஸுகளை சேதநம் செய்தவளும்; எல்லா அஸுரர்களை யழித்தவளும் ; (கக)

रक्तबीजस्य संहर्त्रीमशेषासुरभक्षिणीम् ।
निशुम्भशुम्भमथनीमशेषायुधभीषणाम् ॥ २० ॥

ரக்தபீஜனை ஸம்ஹாரம் செய்தவளும், அஸுரர்கள் எல்லோரையும் புசித்தவளும், நிசும்பனையும், சும்பனையும் அழித்தவளும், எல்லா ஆயுதங்களையும் தரித்துக்கொண்டு பயங்கரமாக விளங்குபவளும் ; (உ0)

नरमांसप्रियां मायां मधुमांसोपहारिणीम् ।
य इदं शृणुयान्नित्यं त्रिसंध्य यः पठेश्वरः ॥ २१ ॥

நாமாம்ஸத்தில் பிரியமுள்ளவளும், மது, மாம்ஸம் இவைகளைப் புசிப்பவளுமான மாயாதேவியை ஸ்மரணம் செய்துகொண்டு எவன் இந்த த்யாநத்தை தினந்தோறும் மூன்று வேளைகளிலும் படிக்கிறானோ! அல்லது பிறரைப் படிக்கச்செய்து கேட்கிறானோ ; (உக)

ऋणकोटिपरीहारं रोगदारिद्र्यनाशनम् ।
सर्वसिद्धिमवाप्नोति सर्वकामांश्च सर्वदा ॥ २२ ॥

அவன் எப்பொழுதும், ருணங்களுடைய (கடன் தொல்லை) பரிஹாரத்தையும், ரோகங்களையுடைய நாசத்தையும், ஸகல ஸித்தியையும், எல்லா விருப்பங்களையும் அடைகிறான். (௨௨)

भक्तानन्दकरीं देवीं परब्रह्मस्वरूपिणीम् ।
इष्टकामेश्वरीं सिद्धां सर्वशक्तिसमन्विताम् ॥ २३ ॥

பக்தர்களுக்கு ஆநந்தத்தைச் செய்கிறவளும். ஒளியின் வடிவாய் திகழ்பவளும், பரப்ரஹ்மவடிவினளும், இஷ்டத்தைக் கொடுப்பவளும், ஸித்தியின் வடிவினளும், எல்லா சக்திகளோடு கூடியவளும்; (௨௩)

अष्टादशसुपीठस्थां त्रिपुरामधिदेवताम् ।
वन्दे विश्वेश्वरीं देवीं भुक्तिमुक्तिफलप्रदाम् ॥ २४ ॥

பதினெட்டு பீடங்களில் அமர்ந்திருப்பவளும்; த்ரிபுராதி தேவதையாகவும், உலகங்களுக்குத் தலைவியாகவும், போகத்தினுடையவும், முக்தியினுடையவும் பலன்களைக் கொடுப்பவளும், ப்ரகாசமுள்ளவளுமான தேவியை நமஸ்காரம் செய்கிறேன். (௨௪)

एतत्सप्तशतीध्यानं सर्वरक्षाकरं नृणाम् ।
रसं रसायनं सिद्धिं गुलिकाञ्जनसिद्धिदम् ॥ २५ ॥

இந்த ஸப்தசதீத்யாநமானது மனிதர்களுக்கு எல்லாவிதத்திலும் ரக்ஷைபோன்றது. ஸித்திகளுக்குள் ஸாரமான ரஸாயநம் போன்றது. குளிகை, மை இவைகளுடைய ஸித்தியைக் கொடுக்கவல்லது. (௨௫)

पादुकासिद्धिदं चैव खड्गसिद्धिकरं तथा ।
सिद्धसारस्वतं सिद्धं मन्त्रसिद्धिकरं तथा ॥ २६ ॥

அவ்விதமே பாதுகாஸித்தியையும், (கமநஸித்தி) கட்க (கத்தி) ஸித்தியையும், அவ்விதமே ஸித்தஸாரஸ்வதஸித்தியையும், மந்த்ர ஸித்தியைச் செய்வதும்; (உசு)

ग्रहपीडोपशमनं सर्वसंकटनाशनम् ।
सौन्दर्यराजसंमानपुत्रपौत्राभिवर्धनम् ॥ २७ ॥
अष्टैश्वर्यसमृद्धित्वं योगित्वं काम्यरूपदम् ।
सदा संनिहितां लक्ष्मीं चण्डिकां मम देवताम् ॥ २८ ॥

க்ரஹபீடைகளுடைய சமநத்தையும், எல்லா ஸங்கடங்களுடைய நாசத்தையும், அழகு, ராஜஸந்மாநம், புத்ரபௌத்ரர்களுடைய வளர்ச்சி; அஷ்டைச்வர்யங்களுடைய நிறைவு, யோகத்தன்மை, இஷ்டப்படி ஸஞ்சாரம் செய்யும் வடிவம், இவைகளைக் கொடுப்பவளும், எப்பொழுதும் ஸமீபத்திலிருப்பவளும், லக்ஷ்மீ வடிவம் கொண்டவளுமான என்னுடைய தேவதையாம் சண்டிகையை; (உஎ, உஅ)

स्मरेन्नित्यं प्रयत्नेन षण्मासात्प्राप्यते पुमान् ।
महाभयापहरणं शत्रुक्षयकरं तथा ॥ २९ ॥
अचलां श्रियवाप्नोति सर्वव्याधिविनाशनम् ।
अन्ते स्वर्गं च मोक्षं च सत्यमेव न संशयः ॥ ३० ॥

इति ध्यानम् ॥ ८ ॥

எப்பொழுதும் முயற்சியோடு கூட ஸ்மரணம் செய்கிறவன் ஆறுமாதத்தில், மஹாபயத்தின் நாசத்தையும், சத்ருக்களுடைய நாசத்தையும், அவ்விதமே, அசைவற்ற (ஸ்திரமான) ஐச்வர்யத்தையும், ஸமஸ்த வியாதிகளுடைய நாசத்தையும், முடிவில் ஸ்வர்கம், மோக்ஷம் இவைகளேயும் நிச்சயமாக அடைவான். ஸந்தேஹமில்லே. (உக, ௩௦)

இவ்விதம் த்யாநம் முற்றும்.

——:——

कवचम् *

मार्कण्डेय उवाच—

यद्गुह्यं परमं लोके सर्वरक्षाकरं नृणाम् ।
यन्न कस्यचिदाख्यातं तन्मे ब्रूहि पितामह ॥ १ ॥

मार्कण्डेयः - மார்கண்டேயர்; **उवाच** - சொன்னார்.
पितामह - ஓ ப்ரஹ்மாவே; **लोके** - உலகத்தில் **यत्** - யாதொன்று; **परमम्** - சிறந்ததாயும்; **गुह्यम्** - ரஹஸ்யமாயும்; **नृणाम्** - மனிதர்களுக்கு; **सर्वरक्षाकरम्**- எல்லாவித ரக்ஷைகளைச் செய்வதாயும்; **कस्यचित्** - ஒருவரிடத்திலும்; **न आख्यातम्** - சொல்லப் படாததுமாயிருக்கிற; **यत्** - யாதொன்று உண்டோ; **तत्** - அதை; **मे** - எனக்கு; **ब्रूहि** - சொல்லுவீராக.

கவசம்

மார்கண்டேயர் சொன்னார்—

ஓ ப்ரஹ்மாவே! உலகில் ரஹஸ்யமாயும், சிறந்ததாயும், மனிதர்களுக்கு ஸகல விதத்திலும் ரக்ஷை

---

* இந்த தேவிகவசத்தைத் தனக்கு உபதேசிக்கும்படி மார்கண்டேயர் ப்ரஹ்மாவைக் கேட்டார். அவரும் உபதேசம் செய்தார். பிறகு மார்கண்டேயர் க்ரோஷ்டுகியாகிய பாகுரிக்கு உபதேசம் செய்தார். அவர் பக்ஷிவடிவம் கொண்ட த்ரோணமுநிவரின்புத்திரர்களுக்கும், அவர்கள்ஜைமிநிமுநிவருக்கும் சொன்னதாக வரலாறு. கவசம்-சட்டை. எவ்விதம் ஜனங்களுக்குச் சட்டையானது ஸகல அவயங்களையும் காப்பாற்றுகின்றதோ, அவ்விதமே இக்கவசஸ்தோத்ரமும் உபாஸகர்களுடைய ஸகல அவயங்களையும் ரக்ஷிப்பதாகும்.

யைச் செய்வதாயும், ஒருவருக்கும் இதுவரையில் சொல்லப்படாததுமானது யாதொன்று உண்டோ, அதை எனக்குச் சொல்லுவீராக.

மேலும் இக்கவசத்தினுடைய சிறப்பை காத்யாயநீ தந்தரம் பின்வருமாறு சொல்லும்; "எவ்விதம் அங்க ஹீநமான (அவயவம் ஊனமான) மனிதன் ஒரு வேலையையும் செய்ய யோக்யதை யற்றவனோ, அவ்விதமே ஆறு அங்கங்களுமில்லாது இந்த ஸ்ப்தசதியை பாராயணம் செய்வதும் ஆகாது. ஆதலால் இந்த ஆறு அங்கங்களையும் பாராயணம் செய்த பிறகே ஸப்தசதியை பாராயணம் செய்யவேண்டும். அப்படிச் செய்யத் தவறினால் அடிக்கடி உபாஸகர்களுக்கு ஹாநியுண்டாவதோடு ஸ்ரீதேவியின் சாபமும் கிடைப்பதாகும், ஏனெனில் ராவண்ணன் போன்றவர்கள் அங்கங்களைப் பாராயணம் செய்யாமல் இருந்த காரணத்தாலேதான் ராமன் போன்றவனால் கொல்லப்பட்டனர், எனவே ஒருபொழுதும் அங்கங்கள் இல்லாமல் பாராயணம் செய்வது கூடாது,''* அதாவது, கவசம், அர்களம், கீலகம் என்ற மூன்றும், ப்ராதாநிகம், வைக்

---

* अङ्गहीनो यथा देही सर्वकर्मसु न क्षमः ।
अङ्गषट्कविहीना तु तथा सप्तशतीस्तुतिः ॥
तस्मादेतत्पठित्वैव जपेत्सप्तशतीं पराम् ।
अन्यथा शापमाप्नोति हानिं चैव पदे पदे ॥
रावणाद्याः स्तोत्रमेतदङ्गहीनं निषेविरे ।
हता रामेण ते यस्मान्नाङ्गहीनं पठेत्ततः ॥
(कात्यायनीतन्त्रम्)

ருதி, மூர்த்தி, என்ற மூன்று ரஹஸ்யங்களும் சேர்ந்து ஆறு அங்கங்களாகும். இவைகளைச்சேர்த்தே தான் தேவீமாஹாத்ம்யம் பாராயணம் செய்யவேண்டுமென விதிக்கப்படுகிறது. இவைகள் வேறு தந்த்ரங்களில் இருந்தாலும் இவ்வாறும் ஸப்தசதியினுடைய அங்கங்களே யாகும்.

सर्वरक्षाकरम्—ஸர்வரக்ஷாகரம் ; என்ற வாக்கியத்திற்கு எதனுடைய உதவியால் எல்லா ஜனங்களுக்கும் ரக்ஷையுண்டாகுமோ அது என்று தாத்பர்யம்.

नृणाम्—ந்ருணும் என்றது கொண்டு, மனிதர்கள் யாவருக்கும் என்று கிடைப்பதாகும். (க)

ब्रह्मोवाच—

अस्ति गुह्यतमं विप्र सर्वभूतोपकारकम् ।
देव्यास्तु कवचं पुण्यं तच्छृणुष्व महामुने ॥ २ ॥

ब्रह्मा ப்ரஹ்மா ; **उवाच** - சொன்னர் —

विप्र-ஓ ப்ராஹ்மண ! **गुह्यतमम्**-மிகவும் ரஹஸ்யமாயுள்ளதும் ; **सर्वभूतोपकारकम्** - ஸகல ப்ராணிகளுக்கும் உபகாரமாயுள்ளதும் ; **पुण्यम्** - புண்யமாயுள்ளதுமான ; **देव्याः** - தேவியினுடைய ; **कवचम् तु** - கவசமோவெனில் **अस्ति** - இருக்கிறது. **महामुने** - ஓ மஹர்ஷே ! **तत्** - அக்கவசத்தை ; **शृणुष्व** - கேளும்.

ப்ரஹ்மா சொன்னர்—

ஓ அந்தண ! மிகவும் ரஹஸ்யமாயுள்ளதும், ஸகல ப்ராணிகளுக்கும் உபகாரமாயுள்ளதும், புண்யமாயுள்ளதுமான ஸ்ரீதேவியினுடைய கவசமிருக்கிறது. ஓ மஹர்ஷே ! அதைக்கேளும். (உ)

प्रथमं शैलपुत्रीति द्वितीयं ब्रह्मचारिणी ।
तृतीयं चन्द्रघण्टेति कूष्माण्डेति चतुर्थकम् ॥ ३ ॥
पञ्चमं स्कन्दमातेति षष्ठं कात्यायनीति च ।
सप्तमं कालरात्रीति महागौरीतिचाष्टमम् ॥ ४ ॥
नवमं सिद्धिदा प्रोक्ता नवदुर्गाः प्रकीर्तिताः ।
उक्तान्येतानि नामानि ब्रह्मणैव महात्मना ॥ ५ ॥

प्रथमम् - முதலில்; **शैलपुत्री इति** - சைலபுத்ரீ என்றும்; **द्वितीयम्** - இரண்டாவது; **ब्रह्मचारिणी**- ப்ரஹ்மசாரிணீ என்றும், **तृतीयम्** - மூன்ருவது; **चन्द्रघण्टा इति** - சந்த்ரகண்டா என்றும்; **चतुर्थकम्** - நான்காவது; **कूष्माण्डा इति** - கூஷ்மாண்டா என்றும்; **पञ्चमम्** - ஐந்தாவது; **स्कन्दमाता इति** - ஸ்கந்தமாதா என்றும்; **षष्ठम्** - ஆருவது; **कात्यायनी इति च** - காத்யாயநீ என்றும்; **सप्तमम्** - ஏழாவது; **कालरात्री इति** - காலராத்ரீ எனவும்; **अष्टमम्** - எட்டாவது; **महागौरी इति च** - மஹாகௌரி என்றும்; **नवम्** - ஒன்பதாவது; **सिद्धिदा** - ஸித்திதா என்றும்; **प्रोक्ताः**-சொல்லப்படுகின்ற; **नवदुर्गाः** - ஒன்பது துர்கைகள்; **प्रकीर्तिताः** - சொல்லப்பட்டனர். **एतानि** - இந்த; **नामानि** - பெயர்கள்; **महात्मना** - எல்லாமறிந்தவருகிய; **ब्रह्मणा एव** - ப்ரஹ்மாவினுலே; **उक्तानि** - சொல்லப்பட்டன.

முதலாவது சைலபுத்ரீ எனவும், இரண்டாவது ப்ரஹ்மசாரிணீ எனவும், மூன்ருவது சந்த்ரகண்டா எனவும், நான்காவது கூஷ்மாண்டா எனவும், ஐந்தா

வது ஸ்கந்தமாதா எனவும், ஆருவது காத்யாயநீ எனவும் ஏழாவது காலராத்ரி எனவும், எட்டாவது மஹா கௌரீ எனவும், ஒன்பதாவது ஸித்திதா எனவும், இந்த ஒன்பது பெயர்களும் என்ஞல் (உனக்கு) சொல்லப் பட்டனவாம். இவைகள் யாவும் எலலா மறிந்த வேத புருஷனுலேயே சொல்லப்பட்டன.

இவ்விடத்தில் ஸ்ரீதேவியினுடைய இந்த ஒன்பது வடிவங்களும் த்யாநத்தின் பொருட்டு அமைந்தன வாகும். அவைகளுடைய விவரம் வருமாறு—

(க) **शैलपुत्री**—அளவற்ற ஐச்வர்யம் முதலிய கல்யாண குணங்களுடன் கூடிய ஸ்ரீபகவதியானவள், பக்தனுகிய ஹிமவானுடைய தவத்தின் காரணமாக அவனுடைய வேண்டுகோளுக்கிணங்க குற்றமற்ற குலக்கொழுந்தே போன்ற பெண்ணுக அவதரித்து, அவனும் ஸ்வீகரித்துக்கொள்ளும் பாக்யத்தைப்பெற்ற காரணத்தாலன்ருே சைலபுத்ரீ எனவும் அழைக்கலானுள்.

(உ) **ब्रह्मचारिणी**—ஸச்சிதாநந்தவடிவத்தை அடையும்படி செய்பவள். அதாவது ப்ரஹ்மவடிவத்தைக் கொடுப்பவள் எனத் தாத்பர்யம்.

(ங) **चन्द्रघण्टा**—சந்திரன் கையிலுள்ள மணியில் உள்ளவள் என்பதாம். அல்லது சந்திரனைப்போல நிர்மலமான மணியுடன் கூடியவள். "மகிழ்ச்சியையுண்டு பண்ணுகிற ஸ்ரீதேவீ சந்த்ரகண்டா எனப் புகழப்படுகிருள்" *என்பது ரஹஸ்யாகமம். எனவே

* आह्लादकारिणी देवी चन्द्रघण्टेति कीर्तिता ।

உபாஸகர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுக்கும் காரணத்தால் சந்திரனுக்கு நிகராகவுள்ளவள். சந்திரனைப் போல வியக்கத்தக்க லாவண்யத்தோடு கூடியவள் எனவும் தாத்பர்யம்.

(ச) **कूष्माण्डा**—நிந்திக்கத்தக்க (குற்றத்தோடு கூடிய) ஊஷ்மா - உஷ்ணம். அதாவது மூன்றுவித தாபங்களாலுண்டான - ஸந்தாபத்தோடு (ஜ்வரம்) கூடிய - ஸம்ஸாரம். **அண்டம்** - (வயிறு) உதரத்தில் உள்ளவள். ஆத்யாத்மிகம், ஆதிதைவிகம், ஆதிபௌதிகம் என்ற மூன்றுவித தாபங்களோடு கூடிய ஸம்ஸாரதுக்கத்தை நாசம் செய்பவள் எனத் தாத்பர்யம்.

(ரு) **स्कन्दमाता**—ஸ்ரீ பகவதியினுடைய வீர்யத்தினின்றும் தோன்றிய ஸநத்குமாரனையே ஸ்கந்தன் என அழைக்கலாயிற்று. அக்காரணம் கருதியே ஸ்கந்தமாதா எனவும் சிறப்பாகச் சொல்லப்படுகிறது. இதற்கு ப்ரமாணம், "ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்களும் நிரம்பியவன் ஸநத்குமாரன், அவனை ஸ்கந்தன் எனவும் சொல்லுகிறார்கள்" என்ற சாந்தோக்ய உபநிஷத்தாகும்.* எனவே பரமஞானிகளும் ஸ்ரீ தேவியினுடைய உதரத்தில் ஜநிப்பதைப் பெருமையாகக் கொள்ளுகின்றனர் என்பதும் கிடைக்கின்றது.

(சு) **कात्यायनी**—தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஸ்ரீதேவீ காத்யாயநருடைய ஆச்ரமத்தில் அவதரித்து, அவரால் பெண்ணாக ஸ்வீகரிக்கப்

---

* भगवान् सनत्कुमारस्तं स्कन्द इत्याचक्षते ।

பட்டு வளர்ந்து வந்த காரணத்தால் காத்யாயநீ என்ற திருநாமமும் வழங்கலாயிற்று. இக்காத்யாயநீ என்றும் குமாரீ வடிவங்கொண்டு ஸ்வதந்த்ரத்தோடு விளங்குகின்றவள்.

(எ) **कालरात्री**—ப்ராணி வர்கங்களுக்கு மாரகனுகிய காலதேவனையும் ஊழிக்காலத்தில் (ப்ரளயம்) அழிக்கும் காரணத்தால் இப்பெயர் உண்டாகியது.

(அ) **महागौरी**—இப்பெயர் மிகவும் அபிமானத்துடன் ஸ்ரீ தேவிக்குப் பரமசிவனுல் கொடுக்கப்பட்டதாகும். சிவன் ஸந்தோஷத்தோடு கூட காளி—(கருப்பு) என அழைத்தபொழுது, தனது தவத்தின் பெருமையால் ஸ்ரீதேவீ வெண்ணிறம் கொண்டாள் எனக் **காளீபுராணம்** கூறும்.

(கூ) **सिद्धिदा**—அணிமா முதலிய அஷ்ட (எட்டு) ஸித்திகளையாவது, அல்லது மோக்ஷத்தையாவது கொடுக்கின்ற காரணத்தால் இப்பெயர் வழங்கும்.

எனவே ஸ்ரீ தேவிக்கு இந்த ஒன்பது பெயர்களும் யோகியினுடைய காயவ்யூஹம் போன்றவையாகும் என்பதும் ஸாரமாகும்.

अग्निना दह्यमानस्तु शत्रुमध्यगतो रणे ।
विषमे दुर्गमे चैव भयार्ताः शरणं गताः ॥ ६ ॥
न तेषां जायते किंचिदशुभं रणसंकटे ।
नापदं तस्य पश्यामि शोकदुःखभयं नहि ॥ ७ ॥

अग्निना - அக்நியினுல்; **दह्यमानस्तु** - தஹிக்கப்பட்டவனுயினும் **रणे** - யுத்தத்தில்; **शत्रुमध्ये** - பகைவர்

களுடைய நடுவில் ; **गतः** - சென்றவனுயினும் ; **तस्य** - அவனுக்கு **आपदम्** - துன்பத்தை ; **न पश्यामि** - (நான்) பார்க்கவில்லை. **शोकदुःखभयम्** - துயரமும், துக்கத்தாலுண்டான பயமும் ; **नहि** - கிடையாது. **विषमे** - கொடியதாயும் ; **दुर्गमे** - பொறுக்க முடியாததாயுமுள்ள ; **रणसंकटे** - யுத்த ஸங்கடத்தில் ; **भयार्ताः** - பயத்தால் பீடிக்கப்பட்டு ; **शरणम्** - சரணுகதியை ; **गताः** - அடைந்தவர்களாயினும் ; **तेषाम्** - அவர்களுக்கும் ; **किंचित्** - ஒரு சிறிதும், **अशुभम्** - அமங்களமானது ; **न जायते** - உண்டாகாது.

அக்நியால் தஹிக்கப்பட்டவனும், யுத்தத்தில் பகைவர்களுடைய நடுவில் சென்றவனும், தேவியை அடைக்கலம் புகுந்தால் அந்த உபாஸகனுக்கு ஒரு பொழுதும் ஆபத்தும், துக்கமும் கொண்டுள்ள பயமும் உண்டாகாது. மேலும் கொடியதாயும், பொறுக்க முடியாததுமாகிய யுத்தஸங்கடத்தின் காரணமாக பயத்தால் பீடிக்கப்பட்டவன் தேவியை சரணமடைந்தால் ஒரு சிறிதும் அவனுக்கு அமங்களம் (தீமை) உண்டாகாது. எனவே முன்பு சொல்லப்பட்ட நவ துர்கா (ஒன்பது துர்கை) நாமங்களை (பெயர்) பாராயணம் செய்கிறவன் ஒருவனுயினும், பலவர்களாயினும் தேவியை சரணமடைந்தால் துன்பங்கள் மறைந்து விடுமென்பது தாத்பர்யமாகும். (சூ, எ)

यैस्तु भक्त्या स्मृता नूनं तेषामृद्धिः प्रजायते ॥ ८ ॥

यैः तु - எந்த ஒரு சிலரால் ; **भक्त्या** - பக்தியோடு கூட ; **स्मृता** - (தேவீ) ஸ்மரணம் செய்யப்படுகிருளோ ;

तेषाम् - அவர்களுக்கு ; ऋद्धिः - நிறைவானது ; प्रजायते - நன்கு உண்டாகும். नूनम् - நிச்சயம்.

எவர்களால் ஸ்ரீ தேவியினுடைய திருவடிகள் பக்தியோடு கூட நினைக்கப்படுகின்றனவோ, அவர்களுக்கு ஸகல ஸௌபாக்யங்களும் நன்கு உண்டாகும். இது உறுதி.

இங்கு பக்தியேடு கூடாத ஸ்ரீ தேவியை ஸ்மரணம் செய்வதாலுண்டான பலனையும், பக்தியோடு கூட ஸ்ரீதேவியை ஸ்மரணம் செய்வதாலுண்டான பலனையும் சொல்லப்பட்டதாகக் கொள்ள வேண்டும். மூலத்திலுள்ள ரித்தி - என்ற பதத்திற்குப் பதிலாக 'ஸித்தி' எனவும் பாடம் காணப்படுகிறது. இதற்கு ஞானம் எனவும் பொருள் கொள்ளலாம். (அ)

प्रेतसंस्था तु चामुण्डा वाराही महिषासना ।
ऐन्द्री गजसमारूढा वैष्णवी गरुडासना ॥ ९ ॥
माहेश्वरी वृषारूढा कौमारी शिखिवाहना ।
ब्राह्मी हंससमारूढा सर्वाभरणभूषिता ॥ १० ॥
नानाभरणशोभाढ्या नानारत्नोपशोभिताः ।
दृश्यन्ते रथमारूढा देव्यः क्रोधसमाकुलाः ॥ ११ ॥

चामुण्डा तु - சாமுண்டீ அல்லது காளிகா என்ற சக்தியானவள் ; प्रेतसंस्था - ப்ரேதாஸநத்தில் இருப்பவள். वाराही - வாராஹீ என்ற சக்தியானவள் ; महिषासना - மஹிஷாஸநத்தில் இருப்பவள். ऐन्द्री - இந்த்ராணீசக்தி ;

गजसमारूढा - யானையின் மீது இருப்பவள்; **वैष्णवी** - வைஷ்ணவீசக்தி; **गरुडासना** - கருடாஸநத்தில் இருப்பவள்; **माहेश्वरी** - மாஹேச்வரீசக்தி; **वृषारूढा** - விருஷபாஸநத்தில் இருப்பவள்; **कौमारी** - கௌமாரீசக்தி; **शिखिवाहना** - மயில்வாஹநத்தில் இருப்பவள்; **ब्राह्मी** - ப்ரஹ்மசக்தி; **हंससमारूढा** - ஹம்ஸத்தின்மீது இருப்பவள், **सर्वाभरणभूषिताः** - எல்லா விதமான ஆபரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவர்களான; **देव्यः** - இந்த தேவீசக்திகள்; **नानाभरणशोभाढ्याः** - பல விதங்களான ஆபரணங்களுடைய காந்திகளால் நிரம்பியவர்களாயும்; **नानारत्नोपशोभिताः** - பலவிதமான ரத்நங்களால் பிரகாசிக்கின்றவர்களாயும்; **क्रोधसमाकुलाः** - கோபத்தால் நன்கு கலங்கியவர்களாயும்; **रथम्** - ரதத்தை; **आरूढाः** - ஏறினவர்களாயும்; **दृश्यन्ते** - காணப்பட்டனர்.

ஏழு மாத்ருகாதேவிகளில் சாமுண்டிகாதேவீ ப்ரேதாஸநத்திலும், வாராஹீதேவீ மஹிஷா (எருமை) ஸநத்தினும், இந்த்ராணீதேவீ யானை வாஹநத்திலும், வைஷ்ணவீதேவீ கருடாஸநத்திலும், மாஹேச்வரீதேவீ விருஷபா (காளை) ஸநத்திலும், கௌமரீதேவீ(ஸுப்ரஹ்மண்யசக்தி)மயில் வாஹநத்திலும், ப்ரஹ்மாணீதேவி ஹம்ஸவாஹநத்திலும், ஸகலவிதமான ஆபரணங்களாலும் அலங்காரம் செய்யப்பட்டவர்களாக அமர்ந்திருப்பவர்கள். இந்த மாத்ருகாதேவிகள் எல்லாவிதமான ஆபரணங்களுடைய சோபைகளாலும், பலவித ரத்நங்களுடைய காந்திகளாலும் பிரகாசித்துக் கொண்டு, பகைவர்களான அஸுரர்களைக் குறித்து மிகுந்த கோபத்தோடு கூடிய

வர்களாக ரதத்தின் அமர்ந்திருப்பவர்களாகவும்(தேவர் களால்) காணப்பட்டனர்.*

ஐந்த்ரீ, இந்தரசக்தி, அக்நிதேவதா - அக்நிசக்தி ; வாராஹீ, யமசக்தி; கட்கதாரிணீ, நிருருதிசக்தி. (௯-௧௧)

शङ्खं चक्रं गदां शक्तिं हलं च मुसलायुधम् ।
खेटकं तोमरं चैव परशुं पाशमेव च ॥ १२ ॥
कुन्तायुधं त्रिशूलं च शार्ङ्गायुधमनुत्तमम् ।
दैत्यानां देहनाशाय भक्तानामभयाय च ॥ १३ ॥
धारयन्त्यायुधानीत्थं देवानां च हिताय वै ।

शङ्खम् - சங்கத்தையும் ; **चक्रम्** - சக்ரத்தையும் ; **गदाम्** - கதையையும் ; **शक्तिम्** - வேலாயுதத்தையும் ; **हलम्** - கலப்பையையும் ; **मुसलायुधम्** - உலக்கையை யும் ; **खेटकम्** - கவசத்தையும் ; **तोमरम्** - தோமரம் என்ற ஆயுதத்தையும் ; **परशुम्** - கோடாலியையும் ; **पाशम्** - கயிறையும் ; **कुन्तायुधम्** - குந்தாயுதத்தையும் ; **त्रिशूलम्** - மூன்று முனையுள்ள சூலாயுதத்தையும் ; **अनुत्तमम्** - சிறந்ததான ; **शार्ङ्गायुधम्** - சார்ங்கமென்ற ஆயுதத்தையும் ; **इत्थम्** - இவ்விதம் ; **आयुधानि** - ஆயுதங் களை ; **दैत्यानाम्** - அஸுரர்களுடைய ; **देहनाशाय च** - சரீரத்தினுடைய நாசத்தின் பொருட்டும் ; **भक्तानाम्** -

* துன்பத்தையடைந்த பக்தர்களுடைய (தேவர்கள்) துயரத் தைத் துடைப்பதற்கு அநுஸரணையாக இந்த ஏழு மாத்ருகா தேவிகள் எப்பொழுதும் முயற்சியுடன் கூடியவர்களாகவே ஸ்ரீதேவியைச் சூழ்ந்திருப்பவர்கள் என்பது கருத்து. இதனால் தேவீ உபாஸகர்களிடத்தில் ஸ்ரீதேவியினுடைய அளவுகடந்த வாத்ஸல்யத்தையும் ஸூசனை செய்வதாகும்.

பக்தர்களுடைய; अभयाय च - அநுக்ரஹத்தின் பொருட்டும் ; देवानां च-தேவர்களுடையவும் ; हिताय वै-நன்மைக்காகவும் ; धारयन्ति - தரித்துக் கொண்டிருக்கின்றனர்.

இத்தேவதைகள் அனைவரும், சங்கம், சக்ரம், கதை, வேல், இரும்புலக்கை, கேடகம், தோமரம், கோடாலி, கயிறு, குந்தம், த்ரிசூலம், வில் முதலிய ஆயுதங்களை, அஸுரர்களை அழிப்பதற்கும், பக்தர்களைக் காப்பாற்றுவதற்கும், தேவர்களுடைய நன்மைக்காகவும் எப்பொழுதும் கைகளில் தரித்தவண்ணமிருக்கின்றனர். இந்த ஏழு மாத்ருகாதேவிகளும், இவர்களைக் காட்டிலும் வேறான சில தேவிகளும் ரதத்தில் இருப்பவர்களாக தேவர்களால் காணப்பட்டனர். இவர்கள் அனைவரும் தேவியினுடைய பரிவாரங்கள். (கஉ, கங)

महाबले महोत्साहे महाभयविनाशिनि ॥ १४ ॥
त्राहि मां देवि दुष्प्रेक्ष्ये शत्रूणां भयवर्धिनि ।

महाबले - பெருகிய பலத்தோடு கூடியவளே ; महोत्सहे - மிகுந்த உத்ஸாஹத்தோடு கூடியவளே ! महाभय-

---

*महाभयविनाशिनि மஹாபயவிநாசிநி——பக்தர்களுக்கு மரண மென்னும் மாஹபயத்தை ஸ்ரீதேவி ஞாநதாநம் செய்து அப்பயத்தை அடியோடு அழிப்பவள்.

† दुष्प्रेक्ष्या துஷ்ப்ரேக்ஷ்யா---ஸாதாரணமாகக் காண முடியாதவள் न संदृशे तिष्ठति रूपमस्य । "ரூபம்-உருவம். காண முடியதாயிருக்கிறது" என்பது ச்ருதி, எனவே பக்தர்களாகிய ஞாநிகளுடைய கண்களுக்கே கோசரமாயிருப்பவள் (காணக்கூடியவள்) என்பது கருத்தாகும்.

विनाशिनि - பெருகிய பயத்தை நாசம் செய்பவளே! दुष्प्रेक्ष्ये - பார்க்க முடியாதவளே! शत्रुणाम्-பகைவர் களுக்கு; भयवर्धिनि - பயத்தை வளரச் செய்பவளே! देवि - ஓ அன்னையே! माम् - என்னை; त्राहि - காப் பாற்றுவயாக. *

மாயாசக்தியின் வடிவான மஹாபலத்தையுடைய வளும், உலகஸம்ரக்ஷணத்தாலுண்டாகிய மட்டற்ற மனமகிழ்ச்சியையுடையவளும், மரணவடிவாம் மஹா பயத்தை யகற்றுபவளும், பாமரர்களால் பார்க்கமுடி யாதவளும், காமம் க்ரோதம் முதலிய அரிஷட்வர் கங்களோடு கூடிய ।ாகைவர்ளுக்கு அடிக்கடி பயத்தை வளரச்செய்பவளுமாகிய ஓ அன்னையே! என்னைக் காப்பாற்றுவாயாக.

இங்கு சத்ரு-பகைவர்-என்னும் பதத்திற்கு காமம், க்ரோதம் முதலியவைகளையும் கொள்ளப்படும். (கரு)

प्राच्यां रक्षतु मामैन्द्री आग्नेयामग्निदेवता ॥ १५ ॥

दक्षिणे रक्ष वाराहि नैर्ऋत्यां खड्गधारिणी ।

माम् - என்னை; ऐन्द्री - இந்த்ராணிதேவதை; प्राच्याम् கிழக்குதிக்கில்; रक्षतु - ரக்ஷிப்பதாக. अग्नि-देवता - அக்நிசக்தியானவள்; आग्नेयाम् - தென்கிழக்கில்; (ரக்ஷிப்பதாக); वाराही - வாராஹீசக்தியானவள்; दक्षिणे-தென்திசையில்; रक्ष - ரக்ஷிப்பதாக; खड्गधारिणी - நிர்

---

* இந்த ச்லோகம் முதல் பக்தனுடைய ப்ரார்த்தனை சொல் லப்படுகிறது. கவச பாராயணத்தை துவக்குவதற்கு முன்பு இந்த ப்ரார்த்தனைகளைச் சொல்லிக்கொண்டு பிறகு கவசத்தை பாராயணம் செய்ய வேண்டும்.

ருதி சக்தியானவள் ; **नैर्ऋत्याम्** - தென்மேற்கில் (ரக்ஷிப் பதாக.)

இந்த்ராணீ கிழக்குதிக்கிலும், அக்நிதேவதை தென்கிழக்கிலும், வாராஹீ தென் திசையிலும், நிர்ருதி தேவதை தென்மேற்கிலும், என்னை ரக்ஷிப்பதாக. (கரு)

प्रतीच्यां वारुणी रक्षेद्वायव्यां मृगवाहिनी ॥ १६ ॥*

रक्षेदुदीच्यां कौमारी ईशान्यां शूलधारिणी ।

वारुणी - வாருணீ சக்தி ; **प्रतीच्याम्** - மேற்கு திக்கி லும் ; **मृगवाहिनी** - வாயு சக்தி ; **वायव्याम्** - வடமேற்கு திக்கிலும் ; **रक्षेत्** - ரக்ஷிக்கவேண்டும். **कौमारी** - குபேர சக்தி ; **उदीच्याम्** - வடக்கு திக்கிலும் ; **शूलधारिणी** - மஹேச்வரசக்தி ; **ईशान्याम्** - வட கிழக்கிலும் ; **रक्षेत्** - ரக்ஷிக்க வேண்டும்.

மேற்கு திக்கில் வாருணீசக்தியும், வடமேற்கு திக்கில் வாயுசக்தியும், வடக்கு திக்கில் குபேரசக்தி யும், வடகிழக்கில் ஈசாநசக்தியும் என்னை ரக்ஷிக்க வேண்டும். (கசு)

***मृगवाहिनी**—ம்ருகவாஹிநீ - வாயுதேவனுக்கு ம்ருகம்-மான்-வாஹந மாதலால் வாயுசக்திக்கும் ம்ருகமே வாஹந மாகும். இவ்விடத்தில் திக்பாலகர்களுடைய சக்திகளைக் குறிப் பிடுவதால் கௌமாரீ சக்திக்கும் குபேரசக்தி எனப் பொருள் கொள்ளவேணும். அதாவது குத்ஸித - நிந்திக்கத்தக்கதான - மாரன். மதத்தோடு கூடியவன். குமாரன் - குபேரன் - என்பது பொருள். கௌபேரீ சக்தியினுடைய ரக்ஷணஸ்தாநம் மேலே சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு தேவதைக்கு இரண்டு ஸ்தாநங் களை ரக்ஷிக்க வேண்டுமென்பதுவும் விரோதமாகாது. இக் கருத்தையே வாராஹீ தேவதைக்கும் கொள்ளவேண்டும். இவர்கள் இருவரும் ஏழு மாத்ருகாதேவிகளில் அடங்கிய வர்கள். சூலதாரிரணி-ஈசாநசக்தி.

ऊर्ध्वं ब्रह्माणि मे रक्षेदधस्ताद्वैष्णवी तथा ॥ १७ ॥
एवं दश दिशो रक्षेच्चामुण्डा शववाहना ।

ब्रह्माणि - ஓ ப்ரஹ்மசக்தியே! **मे** - என்னுடைய **ऊर्ध्वम्** - மேல்பாகத்தை; **रक्षेत्** - ரக்ஷிக்கவேண்டும், **तथा** - அவ்விதமே; **वैष्णवी** - விஷ்ணுசக்தி; **अधस्तात्** - கீழ்பாகத்தில் (ரக்ஷிக்கவேண்டும்) **एवम्** - இவ்விதம்; **दश** - பத்து; **दिशः** - திக்குகளிலும்; **शववाहना** - பிரேதத்தை வாஹநமாகக் கொண்ட; **चामुण्डा** - சாமுண்டா தேவி; **रक्षेत्** - ரக்ஷிக்கவேண்டும்.

ஓ ப்ரஹ்மசக்தியே! என்னுடைய மேல்பாகத்தை (ஊர்த்வதிக்கை) ரக்ஷிக்கவேண்டும்; அவ்விதமே விஷ்ணுசக்தியும் கீழ்பாகத்தில் என்னை (பாதாளத்தில்) காப்பாற்றவேண்டும். இவ்விதம் பத்து திக்குகளிலும் ப்ரேதாஸநத்திலிருக்கும் சாமுண்டாதேவியும் என்னைக் காப்பாற்ற வேண்டும்.* (௧௭)

जया मे चाग्रतः स्थातु विजया स्थातु पृष्ठतः ॥ १८ ॥
अजिता वामपार्श्वे तु दक्षिणे चापराजिता ।

जया च - ஜயா சக்தியும்; **मे** - என்னுடைய **अग्रतः** - எதிரில்; **स्थातु** - இருக்கட்டும். **विजया** - விஜயாசக்தியும் - **पृष्ठतः** - பின்புறத்தில்; **स्थातु** - இருக்கட்டும். **अजिता** - அஜிதாதேவீ; **वामपार्श्वे तु** - இடது பக்கத்திலும்; **अपरा-**

---

* ப்ரஹ்மாணீ - ப்ரஹ்மாவினுடைய சக்தி. வைஷ்ணவீ விஷ்ணுவினுடைய சக்தி.

जिता - அபராஜிதா தேவீ ; **दक्षिणे** - வலது பக்கத்திலும் (இருக்கட்டும்.)

என்னுடைய எதிரில் ஜயாதேவியும், பின்புறத்தில் விஜயாதேவியும், இடதுபக்கத்தில் அஜிதா தேவியும், வலதுபக்கத்தில் அபராஜிதா தேவியும், வாஸம் செய்யட்டும். என்னைக் காப்பாற்றுவதற்காக எப்பொழுதும் வாஸம் செய்ய வேண்டுமென்பது கருத்து. (கஅ)

शिखामुद्योतिनी रक्षेदुमा मूर्ध्नि व्यवस्थिता ॥ १९ ॥
मालाधरी ललाटे च भ्रुवौ रक्षेद्यशस्विनी ।

उद्योतिनी - உத்யோதிநீ என்ற தேவீ ; **शिखाम्** - சிகையை ; **रक्षेत्**-ரக்ஷிப்பதாக. **उमा** - உமாதேவீ; **मूर्ध्नि**- சிரஸில் ; **व्यवस्थिता** - நிலைத்திருந்து கொண்டு ; (ரக்ஷிப்பதாக) **मालाधरी** - மாலாதரீ என்ற தேவீ ; **ललाटे च** - நெற்றியிலும் ; **यशस्विनी** - யசஸ்விநீதேவீ ; **भ्रुवौ च** - புருவங்களையும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

உத்யோதிநீ தேவீ சிகையை ரக்ஷிப்பதாக, உமா தேவீ சிரஸில் இருந்துகொண்டு ரக்ஷிப்பதாக, முறையே நெற்றியில் மாலாதரியும், புருவங்களில் யசஸ்விநியும் ரக்ஷிப்பதாக. (கக)

त्रिनेत्रा च भ्रुवोर्मध्ये यमघण्टा च नासिका ॥ २० ॥
शङ्खिनी चक्षुषोर्मध्ये श्रोत्रयोर्द्वारवासिनी ।
कपोलौ कालिका रक्षेत्कर्णमूले तु शंकरी ॥ २१ ॥
नासिकायां सुगन्धा च उत्तरोष्ठे च चर्चिका ।

भ्रुवोर्मध्ये - புருவங்களுடைய நடுவில் ; **त्रिनेत्रा च** - த்ரிநேத்ரா தேவியும் ; **नासिके** - நாசித்வாரங்களில் ; **यम-घण्टा** - யமகண்டாதேவியும்; **चक्षुषोः** - கண்களுடைய ; **मध्ये** - நடுவில் ; **शङ्खिनी** - சங்கினீ தேவியும் ; **श्रोत्रयोः**- செவிகளில் ; **द्वारवासिनी** - த்வார வாஸிநியும் ; **कपोलौ** - கபோலங்களில் ; **कालिका** - காளிகா தேவியும் ; **कर्णमूले तु** - செவிகளுடைய அடிப்புறத்திலோ ; **शंकरी** - சங்கரியும் ; **नासिकायाम्** - நாசியில் ; **सुगन्धा च** - ஸுகந்தையும் ; **उत्तरोष्ठे** - மேல் உதட்டில் ; **चर्चिका च** - சர்சிகா தேவியும் ; **रक्षेत्** - ரக்ஷிக்கவேண்டும்.

இரண்டு புருவங்களுக்குமிடையில் த்ரிநேத்ரா தேவியும், நாசித்வாரங்களில் யமகண்டாதேவியும், கண்களுடை நடுவில் சங்கினீ தேவியும், செவிகளில் த்வாரவாஸனீ தேவியும், கபோலங்களில் (கன்னங்களில்) காளிகாதேவியும், காதுகளுடைய அடிப்புறத்தில் சங்கிநீதேவியும், நாஸிகாதண்டத்தில் ஸுகந்தா தேவியும், மேல் உதட்டில் சர்சிகாதேவியும் ரக்ஷிப்பதாக. (உ௰, உக)

अधरे चामृतकला जिह्वायां च सरस्वती ॥ २२ ॥
दन्तान् रक्षतु कौमारी कण्ठमध्ये च चण्डिका ।

अधरे - (கீழ்) உதட்டில்; **अमृतकला च** - அம்ருதகலா தேவியும் ; **जिह्वायाम्** - நாக்கில் ; **सरस्वती च** - ஸரஸ்வதி தேவியும் ; **दन्तान्** - தந்தங்களை ; **कौमारी** - கௌமாரீ தேவியும் ; **कण्ठमध्ये** - கழுத்தினுடைய நடுவில் ; **चण्डिका**- சண்டிகா தேவியும் ; **रक्षतु** - ரக்ஷிக்கட்டும்.

கீழுதட்டில் அம்ருதகலாதேவியும், நாக்கில் ஸரஸ்வதீ தேவியும, பற்களை கௌமாரீதேவியும், கழுத்தினுடைய நடுவில் சண்டிகாதேவியும் ரக்ஷிப்பதாக. (உஉ)

घण्टिकां चित्रघण्टा च महामाया च तालुके॥ २३॥
कामाक्षी चिबुकं रक्षेद्वाचं मे सर्वमङ्गला।

मे - என்னுடைய; **घण्टिकाम्** - கண்டமணியை **चित्रघण्टा च** - சித்ரகண்டா தேவியும்; **तालुके** - உள் நாக்கில்; **महामाया च** - மஹாமாயா தேவியும்; **चिबुकम्** - தாடையை; **कामाक्षी** - காமாக்ஷீ தேவியும்; **वाचम्** - வாக்கை; **सर्वमङ्गला च** - ஸர்வமங்களா தேவியும்; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

என்னுடைய கண்டமணியை சித்ரகண்டா தேவியும், உள்நாக்கில் மஹாமாயாதேவியும், தாடையை காமாக்ஷீதேவியும், வாக்கை ஸர்வமங்களாதேவியும் ரக்ஷிப்பதாக. (உங)

ग्रीवायां भद्रकाली च पृष्ठवंशे धनुर्धरी॥ २४॥
नीलग्रीवा बहिःकण्ठे नलिकां नलकूबरी।
खड्गधारिण्युभौ स्कन्धौ बाहू मे वज्रधारिणी॥ २५॥
हस्तयोर्दण्डिनी रक्षेदम्बिका चाङ्गुलीषु च।

मे - என்னுடைய; **ग्रीवायाम्** - கழுத்தில்; **भद्रकाली च** - பத்ரகாளியும்; **पृष्ठवंशे** - கழுத்தினுடைய பின் புறத்தில்; **धनुर्धरी** - தநுர்தரீ தேவியும்; **बहिः कण्ठे** - கழுத்தின் வெளிப்புறத்தில்; **नीलग्रीवा च** - நீலக்ரீவாதேவியும்; **नलिकाम्**-கண்ட நாளத்தை; **नलकूबरी**-நளகூபரீதேவியும்;

उभौ - இரண்டு ; **स्कन्धौ** - தோள்களையும் ; **खड्गधारिणी** - கட்கதாரிணியும் ; * **बाहू** - கைகளை ; **वज्रधारिणी** - வஜ்ர தாரிணியும் ; **हस्तयोः** - ஹஸ்தங்களை ; **दण्डिनी** - தண்டினீ தேவியும் ; **अङ्गुलीषु** - விரல்களில் ; **अम्बिका च** - அம்பிகா தேவியும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

என்னுடைய கழுத்தில் பத்ரகாளியும், கழுத்தினுடைய பின்புறத்தில் தநுர்தரியும், கழுத்தின் வெளிப்புறத்தில் நீலக்ரீவையும், கண்ட நாளத்தில் நலகூபரையும், இரண்டு தோள்களில் கட்கதாரிணியும், கைகளை வஜ்ரதாரிணியும், ஹஸ்தங்களில் தண்டினீதேவியும், விரல்களில் அம்பிகையும் ரக்ஷிப்பதாக. (உ௪, உரு)

नखान् शूलेश्वरी रक्षेत्कुक्षौ रक्षेन्नलेश्वरी ॥ २६ ॥
स्तनौ रक्षेन्महादेवी मनः शोकविनाशिनी ।

नखान् - நகங்களை ; **शूलेश्वरी** - சூலேச்வரியையும் **कुक्षौ** - வயிற்றில் ; **नलेश्वरी** - நளேச்வரியும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக. **स्तनौ** - கொங்கைகளை ; **महादेवी** - மஹா தேவியும் ; **मनः**-மனதை ; **शोकविनाशिनी** - சோகவிநாசினியும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

நகங்களை சூலேச்வரியும், குக்ஷியில் (வயிறு) நலேச்வரியும், கொங்கைகளை மஹாதேவியும்: மனதை சோகவிநாசினியும் ரக்ஷிப்பதாக. (உ௬)

---

* 'பாஹூ' என்ற பதத்திற்கு தோள் முதல் முழங்கைவரையிலுள்ள பாகத்திற்கும், 'ஹஸ்தயோ:' என்ற சொல்லுக்கு முழங்கை முதல் விரல்கள் வரையிலுள்ள பாகத்திற்கும் பெயர்.

हृदयं ललिता देवी ह्युदरे शूलधारिणी ॥ २७ ॥
नाभिं च कामिनी रक्षेद्गुह्यं गुह्येश्वरी तथा ।

हृदयम्-ஹ்ருதயத்தை ; **ललिता**-லலிதா என்ற ; **देवी हि**-தேவியும் ; **उदरे**-உதரத்தில் ; **शूलधारिणी**-சூலதாரிணியும் ; **नाभिम्**-நாபியை ; **कामिनी च** - காமினியும் ; **तथा** - அவ்விதமே ; **गुह्यम्** - குஹ்யப்ரதேசத்தை ; **गुह्येश्वरी** - குஹ்யேச்வரியும் **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

ஹ்ருதயத்தை லலிதாதேவியும், உதரத்தை சூலதாரிணியும், நாபியை (தொப்பூழ்) காமினீதேவியும், அவ்விதமே குஹ்யப்ரதேசத்தை குஹ்யேச்வரியும் ரக்ஷிப்பதாக. (உஎ)

भूतनाथा च मेढ्रं च गुदं महिषवाहिनी ॥ २८ ॥
कट्यां भगवती रक्षेज्जानुनी विन्ध्यवासिनी ।

मेढ्रम् - லிங்கத்தை ; **भूतनाथा च** - பூதநாதாதேவியும் ; **गुदम्** - குதத்தை ; **महिषवाहिनी** - மஹிஷவாஹினியும் ; **कट्याम्** - இடுப்பை ; **भगवती** - பகவதியும் ; **जानुनी** - முழங்கால்களை ; **विन्ध्यवासिनी** - விந்த்யவாஸினீதேவியும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

லிங்கத்தை பூதநாதா என்ற தேவியும், குதத்தை மஹிஷவாஹினியும், இடுப்பை பகவதியும், முழங்கால்களை விந்த்யவாஸினியும் ரக்ஷிப்பதாக. (உஅ)

जङ्घे महाबला प्रोक्ता जानुमध्ये विनायकी ॥ २९ ॥
गुल्फयोर्नारसिंही च पादपृष्ठेऽमितौजसी ।

पादाङ्गुलीः श्रीधरी च पादाधस्तलवासिनी ॥ ३० ॥
नखान् दंष्ट्राः कराली च केशांश्चैवोर्ध्वकेशिनी ।

जङ्घे – கணுக்கால்களை ; **प्रोक्ता** - (ஆகமங்களில்) சொல்லப்பட்ட ; **महाबला** - மஹாபலா என்ற தேவியும் ; **जानुमध्ये** - முழங்கால்களுடைய நடுவில் ; **विनायकी** - விநாயகீ என்ற தேவதையும் ; **गुल्फयोः** - கால்களுடைய கறடுகளை ; **नारसिंही च** - நாரஸிம்ஹியும் ; **पादपृष्ठे** - பின்கால்களை ; **अमितौजसी** - அமிதௌஜஸீ என்ற தேவியும் ; **पादाङ्गुलीः** - கால்விரல்களை ; **श्रीधरी च** - ஸ்ரீதரியும் ; **पादाधः** - உள்ளங்கால்களை : **तलवासिनी** -தலவாஸிநியும் ; **नखान्** - நகங்களையும் ; **दंष्ट्राः च** - தம்ஷ்ட்ரங்களையும் ; **कराली** - கராளியும் ; **केशान्** - கேசங்களை ; **ऊर्ध्वकेशिनी च एव** - ஊர்த்வகேசிநியும் (ரக்ஷிப்பதாக.)

கணுக்கால்களை ஆகமங்களில் சொல்லியவண்ணம் மஹாபலா என்ற தேவியும், முழங்கால்களுடைய நடுவில் விநாயகியும், கால் கறடுகளில் நாரஸிம்ஹீ தேவியும் ; புறங்கால்களில் அமிதௌஜஸியும், கால்விரல்களை ஸ்ரீதரியும், உள்ளங்கால்களில் பாதாளவாஸிநியும், நகங்களையும், தம்ஷ்ட்ரங்களையும் கராளியும், கூந்தல்களை ஊர்த்வகேசிநியும் ரக்ஷிப்பதாக * (உக,ங௦)

रोमकूपाणि कौबेरी त्वचं वागीश्वरी तथा ॥ ३१ ॥
रक्तमज्जावसामांसान्यस्थिमेदांसि पार्वती ।

* ஒரு தேவதைக்கு எவ்விதம் இரண்டு ஸ்தாநங்களுடைய ரக்ஷணமானது விரோதமில்லையோ, அவ்விதமே இரண்டு தேவதைகளுக்கு ஒரு ஸ்தாநத்தினுடைய ரக்ஷணமும் விரோதமாகாது என்பதை இங்கு உணர்ந்து கொள்ளவேண்டும்.

रोमकूपाणि - ரோமத்வாரங்களை ; **कौबेरी** - கௌபேரி யும் ; **तथा**-அவ்விதமே ; **त्वचम्** - தோலை ; **वागीश्वरी**-வாகீச்வரியும்; **रक्त-मज्जा-वसा-मांसानि** - ரக்தம், மஜ்ஜை, வஸா, மாம்ஸங்களையும் ; **अस्थि-मेदांसि** - எலும்பு, மேதஸ் இவைகளையும் ; **पार्वती** - பார்வதிதேவீ (ரக்ஷிப்பதாக.)

ரோமத்வாரங்களை கௌபேரியும், த்வக்கை (தோல்) வாகீச்வரியும், ரக்தம், மஜ்ஜை, வஸா, மாம்ஸம், அஸ்தி (எலும்பு) மேதஸ் இவைகளை பார்வதியும் ரக்ஷிப்பதாக. (கூ)

आन्त्राणि कालरात्रिश्च पित्तं च मुकुटेश्वरी ॥ ३२ ॥
पद्मावती पद्मकोशे कफे चूडामणिस्तथा ।

आन्त्राणि - சிறுகுடல்களை ; **कालरात्रिः च** - காலராத்ரியும் ; **पित्तम्** - பித்தத்தை ; **मुकुटेश्वरी च** - முகுடேச்வரியும் ; **पद्मकोशे** - பத்மகோசத்தில் ; **पद्मावती** - பத்மாவதியும் ; **तथा** - அவ்விதமே ; **कफे** - கபத்தில் ; **चूडा-मणिः** - சூடாமணியும் (ரக்ஷிப்பதாக.)

சிறு குடல்களை காலராத்ரியும், பித்தத்தை முகுடேச்வரியும், பத்மகோசத்தில்* பத்மாவதியும்,

---

* பத்மகோசம்-பத்மம்-தாமரை மொட்டுப் போன்ற வடிவங் கொண்ட ஹ்ருதயம் முதலியவை. கோசம்-இருப்பிடம். எனவே ஹ்ருதயமென்ற இருப்பிடம். எந்த இடத்திலிருந்து ச்வாஸம் உண்டாகிறதோ, அந்த இடத்திலிருந்துகொண்டு ரக்ஷிக்கவேணும் என்பது கருத்து. இதற்கு ப்ரமாணம்- "**पद्मकोशप्रतीकाशं हृदयं चाप्यधोमुखम् ।**" என்ற ச்ருதி வாகும்.

சூடாமணி---இப்பெயருள்ள தேவி ரக்தாஸுர வதத்தில் ப்ரஸித்தியடைந்தவள்.

அவ்விதமே கபத்தில் சூடாமணீ தேவியும் ரக்ஷிப்பதாக. (௩௨)

ज्वालामुखी नखज्वालामभेद्या सर्वसंधिषु॥ ३३॥
शुक्रं ब्रह्माणि मे रक्षेच्छायां छायेश्वरी तथा।

नखज्वालाम् - நகங்களுடைய காந்தியை ; **ज्वाला-मुखी** - ஜ்வாலாமுகீதேவியும் ; **सर्वसंधिषु** - எல்லா ஸந்திகளிலும் ; **अभेद्या** - அபேத்யா என்ற தேவியும் ; **तथा** - அவ்விதமே ; **छायाम्** - சாயையை (நிழல்) **छायेश्वरी** - சாயேச்வரியும் ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக. **ब्रह्माणि** - ஓ ப்ரஹ்மாணி ! **मे** - என்னுடைய ; **शुक्रम्** - வீர்யத்தையும் ; (ரக்ஷிப்பாயாக.)

நகங்களுடைய காந்தியை ஜ்வாலாமுகீ தேவியும், எல்லா ஸந்திகளிலும் அபேத்யா என்ற தேவியும், நிழலை சாயேச்வரீ தேவியும் ரக்ஷிப்பதாக. ஓ ப்ரஹ்ம சக்தியே ! நீ என்னுடைய வீர்யத்தை ரக்ஷிப்பாயாக.

अहंकारं मनो बुद्धिं रक्ष मे धर्मचारिणि॥ ३४॥

मे - என்னுடைய ; **अहंकारम्** - அஹம்காரத்தையும்; * **मनः** - மனதையும் ; **बुद्धिम्** - புத்தியையும் ; **धर्मचा-रिणि** - ஓ தர்மசாரிணி ; **रक्ष** - ரக்ஷிப்பாயாக.

---

* அந்தகரணம் மனதையும் சேர்த்து நான்கு விதமாகச் சொல்லவேணும். இவ்விடத்தில் மனம் என்னும் சொல்லானது சித்தத்தைக் குறிப்பதாகும். "**मनःशोकविनाशिनी**" என்ற இடத்திலுள்ள சோகம் என்ற பொருளல்ல. அவ்விடத்தில் மனதினுடைய சோகத்தை விசேஷமாக நாசம் செய்பவள் என்று மஹாதேவி என்ற சொல்லுக்கு விசேஷணமாக இருந்தாலும் (அடைமொழியாக) ஸமஸ்தபதமாகக் கொள்ளவேணும் என்று குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

ஓ தர்மசாரிணி! தேவி! என்னுடைய அஹம் காரத்தையும், மனதையும், புத்தியையும் ரக்ஷிப் பாயாக. (௩௪)

प्राणापानौ तथा व्यानसमानोदानमेव च ।
यशः कीर्तिं च लक्ष्मीं च सदा रक्षतु चक्रिणी ॥ ३५ ॥

प्राणापानौ - ப்ராணன், அபாநன் இவ்விரண்டையும்; **तथा** - அவ்விதமே; **व्यान-समान-उदानम्-एव च** - வியாந வாயுவையும், ஸமாந வாயுவையும், உதாந வாயுவையும்; **यशः** - புகழையும்; **कीर्तिं च** - கீர்த்தியையும்; **लक्ष्मीं च** - ஐச்வர்யத்தையும்; **सदा** - எப்பொழுதும்; **चक्रिणी**- சக்ரேச்வரீ தேவீ; **रक्षतु** - ரக்ஷிக்கட்டும்.

ப்ராணன், அபாநன், அவ்விதமே வ்யாநன், ஸமா நன், உதாநன் என்றவைகளையும், புகழ், கீர்த்தி, ஐச்வர்யம் இவைகளையும், எப்பொழுதும் சக்ரேச்வரீ ரக்ஷிக்கட்டும். (௩௫)

गोत्रमिन्द्राणि मे रक्षेत्पशून् मे रक्ष चण्डिके ।

मे - என்னுடைய; **गोत्रम्** - வம்சத்தை; **इन्द्राणि** - ஓ இந்த்ராணி; **रक्षेत्** - ரக்ஷிப்பாயாக; **मे** – என்னு டைய; **पशून्** - பசுக்களை; **चण्डिके** - ஓ சண்டிகாதேவி! **रक्ष** - ரக்ஷிப்பாயாக.

ஓ இந்த்ராணி! என்னுடைய வம்சத்தை ரக்ஷிப் பாயாக. ஓ சண்டிகே என்னுடைய பசுக்களைக் காப் பாற்றுவாயாக.

पुत्रान् रक्षेन्महालक्ष्मीर्भार्यां रक्षतु भैरवी ॥ ३६ ॥
मार्गं क्षेमंकरी रक्षेद्विजया सर्वतः स्थिता ।

पुत्रान् - புத்திரர்களை ; **महालक्ष्मीः** - மஹாலக்ஷ்மீ ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக. **भार्याम्** - மனைவியை ; **भैरवी** - பைரவீதேவி ; **रक्षतु** - ரக்ஷிக்கட்டும். **मार्गम्** - வழியை ; **सर्वतः स्थिता** - எங்கும் வஸிக்கின்றவளும் ; **विजया** - ஜயசீலையாயுமுள்ள ; **क्षेमंकरी** - க்ஷேமங்கரீ தேவி ; **रक्षेत्** - ரக்ஷிப்பதாக.

புத்திரர்களை மஹாலக்ஷ்மீ ரக்ஷிப்பதாக. மனைவியை பைரவீ தேவீ ரக்ஷிப்பதாக. வழியை எல்லா திக்குகளில் வஸிக்கின்றவளும், ஜயசீலையாயுமுள்ள க்ஷேமங்கரீ தேவீ ரக்ஷிப்பதாக. (௩௬)

रक्षाहीनं तु यत्स्थानं वर्जितं कवचेन तु ॥ ३७ ॥
तत्सर्वं रक्ष मे देवी जयन्ती पापनाशिनी ।

यत् - யாதொரு ; **स्थानं तु** - இருப்பிடமும் ; **कवचेन** - கவசத்தோடு ; **वर्जितं तु** - கூடாததாகவும் ; **रक्षाहीनम्** - ரக்ஷையில்லாமலும் (இருக்கின்றதோ) **तत्सर्वम्** - அதெல்லாம் ; **मे** - என்னுடைய ; **देवी** - தேவியாகவும் ; **जयन्ती** - ஜயசீலையாகவும் ; **पापनाशिनी** - பாபத்தை நாசம் செய்பவளுமான (அன்னை) **रक्ष** - காப்பாற்ற வேண்டும்.

கவசத்தோடு கூடாததும், ரக்ஷையில்லாததுமான யாதொரு ஸ்தானம் (இடம்) உண்டோ, அதையெல்லாம் என்னுடைய தேவியாயும், மிகச் சிறந்தவளாயும்,

பாபத்தை நாசம் செய்பவளுமாயிருக்கிற அன்னை காப்பாற்ற வேண்டும். (௩௭)

पदमेकं न गच्छेत्तु यदीच्छेच्छुभमात्मनः ॥ ३८ ॥
कवचेनावृतो नित्यं यत्र यत्र हि गच्छति ।
तत्र तत्रार्थलाभश्च विजयः सार्वकामिकः ॥ ३९ ॥
यं यं चिन्तयते कामं तं तं प्राप्नोति निश्चितम् ।

केचिद्दिवा तथा रात्रौ प्राणिनस्तुल्यदृष्टयः ।

(ப-ரை) केचित् - சில ப்ராணிகள்: दिवान्धाः - பகலில் குருடா யிருக்கின்றன. तथा - அவ்விதமே : परे - மற்றும் சில ப்ராணி கள் : रात्रौ - இரவில் : अन्धाः - குருடுகள். केचित् - சில: प्राणिनः - ப்ராணிகள் : तथा - அவ்விதமே : दिवारात्रौ - பகலிலும் இரவிலும். तुल्यदृष्टयः - ஸமமான பார்வைகளை யுடையவைகள்.

(பொ-ரை) சில ப்ராணிகள் பகலில் குருடுகள். (அதாவது பொறிகளுடைய செயலற்றவைகள்.) அவ் விதமே சில ப்ராணிகள் இரவில் குருடுகள். மற்றும் சில ப்ராணிகள் ஸமதிருஷ்டியுடையவைகள். அதாவது இரவும் பகலும் பொறிகளுடைய செயல்களை யுடை யவைகள். (சஅ)

பகலில் கோட்டான் முதலியவைகளும், இரவில் காகம் முதலியவைகளும் குருடுகள். பூனை முதலியவைகள் இரவிலும் பகலிலும் துல்யமான பார்வைகளை யுடையவைகள் என்பது கருத்து.

या निशा सर्वभूतानां तस्यां जागर्ति संयमी ।
यस्यां जाग्रति भूतानि सा निशा पश्यतो मुनेः ॥

" எல்லா ப்ராணிகளுக்கும் ஈச்வர ஞானமாகிய உண்மையா னது இரவு போல் இருக்கின்றதோ, அவ்விரவில் யோகியானவன் விழித்திருக்கிறான். எந்த ஸமயம் உலகத்தோற்றமாகிய நிலையற்ற அஞ்ஞானவிஷயங்களில் ப்ராணிகள் விழித்திருக்கின்றனவோ அதுவே உண்மை நிலையையுணர்ந்த யோகிக்கு இரவாகும் " என்ற கீதாவசனமும் இங்கு குறிப்பிடத்தக்கது.

ज्ञानिनो मनुजाः सत्यं किं नु ते न हि केवलम् ॥ ४९ ॥
यतो हि ज्ञानिनः सर्वे पशुपक्षिमृगादयः ।

(ப-ரை) मनुजाः - மனிதர்கள் : ज्ञानिनः - அறிவுள்ளவர்கள் : सत्यं - உண்மைதான். किंतु - ஆனல் : ते - அவர்கள் : केवलं - மாத்திரம் : न हि - இல்லை, यतः - ஏனெனில் : सर्वे - எல்லா : पशुपक्षिमृगादयः - பசு பறவை விலங்கு முதலியவைகளும் : ज्ञानिनः हि - அறிவுள்ளவைகள் அல்லவா.

(பொ-ரை) மனிதர்கள் அறிவுள்ளவர்கள் என்பது உண்மைதான், ஆனல் அவர்கள் மாத்திரமல்ல. ஏனெனில் பசு, பக்ஷி, மிருகம் முதலியவைகள் யாவும் அறிவுள்ளவைகளே யன்றோ. (சகூ)

மனிதன் சுத்த ஞானமுள்ளவனுகமாட்டான். அஜ்ஞானத்தோடு கூடிய ஞானத்தையேயுடையவன். "तद्विमुक्तस्तु केवली- அந்த அஜ்ஞானத்தினின்றும் விடுபட்டவனே ஞானியாவன்" என்பது சிவஸூத்ரம். எனவே உத்தம ஞானிக்குள்ள ஞானத்தையே கேவலம்-முக்யம்-என்ற பதத்தால் இங்கு குறிக்கப்படுகிறது. அதாவது அஜ்ஞானத்தோடு கலவாத ஞானமென்பதாம். ஆகையால் அரசனும், வைச்யனுமாகிய நீங்கள் இருவரும் அஜ்ஞானிகளே என்பது ஸாரம்.

ज्ञानं च तन्मनुष्याणां यत्तेषां मृगपक्षिणाम् ॥ ५० ॥
मनुष्याणां च यत्तेषां तुल्यमन्यत्तथोभयोः ।

(ப-ரை) मृगपक्षिणाम् - விலங்குகளுக்கும், பறவைகளுக்கும்: यत् - யாதொரு : ज्ञानम् - ஞானமுண்டோ : तम् அந்த ஞானமும்: तेषां - அந்த : मनुष्याणाम् - மனிதர்களுக்குமுண்டு, मनुष्याणां च - மனிதர்களுக்கும் : यत् - யாதொரு : (சாஸ்த்ர ஞானமுண்டோ)

तथा - அவ்விதமே : **तेषां** - விலங்குகளுக்கும் பக்ஷிகளுக்கும் : **तत्** - (அந்த அந்த ஜாதிக்குத் தேவையாக நியமித்திருக்கும்) ஞானமுமுண்டு; **अन्यत्** - வேறு அறிவு: (ஆஹாரம், நித்ரை, பயம், புணர்ச்சி முதலியவை) **उभयोः** - விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும்: **तुल्यम्** - ஸமானமேயாகும்.

(பொ - ரை) விலங்குகளுக்கும், பறவைகளுக்குமுள்ள விஷயஞானமும், அவைகளைப்போல விசேஷ புத்தியில்லாத மனிதர்களுக்குமுண்டு. மனிதர்களுக்கு விசேஷமாக சாஸ்த்ரீய ஞானமுண்டாவது போல விலங்குகளுக்கும் பறவைகளுக்கும் அந்த அந்த ஜாதிகளுக்கு உபயோகமாக நியமித்திருக்கிற ஞானமுமுண்டு. உணவு, தூக்கம், பயம், புணர்ச்சி முதலிய செய்கைகள் யாவும் மனிதர்களுக்கும், விலங்குகளுக்கும் ஸமானமேயாகும். (ருய)

ज्ञानेऽपि सति पश्यैतान् पतङ्गाञ्छावचञ्चुषु ॥ ५१ ॥

कणमोक्षादृतान्मोहात्पीड्यमानानपि क्षुधा ।

(ப-ரை) **ज्ञाने सति अपि** - ஞானமிருந்தபொழுதிலும் : **क्षुधा**- பசியால்; **पीड्यमानान् अपि** - பீடிக்கப் பட்டவையாயினும்: **मोहात्**- மோஹத்தின் காரணமாக : **शावचञ्चुषु** - தங்களுடைய குஞ்சுகளின் மூக்குகளில்; **कणमोक्षादृतान्** - தினித் துணுக்குகளைக் கொடுப்பதில் ஆதரவோடு கூடியவையான ; **एतान्** - இந்த ; **पतङ्गान्** - பறவைகளை : **पश्य** - பார்.

(பொ - ரை) பக்ஷிகளைப் பார். அவைகளுக்கு அறிவிருந்தாலும், தாங்கள் பசியால் வருந்தினாலும், அவைகள் தங்களுடைய குஞ்சுகளின் வாயில் தீனியைக் கொடுக்கின்றன, (ருக)

पश्य - பச்ய - என்றதால் விஷய ஞானத்திற்கும். மோக்ஷத்திற்குக் காரணமான ஞானத்திற்குமுள்ள வித்யாஸத்தைக் குறிப்பிடுவதாகும்.

मानुषा मनुजव्याघ्र साभिलाषाः सुतान् प्रति ॥ ५२ ॥
लोभात्प्रत्युपकाराय नन्वेतान् किं न पश्यसि ।

(ப-ரை) मनुजव्याघ्र - மானிட சிரேஷ்டனே! मानुषाः - மனிதர்கள் ; सुतान् प्रति - மக்களைக் குறித்து ; प्रत्युपकाराय - பதில் உபகாரத்தின் பொருட்டு : लोभात् - மோஹத்தின் காரணமாக : साभिलाषाः - ஆசையோடு கூடியவர்கள் ; ननु - அன்றோ ! एतान् - இவர்களை ; न पश्यसि किम् - நீ அறியவில்லையா என்ன ?

(பொ - ரை) ஓ மானிடசிரேஷ்டரே! மனிதர்களைப் பார். அவர்களும் மக்கள்பால் விச்வாஸமுள்ளவர்களே, ஆனால் பதில் உபகாரத்தையும் அவர்களிடமிருந்து லோபத்தால் எதிர்பார்க்கின்றனர். இது உனக்குத் தெரியாதா? (ருஉ)

மனிதர்களுக்கு தனது சரீரத்தைக் காட்டிலும் வெளி உறுப்பினர்களான தனது மக்கள் பால் அதிக அன்பு உண்டாகின்ற காரணத்தால் மோஹம் ஞானம் இவையிரண்டும் துல்யமாகவே யிருக்கிறது.

तथापि ममतावर्ते मोहगर्ते निपातिताः ॥ ५३ ॥
महामायाप्रभावेण संसारस्थितिकारिणः ।

(ப-ரை) **तथा अपि** - அப்படியிருந்தாலும்: **महामायाप्रभावेण** - மஹாமாயையினுடைய மஹிமையினால்: **ममतावर्ते** - மமதை என்னும் சுழிகளுடன் கூடிய: **मोहगर्ते** - மோஹமென்ற பள்ளத்தில்; **निपातिताः** - தள்ளப் பட்டவர்களாக: **संसारस्थितिकारिणः** - ஸம்ஸாரத்தின் ஸ்திதிகளைச் செய்கின்றவர்களாகின்றனர்.

(பொ-ரை) அப்படியிருந்தாலும், மனிதர்கள் மஹாமாயாதேவியினுடைய மஹிமையினால், மமதை (எனது என்ற அபிமானம்) யென்னும் சுழிகள் நிறைந்த, மோஹமென்ற (அஞ்ஞானம்) பெரிய பள்ளத்தில் தள்ளப்பட்டு ஸம்ஸார காரியங்களையே திரும்பத் திரும்பச் செய்கின்றனர். (ருங)

மக்களுக்கு ஸம்ஸாரத்தைக் கண்டு விரக்திவராததற்குக் காரணம் மஹாமாயையினுடைய மஹிமை தான் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

तन्नात्र विस्मयः कार्यो योगनिद्रा जगत्पतेः ॥ ५४ ॥
महामाया हरेश्चैतत्तया संमोह्यते जगत् ।

(ப-ரை) **महामाया** - மஹாமாயை: **जगत्पतेः** - லோகநாதனுகிய; **हरेः** - மஹாவிஷ்ணுவினுடைய: **योगनिद्रा** - யோக நித்ரா தேவியாவள்; **तया** - அவளால்: **एतत्** - இந்த: **जगत्** - உலகம்: **संमोह्यते** - நன்கு மோஹமடையும்படி செய்யப்பட்டிருக்கிறது. **तत्** - அதன்

காரணமாக; अत्र - இவ் விஷயத்தில்; विस्मय: - ஆச்சர்யம்; न कार्य:- அடைய வேண்டாம்.

(பொ - ரை) மஹாமாயை என்று சொல்லப்பட்ட ஆனந்த வடிவான அந்த தேவியானவள் லோகநாதனுகிய ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய யோகநித்ரையே யாவள். அந்த மஹாமாயையே இந்த உலகம் முழுவதையும் பரவசமடையச் செய்கிருள். ஆதலால் நீ இவ்விஷயத்தில் ஆச்சரியப்படவேண்டாம். (ருச)

योगनिद्रा - யோகநித்திரை; தமோ குணத்தையே முக்கியமாகக் கொண்டவள். யோகமாகிற நித்ரை - அதாவது விஷயங்களினின்றும் சித்த விருத்தியை-வியாபாரத்தை-திருப்பி பிரபஞ்சத்தை மறந்து, ஆத்மாவை த்யாநித்துக் கொண்டிருக்கும் நிலையாகும். தேவர்களுக்கு உறக்கமில்லாதது கொண்டு இதை ஸாதாரண நித்ரையென்று சொல்ல முடியாது.

विस्मय: - விஸ்மய : மோஹம் எனவும் கொள்ளலாம்.

ज्ञानिनामपि चेतांसि देवी भगवती हि सा ॥ ५५ ॥
बलादाकृष्य मोहाय महामाया प्रयच्छति ।

(ப-ரை) सा - அந்த ப்ரஸித்தமான; भगवती - ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்களும் நிறைந்த; महामाया - மஹாமாயை என்ற; देवी - தேவியானவள்; ज्ञानिनाम् - விசேஷ ஞானத்தோடு கூடியவர்களுடைய; चेतांसि अपि - அந்தக்கரணங்களையும் கூட; बलात् - பலாத்காரமாக; आकृष्य - இழுத்து; मोहाय - மோஹத்தின் பொருட்டு; प्रयच्छति - கொடுக்கிருள்.

(பொ - ரை) அந்த ப்ரஸித்தமான ஐச்வர்யம் முதலிய ஆறுகுணங்கள் நிறைந்த மஹாமாயா என்ற தேவியானவள், விசேஷ ஞானத்தோடு கூடியவர்களாயினும், அவர்களுடைய அந்தக்கரணங்களை பலாத்காரமாக இழுத்துப் பரவசமடையச் செய்கிருள். (ருரு)

तया विसृज्यते विश्वं त्रैलोक्यं सचराचरम् ॥ ५६ ॥
सैषा प्रसन्ना वरदा नृणां भवति मुक्तये ।

(ப-ரை) तया - அந்த மாயையினுல் : विश्वम् - ஸமஸ்தமான: सचराचरम् - ஸ்தாவரஜங்கமங்களோடு கூடிய ; त्रैलोक्यम् - மூவுலகும் : विसृज्यते - விசேஷமாக ஆக்கப்படுகிறது. सा एषा - (பந்தத்திற்குக் காரணமான) அந்த தேவீ: प्रसन्ना - அநுக்ரஹம் செய்யும் தன்மை வாய்ந்தவளாயும் ; नृणाम् - மனிதர்களுக்கு ; मुक्तये - முக்தியின் பொருட்டு : वरदा - வரத்தைக் கொடுப்பவளாகவும் ; भवति - இருக்கிருள்.

(பொ - ரை) அந்த மஹாமாயையினுல் ஸமஸ்தமான ஸ்தாவரஜங்கம வடிவாயமைந்த இம்மூவுலகும் விசேஷமாக ஆக்கப்படுகிறது. அந்த மாயா சக்தி பந்தத்திற்குக் காரணமாயிருந்தாலும் அநுக்ரஹம் செய்யும் தன்மை வாய்ந்தவளாயிருந்து கொண்டு மனிதர்களுக்கு மோக்ஷத்திற்குக் காரணமான வரத்தையும் கொடுப்பவளாக இருக்கிருள். (ருசா)

முக்தி துர்லபமல்ல, ஸ்ரீதேவி, மோஹத்தால் மக்களைப் பரவசமடையச் செய்தாலும், அந்ததேவியினுடைய உபாஸனைகளைக்

கொண்டும், நித்யகர்மாதிகளைக் கொண்டும், அந்த தேவீ ஸந்தோஷ மடைந்து மோக்ஷத்தைக் கொடுப்பவளாக இருக்கிருள் என்பது நாகேசபட்டருடைய உரையாகும்.

जगदेतच्चराचरम् - ஜகதேதச்சராசரம் - எனவும் பாடமுண்டு. **चराचरम्** - சராசரம் - ஸ்தாவரஜங்கமவடிவாயமைந்த, **एतत्** - ஏதத் - இந்த ; **जगत्** - ஜகத் - உலகு எனப்பொருளாகும்.

सा विद्या परमा मुक्तेर्हेतुभूता सनातनी ॥ ५७ ॥
संसारबन्धहेतुश्च सैव सर्वेश्वरेश्वरी ॥ ५८ ॥

(ப-ரை) **सनातनी** - நித்யையாகவும் : **मुक्तेः** - மோக்ஷத்திற்கு : **हेतुभूता** - காரணமாயிருப்பவளும்: **परमा** - எல்லாவற்றிலும் சிறந்தவளாயுமிருக்கிற : **विद्या** - வித்யையாகவும் இருப்பவள் : **सा** - அந்த மஹாமாயையேயாவள் : **संसारबन्धहेतुः च** - ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமான அவித்யையும்: **सर्वेश्वरेश्वरी** - ஈச்வரன் முதலிய ஸகலதேவர்களுக்குத் தலைவியும் : **सा एव** - அவளேயாவள்.

(பொ-ரை) அந்த மஹாமாயை அழிவற்றவள். மோக்ஷத்திற்குக் காரணமாயிருப்பவள். எல்லா வஸ்துக்களிலும் சிறந்து விளங்குகின்றவள். ஆனல் அவளே ஸம்ஸாரபந்தத்திற்குக் காரணமான அவித்யையுமாவள். ஈச்வராதிகளுக்கும் தலைவியாயிருப்பவளும் அந்த மஹாமாயையே யாவள். (ருஎ, ருஅ)

பந்தம் மோக்ஷம் இவ்விரண்டிற்கும் காரணமாயிருக்கும் தன்மை எவ்விதமெனில் சித்சக்தியும், ஜடசக்தியும் ஒன்ருக இருப்பதேயாகும். அவை வித்யை, அவித்யை என்ற இரண்டு

வடிவத்தோடு இருந்தாலும் மோக்ஷம் அந்த மாயையினிடத்தில் உண்டாவதில்லை, ஸம்ஸாரபந்தத்திற்கு ஹேதுவான அவித்யையும் அவளே.

परमा - பரமா - சிறந்த புருஷார்த்தத்தை ஸாதித்துக் கொடுப்பவள்.

विद्या - வித்யா - ப்ரஹ்மாநந்த வடிவம் கொண்டவள், மற்றும் வித்யை என்பது பரமபுருஷார்த்தத்தை ஸாதித்துக் கொடுப்பது கொண்டு ப்ரஹ்மஞானலக்ஷணமும் உள்ளதாகும் என்பதும் கருத்து.

सनातनी - ஸநாதநீ - ஆதியும் அந்தமுமில்லாது நித்யவடிவாயுள்ளவள். **सत्यं ज्ञानमनन्तं ब्रह्म** - ஸத்யம் ஞானம் அநந்தம் **ப்ரஹ்ம** - என ச்ருதி சொல்லுவது போல ஆதியும், அந்தமுமில்லாது ப்ரஹ்மவடிவாய் நித்யமாய் நிலைத்து நிற்பவள் என்பதும் ஸாரமாகும்.

सर्वेश्वरेश्वरी - ஸர்வேச்வரேச்வரீ - ஈச்வரத் தன்மையை ஸம்பாதித்துக் கொடுப்பவள்.

राजोवाच ॥ ५९ ॥

भगवन् का हि सा देवी महामायेति यां भवान् ॥ ६० ॥
ब्रवीति कथमुत्पन्ना सा कर्मास्याश्च किं द्विज ।

राजा - அரசன் : **उवाच** - சொன்னான்.

(ப-ரை) **भगवन्** - ஓ பகவானே! **भवान्** - நீர் : **महामाया** - மஹாமாயை : **इति** - என்று : **याम्** - எவளை : **ब्रवीति** - சொல்லுகிறீரோ : **सा** - அந்த : **देवी** - தேவியானவள் : **का हि** - எவள் ? **सा** - அவள் :

कथम् - எவ்விதம்: **उत्पन्ना** - உண்டானள்: **द्विज** - ஓ அந்தண! **अस्याः** - இவளுடைய: **कर्म च** - செயலும்: **किम्** - என்ன?

அரசன் சொன்னன். (ருக)

(பொ - ரை) ஓ மஹர்ஷியே! இங்கு மஹாமாயா என்று நீர் எவளைச் சொல்லுகிறீர். அவள் யார்? அவள் எவ்விதம் உண்டானள்? ஓ அந்தண! அந்த தேவியினுடைய செயலும் யாது? (சுய)

இவ்விடத்தில் யார்? எவ்விதம்? எது? என்றது முறையே ஸ்வரூபஞானத்தையும், உத்பத்தியையும், ப்ரபாவத்தையும் குறிப்பதாகும்.

यत्प्रभावा च सा देवी यत्स्वरूपा यदुद्भवा ॥ ६१ ॥
तत्सर्वं श्रोतुमिच्छामि त्वत्तो ब्रह्मविदांवर ॥ ६२ ॥

(ப-ரை) **ब्रह्मविदां वर** - ப்ரஹ்மஞானிகளுக்குள் சிறந்தவனே! **सा** - அந்த: **देवी** - தேவீ: **यत् प्रभावा** - எவ்வித மஹிமையுள்ளவள்? **यत् स्वरूपा** - எவ்வித வடிவம் கொண்டவள். **यत् उद्भवा**- எவ்விதம் உண்டாயினள்: **तत् सर्वम् च** - அவை எல்லாவற்றையும்: **त्वत्तः** - உன்னிடமிருந்து: **श्रोतुम्** - கேட்பதற்கு: **इच्छामि**- விரும்புகிறேன்.

(பொ - ரை) ப்ரஹ்மனிஞானிகளில் தலைசிறந்து விளங்கும் ஓ மஹர்ஷியே! அந்த தேவியினுடைய மஹிமை தான் என்ன? அவளுடைய ஸ்வரூபம் தான் எவ்விதம்? அவளுடைய பிறப்புத் தான் எவ்விதம்?

இவைகளை யெல்லாம் உம்மிடமிருந்து கேட்க விரும்புகிறேன். (சுக, சுஉ)

இவ்விடத்தில் ப்ரபாவம், ஸ்வரூபம், உத்பவம் (பிறப்பு) என மூன்று கேள்விகள் அரசனால் கேட்கப் படுகின்றன. **ब्रह्मविदांवर - ப்ரஹ்மவிதாம் வர** - ப்ரஹ்மத்தை அறிந்தவர்களுக்குள் தலை சிறந்தவன் என்றதால், மஹர்ஷி சொல்லுவதெல்லாம் உபநிஷத்துக்களுடைய பொருள்களின் ஸாரமானவைகள் என்பதும் கிடைப்பதாகும்.

மற்றும் **प्रभावा - ப்ரபாவா**-என்றதால் எவ்விதத் திறமை வாய்ந்தவள் எனவும், **स्वरूपा - ஸ்வரூபா** - என்றதால் எவ்விதமான ஆக்ருதி (உருவம்) யோடு கூடியவள் எனவும், **उद्भवा- உத்பவா** (பிறப்பு) என்றதால் எவ்விடமிருந்து உண்டானாள் எனவும் கொள்ளலாம்.

ऋषिरुवाच ॥ ६३ ॥
नित्यैव सा जगन्मूर्तिस्तया सर्वमिदं ततम् ॥ ६४ ॥
तथापि तत्समुत्पत्तिर्बहुधा श्रूयतां मम ।

ऋषिः - மஹர்ஷி : **उवाच** - சொன்னார்.

(ப-ரை) **जगन्मूर्तिः** - ஜகத்ஸ்வரூபிணியான : **सा** - அந்த தேவி : **नित्या एव** - நிலைத்திருப்பவளே : **इदम्** - இங்கு தோற்றமளிக்கும்: **सर्वम्** - எல்லா ப்ரபஞ்சமும் : **तया** - அவளால்: **ततम्** - நிர்மாணம் செய்யப்பட்டது. **तथा-अपि** - அப்படி இருந்தாலும் : **तत्-समुत्पत्तिः** - அவளுடைய உற்பத்தியானது: **बहुधा** - பலவிதமாகும். **मम** - (அதை) என்னிடமிருந்து : **श्रूयताम्** - கேட்கப் படட்டும்.

மஹர்ஷி சொன்னுர். (சுங)

(பொ-ரை) உலகவடிவம் கொண்டவளாம் அந்த தேவீ நிலைத்திருப்பவளே. அவளுக்கு முக்காலத்திலும் மறைவு கிடையாது. அவளே இவ்வண்டங்கள் முழுவதும் பரவி நிற்பவள்.இவ்வண்டங்களும் அவளால் நிர்மாணம் செய்யப்பட்டவை, எனினும் அவளுடைய உத்பத்தி எவ்விதமெனில் அது பலவகையாம், அதை என்னிமிடமிருந்து நீ கேட்பாயாக. (சுச)

இவ்விடம் ஸுமேதஸ் மஹர்ஷி அந்த தேவீ அழிவற்றவள் என்றும், பிறப்பில்லாதவள் என்றும், உலக வடிவம் கொண்டவள் என்றும்; உத்பத்தியையும், ஸ்வரூபத்தையும் குறித்து ரூடியாகச் சொல்லி देवानां कार्यसिद्ध्यर्थं - தேவர்களுடைய காரியத்தின் பொருட்டு, உண்டாகுள் என்று தேவியினுடைய உத்பத்தியின் காரணத்தையும் பெருமையையும் அரசனுக்குச் சொல்ல ஆரம்பிக்கிருர் என்பது தாத்பர்யம்.

जगन्मूर्तिः - ஜகந்மூர்த்தி: - என்றதால் இந்த உலகை விட்டு ஸ்ரீ தேவிக்கு வேறு ஒரு முக்யமான சரீரம் கிடையாது என்பதும் ஸூசனை செய்யப்படுகிறது, அதாவது உலகுக்குப்புகலிடமாயிருக்கிறவள் எனத்தாத்பர்யம்.

तया सर्वमिदं ततम् - தயா ஸர்மிதம் ததம் - இவ்வுலகம் சித்தின் வடிவாயமைந்த அந்த தேவியால் வியாபிக்கப்பட்டிருக்கிறது என்றதால் அந்த தேவீ எத்தன்மை வாயந்தவள் என அரசன் கேட்டதற்கு பதில் கூறும் வகையிலே அமைந்ததாகக் கொள்ளலாம்.

ततम् - ததம் - விஸ்தாரம் - பரவியிருக்கும் தன்மை.

नित्या - நித்யா - என்ற பதம் ஸ்ரீதேவிக்கு முக்யமாக உத்பத்தியும், அதன் காரணமும் கிடையாது என்பதை வலியுறுத்தும். எனினும் இங்கு உத்பத்தி முதலியவைகள் ஔபசாரிகமாக (உபசாரம் அதாவது உலகவழக்கு) வழங்கப் பெறுவதாகும்.

देवानां कार्यसिद्ध्यर्थमाविर्भवति सा यदा ॥ ६५ ॥
उत्पन्नेति तदा लोके सा नित्याप्यभिधीयते ।

(ப-ரை) **सा** - அவள்; **नित्या अपि** - நிலைத்திருப்பவளாயினும்; **देवानाम्** - தேவர்களுடைய; **कार्यसिद्ध्यर्थम्** - காரியத்தின் பொருட்டு: **यदा** - எப்பொழுது; **आविर्भवति** - தோன்றுகின்றனளோ: **तदा** - அப்பொழுது: **लोके** - உலகத்தில்: **उत्पन्ना** - உண்டானாள்; **इति** - என்று: **अभिधीयते** - சொல்லப்படுகிறாள்.

(பொ-ரை) அந்த தேவியானவள் நித்தியமாய் அழிவற்ற நிலையிலிருப்பவளாயினும், தேவர்களுடைய காரியத்தை ஸாதித்துக் கொடுப்பதற்கு எப்பொழுது அவதரிக்கின்றனளோ, அப்பொழுது முதல் உலகில் உண்டானாள் எனச் சொல்லப்படுகிறது. (சுரு)

योगनिद्रां यदा विष्णुर्जगत्येकार्णवीकृते ॥ ६६ ॥
आस्तीर्य शेषमभजत्कल्पान्ते भगवान् प्रभुः ।
तदा द्वावसुरौ घोरौ विख्यातौ मधुकैटभौ ॥ ६७ ॥
विष्णुकर्णमलोद्भूतौ हन्तुं ब्रह्माणमुद्यतौ ।

(ப-ரை) **कल्पान्ते** - ப்ரளயத்தின் முடிவில் : **जगति** - உலகம் : **एकार्णवी-कृते** - ஒரே ஸமுத்ரமயமாக ஆக்கப்பட்ட பொழுது : **भगवान्** - ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்கள் நிறைந்தவனும் : **प्रभुः** - திறமையுள்ளவனுமான : **विष्णुः** - மஹாவிஷ்ணுவானவர் : **शेषम्** - ஆதிசேஷனை: **आस्तीर्य** - படுக்கையாக விரித்துக் கொண்டு: **यदा** - எப்பொழுது : **योगनिद्राम्** - யோகநித்ரையை : **अभजत्** - அடைந்தாரோ: **तदा** - அப்பொழுது: **विष्णुकर्णमलोद्भूतौ** - விஷ்ணுவின் காதுகளிலுள்ள மலத்திலிருந்து (அழுக்கு) உண்டானவர்களும் : **घोरौ** - கொடியவர்களும் ; **मधुकैटभौ** - மது என்றும், கைடபன் என்றும்: **विख्यातौ** - ப்ரஸித்தர்களான : **द्वौ** - இரண்டு: **असुरौ** - அஸுரர்கள் : **ब्रह्माणम्** - ப்ரஹ்மாவை : **हन्तुम्** - கொல்லுவதற்கு : **उद्यतौ** - முயற்சித்தனர்,

(பொ-ரை) ஊழிக்காலத்திலே உலகம் கடல்களால் கொள்ளப்பட்டு ஒரே ஸமுத்ரமயமாகச் செய்யப்பட்ட பொழுது, ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்களும் நிறைந்து ஸ்வதந்த்ரனாக விளங்கும் ஸ்ரீமஹாவிஷ்ணுவானவர் ஆதிசேஷனைத் தனது படுக்கையாகச் செய்து, அதன்மேல் பள்ளிகொண்டு யோகநித்திரையையடைந்துவிட்டார். அச்சமயம் ஸ்ரீவிஷ்ணுவினுடைய கர்ணமலத்திலிருந்து உண்டானவர்களும், மிகவும் கொடிய குணங்களைக் கொண்டவர்களுமான மது, கைடபன் என்ற பிரஸித்தர்களான இரண்டு அஸுரர்கள் தோன்றினர். அவ்விருவரும் ப்ரஹ்மாவைக் கொல்லுவதற்கும் முயற்சித்தனர், (௬௬. ௬௭)

கர்ணமலம்: காது அழுக்கு.

இங்கு योगनिद्रा - யோகநித்ரை - என்ற பதமானது ஸ்ரீதேவீ யானவள் விஷ்ணுவையும் மோஹமடையச் செய்பவள் என் பதைக் குறிப்பதாகும். மற்றும் शेष: - சேஷன் - ஆதிசேஷன் என்ற ஸர்ப்பம். कल्पान्ते - கல்பாந்தம் - ஸர்வநாசஸமயம். எனவே சேஷ என்ற பதத்தால் அது மாத்திரம் எஞ்சி இருந்து, மற்றவைகள் அழியும் தன்மையுடையனவாம் என்பதையும் உணர்த்துவதாகும்: கர்ணமலத்திலிருந்து உண்டானவர்கள் என் றது கொண்டு அந்த மது, கைடபன் என்ற இருவரும் எல்லையற்ற தமோகுணத்தைக் கொண்டவர்கள் என்பதும் கிடைப்பதாகும். இந்த ச்லோகத்திலிருந்து தேவியினுடைய பெருமையை விளக் கும் கதை ஆரம்பமாகிறது.

स नाभिकमले विष्णोः स्थितो ब्रह्मा प्रजापतिः ॥ ६८ ॥
दृष्ट्वा तावसुरौ चोग्रौ प्रसुप्तं च जनार्दनम् ।
तुष्टाव योगनिद्रां तामेकाग्रहृदयस्थितः ॥ ६९ ॥
विबोधनार्थाय हरेर्हरिनेत्रकृतालयाम् ।
विश्वेश्वरीं जगद्धात्रीं स्थितिसंहारकारिणीन् ॥ ७० ॥
निद्रां भगवतीं विष्णोरतुलां तेजसः प्रभुः ॥ ७१ ॥

(பதவுரை) विष्णोः - விஷ்ணுவினுடைய; नाभिकमले - நாபி யிலுள்ள (தொப்பூழ்) கமலத்தில்: स्थितः - இருக்கிற; प्रभुः- தலைவரான; सः - அந்த; प्रजापतिः - ப்ரஹ்மன்: उग्रौ – பயங்கரர் களான: तौ - அந்த; असुरौ च – இரண்டு அஸுரர்களையும்: प्रसुप्तम्- நன்கு உறங்குகின்ற; जनार्दनं च – ஜநார்தநனையும்; दृष्ट्वा - பார்த்து; एकाग्रहृदयस्थितः - ஒரே உறுதியுடன் கூடிய மனதோடு கூட:

हरेः - விஷ்ணு வினுடைய; **विबोधनार्थाय** - விழிப்பின் பொருட்டு; **हरिनेत्रकृतालयाम्** - விஷ்ணுவினுடைய கண்களை இருப்பிடமாகக் கொண்டவளும்; **विश्वेश्वरीम्** - உலகம் முழுவதும் பரவியிருப்பவளும்; **जगद्धात्रीम्** - உலகைத்தரித்துக் கொண்டிரும்பவளும்; **स्थितिसंहारकारिणीम्** - இருப்பையும், அழிவையும் செய்கின்றவளும்; **अतुलाम्** - இணையில்லாதவளும்: **भगवतीम्** - ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்கள் நிறைந்தவளுமான: **तेजसः** - ஒளி வடிவாயிலங்கும்: **विष्णोः** - விஷ்ணுவினுடைய; **ताम्** - அந்த: **योगनिद्राम्**- யோகநித்ரை என்ற: **निद्राम्** - நித்ரா தேவியான மஹாமாயயை: **तुष्टाव** - துதித்தார்.

(பொ-ரை) அச்சமயம், ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய நாபீகமலத்தில் (தொப்பூழ் குழி) வாஸம் செய்கின்றவரும், ப்ராணிவர்கங்களுக்குத் தலைவனும், ஸ்வதந்த்ரனுமுள்ள நான்முகனும், மிகவும் கொடியவர்களான அந்த இரண்டு அஸுரர்களையும், அயர்ந்து துயில் கொண்டிருக்கும் மஹாவிஷ்ணுவையும் பார்த்து நிலைத்த ஒரே மனதுடன் விஷ்ணுவை எழுப்புவதற்காக அவருடைய கண்களின் இமையை ஆச்ரயித்து வாஸம் செய்து கொண்டிருப்பவளும், உலகம் முழுவதும் பரவியிருப்பவளும், உலகைத்தரித்துக் கொண்டிருப்பவளும், உலகின் ரக்ஷை, (காப்பாற்றல்) அழிவு இவைகளைச் செய்பவளும், இணையில்லாதவளும், ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்கள் நிறைந்தவளுமான தேஜஸின் (ஒளி) வடிவான ஸ்ரீ விஷ்ணுவினுடைய யோகநித்ரையாம் நித்ராதேவியாகிய அந்த மஹாமாயையைத் துதித்தார், (சூஅ, எக)

இங்கு **योगनिद्रा** - யோகநித்ரை - என்ற தேவியானவள் ப்ரதம சரிதத்திற்கு அதிதேவதையாவள். இவள் தமோ குணத்தை முக்யமாகக் கொண்ட மஹாகாளியாவள்.

एवं स्तुता तदा देवी तामसी तत्र वेधसा ।

அப்பொழுது இவ்விதம் தாமஸி தேவியானவள் அவ்விடத்தில் நான்முகனால் துதிக்கப்பட்டாள். என்பது உபஸம்ஹார (முடிவு) வசனமாகும்.

विश्वेश्वरी - விச்வேச்வரீ - என்ற பதத்தால் யோகநித்ரைக்கு மூலப்ரக்ருதியோடு கூட அபேதமானது (ஒன்றாயிருக்கும் தன்மை) வலியுறுத்துப்படுகிறது.

जगद्धात्री - ஜகத்தாத்ரீ-உலகையுண்டுபண்ணுபவள். எனவே யோகநித்ரைக்கு ப்ரஹ்மலக்ஷமான ஜகத்-ஸ்ருஷ்டி-ஸ்திதி ஸம் ஹாரங்களுமுண்டு என்பதும் கிடைப்பதாகும்.

तेजसः प्रभुः - தேஜஸ: ப்ரபு: - என்பது மிகுந்த உத்கர் ஷத்தை (சிறப்பு) ஸூசனை செய்வதாகும். இதை ப்ரஹ்மா விற்கு விசேஷணமாகவும் கொள்ளலாம்.

மற்றும் மஹாமாயை விஷ்ணுவையும் மோஹிக்கச் செய் பவள் என்றால் மற்றவர்களை மயங்கச் செய்வதில் வியப்பொன்று மில்லை. உண்மையில் விஷ்ணுவினுடைய நித்ரையென்பது விஷ்ணு வடிவான நித்ரையென்றே சொல்லவேண்டும்; ஸர்வேச்வரனும், ஸர்வசக்திகளும் கொண்டவனுமான நான்முகனும் உலகத்தின் அநுக்ரஹத்திற்காக, தான் மோஹ மடைந்தவன் போலும், தனது துன்பநிவிருத்திக்குப் போலும் துதித்தார் என்பது ரஹஸ் யார்த்தமாகும். (உட்கருத்தாகும்)

ब्रह्मोवाच ॥ ७२ ॥

त्वं स्वाहा त्वं स्वधा त्वं हि वषट्कारः स्वरात्मिका ॥ ७३ ॥

सुधा त्वमक्षरे नित्ये त्रिधामात्रात्मिका स्थिता ।

ब्रह्म - ப்ரஹ்மன் : उवाच - சொன்னார்.

(ப-ரை) अक्षरे - ப்ரஹ்மவடிவாயுள்ளவளே! नित्ये - அழிவில்லாது நிலைத்திருப்பவளே! त्वम् - நீயே: स्वाहा - ஸ்வாஹா வடிவினள்; त्वम् - நீயே: स्वधा ஸ்வதை வடிவினள், त्वम् - நீயே: वषट्कारः - வஷட்காரவடிவினள். त्वम् - நீயே: स्वरात्मिका हि - ஸ்வரத்தின் வடிவினள் அல்லவா! त्वम् - நீயே: सुधा- அமுத வடிவினள்: त्रिधामात्रात्मिका - அகார-உகார்ர-மகார-அர்த மாத்ரை வடிவாகவும்: स्थिता - (நீ) இருக்கிறாய்.

ப்ரஹ்மா சொன்னார். (எ௨)

(பொ-ரை) பரப்ரஹ்மத்தின் வடிவாய் நித்யமாயுள்ள ஓ தேவி! தேவகணங்களுக்கு ப்ரீதியையுண்டு பண்ணுகிற **ஸ்வாஹா** தேவீ என்ற வடிவத்தோடும்; அவ்விதமே பித்ருகணங்களுக்கு ப்ரீதியையுண்டு பண்ணுகிற **ஸ்வதா** தேவீ என்ற வடிவத்தோடும்; ஸகல கர்மபல வடிவான ஸ்வர்கத்தை யுத்தேசித்துச் செய்கிற **வஷட்** என்ற சப்தத்தின் வடிவாகவும், அகாரம் முதலான ஸ்வராக்ஷரவடிவாகவும், அல்லது உதாத்தாநுதாத்தஸ்வரிதமான மூன்று ஸ்வரங்களின் வடிவாகவும்; அல்லது ஸ்வர்கத்தின் வடிவாகவும்; அம்ருதத்தின் வடிவாகவும்,

அல்லது ஞானஸ்வரூபமான மோக்ஷத்தின் வடிவாகவும்; அகார-உகார-மகார-அர்தமாத்ரையின் வடிவாகவும் இருப்பவள் நீயே யன்றோ! (எங)

" एकैव शक्तिः परमेश्वरस्य भिन्ना चतुर्धा विनियोगकाले ।
भोगे भवानी पुरुषेषु विष्णोः कोपेषु काली समरेषु दुर्गा ॥ "

" பரமேச்வரனுடைய ஒரே சக்தியானது விநியோக காலத்தில் நான்கு வகையாக மாறுதல் அடைகிறது. போக (அநுபவ) காலத்தில் **பார்வதீ** என்றும், புருஷவடிவில் **விஷ்ணுவாகவும்**; கோபகாலத்தில் **காளியாகவும்**; யுத்தஸமயத்தில் **துர்கை** யாகவும் சொல்லப்படும். என்ற ப்ரமாண வசனத்தையநுஸரித்து விஷ்ணுவும் காளியும் ஒன்று எனவும், மதுகைடபவதம் விஷ்ணு வேஷத்தோடு கூடிய காளியால் தான் செய்யப்பட்டதாகையால் அந்த காளியையே இங்கு துதிக்கப்படுகிருள் என்றும் குப்வதீ உரையாசிரியர் கூறுவர்.

स्वाहा - ஸ்வாஹா - தேவகணங்களை த்ருப்தி செய்பவள்.

स्वधा - ஸ்வதா - பித்ருகணங்களைத்ருப்தி செய்பவள்.

वषट्कारः - வஷட்கார; - வஷட் என்று யாககாலத்தில் சொல்லப்படும் சப்த வடிவமாயிருப்பவள்.

स्वरात्मिका - ஸ்வராத்மிகா - ஸகலகர்ம பலத்தோடு கூடிய ஸ்வர்க வடிவாயிருப்பவள். அல்லது உதாத்தம், அநுதாத்தம், ஸ்வரிதம் என்ற மூன்று ஸ்வரங்களின் வடிவினள். அல்லது அகாரம் முதலான பதினாறு ஸ்வராக்ஷரங்களின் வடிவினள்.

सुधा - ஸுதா - அமுத (மோக்ஷம்) வடிவினள், அதாவது ஞானத்தின் பலனும் தேவியின் திருமேனியின் வடிவமாகும்.

अक्षरम् - பரப்ரஹ்மவடிவம். **अक्षरं ब्रह्मपरमम्** - என்பது கீதை.

त्रिधामात्रात्मिका - த்ரிதாமாத்ராத்மிகா - என்றதால் த்ரிதா (மூன்று) த்ரிதாமா, த்ராத்மிகா என மூன்று விதமாகப் பிரித்துக் கொண்டு த்ரிதா - என்ற பதத்திற்கு மூன்று உலகங்களையும், மூன்று வேதங்களையும், ப்ரஹ்ம-விஷ்ணு-ருத்ரர்களையும்; த்ரிதாமா-என்ற பதத்திற்கு பூமி, ஸ்வர்கம், பாதாளம் என்றவைகளையும், ஸ்தூலம், ஸூக்ஷ்மம், காரணம் என்ற மூன்று சரீரங்களையும், சந்த்ரன், ஸூர்யன், அக்நி என்றவர்களையும், இச்சை, ஞானம், க்ரியை என்ற மூன்று சக்திகளையும், இவைகளுடைய இருப்பிடங்களையும்; த்ராத்மிகா - விஷ்ணுவின் வடிவாகவும், (அதாவது ரக்ஷிப்பதாகும்) ப்ராஹ்மீ, மாஹேச்வரீ வைஷ்ணவீ என்ற வடிவங்களாகவும் பொருள் கொள்ளலாம். அல்லது ப்ரணவவடிவமென்றும் கொள்ளலாம்.

अर्धमात्रास्थिता नित्या यानुच्चार्या विशेषतः ॥ ७४ ॥
त्वमेव सा त्वं सावित्री त्वं देवि जननी परा ।

(ப-ரை) या - எந்த தேவியானவள்; अर्धमात्रास्थिता - அர்த மாத்ரையில் வாஸம் செய்கிறாளோ; नित्या - நித்யையாயும்; विशेषतः - விசேஷமாக; अनुच्चार्या - உச்சரிக்க முடியாதவளோ; सा - அவள்; त्वम् एव - நீயே. सावित्री - காயத்ரியின் வடிவமும்; त्वम् - நீயே; देवि - ஓ தேவி; परा - சிறந்தவளான; जननी - அன்னையும்; त्वम् - நீயே.

(பொ-ரை) அர்தமாத்ரையில் வாஸம் செய்பவளும், நித்யையாயும், விசேஷமாக உச்சரிக்க முடியாதவளுமாயிருப்பவளும் நீயே. காயத்ரியின் வடிவாயிருப்பவளும் நீயே. ஓ தேவி! சிறந்த அன்னையும் நீயேயன்றோ. (எச)

இவ்விடத்தில் **अनुच्चार्या** - அநுச்சார்யா - உச்சரிக்க முடியாதவள் என்ற பதமானது அர்தசந்த்ரன், ரோதிநீ முதலிய எட்டுவித த்வநிகளைக் குறிப்பதாகும். அதாவது அந்த த்வநிகளின் வடிவாயமைந்தவள் என்பது கருத்து.

सावित्री - ஸாவித்ரீ - ஸவிதாவை-ஸூர்யனை-தேவதையாகக் கொண்ட காயத்ரீமந்த்ரத்தின் வடிவாயிருப்பவள்.

त्वयैतद्धार्यते विश्वं त्वयैतत्सृज्यते जगत् ॥ ७५ ॥
त्वयैतत्पाल्यते देवि त्वमत्स्यन्ते च सर्वदा ।

(ப-ரை) **देवि** - ஓ தேவி; **त्वया** - உன்னால்; **एतत्** - இந்த; **जगत्** - உலகம்; **सृज्यते** - உண்டாக்கப் படுகுறது. **त्वया** - உன்னால்; **एतत्** - இவ்வுலகம்; **पाल्यते** - காப்பாற்றப்படுகிறது. **त्वम्** - நீ; **अन्ते** - முடிவில்; **अत्सि** - ஸம்ஹாரம் செய்கிறாய்; **सर्वदा च** - எல்லாவிதத்திலும்; **त्वया** - உன்னால்; **एतत्** - இந்த; **विश्वम्** - உலகம்; **धार्यते** - தரிக்கப்படுகிறது.

(பொ-ரை) ஓ தேவி! இவ்வுலகம் உன்னால் ஆக்கப் படுகிறது அவ்விதமே நிலை நிறுத்தப்படுகிறது. முடிவில் அழிக்கப்படுகிறது. இவ்விதம் எப்படிப் பார்த்தாலும் உன்னாலேயே இவ்வுலகம் தரிக்கப்படுகிறது. (எரு)

ப்ராஹ்மீ சக்தியின் வடிவாயிருந்து கொண்டு உலகை ஸ்ருஷ்டித்து, வைஷ்ணவிசக்தியின் வடிவாயிருந்து கொண்டு உலகை துன்பத்தின்றும் காப்பாற்றியும், ரௌத்ரீசக்தியின் வடிவாயிருந்து கொண்டு இவ்வுலகை ஊழிக்காலத்தில் அழித்தும் வருவதும் இந்த மஹாமாயையேயாவள்.

இவ்விதம் அடிக்கடி ஸ்ருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்ற மூன்றுவித லக்ஷணத்தோடு கூடிய இப்பிரபஞ்சம் உண்மையில் ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் என்ற மூன்று தேவர்களை ஸ்ருஷ்டிக்கு வியாஜமாகக் (கருவியாக) கொண்டிருப்பதுவும் ஒரே சக்தியாக விளங்கும் ஸ்ரீ தேவியின் திருவடியேயாகும் என்பது ஸாரம்.

विसृष्टौ सृष्टिरूपा त्वं स्थितिरूपा च पालने ॥ ७६ ॥
तथा संहृतिरूपान्ते जगतोऽस्य जगन्मये ।

(ப-ரை) **जगन्मये** - உலகங்களின் வடிவாயமைந்த ஓ அன்னையே! **त्वम्** - நீ; **अस्य** - இந்த; **जगतः** - உலகத்தினுடைய; **विसृष्टौ** - ஸ்ருஷ்டி ஸமயத்தில்; **सृष्टिरूपा** - ஸ்ருஷ்டியின் வடிவாயிருப்பவள். **पालने** - ரக்ஷிப்பதில்: **स्थितिरूपा** - ஸ்திதியின் வடிவாயிருப்பவள். **तथा** - அவ்விதமே; **अन्ते** - முடிவில்; **संहृतिरूपा च** - ஸம்ஹாரத்தின் வடிவாயிருப்பவளும் நீயே.

(பொ-ரை) உலகங்களின் வடிவாயமைந்த ஓ அன்னையே! இவ்வுலகை விசேஷமாக நிர்மாணம் செய்வதில் ஸ்ருஷ்டியின் வடிவாகவும், அவ்விதமே ரக்ஷிக்கும் பொழுது ஸ்திதியின் வடிவாகவும், அவ்விதமே முடிவில் அழிக்கும் பொழுது ஸம்ஹாரத்தின் வடிவாகவும் இருப்பவள் நீயே யன்றோ! (எசு)

ஸ்ருஷ்டியில், ஸ்ருஷ்டியைச் செய்கிற சக்திக்கும், ஸ்திதியில் ஸ்திதியைச் செய்கிற சக்திக்கும், ஸம்ஹாரத்தில், ஸம்ஹாரத்தைச் செய்கிற சக்திக்கும் உண்மையில் வேற்றுமை கிடையாது என்பது ஸாரம்,

महाविद्या महामाया महामेधा महास्मृतिः ॥ ७७ ॥
महामोहा च भवती महादेवी महासुरी ।

(ப-ரை) **महाविद्या** - சிறந்த ப்ரஹ்ம விஷயமான ஞான வடிவினள்; **महामाया** - மூலாவித்யா வடிவினள்; **महामेधा** - பெருகிய மேதையையுடையவள்; **महास्मृति** - மஹத்தான வேத வித்தையின் வடிவினள்; **महादेवी** - மஹா தேவனுடைய மனைவியாயிருப்பவள்; **महासुरी च** - மஹத்தான அஸுர சக்தியையுடையவள்; **भवती** - நீ.

(பொ-ரை) ஓ அன்னையே! நீ மஹத்தான பரப்ரஹ்ம விஷயமான ஞானத்தின் வடிவாயிருப்பவள். ஸகல விஷயங்களிலும் பரவியிருந்து கொண்டு ஒன்றில் மற்றொன்றைத் தோற்றுவிக்கும் சக்தியாம் மூலாவித்தையின் வடிவாயிருப்பவள். ஸகல வஸ்துக்களுடைய தத்துவங்களைத் தரித்துக்கொள்ளும் திறமையுள்ள புத்தியின் வடிவாயிருப்பவள், நான்முகனுடைய உலக ஸ்ருஷ்டிக்கு அநுகூலமாயிருக்கிற சென்ற கல்பங்களிலுள்ள ஸகல வஸ்துக்களின் ஞாநவடிவாகவும், வேத வடிவாகவும், ஸம்ஸார சக்தியாகவும், மஹாதேவனுடைய மனைவியாகவும், மஹத்தான அஸுர சக்தியின் வடிவாகவும் இருப்பவள் நீயே யன்றோ! (எஎ)

महाविद्या - மஹாவித்யா-மஹாவாக்ய லக்ஷணங்கள் கொண்ட வித்யா.

महामाया - மஹாமாயா - ஸமஸ்த வஸ்துக்களுடைய விஷயங்களிலும் பரவியிருந்து கொண்டு ஒரு வஸ்துவிலிருந்து மற்ருெரு வஸ்துவைத் தோன்றச் செய்வதாகவுள்ள சக்தி. அல்லது ஸச்சிதாநந்த வடிவான ஆத்மாவினிடத்தில், ஸாம்ஸாரிக வடிவமான அநர்த்தத்தை (அஞ்ஞானத்தை) தோன்றச் செய்வதற்குக் காரணமான மூலாவித்யா. அல்லது ஸ்ரீ பகவானுடைய ஸர்வ ஜ்ஞத்வ-சக்தி. இதுவே மூலாவித்யா என்பதாகும்.

महामेधा - மஹாமேதா - ஸகல வஸ்துக்களுடைய தத்துவங்களைத் தரித்துக்கொள்ளக்கூடிய திறமை வாய்ந்த புத்தியின் சக்தியாம்.

महास्मृतिः - மஹாஸ்ம்ருதி - உலகை நிர்மாணம் செய்யும் நான்முகனுக்குத் துணையாயிருக்கிற சென்ற கல்பங்களிலுள்ள ஸகல வஸ்துக்களுடைய ஞாந வடிவாயிருப்பவள். அதாவது வேத வடிவினள்.

महामोहा - மஹாமோஹா - மஹத்தான ராகத்தை (ஆசை) ஆச்ரயித்த ஸம்ஸாரசக்தி.

महादेवी - மஹாதேவி - ஸகலதேவசக்தி - அதாவது இந்த்ரன் முதலிய ஸகல லோகபாலகர்களுடைய தர்மசக்தியின் வடிவாம்.

महासुरी - மஹாஸுரீ - மஹத்தான அஸுரசக்தி. அதாவது மிகவும் பராக்ரமம் பொருந்திய ஹிரண்யாக்ஷன் முதலியவர்களிடம் அஸுர சக்தியின் வடிவாய் விளங்குபவள்.

प्रकृतिस्त्वं हि सर्वस्य गुणत्रयविभाविनी ॥ ७८ ॥
कालरात्रिर्महारात्रिर्मोहरात्रिश्च दारुणा ।

(ப - ரை) **गुणत्रयविभाविनी** - முக்குணங்களால் ஊஹிக்கத் தக்கவளும்; **सर्वस्य** - எல்லாவற்றினுடையவும் ; **प्रकृतिः** - ப்ரக்ருதி (**त्वम्** - நீயே) **कालरात्रिः** - காலராத்ரியும் ; **महारात्रिः** - மஹாராத்ரியும் ; **दारुणा** - தவிர்க்க முடியாத ; **मोहरात्रिः** - மோஹராத்ரியும்; **त्वं हि** - நீயேயல்லவா,

(பொ-ரை) ஓ அன்னையே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களைக்கொண்டு ஊஹிக்கத் தக்கவளும், ஸமஸ்த வஸ்துக்களுக்கும் மூலப்ரக்ருதியாக விளங்குபவளும் நீயே யன்றோ! யுகப்ரளயத்தின் முடிவிலே தோன்றும் காலராத்ரியின் வடிவாகவும்; ப்ரஹ்மப்ரளயத்தின் முடிவிலே தோன்றும் மஹாராத்ரியின் வடிவாகவும், மஹாப்ரளயத்தின் முடிவிலே தோன்றும் தவிர்க்க முடியாத மோஹராத்ரியின் வடிவாகவும் இருப்பவள் நீயே யல்லவா ! (எஅ)

कालरात्रिः - காலராத்ரி : - கல்பாந்தப்ரளயம் ; **महारात्रिः** - மஹாராத்ரி: - ப்ரஹ்மப்ரளயம்; **मोहरात्रि** - மோஹராத்ரி : - மஹாப்ரளயம்-உண்மையில் இங்கு ராத்ரி சப்தங்கள் விசேஷமாக (குறிப்பாக) திதிகளையும், அத்திதிகளுடைய அபிமாநிகளான தேவதைகளையும் குறிப்பிடுவனவாம், இவ்விஷயம் **ஸ்ரீதந்த்ரராஜம்** என்னும் காதிமதத்தில் விரிவாகக் கூறப்பட்டிருப்பதால் அங்கு கண்டு தெரிந்து கொள்ள வேண்டுவதாகும், ஆகவே இம்மூன்று ராத்ரிகளுடைய ஸமஷ்டி வடிவமான யோகநித்ரையை இங்கு குறிப்பிடுவதால் இந்த தேவிமாஹாத்ம்ய ஸ்தவத்திலும் **ராத்ரிஸூக்தம்** என்ற பெயருடன் கூடிய அங்கமும் சேர்க்கப்பட்டிருக்கிறது என்பதையும் உணர்த்தலாயிற்று.

प्रकृतिः - ப்ரக்ருதி: முக்குணங்களுடைய ஸாம்யாவஸ்தையின் வடிவாய் அவ்யக்தமாயிருக்கிற ப்ரதானமாகும்.

गुणत्रयविभाविनी - குணத்ரயவிபாவிநீ - முக்குணங்களையும் வெவ்வேருகப் பிரித்து உலக வடிவாக நிலைநிறுத்துபவள். ஸத்வ குணம் ஞானத்தையும், ஸுகத்தையும்; ரஜோகுணம் ராகத்தையும், (ஆசை) துக்கத்தையும்; தமோகுணம் மறதியையும், மயக்கத்தையும் (மோஹம்) உண்டு பண்ணுவதற்கு முறையே காரணங்களாம். இக்குணங்கள் மூன்றும் மூலப்ரக்ருதியினுடைய தர்மங்களாகுமென்பதுவும் தாத்பர்யமாகும்.

त्वं श्रीस्त्वमीश्वरी त्वं ह्रीस्त्वं बुद्धिर्बोधलक्षणा ॥ ७९ ॥
लज्जा पुष्टिस्तथा तुष्टिस्त्वं शान्तिः क्षान्तिरेव च ।

(ப-ரை) **श्रीः** - லக்ஷ்மீ; **त्वम्** - நீ; **ईश्वरी** - ஈச்வரபத்நீ. **त्वम्** - நீ: **ह्रीः** - ஹ்ரீம் என்ற மந்த்ரவடிவும்; **त्वम्** - நீ; **बोधलक्षणा**- நிச்சயவடிவான: **बुद्धिः** - புத்தியும்; **लज्जा** - துக்கமும்: **पुष्टिः**- வளர்ச்சியும்: **तथा** - அவ்விதமே: **तुष्टिः** - ஸந்தோஷமும்: **शान्तिः**- மன அமைதியும்; **क्षान्तिः च** - க்ஷமையுமாக (இருப்பவள்) **त्वम् एव** - நீயே.

(பொ - ரை) ஓ அன்னையே! ஸம்பத்தின் வடிவாம் லக்ஷ்மியும், ஈச்வரபத்நியும், நிச்சய வடிவான புத்தியும், ஹ்ரீம்கார மந்த்ர வடிவாகவும், செய்யவேண்டிய காரியத்தில் அஜ்ஞான சக்தியால் ஸந்தேஹம் கொண்டுள்ள துக்க வடிவான லஜ்ஜையும் நீயே யன்ருே! அவ்

விதமே வளர்ச்சியின் வடிவாகவும், மனஅமைதியின் வடிவாகவும், பொறையின் வடிவாகவும் இருப்பவள் நீயே யன்றோ ! (எசூ)

இவ்விடத்தில் श्रीः - ஸ்ரீ: - என்பது ஸம்பத்தையும், ह्रीः- ஹ்ரீ: - என்பது புவநேச்வரீபீஜத்தையும் குறிப்பதாகும். மற்றும் ஸ்ரீ என்றதிலும், ஹ்ரீ என்றதிலும், ஈச்வரீ என்றதிலுமுள்ள ஈ என்ற ஸ்வரமும், அநுஸ்வாரமும் சேரும் பொழுது முறையே லக்ஷ்மீ பீஜமும், புவநேச்வரீ பீஜமும் கிடைப்பதாகும்.

लज्जा - லஜ்ஜா - லஜ்ஜையென்பது அந்த:கரணத்தினுடைய வியாபார விசேஷமாகும். அதாவது செய்யத் தகாத காரியத்திலிருந்து விலகி இருக்கும் தன்மை.

शान्तिः - சாந்தி: - விஷயங்களிலிருந்து பொறிகளைத் திருப்புவது.

क्षान्तिः-க்ஷாந்தி: - பிறருடைய குற்றத்தைப் பொறுப்பது.

बुद्धिः - புத்தி: - போதஉணர்ச்சி-லக்ஷணம்-கொண்டது. அதாவது நிச்சய (உறுதி) வடிவாயிருக்கும் அந்த:கரணம்.

ह्रीः - ஹ்ரீங்காரம்-ப்ராணனையும் குறிக்கும் "ह्रींकारो वै प्राणः" என்பது ச்ருதியாகும்.

खड्गिनी शूलिनी घोरा गदिनी चक्रिणी तथा ॥ ८० ॥

शङ्खिनी चापिनी बाणभुसुण्डीपरिघायुधा ।

(ப-ரை) खड्गिनी - வாளோடு கூடியவளும்: शूलिनी - சூலத்தோடு கூடியவளும்: घोरा - பயங்கரமானவளும்: गदिनी - கதை

யோடு கூடியவளும்; चक्रिणी - சக்ரத்தோடு கூடியவளும்; शङ्खिनी - சங்கத்தோடு கூடியவளும்; चापिनी - வில்லோடு கூடியவளும்; तथा - அவ்விதமே; बाणभुसुण्डीपरिघायुधा - பாணம், புஸுண்டி, பரிகை இவைகளோடு கூடியவளுமாவள்.

(பொ - ரை) பத்துக் கைகளிலும் வாள், சூலம், சிரஸ், கதை, சக்ரம், சங்கு, வில், பாணம், புஸுண்டி, பரிகம் என்ற ஆயுதங்களோடு கூடியவளும் ஒ அன்னையேங்யே யன்றோ! (அம)

घोरा - கோரா - ஒரு கையில் சிரஸை (முண்டம்) தரித்துக் கொண்டிருக்கிற காரணத்தால் பயங்கரமாயிருப்பவள் எனச் சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தால் ஸ்ரீகாளிகாதேவீ பத்துக் கைகளையுடையவள் என்பதும் கிடைப்பதாகும். மேலே வைக்ருதி ரஹஸ்யத்திலும் இவ்விஷயம் விரிவாக விளக்கப்பட்டிருக்கிறது. எனவே பத்துக் கைகளோடு கூடிய தேவியைத் துதிப்பது மாகும் எனக் கொள்ளலாம்.

"योगनिद्रा हरेरुक्ता महाकाली तमोगुणा ।
मधुकैटभनाशार्थं यां तुष्टावाम्बुजासनः ॥
दशवक्त्रा दशभुजा दशपादाञ्जनप्रभा ।
खड्गबाणगदाशूलशङ्खचक्रभुसुण्डिभृत् ।
परिघं कार्मुकं शीर्षं निश्च्योतद्रुधिरं दधौ ।
एषा सा वैष्णवी माया महाकाली दुरत्यया ।"

என்று வைக்ருதி ரஹஸ்யத்தில் வர்ணிக்கப்பட்டிருப்பதும் இங்கு கவனிக்கத்தத்து. இவைகளின் பொருள் விளக்கங்களை அங்கு கண்டு தெரிந்து கொள்ள வேண்டுவதாகும்.

सौम्या सौम्यतराशेषसौम्येभ्यस्त्वतिसुन्दरी ॥ ८१ ॥
परापराणां परमा त्वमेव परमेश्वरी ।

(ப - ரை) **सौम्या** - ஸௌம்யமானவள். (அழகுள்ளவள்) **सौम्येतरा** - மிகவும் சாந்தமானவள் : **अशेष-सौम्येभ्यः तु** - எல்லா விதமான அழகிய வஸ்துக்களுக்குள் ; **अतिसुन्दरी** - மிகவும் அழகியவள். **परापराणाम्** - மிகவும் சிறந்தவர்களுக்குள் : **परमा** - உத்க்ருஷ்டமானவள். **परमेश्वरी** - பரமேச்வரனுடை மனைவி. **त्वम् एव** - நீயே.

(பொ - ரை) பக்தர்களுக்கு ஸந்தோஷத்தை யுண்டு பண்ணுகின்ற அழகிய முகத்தோடு கூடியவளும், மிகவும் சாந்த வடிவம் கொண்டவளும், அழகிய வஸ்துக்கள் யாவற்றினும் மிகவும் அழகிய வடிவம் கொண்டவளும், ப்ரஹ்மா இந்த்ரன் முதலியவர்களைக் காட்டிலும் சிறந்து விளங்குபவளும், பரமேச்வரனுடைய மனைவியாயிருப் பவளும் நீயே யன்றோ! (அக)

पराः - பரா:- ப்ரஹ்மா முதலியவர்கள். **अपराः** - அபரா:- இந்த்ரன் முதலியவர்கள். அல்லது **परा** - பரா - நால்வகை வாக்கு களுள் பரா என்ற வாக்கின் வடிவாயிருப்பவள். **सौम्या** - ஸௌம்யா - பக்தர்களுக்கு அநுகூலமாயிருப்பவள். **असौम्यतरा**- (அ) ஸௌம்யதரா - பகைவர்களிடத்தில் மிகவும் கொடூரமா யிருப்பவள்.

यच्च किंचित्क्वचिद्वस्तु सदसद्वाखिलात्मिके ॥ ८२ ॥
तस्य सर्वस्य या शक्तिः सा त्वं किं स्तूयसे तदा ।

(ப-ரை) **अखिलात्मिके** - எங்கும் நிறைந்தவளே! **क्वचित्**- (ப்ரபஞ்சத்தில்) சில; **सत्** - என்றும் நிலைத்திருப்பதும்; **असत्**- அழிவுள்ளதுமான; **यत् च** - யாதொரு; **किंचित्** - சிறிய; **वस्तु** - வஸ்துவானது உண்டோ; **तस्य** - அந்த; **सर्वस्य** - எல்லாவற்றினுடைய; **या** - யாதொரு; **शक्तिः** - சக்தியானது உண்டோ; **सा**- அந்த சக்தியும்; **त्वम्** - நீயே. **तदा** - அப்பொழுது; **किं स्तूयसे**- எவ்விதம் துதிக்கப்படுவாய்.

(பொ-ரை) எங்கும் நிறைந்து விளங்கும் ஓ அன்னையே! என்றும் நிலைத்துள்ளதும், அழிவுள்ளதுமான இப்பிரபஞ்சத்தில் யாதொரு சிறியதான வஸ்து உண்டோ, அதனுடைய எல்லா சக்தியும் நீயே யன்றோ! அவ்விதமிருக்கும்பொழுது உன்னை எவ்விதம் துதிப்பது? (அஉ)

सत् - ஸத் - ப்ரஹ்மவர்கம். **असत्** - அஸத் - ஜடவர்கம். அல்லது ஸத் - நித்யமான ஆகாசம், பரமாணு முதலியன. அஸத் - அழியும் தன்மையாம் பூமி முதலியன.

பதமும் பதார்த்தமும் (சொல்லும் பொருளும்) அவைகளைக் கொண்டு செய்யப்படும் ஸ்துதியும், ஸ்துதிக்கின்றவனும், ஸ்துதிப்பதற்குக் காரணமாயுள்ளதுமான இவைகளுடைய எல்லா சக்திகளும் நீயே யன்றோ! உன்னைக் காட்டிலும் வேறு ஒன்றுமில்லை. அப்படியிருந்தும் பேதபுத்தியுடன் கூடிய இந்த ஸ்துதி எவ்விதம் உண்மையாக இருக்க முடியும்? என்பதும் ஸாரம்.

यया त्वया जगत्स्रष्टा जगत्पातात्ति यो जगत् ॥ ८३ ॥
सोऽपि निद्रावशं नीतः कस्त्वां स्तोतुमिहेश्वरः ।

(ப - ரை) जगत्स्रष्टा - உலகைப் படைப்பவனும்; जगत्पाता - உலகைக் காப்பாற்றுபவனும்; यः - எவன்; जगत् - உலகை: अत्ति - புசிப்பவனோ: सः अपि - அந்த விஷ்ணுவும்; यया - எந்த: त्वया - உன்னால்; निद्रावशम् - நித்ரையின் வசத்தை; नीतः - அடைவிக்கப் பட்டானோ: त्वाम् - உன்னை; स्तोतुम् - ஸ்துதிப்பதற்கு; इह - இங்கு; कः - எவன்; ईश्वरः - சக்தியுள்ளவன்?

(பொ - ரை) ஓ அன்னையே! உலகைப்படைத்துக் காத்து அழித்து வருகின்ற மஹாவிஷ்ணுவையும் உன்னுடைய நித்ரைக்கு வசமாகச் செய்தாயன்றோ! அப்படி இருக்க உன்னைத் துதிப்பதற்கு எவருக்குத் தான் சக்தியிருக்கும்; ஒருவருக்கும் கிடையாது என்பது தாத்பர்யம். (அ௩)

ஸ்ரீபகவான் மஹாவிஷ்ணுவானவர் தமோகுணத்தையே முக்யமாகக் கொண்ட மாயா சக்தியின் ஸம்பந்தத்தால் ஸமஸ்த வஸ்துக்களையும் அழித்துத் தன்னுடைய வடிவிலே இருக்கும்படி செய்கிறார் என்பது ஸாரம்.

ப்ரஹ்மவடிவாக உலகை நிர்மாணம் செய்பவனாகவும், விஷ்ணுவடிவாக உலகை ரக்ஷிப்பவனாகவும், ருத்ரவடிவாக உலகை அழிப்பவனாகவும் இருக்கிற ஈச்வரனாகிய மஹாவிஷ்ணுவையே யோகநித்ரையாகிய உனது திருவடிக்கு அதீனமாகச் செய்த உன்னைத் துதிப்பதற்கு எவரால் முடியும், என்பதும் கருத்து.

विष्णुः शरीरग्रहणमहमीशान एव च ॥ ८४ ॥
कारितास्ते यतोऽतस्त्वां कः स्तोतुं शक्तिमान् भवेत् ।

(ப - ரை) विष्णुः - விஷ்ணுவும்; अहम् - (நான்முகனுகிய) நானும்; ईशानः एव च - ருத்ரனும்; ते - உன்னுடைய; शरीर-ग्रहणम् - சரீரக்ரஹணத்தை; यतः - எக்காரணத்தால்; कारिताः- செய்யப்பட்டனரோ; अतः - அக்காரணத்தால்; त्वाम् - உன்னை; स्तोतुम् - துதிப்பதற்கு; कः - எவன்; शक्तिमान् - சக்தியுள்ள வனுக; भवेत् - இருக்கமுடியும்.

(பொ - ரை) விஷ்ணுவும், பரஹ்மாவாகிய நானும், ருத்ரனும், உன்னுடைய மஹாமாயையின் மஹிமை யால் எக்காரணத்தால் சரீரத்தை யடையப் பெற்று மமதையென்னும் பந்தத்தோடு கூடியவர்களாகவும் ஆக்கப் பட்டோமோ, அக்காரணத்தால் உன்னைத் துதிப் பதற்கு எவருக்குத்தான் திறமையுண்டு? ஒருவருக்கும் கிடையாது எனத் தாத்பர்யம், (அச)

शरीरग्रहणम् - சரீரக்ரஹணம் - சரீரத்தை எடுப்பது. அதாவது தேவீ மஹாமாயையின் வடிவாதலால் சரீரத்தை எடுப்பது என்பது ஒரு வியாஜமே (நிமித்தமே) யாகும்.

மேலும் சரீரமுள்ளவர்கள் அனைவரும் உனது திருவடியைத் துதிப்பதற்குச் சக்தியற்றவர்கள். அப்படியிருக்க விதேஹனுன முக்தன் உனது வடிவைக் கொண்டால் எங்ஙனம் உன்னைத் துதிக்க முடியும்.

सा त्वमित्थं प्रभावैः स्वैरुदारैर्देवि संस्तुता ॥ ८५ ॥
मोहयन्तौ दुराधर्षावसुरौ मधुकैटभौ ।

(ப-ரை) देवि - ஓ அன்னையே! सा - அந்த; त्वम् - நீ; इत्थम् - இவ்விதம்; स्वैः - தன்னைச் சார்ந்தவைகளாயும், उदारैः- உயரியவைகளாயுமிருக்கிற; प्रभावैः - மஹிமைகளினால்; संस्तुता- நன்கு துதிக்கப்பட்டாய். एतौ - இந்த; दुराधर्षौ - ஜயிக்க முடியாதவர்களான; मधुकैटभौ - மதுகைடபர்கள் என்ற; असुरौ- அஸுரர்களை; मोहय - மோஹமடையச் செய்.

(பொ-ரை) ஓ அன்னையே! அச்சிறப்பு வாய்ந்த நீ இவ்விதம் உன்னுடைய உயரிவைகளான மஹிமைகளினால் நன்கு துதிக்கப் பட்டாய். ஜயிக்க முடியாதவர்களான இந்த மதுகைடபர்கள் என்னும் அஸுரர்களையும் மோஹமடையச் செய்வாயாக. (அரு)

प्रबोधं च जगत्स्वामी नीयतामच्युतो लघु ॥ ८६ ॥
बोधश्च क्रियतामस्य हन्तुमेतौ महासुरौ ॥ ८७ ॥

(ப-ரை) जगत्स्वामी - ஜகந்நாதனாகிய; अच्युतः - அச்யுதனும்; लघु - சீக்கிரம்; प्रबोधं च - விழிப்பையும்; नीयताम् - அடையும்படி செய்யப்படட்டும். एतौ - இந்த; महासुरौ - பெரிய அஸுரர்கள் இருவரையும், हन्तुम् - கொல்லுவதற்கு; अस्य - இந்த பகவானுக்கு; बोधः च - உணர்வும்; क्रियताम् - உண்டு பண்ணட்டும்.

(பொ-ரை) உனது மஹிமையினால் ஜகந்நாதனாகிய அச்சுதனையும், சீக்கிரம் விழிப்பை யடையச் செய்

வாயாக. இப்பெரிய அஸுரர்களைக் கொல்லுவதற்கும் இந்த பகவானுக்கு உத்ஸாஹத்தோடு கூடிய உணர்வையும் உண்டு பண்ணுவாயாக. (அஎ)

बोध: - போத: - ப்ரவ்ருத்தி, அதாவது நீ எப்பொழுதும் இயல்பான ப்ரவ்ருத்தியுடன் கூடியவள். நீயே என்னை ஸ்ருஷ்டி செய்தாய், அக்காரணத்தால் என்னை (அவ்வரக்கர்கள்) அழிக்க வருவதையும் பார்த்துக் கொண்டிருப்பது சரியல்ல. "विषवृक्षोऽपि संवर्ध्य स्वयं छेत्तुमसांप्रतम्" நஞ்சுடன், கூடிய மரமேயாயினும் நட்டவன் கையால் வெட்டுப்படுவது உசிதமன்று" என்ற ந்யாயமும் இங்குபொருந்தும். இங்கு ப்ரஹ்மாவை ரக்ஷிப்பதும், மதுகைடபவதமும் விஷ்ணுவினுல் செய்யப்பட்டதென்ருலும், சிஷ்யனுடைய அத்யயநம் எவ்விதம் ஆசாரியனுடைய திறமையைப் பொருத்துள்ளதோ, அதுபோலவே பகவானுக்கு, மதுகைடபர்களை வதம் செய்வதற்குவேண்டிய உத்ஸாஹம் முதலிய ப்ரவ்ருத்திகளை மஹாமாயாவடிவாம் ஸ்ரீதேவியே உண்டு பண்ணினுள் என்பது ஸாரம்.

भावश्च क्रियतां - பாவ: ச க்ரியதாம் எனவும் பாடமுண்டு.

ऋषिरुवाच ॥ ८८ ॥
एवं स्तुता तदा देवी तामसी तत्र वेधसा ॥ ८९ ॥
विष्णुः प्रबोधनार्थाय निहन्तुं मधुकैटभौ ।
नेत्रास्यनासिकाबाहुहृदयेभ्यस्तथोरसः ॥ ९० ॥
निर्गम्य दर्शने तस्थौ ब्रह्मणोऽव्यक्तजन्मनः ।

ऋषि: - மஹர்ஷி ; **उवाच** - சொன்னார்.

(ப - ரை) **तदा** - அப்பொழுது; **तत्र** - அவ்விடத்திலிருக்கிற; **वेधसा** - ப்ரஹ்மாவினால் ; **एवम्** - இவ்விதம் ; **स्तुता** - ஸ்துதிக்கப் பட்ட ; **तामसी** - தமோகுணத்தோடு கூடிய நித்ரையின் வடிவான ; **देवी** - தேவியானவள் ; **मधुकैटभौ** - மதுகைடபர்களை ; **निहन्तुम्** - நாசம் செய்வதற்கு; **विष्णोः** - விஷ்ணுவினுடைய **प्रबोधनार्थम्** விழிப்பிற்காக. **नेत्रास्यनासिकाबाहुहृदयेभ्यः** - கண்கள், வாய், மூக்கு, கைகள், ஹ்ருதயம் முதலியவைகளிலிருந்தும், **तथा** - அவ்விதமே ; **उरसः** - மார்பிலிருந்தும் ; **निर्गम्य** - வெளி வந்து **अव्यक्तजन्मनः** - ப்ரக்ருதியினின்றும் உண்டான; **ब्रह्मणः** - ப்ரஹ்மனுடைய; **दर्शने** - பார்வையில் ; **तस्थौ** - நின்றாள்.

மஹர்ஷி சொன்னார். (அஅ)

(பொ - ரை) அந்த ப்ரளயகாலத்தில் விஷ்ணுவினுடைய நாபீகமலத்தில் இருக்கிற ப்ரஹ்மாவினால் இவ்விதம் துதிக்கப்பட்ட நித்ரையின் வடிவாயமைந்த தாமஸீ தேவியானவள் மதுகைடபர்களை நாசம் செய்வதற்கும், மஹாவிஷ்ணுவானவர் விழித்துக் கொள்ளுவதற்கும், அவருடைய கண்கள், வாய், மூக்கு, கைகள், ஹ்ருதயம் முதலிய ஸ்தானங்களிலிருந்து வெளியில் புறப்பட்டு, ஸ்வயம்புவாகிய ப்ரஹ்தேவனுடைய கண்ணெதிரில் காக்ஷி கொடுத்தாள். (அகூ, கூய)

ப்ரதம-மத்யம-உத்தம சரிதமென்ற மூன்று சரிதங்களுடைய தேவதைகள் முறையே மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹா-

ஸரஸ்வதிகளாவர், இவர்கள் வெளிப்படையாக தமஸ், ரஜஸ், ஸத்வம் என்ற வடிவங்களோடும். அந்தர்பாகத்தில் (உள்ளே) ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற வடிவங்களோடும் கூடியவர்கள். அக்காரணத்தால் யோகநித்ரை தமோகுணத்தோடு கூடியவளாயினும், அந்தர்பாகத்தில் ஸத்வகுணத்தை முக்யமாகக் கொண்டவளாகையால், வெளியே வியாபித்திருக்கிற தமோகுண வடிவை வேறு வடிவமாக ப்ரஹ்மாவினுடைய எதிரில் அவதரிக்கச் செய்தவள் என்பது ரஹஸ்யமாகும். இதைக் காரணமாகக் கொண்டு தந்த்ரங்களில் மதுகைடபவதத்தைச் செய்தது தேவியேதான் என்பதும் வெளியிடப் பெறுகிறது. புருஷருடன் முஷ்டி யுத்தம் (பாஹு யுத்தம்) செய்வதற்காக புருஷ வடிவாக இருந்து கொண்டு அவர்களை நிக்ரஹம் செய்தாள் என்பதும் கருத்து.

उत्तस्थौ च जगन्नाथस्तया मुक्तो जनार्दनः ॥ ९१ ॥
एकार्णवेऽहिशयनात्ततः स ददृशे च तौ ।
मधुकैटभौ दुरात्मानावतिवीर्यपराक्रमौ ॥ ९२ ॥
क्रोधरक्तेक्षणावत्तुं ब्रह्माणं जनितोद्यमौ ।

(ப-ரை) तया - அந்த நித்ராதேவியினால்; **मुक्तः** - விடப்பட்ட; **जगन्नाथः** - ஜகந்நாதனுகிய; **जनार्दनः** - விஷ்ணுவும்; **एकार्णवे** - ஒரே வெள்ளமயமான ஸமுத்ரத்தில்; **अहिशयनात्** - சேஷசயநத்திலிருந்து; **उत्तस्थौ** - எழுந்திருந்தார். **ततः** - பிறகு; **सः** - அந்த விஷ்ணு; **दुरात्मानौ** - துஷ்டபுத்தியுள்ளவர்களும்; **अतिवीर्यपराक्रमौ** - மிகுந்த பராக்ரமசாலிகளும், **क्रोधरक्तेक्षणौ** - கோபத்

தால் சிவந்த கண்களையுடையவர்களும்; ब्रह्माणम् - ப்ரஹ்மாவை; अत्तुम् - உண்பதற்கு; जनितोद्यमौ - உண்டாகிய முயற்சியை யுள்ளவர்களுமான; तौ - அந்த; मधुकैटभौ च - மதுகைடபர்களையும்; ददृशे - பார்த்தார்.

(பொ - ரை) அந்த நித்ராதேவியினுல் விடப்பட்ட ஜநார்தநனுகிய மஹாவிஷ்ணுவும் ஒரே வெள்ளக் காடான ஸமுத்ரத்திலுள்ள சேஷசயநத்திலிருந்து எழுந்திருந்தார். பிறகு அவர், துர்புத்தியுள்ளவர்களும், தோள்வலிமையில் பெருமிதம் கொண்டவர்களும், கோபத்தால் சிவந்த கண்களை யுடையவர்களும், ப்ரஹ்மாவைப் புசிப்பதற்கு உத்ஸாஹத்துடன் முயற்சி செய்கின்றவர்களுமான அந்த மதுகைடபர்களையும் பார்த்தார். (கூக, கூஉ)

(जनार्दनः) - ஜநார்தந: - என்றது 'செய்வான்' என்ற வருங்கால கர்மாவை யநுஸரித்த விசேஷணமாகும்.

मधुकैटभौ दुरात्मानौ - மதுகைடபௌ துராத்மாநௌ-என்ற வாக்கியத்தில் ஒரு அக்ஷரம் அதிகமாயிருப்பது ஆர்ஷமாகையால் தோஷமில்லை.

वीर्यम् - வீர்யம் - உத்ஸாஹம்.

पराक्रमम् - பராக்ரமம் - சக்தியின் பெருமிதம்.

जनितोद्यमौ - ஜநிதோத்யமௌ - உண்டாகிய முயற்சியையுடையவர்கள் (ப்ரயத்நத்தை ஆரம்பித்தவர்கள்.)

ददृशे च तौ - தத்ருசே ச தௌ - என்றதால் அவ்விருவரும் பகவானைப்பார்த்தனர் எனவும் கூறுவர்.

समुत्थाय ततस्ताभ्यां युयुधे भगवान् हरिः ॥ ९३ ॥
पञ्चवर्षसहस्राणि बाहुप्रहरणो विभुः ।

(ப - ரை) ततः - பிறகு ; भगवान् - ஐச்வர்யம் முதலிய ஆறு குணங்களோடு கூடியவனும், विभुः - வியாபகனையுமுள்ள ; हरिः - விஷ்ணு ; समुत्थाय - எழுந்திருந்து ; पञ्चवर्षसहस्राणि - ஐயாயிரம் வருஷங்கள் ; ताभ्याम् - அவர்களோடு ; बाहुप्रहरणः - கைகளென்னும் ஆயுதங்களோடு கூட : युयुधे - யுத்தம் செய்தார்.

(பொ - ரை) பிறகு ஐச்வர்யம் முதலிய ஆறுகுணங்கள் நிரம்பியவனும், வியாபகனையுமுள்ள மஹாவிஷ்ணுவானவர் எழுந்திருந்து ஐயாயிரவருஷங்கள் அவர்களோடு, கைகளென்னும் ஆயுதங்களின் உதவி கொண்டு யுத்தம் செய்தார். (கூங)

இந்த மதுகைடபர்கள் ஐயாயிரம் வருஷம் மஹாவிஷ்ணுவோடு கூட மல்லயுத்தம் செய்தும் அவர்களுக்குக் களைப்போ, தோல்வியோ ஒன்றும் உண்டாகவில்லை. அதற்குக் காரணம் அவர்கள் "தாங்கள் இஷ்டப்பட்டால் தான் மரணமடையலாம்" என்ற வரத்தைப் பெற்றதே யாகும்.

बाहुप्रहरणः - பாஹுப்ரஹரண: - கைகளையே ஆயுதங்களாகக் கொண்டவன். அதாவது பாஹு யுத்தம் (முஷ்டி யுத்தம்) என்பது தாத்பர்யம்.

तावप्यतिबलोन्मत्तौ महामायाविमोहितौ ॥ ९४ ॥
उक्तवन्तौ वरोऽस्मत्तो व्रियतामिति केशवम् ॥ ९५ ॥

(ப-ரை) **अतिबलोन्मत्तौ** - மிகுந்த பலத்தினுல் மதம் கொண்டவர்களான; **तौ अपि** - அவ்விருவர்களும்; **महामायाविमोहितौ** - மஹாமாயாதேவியினுல் நன்கு மோஹிக்கப் பட்டவர்ளாக; **अस्मत्तः** - எங்களிடமிருந்து; **वरम्** - வரத்தை; **व्रियताम् इति** - வரியுங்கள் என்று; **केशवम्** - கேசவனை; **उक्तवन्तौ** - சொன்னுர்கள்.

(பொ-ரை) மிகுந்த பலத்தினுடைய பெருமிதம் காரணமாக மதத்தை யடைந்த அவ்விருவர்களும் மஹாமாயா தேவியினுல் மோஹிக்கப்பட்டு கேசவனைப் பார்த்து, 'எங்களிடமிருந்து வேண்டிய வரத்தைக் கேளும்' என்று சொன்னுர்கள். (கூச, கூரு)

अतिप्रबलोन्मत्तौ - அதிப்ரபலோந்மத்தௌ - அளவுகடந்த திறமையின் காரணமாக உண்டான பெருகிய மதத்தோடு கூடியவர்கள்.

महामायाविमोहितौ - மஹாமாயா தேவியினுல் மோஹமடையச் செய்த காரணத்தால் அவிவேகத்தோடு கூடியவர்கள்.

श्रीभगवानुवाच ॥ ९६ ॥
भवेतामद्य मे तुष्टौ मम वध्यावुभावपि ॥ ९७ ॥
किमन्येन वरेणात्र एतावद्धि वृतं मया ॥ ९८ ॥

श्रीभगवान् - ஸ்ரீபகவான்; **उवाच** - சொன்னார்.

(ப - ரை) **अद्य** - இப்பொழுது; **उभौ अपि** - (நீங்கள்) இருவரும்; **मे** - என் பொருட்டு. **तुष्टौ** - ஸந்தோஷத்தை யடைந்தால்; **मम** - எனக்கு; **वध्यौ** - கொல்லத்தக்கவர்களாக; **भवेताम्**- ஆக வேண்டும். **अत्र** - இவ்விடத்தில்; **अन्येन** - வேறு; **वरेण** - வரத்தினால்; **किम्** - என்ன பிரயோஜனம். **मया** - என்னால்; **एतावत् हि** - இவ்வளவு தான்; **वृतम्** - வரிக்கப்பட்டது.

ஸ்ரீபகவான் சொன்னார். (கூகூ)

(பொ – ரை) இப்பொழுது என்பொருட்டு ஸந்தோஷத்தை யடைந்தவர்களான நீங்கள் இருவரும் எனக்குக் கொல்லத்தக்கவர்களாக ஆகவேண்டும், இதைத் தவிர வேறு வரத்தினால் என்ன ப்ரயோஜனம்? என்னால் இவ்வளவுதான் வேண்டப்பட்டது. (கூஎ, கூஅ)

ऋषिरुवाच ॥ ९९ ॥
वञ्चिताभ्यामिति तदा सर्वमापोमयं जगत् ॥ १०० ॥
विलोक्य ताभ्यां गदितो भगवान् कमलेक्षणः ।
आवां जहि न यत्रोर्वी सलिलेन परिप्लुता ॥ १०१ ॥

ऋषिः - மஹர்ஷி; **उवाच** - சொன்னார்.

(ப - ரை) **तदा** - அப்பொழுது; **इति** - இவ்விதம்; **वञ्चिताभ्याम्**- வஞ்சிக்கப்பட்ட; **ताभ्याम्** - அவ்விருவர்களால்; **सर्वम्** - ஸமஸ்தமான; **जगत्** - உலகமும்; **आपोमयम्** - ஜலமயமாயிருப்பதை;

विलोक्य - பார்த்து; **कमलेक्षण:** - செந்தாமரைக் கண்ணனுகிய; **भगवान्** - விஷ்ணு; **उर्वी** - பூமியானது; (**यत्र** - எவ்விடத்தில்;) **सलिलेन** - ஜலத்தினுல்; **परिप्लुता** - மூழ்கடிக்கப் பட்டதாக; **न** - இருக்க வில்லையோ; **तत्र** - அவ்விடத்தில்; **आवाम्** - எங்களை; **जहि** - கொல்ல வேண்டும். (என்று) **गदित:** - சொல்லப்பட்டார்.

மஹர்ஷி சொன்னுர், (௧௦௧)

(பொ - ரை) அப்பொழுது இவ்விதம் வஞ்சிக்கப் பட்ட அவ்விருவரும் இவ்வுலகம் முழுவதும் ஜலமய மாயிருப்பதைக் கண்டு, கமலக் கண்ணனுகிய விஷ்ணு விஷிடம் எங்களை ஜலத்தால் நனைக்கப்படாத பூமியில் வைத்து எங்களைக் கொல்ல வேண்டும் எனச் சொன்னுர்கள். (௧௦௦, ௧௦௧)

ऋषिरुवाच ॥ १०२ ॥
तथेत्युक्त्वा भगवता शङ्खचक्रगदाभृता ।
कृत्वा चक्रेण वै च्छिन्ने जघने शिरसी तयोः ॥ १०३ ॥

ऋषि: - மஹர்ஷி: उवाच - சொன்னுர்.

(ப - ரை) तथा - அவ்விதமே: इति - என்று: उक्त्वा - சொல்லி: शङ्खचक्रगदाभृता - சங்கு, சக்ரம், கதை இவைகளைத் தரித்துக் கொண்டிருக்கிற: भगवता - பகவானுல்; जघने - மடியின் மீது: तयो: - அவர்களுடைய: शिरसी - தலைகள்; कृत्वा - வைத்து: चक्रेण - சக்ராயுதத்தால்: छिन्ने - அறுக்கப்பட்டன.

மஹர்ஷி சொன்னர். (கoஉ)

(பொ - ரை) சங்கு, சக்கரம், கதை இவைகளைத் தரித்துக் கொண்டிருக்கிற பகவானும் அவ்விதமே ஆகட்டும் எனச் சொல்லிவிட்டு, அவர்களுடைய தலைகளைத் தனது மடியின் மீது வைத்து சக்ராயுதத்தால் அறுத்துத் தள்ளினர். (கoங)

एवमेषा समुत्पन्ना ब्रह्मणा संस्तुता स्वयम् ।
प्रभावमस्या देव्यास्तु भूयः शृणु वदामि ते ॥ १०४ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
मधुकैटभवधो नाम प्रथमोऽध्यायः ॥ १ ॥
उवाचमन्त्राः १४ ; अर्धमन्त्राः २४ ; श्लोकमन्त्राः ६६ ;
एवं मन्त्राः ॥ १०४ ॥
(इति प्रथमचरितम्)

— ★ —

(ப - ரை) एषा - இந்த மஹாமாயாதேவி; एवम् - இவ்விதம்; ब्रह्मणा - ப்ரஹ்மாவினல்; स्वयम् - தானகவே; संस्तुता - நன்கு துதிக்கப்பட்டவளாக; समुत्पन्ना - உண்டானள். अस्याः - இந்த: देव्याः - தேவியினுடைய; प्रभावम् तु - மஹிமையையும்; भूयः - மறுபடியும்: ते - உனக்கு; वदामि - சொல்லுகிறேன்; शृणुष्व - கேட்பாயாக.

(பொ - ரை) இவ்விதம் இந்த மஹாமாயாதேவி யானவள் ப்ரஹ்மாவினுல் நன்கு துதிக்கப்பட்டு தேவர் களுடைய காரியத்தின் பொருட்டு தாஞகவே உண்டாஞள். இந்த தேவியினுடைய மாஹாத்ம் யத்தையோவெனில், ஓ ஸுரதனே! மறுபடியும் உனக் குச் சொல்லுகிறேன். நீ கேட்பாயாக. (கஂச)

प्रभावम् - ப்ரபாவம்; ஸ்வதந்த்ரமாகச் செய்யப்பட்ட உத் பவம். **भूयः - பூய:** - மறுபடியும்.

अस्याः - அஸ்யா: - என்றது தாமஸீதேவிக்குக் காரண மாயிருக்கிற முக்குண வடிவான மஹாலக்ஷ்மீ எனப் பொருளா கும். அக்காரணம் கருதியே (तु) 'து' என்ற பதம் பிரயோகம் செய்யப்பட்டிருக்கிறது. **भूयः** - மறுபடியும் என்றதால் இனி வரப்போகும் தேவியினுடைய பெருமைகளையும் குறிப்பதாகும்.

மற்றும் ப்ராதாநிக ரஹஸ்யத்தில் சொல்லப்பட்ட நான்கு கைகளையுடைய தேவியே மத்யமசரிதத்தில் எட்டுக் கைகளு டன் கூட ப்ரத்யக்ஷமாகத் தோன்றுகிருள் என்பதையும் ஸூசனை செய்வதாகும்.

संस्तुता - ஸம்ஸ்துதா; विश्वेश्वरी - விச்வேச்வரீ - முதலிய ஸ்தோத்ரங்களால் துதிக்கப்பட்டவள்.

" विश्वेश्वर्यादिकं सूक्तं दृष्टं तद्ब्रह्मणा पुरा ।
स्तुतयो योगनिद्रायाः मम देव्याः पुरन्दर ॥ "

ஓ இந்த்ர! விச்வேச்வரீ என்று துவங்குகிற ஸூக்தமானது முன்பு ப்ரஹ்மாவினுல் துதிக்கப்பட்டது. அத்துதியும் யோக

ஸித்ரையின் வடிவான தேவியாகிய என்னுடைய ஸ்துதியே யாகும் என்பது லக்ஷ்மீ தந்த்ரவசனமாகும்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக
மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் மது
கைடபர்களுடைய வதம் என்ற
முதல் அத்யாயம் இவண்
முற்றும்.

—★—

द्वितीयोऽध्यायः

(मध्यमचरितम्)

ऋषिरुवाच ॥ १ ॥
देवासुरमभूद्युद्धं पूर्णमब्दशतं पुरा ।
महिषेऽसुराणामधिपे देवानां च पुरंदरे ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி; उवाच - சொன்னார்.

(ப - ரை) पुरा - முன்னொரு காலத்தில்; महिषे - மஹிஷா ஸுரன்; असुराणाम् - அஸுரர்களுக்கும்: पुरंदरे - இந்த்ரன்; देवानां च - தேவர்களுக்கும்: अधिपे - தலைமை (அதிகாரம்) வஹிக்கும்பொழுது; देवासुरम् - தேவர்களுக்கும், அஸுரர்களுக்கும், अब्दशतम् - நூறுவருஷம்; युद्धम् - யுத்தமானது; अभूत् - உண்டாகியது.

இரண்டாவது அத்தியாயம்

மஹர்ஷி சொன்னார். (க)

(பொ - ரை) பண்டு பூர்வகல்பத்தில் மஹிஷாஸுரன் அஸுரர்களுக்குத் தலைவனாகவும், இந்திரன் தேவர்களுக்குத் தலைவனாகவும் இருக்கும் பொழுது, தேவர்களுக்கும் அஸுரர்களுக்கும் பரஸ்பரம் நூறு வருஷங்கள் யுத்தமானது நீடித்து நடந்து கொண்டிருந்தது. (உ)

महिषासुरः - மஹிஷாஸுரன் - விப்ரசித்தி என்ற அஸுரனுடைய பெண் மாஹிஷ்மதி என்பவள். அவள் தவம் செய்து கொண்டிருந்த ஸிந்துத்வீபன் என்ற மஹர்ஷியை, எருமை வடிவம் பூண்டு பயப்படுத்தினாள். அதை யுணர்ந்த அந்த மஹர்ஷி, அவளை 'நீ எருமையாகக் கடவது' எனச் சபித்தார். அச்சாபத்தின் விளைவாக அவள் பெண் எருமை வடிவம் கொண்டு. அம் மஹர்ஷியினிடமிருந்து நழுவிய வீர்யத்தைப் பருகிய காரணத்தால் மஹிஷாஸுரனைப் பெற்றாள், இவ்வரலாற்றை வராஹபுராணத்திலும், தேவீபாகவதந்திலும் விஸ்தாரமாகக் காணலாம்.

ரம்பாஸுரன் தவம் புரிந்து சிவனை ஸந்தோஷமடையச் செய்து அவருடைய சரீரத்தின் அம்சமாக ஜநித்தவன். அவனுடைய புத்ரன் மஹிஷன். அவனும் கடுந்தவம் புரிந்து தேவியினுடைய ஸமீபத்திற் சென்று தனக்கு ஸாயுஜ்யம் வேண்டுமென்ற வரத்தை கேட்டான், என்று காளிகாபுராணம் கூறும்" என உரையாசிரியருள் ஒருவராகிய நாகேசபட்டர் கூறுவர்.

पुरंदरः - *புரந்தரன்*, என்ற பதத்திற்கு பகைவர்களுடைய பட்டணங்களை பிளப்பவன் (நாசம்) எனப் பொருளாம்.

முன் அத்தியாயத்தின் முடிவில் भूयः शृणु - பூய: ச்ருணு; மறுபடியும் கேட்பாயாக? என்று சொன்னதை யநுஸரித்துள்ள தான இதிஹாஸத்தை இந்த இரண்டாவது அத்தியாயத்தில் 'தேவாஸுரம்' என்பது முதல் ஆரம்பிக்கப்படுகிறது.

तत्रासुरैर्महावीर्यैर्देवसैन्यं पराजितम् ।
जित्वा च सकलान् देवानिन्द्रोऽभून्महिषासुरः ॥ ३ ॥

(ப-ரை) तत्र - அந்த யுத்தத்தில் ; महावीर्यैः - மிகுந்த பராக்ரமமுள்ளவர்களான ; असुरैः - அஸுரர்களினால் ; देवसैन्यम् - தேவர்களுடைய ஸேனையானது : पराजितम् - தோல்வியடைந்தது ; महिषासुरः - மஹிஷாஸுரன் ; सकलान् - ஸமஸ்தமான ; देवान् - தேவர்களையும் ; जित्वा - ஜயித்து ; इन्द्रः च - (எல்லோருக்கும் மேலான, இந்த்ரனாகவும் ;; अभूत् - ஆனான்.

(பொ-ரை) அந்த யுத்தத்தில் மிகவும் பராக்ரமசாலிகளான அஸுரர்களினால் தேவர்களுடைய ஸைந்யமானது தோல்வியடைந்ததும், அந்த மஹிஷாஸுரனும், தேவர்களை வென்று எல்லோருக்கும் மேலான இந்த்ர பதவியையும் அடைந்தான். (ந)

இவ்விடத்தில் वीर्यः - 'வீர்யம்' என்ற சொல்லுக்கு, பலம், ப்ரபாவம், வீரச்செயல் என்பவைகளையும் பொருளாகக்கொள்ளலாம்

ततः पराजिता देवाः पद्मयोनिं प्रजापतिम् ।
पुरस्कृत्य गतास्तत्र यत्रेशगरुडध्वजौ ॥ ४ ॥

(ப-ரை) ततः - பிறகு; पराजिताः - தோல்வியடைந்த; देवाः - தேவர்கள்; पद्मयोनिम् - தாமரைப்புஷ்பத்தைப் பிறப்பிடமாகக்கொண்ட; प्रजापतिम् - ப்ரஹ்மாவை; पुरस्कृत्य - முன்னிட்டுக்கொண்டு; यत्र - எவ்விடத்தில்; ईश - गरुडध्वजौ - ருத்ரனும், விஷ்ணுவும்; आस्ते - வஸிக்கின்றனரோ; तत्र - அந்தஇடத்திற்கு; गताः - சென்றனர்.

(பொ-ரை) பிறகு மஹிஷாஸுரனால் தோல்வியை யடைந்த தேவர்கள் பத்மயோநியான ப்ரஹ்மாவை முன்னிட்டுக்கொண்டு சிவனும் விஷ்ணுவும் வஸிக்குமிடத்திற்குச் சென்றனர். (ச)

ப்ரஹ்மா ஸ்ருஷ்டிகர்த்தாவாகையால் தேவர்கள் அவரை முன்னிலைப்படுத்திக் கொண்டு சென்றனர். சிவனும், விஷ்ணுவும் முறையே அழித்தல், காத்தல் என்னும் தொழிலைச் செய்யும் காரணத்தால் அவரையணுகினரென்பதுவும் கருத்தாம்.

पद्मयोनिः - பத்மயோநி - தாமரையை பிறப்புக்கு காரணமாகக் (இடமாக) கொண்டவன்,

यथावृत्तं तयोस्तद्वन्महिषासुरचेष्टितम् ।
त्रिदशाः कथयामासुर्देवाभिभवविस्तरम् ॥ ५ ॥

(ப-ரை) त्रिदशाः - தேவர்கள்; तयोः - அவ்விருவரிடத்தில்; यथावृत्तम् - எவ்விதம் நடந்ததோ; तद्वत् - அதேபோல மஹிஷாஸுர-

चेष्टितम् - மஹிஷாஸுரனால் செய்யப்பட்ட; **देवाभिभवविस्तरम्** - தேவர்களுக்கு உண்டாகிய அவமானத்தின் மிகுதியை; **कथयामासुः** - சொன்னார்கள்.

(பொ - ரை) தேவர்கள் ருத்ரனையும், விஷ்ணுவையும் அணுகி அவர்களிடம் மஹிஷாஸுரனுடைய அதிக்ரமச் செயல்களையும், அதனால் தேவர்களுக்குண்டான பெருந் தோல்வியையும் உள்ளவாறு எடுத்துரைத்தனர். (ரு)

चेष्टितम् - சேஷ்டிதம் - என்னும் பதத்த்ற்கு அடக்குவாரின்றி எல்லை மீறிய அஹங்காரம் என்னும் பொருளுண்டு. மேலும் தேவர்களுக்குண்டாகிய பெரிய தோல்வியை எடுத்துக்காட்டுவதற்காக அப்பதம் பிரயோகிக்கப்பட்டது என்பதுவும் கருத்தாகும்.

तयोः - தயோ: - ஈசகேசவர்வகளுடைய முன்னிலையில்.

सूर्येन्द्राग्न्यनिलेन्दूनां यमस्य वरुणस्य च ।
अन्येषां चाधिकारान् सः स्वयमेवाधितिष्ठति ॥ ६ ॥

(ப - ரை) **सः** - அந்த மஹிஷன்; **सूर्येन्द्राग्न्यनिलेन्दूनाम्** - ஸூர்யன், இந்தரன், அக்நி, வாயு, சந்த்ரன் இவர்களுடையவும், **यमस्य** - யமனுடையவும்; **वरुणस्य च** - வருணனுடையவும், **अन्येषां च** - மற்றவர்களுடையவும், **अधिकारान्** - அதிகாரங்களை; **स्वयम् एव** - தானாகவே; **अधितिष्ठति** - செலுத்திவந்தான்.

(பொ - ரை) அந்த மஹிஷன் ஸூர்யன், இந்திரன், அக்நி, வாயு, சந்த்ரன், யமன், வருணன் என்ற தேவர் களுக்கிருக்கும் அதிகாரத்தையும், மற்ற தேவர்களுடை யவும், மஹர்ஷிகளுடையவும் அதிகாரங்களையும் தானு கவே வஹிக்கத் தொடங்கினன், (சு)

अन्येषां च - அந்யேஷாம் ச; என்ற சகாரம் கொண்டுமற்ற தேவர்களையும், ப்ரஹ்மரிஷிகளையும், மற்றுமுள்ளவர்களையும் சுட்டிக்காட்டப்படுவதாகும்.

स्वर्गान्निराकृताः सर्वे तेन देवगणा भुवि ।
विचरन्ति यथा मर्त्या महिषेण दुरात्मना ॥ ७ ॥

(ப - ரை) **दुरात्मना** - துராத்மாவான ; **तेन** - அந்த ; **महिषेण** - மஹிஷனுல், **सर्वे** - ஸமஸ்தமான ; **देवगणाः** - தேவகணங்கள் ; **स्वर्गात्** - ஸ்வர்கலோகத்திலிருந்து ; **निराकृताः** - துரத்தப்பட்டனர். **मर्त्या यथा** - மனிதர்களைப்போல ; **भुवि** - பூலோகத்தில் ; **विचरन्ति**- ஸஞ்சரித்தனர்

(பொ - ரை) துஷ்டத்தன்மை வாய்ந்த அந்த மஹி ஷனுல் துரத்தியடிக்கப்பட்ட எல்லா தேவகணங்களும், பூலோகத்தில் மனிதர்களைப்போல ஸஞ்சாரம் செய்யத் தொடங்கிங்கினர். (எ)

गणाः - கணா: - கூட்டங்கள் -தொகுதிகள் **मर्त्य**:-மர்த்யா: என்ற பதத்திற்கு மரணதர்மத்தை யுடையவர்கள். தேவர்

களுக்கு மரணம் கிடையாது. எனவே மரணமில்லா வரத்தைப் பெற்ற தேவர்களையும் அவன் ஸாமான்ய மனிதர்களைப்போலச் செய்தது கொண்டு அவனுடைய பெருகிய பராக்ரமத்தின் பெருமையையும் ஸூசனை செய்வதாகும்.

एतद्वः कथितं सर्वममरारिविचेष्टितम् ।
शरणं वः प्रपन्नाः स्मो वधस्तस्य विचिन्त्यताम् ॥ ८ ॥

(ப-ரை) एतत् - இந்த ; अमरारि-विचेष्टितम् - தேவர்களுக்குப் பகைவனாகிய மஹிஷனுடைய அதிக்ரமத்தை ; सर्वम् - எல்லாவற்றையும் ; वः - உங்களுக்கு ; कथितम् - சொல்லப்பட்டது. शरणं च - சரணாகதியையும் ; प्रपन्नाः - அடைந்தவர்களாக இருக்கிறோம். तस्य - அவனுடைய ; वधः - நாசமானது ; विचिन्त्यताम् - ஆலோசிக்கப்படவேண்டும்.

(பொ - ரை) இந்த மஹிஷாஸுரனுடைய மமதையால் ஏற்பட்ட துன்பங்களையெல்லாம் உங்களுக்குச் சொன்னோம். நாங்கள் உங்களையே அடைக்கலம் புகுந்தோம். இனி அவனை அழிப்பதற்கான உபாயத்தைச் சிந்தனை செய்ய வேண்டுகிறோம். (அ)

இவ்விடம் மூலத்தில் वः - 'வ'; என்ற பன்மையானது லக்ஷ்மியோடும், பார்வதியோடும் சேர்ந்த ஹரி-ஹரர்களைக் குறிப்பதாகும், அல்லது தேவர்களுடைய கார்யஸித்தியின் பொருட்டு கௌரவமாக ப்ரயோகம் செய்யப்பட்டதாகவும் கொள்ளலாம்,

इत्थं निशम्य देवानां वचांसि मधुसूदनः ।
चकार कोपं शंभुश्च भ्रुकुटीकुटिलाननौ ॥ ९ ॥

(ப-ரை) **इत्थम्** - இவ்விதம்; **देवानाम्** - தேவர்களுடைய; **वचांसि** - வார்த்தைகளை; **निशम्य** - கேட்டு; **मधुसूदनः** - விஷ்ணுவும்; **शंभुः च** - சிவனும்; **भ्रुकुटीकुटिलाननौ** - புருவங்களுடைய வளைவுகளுடன் கூடிய முகங்களையுடையவர்களாகக் கொண்டு; **कोपम्** - கோபத்தை; **चकार** (**चक्रतुः**) செய்தனர்.

(பொ-ரை) இவ்விதம் தேவர்கள் சொல்லிய வார்த்தைகளைக்கேட்டு, மதுஸூதநனும், சம்பவும், புருவங்களை வளைத்து நெரித்துக்கொண்டு முகங்கள் சிவக்கக் கோபத்தை யடைந்தனர். (கூ)

मधुसूदनः - மதுஸூதந:- மது என்ற அரக்கனை அழித்தவன். **शम्भुः**- சம்பு: - மங்களத்தைச் செய்பவன், **भ्रुकुटीकुटिलाननौ** - ப்ருகுடீ குடிலாநநௌ - என்றது கோபத்தால் புருவங்களை நெரித்துக் கொள்வதால் அவைகள் வளைவது இயல்பு - இதை **भुग्नम्** - 'புக்நம்' (**வளைந்தது**) எனவும் வியவஹாரம் செய்வதுண்டு; இவ்விடத்தில் ப்ரஹ்மாவினுடைய கோபம் ரஜோகுணத்தை முக்யமாகக் கொண்டதாகவும்; ரக்ஷகனுகிய விஷ்ணுவினுடைய குணம் ஸத்வத்தை முக்கியமாகக் கொண்டதாகவும்; சிவனுடைய கோபமானது தமோகுணத்தைக் கொண்டதாகவுமிருப்பதால் இந்த தேவீ முக்குண வடிவங்கொண்டவளாவள். இக்கருத்தையே வைக்ருதி ரஹஸ்யமும்,

"सर्वदेवशरीरेभ्यो याविर्भूतामितप्रभा ।
त्रिगुणा सा महालक्ष्मीः साक्षान्महिषमर्दिनी ॥

"ஸமஸ்த தேவசரீரங்களிலிருந்து. அளவுகடந்த தேஜஸோடும், முக்குணங்களோடும் கூடிய அந்த மஹாலக்ஷ்மியானவள் ஸாக்ஷாத் மஹிஷமர்த்திநியின் வடிவங்கொண்டவளேயாவள்" எனக்கூறும். எனவே தேவர்களும் ரஜஸ்ஸத்வகுணங்களை முக்கியமாகக் கொண்டவர்களாதலால் இவ்விடத்திலும் ரஜஸ்ஸத்வகுணங்களுக்கு அதிகத்தன்மையுள்ளதெனக்கொள்ள வேண்டும்.

ततोऽतिकोपपूर्णस्य चक्रिणो वदनात्ततः ।
निश्चक्राम महत्तेजो ब्रह्मणः शंकरस्य च ॥ १० ॥

(ப-ரை) ततः - பிறகு; अति-कोप-पूर्णस्य - மிகவும் கோபம் நிறைந்த; चक्रिणः - விஷ்ணுவினுடைய; ततः - விஸ்தாரமான; वदनात् - முகத்திலிருந்தும்; ब्रह्मणः - ப்ரஹ்மாவினுடைய (முகத்திலிருந்தும்) शंकरस्य च சங்கரனுடைய (முகத்திலிருந்தும்) महत् - பெரிய; तेजसः - தேஜஸானது; निश्चक्राम - வெளியே புறப்பட்டது.

(பொ-ரை) பிறகு மிகவும் கோபம் கொண்ட விஷ்ணு, ப்ரஹ்மா, சங்கரன், முதலியவர்களுடைய விஸ்தாரமான முகங்களிலிருந்து பெரிய தேஜஸானது வெளியே புறப்பட்டது. (௧0)

"मदीयशक्तिलेशा ये तत्तद्देवशरीरगाः" - என்று லக்ஷ்மீதந்த்ரத்தில் கூறியபடி என்னுடையவைகளான எந்த சக்தியின் லேசங்கள் (திவலை) உண்டோ, அவைகளே அந்த அந்த தேவசரீரங்களை யடைந்தவைகளாகும், என்பது கருத்து.

तेजः- தேஜ: - என்ற பதத்திற்கு ப்ரபாவம், காந்தி, பலம், சுக்லம் என்பவைகளையும் பொருளாகக் கொள்ளலாம். "तेजः प्रभावे दीप्तौ च बले शुक्ले प्रकीर्तितम्'' என்பது பிரமாணவசனம்:

अन्येषां चैव देवानां शक्रादीनां शरीरतः ।
निर्गतं सुमहत्तेजस्तच्चैक्यं समगच्छत ॥ ११ ॥

(ப-ரை) अन्येषाम् - மற்றுமுள்ள; शक्रादीनाम् - இந்த்ரன் முதலிய; देवानां च - தேவர்களுடையவும்; शरीरतः एव - சரீரத்திலிருந்தும்; सुमहत्-तेजः - அழகிய பெரிய தேஜஸானது; निर्गतम् - புறப்பட்டது. तत् - அந்த தேஜஸும்; ऐक्यं च - ஒன்ருயிருக்கும் தன்மையையும்; समगच्छत - அடைந்தது.

(பொ - ரை) மற்றுமுள்ள இந்த்ரன் முதலிய தேவர்களுடைய சரீரங்களிலிருந்து அழகியதும், பெரியதுமான தேஜஸானது வெளியே புறப்பட்டது. அது ஒன்று திரண்டு ஒரே வடிவாகவும் ஆகியது. (கக)

अन्येषाम् -அந்யேஷாம்; என்றது கோபத்தையடைந்த மற்ற தேவர்களைக் குறிக்கும். निर्गतं तत्तेजः - நிர்கதம்-தத்-தேஜ: என்ற பதமானது ப்ரஹ்மன் முதலியவர்களுடையவும், இந்த்ரன் முதலியவர்களுடையவும் தேஜஸைக்குறிக்கும்.

ऐक्यम् - ஒரே உருவாகச் சேருவது.

अतीव तेजसः कूटं ज्वलन्तमिव पर्वतम् ।
ददृशुस्ते सुरास्तत्र ज्वालाव्याप्तदिगन्तरम् ॥ १२ ॥

(ப - ரை) ते - அந்த ; सुरा: - தேவர்கள் ; तत्र - அவ்விடத்தில் ; अतीव - மிகவும் சோபையுடன் கூடிய; ज्वालाव्याप्तदिगन्तरम्- ஜ்வாலைகளால் சூழப்பட்ட திக்குகளையுடைய ; तेजस: - कूटम् - ஒளிக்கூட்டத்தை ;ज्वलन्तम् - எரிந்து கொண்டிருக்கிற ; पर्वतम्- इव - பர்வதத்தைப்போல ; ददृशु: - பார்த்தனர்.

(பொ - ரை) அந்த தேவர்கள், அவ்விடத்தில் மிகவும் உக்ரமாயும், ஜ்வாலைகளோடு சோபிக்கப்பட்ட பத்து திசைகளோடு கூடியதாயுமிருக்கின்ற ஒளிகளுடைய கூட்டங்களை, காந்திகளால் ஒளிருகின்ற கநகபர்வதத்தைப்போல் பார்த்தனர். (கஉ)

अतीव - அதிவ - மிகவும், कूटम् - கூடம், ஸமூஹம், அல்லது கூட்டம், तत्र - தத்ர - அவ்விடத்தில் - காத்யாயநாச்ரமத்தில் என்பது கருத்து.

अतुलं तत्र तत्तेज: सर्वदेवशरीरजम् ।
एकस्थं तदभून्नारी व्याप्तलोकत्रयं त्विषा ॥ १३ ॥

(ப - ரை) तत्र - அவ்விடத்தில் ; सर्वदेवशरीरजम् - ஸமஸ்த தேவதைகளுடைய சரீரங்களிலிருந்து உண்டாகிய ; अतुलम् - இணையற்ற ; तत् - அந்த ; तेज: - ஒளியானது ; एकस्थम् - ஒன்றாயிருந்துகொண்டு ; तत् - பிறகு ; त्विषा - காந்தியினால் ; व्याप्तलोकत्रयम् - சூழப்பட்ட மூன்று உலகத்தோடு கூடியதான : नारी - பெண்ணாக ; अभूत् - ஆகியது.

(பொ - ரை) அந்த தேவஸபையில் விஷ்ணுமுதலிய தேவர்களுடைய சரீரங்களிலிருந்து முண்டான தேஜஸு கவெல்லாம் ஒன்ருகச் சேர்ந்து பத்து திக்குகளிலும் பரவிக்கொண்டு ஒரு பெண்ணுருவாகப் பரிணமித்தது. (கங)

एकस्थम् - ஏகஸ்தம். ஒரே உருவாக இருப்பது. **त्विट्** - த்விட் - காந்தி - ஒளி.

यदभूच्छांभवं तेजस्तेनाजायत तन्मुखम् ।
याम्येन चाभवन् केशा बाहवो विष्णुतेजसा ॥ १४ ॥

(ப - ரை) **यत्** - யாதொரு; **शांभवम्** - சம்புவின் ஸம்பந்தமான; **तेजः** - தேஜஸ்: **अभूत्** - உண்டாகியதோ: **तेन** - அந்த தேஜஸனுல்; **तत्-मुखम्** - அந்த தேவியினுடைய முகமானது: **अजायत** - உண்டாகியது; **याम्येन** - யமஸம்பந்தமான தேஜஸினுல்; **केशाः**- கேசங்களும், **विष्णु-तेजसा**- விஷ்ணுவினுடையதேஜஸினுல்: **बाहवः च** - கைகளும்: **अभवत्** - உண்டாகியது,

(பொ - ரை) சிவஸம்பந்தமான தேஜஸினுல் அந்த தேவிக்கு முகமும், யமஸம்பந்தமான தேஜஸினுல் கேசங்களும், விஷ்ணுவினுடைய தேஜஸினுல் கைகளும் உண்டாயின. (கச)

இங்கு தேஜஸுகளுடைய விபாகங்களான (பிரிவு) சரீராவயவங்களுடைய பிரிவுகள் சொல்லப்படுகின்றன. சிவன் வெள்ளை நிறமாதலால் அவனுடைய தேஜஸிலிருந்து உண்டாகிய முகமும் வெளுப்பாகும். யமன் கருப்புநிறமுள்ளவனுதலால் அவனுடைய

தேஜஸிலிருந்து உண்டாகிய கூந்தல்களும் கருப்பு நிறமாகும். விஷ்ணு நீலநிறமாதலால் அவருடைய தேஜஸிலிருந்து உண்டாகிய பதினெட்டுக் கைகளும் நீல நிறங்களாகும்.

सौम्येन स्तनयोर्युग्मं मध्यमैन्द्रेण चाभवत् ।
वारुणेन च जङ्घोरू नितम्बस्तेजसा भुवः ॥ १५ ॥

(ப-ரை) **सौम्येन**- சந்த்ரஸம்பந்தமான தேஜஸினால்; **स्तनयोः** கொங்கைகளுடைய; **युग्मम्** - இரண்டும்; **ऐन्द्रेण** - இந்த்ரஸம்பந்தமான தேஜஸினால்; **मध्यं च** - மத்யப்ரதேசமும்; **वारुणेन** - வருணஸம்பந்தமான தேஜஸினால்; **जङ्घा-ऊरू** - கணுக்காலும், தொடையும், **भुवः** - பூமியினுடைய; **तेजसा** - தேஜஸினால்; **नितम्बः च** - நிதம்பமும்; **अभवत्** - உண்டாகியது.

(பொ-ரை) சந்த்ரஸம்பந்தமான தேஜஸினால், தேவியினுடைய இரண்டு கொங்கைகளும், இந்த்ரஸம்பந்தமான தேஜஸினால், இடுப்பும், வருண ஸம்பந்தமான தேஜஸினால் கணுக்கால்களும், தொடையும், பூமியினுடைய தேஜஸினால் நிதம்பமும் (இடுப்பின் பின்பக்கம்,) உண்டாகியது. (கரு)

சந்த்ரன் வெளுப்பு, அவனுடைய தேஜஸிலிருந்து உண்டாகிய கொங்கைகளும் வெண்மை நிறமாகும், இந்த்ரன் ரக்தவர்ணம் அவனுடைய தேஜஸிலிருந்து உண்டாகிய இடுப்பும் சிவப்புநிறமாகும்.

जङ्घोरू - ஜங்கோரு என்றது **जङ्घे-ऊरू** - ஜங்கே-ஊரு என இரண்டு பதங்களாகும்.

ब्रह्मणस्तेजसा पादौ तदङ्गुल्योऽर्कतेजसा ।
वसूनां च कराङ्गुल्यः कौबेरेण च नासिका ॥ १६ ॥

(ப - ரை) ब्रह्मणः - ப்ரஹ்மாவினுடைய ; तेजसा - தேஜஸினால்; पादौ - இரண்டு பாதங்களும் ; अर्कतेजसा - ஸூர்யனுடைய தேஜஸினால் ; तत् अङ्गुल्यः - அக்கால்களுடைய விரல்களும் ; वसूनां च - வஸுக்களுடைய தேஜஸினாலும் ; कराङ्गुल्यः - கைகளுடைய விரல்களும் ; कौबेरेण - குபேரனுடைய ஸம்பந்தமான (தேஜஸினால்) नासिका च - நாசியும் ; (अभूत्) - உண்டாகியது.

(பொ - ரை) ப்ரஹ்மனுடைய தேஜஸால் அந்த தேவியினுடைய இரண்டு பாதங்களும், ஸூர்ய தேஜஸினால் கால்விரல்களும் ; அஷ்டவஸுக்களுடைய தேஜஸால் கைவிரல்களும் ; குபேரனுடைய ஸம்பந்தமான தேஜஸால் நாசியும் (மூக்கும்) உண்டாகியது. (கச)

ப்ரஹ்ம தேஜஸாலுண்டாகிய இரண்டு பாதங்களும் சிவப்பு நிறங்களாம். வைக்ருதிரஹஸ்யத்திலும் ;

" श्वेतानना नीलभुजा सुश्वेतस्तनमण्डला ।
रक्तमध्या रक्तपादा निलजङ्घोरुरुन्मदा ॥
सुचित्रजघना चित्रमाल्याम्बरविभूषणा ।
चित्रानुलेपना कान्तिरूपसौभाग्यशालिनी ॥ "

"வெண்மையான முகமும், நீல நிறமான கைகளும், அழகிய வெண்மையான கொங்கைகளும், சிவந்த இடுப்பும், சிவந்த சரணங்களும், நீலநிறமான துடையும், கணுக்கால்களும், பலவர்ணங்கள்கொண்ட அழகியதான இடுப்பின் பின்பக்கமும்,

பலவர்ணங்கள் கொண்ட மாலையையும், வஸ்த்ரத்தையும், ஆபரணங்களையும், சந்தனப்பூச்சுக்களையும், காந்தி, உருவம், ஸௌபாக்யம் இவைகளையும் கொண்டு விளங்குபவள் தேவீ'' என இவ்விதம் கூறப்பட்டிருக்கிறது.

இந்த உருவம் கொண்டு தேவிக்கு முக்குணத் தன்மையும் ஸூசனை செய்யப்பட்டதாகும். இந்த முக்குணங்களைக் கொண்ட காரணத்தால்தான் பல நிறங்கள் கொண்ட மாலைகளையும், வஸ்தரங்களையும், ஆபரணங்களையும், ஆலேபநங்களையும் ஸ்வீகரித்துக் கொண்டிருக்கிருள் என்பதும் தாத்பர்யம்.

तस्यास्तु दन्ता: संभूता: प्राजपात्येन तेजसा ।

नयनत्रितयं जज्ञे तथा पावकतेजसा ॥ १७॥

(ப - ரை) प्राजापत्येन - தக்ஷன் முதலிய ப்ரஜாபதிகளுடைய ஸம்பந்தமான, तेजसा - தேஜஸால், तस्या: - அந்த தேவியினுடைய, दन्ता: - तु - பற்களும், संभूता: - உண்டாயின. तथा - அவ்விதமே, पावकतेजसा - அக்நியினுடைய தேஜஸினல், नयनत्रितयम् - கண்களுடைய மூன்றும், जज्ञे - உண்டாகியது.

(பொ - ரை) தக்ஷன் முதலிய ப்ரஜாபதிகளுடைய தேஜஸ் ஸம்பந்தத்தால் அந்த தேவியினுடைய தந்தங்களும் (பற்கள்) உண்டாயின. அவ்விதமே அக்நியினுடைய தேஜஸ் ஸம்பந்தத்தால் மூன்று கண்களும் உண்டாயின. (17)

प्राजापत्येन - ப்ராஜாபத்யேந ; என்றதால் இங்கு ப்ரஹ்மா என்று பொருள் கொள்ளக்கூடாது. இப்பதத்திற்கு தக்ஷப்ரஜாபதி முதலியவர்கள் எனப் பொருள் கொள்ள வேணும்.

भ्रुवौ च संध्ययोस्तेजः श्रवणावनिलस्य च ।
अन्येषां चैव देवानां संभवस्तेजसां शिवा ॥ १८ ॥

(ப - ரை) संध्ययोः - இரண்டு ஸந்த்யாகாலங்களுடைய, तेजः - தேஜஸானது, भ्रुवौ च - புருவங்களாகவும் - अनिलस्य - வாயுவினுடைய (தேஜஸானது) श्रवणौ च - காதுகளாகவும், अन्येषां - மற்றவர்களான, देवानां - தேவதைகளுடையவும், तेजसां च - தேஜஸுகளுடையவும், संभव एव - பரிணமமாகவே, सा - அந்த शिवा - தேவீ (இருந்தாள்)

(பொ - ரை) இரண்டு ஸந்த்யாகாலங்களுடைய தேஜஸினால் புருவங்களும்; வாயுவினுடைய தேஜஸினால் இரு செவிகளும் உண்டாயின. மற்றவர்களான தேவர்களின் தேஜஸுகளுடைய பரிணமமாகவே அந்த தேவீ விளங்கினாள். (18)

संध्ययोः-ஸந்த்யயோ:—இரண்டு ஸந்திகள் ; மூன்று வர்ணத்தவர்களும் வணங்கும் தேவதைகளான ப்ராதஸ் ஸந்த்யா (காலை) ஸாயம் ஸந்த்யா (மாலை) என்ற தேவதைகள், अन्येषां - அந்யேஷாம் - மற்றவர்கள்—அச்விநீதேவர்கள், விச்வகர்மா முதலியவர்கள்.

ततः समस्तदेवानां तेजोराशिसमुद्भवाम् ।
तां विलोक्य मुदं प्रापुरमरा महिषार्दिताः ॥ १९ ॥

(ப - ரை) ततः - பிறகு, समस्तदेवानाम् - எல்லா தேவர்களுடையவும், तेजो-राशि-समुद्भवाम् தேஜஸுகளுடைய கூட்டங்களிலிருந்து உண்டாகிய, ताम् - அந்த, (தேவியை) विलोक्य - பார்த்து, महिषार्दिताः - மஹிஷாஸுரனால் பீடிக்

கப்பட்டவர்களான, अमराः - தேவர்கள், मुदम् - ஸந்தோஷத்தை, प्रापुः - அடைந்தனர்.

(பொ - ரை) பிறகு ஸமஸ்த தேவர்களுடைய தேஜஸுகளிலிருந்தும் உண்டாகிய அந்த தேவியைப்பார்த்து, மஹிஷாஸுரனுல் துன்பத்தையடைந்த தேவர்கள் அனைவரும் ஆநந்தத்தை யடைந்தனர். (19)

இங்கு ப்ரஹ்மன் முதலியவர்களுடைய தேஜஸுகளிலிருந்து தான் ஸ்ரீதேவியினுடைய ஆவிர்பாவம் (தோற்றம்) என்பது கருத்து. मुदम् - முதம் - என்ற பதத்திற்கு ஆனந்தம் என்பது பொருள்.

शूलं शूलाद्विनिष्कृष्य ददौ तस्यै पिनाकधृत् ।
चक्रं च दत्तवान् कृष्णः समुत्पाट्य स्वचक्रतः ॥ २० ॥

(ப - ரை) पिनाकधृत् - சிவன், शूलात् - சூலத்திலிருந்து शूलम् - சூலத்தை, विनिष्कृष्य - ஆகர்ஷித்து (இழுத்து), तस्यै - அந்த தேவிக்கு, ददौ - கொடுத்தார், कृष्णः - விஷ்ணு, स्वचक्रतः - தன்னுடைய சக்ராயுதத்திலிருந்து, चक्रं - च - சக்ரத்தையும், समुत्पाट्य - பெயர்த்து, दत्तवान् - கொடுத்தார்.

(பொ - ரை) பிநாகம் என்ற சிறந்த வில்லைக்கொண்ட பரமசிவனும், தனது சூலாயுதத்திலிருந்து சூலத்தையும், விஷ்ணுவும் தனது சக்ராயுதத்திலிருந்து சக்ரத்தையும் எடுத்துக் கொடுத்தனர். (20)

இங்கு चक्रं-च - 'சக்ரம் ச' என்ற சகாரத்தினுல் கதாயுதத்தையும் கொடுத்தார் என்பது தாத்பர்யம். கதாயுதத்தைச் சேர்த்தால்தான் ஸ்ரீதேவிக்கு பதினெட்டு ஆயுதங்கள் பூர்த்தியாகும். இது வைக்ருதி ரஹஸ்யத்தில் சொல்லப்படும்.

पिनाकधृत् - பிநாகத்ருத் - பிநாகம் என்ற தநுஸை தரிப்பவன் பரமசிவன். இங்கு சிவனும் விஷ்ணுவும் முறையே சூலம் சக்ரம் என்ற ஆயுதங்களுக்கு ஸமானமான மற்ற ஆயுதங்களை (அதாவது சூலம், சக்ரம் இவைகளை,) எடுத்துக் கொடுத்தனர் என்பது கருத்து.

शङ्खं च वरुणः शक्तिं ददौ तस्यै हुताशनः ।
मारुतो दत्तवांश्चापं बाणपूर्णे तथेषुधी ॥ २१ ॥

(ப - ரை) वरुणः - வருணன், शङ्खं - சங்காயுதத்தையும், हुताशनः - அக்நி, शक्तिं-च - வேலாயுதத்தையும், तस्यै - அந்த தேவிக்கு, ददौ - (முறையே) கொடுத்தனர். मारुतः - மாருதி, चापम् - வில்லையும், तथा - அவ்விதமே, - बाणपूर्णे - அம்புகள் நிறைந்த, इषुधी - தூணீரங்களையும், दत्तवान् - கொடுத்தான்.

(பொ - ரை) அந்த தேவிக்கு, வருணன், சங்கம் என்ற ஆயுதத்தையும், அக்நி, சக்தி என்ற வேலாயுதத்தையும், வாயுதேவன், வில்லையும், பாணங்கள் நிறைந்த தூணீரங்களையும் (அம்புராப்பொதிகளையும்) முறையே கொடுத்தனர். (21)

शङ्खं च - " சங்கம் ச " என்றதிலுள்ள சகாரத்தினல் மேலே சொல்லப்போகிற பாசத்தையும் கொடுத்தான் என்பதையும் ஸூசனை செய்வதாகும்.

இவ்விடத்தில் इषुधी - இஷுதீ என்று த்விவசனம் (இருமை) ப்ரயோகம் செய்திருப்பது ஸ்ரீதேவிக்கு இடதுகை கொண்டும், வலது கைகொண்டும் சரப்யோகம் செய்யும் திறமையுண்டு ன்பதையும் தெரிவிப்பதற்காக.

वज्रमिन्द्रः समुत्पाट्य कुलिशादमराधिपः ।
ददौ तस्यै सहस्राक्षो घण्टामैरावताद्गजात् ॥ २२ ॥

(ப - ரை) अमराधिपः - தேவர்களுக்குத் தலைவனும், सहस्राक्षः - ஆயிரம் கண்களையுடையவனுமான, इन्द्रः - இந்த்ரன், कुलिशात् - வஜ்ராயுதத்திலிருந்து, वज्रम् - வஜ்ர மென்ற ஆயுதத்தையும், ऐरावतात् - ஐராவதம் என்ற, गजात् - யானையினிடமிருந்து, घण्टाम् - மணியையும், समुत्पाट्य - ஆகர்ஷித்து, (பெயர்த்து) तस्यै - அந்த தேவிக்கு, ददौ - கொடுத்தான்.

(பொ - ரை) தேவர்களுக்குத் தலைவனும், ஆயிரம் கண்களையுடையவனுமான இந்த்ரன் தனது வஜ்ராயுதத்திலிருந்து வஜ்ரத்தையும், தனது வாஹநமான ஐராவதத்தினிடமிருந்து மணியையும் அந்த தேவிக்குக் வழங்கினன். (22)

कालदण्डाद्यमो दण्डं पाशं चाम्बुपतिर्ददौ ।
प्रजापतिश्चाक्षमालां ददौ ब्रह्मा कमण्डलुम् ॥ २३ ॥

(ப - ரை) यमः - யமன், कालदण्डात् - காலமென்னும் தண்டத்திலிருந்து, दण्डम् - தண்டாயுதத்தையும், अम्बुपतिः - வருணன், पाशं-च பாசத்தையும், ददौ - கொடுத்தான், प्रजापतिः - ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய, ब्रह्मा - ப்ரஹ்மா, अक्षमालाम् - ஜபமாலையையும், कमण्डलुं च - ஜலபாத்திரத்தையும், ददौ - கொடுத்தான்.

(பொ - ரை) அந்தகனாகிய யமன் தனது ஆயுதமாகிய காலமென்னும் தண்டத்திலிருந்து தண்டாயுதத்தையும், வருணன் பாசாயுதத்தையும், ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய ப்ரஹ்மன் ஜபமாலையையும், ஜலபாத்திரத்தையும் முறையே கொடுத்தனர். (23)

अम्बुपतिः—அம்புபதி: என்றது அம்பு, ஜலம் அவைகளுக்கு பதி: தலைவன், வருணன். ப்ரஜாபதி: என்றது ப்ரஹ்மாவுக்கு விசேஷணம் (அடைமொழி).

समस्तरोमकूपेषु निजरश्मीन् दिवाकरः ।

कालश्च दत्तवान् खड्गं तस्याश्चर्म च निर्मलम् ॥ २४ ॥

(ப - ரை) दिवाकरः ஸூர்யன், समस्तरोमकूपेषु - ஸகல ரோமத்வாரங்களிலும், निजरश्मीन् - தன்னுடைய கிரணங் களையும், कालः-च - காலதேவனும், तस्याः - அந்த தேவிக்கு, खड्गम् - கத்தியையும், निर्मलम् - ப்ரகாசிக்கின்ற, चर्म-च-சரீரத் தைக் காப்பாற்றுகின்ற கேடகத்தையும், दत्तवान् - கொடுத் தான்.

(பொ-ரை) ஸூர்யன், ஸமஸ்த ரோம த்வாரங்களிலும் (மயிர்க்கால்கள்) தன்னுடைய கிரணங்களையும்; காலன் தன்னுடைய வாளையும், சரீரரக்ஷைக்குரிய மிகவும் ப்ரகாசமுள்ள கேடகத்தையும் அந்த தேவிக்கு முறையே கொடுத்தனர். (24)

இவ்விடம் कालः— 'கால:' என்ற பதம் யமனைக் குறிப்பிடு வது அல்ல. நிமேஷம் - கலா - காஷ்டை என்பன போன்ற அளவுள்ளவைகளான காலங்களுடைய அபிமானியாகிய கால தேவன் எனப்பொருள் கொள்ளவேண்டும். निर्मलम् - நிர்மலம் மிகுந்த ஒளியுள்ளது. चर्म 'சர்மம்' என்பது போர் செய்யும் பொழுது சரீரத்தை எதிரிகளுடைய ஆயுதங்களிலிருந்து காப்பாற்றிக் கொள்ளத்தக்கதான பலகம். இதுவே கேடகம் எனவும் ஆம்.

क्षीरोदश्चामलं हारमजरे च तथाम्बरे ॥ २५ ॥

(ப - ரை) क्षीरोदः - பாற்கடல், अमलम् - தூய்மையான, हारम्-च - முத்து மாலையையும், तथा - அவ்விதமே, अजरे - அழிவில்லாத, अम्बरे - च - (இரண்டு) வஸ்த்ரங்களையும் (கொடுத்தது.)

(பொ - ரை) பாலாழியும் பரிசுத்தமான - நிர்மலமான-முத்துக்களாலாகிய மாலையையும், என்றும் அழியாத் தன்மை வாய்ந்த வஸ்த்ரங்களையும் கொடுத்தது. (25)

अजरे 'அஜரே' என்ற பதத்திற்கு என்றும் அழியாது நித்யமாக நிலைத்துள்ளது என்பது பொருள்.

चूडामणिं तथा दिव्यं कुण्डले कटकानि च ॥

अर्धचन्द्रं तथा दिव्यं केयूरान् सर्वबाहुषु ।
नूपुरौ विमलौ तद्वत् ग्रैवेयकमनुत्तमम् ॥ २६ ॥

अङ्गुलीयकरत्नानि समस्तास्वङ्गुलीषु च ।
विश्वकर्मा ददौ तस्यै परशुं चातिनिर्मलम् ॥ २७ ॥

अस्त्राण्यनेकरूपाणि ताथाभेद्यं च दंशनम् ।

(ப - ரை) विश्वकर्मा - தேவசில்பி, तस्यै - அந்த தேவியின் பொருட்டு, दिव्यम् - சிறந்ததான, चूडामणिम् - சிரோரத்நத்தையும், तथा - அவ்விதமே, कुण्डले - குண்டலங்களையும், कटकानि - च - வளைகளையும், तथा - அவ்விதமே, दिव्यम् - சிறந்ததான, अर्धचन्द्रम् அர்த்த சந்த்ரமென்ற ஆபரணத்தையும், सर्वबाहुषु - எல்லாக் கைகளிலும், केयूरान् - தோள் வளையங்களையும், तद्वत् - அதுபோலவே, विमलौ - நிர்மலங்களான, नूपुरौ - காற்சிலம்புகளையும், अनुत्तमम् - உத்தமத்

திலும் உத்தமமான, ग्रैवेयकम् - கண்டாபரணத்தையும், समस्तासु - ஸகல, अङ्गुलीषु - விரல்களிலும், अङ्गुलीयकरत्नानि - च - சிறந்தவைகளான கணையாழிகளையும், अतिनिर्मलम् - மிகவும் பரிசுத்தமான, परशुं - च - கோடாலியையும், अनेकरूपाणि - பல விதங்களான, अस्त्राणि - அஸ்த்ரங்களையும், तथा - அவ் விதமே, अभेद्यम् - பிளக்கமுடியாத, दंशनं-च - கவசத்தையும், ददौ - கொடுத்தான்.

(பொ - ரை) தேவசில்பியான விச்வகர்மாவும், அந்த தேவியின் பொருட்டு திவ்யமான சிரோரத்நத்தையும், (சூடாமணி) கர்ண குண்டலங்களையும், கைவளையல்களை யும், வெண்மையான பிறை சூடியென்னும் அர்த்தசந்த்ர வடிவான நெற்றிச் சுட்டியையும், எல்லாக் கைகளுக்கும் தோள் வளையங்களையும், நிர்மலமான காற்சிலம்புகளையும், அத்யுத்தமமான கண்டாபரணத்தையும் (அட்டிகை); எல்லா விரல்களுக்கும் சிறந்த மோதிரங்களையும், மிகச் சிறந்ததான கோடாலியையும், மற்றும் பலவிதங்களான அஸ்த்ரங்களையும், பிளக்க முடியாத கவசத்தையும் கொடுத்தான். (26, 27)

अनेकरूपाणि अस्त्राणि - அநேகரூபாணி - அஸ்த்ராணி என்று சொன்னதால் தேவதைகளால் கொடுக்கப்பட்ட சூலம், சக்ரம் முதலியவைகளைக் காட்டிலும் வேறான அஸ்த்ரங்களையும் கொள்ள வேண்டும். இவ்விடத்தில் சூடாமணி முதல் கவசம் வரை யிலுள்ளவைகளை தேவசில்பி கொடுத்தான் என்பது கருத்து.

अर्धचन्द्रम् - அர்த்தசந்த்ரம் - பாதி மதியின் வடிவாக நெற்றி யில் சூட்டிக் கொள்ளும் ஓர் ஆபரணவிசேஷம்.

अम्लानपङ्कजां मालां शिरस्युरसि चापराम् ॥ २८ ॥

अददज्जलधिस्तस्यै पङ्कजं चातिशोभनम् ।
हिमवान् वाहनं सिंहं रत्नानि विविधानि च ॥ २९ ॥

(ப - ரை) जलधिः - ஸமுத்ரதேவன், तस्यै - அந்த தேவியின் பொருட்டு, शिरसि தலையிலும், उरसि-च - மார்பிலும், अपराम् - வேருெரு, अम्लानपङ्कजाम् - வாடாத தாமரைப் புஷ்பங்களாலான, मालाम् - மாலையையும், अतिशोभनम् - மிகவும் மனோஹரமான, पङ्कजं च - தாமரைப் பூவையும், हिमवान् - மலையரசன் वाहनम् - வாஹநமாகிய, सिंहम् - ஸிம்ஹத்தையும், विविधानि - பலவகையான, रत्नानि - ரத்நங்களையும், अददत् - கொடுத்தான்.

(பொ - ரை) ஸமுத்ரதேவன், அந்த தேவிக்கு, சிரஸிலும், மார்பிலும் என்றும் வாடாத தாமரைப் புஷ்பங்களாலான ஒவ்வொரு மாலையையும், மிகவும் மனோஹரமான மற்ருெரு தாமரைப் புஷ்பத்தையும், மலையரசன், தனது வாஹநமாகிய ஸிம்ஹத்தையும், பல வகையான ரத்நங்களையும் முறையே கொடுத்தனர். (29)

ददावशून्यं सुरया पानपात्रं धनाधिपः ।
शेषश्च सर्वनागेशो महामणिविभूषितम् ॥ ३० ॥
नागहारं ददौ तस्यै धत्ते यः पृथिवीमिमाम् ।

(ப - ரை) धनाधिपः - செல்வங்களுக்குத் தலைவனுகிய் குபேரன், सुरया - மதுவால், अशून्यम् - பரிபூர்ணமான, पान-पात्रम् - குடிக்கும் பாத்திரத்தையும், यः - எவன், इमाम् - இந்த, पृथिवीम् - பூமியை, धत्ते - தரித்துக்கொண்டிருக்கிருனே, सर्वनागेशः - எல்லா நாகங்களுக்கும் தலைவனுகவுமிருக்கிருனே,

शेषः च (அந்த) ஆதிசேஷனும், महामणिविभूषितः - உத்தமமான ரத்நங்களால் அலங்காரம் செய்யப்பட்ட, नागहारम् - நாக ஹாரத்தையும், तस्यै - அந்த தேவியின் பொருட்டு, ददौ - கொடுத்தான்.

(பொ - ரை) நிதிக்குவியலுக்குத் தலைவனாகிய குபே ரன் மதுவினால் எப்பொழுதும் நிறைந்திருக்கின்ற பாந பாத்திரத்தையும், (அம்ருதகலசம்) ஸகல நாகங்களுக்குத் தலைவனும், இந்த பூமண்டலத்தைத் தாங்கிக்கொண் டிருப்பவனுமான ஆதிசேஷன் சிறந்த ரத்நங்களால் இழைக்கப்பட்ட நாகஹாரத்தையும் அந்த தேவிக்கு முறையே கொடுத்தனர். (30)

மூலத்தில் सुराः - ஸுரா-என்ற சொல்லுக்கு மது-கள் என்று பொருள். அது மிகுந்த நறுமணத்துடன் கூடிய ஒரு வகை மத்யம் - शेषः - சேஷன் - அநந்தன் - नागहारम् - நாகஹாரம் - நாக ரூபங்களாலான ஹாரம் - மாலை, எனவுமாம். இவ்விடம் நாகங்கள் ஸர்பங்களைக்காட்டிலும் மாறுபட்டவை. இவைகள் தேவயோநிவிசேஷங்கள், நாகங்களுக்குத் தலைவன் அநந்தனும், ஸர்ப்பங்களுக்குத்தலைவன் வாஸுகியும் என்பது ஸாரமாகும்.

மற்றும், இங்கு ஸ்ரீதேவீ பதினெட்டுக்கைகளுடனும், ஆயிரம் கைகளுடனும் கூடியவள் என்பதும் ஸூசனை செய்யப்படு கிறது. இதற்கு ப்ரமாணவசனம், अष्टादशभुजा पूज्या सा सहस्र-भुजा सती, "பதினெட்டுக் கைகளுடன் கூடியவளும், ஆயிரம் கைகளுடன் கூடியவளுமான அந்த தேவியை பூஜை செய்ய வேண்டும்" என்ற வைக்ருதிரஹஸ்யத்திலுள்ள ச்லோகமாகும். இவ்விஷயத்திலும் தேவர்களால் பதினெட்டுக் கைகளிலும் தரித்துக்கொள்ளக்கூடிய ஆயுதங்கள் கொடுத்திருப்பதைக் கொண்டும், பற்பல அஸ்த்ராதிகளை மற்ற தேவர்கள் கொடுத்த னர் என்பதைக் கொண்டும் கிடைப்பதாகும்.

மேலும் ஆயுதங்களைக் குறிப்பிடும்பொழுது அதே வைக்ருதி ரஹஸ்யத்தில்,

"आयुधान्यत्र वक्ष्यन्ते दक्षिणाधःकरक्रमात् ।
अक्षमाला च कमलं बाणोऽसिः कुलिशं गदा ।
चक्रं त्रिशूलं परशुः शङ्खो घण्टा च पाशकः ॥
शक्तिर्दण्डश्चर्म चापं पानपात्रं कमण्डलुः ।
अलंकृतभुजामेभिरायुधैः कमलासनाम् ॥
सर्वदेवमयीमीशां महालक्ष्मीमिमां नृप ।
पूजयेत्सर्वदेवानां स लोकानां प्रभुर्भवेत् ॥"

"ஆயுதங்களும் என்னால் சொல்லப்படப் போன்கிறன என்று தொடங்கி—முறையே வலது கீழ்க்கையில், அக்ஷமாலையும் கமலமும், பாணமும், கத்தியும், வஜ்ரமும், கதையும், சக்ரமும், த்ரிசூலமும், பரசுவும், சங்கமும், மணியும், பாசமும், வேலாயுதமும், தண்டாயுதமும், கேடகமும், தநுஸ்ஸும், பாநகலசமும், கமண்டலுவும் கொண்டு அலங்கரிக்கப்பட்ட கைகளில் ஆயுதங்களோடும், தாமரையை இருப்பிடமாகக் கொண்டவளும், ஸகல தேவ வடிவங்கொண்டவளும், திறமையுள்ளவளும், மஹாலக்ஷ்மியின் வடிவாயிருப்பவளுமான இந்த தேவியை ஓ அரசனே! பூஜை செய்து வந்தால் தேவர்களுடன் கூடிய ஸகல லோகங்களுக்கும் அவன் தலைவனாகிறான்." எனக் கூறப்பட்டிருக்கிறது. ஆதலால் இந்த தேவியானவள் ப்ராஹ்மீ யென்றும் வைஷ்ணவீ யென்றும், முக்குணங்களோடு கூடியவள் என்றும், மூல சக்தியினுடைய அவதாரமென்றும் சொல்லப்படுகிறாள். அக்காரணத்தால் ப்ரஹ்மா, இந்திரன், முதலிய தேவர்களுடைய சரீரங்களிலிருந்து உண்டாகிய தேஜஸ் தேவியின் சரீரவடிவாயமைந்தது எனவும் சொல்லப்பட்டது. அத்தேவர்களும் தங்கள் தங்கள் ஆயுதங்களினின்றும் ஆகர்ஷித்து (இழுத்து) ஆயுதங்களைக் கொடுத்தனர் எனச் சொல்லப்பட்டதும் பொருந்தும்.

மற்றும் உலக கார்யத்தை நிர்வஹிப்பதற்காக, சக்தி வடிவத்தோடு தேவியே தன்னுடைய அம்சங்களாக பரிணமித்த (தோன்றிய) தேவர்காளாவர். மஹிஷனை வதம் செய்து உலகைக் காப்பாற்றுவதற்காக எல்லா தேவசக்திகளும் மறுபடியும் ஒன்று சேர்ந்த வடிவமே தேவியின் வடிவமாகும். இது போலவே ஆயுதங்களும் தேவியினுடைய சக்திகளின் அம்சங்களாகும். "நானே எனது விபூதி-(மஹிமை)யினால் பல வடிவங்களோடு" अहं विभूत्या बहुभिः என மூன்றாவது சரிதத்திலும்;

"महालक्ष्मीरहं शक्र पुनः स्वायंभुवेऽन्तरे।
हिताय सर्वदेवानां जाता महिषमर्दिनी ॥
मदीया शक्तिलेशा ये तत्र देवशरीरगाः ।
धृतं मया तैः संभूतै रूपं परमशोभनम् ॥
आयुधानि च देवानां यानि यानि सुरेश्वर ।
मच्छक्तयस्तदाकाराण्यायुधानि ममाभवन् ॥"

"ஓ இந்த்ர! மஹாலக்ஷ்மியாகிய நான் ஸமஸ்த தேவர்களுடைய நன்மைக்காக மறுபடியும் மஹிஷமர்திநியாக உண்டானேன். என்னுடைய எந்த சக்தியின் அணுக்களுண்டோ, அவைகளே தேவ சரீரங்களையுமடைந்தன. அந்த அணு சக்திகளோடு மங்களகரமான அழகிய வடிவமும் என்னால் தரிக்கப்பட்டது. தேவர்களுடைய எந்த எந்த ஆயுதங்களுண்டோ, ஓ அமரேச்வர' அவைகள் யாவும் என்னுடைய சக்திகளின் வடிவங்களாகும், அவைகளே எனக்கும் ஆயுதங்களாக உண்டாயின" என லக்ஷ்மீ தந்த்ரத்திலும் கூறப்பட்டுள்ளது.

अन्यैरपि सुरैर्देवी भूषणैरायुधैस्तथा ॥ ३१ ॥

संमानिता ननादोच्चैः साट्टहासं मुहुर्मुहुः ।
तस्या नादेन घोरेण कृत्स्नमापूरितं नभः ॥ ३२ ॥

(ப - ரை) देवी - தேவியானவள், अन्यैः - மற்றுமுள்ள, सुरैः अपि - தேவர்களாலும், तथा - அவ்விதமே, भूषणैः - ஆபரணங்களாலும், आयुधैः - ஆயுதங்களாலும், संमानिता - கௌரவிக்கப்பட்டவளாகக் கொண்டு, मुहुः - मुहुः - அடிக்கடி, उच्चैः - பெரியதான, साट्टहासम् - அட்டஹாஸத்தோடுகூட, ननाद - கர்ஜித்தாள். तस्याः - அந்த தேவியினுடைய, घोरेण - பயங்கரமான, नादेन - சப்தத்தினல், नभः - ஆகாசம், कृत्स्नम् - முழுவதும், आपूरितम् - நிரப்பப்பட்டது.

(பொ - ரை) அந்த தேவியானவள், மற்றுமுள்ள தேவர்களாலும் அவ்விதமே ஆபரணங்களேயும், ஆயுதங்களேயும் கொடுத்து கௌரவிக்கப்பட்ட பொழுது, அடிக்கடி அட்டஹாஸத்தோடு கூடிய இடி முழக்கம் செய்தாள். அந்த பயங்கரமான இடிமுழக்கமானது வானேயளாவி நின்றது. (31-32)

अमायतातिमहता प्रतिशब्दो महानभूत् ।
चुक्षुभुः सकला लोका समुद्राश्च चकम्पिरे ॥ ३३ ॥

(ப - ரை) अमायतातिमहता - அளவற்றதும், மிகப்பெரியதுமான அந்த சப்தத்தால், महान् - வலியதான, प्रतिशब्दः - எதிரொலியானது, अभूत् - உண்டாகியது. सकलाः - எல்லா, लोकाः - உலகங்களும், चुक्षुभुः - கலங்கின. समुद्राः च - ஸமுத்ரங்களும், चकम्पिरे - நடுங்கின.

(பொ - ரை) அந்த தேவியினுடைய அளவற்றதும், மிகவும் பெரியதுமான அந்த பயங்கர சப்தத்தால் வலியதான மற்ளுெரு எதிரொலியானது உண்டாகியது. அச்சமயம் ஈரேழு உலகங்களும், அதிர்ச்சியடைந்தன. ஸப்த ஸமுத்ரங்களும் கலக்கமடைந்தன. (33)

चचाल वसुधा चेलुः सकलाश्च महीधराः ।
जयेति देवाश्च मुदा तामूचुः सिंहवाहिनीम् ॥ ३४ ॥

(ப - ரை) वसुधा - பூமியானது, चचाल - குலுங்கியது, सकलाः - எல்லா, महीधराः-च-மலைகளும், चेलुः - நடுங்கின. देवाः - தேவர்கள், सिंहवाहिनीम् - ஸிம்ஹத்தை வாஹநமாகக் கொண்ட, ताम् - அந்த (தேவியை), जय इति - ஜயம் உண்டாகுக என்று, मुदा - ஸந்தோஷத்தோடு, ऊचुः-च - சொல்லவும் செய்தனர்.

(பொ - ரை) அந்த சப்தத்தினால் பூமி நடுங்கியது. மலைகளும் அசைந்தன; ஸிம்ஹத்தின் மீதமர்ந்த தேவியைக்கண்ட தேவர்களெல்லோரும் மகிழ்ச்சியால் 'ஜய விஜயீ பவ, என கோஷித்தனர். (33)

तुष्टुवुर्मुनयश्चैनां भक्तिनम्रात्ममूर्तयः ।
दृष्ट्वा समस्तं संक्षुब्धं त्रैलोक्यममरारयः ॥ ३५ ॥
संनद्धाखिलसैन्यास्ते समुत्तस्थुरुदायुधाः ।

(ப - ரை) मुनयः - முனிவர்கள், भक्तिनम्रात्ममूर्तयः - பக்தியால் வணங்கிய சரீரங்களோடு கூடியவர்களாக, एनाम् - இந்த (தேவியை), तुष्टुवुः - च - துதிக்கவும் செய்தனர். अमरारयः - அஸுரர்கள், समस्तम् எல்லா, त्रैलोक्यम् - மூவுலகும், संक्षुब्धम् -நன்கு கலங்கியிருப்பதை, दृष्ट्वा-பார்த்து, ते - அவர்கள், संनद्धाखिलसैन्याः - ஆயத்தம் செய்யப்பட்ட ஸகல ஸேனைகளோடு கூடியவர்களாகவும், उदायुधाः - உயர்த்திப்பிடிக்கப்பட்ட ஆயுதங்களை யுடையவர்களாகவும். समुत्तस्थुः - எழுந்தனர்.

(பொ - ரை) அப்பொழுது, பக்தியால் பெருமிதம் கொண்டு வணங்கிய சரீரங்களோடு கூடியவர்களான முனிவர்கள் இந்த தேவியைத் துதித்தனர். மூவுலகம் முழுவதும் கலங்கியிருப்பதைக் கண்ட அந்த அஸுரர் களும் தத்தம் ஸேனைகளை ஆயத்தம் செய்து கொண்டு, தத்தமக்குரிய ஆயுதங்களையும் உயர்த்திப் பிடித்துக் கொண்டு எழுச்சி யடைந்தனர். (35)

आः किमेतदिति क्रोधादाभाष्य महिषासुरः ॥ ३६ ॥

अभ्यधावत तं शब्दमशेषैरसुरैर्वृतः ।

(ப - ரை) महिषासुरः - மஹிஷாஸுரன், आः - ஆஹா, एतत् - இது, किम् - என்ன? इति - என்று, कोपात् - கோபத்தின் காரணமாக, आभाष्य - சொல்லிவிட்டு, अशेषैः - எல்லா, असुरैः - அஸுரர்களாலும், वृतः - சூழப்பட்டவனாக, तम् - அந்த, शब्दम् - சப்தத்தை நோக்கி, अभ्यधावत - ஓடினான்.

(பொ - ரை) மஹிஷாஸுரன் கோபத்தோடு 'ஆஹா இது என்ன?' எனச் சொல்லிவிட்டு, எல்லா அஸுர ஸேனைகளும் புடை சூழ அந்த பயங்கரமான சப்தம் வரும் திக்கை நோக்கி எதிர்த்து ஓடினான். (36)

स ददर्श ततो देवीं व्याप्तलोकत्रयां त्विषा ॥ ३७ ॥

पादाक्रान्त्या नतभुवं किरीटोल्लिखिताम्बराम् ।

क्षोभिताशेषपातालां धनुर्ज्यानिःस्वनेन ताम् ॥ ३८ ॥

दिशो भुजसहस्रेण समन्ताद्व्याप्य संस्थिताम् ।

(ப - ரை) ततः - பிறகு, सः - அவன், त्विषा - காந்தியினால், व्याप्तलोकत्रयाम्-பரவிய மூவுலகத்தோடு கூடியவளாக

வும், पादाक्रान्त्या - பாதங்களுடைய ஆக்ரமணத்தால் (வைப்பதால்), नतभुवम् - வணங்கிய பூமியையுடையவளாகவும், किरीटोल्लिखिताम्बराम् - கிரீடத்தால் கிறப்பட்ட ஆகாயத்தை யுடையவளாகவும், धनुर्ज्यानि:स्वनेन - வில்லினுடையவும் நாண் கயிற்றினுடையவும் ஒலியினுல், क्षोभिताशेषपातालाम् - கலக்கப்பட்ட ஸகலபாதாளங்களோடு கூடியவளாகவும், भुजसहस्रेण - கைகளுடைய ஆயிரங்களால், समन्तात् - நான்கு புறமும், दिश: - திக்குகளை, व्याप्य - வியாபித்துக் கொண்டும், संस्थिताम् - இருக்கின்றவளுமான, ताम् - அந்த, देवीम् - தேவியை, ददर्श - பார்த்தான்.

(பொ - ரை) பிறகு அந்த மஹிஷாஸுரன், காந்தியால் கவரப்பட்ட மூவுலகோடு கூடியவளும், கால்களுடைய அடிகளில் வணங்கிய பூமியை யுடையவளும், கிரீடத்தால் கிறப்பட்ட (தொடப்பட்ட) ஆகாயத்தை யளாவியவளும்; வில்லின் நாணொலி முழக்கத்தால் பாதாளம் முழுவதையும் கலக்கியவளாகவும், தனது ஆயிரம் கைகளால் திக்குகளைச் சுற்றி வியாபித்துக் கொண்டவளுமான அந்த தேவியைப் பார்த்தான். (37, 38)

1. வில்லினுடைய சப்தம் 'க்ரோங்காரம்' நாண் கயிற்றின் சப்தம் டங்காரம்.

ततः प्रववृते युद्धं तया देव्या सुरद्विषाम् ॥ ३९ ॥
शस्त्रास्त्रैर्बहुधा मुक्तैरादीपितदिगन्तरम् ।

(ப - ரை) ततः - பிறகு, तया - அந்த, देव्या - தேவியோடு, सुरद्विषाम् - அஸுரர்களுக்கு, बहुधा - பலவிதமாக, मुक्तैः - விடப்பட்ட, शस्त्रास्त्रैः - சஸ்த்ரங்களாலும், அஸ்த்ரங்

களாலும், आदीपितदिगन्तरम् - எங்கும் பிரகாசிக்கப்பட்ட திக்குகளையுடையதாயிருக்கிற, युद्धम् - யுத்தமானது, प्रववृते - உண்டாகியது.

(பொ - ரை) பிறகு, அந்த தேவிக்கும், அஸுரர்களுக்கும் பரஸ்பரம் பலவிதத்தில் விடப்பட்ட சஸ்த்ரங்களாலும், அஸ்த்ரங்களாலும் திக்குகளை ப்ரகாசிக்கும்படியான யுத்தமானது உண்டாகியது. (39)

अस्त्राणि - அஸத்ரங்கள் வில், அம்பு முதலியன.

शस्त्राणि - சஸ்திரங்கள் கையில் வைத்துக் கொண்டு பிரயோகம்செய்யக்கூடிய வாள், கத்தி, முதலியன.

महिषासुरसेनानीश्चिक्षुराख्यो महासुरः ॥ ४० ॥
युयुधे चामरश्चान्यैश्चतुरङ्गबलान्वितः ।
रथानामयुतैः षड्भिरुदग्राख्यो महासुरः ॥ ४१ ॥

(ப ரை) महिषासुरसेनानीः-மஹிஷாஸுரனுடைய ஸேனைத்தலைவனாகிய, चिक्षुराख्यः - சிக்ஷுரன் என்ற பெயருள்ள, महासुरः - பெரிய அஸுரன், चतुरङ्गबलान्वितः - சதுரங்கஸைன்யத்தோடு கூடவும், अन्यैः- மற்றவர்களோடும், चामरः च- சாமரன் என்ற அஸுரனும் रथानाम् - ரதங்களுடைய, षड्भिः - ஆறு (எண்ணிக்கைகள்) கொண்ட, अयुतैः - பத்தாயிரங்களோடும்கூட, उदग्राख्यः - உதக்ரன் என்ற பெயருடன் கூடிய, महासुरः- பெரிய அஸுரன், युयुधे-யுத்தம் செய்தான்.

(பொ - ரை) மஹிஷாஸுரனுடைய ஸேனைத்தலைவனாகிய சிக்ஷுரன் என்ற மஹாஸுரனும், சாமரன் முதலிய அஸுரர்களோடுகூட சதுரங்கஸேனைகளுடனும், (ரதம் யானை,குதிரை, காலாட்படை)உதக்ரன் என்ற மஹாஸுரன்

அறுபதினுயிரம் ரதங்களுடனும் புறப்பட்டுச் சென்று ஸ்ரீதேவியோடு யுத்தம் செய்தனர். (40-41)

अयुध्यतायुतानां च सहस्रेण महाहनुः ।

पञ्चाशद्भिश्च नियुतैरसिलोमा महासुरः ॥ ४२ ॥

(ப - ரை) महाहनुः - மஹாஹநு என்றவன், अयुतानाम् - பதினுயிரங்களுடைய, सहस्रेण - ஆயிரத்தோடும், असिलोमा- அஸிலோமா என்ற, महासुरः - பெரிய அஸுரன், पञ्चाशद्भिः - பதினைந்துகளாலான, नियुतैः - பத்துலக்ஷங்களோடும், अयुध्यत - யுத்தம் செய்தான்.

(பொ - ரை) மஹாஹநு என்ற அஸுரன் ஒரு கோடி தேர்களோடு கூடவும், அஸிலோமா என்ற மஹாஸுரன் ஐந்து கோடி ரதங்களோடு கூடவும் யுத்தம் செய்தான்.

1.	ஏகம்	ஒன்று	1
2.	தச	பத்து	10
3.	சதம்	நூறு	100
4.	ஸஹஸ்ரம்	ஆயிரம்	1000
5.	அயுதம்	பதினுயிரம்	10000
6.	லக்ஷம்	லக்ஷம்	100000
7.	நியுதம்	பத்து லக்ஷம்	1000000
8.	கோடி	கோடி	10000000
9.	அர்புதம்	பத்து கோடி	100000000
10.	வ்ருத்தம்	நூறு கோடி	1000000000
11.	கர்வம்	ஆயிரம் கோடி	10000000000
12.	நிகர்வம்	பதினுயிரம் கோடி	100000000000
13.	சங்கம்	லக்ஷம் கோடி	1000000000000
14.	பத்மம்	பத்துலக்ஷம் கோடி	10000000000000
15.	ஸாகரம்	நூறு லக்ஷம் கோடி	100000000000000
16.	அந்த்யம்	ஆயிரம் கோடி	1000000000000000
17.	மத்யம்	பதினுயிரம் கோடி	10000000000000000
18.	பரார்தம்	லக்ஷம் லக்ஷம் கோடி	100000000000000000

பதினுயிரங்களுடைய ஐம்பது $10000 \times 50 \times 10000000000000000$

இவ்விதம் ஒன்று முதல் பதினெட்டு ஸ்தானங்களை அறிந்து கொள்ள வேண்டும்.

अयुतानां शतैः षड्भिर्बाष्कलो युयुधे रणे ।
गजवाजिसहस्रौघैरनेकैः परिवारितः ॥ ४३ ॥

वृतो रथानां कोट्या च युद्धे तस्मिन्नयुध्यत ।

(ப - ரை) बाष्कलः - பாஷ்கலன் என்ற அஸுரன், रणे - யுத்த களத்தில், अयुतानाम् - பதினாயிரங்களுடைய षड्भिः - ஆறுகளோடு கூடிய, शतैः - நூறுகளால், युयुधे - யுத்தம் செய்தான். परिवारितः - பரிவாரிதன் என்றவன், अनेकैः - கணக்கற்றவைகளான, गजवाजिसहस्रौघैः - யானை, குதிரை, இவைகளுடைய, ஆயிரங்களின் கூட்டங்களினு லும், रथानाम् - ரதங்களுடைய, कोट्या च - கோடியினுலும், वृतः சூழப்பட்டவனுக, तस्मिन् - அந்த, युद्धे - யுத்தத்தில், अयुध्यत - போர் செய்தான்.

(பொ - ரை) பாஷ்கலன் என்ற அஸுரன் யுத்தகளத்தில் அறுபது லக்ஷம் தேரோடுகூட யுத்தம் செய்தான். பரிவாரிதன் கணக்கற்ற யானை, குதிரை இவைகளுடைய கூட்டங்களாலும், ஒரு கோடி தேர்களோடும் சூழப்பட்டவனுக அந்த யுத்தகளத்தில் போர் தொடுத்தான். (43)

बिडालाख्योऽयुतानां च पञ्चाशद्भिरथायुधैः ॥ ४४ ॥
युयुधे संयुगे तत्र रथानां परिवारितः ।

(ப - ரை) अथ - பிறகு, बिडालाख्यः - च - பிடாலன் என்றவனும், तत्र - அந்த, संयुगे - யுத்தத்தில், अयुतानाम् - பதினாயிரங்களுடைய, पञ्चाशद्भिः - ஐம்பதுகளோடு சேர்ந்த, अयुतैः - பதினாயிரங்களோடு கூடிய, रथानाम् - ரதங்களைக்

கொண்டு, परिवारितः - சூழப்பட்டவனாக, युयुधे - யுத்தம் செய்தான்.

(பொ - ரை) பிறகு பிடாலன் என்ற அஸுரனும், ஐந்நூறு கோடி ரதங்களால் சூழப்பட்டவனாக அந்த யுத்தகளத்தில் போர் செய்தான். (44)

अन्ये च तत्रायुतशो रथनागहयैर्वृताः ॥ ४५ ॥

युयुधुः संयुगे देव्या सह तत्र महासुराः ।

(ப - ரை) तत्र - அந்த, संयुगे - யுத்தகளத்தில், अन्ये - வேறு சில (எந்த) அஸுரர்களுண்டோ, तत्र - அவர்களில், महासुराः च - மஹாஸுரர்களும், अयुतशः - பதினாயிரக்கணக்கான, रथनागहयैः - தேர், யானை, குதிரை என்றவைகளினால், वृताः - சூழப்பட்டவர்ளாக, देव्या सह-தேவியோடுகூட, युयुधुः - யுத்தம் செய்தனர்.

(பொ - ரை) அந்த யுத்தகளத்தில் வேறு அஸுரர்களில் சில மஹாஸுரர்களும் பதினாயிரக்கணக்கான தேர், யானை, குதிரை முதலியவைகளால் சூழப்பட்டவர்களாக தேவியோடுகூட யுத்தம் செய்தனர். (45)

कोटिकोटिसहस्रैस्तु रथानां दन्तिनां तथा ॥ ४६ ॥

हयानां च वृतो युद्धे तत्राभून्महिषासुरः ।

(ப - ரை) तथा - அவ்விதமே, महिषासुरः तु - மஹிஷாஸுரனும், तत्र - அந்த, युद्धे - யுத்தத்தில், रथानाम् - ரதங்களுடையவும், दन्तिनाम् யானைகளுடையவும், हयानां च - குதிரைகளுடையவும், कोटिकोटिसहस्रैः - லக்ஷம் லக்ஷம் கோடிகளோடு கூட, वृतः - சூழப்பட்டவனாக, अभूत् - (யுத்தம் செய்வதற்கு ஆயத்தனாக) ஆனான்.

(பொ - ரை) அந்த யுத்தத்தில் மஹிஷாஸுரனும், தேர், யானை குதிரை இவைகளுடைய லக்ஷம் லக்ஷம் கோடிகளைக்கொண்டு சூழப்பட்டவனாக தேவியோடுகூட யுத்தம் செய்வதற்கு ஆயத்தமானான். (46)

तोमरैर्भिन्दिपालैश्च शक्तिभिर्मुसलैस्तथा ॥ ४७ ॥

युयुधुः संयुगे देव्या खड्गैः परशुपट्टिशैः ।

(ப - ரை) संयुगे - யுத்தத்தில், तोमरैः - தோமரங்களாலும், भिन्दिपालैः - பிந்திபாலங்களாலும், शक्तिभिः - வேலாயுதங்களாலும், मुसलैः - உலக்கைகளாலும், परशुपट्टिशैः - கோடாலிகள், பட்டிசங்கள் இவைகளாலும் देव्या - தேவியோடு கூட, युयुधुः - யுத்தம் செய்தனர்.

(பொ - ரை) யுத்தத்தில் ஸேனைத் தலைவனாகிய சிக்ஷுரன் முதலிய மஹாஸுரர்கள், தோமரங்கள், பிந்திபாலங்கள், வேல்கள், இரும்பு உலக்கைகள், கோடாலிகள், பட்டிசங்கள், வாள்கள் முதலிய ஆயுதங்களோடு கூட தேவியுடன் சண்டை செய்தனர். (47)

भिन्दिपालं - பிந்திபாலம், கைகொண்டு எறியக் கூடிய ஆயுதம்.

केचिच्च चिक्षिपुः शक्तीः केचित्पाशांस्तथापरे ॥ ४८ ॥

देवीं खड्गप्रहारैस्तु ते तां हन्तुं प्रचक्रमुः ।

(ப - ரை) केचित् - சிலர், शक्तीः - சக்திகளையும், केचित् - சிலர், पाशान् च - பாசங்களையும், चिक्षिपुः - எறிந்தனர். तथा - அவ்விதமே, अपरे-तु - மற்றவர்களான, ते-அந்த அஸுரர்களும், खड्गप्रहारैः - கத்தியினுடைய வெட்டுக்களால், ताम् -

அந்த, देवीम् - தேவியை, हन्तुम् - கொல்லுவதற்கு, प्रचक्रमुः - ஆரம்பித்தனர்.

(பொ - ரை) சில அஸுரர்கள் வேலாயுதங்களையும், சிலர் பாசா(கயிறு)யுதங்களையும், அவ்விதமே மற்றும் சில அஸுரர்கள் அந்த தேவியை வாள்களினால் கொல்லுவதற்கும் ஆரம்பித்தனர். (48)

सापि देवी ततस्तानि शस्त्राण्यस्त्राणि चण्डिका ॥ ४९ ॥

लीलयैव प्रचिच्छेद निजशस्त्रास्त्रवर्षिणी ।

(ப - ரை) ततः - பிறகு, सा - அந்த, चण्डिका - சண்டிகை யென்ற, देवी - अपि - தேவியும், तानि - அந்த, शस्त्राणि - சஸ்த்ரங்களையும், अस्त्राणि - அஸ்த்ரங்களையும், निजशस्त्रास्त्र-वर्षिणी - தன்னுடைய சஸ்த்ரங்களையும், அஸ்த்ரங்களையும் பொழிந்து கொண்டு, लीलया - एव - விளையாட்டாகவே, प्रचिच्छेद - முறித்தாள்.

(பொ - ரை) பிறகு அந்த சண்டிகாதேவியும், அஸுரர்களுடைய சஸ்த்ரங்களையும், அஸ்த்ரங்களையும், தன்னுடைய அஸ்தரங்களாலும், சஸ்த்ரங்களாலும் விளையாட்டாகவே துண்டித்தெறிந்தாள். (49)

अनायस्तानना देवी स्तूयमाना सुरर्षिभिः ॥ ५० ॥

मुमोचासुरदेहेषु शस्त्राण्यस्त्राणि चेश्वरी ।

(ப - ரை) आनायस्तानना - யாதொரு வாட்டமுமில்லாத முகத்தோடு கூடியவளும், सुरर्षिभिः - தேவரிஷிகளால், स्तूयमाना-ஸ்துதிக்கப்பட்டவளும், ईश्वरी-லோகமாதாவுமாகிய,

देवी - தேவியானவள், असुरदेहेषु - அஸுரர்களுடைய சரீரங்களில், शस्त्राणि - சஸ்த்ரங்களேயும, अस्त्राणि - அஸ்ரங்களேயும், मुमोच-च - ப்ரயோகம் செய்தாள்.

(பொ - ரை) கொஞ்சமும் களைப்பையே காணுத முகத்தோடு கூடியவளும், நாரதர் முதலிய தேவர்ஷிகளால் துதிக்கப்பட்டவளும், லோகமாதாவுமான தேவியானவள், அஸுரர்களுடைய சரீரங்களில் சஸ்த்ரங்களேயும், அஸ்த்ரங்களேயும் ஏவினுள். (50)

सोऽपि क्रुद्धो धुतसटो देव्या वाहनकेसरी ॥ ५१ ॥

चचारासुरसैन्येषु वनेष्विव हुताशनः ।

(ப - ரை) देव्याः - தேவியினுடைய, सः - அந்த, वाहन-केसरी अपि - வாஹநமாகிய ஸிம்ஹமும், क्रुद्धः - கோபித்துக்கொண்டு, धुतसटः - உதறப்பட்ட பிடரிமயிர்களேயுடையதாக, असुरसैन्येषु - அஸுரஸைன்யங்களில், वनेषु - காடுகளில், हुताशन - इव - அக்நிபோலே, चचार - ஸஞ்சரித்தது.

(பொ - ரை) தேவியினுடைய வாஹநமாகிய ஸிம்ஹமும் கோபத்தோடுகூட பிடரிமயிர்களே உதறிக்கொண்டு, கானகங்களில் அக்நி தேவன் ஸஞ்சரிப்பதுபோல, அஸுரஸைன்யங்களின் நடுவில் ஸஞ்சாரம் செய்தது. (51)

निःश्वासान्मुमुचे यांश्च युध्यमाना रणेऽम्बिका ॥ ५२ ॥

त एव सद्यः संभूता गणाः शतसहस्रशः ।

(ப - ரை) अम्बिका-च - சண்டிகாதேவியும், रणे - போர்க்களத்தில், युध्यमाना - சண்டை செய்துகொண்டு, यान् - எந்த,

नि:श्वासान् - மூச்சுக்களை, **मुमुचे** விட்டாளோ, **ते-एव** - அவை களே, **सद्य:** - உடனே, **शतसहस्रश:** - லக்ஷம் லக்ஷமான, **गणा:** - சண்டிகா கணங்களாக, **संभूता:** - உண்டாயின.

(பொ - ரை) போர்க்களத்தில் சண்டிகாதேவியான வள் மஹாஸுரர்களுடன் சண்டை செய்துகொண்டிருக் கிற ஸமயத்தில் அவளால் விடப்பட்ட பெருமூச்சுக்க ளெல்லாம் லக்ஷம் லக்ஷம் சண்டிகா கணங்களாக உண்டா யின. (52)

युयुधुस्ते परशुभिर्भिन्दिपालासिपट्टिशैः ॥ ५३ ॥

नाशयन्तोऽसुरगणान् देवीशक्त्युपबृंहिताः ।

(ப - ரை) **ते** - அந்த கணங்கள், **देवीशक्त्युपबृंहिता:** - தேவியினுடைய சக்தியால் அபிவிருத்தி செய்யப்பட்ட வைகளாக, **परशुभि:** - கோடாலிகளாலும், **भिन्दिपालासिपट्टिशै:** - பிந்திபாலங்களாலும், கத்திகளாலும், பட்டிசங்களாலும், **असुरगणान्** - அஸுர கணங்களை, **नाशयन्त:** - நாசம் செய்து கொண்டு, **युयुधु:** - யுத்தம் செய்தன.

(பொ - ரை) அவ்விதம் உண்டாகிய அந்த சண்டிகா கணங்கள், தேவியினுடைய சக்தியால் உத்ஸாஹம் செய் யப்பட்டவைகளாக, கோடாலி, வாள், பிந்திபாலம், பட்டிசம் முதலிய ஆயுதங்களைக் கொண்டு, அஸுர கணங்களை அழித்தவண்ணம் யுத்தம் செய்தன. (53)

अवादयन्त पटहान् गणाः शङ्खांस्तथापरे ॥ ५४ ॥

मृदङ्गांश्च तथैवान्ये अस्मिन्युद्धमहोत्सवे ।

(ப - ரை) अस्मिन् - இந்த, युद्धमहोत्सवे - யுத்தமஹோத்ஸவத்தில், गणा: - தேவியினுடைய கணங்கள், पटहान् - படஹங்களை, अवादयन्त - முழங்கினர். तथा-அவ்விதமே, अपरे-மற்றகணங்கள், शङ्खान् - சங்குகளை, (ஊதினர்.) तथा - एव - அவ்விதமே, अन्ये - மற்றுஞ் சில கணங்கள், मृदङ्गान् - மிருதங்கங்களை (வாசித்தனர்).

(பொ - ரை) அந்த யுத்த மஹோத்ஸவத்தில் தேவியினுடைய கணங்களில் சிலர் படஹங்களை (தம்பட்டம்) முழக்கினர்; அவ்விதமே வேறு சில கணங்கள் சங்கங்களை ஊதினர். அவ்விதமே மற்றும் சில கணங்கள் மிருதங்கங்களை வாசித்தனர். (54)

ततो देवी त्रिशूलेन गदया शक्तिवृष्टिभिः ॥ ५५ ॥

खङ्गादिभिश्च शतशो निजघान महासुरान् ।

(ப - ரை) तत: - பிறகு, देवी - தேவியானவள், त्रिशूलेन - திரிசூலத்தினுலும், गदया - கதையினுலும், शक्तित्रष्टिभि: - வேலாயுதங்களுடைய வர்ஷங்கள் (பொழிதல்) கொண்டும், खङ्गादिभि: च - வாள் முதலியவைகள் கொண்டும், महासुरान् - பெரிய அஸுரர்களை, शतश: - நூற்றுக்கணக்காக, निजघान - கொன்ருள்.

(பொ - ரை) பிறகு சண்டிகாதேவி, திரிசூலம், கதை, வேல், வாள் முதலியவைகளை மழையெனப் பொழிந்து அந்த மஹாஸுரர்களை யெல்லாம் நூற்றுக்கணக்காகக் கொன்று குவித்தாள். (55)

पातयामास चैवान्यान् घण्टास्वनविमोहितान् ॥ ५६ ॥

असुरान्भुवि पाशेन बद्ध्वा चान्यानकर्षयत् ।

(ப - ரை) घण्टास्वनविमोहितान् - மணியினுடைய சப்தம் கொண்டு வியாமோஹத்தையடைந்த, अन्यान् - மற்றும் சிலரை, पातयामास - एव - கீழே விழ்த்தினள். अन्यान् - மற்ற, असुरान् - அஸுரர்களை, पाशेन - கயிற்றினல், वध्द्वा - கட்டி, भुवि - பூமியில், अकर्षयत् च - இழுக்கவும், செய்தாள்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் வேறு சிலரைத் தனது மணியொலியினல் மயங்கசெய்து நிலத்தின் மீது விழ்த்தினள். மற்றும் சிலரை கயிற்றினல் கட்டித் தரையில் இழுத்தாள். (56)

केचिद् द्विधाकृतास्तीक्ष्णैः खड्गापतैस्तथापरे ॥ ५७ ॥

विपोथिता निपातेन गदया भुवि शेरते ।

वेमुश्च केचिद्रुधिरं मुसलेन भृशं हताः ॥ ५८ ॥

केचिन्निपतिता भूमौ भिन्नाः शूलेन वक्षसि ।

(ப - ரை) केचित् - சிலர், तीक्ष्णैः - கூரியவைகளான, खड्गपातैः - கத்திகளுடைய விழ்ச்சிகளால், द्विधा - இரண்டாக कृताः - பிளக்கப்பட்டனர். तथा - அவ்விதமே, अपरे - மற்றவர்கள், गदया - கதை கொண்டு, निपातेन - அடித்த காரணத்தால், विपोथिताः - நசுக்கப்பட்டவர்களாக, भुवि - பூமியில், शेरते - கிடத்தப்பட்டனர். केचित् - च மற்றும் சிலர், मुसलेन - இரும்பு உலக்கையினல். भृशम् - நன்ருக, हताः - கொல்லப்பட்டவர்களாக, रुधिरम् - ரத்தத்தை, वेमुः - கக்கினர்கள். केचित् - சிலர், शूलेन - சூலத்தினல், वक्षसि - மார்பில், भिन्नाः - பிளக்கப்பட்டவர்களாக, भूमौ - பூமியில், निपातिताः - தள்ளப்பட்டனர்.

(பொ - ரை) சில அஸுரர்கள் தேவியினுடைய கூரிய கத்தியினால் இரண்டாக பிளக்கப்பட்டனர்; அவ்விதமே சிலர் கதையினுடைய அடி கொண்டு நசுக்கப்பட்டவர்களாக பூமியில் கிடத்தப்பட்டனர். வேறு சிலர் இரும்பு உலக்கையால் நன்றாக அடிக்கப்பட்டு ரத்தத்தைக் கக்கினர். சிலர் சூலத்தால் மார்பில் குத்திப் பிளக்கப்பட்டு பூமியில் வீழ்ந்தனர். (57, 58)

निराकृताः शरौघेण कृताः केचिद्रणाजिरे ॥ ५९ ॥

सेनानुकारिणः प्राणान्मुमुचुस्त्रिदशार्दनाः ।

(ப - ரை) केचित् - சிலர், सेनानुकारिणः - ஸேனைகளின் முன் செல்லுகின்ற, त्रिदशार्दनाः - அஸுரர்கள், रणाजिरे - ரணகளத்தில், शरौघेण - சரஸமூஹங்களால், निराकृताः - துளைக்கப்பட்டவர்களாக, कृताः - செய்யப்பட்டு, प्राणान् - பிராணன்களை, मुमुचुः - விட்டனர்.

(பொ - ரை) ஸேனைகளை முன்னிருந்து நடத்துகின்ற சில அஸுரர்கள் யுத்தகளத்தில் மழைபோல் பொழிகின்ற தேவியினுடைய சரஸமூஹங்களால் நொறுக்கப்பட்டு பிராணன்களை விட்டனர், (59)

केषांचिद्बाहवश्छिन्नाश्छिन्नग्रीवास्तथापरे ॥ ६० ॥

शिरांसि पेतुरन्येषामन्ये मध्ये विदारिताः ।

विच्छिन्नजङ्घास्त्वपरे पेतुरुर्व्यां महासुराः ॥ ६१ ॥

(ப - ரை) केषांचित् - சிலருடைய, बाहवः - கைகள், छिन्नाः - அறுக்கப்பட்டன. तथा - அவ்விதமே, अपरे - மற்ற

வர்கள், छिन्नग्रीवा: - முறிக்கப்பட்ட கழுத்தையுடையவர் களாகவும், अन्येषाम् - மற்றும் சிலருடைய, शिरांसि - தலைகள், पेतु: - உருண்டன. अन्ये - மற்றவர்கள், मध्ये - நடுவில், विदारिता: - பிளக்கப்பட்டவர்களாகவும், अपरे - மற்ற, महासुरा: तु - மஹாஸுரர்களோவெனில், विछिन्नजङ्घा: - முறிக்கப்பட்ட முழங்கால்களையுடையவர்களாக, उर्व्याम् - பூமியில், पेतु: - விழுந்தனர்.

(பொ - ரை) சிலருடை கைகள் முறிக்கப்பட்டன. அவ்விதமே மற்றும் சிலருடைய கழுத்துக்கள் முறிந்தன. வேறு சிலருடைய தலைகள் நிலத்தில் விழுந்து உருண்டன. சிலருடைய இடுப்பு ஒடிந்தும், மற்றுமுள்ள மஹாஸுரர்கள் முழங்கால்கள் முறிந்தும் பூமியில் சாய்ந்தனர். **(60)**

एकबाह्वक्षिचरणा: केशिद्देव्या द्विधा कृता: ।
छिन्नेऽपि चान्ये शिरसि पतिता: पुनरुत्थिता: ॥ ६२ ॥
कबन्धा युयुधुर्देव्या गृहीतपरमायुधा: ।

(ப - ரை) केचित् - சிலர், देव्या - தேவியால், एकबाह्वक्षिचरणा: - ஒரு கையும், ஒரு கண்ணும், ஒரு காலும் உடையவர்களாக, द्विधा - இரண்டாக कृता: - செய்யப்பட்டனர். अन्ये - மற்றவர்கள், शिरसि - தலையானது, छिन्ने-अपि - முறிக்கப்பட்டாலும், पतिता:-च - விழுந்தவைகளாயினும், पुन:- மறுபடியும், उत्थिता: - எழுந்தவைகளாக. गृहीतपरमायुधा: - எடுக்கப்பட்ட சிறந்த சஸ்த்ரங்களையுடைய, कबन्धा: - முண்டங்களையுடையவர்களாக, देव्या - தேவியோடு, युयुधु: - யுத்தம் செய்தனர்.

(பொ - ரை) சில மஹாஸுரர்கள் தேவியினால் ஒரு கையும், ஒரு கண்ணும், ஒரு காலும் உள்ளவர்களாகச் செய்யப்பட்டனர். வேறு சிலர் சிரஸ் முறிக்கப்பட்டு பூமியில் விழுந்திடிலும், மறுபடியும் எழுந்திருந்து, கையில் சிறந்த ஆயுதங்களை எடுத்துக்கொண்டு முண்டங்களாகவே தேவியோடுகூட யுத்தம் செய்தனர். (61, 62)

ननृतुश्च परे तत्र युद्धे तूर्यलयाश्रिताः ॥ ६३ ॥

कबन्धाश्छिन्नशिरसः खड्गशक्त्यृष्टिपाणयः ।

तिष्ठ तिष्ठेति भाषन्ते देवीमन्ये महासुराः ॥ ६४ ॥

(ப - ரை) तत्र - அந்த, युद्धे - யுத்தத்தில், अपरे - மற்றும் சில அஸுரர்கள், तूर्यलयाश्रिताः - வாத்யங்களுடைய லயப்ரமாணத்தை அனுஸரித்தவர்களாக, ननृतुः - च - நர்த்தனம் செய்தனர். छिन्नशिरसः - அறுக்கப்பட்ட சிரஸுகளையுடைய, कबन्धाः - முண்டங்கள், खड्गशक्त्यृष्टिपाणयः - வாள், வேல், ரிஷ்டியென்ற ஆயுதம் இவைகளைக் கைகளில் பிடித்துக்கொண்டும், अन्ये - மற்றும் சில, महासुराः - பெரிய அஸுரர்கள், देवीम् - தேவியை, तिष्ठ - நில், तिष्ठ - इति - நில் என்று, भाषन्तः சொல்லிக் கொண்டும் (யுத்தம் செய்தனர்)

(பொ - ரை) யுத்தத்தில் சில அஸுரர்கள் வாத்யங்களுடைய லய ப்ரமாணத்தை யனுஸரித்து நர்த்தனம் செய்தனர். அறுக்கப்பட்ட தலைகளோடு கூடிய கபந்தங்கள்; வாள், வேல், ரிஷ்டி, இவைகளைப் பிடித்துக்கொண்டும், மற்றும் சில மஹாஸுரர்கள், தேவியைப்பார்த்து நில்! நில்! என்று சொல்லிக்கொண்டும் யுத்தம் செய்தனர். (63)

*ऋष्टिः—இது இருபுறமும் கூரிய முனையுடன் கூடிய ஒரு ஆயுத விசேஷம்.

पातितै रथनागाश्वैरसुरैश्च वसुंधरा ।
अगम्या साभवत्तत्र यत्राभूत्स महारणः ॥ ६५ ॥

(ப - ரை) **यत्र** - எவ்விடத்தில், **सः** - அந்த, **महारणः** - மஹாயுத்தம், **अभूत्** - உண்டாகியதோ, **तत्र** அவ்விடத்தில், **सा** - அந்த, **वसुंधरा** - பூமியும், **पातितैः**- வீழ்த்தப்பட்ட, **रथनागाश्वैः** - ரதம், யானை, குதிரை இவைகளினுலும், **असुरै - च**- அஸுரர்களினுலும், **अगम्या** - நடப்பதற்கு முடியாதபடி, **अभवत्** - ஆகியது.

(பொ - ரை) எவ்விடத்தில் அந்த மஹாயுத்தமானது உண்டாகியதோ, அவ்விடத்தில் வீழ்த்தப்பட்ட ரதங்களையும், யானைகளையும்; குதிரைகளையுமுடைய காரணத்தால் நடப்பதற்கும் முடியாததாக அப்பூமியிருந்தது. (64)

शोणितौघा महानद्यः सद्यस्तत्र विसुस्रुवुः ।
मध्ये चासुरसैन्यस्य वारणासुरवाजिनाम् ॥ ६६ ॥

(ப - ரை) **तत्र** - அவ்விடத்தில், **असुरसैन्यस्य** - அஸுர ஸைன்யத்தினுடைய, **मध्ये** - நடுவில், **सद्यः** - உடனே, **वारणासुरवाजिनाम्** - யானைகளுடையவும், அஸுரர்களுடையவும், குதிரைகளுடையவும், **शोणितौघाः** - ரத்தங்களுடைய பிரவாஹங்கள், **महानद्यः** - மஹாநதிகளாக, **विसुस्रवुः - च** - பெருகியும் ஓடின.

(பொ - ரை) அப்பொழுது அந்த யுத்தகளத்தில் ஸேனைகளுடைய நடுவில் யானைகளுடையவும், அஸுரர்களுடையவும், குதிரைகளுடையவும், ரத்தபிரவாஹங்கள் மஹாநதிகளெனப் பெருகி ஓடின. (65)

क्षणेन तन्महासैन्यमसुराणां तथाम्बिका ।
निन्ये क्षयं यथा वह्निस्तृणदारुमहाचयम् ॥ ६७ ॥

(ப - ரை) वह्निः - அக்நி, तृणदारुमहाचयम् - புல், மரம், முதலிய நிறைந்த கூட்டத்தை, यथा - எவ்விதம் செய்யுமோ, तथा - அவ்விதமே, अम्बिका - ஸ்ரீதேவி, क्षणेन - நொடிப் பொழுதில், असुराणाम् - அஸுரர்களுடைய, तत् - அந்த, महासैन्यम् - பெரிய ஸேனையை,'] क्षयम् - நாசத்தை, निन्ये - அடையச் செய்தாள்.

(பொ - ரை) எவ்விதம் அக்நியானது வைக்கோல் கூட்டத்தை க்ஷண காலத்தில் சாம்பலாக்குமோ, அவ்விதம் ஸ்ரீதேவியும் அஸுரர்களுடைய அந்த மஹாஸைன்யத்தை ஒரு நொடிப்பொழுதில் நாசமடையச் செய்தாள். (66)

स च सिंहो महानादमुत्सृजन्धुतकेसरः ।
शरीरेभ्योऽमरारीणामसूनिव विचिन्वति ॥ ६८ ॥

(ப - ரை) सः - च - அந்த, सिंहः - ஸிம்ஹமும், धुतकेसरः - உதறப்பட்ட கேஸரத்தையுடையதாக, महानादम् - பெரிய கர்ஜனையை, उत्सृजन् - உண்டாக்கிக்கொண்டு, अमरारीणाम् - அஸுரர்களுடைய, शरीरेभ्यः - சரீரங்களிலிருந்து, असून् - பிராணன்களை, विचिन्वति-इव - தேடுவதுபோல, (சுற்றி வந்தது)

(பொ - ரை) தேவியினுடைய அந்த ஸிம்ஹமும் பிடரி மயிர்களை உதறிக்கொண்டு, பெரிய கர்ஜனையைச் செய்து அஸுரர்களுடைய சரீரங்களிலிருந்து பிராணன்களைத் தேடுவது போலத் தொன்றியது. (67)

देव्या गणैश्च तैस्तत्र कृतं युद्धं तथासुरैः ।
यथैषां तुष्टुवुर्देवाः पुष्पवृष्टिमुचो दिवि ॥ ६९ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
महिषासुरसैन्यवधो नाम द्वितीयोऽध्यायः

(ப - ரை) देवाः - தேவர்கள், दिवि - ஸ்வர்கத்தில், पुष्पवृष्टिमुचः - புஷ்பவர்ஷங்களைச் செய்து கொண்டு, एषाम् - இந்த தேவியை, यथा-एव - எவ்விதம், तुष्टुवुः - ஸ்துதிசெய்தனரோ, देव्याः - தேவியினுடைய, गणैः च - கணங்களாலும், तत्र - அந்த யுத்தகனத்தில், तैः - அந்த, असुरैः - அஸுரர்களோடுகூட, तथा - அவ்விதம், युद्धम् - யுத்தம், कृतम् - செய்யப்பட்டது.

(பொ - ரை) தேவலோகத்திலே தேவர்கள் புஷ்பவர்ஷங்களைப் பொழிந்து கொண்டு, தேவியை ஸ்துதிக்கும் வண்ணம், தேவியினுடைய கணங்களும் அந்த அஸுரர்களோடுகூட யுத்தம் செய்தன. (68)

இவ்விதம் மார்க்கண்டேயபுராணத்தில் ஸாவர்ணிக
மந்வந்தரத்தில், தேவீமாஹாத்ம்யத்தில்
மஹிஷாஸுர ஸைன்ய வதமென்ற
இரண்டாவது அத்தியாயம்
இவண் முற்றும்

तृतीयोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

निहन्यमानं तत्सैन्यमवलोक्य महासुरः ।
सेनानीश्चिक्षुरः कोपाद्ययौ योद्धुमथाम्बिकाम् ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்

(ப - ரை) अथ - பிறகு सेनानीः - ஸேனாதிபதியாகிய, चिक्षुरः - சிக்ஷுரன் என்ற பெயருள்ள, महासुरः- மஹாஸுரன், तत् - அந்த, सैन्यं - ஸைன்யம், निहन्यमानं - கொல்லப்படுவதை, अवलोक्य - பார்த்து, कोपात् - கோபத்தினால், अम्बिकाम्- அம்பிகையை, योद्धुम् - யுத்தம் செய்வதற்கு, ययौ - புறப்பட்டான்.

மஹர்ஷி சொன்னார் (1)

(பொ - ரை) பிறகு ஸேனாநாயகனாகிய சிக்ஷுரன் என்ற பெயருள்ள பெரிய அஸுரன், மஹிஷாஸுரனுடைய அந்த ஸைன்யம் தேவியால் அழிக்கப்படுவதைக் கண்டு கோபத்தோடுகூட தேவியுடன் யுத்தம் செய்யப்புறப்பட்டான். (2)

स देवीं शरवर्षेण ववर्ष समरेऽसुरः ।
यथा मेरुगिरेः श्रृङ्गं तोयवर्षेण तोयदः ॥ ३ ॥

(ப - ரை) सः - அந்த, असुरः - அஸுரன், समरे - யுத்தத்தில், शरवर्षेण - பாணவர்ஷத்தினால், देवीम् - தேவியை,

तोयदः - மேகம், तोयवर्षेण - ஜலவர்ஷத்தினல், मेरुगिरेः - மேரு பர்வதத்தினுடைய, शृङ्गं-यथा - கொடுமுடியைப்(சிகரத்தை) போல, ववर्ष - வர்ஷித்தான்.

(பொ - ரை) அந்த சிக்ஷுரன் என்ற அஸுரனும் யுத்தத்தில், மேரு பர்வதத்தினுடைய சிகரத்தின் (உச்சியில்) மேல் மேகமானது ஜலத்தைப் பொழிவதுபோல, அம்பிகையின் மீது பாணவர்ஷத்தைப் (சரிமாரி) பொழிந்தான். (3)

तस्य च्छित्त्वा ततो देवी लीलयैव शरोत्करान् ।
जघान तुरगान् बाणैर्यन्तारं चैव वाजिनाम् ॥ ४ ॥

(ப - ரை) ततः - பிறகு, देवी-தேவியானவள், लीलया - एव - விளையாட்டாகவே, बाणैः-பாணங்களால், तस्य-அவனுடைய, शरोत्करान् - சரஸமூஹங்களை, छित्वा - முறித்து, तुरगान् - குதிரைகளையும், वाजिनाम्-குதிரைகளுடைய, यन्ताम्-एव-च-நடத்துகிறவனையும், जघान - கொன்ருள்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் விளையாட்டாகவே தனது பாணங்களால் அவனுடைய விற்கூட்டங்களை முறியடித்து, குதிரைகளையும், குதிரைக்காஸாரிகளையும் கொன்ருள். (4)

यन्ता - யந்தா :—ஸாரதி-ரதத்தை ஓட்டுகிறவன்.

'च' சகாரத்தால் ரதத்தையும் நாசம் செய்தாள் என்பதையும் கொள்ளவேணும்.

चिच्छेद च धनुः सद्यो ध्वजं चातिसमुच्छ्रितम् ।
विव्याध चैव गात्रेषु छिन्नधन्वानमाशुगैः ॥ ५ ॥

(ப - ரை) सद्यः - உடனே, आशुगैः - பாணங்களால், धनुः - வில்லேயும், अतिसमुच्छ्रितम् - மிகவும் உயர்ந்த, ध्वजं-च - கொடியையும், चिच्छेद - அறுத்தாள், छिन्नधन्वानं-च - அறுக்கப் பட்ட தநுஸோடு கூடிய (அவனுடைய), गात्रेषु-एव - சரீரங் களிலும், विव्याध - च - அடிக்கவும் செய்தாள்.

(பொ - ரை) அப்பொழுதே தேவியானவள் தனது பாணங்களால் அவனுடைய வில்லேயும், மிகவும் உயர்ந்த கொடியையும் அறுத்துத்தள்ளினுள். அவ்விதம் அறுக் கப்பட்ட வில்லோடு கூடிய (அவனுடைய) சரீராவயவங் களேயும் பாணங்களால் பிளந்தாள். (5)

स च्छिन्नधन्वा विरथो हताश्वो हतसारथिः ।
अभ्यधावत तां देवीं खड्गचर्मधरोऽसुरः ॥ ६ ॥

(ப - ரை) छिन्नधन्वा - அறுக்கப்பட்ட வில்லேயுடைய வனும், विरथः - நஷ்டமடைந்த ரதத்தையுடையவனும், हताश्वः - கொல்லப்பட்ட குதிரையையுடையவனும், हतसारथिः- கொல்லப்பட்ட ஸாரதியை யுடையவனுமான, सः - அந்த असुरः - அஸுரன், खड्गचर्मधरः - கத்தியையும், கேடகத்தை யும் தரித்துக்கொண்டு, ताम् - அந்த, देवीम् - தேவியை, अभ्यधावत - எதிர்த்து ஓடி வந்தான்.

(பொ - ரை) வில்லே யிழந்தவனும், ரதத்தை யிழந்த வனும், குதிரைகள் கொல்லப்பட்டு, ஸாரதியையிழந்த வனுமான அந்த சிக்ஷுரன் என்ற அஸுரன் கத்தியை யும், கேடகத்தையும் தரித்துக்கொண்டு அந்த தேவியை நோக்கி எதிர்த்து ஓடி வந்தான். (6)

सिंहमागत्य खड्गेन तीक्ष्णधारेण मूर्धनि ।
आजघान भुजे सव्ये देवीमप्यतिवेगवान् ॥ ७ ॥

(ப - ரை) अतिवेगवान्-மிகவும் வேகத்தோடு கூடியவனாக, (அவன்) तीक्ष्णधारेण-கூரான முனையையுடைய, खड्गेन - கத்தியினால், सिंहम् - ஸிம்ஹத்தை, मूर्धनि - தலையில், आहत्य - அடித்து, देवी - अपि - தேவியையும், सव्ये - இடது, भुजे - தோளில், आजघान - அடித்தான்.

(பொ - ரை) அந்த சிக்ஷுரன் என்ற மஹாஸுரன் மிகவும் வேகத்தோடு கூட கூரான முனையையுடைய கத்தியினால் ஸிம்ஹத்தின் தலையில் அடித்துவிட்டு, தேவியினுடைய இடது கையிலும் அடித்தான். (7)

तस्याः खड्गो भुजं प्राप्य पफाल नृपनन्दन ।
ततो जग्राह शूलं स कोपादरुणलोचनः ॥ ८ ॥

(ப - ரை) नृपनन्दन - ஓ அரசனே! खड्गः - கத்தியானது, तस्याः - அவளுடைய, भुजम् - தோளை, प्राप्य - அடைந்து, पफाल - துகளாகியது. ततः - பிறகு, कोपात् - கோபத்தினால், अरुणलोचनः - சிவந்த கண்களையுடைய, सः அவன், शूलम् - சூலத்தை, जग्राह - எடுத்தான்.

(பொ - ரை) ஓ அரசனே! அந்த அஸுரனுடைய கத்தியானது தேவியினுடைய தோளை யடைந்ததும், பொடிப்பொடியாக நொறுங்கியது. பிறகு கோபத்தால் கண்கள் சிவக்க அவன் சூலத்தை எடுத்தான். (8)

चिक्षेप च ततस्तत्तु भद्रकाल्यां महासुरः ।
जाज्वल्यमानं तेजोभी रविबिम्बमिवाम्बरात् ॥ ९ ॥

(பதை - ர) ततः - பிறகு, महासुरः - மஹாஸுரனும், अम्बरात् - ஆகாயத்திலிருந்து, तेजोभिः - ஒளிகளினால், रवि-बिम्बम्-इव - ஸூர்ய பிம்பத்தைப் போல, जाज्वल्यमानम् - பிரகாசித்துக் கொண்டிருக்கிற, तत्-तु - அந்த சூலத்தையோ வெனில், भद्रकाल्याम् - பத்ரகாளியின் மீது, चिक्षेप-च - எறியவும் செய்தான்.

(பொ - ரை) பிறகு சிக்ஷுரன் என்ற அந்த மஹாஸுரன் ஆகாயமளாவிய ஒளிகளோடு கூடிய ஸூர்ய பிம்பத்தைப்போல ப்ரகாசித்துக் கொண்டிருக்கிற அந்த சூலாயுதத்தை பத்ரகாளியின் மீது எறிந்தான். (9)

भद्रकाली பத்ரகாளி - மங்களத்தைச் செய்பவள். இவள் காலாக்நிருத்ரனுடைய பட்டமஹிஷியாவள்.

दृष्ट्वा तदापतच्छूलं देवी शूलममुञ्चत ।
तेन तच्छतधा नीतं शूलं स च महासुरः ॥ १० ॥

(ப - ரை) तत् - அந்த, आपतत् - விழுந்துகொண்டிருக்கிற, शूलम् - சூலாயுதத்தை, दृष्ट्वा - பார்த்து, देवी - தேவியானவள், शूलम् - (தனது) சூலத்தை, अमुञ्चत - விட்டாள். तेन - அதனால், तत् - அந்த, शूलम् - சூலாயுதமும், सः - அந்த महासुरः - च - மஹாஸுரனும், शतधा - நூற்றுக்கணக்காக, नीतम् - ஆக்கப்பட்டது.

(பொ - ரை) சிக்ஷுரனால் விடப்பட்ட அந்த சூலாயுதம் தன்மேல் விழுந்ததைப் பார்த்த தேவியும் தனது சூலாயுதத்தை விட்டெறிந்தாள். அதனால் அவனுடைய சூலமும் நூற்றுக்கணக்காகச் சிதறுண்டது. அந்த மஹாஸுரனாகிய சிக்ஷுரனும் நூற்றுக்கணக்காகச் சிதறுண்டான். (10)

हते तस्मिन् महावीर्ये महिषस्य चमूपतौ ।
आजगाम गजारूढश्चामरस्त्रिदशार्दनः ॥ ११ ॥

(ப - ரை) महिषस्य - மஹிஷாஸுரனுடைய, चमूपतौ - ஸேனாதிபதியும், महावीर्ये - மஹாபராக்ரமசாலியுமான, तस्मिन्- அந்த அஸுரன், हते - கொல்லப்பட்டபொழுது, चामरः - சாமரன் என்ற பெயரோடு கூடிய, त्रिदशार्दनः - தேவர்களைத் துன்புறுத்தும், அஸுரனானவன், गजारूढः - யானைமீதேறிக் கொண்டு, आजगाम - வந்தான்.

(பொ - ரை) மஹிஷாஸுரனுடைய ஸேனைத்தலைவனும், மஹாபராக்ரமசாலியுமான அந்த சிக்ஷுரன் கொல்லப்பட்டபொழுது, தேவர்களைத் துன்புறுத்தும் சாமரன் என்ற அஸுரன் யானையின் மீதேறிக்கொண்டு யுத்த களத்திற்கு வந்தான். (11)

सोऽपि शक्तिं मुमोचाथ देव्यास्तामम्बिका द्रुतम् ।
हुंकाराभिगतां भूमौ पातयामास निष्प्रभाम् ॥ १२ ॥

(ப - ரை) अथ - பிறகு, सः - अपि - அந்த சாமரனும், देव्याः - தேவியின்மீது, शक्तिम् - வேலாயுதத்தை, मुमोच-விட்டான். अम्बिका - தேவியும், द्रुतम् - விரைவாக, ताम् - அந்த வேலாயுதத்தை, हुंकाराभिहताम् - ஹுங்காரத்தினால் அடித்து, निष्प्रभाम् - ஒளிமழுங்கியதாக, भूमौ - பூமியில், पातयामास - வீழ்த்தினாள்.

(பொ - ரை) பிறகு அந்த சாமரனும் தேவியின் மீது வேலாயுதத்தை விட்டான். தேவியும் விரைவாக அந்த வேலாயுதத்தைத் தனது ஹுங்காரசப்தத்தினால் அடி-

த்து, ஒளி மழுங்கும்படி செய்து, நிலத்தில் வீழ்த்தினன். (12)

भग्नां शक्तिं निपतितां दृष्ट्वा क्रोधसमन्वितः ।
चिक्षेप चामरः शूलं बाणैस्तदपि साच्छिनत् ॥ १३ ॥

(ப - ரை) चामरः - சாமரன், भग्नाम् - ஒடிந்ததும், पतिताम् - நிலத்தில் விழுந்ததுமான, शक्तिम् - வேலாயுதத்தை, दृष्ट्वा - பார்த்து, क्रोधसमन्वितः - கோபத்தோடுகூடியவனுக, शूलम् - சூலாயுதத்தை, चिक्षेप - எறிந்தான். सा - தேவியும், तत् - अपि - அந்த சூலத்தையும், बाणैः - பாணங்களால், अच्छिनत् - அறுத்தாள்.

(பொ - ரை) சாமரனும் தனது வேலாயுதம் முறிந்து நிலத்தில் விழுந்ததைக் கண்டு, மிகவும் கோபங்கொண்டு சூலாயுதத்தை எடுத்துத் தேவியின் மீது எறிந்தான். தேவியும் அந்த சூலாயுதத்தை, பாணங்களால் துண்டித்தாள். (13)

ततः सिंहः समुत्पत्य गजकुम्भान्तरस्थितः ।
बाहुयुद्धेन युयुधे तेनोच्चैस्त्रिदशारिणा ॥ १४ ॥

(ப - ரை) ततः - பிறகு, सिंहः - ஸிம்ஹமானது, समुत्पत्य - உயரக்கிளம்பி, गजकुम्भान्तरस्थितः - யானையின்மஸ்தகத்தினுடைய நடுவில் நின்றுகொண்டு, (இருக்க) तेन - அந்த, त्रिदशारिणा - சாமரனேடு, उच्चैः - பலமாக, बाहुयुद्धेन - கைச்சண்டையினல், युयुधे - சண்டை செய்தாள்.

(பொ - ரை) பிறகு ஸிம்ஹமானது உயரக்கிளம்பி யானையின் மஸ்தகத்தினுடைய நடுவில் நின்றுகொண்டு

இருக்க, அந்த தேவியும், ஸிம்ஹத்தின் மீதிருந்தவாறு அஸுரனேடுகூட பலமாக முஷ்டியுத்தம் செய்தாள், (14)

त्रिदशारिः த்ரிதசாரி: = தேவர்களுக்குப் பகைவன்.

युध्यमानौ ततस्तौ तु तस्मान्नागान्महीं गतौ ।
युयुधातेऽतिसंरब्धौ प्रहारैरतिदारुणैः ॥ १५ ॥

(ப - ரை) ततः - பிறகு, युध्यमानौ - சண்டைசெய்து கொண்டிருக்கிற, तौ-तु - அவர்களிருவரும், तस्मात् - அந்த, नागात् - யானேயின்மீதிருந்து, महीम् - பூமியை, गतौ - அடைந்தனர். अतिसंरम्भौ - மிகவும் கோபத்தோடுகூடியதும், अतिदारुणैः - மிகவும் கொடியவைகளாயுமுள்ள, प्रहारैः - அடிகளினுல், युयुधाते - யுத்தம் செய்தனர்.

(பொ - ரை) பிறகு சண்டை செய்து கொண்டிருக்கிற அவர்களிருவரும், அந்த யானேயின் மீதிருந்து கீழே யிறங்கி அதிக கோபத்தோடுகூட மிகவும் பயங்கரமானவைகளான அடிகளால் ஒருவரை யொருவர் தாக்கிக் கொண்டனர். (15)

ततो वेगात्खमुत्पत्य निपात्य च मृगारिणा ।
करप्रहारेण शिरश्चामरस्य पृथक्कृतम् ॥ १६ ॥

(ப - ரை) ततः - பிறகு, वेगात् - வேகமாக, खम् - ஆகாயத்தை, उत्पत्य - தாவிக்கொண்டு, निपत्य - च - கீழே குதித்தும், चामरस्य - சாமரனுடைய, शिरः - சிரஸ், मृगारिणा - ஸிம்ஹத்திஞல். करप्रहारेण - கைகளுடைய அடிகளால், पृथक् - தனியாக, कृतम् - செய்யப்பட்டது.

(பொ - ரை) பிறகு வேகத்தோடுகூட ஆகாயத்தில் எழும்பிக் கீழே குதித்த ஸிம்ஹத்தின் கைகளுடைய அடிகளால் சாமரனுடைய தலையானது வெவ்வேறாகக் செய்யப்பட்டது. (16)

उदग्रश्च रणे देव्या शिलावृक्षादिभिर्हतः ।
दन्तमुष्टितलैश्चैव करालश्च निपातितः ॥ १७ ॥

(ப - ரை) रणे - யுத்தத்தில், देव्या - தேவியினால், शिलावृक्षादिभिः - கல் மரம் முதலியவைகளால், उदग्रः-च-உதக்ரனும், हतः - கொல்லப்பட்டான், करालः - च - கராளனும், दन्तमुष्टितलैः - च - பற்களாலும், முஷ்டிகளாலும், निपातितः - கொல்லப்பட்டான்.

(பொ - ரை) தேவியானவள் அந்த யுத்தத்தில் கல், மரம் முதலியவைகளைக் கொண்டு உதக்ரனையும், முஷ்டிகளாலும், கோரைப்பற்களாலும், கராளனையும் கொன்றாள். (17)

दन्तमुष्टितलैः - தந்தமுஷ்டிதலை: - தந்தம் - யானைக்கொம்பு, அதனால் செய்யப்பட்ட ஆயுதங்களைக் கொண்டும், முஷ்டிதலம் - கைகளைக் கொண்டும், என்பதும் பொருளாகும்.

देवी क्रुद्धा गदापातैश्चूर्णयामास चोद्धतम् ।
बाष्कलं भिन्दिपालेन बाणैस्ताम्रं तथान्धकम् ॥ १८ ॥

उग्रास्यमुग्रवीर्यं च तथैव च महाहनुम् ।
त्रिनेत्रं च त्रिशूलेन जघान परमेश्वरी ॥ १९ ॥

(ப - ரை) देवी - தேவியானவள், क्रुधा - கோபத்தோடுகூட, उद्धतं - च - உத்ததனையும், गदापातैः- கதையினுடைய

அடிகளால், चूर्णयामास - பொடியாக்கினாள். त्रिनेत्रा - மூன்று கண்களையுடைய, परमेश्वरी - பரமேச்வரீ; भिन्दिपालेन - பிந்திபாலமென்னும் ஆயுதத்தால், बाष्कलम् - பாஷ்கலனையும், तथा - அவ்விதமே, बाणैः - பாணங்களால், ताम्रम् - தாம்ரனையும், अन्धकम् - அந்தகனையும், तथा - एव - அவ்விதமே, त्रिशूलेन - த்ரிசூலத்தால், उग्रास्यम् - உக்ராஸ்யன் என்பவனையும், उग्रवीर्यं - च - உக்ரவீர்யனையும், महाहनुं - च - மஹாஹநு என்பவனையும், जघान - च - கொன்றாள்.

(பொ - ரை) தேவியானவள் கோபத்தோடு கூட உத்ததனை கதையினால் அடித்துப் பொடியாக்கினாள். மூன்று கண்களையுடைய பரமேச்வரீ பிந்திபாலமென்னும் ஆயுதத்தால் பாஷ்கலனையும், அவ்விதமே பாணங்களால் தாம்ரனையும், அந்தகனையும், அதுபோலவே த்ரிசூலத்தால் உக்ராஸ்யனையும், உக்ரவீர்யனையும், மஹாஹநுவையும் கொன்றாள்.

இவ்விடத்தில் 'च' என்ற சகாரத்தால் உத்ததன் முதலிய அந்தந்த அஸுரர்களுடைய ஸேனைகளையும் கொள்ளவேண்டும்.

उग्रास्यन् - உக்ராஸ்யன் பயங்கரமான முகத்தையுடையவன்.

उग्रवीर्यन् - உக்ரவீர்யன், மிகவும் பயங்கரமான பராக்ரமத்தை யுடையவன்.

महाहनुः மஹாஹநு:-வலியதான தாடையோடு கூடியவன்.

परमेश्वरी-மிகவும் பெருமை வாய்ந்தவளான ஈச்வரியாவள்.

बिडालस्यासिना कायात्पातयामास वै शिरः ।
दुर्धरं दुर्मुखं चोभौ शरैर्निन्ये यमक्षयम् ॥ २० ॥

(ப - ரை) असिना - வாளால், बिडालस्य - பிடாலன் என்பவனுடைய, शिरः - தலையை, कायात् - वै - சரீரத்தி

லிருந்து அறுத்து, पातयामास - (கீழே) தள்ளினான். शरैः - பாணங்களால், दुर्धरं, दुर्मुखम् - துர்தரன், துர்முகன் என்ற, उभौ - च - இருவர்களையும், यमक्षयम् - காலதேவனுடைய வீட்டை, निन्ये - அடையும்படி செய்தான்.

(பொ - ரை) தேவியானவள் வாளால் பிடாலன் என்பவனுடைய தலையை சரீரத்திலிருந்து அறுத்துக் கீழே தள்ளினாள். பாணங்களால் துர்தரன், துர்முகன் என்ற இருவரையும் யமனுடைய இருப்பிடத்திற்கு அனுப்பினாள். (20)

यम - क्षयम् - யம - க்ஷயம் :—யமன் அதாவது காலதேவனுடைய, क्षयं - க்ஷயம் - வீடு.

एवं संक्षीयमाणे तु स्वसैन्ये महिषासुरः।
माहिषेण स्वरूपेण त्रासयामास तान् गणान्॥ २१॥

(ப - ரை) एवम् - இவ்விதம், स्वसैन्ये - தன்னுடைய, ஸைன்யமானது, संक्षीयमाणे - மிகவும் குறைந்து கொண்டு வரும்பொழுது, महिषासुरः - तु - மஹிஷாஸுரனோவெனில், माहिषेण - எருமை ஸம்பந்தமான, स्वरूपेण - வேஷத்தோடு கூட, तान् - அந்த, गणान् - கணங்களை, त्रासयामास - நடுங்கச் செய்தான்.

(பொ - ரை) இவ்விதம் தன்னுடைய ஸைன்யமானது (படை) மிகவும் குறைந்து வருவதைக் கண்ட மஹிஷாஸுரனும் எருமை வடிவம் கொண்டு தேவியினுடைய கணங்களை நடுங்கச்செய்தான். (21)

गणाः - கணா:—கணங்கள். இக்கணங்கள் யாவும் ஸ்ரீதேவியினுடைய மூச்சுக்காற்றிலிருந்து உண்டானவையாம்.

कांश्चित्तुण्डप्रहारेण खुरक्षेपैस्तथापरान्
लाङ्गूलताडितांश्चान्यान् शृङ्गाभ्यां च विदारितान्॥ २२॥

वेगेन कांश्चिदपरान् नादेन भ्रमणेन च।
निःश्वासपवनेनान्यान् पातयामास भूतले ॥ २३ ॥

(ப - ரை) कांश्चित् - சிலரை, तुण्डप्रहारेण - முகத்தினுடைய அடிகளினுலும், तथा - அவ்விதமே, अपरान् - மற்றவர்களை, खुरक्षेपैः - குளம்புகளினுல் மிதித்தும், अन्यान् - வேறு சிலரை, लाङ्गूलताडितान् - வாளால் அடித்தும், शृङ्गाभ्यां - च - கொம்புகளினுல், विदारितान् - பிளந்தும், कांश्चित् - மற்றும் சிலரை, वेगेन - வேகத்தாலும், अपरान् - மற்றவர்களை, नादेन - நாதத்தாலும், भ्रमणेन - च - சுற்றுதலினுலும், अन्यान् - மற்றவர்களை, निःश्वासपवनेन - மூச்சுக்காற்றினுலும், भूतले - பூமியில், पातयामास - தள்ளினுன்.

(பொ.- ரை) அந்த மஹிஷாஸுரனும் தேவியினுடைய கணங்களில், சிலரை தலையால் முட்டியும், மற்றவர்களைக் குளம்பினுல் மிதித்தும், வேறு சிலரை வாலால் அடித்தும், மற்றுஞ் சிலரை கொம்புகளினுல் கிழித்தும், இன்னும் சிலரை தனது நடையின் தாரதம்யத்தினுலும், வேறு சிலரை சப்தத்தினுல் பயமுறுத்தியும், வட்டமாகச் சுற்றிவருவதாலும், மற்றவர்களை பயங்கரமான மூச்சுக்காற்றினுலும் பூமியில் தள்ளினுன். (22, 23)

वेगः - வேகம். கதி (நடை) யினுடைய தாரதம்யம்.

भ्रमणम् - ப்ரமணம். யுத்தகளத்தில் மண்டல (வட்டம்) வடிவமாகச் செய்கின்ற கதிவிசேஷம்.

निपात्य प्रमथानीकमभ्यधावत सोऽसुरः ।
सिंहं हन्तुं महादेव्याः कोपं चक्रे ततोऽम्बिका ॥ २४ ॥

(ப - ரை) सः - அந்த, असुरः - அஸுரனும், प्रमथानीकम् - கணங்களுடைய ஸைன்யத்தை, निपात्य - வீழ்த்தி, महादेव्याः - மஹாதேவியினுடைய, सिंहम् - ஸிம்ஹத்தை, हन्तुम् - கொல்லுவதற்கு, अभ्यधावत - அருகில் ஓடிவந்தான். ततः - பிறகு, अम्बिका - தேவி, कोपम् - கோபத்தை, चक्रे - செய்தாள்.

(பொ - ரை) அந்த மஹிஷாஸுரன் தேவியின் கணங்களுடைய ஸைன்யத்தைக் கீழே தள்ளிவிட்டு, மஹா தேவியின் வாஹநமான ஸிம்ஹத்தைக் கொல்லுவதற்கு அருகில் ஓடிவந்தான். அவனைக் கண்ட அம்பிகையும் கடுஞ்சினங் கொண்டாள். (24)

सोऽपि कोपान्महावीर्यः खुरक्षुण्णमहीतलः ।
शृङ्गाभ्यां पर्वतानुच्चांश्चिक्षेप च ननाद च ॥ २५ ॥

(ப - ரை) महावीर्यः मिகவும் பலசாலியான, सः - अपि - அவனும், खुरक्षुण्णमहीतलः - குளம்புகளினால்பொடி செய்யப்பட்ட பூமியையுடையவனாக, कोपात् - கோபங்கொண்டு, उच्चान् - உயரமானவைகளான, पर्वतान् - மலைகளை, शृङ्गाभ्याम् - கொம்புகளினால், चिक्षेप - च - எறிந்தும், ननाद - च - ஓலமிட்டுக் கொண்டுமிருந்தான்.

(பொ - ரை) மிகவும் பலசாலியான அந்த மஹிஷனும், பூமியைத் தனது குளம்புகளினால் பொடி செய்து கொண்டும், தனது கொம்புகளினால் உயரமானவைகளான

மலைகளைத் தூக்கி எறிந்து கொண்டும், மிகவும் பயங்கரமாக ஓலமிட்டுக் கொண்டுமிருந்தான். (25)

वेगभ्रमणविक्षुण्णा मही तस्य व्यशीर्यत ।
लाङ्गूलेनाहतश्चाब्धिः प्लावयामास सर्वतः ॥ २६ ॥

(ப - ரை) तस्य - அவனுடைய, वेगभ्रमणविक्षुण्णा - வேகத்தோடு சுற்றுவதால் நன்கு சூர்ணமான, मही - பூமியானது, व्यशीर्यत - நடுங்கியது. लाङ्गूलेन - வாலினல், आहतः - அடிக்கப்பட்ட अब्धिः - ஸமுத்ரமானது, सर्वतः - எங்கும், प्लावयामास - च - பொங்கியது.

(பொ - ரை) அந்த மஹிஷாஸுரன் வேகமாகச் சுற்றுவதால் பூமி நடுநடுங்கிப் பொடிப் பொடியாகியது. வாலினல் அடிக்கப்பட்ட ஸமுத்ரமானது நான்கு பக்கங்களிலும் பொங்கியெழுந்தது. (26)

धुतशृङ्गविभिन्नाश्च खण्डं खण्डं ययुर्घनाः ।
श्वासानिलास्ताः शतशो निपेतुर्नभसोऽचलाः ॥ २७ ॥

(ப - ரை) घनाः - மேகங்கள், धुतशृङ्गविभिन्नाः - அசைக்கப்பட்ட கொம்புகளால் நொறுக்கப்பட்டதாயும், खण्डं - खण्डं - च - துண்டு துண்டாகவும், ययुः - च - ஆகியன. श्वासानिलास्ताः - மூச்சுக்காற்றினல் தூக்கியெறியப்பட்ட, अचलाः - மலைகள், नभसः - ஆகாயத்திலிருந்து, शतशः - நூற்றுக்கணக்காக, निपेतुः - விழுந்தன.

(பொ - ரை) அவன் கொம்புகளை இங்குமங்கும் அசைப்பதால் மேகங்கள் துண்டுதுண்டுகளாகச் சிதறின. மூச்சுக்காற்றினல் தூக்கி யெறியப்பட்ட மலைகள் ஆகாயத்திலிருந்து நூற்றுக்கணக்காக கீழே விழுந்தன. (27)

इति क्रोधसमाध्मातमापतन्तं महासुरम् ।
दृष्ट्वा सा चण्डिका कोपं तद्वधाय तदाकरोत् ॥ २८ ॥

(ப - ரை) इति - இவ்விதம், क्रोधसमाध्मातम् - கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டு, आपतन्तम् - எதிரில் ஓடிவருகிற, महासुरम् - மஹிஷாஸுரனே, दृष्ट्वा - பார்த்து, तदा - அப்பொழுது, तत् - वधाय - அவனுடைய நாசத்தின் பொருட்டு, सा - அந்த, चण्डिका - சண்டிகா தேவீ, कोपम् - கோபத்தை, अकरोत् - செய்தான்.

(பொ - ரை) இவ்விதம் கோபத்தால் ஜ்வலித்துக்கொண்டு எதிரில் ஓடிவருகிற மஹிஷாஸுரனேப்பார்த்து, அவனேக் கொல்லுவதற்காக அந்த சண்டிகாதேவியும் கோபமடைந்தாள். (28)

सा क्षिप्त्वा तस्य वै पाशं तं बबन्ध महासुरम् ।
तत्याज माहिषं रूपं सोऽपि बद्धो महामृधे ॥ २९ ॥

(ப - ரை) महामृधे - மஹாயுத்தத்தில், सा - அந்த, சண்டிகாதேவீ, तस्य - அவனுடைய, वै - பிரஸித்தமான, पाशम् - பாசாயுதத்தை, क्षिप्त्वा - எறிந்து, तम् - அந்த, महासुरम् - பெரிய அஸுரனே, बबन्ध-கட்டினுள். सः - அவன், बद्धः - अपि - கட்டப்பட்டவனுக இருந்தாலும், माहिषम्-மஹிஷ ஸம்பந்தமான, रूपम् - உருவத்தை, तत्याज - விட்டான்.

(பொ - ரை) அந்த மஹாயுத்தத்தில் சண்டிகாதேவியானவள் மஹிஷாஸுரன் மேல் அவனுடைய பிரஸித்தமான பாசாயுதத்தைப் பிடுங்கி, அதனுல் அவனேக் கட்டினுள். அவன் கட்டுண்டவனுயினும் மஹிஷ வடிவை விட்டான். (29)

तस्य - தஸ்ய. அவனைக் கட்டுவதற்கு எனவும் கொள்ள வேண்டும்.

ततः सिंहोऽभवत्सद्यो यावत्तस्याम्बिका शिरः ।
छिनत्ति तावत्पुरुषः खड्गपाणिरदृश्यत ॥ ३० ॥

(ப - ரை) ततः - பிறகு, सद्यः - உடனே, सिंहः - ஸிம்மாக, अभवत् - ஆனான், अम्बिका - தேவியும், तस्य - அவனுடைய, शिरः - தலையை, यावत् - எவ்வளவுக்குள், छिनत्ति - அறுத்தாளோ, तावत् - அவ்வளவுக்குள், खड्गपाणिः - கத்தியைக் கையில் கொண்ட, पुरुषः - புருஷனாக, अदृश्यत - காணப்பட்டான்.

(பொ - ரை) பிறகு அவன் உடனே ஸிம்ஹமாக மாறினான். தேவியும் அவனுடைய தலையை எவ்வளவு சிக்கிரமாக (விரைவில்) அறுத்தாளோ, அவ்வளவு விரைவாகக் கத்தியைக் கையிலேந்திய புருஷனாகத் தோன்றினான். (30)

तत एवाशु पुरुषं देवी चिच्छेद सायकैः ।
तं खड्गचर्मणा सार्धं ततः सोऽभून्महागजः ॥ ३१ ॥

(ப - ரை) ततः - பிறகு, देवी - தேவியானவள், आशु - एव - விரைவாகவே, सायकैः - பாணங்களினால், खड्गचर्मणा - सार्धम् - கத்தியோடும், கேடயத்தோடும் கூடிய, तम् - அந்த, पुरुषम् - புருஷனை, चिच्छेद - அறுத்தாள். ततः - பிறகு, सः - அவன், महागजः - பெரிய யானையாக, अभूत् - ஆனான்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் விரைவாகவே தனது பாணங்களினுல், கத்தியோடும், கேடயத்தோடும் கூடிய அந்த புருஷனை அறுத்தாள். பிறகு அவன் ஒரு பெரிய யானையாக மாறினுன். (31)

करेण च महासिंहं तं चकर्ष जगर्ज च ।
कर्षतस्तु करं देवी खड्गेन निरकृन्तत ॥ ३२ ॥

(ப - ரை) करेण - துதிக்கையினுல், तम् - அந்த, महासिंहम् - பிரஸித்தமான ஸிம்ஹத்தை, चकर्ष - च - இழுத்தான். जगर्ज - च - கர்ஜிக்கவும் செய்தான். देवी - तु - தேவியோ, कर्षतः - இழுத்துக்கொண்டிருக்கிற (யானையினுடைய) करम् - கையை, खड्गेन - கத்தியினுல், निरकृन्तत - அறுத்தாள்.

(பொ - ரை) அந்த மஹாகஜமும் பிரஸித்தமான அந்த ஸிம்ஹத்தை துதிக்கையினுல் இழுத்துக்கொண்டு கர்ஜனைசெய்தது. தேவியோவெனில் இழுத்துக்கொண்டிருக்கிற அந்த துதிக்கையை கத்தியினுல் வெட்டினுள்.

ततो महासुरो भूयो माहिषं वपुरास्थितः ।
तथैव क्षोभयामास त्रैलोक्यं सचराचरम् ॥ ३३ ॥

(ப - ரை) ततः - பிறகு, भूयः - மீண்டும், महासुरः - மஹாஸுரன், माहिषम् - எருமை ஸம்பந்தமான, वपुः - சரீரத்தை, आस्थितः - அடைந்தான். तथा - एव - அவ்விதமே, सचराचरम् - ஜங்கமாஜங்கமங்களோடு கூடிய, त्रैलोक्यम् - மூவுலகையும், क्षोभयामास - கலக்கினுன்.

(பொ - ரை) பிறகு அந்த மஹாஸுரன் மறுபடியும் எருமையினுடைய சரீரத்தை அடைந்து, முன்போலவே சராசரங்களோடு கூடிய மூவுலகையும் கலக்கினுன். (33)

ततः क्रुद्धा जगन्माता चण्डिका पानमुत्तमम् ।
पपौ पुनः पुनश्चैव जहासारुणलोचना ॥ ३४ ॥

(ப - ரை) ततः - பிறகு, जगन्माता - லோகமாதாவான, चण्डिका - சண்டிகாதேவி, क्रुधा - கோபத்தினல், अरुणलोचना - சிவந்த கண்களோடு கூடியவளாக, उत्तमम् - சிறந்ததான, पानम् - மதுவை, पपौ - குடித்தாள், पुनः - पुनः - च - மறுபடியும், மறுபடியும், जहास - एव - சிரிக்கவும் செய்தாள்.

(பொ - ரை) பிறகு லோகமாதாவான சண்டிகா தேவியும் கோபத்தினல் கண்கள் சிவக்க, உயர்ந்த மது வைக்குடித்து விட்டு அடிக்கடி சிரிக்கலானள். (34)

ஸமஸ்த தேவகணங்களுடைய அம்சாவதாரமான லோக மாதாவாகிய சண்டிகாதேவீ துரீயையாயிருப்பவளாயினும் அவள் மஹிஷாஸுரனுடைய ஸேனதிபதியாகிய சிக்ஷுரன் முதலியவர்களையும், அவர்களுடைய ஸைன்யங்களையும் நாசம் செய்தாள். இப்பொழுது மஹிஷாஸுரனை வதம் செய்வதற்கு ரஜோகுணத்தை யவலம்பித்த காரணத்தால் மஹாலக்ஷ்மியின் தன்மையை யடைந்தாள் என்பதை ஸூசனை செய்வதற்காக மது பானத்தைச் சொல்லப்படுகிறது. அக்காரணத்தால் கண்களும் சிவந்திருக்கிறது என்பது கருத்து.

மஹிஷாஸுரன் சிவனுடைய அம்சமாதலால் ஸ்ரீதேவிக்கு அவனைக் கொல்லுவதில் தயையுண்டாகாதிருப்பதற்காக மத்ய பானம் செய்தாள். அக்காரணத்தால் கண்கள் சிவந்து அடிக்கடி சிரிக்கலானள் என்று நாகேசபட்டர் கூறுவர்.

ननर्द चासुरः सोऽपि बलवीर्यमदोद्धतः ।
विषाणाभ्यां च चिक्षेप चण्डिकां प्रति भूधरान् ॥ ३५ ॥

(ப - ரை) बलवीर्यमदोद्धतः - பலத்திஞலும், பராக்ரமத்தி ஞலும் கர்வத்தையடைந்திருக்கிற,सः - அந்த, असुरः - अपि - அஸுரனும், ननर्द - च - அட்டஹாஸம் செய்தான். चण्डिकां - प्रति - சண்டிகையைக் குறித்து. भूधरान् - மலைகளை, विषाणाभ्याम्- கொம்புகளிஞல், चिक्षेप - च - தூக்கியும் எறிந்தான்.

(பொ - ரை) பலத்திஞலும், பராக்ரமத்திஞலும் (எழுச்சியாலும்) மத்திஞலும் கொழுப்படைந்த அந்த அஸுரனும் அட்டஹாஸம் செய்தான். சண்டிகையின் மீது அவன் தனது கொம்புகளிஞல் மலைகளையும் தூக்கியெறிந்தான். (35)

सा च तान् प्रहितांस्तेन चूर्णयन्ती शरोत्करैः ।
उवाच तं मदोद्धूतमुखरागाकुलाक्षरम् ॥ ३६ ॥

(ப - ரை) सा - च - தேவியும், तेन - அவஞல், प्रहितान् - எறியப்பட்ட, तान् - அப்பர்வதங்களை, शरोत्करैः - பாண ஸமூஹங்களால், चूर्णयन्ती - பொடியாக்கிக் கொண்டு, मदोद्धूत-मुखरागाकुलाक्षरम् - மதத்தால் எழுச்சியடைந்த முகத்திஞுடைய சோபையோடுகூட விளக்கமாகாத வார்த்தையையுடையதாக, तम् - அவனைப்பார்த்து, उवाच - சொன்னுள்.

(பொ - ரை) தேவியும் அவஞல் எறியப்பட்ட அப்பர்வதங்களை யெல்லாம் தன்னுடைய பாணஸமூஹங்களின் உதவியால் பொடியாக்கிக் கொண்டு, மதத்திஞல் எழுச்சியடைந்த முகத்திஞுடைய சோபையோடு கூட விளக்கமாகாத வார்த்தையை யுடையதாயிருக்கும்படி அவனைப் பார்த்துச் சொன்னுள். (36)

मदोद्धूतमुखरागः-மதோத்தூத முகராக:—என்றதால் மதுவை யருந்திய காரணத்தால் வியக்கத்தக்க முகசோபை யுண்டாகியத்

என்பதுமாம். லக்ஷ்மிக்கும் (ஐச்வர்யத்திற்கும்) ஸுராைக்கும் (மது) மதத்தையுண்டுபண்ணக் கூடிய ஸ்வபாவம் துல்யமே யாகும்.

देव्युवाच ॥ ३७ ॥

गर्ज गर्ज क्षणं मूढ मधु यावत्पिबाम्यहम् ।
मया त्वयि हतेऽत्रैव गर्जिष्यन्त्याशु देवताः ॥ ३८ ॥

देवी - தேவி, उवाच - சொன்னுள்—

(ப - ரை) मूढ - ஓ மூடனே, यावत् - எவ்வளவுக்குள், अहम् - நான், मधु - மத்யத்தை, पिवामि - குடிக்கிறேனே, क्षणम् - (அதுவரை) சிறிதுநேரம், गर्ज - गर्ज - உறுமிக்கொண்டிரு. मया - என்னுல், त्वयि - நீ, हते (सति) - கொல்லப்படும் பொழுது, अत्र-एव - இவ்விடத்திலேயே, आशु - விரைவில், देवताः - தேவதைகள், गर्जिष्यन्ति - கர்ஜிக்கப்போகின்றனர். தேவி சொன்னுள். (37)

(பொ - ரை) ஓ மூடனே! நான் மதுபானம் செய்து கொண்டிருக்கும் வரையில் (க்ஷணகாலம்) சிறிது நேரம் நீ உறுமிக்கொண்டிரு. நீ என்னுல் விரைவில் கொல்லப் படும் பொழுது இவ்விடத்திலேயே தேவர்கள் கர்ஜிக்கப் போகின்றனர். (38)

मधु - यावत् - पिवामि - மது யாவத் பிபாமி—என்றது துரீயை யான சண்டிகையாயிருக்கின்ற நான் மஹாலக்ஷ்மியாக வருமள வும் என்பது கருத்து.

गर्ज - गर्ज - கர்ஜ - கர்ஜ :—என்ற புநருக்தி (சொன்னதைத் திருப்பிச் சொல்லுவது), பரபரப்பின் காரணமாகவும், மதத்தின் காரணமாகவும் உண்டாகியதாகும்.

ऋषिरुवाच ॥ ३९ ॥

एवमुक्त्वा समुत्पत्य सारूढा तं महासुरम् ।
पादेनाक्रम्य कण्ठे च शूलेनैनमताडयत् ॥ ४० ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்ஞர்.

(ப - ரை) सा - அந்த தேவி, एवम् - இவ்விதம், उक्त्वा - சொல்லி, समुत्पत्य - துள்ளிக்குதித்து, तम् - அந்த, महासुरम् - பெரிய அஸுரனை, आरूढा - ஏறிக்கொண்டு, एनम् - இவனை, पादेन - காலினல், आक्रम्य - மிதித்துக்கொண்டு, कण्ठे - கழுத்தில், शूलेन-च - சூலத்தால், अताडयत्-च-அடிக்கவும் செய்தாள்.

மஹர்ஷிசொன்ஞர். (39)

(பொ - ரை) அந்த தேவியானவள் இவ்விதம் சொல்லி விட்டு, அந்த மஹாஸுரன்மீது ஏறிக்கொண்டு அவனைக் காலால் மிதித்து, கழுத்தில் தனது சூலாயுதத் திஞல் குத்திஞள். (40)

ततः सोऽपि पदाक्रान्तस्तया निजमुखात्ततः ।
अर्धनिष्क्रान्त एवाति देव्या वीर्येण संवृतः ॥ ४१ ॥

(ப - ரை) ततः - பிறகு, सः - அவன், तया - அந்த தேவியால், पदाक्रान्तः - अपि - காலால் மிதிக்கப்பட்டவஞ யிருந்தாலும், ततः - அந்த, निजमुखात् - தன்னுடைய முகத் திலிருந்து, अर्धनिष्क्रान्त - एव - பாதி வெளிவந்தவஞகவே, देव्याः - தேவியினுடைய, वीर्येण - பராக்ரமத்தால், अतिसंवृतः - நன்ருக மறைக்கப்பட்டான்.

(பொ - ரை) பிறகு தேவியினல் காலால் மிதிக்கப் பட்ட அந்த மஹிஷாஸுரனும், தனது மஹிஷ வடிவத் தின் முகத்திலிருந்து நிஜ வடிவத்துடன் பாதி வெளியே வந்ததும், தேவியினுடைய அதிசய பராக்ரமத்தினல் முழு வதும் வெளியே வரமுடியாதபடி தடுக்கப்பட்டான். (41)

अर्धनिष्क्रान्त एवासौ युध्यमानो महासुरः ।
तया महासिना देव्या शिरश्छित्वा निपातितः ॥ ४२ ॥

(ப - ரை) असौ - இந்த, महासुरः - பெரிய அஸுரன், अर्धनिष्क्रान्त - एव - பாதி வெளியே வந்தவனுகவே, युध्यमानः - யுத்தம் செய்தவனைக் கொண்டு, तया - அந்த தேவியினல், महासिना - பெரிய கத்தியினல், शिरः - சிரஸை, छित्वा - அறு த்து, निपातितः - தள்ளப்பட்டான்.

(பொ - ரை) இந்த மஹாஸுரனும் பாதி சரீரத் துடன் வெளியே வந்தவண்ணம் யுத்தம் செய்யவே இவ னுடைய சிரஸை அந்த தேவியானவள் தனது பெரிய கத்தியினல் அறுத்துக் கீழே தள்ளினுள். (42)

तया - देव्या - தயா-தேவ்யா—என்றது மதுபானம் செய்த காரணத்தினல் ரஜோகுணத்தை முக்யமாகக் கொண்டு உண்டா கிய லக்ஷ்மீ தேவியினல் என்பதற்காக.

ततो हाहाकृतं सर्वं दैत्यसैन्यं ननाश तत् ।
प्रहर्षं च परं जग्मुः सकला देवतागणाः ॥ ४३ ॥

(ப - ரை) ततः - பிறகு, तत् - அந்த, सर्वम् - ஸமஸ்த மான, दैत्यसैन्यम् - அஸுர ஸைன்யமும், हाहाकृतम् - ஹா ! ஹா !! என்று ஓலமிட்டுக்கொண்டு, ननाश - மடிந்தது. सकलाः - ஸமஸ்தமான, देवतागणाः - தேவகணங்கள், परम् -

மிகவும், प्रहर्षम् - ஸந்தோஷத்தை, जग्मुः - च - அடையவும் செய்தன.

(பொ - ரை) பிறகு அந்த அஸுர ஸைன்யங்கள் யாவும் ஹா! ஹா!! என ஓலமிட்டுக்கொண்டு மடிந்தன. தேவதா கணங்கள் பெரிதும் ஆநந்தமடைந்தன. (43)

तुष्टुवुस्तां सुरा देवीं सह दिव्यैर्महर्षिभिः ।
जगुर्गन्धर्वपतयो ननृतुश्चाप्सरोगणाः ॥ ४४ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
महिषासुरसैन्यवधो नाम तृतीयोऽध्यायः ॥ ३ ॥

(ப - ரை) ताम्-அந்த, देवीम्-தேவியை, सुराः-தேவர்கள், दिव्यैः - ஸ்வர்கத்திலுள்ள, महर्षिभिः-सह - மஹர்ஷிகளோடுகூட, तुष्टुवुः-துதித்தனர். गन्धर्वपतयः-கந்தர்வ சிரேஷ்டர்கள், जगुः - கானம் செய்தனர், अप्सरोगणाः - அப்ஸர ஸ்த்ரீகளுடைய கூட்டங்கள், ननृतुः-च - நர்த்தனமும் செய்தனர்.

(பொ - ரை) அந்த தேவியை இந்திரன் முதலிய தேவர்கள், ஸ்வர்கலோகத்திலுள்ள மஹர்ஷிகளோடு கூடத் துதி செய்தனர். சிறந்த கந்தர்வர்களும் கானம் செய்தனர். அப்ஸர ஸ்த்ரீகளும் நர்த்தநம் செய்தனர். (44)

दिव्यैः - திவ்யை:—ப்ரஹ்மன் முதலியவர்களோடும்.

महर्षिभिः - மஹர்ஷிபி: —நாரதர் முதலியவர்களோடும் என நாகேசபட்டர் கூறுவர்.

இவ்விதம் மார்க்கண்டேயபுராணத்தில் ஸாவர்ணிக
மந்வந்தரத்தில், தேவீமாஹாத்ம்யத்தில்
மஹிஷாஸுர வதம் என்ற
மூன்ருவது அத்தியாயம்
இவண் முற்றும்

अथ चतुर्थोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

शक्रादयः सुरगणा निहतेऽतिवीर्ये
तस्मिन् दुरात्मनि सुरारिबले च देव्या ।
तां तुष्टुवुः प्रणतिनम्रशिरोधरांसा
वाग्भिः प्रहर्षपुलकोद्गमचारुदेहाः ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி उवाच - சொன்னார்—

(ப - ரை) देव्या - தேவியினால், अतिवीर्ये - அதிக பலமுள்ள, सुरारिबले - அஸுரஸைன்யமும், (अतिवीर्ये) - அதிக பராக்ரமத்தோடுகூடியவனாகிய, तस्मिन् - அந்த, दुरात्मनि - च - துஷ்டனான மஹிஷாஸுரனும், निहते - நாசத்தையடைந்த பொழுது, शक्रादयः - இந்திரன் முதலிய, सुरगणाः - தேவ கணங்கள், प्रणतिनम्रशिरोधरांसाः - நமஸ்காரம் செய்வதால் வணங்கிய சிரஸு, கழுத்து, தோள்முதலியவைகளோடு, प्रहर्षपुलकोद्गमचारुदेहाः - அதிக ஸந்தோஷத்தால் உண்டாகிய புள்காங்கிதத்தால் அழகியதான சரீரங்களையுடையவர்களாகக் கொண்டு, वाग्भिः - வாக்குகளால், ताम् - அந்த, மஹாலக்ஷ்மியை, तुष्टुवुः - துதித்தனர்.

மஹர்ஷி சொன்னார். (1)

(பொ - ரை) மூன்றுவது அத்தியாயத்தின் முடிவில் தேவர்கள் துதித்தனர் என்று சொல்லப்பட்ட ஸ்தோத்திரமானது இங்கு சொல்லப்படுகிறது.

அந்த மஹா லக்ஷ்மியானவள், அதிக பலமுள்ள அஸுர ஸைன்யத்தையும், மஹா பராக்ரமசாலியாயும், துஷ்டனுயுமிருந்த அந்த மஹிஷாஸுரனேயும் நாசம் செய்தபொழுது, இந்திரன் முதலிய தேவகணங்கள் நமஸ்காரம் செய்து, வணங்கிய சிரஸு, கழுத்து, தோள் முதலிய அவயவங்களோடும், பெருகிய மகிழ்ச்சியின் காரணமாகத் தோன்றிய புளகாங்கிதத்தால் அழகுடன் சிறந்து விளங்குகிற சரீரங்களோடும், தங்களுடைய வாக்குகளால் ஸ்ரீமஹாதேவியைத் துதித்தனர். (2)

वाग्भि: - வாக்பி:—வாக்குகளால் = நால்வகை வாக்குகளைக் கொண்டு. **चतुष्टयी शब्दानां प्रवृत्तिः** - சதுஷ்டயீ சப்தாநாம் ப்ரவ்ருத்தி: —சப்தங்களுடைய ப்ரவ்ருத்தி நால்வகையாம். ஜாதி சப்தங்கள், குண சப்தங்கள், க்ரியா சப்தங்கள், த்ரவ்ய சப்தங்கள் என்பன அவை. மற்றுஞ் சிலர் இவைகளுக்கே வைகரீ, மத்யமா, பச்யந்தீ, ஸூக்ஷ்மா என்பர். **வைகரீ;** சப்தத்தினுடைய பரிபூர்ண பாவத்தைக் குறிப்பது. அதாவது கடம், (குடம்) படம், (வஸ்த்ரம்) முதலிய பொருள் வடிவம் கொண்டது. **மத்யமா;** செவிகள் கொண்டு கேழ்க்கும் சப்தமே யாகும். **பச்யந்தீ;** பொருளை விளக்குகிற ஞான வடிவான வாக்கேயாகும். **அனபாயினீ;** பரஹ்மவடிவாயிருக்கிறவாக்கே இது ஸூக்ஷ்மா என்பதுமாம்.

देव्या यया ततमिदं जगदात्मशक्त्या
निःशेषदेवगणशक्तिसमूहमूर्त्या ।
तामम्बिकामखिलदेवमहर्षिपूज्यां
भक्त्या नताः स्म विदधातु शुभानि सा नः ॥ ३ ॥

(ப - ரை) नि:शेषदेवगणशक्तिसमूहमूर्त्या - ஸகல தேவகணங்களுடைய சக்திஸமூஹங்களின் வடிவத்தோடு, यया - எந்த, देव्या - தேவியினால், आत्मशक्त्या - ஆத்மசக்தி கொண்டு, इदम् - இந்த, जगत् - உலகம், ततम् - விரிவடைந்ததோ (தோன்றியதோ), अखिलदेवमहर्षिपूज्याम् - ஸகலதேவர்களாலும் மஹர்ஷிகளாலும் அர்ச்சிக்கத்தக்கவளான, ताम् - அந்த, अम्बिकाम् - அம்பிகையை, भक्त्या - பக்தியோடு கூட, नता: स्म - நமஸ்காரம் செய்கிறோம். सा - அந்த தேவியும், न: - நமக்கு, शुभानि - மங்களங்களை, विदधातु - கொடுக்கட்டும்.

(பொ - ரை) ஸகல தேவகணங்களுடைய சக்தி ஸமூஹங்களால் உண்டாகிய சரீரத்தோடு கூடிய யாதொரு தேவீ தனது ஆத்ம சக்திகொண்டு இந்த உலகம் முழுவதையும் விரிவடையச் செய்தாளோ! ஸகல தேவர்களாலும், மஹர்ஷிகளாலும் அர்ச்சிக்கத்தக்கவளான அந்த அன்னையாம் சண்டிகாதேவியை நாங்கள் பக்தியோடுகூட நமஸ்காரம் செய்கிறோம். அந்த தேவியும் (நமக்கு) பெருகிய மங்களங்களைக் கொடுக்கட்டும். (3)

आत्मशक्ति: - ஆத்மசக்தி :—தன்னுடைய உபாதிஸ்வபாவம். அல்லது தன்னுடைய வைபவம்.

भक्त्या - பக்த்யா - பக்தியோடு :—ஸேவ்யஸேவகபாவத்தோடு கூட ஹ்ருதய பூர்வமாக பஜனை செய்தல் எனவுமாம்.

यस्या: प्रभावमतुलं भगवाननन्तो
ब्रह्मा हरश्च न हि वक्तुमलं बलं च ।
सा चण्डिकाखिलजगत्परिपालनाय
नाशाय चाशुभभयस्य मतिं करोतु ॥ ४ ॥

(ப - ரை) यस्याः - எந்த தேவியினுடைய, अतुलम् - இணையற்ற, प्रभावम् - மஹிமையையும், बलं-च - பலத்தையும், वक्तुम् - சொல்லுதற்கு, ब्रह्मा - ப்ரஹ்மாவும். भगवान् - ஸமஸ்த ஸம்பத்துக்களும் நிறைந்த, अनन्तः - விஷ்ணுவும், हरः - च - பரமசிவனும், न - अलम् - हि - சக்தியற்றவர்களன்றோ ! सा - அந்த, चण्डिका - சண்டிகாதேவி, अखिलजगत्परिपालनाय - ஸகல லோகங்களுடைய பரிபாலனத்திற்காக, अशुभभयस्य - அமங்களத்திலிருந்து உண்டாகிய பயத்தினுடைய, नाशाय - च - நாசத்தின் பொருட்டும், मतिम् - புத்தியை, करोतु - செய்யட்டும்.

(பொ - ரை) எந்த தேவியினுடைய இணையற்ற பெருமையையும், வலிமையையும் வர்ணிப்பதில் ப்ரஹ்மாவும், ஸகல ஸம்பத்துக்களும் நிறைந்த விஷ்ணுவும், பரமேச்வரனும் சக்தியற்றவர்களென்பது பிரஸித்தமாகும். அப்பெருமை வாய்ந்த சண்டிகாதேவி ஸகல ப்ரபஞ்சத்தையும் பரிபாலனம் செய்வதற்கும், அமங்களத்திருந்து உண்டாகும் பயத்தை நாசம் செய்வதற்கும் பெரிய மனதைச் செய்யட்டும். (4)

अनन्तः - ஆயிரம் முகங்களைக் கொண்டவன்.

ब्रह्मा - பரஹ்மா :—உலக ஸ்ருஷ்டி கர்த்தா.

हर - ஹர :—ஸகல சக்திகளோடும் கூடியவன்.

या श्रीः स्वयं सुकृतिनां भवनेष्वलक्ष्मीः
पापात्मनां कृतधियां हृदयेषु बुद्धिः ।
श्रद्धा सतां कुलजनप्रभवस्य लज्जा
तां त्वां नताः स्म परिपालय देवि विश्वम् ॥ ५ ॥

(ப-ரை) या - எந்த, (தேவீ) स्वयं - தானாகவே, सुकृतिनाम्- புண்யசாலிகளுடைய, भवनेषु - வீடுகளில், श्रीः - ஸம்பத்தின் வடிவாகவும், पापात्मनाम् - பாபிகளுடைய (வீடுகளில்) अलक्ष्मीः- தாரித்ரியத்தின் வடிவாயும், कृतधियाम् - வித்வான்களுடைய, हृदयेषु - ஹ்ருதயங்களில், बुद्धिः - புத்தியின் வடிவாயும், सताम् - ஸத்கர்மசீலர்களுடைய (ஹ்ருதயங்களில்) श्रद्धा - ஸத்கர்மங்களில் ஆஸ்திக புத்தியின் வடிவாகவும், कुलजनप्रभवस्य - நற்குடியில் பிறந்தவர் (நாரீமணி) களுடைய (ஹ்ருதயங்களிலே) लज्जा - நாணத்தின் வடிவாகவும், (இருக்கிருளோ) ताम् - அந்த, त्वाम् - உன்னை, नताः स्म - (நாங்கள்) நமஸ்காரம் செய்கிறோம் देवि - ஓ் தேவி ! विश्वम् - உலகை, परिपालय - காப்பாற்றவேண்டும்.

(பொ - ரை) எந்த தேவியானவள், தானாகவே புண்யசாலிகளுடைய வீடுகளில் லக்ஷ்மியின் வடிவாகவும் ; பாபிகளுடைய வீட்டில் அலக்ஷ்மி (வறுமை)யின் வடிவாகவும்; பண்டிதர்களுடைய ஹ்ருதயங்களில் புத்தியின் வடிவாகவும்; ஸாதுக்களுடைய ஹ்ருதயங்களில் ஆஸ்திக புத்தியின் வடிவாகவும்; நற்குடியில் பிறந்த நாரீமணிகளுடைய ஹ்ருதயங்களிலே லஜ்ஜையின் (நாணம்) வடிவாகவும், இருந்து வருகிருளோ, அந்தத் திருவடியை நாங்கள் நமஸ்காரம் செய்கிறோம். ஓ அன்னையே ! உன்னுடைய திருமேனி இவ்வுலகைக் காப்பாற்ற வேண்டும். (5)

विद्वान् - வித்வான் :—வித்வான்கள் அல்லது நிர்மலமான மனதையுடையவர்கள்.

कृतधियः - க்ருத திய:—பண்டிதர்களில் உத்தமர்கள் அல்லது நிர்மலமான அந்த:கரணங்களுடன் கூடியவர்கள்.

कुलजनप्रभवम् - குலஜனப்ரபவம் :—நற்குடியில் பிறந்த குல ஸ்த்ரீகள்.

हृदये - सुवुद्धिः - ஹ்ருதயே ஸுபுத்தி: —என்பது நாகேசபட்டருடைய உரையாகும். அதாவது ஸ்வர்கத்திற்கும் மோக்ஷத்திற்கும் ஸாதனமான ஞானமென்பது பொருள்.

श्रद्धा - ச்ரத்தா :—ஆஸ்திக புத்தி.

किं वर्णयाम तव रूपमचिन्त्यमेत-
त्किंचातिवीर्यमसुरक्षयकारि भूरि ।
किं चाहवेषु चरितानि तवाति यानि
सर्वेषु देव्यसुरदेवगणादिकेषु ॥ ६ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி! सर्वेषु - ஸகல, असुरदेवगणादिकेषु - அஸுரர், தேவர்கள் முதலிய கணங்களிலும், अचिन्त्यम् - நினைவுக்கு எட்டாத, तव - உன்னுடைய, एतत् - இந்த, रूपम् - வடிவத்தை, किम् - எவ்விதம், वर्णयामः - வர்ணிப்போம்? भूरि - மிகவும், असुरक्षयकारि - அஸுரர்களை நாசம் செய்கிற, अतिवीर्यं - च - அளவற்ற பராக்ரமத்தையும், किम् - எவ்விதம், (வர்ணிப்போம்) आहवेषु - யுத்தங்களில், यानि - எவைகள், अतिचरितानि - மிகவும் சிறந்தவைகளான, வீரச் செயல்களுண்டோ, तानि - அவைகளை, किम् - எவ்விதம் வர்ணிக்கமுடியும்?

(பொ - ரை) ஓ அன்னையே! ஸகல தேவாஸுர கணங்களிலும் நினைவுக்குமெட்டாத உன்னுடைய இத்திருமேனியின் பெருமையையும், பெரும்பாலும் அஸுரர்களை அழிக்கின்ற உனது திருவடியினுடைய சிறந்த

பராக்ரமத்தையும், யுத்தங்களிலே உனது திருவடியினுடைய வீரச் செயல்களையும் நாங்கள் எவ்விதம் வர்ணிக்க முடியும்? (6)

உனது திருவடியினுடைய வடிவம், வீர்யம், சரிதம் முதலியவைகள் நினைவுக்கும், சொல்லுக்கும் எட்டாதவைகள் என்பது தாத்பர்யம். மேலும் இந்த அத்தியாயத்திலுள்ள ஸ்துதி முழுவதையும் கொண்டு ஸ்ரீ தேவியானவள் அநிர்வாச்ய (இவ்விதம் எனச் சொல்ல முடியாதவள்) வடிவத்தோடு கூடியவள் என்பதும் ஸாரமாகும்.

हेतुः समस्तजगतां त्रिगुणापि दोषै-
र्न ज्ञायसे हरिहरादिभिरप्यपारा ।
सर्वाश्रयाखिलमिदं जगदंशभूत-
मव्याकृता हि परमा प्रकृतिस्त्वमाद्या ॥ ७ ॥

(ப - ரை) समस्तजगताम् - எல்லா உலகங்களுக்கும், हेतुः - காரணமாயிருக்கிற, त्रिगुणा - अपि - முக்குணங்களையுடையவளாயினும், दोषैः - ஆசை முதலிய தோஷங்களினால், न - ज्ञायसे - அறியமுடியாதவள். हरिहरादिभिः - விஷ்ணு, சிவன் முதலியவர்களாலும், अपारा - அறியப்படாதவள். सर्वाश्रया - ஸமஸ்த வஸ்துக்களுக்கும் ஆதாரமாயிருப்பவள். इदम् - இந்த, अखिलम् - முழுவதுமான, जगत् - உலகம், अंशभूतम् - (உனது) அம்சத்தின் வடிவாயிருப்பதன்றோ! त्वम् - நீ, अव्याकृता - हि - விகாரமற்றவளன்றோ! परमा - பரமாத்மாவினுடைய, ஜீவபாவத்தை உண்டாக்குகிற, आद्या - முதலாவதாகிய, प्रकृतिः - மூலப்ரகிருதியும் (நீயேயன்றோ!)

(பொ - ரை) ஓ அன்னையே! உனது திருமேனியானது முக்குணங்களாம் ஸத்வம், ரஜஸ், தமஸ் என்றவைகளோடு கூடியிருப்பினும், ஸகல லோகங்களுக்கும் மூலகாரணமாயிருப்பதன்றோ! எனினும் ராகம் (ஆசை) முதலிய குற்றங்களினாலும் புலப்படாததன்றோ! உனது திருமேனியானது விஷ்ணு, ருத்ரன் முதலியவர்களாலும் அறிய முடியாத தன்றோ! நீ எல்லா வஸ்துக்களுக்கும் ஆதாரமானவளன்றோ! இங்கு தோற்றமளிக்கும் ஸகல லோகங்களும் உன்னுடைய அம்சமன்றோ! எனினும், உனது திருமேனியானது ஆறுவகையான பாவவிகாரங்களுடன் கூடாததன்றோ! ஆத்மாவினுடைய ஜீவபாவத்தை யுண்டாக்கவல்ல மூலப்ரகிருதியும் நீயேயன்றோ (7)

दोषैः - தோஷை:—புத்தியில் ஏற்படுகின்ற மாந்த்யம் முதலியன.

अंशभूतम् - அம்சபூதம் —என்ற இடத்தில் 'உனது' எனச் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஏனெனில் இவ்வுலகம் முழுவதும் தேவியின் அம்சமன்றோ. पादोऽस्य विश्वा भूतानि-பாதோஸ்ய விச்வா பூதாநி —என்பது ச்ருதி.

अव्याकृतम् - அவ்யாக்ருதம் — நாமரூபங்களை நிர்மாணம் செய்வதில் முதன்மையானவள். அக்காரணத்தால் தான் आद्या- ஆத்யா —முதன்மையானவள் எனவும் சொல்லப்பட்டிருக்கிறது.

प्रकृतिः - ப்ரக்ருதி: —என்பது ஸத்வரஜஸ்தமோகுணங்களுடைய ஸாம்யாவஸ்தையைக்கொண்ட மூலப்ரக்ருதியைக் குறிப்பதாகும்.

यस्याः समस्तसुरतासमुदीरणेन
तृप्तिं प्रयाति सकलेषु मखेषु देवि ।

स्वाहासि वै पितृगणस्य च तृप्तिहेतु-
रुच्चार्यसे त्वमत एव जनैः स्वधा च ॥ ८ ॥

(ப - ரை) हे देवि - ஓ தேவி, यस्याः - யாதொரு (ஸ்வாஹா சப்தத்தினுடைய) समुदीरणेन - உச்சாரணத்தினாலே, सकलेषु - ஸகல, मखेषु யாகங்களில், समस्तसुरता - எல்லா தேவ ஸமூஹங்களும், तृप्तिम् - திருப்தியை, प्रयाति - அடைகின்றதோ, वै - பிரஸித்தயான, स्वाहा-च - (அந்த) ஸ்வாஹா என்ற வடிவாகவும், असि - இருக்கிறாய். पितृगणस्य - பித்ருக்களுடைய கூட்டத்திற்கு, तृप्तिहेतुः - திருப்திக்குக் காரணமாயிருப்பவளும், त्वम् - நீ, अत-एव - ஆகையினால், जनैः - ஜனங்களால், स्वधा-च - ஸ்வதா தேவி எனவும், उच्चार्यसे சொல்லப்படுகிறாய்.

(பொ - ரை) ஓ தேவி! யாதொரு 'ஸ்வாஹா' என்ற சப்தமானது, ஸகல யாகங்களிலும் நன்கு உச்சாரணம் செய்யப்பட்டு அதனால் எல்லா தேவர்களும் திருப்தியை யடைகின்றனரோ, அந்தப் பிரஸித்தமான ஸ்வாஹா என்ற சப்தத்தின் வடிவாயிருப்பவளும் நீயே யன்றோ! பித்ரு வர்க்கங்களின் திருப்திக்குக் காரணமாயிருப்பவளும் நீயே! அக்காரணத்தாலன்றோ ஜனங்கள் பித்ருகர்மாக்களில் உன்னை ஸ்வதா தேவி எனவும் அழைக்கின்றனர். (8)

या मुक्तिहेतुरविचिन्त्यमहाव्रता त्व-
मभ्यस्यसे सुनियतेन्द्रियतत्त्वसारैः ।
मोक्षार्थिभिर्मुनिभिरस्तसमस्तदोषै-
र्विद्यासि सा भगवती परमा हि देवि ॥ ९ ॥

(ப - ரை) हे देवि - ஓ தேவி, मुक्तिहेतुः - மோக்ஷத்திற்குக் காரணமான, अविचिन्त्यमहाव्रता - சிந்தைக்கும் எட்டாத மஹாவ்ரதங்களோடு கூடியதான, भगवती - பகவத் விஷயமான, परमा - மிகவும் சிறந்த, या - யாதொரு, विद्या - வித்தை யுண்டோ, सा அந்த வித்தையின் வடிவாக, त्वम् - நீ, असि - இருக்கிருய். हि - ஏனெனில், अस्तसमस्तदोषैः - நாசம் செய்யப்பட்ட ஆசை முதலிய ஸமஸ்த தோஷங்களையுடையவர்களும், सुनियतेन्द्रियतत्त्वसारैः - நன்கு அடக்கப்பட்ட பொறிகளுடைய நிலைகளை யுணர்ந்தவர்களும், मोक्षार्थिभिः - மோக்ஷத்தை விரும்புகின்றவர்களுமான, मुनिभिः - முனிவர்களால், अभ्यस्यसे - நீ (உனது திருவடி) அனுஸந்தானம் செய்யப்படுகிருய்.

(பொ - ரை) ஓ தேவி! ஆசை முதலிய ஸகல தோஷங்களைக் களைந்தவர்களும், பொறிகளை வென்று தத்துவங்களுடைய நிலைகளை யுணர்ந்தவர்களும், மோக்ஷத்தை விரும்பியவர்களுமான முனிவர்களால் யாதொரு வித்தையானது அப்பியாஸம் செய்யப்படுகிறதோ; மோக்ஷத்திற்குக் காரணமானதும், சிந்தைக்கு எட்டாத மஹாவ்ரதங்களோடு கூடியதும், பரப்ரஹ்ம விஷயமானதும், தலைசிறந்ததுமான அந்த மஹா வித்யா வடிவாகவும் நீயே விளங்குகிருய். (9)

अविचिन्त्यमहाव्रता - அவிசிந்த்ய மஹாவ்ரதா :—சிந்தைக்கும் எட்டாத மஹாவ்ரதம். அதாவது: अहिंसासत्यास्तेयब्रह्मचर्यापरिग्रहा यमाः - அஹிம்ஸாஸத்யாஸ்தேயப்ரஹ்மசர்யாபரிக்ரஹா யமா: அஹிம்ஸை, ஸத்யம், களவின்மை, இந்த்ரிய நிக்ரஹம், பொருளை விரும்பாமை இவை யமம் என்பதின் லக்ஷணமாகும். அஹிம்ஸை; மனம், வாக்கு, காயம் (சரீரம்) இவைகளால் எக்காலத்தி

லும், எப்பிராணிக்கும் ஹிம்ஸை செய்யாதிருத்தல். ஸத்யம் முதலான மற்றவை, அஹிம்ஸை என்ற தர்மத்தைச் சுத்தம் செய்வதற்கும், பூரணம் செய்வதற்கும் ஏற்பட்ட ஸாதநங்களே. அஹிம்ஸை என்ற தர்மத்தைப் பரிபாலனம் செய்யாமல் மற்றைய தர்மங்களை அநுஷ்டித்தல் பிரயோஜனமில்லை. அஹிம்ஸை என்ற தர்மம் மற்றைய தர்மங்களின் அனுஷ்டாநமின்றி பூர்த்தி பெறாது. ஆகவே அவைகள் முக்கிய ஸாதநங்களாம்.

सत्यम् - ஸத்யம் :—ஸத்யம். பிறர் நன்மையின் பொருட்டு, பிரமாணங்களால் க்ரஹித்து, மனத்தால் நினைத்தபடி வாக்கினால் சொல்லுதல். இதைக் கேட்கிறவன் உள்ளவாறு க்ரஹிக்கும்படியாகச் சொல்லவேண்டும். வஞ்சகமும், கபடமுமுள்ளதாயும் கேட்கிறவன் உள்ளபடி அறியாமலிருக்கும்படியாகவும் மொழிதல் ஸத்யமன்று. உண்மையாயிருப்பினும், பிராணிக்கு நன்மை பயக்கக் கூடிய மொழி மாத்திரம் ஸத்யமாகும். உண்மையாயிருப்பினும் தீமை பயக்கக்கூடியவை அஸத்யமேயாகும். ஒருகால் நன்மை உண்டுபண்ணக்கூடியதான பொய்யும் ஸத்யத்தின் பெருமையைப் பெறும்.

> " பொய்ம்மையும் வாய்மை யிடத்த புரைதீர்ந்த
> நன்மை பயக்கு மெனின் "

என்ற பொய்யா மொழியும் இங்கு கவனிக்கத்தக்கது. இதே போல மநுவின் வசநமும் வருமாறு —

> " सत्यं ब्रूयात्प्रियं ब्रूयान्न ब्रूयात्सत्यमप्रियम् ।
> प्रियं च नानृतं ब्रूयात् .... ॥

என்பதாம். இதன் பொருள் :—உண்மை பேசு. அது ப்ரியமாக இருத்தல் வேண்டும். உண்மையான வார்த்தையாயினும், ப்ரியமின்றேல், அதைச் சொல்லுதலைத் தவிர். ப்ரியமானதென்று பொய்யைப் பேசாதே.

களவின்மை :—பலாத்காரமாகவாவது ; ரஹஸ்யமாகவாவது பிறர் பொருளைக் கவராதிருத்தலும், அத்தன்மையான சிந்தனையைத் தவிர்த்தலும், இந்த்ரிய நிக்ரஹம் அல்லது ப்ரஹ்மசர்யம், ஸ்த்ரீகள் பற்றிய காமனைகளைத் தவிர்த்தலுமாகிய இவையே களவின்மையாம். பெண்கள் பற்றிய காமனைகள் : இது ஒன்பதுவிதமான அங்கங்களையுடையன. (1) காமத்(ஆசை)துடன் பெண்களைப் பார்த்தல், (2) ஸ்பர்சித்தல், (3) அவர்கள் வார்த்தைகளைக் கேட்டல், (4) அவர்களைச் சிந்தித்தல், (5) அவர்களைப்பற்றிப் பேசுதல், (6) அவர்களுடன் விளையாடல், (7) அவர்களுடன் பேசுதல், (8) அவர்களைப்பற்றி ஸங்கல்பித்தல் (நினைத்தல்) (9) அவர்களுடன் ஸம்ஸர்கம் செய்தல் என்பவைகளாம்.

ப்ரஹ்மசர்யம் :—ப்ரஹ்ம - வேதத்தை உத்தேசித்து, சர்யம் - நியமங்களை அநுஷ்டித்தல். வேதாத்யயநம் செய்வதற்கு இந்த்ரிய நிக்ரஹம் முக்கியமானதால் ப்ரஹ்மசர்யம் என்ற பெயர் இந்த்ரிய நிக்ரஹத்திற்கு உண்டாகிவிட்டது.

अपरिग्रहः - அபரிக்ரஹ: — த்ரவ்ய அபேக்ஷை இன்மை : அதாவது சரீர யாத்திரைக்கு இன்றியமையாதவைகளைத் தவிர மற்ற விஷயங்களில் ப்ரவ்ருத்தியில்லாமலிருத்தல் என்பது இதன் முக்கியக் கருத்து. பொருளை ஸம்பாதித்தல், அதைப் பேணுதல், அதற்காகப் பிறரை ஹிம்ஸித்தல் இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

மேலும் இந்த அத்யாயத்திலே ஏழாவது ச்லோகத்தில் ஸ்ரீதேவி மூலப்ரக்ருதியின் வடிவமானவள் எனச் சொல்லப்பட்டது. இந்த ச்லோகத்தில் 'ப்ரஹ்மத்தின் வடிவமும்' ஸ்ரீதேவியே யாவள் என்பதும் வலியுறுத்தப்படுகிறது.

परमा-विद्या -பரமா வித்யா - மிகவும் சிறந்தது இந்த வித்தை. உலகத்தோற்றங்களிலே உள்ள பொருள்கள் யாவற்றினும் சிறந்தது; நிகரற்றது. அதாவது நிர்விகல்ப விருத்தி வடிவாய் அன்னையின் திருவடி திகழ்கின்றது என்பது ஸாரம்.

अस्तसमस्तदोषः - அஸ்தஸமஸ்த தோஷ :—என்றது. "ऋतं-भरा तत्र प्रज्ञा - ருதம்பரா தத்ர ப்ரஜ்ஞா ."—என்ற யோக ஸூத்ரத்தை யநுஸரித்துச் சொன்னதாகும். அதாவது ஸம்சயம், விபர்யயம் இவைகளின்றி வஸ்துக்களின் உண்மை நிலையை யறிதல் - ருதம்—ஸத்யம் என்பதாம், எனவே ஸாரமற்ற விஷயா திகளிலிருந்து புத்தியைத் திருப்பிய யோகிகள் என்பதும் ஆம்.

शब्दात्मिका सुविमलर्ग्यजुषां निधान-
मुद्गीथरम्यपदपाठवतां च साम्नाम् ।
देवि त्रयी भगवती भवभावनाय
वार्ता च सर्वजगतां परमार्तिहन्त्री ॥ १० ॥

(ப - ரை) हे देवि - ஓ தேவி ! (நீ) शब्दात्मिका - சப்தப்ர ஹ்ம வடிவாகவும், सुविमलर्ग्यजुषाम् - மிகப்புனிதங்களான ருக்குகளோடும், யஜுஸ்ஸுகளுக்கும், उद्गीथरम्यपदपाठवताम् - உத்கிதத்தால் அழகிய பதங்களைக் கொண்ட பாடத் தோடு கூடிய, साम्नां - च ஸாமன்களுக்கும், निधानम् - ஆதி காரணம். भगवती - ஐச்வர்யம் முதலியவைகள் நிறைந்த त्रयी - மூன்று வேதங்களின் வடிவாகவும், भवभावनाय - ஸம் ஸாரத்தினுடைய ப்ரவர்த்தனத்திற்கு, वार्ता - உபஜீவன மார்க்கத்தின் வடிவாகவும், परमा - ஸர்வோத்தமமாயும், सर्वजगताम् - ஸமஸ்த லோகங்களுடைய, आर्तिहन्त्री - च - துன் பத்தைத் துடைப்பவளாகவும் (இருக்கிருய்).

(பொ - ரை) ஓ தேவி! சப்தப்ரஹ்ம வடிவாகவும், மிகவும் புனிதங்களான ரிக்வேதங்களுக்கும், யஜுர்வேதங் களுக்கும், உத்கிதம் கொண்டு அழகிய பதங்களுடைய பாடத்தோடு கூடிய ஸாமன்களுக்கும் ஆதிகாரணமாயி

ருப்பதுவும் நின் திருவடிவன்றோ! ஸம்பத்துக்கள் நிறைந்த வேதத்ரயமும் (மூன்று வேதங்களும்) உனது திருவடிவின் பெருமையன்றோ! பிராணிகளுடைய ஜீவனத்திற்குக் காரணங்களான க்ருஷி (உழவு) வாணிபம் முதலிய வடிவாயிருப்பவளும் நீயே யன்றோ! ஸர்வோத்தம வடிவாயிருப்பவளும், உலகத்தின் துன்பத்தைத் துடைப்பவளும் நீயே யன்றோ! (10)

उद्गीथम् - உத்கீதம் :—என்ற பதம் கொண்டு ஐந்துபாகமாகச் செய்யப்பட்ட ஸாமவேதத்தினுடைய இரண்டாவது பாகம் சிறந்ததாகையால் இங்கு அதைக் குறிப்பதாகக் கொள்ளவேண்டும்.

रम्यपदपाठः - ரம்யபதபாட: —அழகிய என்றதால் தேவதா பதங்களுடைய ஸமூஹங்களைக் கொண்டதாகும்.

आर्तिहन्त्री - ஆர்த்திஹந்த்ரீ :—துன்பத்தைத் துடைப்பவள். அதாவது: ஸ்ரீதேவீ ஐந்துவித க்ருத்யங்களைச் செய்பவளாகையால் அனுக்ரஹ க்ருத்யத்தைச் செய்பவள் என்பது கருத்து.

मेधासि देवि विदिताखिलशास्त्रसारा
दुर्गासि दुर्गभवसागरनौरसङ्गा ।
श्रीः कैटभारिहृदयैककृताधिवासा
गौरी त्वमेव शशिमौलिकृतप्रतिष्ठा ॥ ११ ॥

(ப - ரை) हे देवि - ஓ தேவி! विदिताखिलशास्त्रसारा - அறியப்பட்ட ஸர்வசாஸ்த்ர தத்துவங்களோடுகூடிய, मेधा - தரிக்கின்ற சக்தியையுடைய புத்தியின் வடிவமாக, असि - இருக்கிறாய். दुर्गभवसागरनौः - கடக்கமுடியாத ஸம்ஸாரமென்னும் கடலுக்குத் தோணியைப் போன்றவள். असङ्गा-இரண்டற்று விளங்குபவள். दुर्गा - துர்கையாகவும், असि - இருக்

கிருய். **कैटभारिहृदयैककृताधिवासा** - விஷ்ணுவினுடைய ஹ்ருத யத்தையே, தனக்கு முக்கியமான இருப்பிடமாகக் கொண்ட, **श्रीः** - லக்ஷ்மீதேவியும் **शशिमौलिकृतप्रतिष्ठा** - பாதிமதியைச் சூடிய பரமசிவனால் ப்ரதிஷ்டை செய்யப்பட்ட, **गौरी** - பார்வதியும், **त्वम्** - **एव** - நீயே.

(பொ-ரை) ஓ தேவி! உனது திருவடியானது ஸகல சாஸ்த்ரங்களுடைய தத்துவங்களையுணர்ந்து அவைகளைத் தாரணம் செய்கிற மேதையின் வடிவாய்த் திகழ்கின்றதன்றோ! கடப்பதற்கரிய பிறவிக்கடலுக்கு ஒரு தோணியின் வடிவாகவும், யாதொரு வஸ்துக்களோடும் ஸம்பந்தமற்ற வடிவாகவும், துர்கையின் வடிவாகவுமிருப்பதும் நீயே யன்றோ! விஷ்ணுவினுடைய ஹ்ருதயத்தையே முக்கியமான இருப்பிடமாகக் கொண்ட லக்ஷ்மியாகவும், பிறையைச் சூடிய பித்தனும் பரமசிவனால் பிரதிஷ்டை செய்யப்பட்ட பார்வதியாகவும் இருப்பது நீயே யன்றோ! (11)

मेधा - மேதா —ஸரஸ்வதீ.

दुर्गभवसागरनौः - துர்கபவஸாகரநௌ:—என்றதால் ஞானத்தின் உதவியில்லாது பிறவிக்கடலைக் கடக்க முடியாது. அந்த ஞானமும் உனது திருவடியின் உருவாய்த் திகழ்கிறது என்பது ஸாரம்.

மற்றும் இந்த ச்லோகத்தினுடைய பூர்வார்தம் (முற்பகுதி) கொண்டு தேவீ ப்ராஹ்மீ எனவும், உத்தரார்தம் (பிற்பகுதி) கொண்டு தேவீ வைஷ்ணவியாகவும், ருத்ராணியாகவும் சொல்லப்பட்டது என்பதையும் உணர்த்தலாயிற்று.

ईषत्सहासममलं परिपूर्णचन्द्र-
बिम्बानुकारि कनकोत्तमकान्ति कान्तम् ।

अत्यद्भुतं प्रहृतमात्तरुषा तथापि
वक्त्रं विलोक्य सहसा महिषासुरेण ॥ १२ ॥

(ப - ரை) **ईषत्** - சிறிது, **सहासम्** - மந்தஹாஸத்தோடும், **अमलम्** - மனோஹரமாயும், **परि-पूर्ण-चन्द्र-बिम्बनुकारि** - குறைவற்று நிறைந்து விளங்கும் சந்த்ரபிம்பத்தை யனுஸரிக்கின்றதும், **कनकोत्तमकान्ति** - சிறந்த ஸ்வர்ணத்தினுடைய் காந்தியோடுகூடியதும், **कान्तम्** - சோபைகள் நிறைந்ததுமான, **वक्त्रम्** - முகமானது, **तथा-अपि** - அவ்விதமிருந்தாலும், **विलोक्य** - பார்த்து, **सहसा** - விரைவாக, **आत्त-रुषा** - அடையப்பட்ட கோபத்தோடு கூடிய, **महिषासुरेण** - மஹிஷாஸுரனுல், **प्रहृतम्** - அடிக்கப்பட்டது, **अति-अद्भुतम्** - மிகவும் ஆச்சரியம்.

(பொ - ரை) சிறிது மலர்ந்த மந்தஹாஸத்தோடும், பரிசுத்தமானதும், கலேகள் நிரம்பிய பரிபூர்ண சந்திர பிம்பத்திற்கு ஸமானமாயிருப்பதும், சிறந்த் ஸ்வர்ணத்தினுடைய காந்தியைப் போல் சோபையுடன் கூடியதுமான உனது திருமுகமானது உலகம் கண்டு மோஹிக்கக் கூடியதாயிருக்கிறது. அப்படி இருந்தாலும், உனது திருமுகத்தைக் கண்டதும் மஹிஷாஸுரன் கோபத்தோடு அடிக்கடி அடித்தான் என்பது மிகவும் விந்தையாயிருக்கிறதன்றோ! (12)

இவ்விதப் பெருமை வாய்ந்த தேவியினுடைய முகதர்சனமானது காமம் க்ரோதம் முதலியவைகளையெல்லாம் நாசம் செய்து சித்த சுத்தியையுண்டுபண்ணி விரைவில் ஸூக்ஷ்ம தத்துவ ஞானத்தை உறுதியாயுண்டாக்க வேண்டுமன்றோ! அவ்விதமிருக்க இவ்விடத்தில் மஹிஷாஸுரனுக்கு பாபம் அதிகரித்த

காரணத்தால் அந்த ஞானம் உண்டாகவில்லையென்பதையும் ஸூசனை செய்வதாகும் என்பர் குப்வதீ உரையாசிரியர்.

दृष्ट्वा तु देवि कुपितं भ्रुकुटीकराल-
मुद्यच्छशाङ्कसदृशच्छवि यन्न सद्यः ।
प्राणान् मुमोच महिषस्तदतीव चित्रं
कैर्जीव्यते हि कुपितान्तकदर्शनेन ॥ १३ ॥

(ப - ரை) हे देवि - ஓ தேவி! कुपितम् - கோபத்தோடு கூடியதும், भ्रुकुटी - करालम् - வளைந்த புருவங்களால் பயங்கரமானதும், उद्यच्छशाङ्कसादृशच्छवि - உதயத்தையடைந்த சந்த்ரனுக்கு நிகரான சோபையைக்கொண்டதுமான (உனது திருமுகத்தை) दृष्ट्वा - तु - பார்த்தும் महिषः-மஹிஷன், सद्यः- உடனே, प्राणान् - பிராணன்களை, न - मुमोच - விடவில்லை, यत् - என்பது யாதொன்று உண்டோ, तत् - அதுவும், अतीव - மிகவும், विचित्रम् - விந்தை, हि - ஏனெனில், कुपितान्तक-दर्शनेन - கோபமடைந்த அந்தகனுடைய தர்சநத்தால், कैः - எவர்கள், जीव्यते - பிழைத்திருக்க முடியும்.

(பொ - ரை) ஓ தேவி! கோபத்தோடு கூட, வளைந்த புருவங்களால் பயங்கரமாக விளங்குகின்றதும், உதய காலத்திலே தோன்றுகின்ற சிவந்த வர்ணத்தையுடைய சந்திர பிம்பத்தினுடைய சோபையோடு கூடியதுமான உன்னுடைய திருமுகத்தைப் பார்த்தும் மஹிஷாஸுரன் உடனே பிராணன்களை இழக்கவில்லை என்பதுவும், விந்தையாயிருக்கிறது. ஏனெனில் கோபத்தோடு கூடிய காலதேவனைக் கண்ட எந்த ஜீவராசிகள்தான் பிழைத்திருக்க முடியும்? (13)

देवि प्रसीद परमा भवती भवाय

सद्यो विनाशयसि कोपवती कुलानि ।

विज्ञातमेतदधुनैव यदस्तमेत-

न्नीतं बलं सुविपुलं महिषासुरस्य ॥ १४ ॥

(ப - ரை) हे देवि ! - ஓ தேவி ! प्रसीद - அனுக்ரஹம் செய் ; भवती - நீ, परमा - மேன்மையானவளாக, असि - இருக்கிறாய். सद्यः - உடனே, भवाय - குலத்தின் அபிவிருத்தியின் பொருட்டு இருக்கவேண்டும், कोपवती - கோபத்தையுடையவளாக, कुलानि - வம்சங்களை, सद्यः - உடனே, विनाशयसि - நாசம் செய்கிறாய். एतत् - இது, अधुना - एव - இப்பொழுதே, विज्ञातम् - அறியப்பட்டது. यत् - யாதொரு, महिषासुरस्य - மஹிஷாஸுரனுடைய, सुविपुलम् - மிகவும் விஸ்தாரமான, बलम् - ஸைன்யமானது, अस्तम् - நாசத்தை, नीतम् - அடையச் செய்ததோ.

(பொ - ரை) ஓ தேவி ! நீ அனுக்ரஹம் செய்ய வேண்டும். நீ அனுக்ரஹம் செய்தால் எங்களுடைய குலம் மேன்மையடையும். கோபம் செய்தாலோ குலங்களனைத்தும் உடனே அழிந்து விடும். இது இப்பொழுதே எங்களால் அறியப்பட்டது. ஏனெனில் உனது கோபமானது மஹிஷாஸுரனுடைய வலியவைகளான பெரிய ஸேனைகளை நாசமடையச் செய்ததன்றோ. (14)

ते संमता जनपदेषु धनानि तेषां

तेषां यशांसि न च सीदति धर्मवर्गः ।

धन्यास्त एव निभृतात्मजदारभृत्या:
येषां सदाभ्युदयदा भवती प्रसन्ना ॥ १५ ॥

(ப - ரை) येषाम् - எவர்களுக்கு, भवती - நீ, सदा - எப்பொழுதும், अभ्युदयदा-அபிவிருத்தியைக் கொடுப்பவளாக, प्रसन्ना - விளங்குகிருயோ. ते,- एव - அவர்களே, जनपदेषु - தேசங்களில், संमता: - ஸாது ஜனங்களால் ஆமோதிக்கப்பட்டவர்கள். - तेषाम् - அவர்களுக்கு, धनानि - ஸம்பத்துக்களும், यशांसि - கீர்த்திகளும், धर्मवर्ग: - च - தர்மம் முதலிய புருஷார்த்தங்களும், न-सीदति - நசிப்பதில்லை. निभृतात्मजदारभृत्या -விநய முள்ள புத்திரர்களோடும், மனைவிகளோடும், ஸேவகர்களோடும், धन्या: - புண்யசாலிகள், ते - एव - அவர்களே.

(பொ - ரை) ஓ தேவி! எப்பொழுதும் அபிவிருத்தியைக் (வளர்ச்சி) கொடுக்கிற உனது திருவடியினுடைய அனுக்ரஹம் எந்த சிலருக்குக் கிடைக்கின்றதோ; அவர்களே உலகில் ஸாது ஜனங்களால் ஆமோதிக்கப்பட்டவர்களாகவும்; ஸம்பத்துக்கள் நிறைந்தவர்களாகவும், புகழுடன் கூடியவர்களாகவும், குறைவில்லாத தர்மம், அர்த்தம், காமம், மோக்ஷம் என்ற புருஷார்த்தங்களோடு கூடியவர்களாகவும், புண்யசாலிகளாகவும், விநயத்தோடு கூடிய புத்ரர்கள் களத்ரம், ஸேவகர்கள் முதலியவர்களோடு கூடியவர்களாகவும் இருக்கின்றனர். (15)

இது முதல் மூன்று ச்லோகம் கொண்டு ஸ்ரீ தேவியினுடைய அருள் நோக்கை-அதாவது அனுக்ரஹத்தை-சொல்லப்படுகிறது. ஸ்ரீதேவியினுடைய அனுக்ரஹத்தால் பக்தர்களுக்கு மேலே சொல்லப்பட்ட உத்தம குணங்கள் யாவும் உண்டாகும் என்பதுவும் ஸாரம்.

निभृत: - நிப்ருத: —விநயத்தோடு கூடியவர்கள் அல்லது குலாசாரத்தைக் கடைப்பிடிப்பவர்கள்.

धन्या: - தன்யா: —புண்யசாலிகள் அல்லது ஸாதுக்களால் புகழத்தக்கவர்கள்.

धर्म्याणि देवि सकलानि सदैव कर्मा-
ण्यत्यादृत: प्रतिदिनं सुकृती करोति ।
स्वर्गं प्रयाति च ततो भवतीप्रसादा-
ल्लोकत्रयेऽपि फलदा ननु देवि तेन ॥ १६ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி ! भवती प्रसादात् - உன்னுடைய அனுக்ரஹத்தால், सुकृती - புண்யசாலியான புருஷன், प्रतिदिनम् - தினந்தோறும், सदा - एव - எப்பொழுதுமே, अति - आदृत: - மிகவும் ஆதரவோடு கூட, सकलानि - ஸமஸ்தங்களான, धर्म्याणि - தர்மங்களைக் கொண்டு, அடையக் கூடியவைவயான, कर्माणि - கர்மங்களை, करोति - செய்கிறான்; तत: - பிறகு, स्वर्गं - च - ஸ்வர்கத்தையும், प्रयाति - அடைகிறான். तेन - ஆகையால், देवि - ஓ தேவி ! लोकत्रये - अपि - மூவுலகிலும், फलदा - ननु - பலத்தைக் கொடுக்கின்றவளன்றோ!

(பொ - ரை) ஓ தேவி! உனது அனுக்ரஹத்தைப் பெற்ற புண்ய புருஷன், தினந்தோறும் மிகுந்த ஆதரவோடு எல்லாவித தர்மங்களைக் கொண்டு அடையக் கூடியதான ப்ரஹ்மயஜ்ஞம் முதலிய கர்மங்களைச் செய்கிறான். அக்காரணத்தால் அவன் ஸ்வர்கத்தையும், மோக்ஷத்தையும் அடைகிறான். ஆகையால் நீ ஒருவளே

மூவுலகிலும் பலத்தைக் கொடுப்பவளாய் விளங்கு கிறாய். (16)

धर्म्याणि - *தர்ம்யாணி* —*தர்மத்தோடு கூடியவைகள்.*

लोकत्रये - अपि - லோகத்ரயே அபி —என்றதால் இவ்வுலகிலும், ஸ்வர்கத்திலும், மோக்ஷத்திலும் எனவும் கொள்ளலாம். இவைகளில் இவ்வுலகில் ஐஹிகமான கர்மபலம் ஸத்கர்மங்களைச் செய்வதும், ஸ்வர்க்கபலம் ஸுகத்தையநுபவிப்பதும், மோக்ஷ பலம் நித்யாநந்தத்தையனுபவிப்பதுமாகும்.

दुर्गे स्मृता हरसि भीतिमशेषजन्तोः
स्वस्थैः स्मृता मतिमतीव शुभां ददासि ।
दारिद्र्यदुःखभयहारिणि का त्वदन्या
सर्वोपकारकरणाय सदार्द्रचित्ता ॥ १७ ॥

(ப - ரை) **दुर्गे** - *ஸங்கடத்தில்,* **स्मृता** - *நினைத்தால்,* **अशेष - जन्तोः** - *எல்லா ஜீவராசிகளுடைய,* **भीतिम्** - *பயத்தை,* **हरसि** - *அபஹரிக்கிறாய்.* **स्वस्थैः** - *பயமில்லாதவர்களால்,* **स्मृता** - *ஸ்மரித்தால் (நினைத்தால்),* **अती-इव** - *மிகவும்,* **शुभाम्** - *நல்லவழியே செல்லும்,* **मतिम्** - *புத்தியை,* **ददासि** - *கொடுக்கிறாய்.* **दारिद्र्यदुःख-भय-हारिणि** - *வறுமையின் காரணமான துக்கத்தை நாசம் செய்பவளே!* **सर्वोपकारकरणाय** - *ஸகல பிராணிகளுக்கும் உபகாரம் செய்வதற்கு,* **सदा** - *எப்பொழுதும்,* **आर्द्रचित्ता** - *இளகிய மனமுள்ளவளாக,* **त्वद् - अन्या** - *உன்னைக் காட்டிலும்,* **अन्या - का** - *வேறு யார்?*

(பொ - ரை) ஓ தேவி! துன்பம் வந்துற்ற நிலையிலே, உனது திருவடியை நினைத்த அளவிலே, ஸகல ஜீவராசிகளுடைய பயத்தையும் அகற்றுகிறாய். பயத்தை

யொழித்த மக்களால் நினைக்கப்பட்டால் அவர்களுக்கு மிகவும் அழகிய நல்வழிச் செல்லும் புத்தியைக் கொடுக்கிருய். வறுமையின் காரணமாயேற்படும் துக்கத்தைத் துடைக்கும் ஓ அன்னையே! எப்பொழுதும் ஸகல ஜீவ ராசிகளுக்கும் உபகாரம் செய்வதிலேயே கருணையோடு இளகிய நெஞ்சத்தை யுடையவர் உன்னைக்காட்டிலும் வேறு எவர் இருக்கின்றனர்? (17)

एभिर्हतैर्जगदुपैति सुखं तथैते
कुर्वन्तु नामनरकाय चिराय पापम् ।
संग्राममृत्युमधिगम्य दिवं प्रयान्तु
मत्वेति नूनमहितान् विनिहंसि देवि ॥ १८ ॥

(ப - ரை) हतैः - நாசம் செய்யப்பட்ட, एभिः - இந்த, அஸுரர்களினால், जगत् - உலகம், सुखम् - ஸுகத்தை, उपैति - அடைந்தது- तथा - அவ்விதமே, आमनस्काय - பெரிய வியாதிகளை முக்கியமாகக்கொண்ட நாகத்தின்பொருட்டு, चिराय- வெகு காலம், पापम् - பாபத்தை, न - कुर्वन्तु - செய்யவேண்டாம், एते - இவர்கள், संग्राम-मृत्युम् - யுத்தத்தில் மரணத்தை, अधिगम्य - அடைந்து, दिवम् - ஸ்வர்கத்தை, प्रयान्तु - அடையட்டும். देवि - ஓ தேவி! इति - இவ்விதம், मत्वा - நினைத்து त्वम् - நீ, अहितान् - பகைவர்களை, विनिहंसि - நாசம் செய்கிருய், नूनम् - நிச்சயம்.

(பொ - ரை) ஓ அன்னையே! இந்த மஹிஷன் முதலியவர்கள் உன்னால் கொல்லப்பட்டதும் உலகம் க்ஷேமத்தை யடைந்தது. அவ்விதமே, குஷ்டம் முதலிய மஹா வியாதிகளாம் நரகத்திற்குள்ளாகி மேன்மேலும் இவர்கள்

பர்பம் செய்யாதிருக்கட்டும். இந்த அஸுரர்கள் யுத்தத்தில் மரித்து வீரஸ்வர்கத்தை அடையவேண்டுமெனக் கருதி, பகைவர்களை நீ நாசம் செய்கிருய் என்பது உறுதியாம். (18)

दृष्ट्वैव किं न भवती प्रकरोति भस्म
सर्वासुरानरिषु यत्प्रहिणोषि शस्त्रम् ।
लोकान् प्रयान्तु रिपवोऽपि हि शस्त्रपूता
इत्थं मतिर्भवति तेष्वहितेषु साध्वी ॥ १९ ॥

(ப - ரை) भवती - நீ, सर्वासुरान् - எல்லா அஸுரர்களையும், दृष्ट्वा-एव - பார்த்த அளவிலே, भस्म - சாம்பராக, किं - न - प्रकरोति - செய்யமாட்டாயா என்ன ? अरिषु - பகைவர்களிடத்தில், शस्त्रम् - ஆயுதத்தை, प्रहिणोषि - பிரயோகம் செய்கிருய், यत् - என்பது யாதொன்று உண்டோ, रिपवः - अपि - பகைவர்களும், शस्त्रपूताः - ஆயுதங்களால் புனிதமடைந்தவர்களாக, लोकान् - ஸ்வர்கம் முதலிய லோகங்களை, प्रयान्तु - அடையட்டும், इत्थम् - இவ்விதம், तेषु - அந்த, अहितेषु - பகைவர்களிடத்திலும், साध्वी-பரோபகாரம்செய்யும், मतिः - புத்தியானது, भवति - हि - இருக்கிறதன்றோ.

(பொ - ரை) ஒ தேவி! உனது பார்வையளவிலே, ஸகல அஸுரர்களையும், உன்ஞல் சாம்பராக்கமுடியும் அப்படிச் செய்யாது அவர்களின் மீது ஆயுதங்களைப் பிரயோகம் செய்வது ஏனோ! பகைவர்களும் ஆயுதங்களால் பரிசுத்தமாகி ஸ்வர்கம் முதலிய லோகங்களையடையவேண்டுமென்ற உன்னுடைய அனுக்ரஹ புத்தியானது பகைவர்களிடமும் பரிணமிக்கிறதல்லவா! (19)

शस्त्रपूताः - சஸ்த்ரபூதா:—பாணங்களுடைய தாரைகளாகிற ஜலங்களினல் பகைவர்களை பரிசுத்தம் செய்கிருள் என்பது தாத்பர்யம்.

खड्गप्रभानिकरविस्फुरणैस्तथोग्रैः
शूलाग्रकान्तिनिवहेन दृशोऽसुराणाम् ।
यन्नागता विलयमंशुमदिन्दुखण्ड-
योग्याननं तव विलोकयतां तदेतत् ॥ २० ॥

(ப - ரை) तव - உன்னுடைய, उग्रैः - கொடியவைகளான, खड्ग-प्रभा-निकर-विस्फुरणैः - கத்தியினுடைய காந்திஸமூஹத்தினுடைய பரவுதலினுலும், तथा - அவ்விதமே, शूलाग्र-कान्ति-निवहेन - சூலாயுதங்களுடைய நுனியினுடைய காந்திஸமூஹத்தினுலும், अंशुमदिन्दु-खण्ड-योग्याननम् - அமுதகிரணங்களையுடைய அர்த சந்திரனேடு கூடிய உனது திருமுகத்தை, विलोकयताम् - பார்க்கின்ற, असुराणाम् - அஸுரர்களுடைய, दृशः - கண்கள், विलयम् - விநாசத்தை, न-आगताः - அடையவில்லை, यत् - என்பது யாதொன்று உண்டோ, तत्, एतत् - அது சரியானதே.

(பொ - ரை) ஓ தேவி! உனது வாளின் காந்திகள் உக்ரமாக எல்லா திக்குகளிலும் மின்னுவதாலும், அவ்விதமே, சூலாயுதங்களின் நுனிகளுடைய காந்திஸமூகங்களாலும், அஸுரர்களுடைய கண்கள் அழியாதிருந்தன என்பது, சந்த்ர கலையுடன் விளங்குகின்ற உன்னுடைய திருமுகத்தைத் தரிசனம் செய்த காரணத்தாலன்ருே! (20)

இவ்விடத்தில் வாள், சூலம்—இவைகளுடைய காந்திகளால் அஸுரர்களுடைய கண்கள் அழியாதிருந்தன என்பதற்குக் காரணம், பாதிமதியுடன் கூடிய அன்னையின் திருமுகத்தைப் பார்த்துக் கொண்டிருந்த காரணத்தாலேயே என்பது தாத்பர்யம். அல்லது—அமுத கிரணங்களோடு கூடிய சரத்காலத்திலே தோன்றும் சந்த்ரனைக்காட்டிலும், அதிகத் தண்மை (குளிர்ச்சி) யுடன் மனோஹரமாக விளங்கும் அன்னையின் திருமுகமென்றும் சந்த்ரனைப் பார்த்து மகிழ்ச்சியடைந்த பகைவர்களுடைய கண்களுக்குப் பார்க்கத்தகாத வாள், சூலம் இவைகளுடைய காந்திகள் ஒரு பொருட்டாக இருக்கவில்லை. அதாவது ஆயுதங்களுடைய காந்திகளை அன்னையின் வதந (முகம்) காந்தியானது ஒளி மழுங்கும்படி செய்தது என்பதும் ஸாரம்.

दुर्वृत्तवृत्तशमनं तव देवि शीलं
रूपं तथैतदविचिन्त्यमतुल्यमन्यैः ।
वीर्यं च हन्तृ हृतदेवपराक्रमाणां
वैरिष्वपि प्रकटितैव दया त्वयेत्थम् ॥ २१ ॥

(ப - ரை) देवि ! ஓ தேவி! तव - உன்னுடைய, शीलम् - இயற்கையாயுள்ள குணமானது, दुर्वृत्त-वृत-शमनम्-கெட்டவர்களுடைய நடத்தையை அடக்குவதாகும். तथा - அவ்விதமே, एतत् - இந்த, रूपम् - வடிவமானது, अविचिन्त्यम् - சிந்திக்கமுடியாததும், अन्यैः - மற்ற மனோஹரமான வஸ்துக்களோடு, अतुल्यम् - இணையற்றதுமாகும். वीर्यं-च - பராக்ரமமோவெனில், हृत-देव-पराक्रमाणाम् - அபஹரிக்கப்பட்ட தேவர்களுடைய பராக்ரமங்களையுடைய, (அஸுரர்களை) हन्तृ - கொல்லக்கூடியது. इत्थम् - இவ்விதம், वैरिषु-अपि - பகைவர்களிடத்திலும், त्वया - உன்னால், दया - கிருபையானது, प्रकटिता-एव - வெளியிடப்பட்டது என்பது நிச்சயம்.

(பொ - ரை) ஓ தேவி! உன்னுடைய் இயற்கையாயுள்ள குணமானது துஷ்டர்களுடைய கெட்ட நடத்தைகளைக் கண்டிக்கக்கூடியது. அவ்விதமே உன்னுடைய இந்த வடிவமும் மனதால் சிந்தனை செய்ய முடியாததாகவும், மற்ற மனோஹரமான வஸ்துக்களோடு இணையற்றதாகவும் இருக்கிறது. உன்னுடைய பராக்ரமமானது, தேவர்களுடைய பலத்தைக் கவர்ந்த அஸுரர்களையும் அழிக்ககூடியது. இவ்விதம் பகைவர்களிடத்திலும் உன்னால் தயை காண்பிக்கப்படுகிறது. இது நிச்சயம். (21)

दुर्वृत्तवृत्तं - துர்வ்ருத்தவ்ருத்தம்—பாபம். शीलं - சீலம்—இயற்கையாயுண்டாகிய உத்தம ஸ்வபாவம். अवि-चिन्त्यं - அவிசிந்த்யம்—"இது இவ்விதமுள்ளது" என்ற சிந்தைக்கும் எட்டாதது. எனவே இவ்விதமுள்ள வடிவம், பலம் இவைகளோடு கூடிய உனது திருவடியோ அஸுரர்களை அஸ்த்ரங்களின் உதவியினால் அழித்தது அவர்களுடைய பாபசமனத்திற்காகவேயன்றோ! அன்னையே! உனது கருணையின் கனிவுதான் என்னே! அன்பதும் ஸாரமாகும்.

केनोपमा भवतु तेऽस्य पराक्रमस्य
रूपं च शत्रुभयकार्यतिहारि कुत्र।
चित्ते कृपा समरनिष्ठुरता च दृष्टा
त्वय्येव देवि वरदे भुवनत्रयेऽपि॥ २२ ॥

(ப - ரை) वरदे - வரத்தைக் கொடுப்பவளே! देवि - ஓ தேவி! ते - உன்னுடைய, अस्य - இந்த, पराक्रमस्य - பராக்ரமத்திற்கு, केन - எந்த வஸ்துவோடுகூட, उपमा - உவமையானது, भवतु - இருக்கமுடியும்? शत्रु-भय-कारि - பகைவர்

களுக்குப் பயத்தைச் செய்கிறதும், अति-हारि - மிகவும் மனோ ஹரமாயிருக்கிறதுமான, रूपं-च - வடிவமும், कुत्र - எங்கே? चित्ते - மனதில், कृपा - அனுதாபமும், समर-निष्ठुरता-च - யுத்தத்திலே குரூரமும், भुवनत्रये - अपि - மூவுலகிலும், त्वयि - एव - உன்னிடத்திலேயே, दृष्टा - காணப்படுகிறது.

(பொ - ரை) பக்தர்களுக்கு விரும்பிய வரத்தைக் கொடுக்கின்ற ஓ தேவி! உன்னுடைய இந்த பராக்ரமத்தோடு உவமிப்பதற்கு உலகில் வஸ்துக்கள் ஒன்றும் கிடையாதன்றோ! பகைவர்களுக்குப் பயத்தை உண்டாக்கவல்லதும், பக்தர்களுக்கு மிகவும் மனதைக் கவர்வதுமான இந்த அழகிய வடிவம் உனக்கே யல்லாது வேறு எவருக்குத்தான் இருக்கமுடியும்! அகத்திலே (மனது) அனுதாபமும், சண்டையிலே குரூரமும், மூவுலகிலும் உன்னிடமே காணப்படுகிறது. வேறு எங்கும் கிடையாதன்றோ! (22)

त्रैलोक्यमेतदखिलं रिपुनाशनेन
त्रातं त्वया समरमूर्धनि तेऽपि हत्वा ।
नीता दिवं रिपुगणा भयमप्यपास्त-
मस्माकमुन्मदसुरारिभवं नमस्ते ॥ २३ ॥

(ப - ரை) त्वया - உன்னால், एतत् - இந்த, त्रैलोक्यम् - மூவுலகம், रिपु नाशनेन - பகைவர்களுடைய நாசத்தினால், अखिलम् - முழுவதும், त्रातम् - காப்பாற்றப்பட்டது. समर-मूर्धनि - யுத்தகளத்தில், रिपु गणाः - பகைவர்களுடைய கூட்டங்கள், हत्वा - கொல்லப்பட்டு, ते - அவர்கள், दिवम् - ஸ்வர்கத்தை, नीताः - अपि - அடைவிக்கப்பட்டாலும், उन्मद-सुरारि-भवं - உன்

மத்தர்களான, அஸுரர்களிடமிருந்து உண்டான, अस्माकम्- எங்களுடைய, भयम् - अपि - பயமும், अपास्तम् - அகற்றப்பட்டது. ते - உனக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) ஓ தேவி! இம்மூவுலகும் சத்துருக்களை நாசம் செய்து உன்னால் காப்பாற்றப்பட்டது. யுத்த களத்திலே பகைவர்களுடைய கூட்டங்களும் உன்னால் கொல்லப்பட்டு, ஸ்வர்கம் அடைவிக்கப்பட்டன. மிகவும் மதோன்மத்தர்களான அஸுரர்களிடமிருந்து உண்டாகிய எங்களுடைய பயமும் அகற்றப்பட்டது. ஓ அன்னையே! உனக்கு நமஸ்காரம். (23)

शूलेन पाहि नो देवि पाहि खड्गेन चाम्बिके ।
घण्टास्वनेन नः पाहि चापज्यानिःस्वनेन च ॥ २४ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி, शूलेन - சூலாயுதத்தினால், नः - எங்களை, पाहि - காப்பாற்று. अम्बिके - ஓ அன்னையே! खड्गेन - च - கத்தியினாலும், घण्ट - स्वनेन - மணியினுடைய ஒலியினாலும், चाप-ज्या-निःस्वनेन-च - வில்லின் நாணொலியினாலும், नः - எங்களை पाहि - காப்பாற்ற வேண்டும்.

(பொ - ரை) ஓ தேவி! சூலாயுதத்தால் எங்களைக் காப்பாற்றவேண்டும். ஓ அன்னையே! வாளினாலும், மணியின் நாதத்தாலும், வில்லின் நாணொலியாலும் எங்களைக் காப்பாற்றவேண்டும். (24)

प्राच्यां रक्ष प्रतीच्यां च चण्डिके रक्ष दक्षिणे ।
भ्रामणेनात्मशूलस्य उत्तरस्यां तथेश्वरी ॥ २५ ॥

(ப - ரை) ईश्वरि - ஓ ஈச்வரி ! आत्मशूलस्य - உனது சூலாயுதத்தினுடைய, भ्रामणेन - சுழல் கொண்டு, प्राच्याम् - கிழ்த்திசையை, रक्ष - ரக்ஷிக்கவேண்டும். चण्डिके - ஓ சண்டிகே ! तथा - அவ்விதமே, प्रतीच्याम् - மேல் திசையையும், दक्षिणे - தென்திசையையும், उत्तरस्यां - च - வடதிசையையும், रक्ष - காப்பாற்றவேண்டும்.

(பொ - ரை) ஓ தலைவியே ! உன்னுடைய சூலாயுதத்தினுடைய சுழற்றுதலினால் கிழ்த்திசையையும், அவ்விதமே ஓ சண்டிகே ! மேல் திசையையும், தென் திசையையும், வடதிசையையும் காப்பாற்றவேண்டும். (25)

सौम्यानि यानि रूपाणि त्रैलोक्ये विचरन्ति ते ।
यानि चात्यर्थघोराणि तै रक्षास्मांस्तथा भुवम् ॥ २६ ॥

(ப - ரை) त्रैलोक्ये - மூவுலகிலும், ते - உன்னுடைய, यानि - எவைகள், सौम्यानि - அழகியவைகளான, रूपाणि - வடிவங்களாகவும், यानि - எவைகள், अत्यर्थ-घोराणि - மிகவும் பயங்கரமானவைகளான, रूपाणि - च - வடிவங்களாகவும், विचरन्ति - ஸஞ்சாரம் செய்கின்றனவோ, तैः - அவைகளால், अस्मान् - எங்களையும், तथा - அவ்விதமே, भुवम् - உலகையும், रक्ष - காப்பாற்றவேண்டும்.

(பொ - ரை) ஓ தேவி ! மூவுலகிலும், அழகியவைகளாயும், அழகற்ற(கோரமான)வைகளாயுமுள்ள உன்னுடைய எந்த எந்த வடிவங்கள் ஸஞ்சாரம் செய்கின்றனவோ, அந்த அந்த வடிவங்களால் எங்களையும், இவ்வுலகையும் காப்பாற்றவேண்டும். (26)

सौम्यानि - ஸௌம்யாநி - ஸௌம்யங்கள் - அழகியவைகள் என்றதால் அழகிய வடிவமானது உலகை நிர்மாணம் செய்வதாகும்.

घोराणि - கோராணி - குரூரமானவைகள்-என்றதால் குரூர வடிவமானது உலகை யழிப்பதாகும். ஆகவே இங்கு ஸ்ருஷ்டி, ஸம்ஹாரம் இவைகளையும் உணர்த்தலாயிற்று என்பது ஸாரம்.

खड्गशूलगदादीनि यानि चास्त्राणि तेऽम्बिके ।
करपल्लवसङ्गीनि तैरस्मान् रक्ष सर्वतः ॥ २७ ॥

(ப - ரை) अम्बिके - ஓ அன்னையே! ते - உன்னுடைய, कर-पल्लव-सङ्गीनि-கைகளென்னும் தளிர்களோடு சேர்ந்த, यानि - எந்த, खड्ग-शूल-गदादीनि-வாள், சூலம், கதை முதலியவையும், अस्त्राणि-च - அம்புகளும், तैः - அவைகளால், सर्वतः - எல்லா இடங்களிலும், अस्मान् - எங்களை, रक्ष - காப்பாற்றவேண்டும்.

(பொ - ரை) ஓ தேவி! தளிர்போன்ற மெல்லியவையான உன்னுடைய திருக்கரங்களைச் சார்ந்து விளங்குகின்ற எந்த வாள், சூலம், கதை முதலியவைகளும், அம்புகளுமுண்டோ, அவைகளால் எங்களை எங்கும் காப்பாற்றவேண்டும். (27)

ऋषिरुवाच ॥ २८ ॥

एवं स्तुता सुरैर्दिव्यैः कुसुमैर्नन्दनोद्भवैः ।
अर्चिता जगतां धात्री तथा गन्धानुलेपनैः ॥ २९ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார் :—

(ப - ரை) एवम् - இவ்விதம், जगताम् - உலகங்களை, धात्री - தரிக்கின்றவளான தேவியானவள், सुरैः - தேவர்க

ளால், स्तुता - துதிக்கப்பட்டவளாகக் கொண்டு, दिव्यैः - மஹிமையுள்ள, नन्दनोद्भवैः - நந்தனோத்யானத்திலுண்டான, कुसुमैः - புஷ்பங்களால், तथा - அவ்விதமே, दिव्यैः - பெருமையுள்ள, गन्धानुलेपनैः - சந்தனங்களுடைய பூச்சுக்களோடும், अर्चिता - அர்ச்சனை செய்யப்பட்டாள்.

மஹர்ஷி சொன்னார். (28)

(பொ-ரை) இவ்விதம் லோகமாதாவான அன்னையாம் ஸ்ரீதேவியை, தேவர்கள் துதித்து விட்டு, நந்தன வனத்தில் புஷ்பித்த திவ்யமான பரிமளபுஷ்பங்களாலும், அவ்விதமே நறுமணம் கமழும் சந்தனக்குழம்பின் பூச்சுக்களினாலும் ஆராதனை செய்தனர். (29)

भक्त्या समस्तैस्त्रिदशैर्दिव्यैर्धूपैः सुधूपिता ।
प्राह प्रसादसुमुखी समस्तान् प्रणतान् सुरान् ॥ ३० ॥

(ப-ரை) समस्तैः - எல்லா, त्रिदशैः - தேவர்களாலும், भक्त्या - பக்தியோடுகூட, दिव्यैः - ஸ்வர்கத்திலுண்டான, धूपैः - தூபங்களினால், सुधूपितम् - நல்லவண்ணம் தூபிக்கப்பட்டவளாய்க் கொண்டு, प्रसन्नवदना - நிர்மலமான முகத்தையுடைய தேவீ, प्रणतान् - நமஸ்காரம் செய்கின்ற, समस्तान् - எல்லா, सुरान् - தேவர்களையும், प्राह - (பார்த்து) சொன்னாள்.

(பொ-ரை) எல்லா தேவர்களாலும் பக்தியோடு கூட ஸ்வர்கத்திலுண்டான நறுமணம் கமழும் தூபங்களைக்கொண்டு நல்லவண்ணம் தூபமிடப்பட்டவளும், கிருபையுடன் நிர்மலமாக விளங்கும் திருமுகத்தையுடையவளுமான தேவீ, நமஸ்காரம் செய்கின்ற தேவர்களைப் பார்த்துச் சொன்னாள். (30)

भक्त्या - பக்த்யா—பக்தியோடு கூட. பக்தி என்பது ஹ்ரு தயபூர்வமான ப்ரேமையோடு கூடிய பஜனையாகும்.

देव्युवाच ॥ ३१ ॥

त्रियतां त्रिदशाः सर्वे यदस्मत्तोऽभिवाञ्छितम् ॥ ३२ ॥

देवी - தேவியானவள் - उवाच - சொன்னுள்—

(ப - ரை) सर्वे - ஸமஸ்தமான, त्रिदशाः - ஓ தேவர் களே, अस्मत्तः - என்னிடமிருந்து, अभिवाञ्छितम् - விரும்பி யது, यत् - எதுவோ, त्रियताम् வரித்துக்கொள்ளுங்கள்.

தேவி சொன்னுள். (31)

(பொ - ரை) ஓ தேவர்களே! நீங்கள் எல்லோரும் எக்காரியத்தைச் செய்யவேண்டுமென விரும்புகிறீர்களோ அதை என்னிடமிருந்து வரித்துக் கொள்ளுங்கள், (கேட்டு வாங்கிக் கொள்ளுங்கள்) (32)

देवा ऊचुः ॥ ३३ ॥

भगवत्या कृतं सर्वं न किंचिदवशिष्यते ॥ ३४ ॥

यदयं निहतः शत्रुरस्माकं महिषासुरः ।

यदि वापि वरो देयस्त्वयास्माकं महेश्वरि ॥ ३५ ॥

संस्मृता संस्मृता त्वं नो हिंसेथाः परमापदः ।

यश्च मर्त्यः स्तवैरेभिस्त्वां स्तोष्यत्यमलानने ॥ ३६ ॥

देवा - தேவர்கள் उवाच - சொன்னுர்கள்—

(ப - ரை) यत् - எக்காரணத்தால், अस्माकम् - எங்க ளுடைய, शत्रुः - பகைவனுகிய, अयम् - இந்த, महिषासुरः -

மஹிஷாஸுரன், निहत: - நாசம் செய்யப்பட்டானே, भगवत्या- பகவதியினால், सर्वम् - ஸகலமும், कृतम् - செய்யப்பட்டது. किंचित्- கொஞ்சமும், न-अवशिष्यते - பாக்கி கிடையாது. महेश्वरि- ஓ அன்னையே! त्वया - உன்னால், अस्माकम् - எங்களுக்கு, वर: - வரமானது, यदि-वा; எப்படியாவது, देय: - अपि - கொடுக்கப் பட வேண்டுமென்றிருந்தால், त्वम् - நீ, संस्मृता - संस्मृता - நினைக்க, நினைக்க, न: - எங்களுடைய, परमापद: - பெரிய ஆபத்துக்களை, हिंसेथा: அழிப்பாயாக.

தேவர்கள் சொன்னார்கள். (33)

(பொ - ரை) ஓ அன்னையே! எங்களுடைய பகைவனாகிய மஹிஷாஸுரனை அழித்த காரணத்தால், தாங்கள் எங்களுக்குச் செய்யவேண்டியவைகளை முழுவதும் செய்து விட்டீர்கள். இனி செய்யவேண்டுவன ஒன்றும் கிடையாது. ஓ மஹேச்வரி! அப்படி எங்களுக்கு இனியும் வரம் தந்தருள உங்களுக்கு விருப்பமிருந்தால், நாங்கள் நினைக்கும்பொழுதெல்லாம் எங்களுக்கு உண்டாகும் பெரிய விபத்துக்களை இவ்விதமே அழித்து எங்களைக் காப்பாற்றவேண்டும். (34-36)

तस्य वित्तर्द्धिविभवैर्धनदारादिसंपदाम् ।
वृद्धयेऽस्मत्प्रसन्ना त्वं भवेथाः सर्वदाम्बिके ॥ ३७ ॥

(ப - ரை) अमलानने - நிர்மலமுகமுள்ள, अम्बिके - ஓ அன்னையே! य: - எந்த, मर्त्य:-च - மனிதனும், हृदि - மனதில், स्तवै: - துதிகளால், त्वाम् - உன்னை, स्तोष्यति - துதிசெய்கிறானே, अस्मत् - எங்களுக்கு, प्रसन्ना - பிரத்யக்ஷமாகியவளாக, त्वम् - நீ, तस्य - அவனுக்கு, वित्तर्धिविभवै: - ஞானம், நிறைவு,

ஐச்வர்யம் முதலியவைகளோடுகூடிய, धन-दारादि-संपदाम् - பொருள், மனைவி, மக்கள் முதலிய ஸம்பத்துக்களுடைய, वृद्धये - வளர்ச்சியின் பொருட்டு, सर्वदा - எப்பொழுதும், भवेथाः - அருள் செய்ய வெண்டும்.

(பொ - ரை) நிர்மல முகமுள்ள ஓ அன்னையே! இந்த ஸ்தோத்ரங்களைக் கொண்டு உன்னைத் துதிக்கின்ற மனிதனுக்கும்; எங்களுக்கு பிரத்யக்ஷமாகிய உனது திரு மேனியானது, ஞானம், நிறைவு, ஐச்வர்யம் இவைகளோடு பொருள், மனைவி, மக்கள் முதலிய ஸம்பத்துக்களுடைய வளர்ச்சியை எப்பொழுதும் அருள்வாயாக. (37)

ऋषिरुवाच ॥ ३८ ॥

इति प्रसादिता देवैर्जगतोऽर्थे तथात्मनः ।
तथेत्युक्त्वा भद्रकाली बभूवान्तर्हिता नृप ॥ ३९ ॥

ऋषिः - மஹர்ஷி - उवाच சொன்னார்—

(ப - ரை) हे नृप - ஓ அரசனே! इति - இவ்விதம், देवैः - தேவர்களால், जगतः - अर्थे - உலகங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு, आत्मनः - தங்களுடைய, (காரியத்திற்காகவும்) प्रसादिता - துதிக்கப்பட்ட, भद्रकाली - மங்களத்தைக் கொடுக்கின்ற காளிகாதேவி, तथा - அவ்விதமே, इति - என்று, उक्त्वा - சொல்லி, अन्तर्हिता - மறைந்தவளாக, बभूव - ஆனாள்.

மஹர்ஷி சொன்னார். (38)

(பொ - ரை) ஸுமேதஸ் என்ற மஹர்ஷி ஸுரதன் என்ற அரசனுக்குச் சொல்லுகிறார். ஓ அரசனே! இவ்விதம் தேவர்களால் மூவுலகங்களின் க்ஷேமத்திற்காகவும்,

அவ்விதமே தங்களுடைய காரியத்திற்காகவும், துதிக்கப்பட்ட மங்களத்தைச் செய்யும் பத்ரகாளீ 'அவ்விதமேயாகட்டும்' எனச்சொல்லி மறைந்தாள். (39)

इत्येतत्कथितं भूप संभूता सा यथा पुरा ।
देवी देवशरीरेभ्यो जगत्त्रयहितैषिणी ॥ ४० ॥

(ப - ரை) हे नृप - ஓ அரசனே! जगत्त्रय-हितैषिणी - மூவுலகங்களுடைய க்ஷேமத்தை விரும்புகின்ற, सा - அந்த, देवी - தேவி, देव-शरीरेभ्यः - தேவர்களுடைய, சரீரங்களிலிருந்து, यथा - எவ்விதம், पुरा - முன்பு, संभूता - உண்டானுள், इति - என்ற एतत् - இந்த, सर्वम् - எல்லா சரிதமும், कथितम् - சொல்லப்பட்டது.

(பொ - ரை) ஓ அரசனே! மூன்று உலகங்களுடைய க்ஷேமத்தை விரும்புகின்ற அன்னையாம் அந்த தேவியும், பண்டு தேவர்களுடைய சரீரங்களிலிருந்து எவ்விதம் தோன்றினுள் என்ற வரலாறுகளை யெல்லாம் இவ்விதம் என்னுல் உனக்குச் சொல்லப்பட்டது. (40)

पुनश्च गौरीदेहात्सा समुद्भूता यथाभवत् ।
वधाय दुष्टदैत्यानां तथा शुम्भनिशुम्भयोः ॥ ४१ ॥

रक्षणाय च लोकानां देवानामुपकारिणी ।
तच्छृणुष्व मयाख्यातं यथावत्कथयामि ते ॥ ४२ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
शक्रादिस्तुतिर्नाम चतुर्थोऽध्यायः ॥ ४ ॥

(ப - ரை) देवानाम् - தேவர்களுக்கு, उपकारिणी - உபகாரம் செய்கிற, सा - அந்த தேவீ, पुन: - च - மறுபடியும், दुष्ट - दैत्यानाम् - கொடிய அஸுரர்களுடையவும், तथा - அவ்விதமே, शुम्भनिशुम्भयो: - சும்ப நிசும்பர்களுடையவும், वधाय - வதத்தின் பொருட்டும், लोकानाम् - உலகங்களுடைய, रक्षणाय - च - ரக்ஷையின் பொருட்டும், यथा - எவ்விதம், गौरी-देहात् - பார்வதியினுடைய சரீரத்திலிருந்து, समुद्भूता - உண்டானவளாக, अभूत् - ஆனளோ, यथावत् - உள்ளவாறு, ते-உனக்கு, कथयामि - சொல்லுகிறேன். मया - என்னல், आख्यातम् - சொல்லப்பட்ட, तत् - அதை, शृणुष्व - கேள்.

(பொ - ரை) தேவர்களுக்கு உபகாரம் செய்கிற அந்த தேவியானவள் மறுபடியும் கொடிய அஸுரர்களையும், சும்ப நிசும்பர்களையும் அழிப்பதற்காகவும், உலகங்களுடைய க்ஷேமத்திற்காகவும், பார்வதீ தேவியினுடைய சரீரத்திலிருந்து எவ்விதம் உண்டானுள் என்ற வரலாறுகளை உள்ளவாறு உனக்குச் சொல்லுகிறேன். நீ அதையும் கேட்பாயாக. *(41-42)*

இந்த தேவீமாஹாத்ம்யத்தில் தேவர்களால் செய்யப்பட்ட மூன்று ஸ்தவங்கள் உள்ளன. ஒன்று மஹிஷாஸுரவதத்திற்குப் பிறகு இந்த அத்யாயத்திலுள்ளது. இந்த ஸ்தவத்திற்கு "மஹஷாந்தகரீ ஸூக்தம்" என்று பெயர். மற்றொன்று சும்ப நிசும்பர்களால் உண்டாகிய தொல்லை தீருவதற்குத் தேவர்களால் செய்யப்பட்டதாகும்: அது ஐந்தாவது அத்யாயத்திலுள்ளது. அதற்கு "தேவீ ஸூக்தம்" என்று பெயர். மூன்ருவது, சும்ப நிசும்பவதத்திற்குப் பிறகு தேவர்களால் செய்யப்பட்ட ஸ்தவம் பதினேராவது அத்யாயத்திலுள்ளது. இந்த ஸ்தவத்திற்கு "நாராயணீ ஸூக்தம்" என்று பெயர்.

இந்த ஸ்தோத்ரங்களின் ஒவ்வொன்றினுடைய ஆரம்பத்திலும் देवा ऊचुः - தேவா ஊசு: எனச் சேர்க்க வேண்டுமெனவும், அவ்விதமே தேவர்களுடைய இரண்டு ப்ரார்த்தனைகளுடைய ஆரம்பத்திலும் (அதாவது இந்த அத்யாயத்தில் 29வது ச்லோகத்தினுடைய பிற்பகுதியிலும், பதினோராவது அத்யாயத்தில் 36வது ச்லோகத்தினுடைய முற்பகுதியிலும்) देवा ऊचुः என ஒவ்வொரு தலைப்பும் சேர்த்திருக்கிறதாலும் இவ்விதமாக ஐந்து தடவை தேவர்களுடைய உக்திகள் (சொற்கள்) வேறு தந்திரத்தில் சொல்லப்பட்டிருக்கின்றன.

எனினும் ஸ்தவத்தினுடைய ஆரம்பத்தில் தேவர்கள் என்ற பொருளை வழக்கமாக வருவித்துச் சொல்லும் பொழுது மீண்டும் 'தேவர்கள் சொன்னார்கள்' எனச் சொல்லுவது புநருக்தி— (சொன்னதைத் திருப்பிச் சொல்லுவது) என்ற தோஷம் உண்டாவதால் ஸ்தவத்தின் ஆரம்பத்தில் மூன்று முறை சொல்லவேண்டிய அவசியம் கிடையாது என்ற அபிப்ராயத்தோடுகூட யாமள தந்திரத்தை யநுஸரித்த பாடத்தில் ப்ரார்த்தனையினுடைய ஆரம்பத்தில் மாத்திரம் இரண்டுதடவை தேவர்களுடைய உக்திகள்— சொற்கள் - ஆதரிக்கப்பட்டிருக்கின்றன.

எனவே இந்த தேவிமாஹாத்ம்யத்திலும் மஹிஷாந்தகரீ ஸூக்தம், நாராயணீ ஸூக்தம் இவை இரண்டினுடைய ஆரம்பத்தில் देवा ऊचुः—தேவா ஊசு:—எனச் சேர்க்காது 'நமோ தேவ்யை மஹாதேவ்யை' என்று ஸ்தவத்தின் ஆரம்பத்திலும் இரண்டு பிரார்த்தனைகளுடைய ஆரம்பத்திலும் (ஒன்று இந்த அத்யாயத்திலுள்ளது, மற்றொன்று பதினோராவது அத்யாயத்திலுள்ளது) देवा ऊचुः எனச் சொல்லப்பட்டிருக்கிறதென குப்தவதி உரையாசிரியர் ஸ்ரீபாஸ்கரராயர் கூறுவர்.

शुम्भः சும்பன் - என்ற சொல்லுக்கு யுத்தத்தில் ப்ரகாசிப்பவன்.

ख्यातम् - க்யாதம் - பிரஸித்தமானது. இது எவ்விதமெனில், ஸ்ரீலக்ஷ்மீ தேவீ தேவேந்திரனுக்குச் சொல்லிய வரலாறு லக்ஷ்மீ தந்த்ரத்தில் சொல்லப்பட்டிருக்கிறது. அது வருமாறு —

"अभिष्टुता सुरैः सर्वैः महिषं जघ्नुषी क्षणात् ।
महिषान्तकरीसूक्तं दृष्टं देवैर्महर्षिभिः ॥
उत्पत्तिं युद्धविक्रान्तिं स्तोत्रं चेति सुरेश्वर ।
कथयन्ति सुविस्तीर्णं ब्राह्मणा वेदपारगाः ॥
लभन्ते च फलं शश्वदाधिपत्यमनश्वरम् ।" इति ।

அதாவது அப்பெருமை வாய்ந்த நான் நொடிப்பொழுதில் மஹிஷனைக் கொல்ல விரும்பும்பொழுது தேவர்களாலும், மஹர்ஷிகளாலும் இந்த மஹிஷாந்தகரீ ஸூக்தமானது காணப்பட்டது. (சொல்லப்பட்டது) இந்த ஸ்தவத்தைக் கொண்டு எனது பிறப்பு, போரின் திறமை, புகழ் என மூன்றையும், ஓ அமராதிப! வேதங்களுடைய கரையைக் கண்ட அந்தணர்கள் மிகவும் விஸ்தாரமாகப் புகழ்கின்றனர், இவ்விதம் அவர்கள் அடிக்கடி ஸ்தவம் செய்கின்ற காரணத்தால் என்றும் அழியாது நிலைத்திருக்கிற, ஆதிபத்யம் ஸம்பத்து முதலிய பலன்களை அடைகின்றனர்.

இவ்விதம் மார்க்கண்டேயபுராணத்தில் ஸாவர்ணிகமந்வந்தரத்தில்,
தேவீமாஹாத்ம்யத்தில் இந்த்ரன் முதலிய
தேவர்களுடைய ஸ்துதியென்ற
நான்காவது அத்தியாயம்
இவண் முற்றும்

अथ पञ्चमोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

पुरा शुम्भनिशुम्भाभ्यामसुराभ्यां शचीपतेः ।
त्रैलोक्यं यज्ञभागाश्च हृता मदबलाश्रयात् ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னர்—

(ப - ரை) पुरा - முன் கல்பத்தில், शुम्भनिशुम्भाभ्याम् - சும்பன் நிசும்பன் என்ற, असुराभ्याम् - அஸுரர்களினல், मदबलाश्रयात् - கர்வத்தையும், பலத்தையும் ஆதாரமாகக் கொண்டு, शचीपतेः - இந்த்ரனுடைய, त्रैलोक्यम् - மூவுலகையும், यज्ञभागाः च - யாகத்தில் கொடுக்கப்படுகின்ற ஹவிர்பாகங்களேயும், हृताः - அபஹரிக்கப்பட்டன.
மஹர்ஷி சொன்னர்— (1)

(பொ - ரை) பண்டு முன் கல்பத்தில் கர்வத்தையும், சக்தியையும் ஆதாரமாகக் கொண்டு, சும்பன் நிசும்பன் என்ற அஸுரர்கள் இருவரும், தேவந்த்ரனுடைய மூவுலகத்தினுடைய அதிகாரத்தையும், யாகங்களிலே அவனுக்குச் சேரவேண்டிய ஹவிர்பாகங்களேயும் அபஹரித்துக் கொண்டனர். (2)

यथावत् कथयामि ते - யதாவத் கதயாமி தே—உள்ளபடி உனக்குச் சொல்லுகிறேன் என்று நான்காவது அத்யாயத்தினுடைய முடிவிலே சொல்லப்பட்ட இதிஹாஸத்தை இந்த அத்யாயத்தில் விஸ்தாரமாகச் சொல்லப்படுகிறது.

"மற்றும் கொடியவர்களான சும்பநிசும்பர்களை நாசம் செய்வதற்கு நான் கௌரியினுடைய தேஹத்திலிருந்து கௌசிகீ என்ற திருநாமத்தோடு உண்டாகப் போகிறேன். அச்சமயம் என்னுடைய சக்திகளும், தேவதைகளுடைய சரீரங்களிலிருந்து அவரவர்களுடைய வடிவங்களோடு எனக்கு உதவியாகப் பல சக்திகளும் தோன்றுவர். நான் அவர்களோடு அனேக அஸுரர்களையும், சும்ப நிசும்பர்களையும் அழித்து உங்களுடைய பயத்தை யகற்றுவேன்" என்றவாறு இந்த உத்தமசரிதத்தில்,

नमो देव्यादिकं देवीसूक्तं सर्वफलप्रदम् ।
नारायणीस्तुतिर्नाम सूक्तं परमशोभनम् ॥

"நமோ தேவ்யை" என்பதை முதலில் கொண்டதும் ஸமஸ்த பலனைக் கொடுக்க வல்லதுமான **தேவீஸூக்தமும்**, பெருகிய மங்களகரமான **நாராயணீ** ஸூக்தம் என்ற பெயரோடு கூடியதாயுமுள்ள இரண்டு ஸூக்தங்கள் உண்டு. இவைகளில் முதலாவது **'நமோ தேவ்யாதிகம்'** ஸூக்தம் ப்ரஹ்மன் முதலிய தேவர்களாலும், **'நாராயணீ'** ஸூக்தம் அக்நி முதலிய தேவர்களாலும் முறையே காணப்பட்டதாகும். இந்த ஸ்தோத்திரங்களைக் கொண்டு தேவியை ஸ்துதித்து வந்தால் ஸகல ஸம்பத்துக்கள் நிறைந்த ஐச்வர்யங்களும், நினைத்த காரியங்களும் ஸித்திபெறுகின்றன. இந்த ஸ்தோத்திரங்களைச்செய்து **ஸமாதி** என்ற வைச்யனும், **ஸுரதன்** என்ற அரசனும் எல்லா மங்களங்களையும் அடைந்தனரன்றோ!

शुम्भः निशुम्भः - சும்ப: நிசும்ப: —சும்பன், நிசும்பன் என்ற பதங்களுக்கு யுத்தத்தில் வெகு திறமையுடன் பிரகாசிப்பவர்கள் என்பது பொருள். இவர்கள் இருவரும் கச்யபன், தநு என்பவர்களுடைய புத்திரர்கள். இவ்வரலாறு வாயு புராணத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

मदम् - *மதம்* —*கர்வம் தனக்கு உசிதமில்லாததை அபஹரிக்கும் ஸ்வபாவம்.* அது कुलं - (பிறப்பு) वित्तं - (தனம்) श्रुतं - (கல்வி) रूपं - (அழகு) शौर्यं - (வலிமை அல்லது பலம்) दानं - (ஈகை -

கொடுத்தல்) तपः - (தவம்) என ஏழு வகையாகும். இந்த மத மென்னும் குணமானது மனிதனை மோஹத்தில் முழுகச்செய்து பல துன்பங்களையும் அனுபவிக்க ஹேதுவாயிருப்பதாகும். பிறப் பால் மதம் என்பது பாட்டன் ச்ரோத்திரியன் - பேரன் குடி யன் - இவ்விடத்தில் குலம் என்ன செய்யமுடியும், தனத்தாலுண் டாவது, ஒருவன் தனிகன் அதன் காரணமாக செய்யத்தகாத தைச் செய்து தீய வழியில் அவனுடைய பணம் விரயமாகிறது. கல்வி: இது மிகுதியான படிப்பின் காரணமாகவோ, அறிவின் காரணமாகவோ உண்டாவது. இதை நாம் அனுபவத்தில் காண லாம். ஆழ்ந்த அறிவும், கல்வியும் உள்ளவனுக்கு எல்லோரிடத் திலும் அடக்கம், அன்பு பணிவு இவை இருந்துவந்தாலொழிய அவனுடைய கல்வி ஒன்றுக்கும் உதவாது. அழகு: இதைக் கண்டு கர்வம்கொள்ளாதவர் ஒரு சிலரே, சௌர்யம்-பலம் இதனால் அழிந்தவர் அநேகர். தானம், தானத்தினால் கர்வங்கொண்டு அழிந்தவர்களுடைய வரலாறுகளை புராணங்களிலும்காணலாம். தவம், இதனால் கர்வம் கொண்டு அவதிப்பட்டவர்களையும் சரித்திரங்களில் காணலாம். எனவே இத்தகைய ஏழுவித மதங் களுடைய விஸ்தாரமானதும், சுவையுள்ளதுமான வரலாறு களை ஆசார்யக்ஷேமேந்த்ரன் என்ற மஹாகவி இயற்றியுள்ள दर्पदलनम् - தர்பதளனம் [கொழுப்பு - கர்வம் - அஹங்காரம் - இவைகளை பிளத்தல் - அதாவது அகற்றல் அழித்தல் என்பது] என்ற நூலில் பரக்கக் காணலாம்.

तावेव सूर्यतां तद्वदधिकारं तथैन्दवम् ।
कौबेरमथ याम्यं च चक्राते वरुणस्य च ॥ ३ ॥

(ப - ரை) तौ - एव - அவர்களே, सूर्यताम् - ஸூர்ய னுடைய தன்மையையும், तद्वत् - அவ்விதமே, ऐन्दवम्-சந்த்ர ஸம்பந்தமான அதிகாரத்தையும், तथा - அப்படியே, कौबेरम्-

குபேரஸம்பந்தமானதையும், अथ - பிறகு, याम्यं-च - கால தேவனுடைய ஸம்பந்தமானதையும், वरुणस्य-च - வருணனுடைய ஸம்பந்தமானதையும், चक्राते - செலுத்தினர்.

(பொ - ரை) அந்த சும்ப நிசும்பர்களே ஸூர்யன், சந்த்ரன், குபேரன், காலதேவன், வருணன் இவர்களுடைய அதிகாரங்களனைத்தையும் நடத்தி வந்தனர். (3)

सूर्यताम् - ஸூர்யதாம் —ஸூர்யனுடைய தன்மை-வடிவம். அவனுடைய தர்மம். அதாவது காலம் முதலிய பரிச்சேத (பிரிக்கப்பட்ட) வடிவமான தர்மம் முதலியன. ஸூர்யதா-ஸர்வலோகங்களையும் இயங்கச் செய்பவன் எனவும் பொருள் கொள்ளலாம்.

तावेव पवनर्द्धिं च चक्रतुर्वह्निकर्म च ।
ततो देवा विनिर्धूता भ्रष्टराज्याः पराजिताः ॥ ४ ॥

(ப - ரை) तौ - एव - அவர்களே, पवनर्धिं-च - வாயுவினுடைய அதிகாரத்தையும், वह्निकर्म-च-அக்னிதேவனுடைய தொழிலையும், चक्रतुः - செய்தனர். ततः - பிறகு, देवाः-தேவர்கள், पराजिताः - தோல்வியடைந்தனர்; भ्रष्टराज्याः - இழக்கப்பட்ட ராஜ்யத்தையுடையவராயினர்; विनिर्धूताः - திரஸ்கரிக்கப்பட்டனர்.

(பொ - ரை) அந்த சும்ப நிசும்பர்களே வாயுவினுடைய அதிகாரத்தையும், அக்னிதேவனுடைய தொழிலையும் நடத்திவந்ததோடு, தேவர்களும் தோல்வியடைந்து ராஜ்யத்தையுமிழந்து அவமான மடைந்தனர். (4)

இந்த ச்லோகத்தில் வாயு, அக்னி இவ்விருவர்களையும் சொன்னது கொண்டு மற்ற திக்பாலகர்கள் அறுவரையும் கொள்ள

வேண்டும். எனினும், அஸுரர்களும், ராக்ஷஸர்களும் ஒரே இனத்தவராதலின் இவ்விடத்தில் நிர்ருதியினுடைய அதிகாரத்தையும், அவ்விதமே வரதானத்தின் காரணமாக ஈசானனுடைய அதிகாரத்தையும் இவர்கள் இருவரும் அபஹரிக்கவில்லை என்பர் குப்தவதீ உரையாசிரியர்.

हृताधिकारास्त्रिदशास्ताभ्यां सर्वे निराकृताः ।
महासुराभ्यां तां देवीं संस्मरन्त्यपराजिताम् ॥ ५ ॥

(ப - ரை) ताभ्याम् - அந்த, महासुराभ्याम् - இரண்டு பெரிய அஸுரர்களினுலும், हृताधिकाराः - அபஹரிக்கப்பட்ட அதிகாரங்களையுடையவர்களும், निराकृताः - ஒதுக்கப்பட்டவர்களுமான, सर्वे - ஸமஸ்த, त्रिदशाः - தேவர்களும், अपराजिताम् - எவராலும் ஜயிக்கமுடியாத, ताम् - அந்த, देवीम् - தேவியை, संस्मरन्ति (स्म) - நன்கு நினைத்தனர்.

(பொ - ரை) அந்த மஹாஸுரர்கள் இருவராலும் அதிகாரங்கள் அனைத்தும் கவரப்பட்டு, ஒதுக்கப்பட்ட தேவர்களனைவரும் ஒருவராலும் ஜயிக்கமுடியாத அந்த தேவியை நன்கு நினைக்கத்தொடங்கினர். (5)

त्रिदशाः —த்ரிதசா: —என்றது முப்பத்து மூன்று தேவர்களையும் குறிக்கும். त्रिदश —த்ரிதச —என்றதை மூன்று முறை ஆவ்ருத்தி செய்தால் 30 என்ற எண் கிடைக்கும். ஆதித்யர்கள் பன்னிருவர், ருத்ரர்கள் பதினொருவர், வஸுக்கள் எண்மர், அச்விநீ தேவர்கள் இருவர். ஆக முப்பத்து மூன்று தேவர்கள்.

तयास्माकं वरो दत्तो यथापत्सु स्मृताखिलाः ।
भवतां नाशयिष्यामि तत्क्षणात्परमापदः ॥ ६ ॥

इति कृत्वा मतिं देवा हिमवन्तं नगेश्वरम्।
जग्मुस्तत्र ततो देवीं विष्णुमायां प्रतुष्टुवुः ॥ ७ ॥

(ப - ரை) आपत्सु - ஆபத்துக்களில், स्मृता - நினைக்கப் பட்டால், तत् क्षणात् - அதேஸமயத்தில், भवताम् - உங்களு டைய, अखिला: - ஸமஸ்தமான, परमापद: - கொடிய ஆபத்துக் களையும், नाशयिष्यामि - நாசம் செய்யப்போகிறேன், यथा - என்று, तया - அந்த தேவியினால், अस्माकम् - நமக்கு, वर: - வரமானது, दत्त: - கொடுக்கப்பட்டது, इति - என்ற मतिम्-புத்தியை, देवा: - தேவர்கள், कृत्वा - செய்து, नगेश्वरम् - பர்வதசிரேஷ்டனாகிய, हिमवन्तम्-ஹிமவானை, जग्मु:-அடைந் தனர். तत: - பிறகு, तत्र - அவ்விடத்தில், विष्णुमाया-விஷ்ணு மாயையாகிய, देवीम् - தேவியை, प्रतुष्टुवु: - பெரிதும் போற் றினர்.

(பொ - ரை) 'ஆபத்துக்களில் என்னை ஸ்மரித்தால் அந்த க்ஷணத்திலேயே உங்களுடைய கொடிய ஆபத்துக் களை யெல்லாம் நான் நாசம் செய்வேன்' என்று அந்த தேவீ நமக்கு வரம் கொடுத்திருக்கிறாள் என்பதைத் தேவர்கள் நன்குணர்ந்து கொண்டு பர்வத சிரேஷ்டனா கிய மலையரசனை அடைந்து, விஷ்ணுமாயையாம் மஹா தேவியை பக்தியோடுகூட போற்றிப்புகழ்ந்தனர். (6, 7)

பார்வதீ தேவீ ஹிமவத் பர்வதத்தில் அவதரித்த காரணத் தால் தேவர்களும் ஹிமவானையடைந்தனர். அவ்விடத்தில் சும்ப நிசும்பர்களை நாசம் செய்பவள் மஹாஸரஸ்வதியாயினும், ஸரஸ் வதீ தேவியைக் காட்டிலும் வேறுபடாதவள் விஷ்ணு மாயா தேவியாதலால் இவ்விடத்தில் விஷ்ணு மாயையைத் துதித்தனர் எனச் சொல்லப்பட்டது.

प्रतुष्टुवुः —ப்ரதுஷ்டுவு: —என்ற இடத்தில் प्र —ப்ர —என்ற உபஸர்கம் சிரத்தை பக்தி இவைகளின் மிகுதியையும் குறிக்கும். यथा —யதா —என்ற சப்தமானது इति —இதி —என்ற பொருளில் வழங்கியிருப்பதாகும்.

देवा ऊचुः ॥ ८ ॥

नमो देव्यै महादेव्यै शिवायै सततं नमः ।
नमः प्रकृत्यै भद्रायै नियताः प्रणताः स्म ताम् ॥ ९ ॥

देवाः - தேவர்கள், ऊचुः - சொன்னார்கள்—

(ப - ரை) देव्यै - தேவியின் பொருட்டு, नमः - நமஸ்காரம், महा-देव्यै - மஹாதேவனுடைய மனைவியாயும், शिवायै - மங்களங்களுக்குக் காரணமாயுமிருக்கிறவளுக்கும், सततम् - எப்பொழுதும், नमः - (தேவிக்கு) நமஸ்காரம். प्रकृत्यै - ப்ரகிருதியாயும், भद्रायै - கல்யாண வடிவாயிருப்பவளுக்கும், नमः - நமஸ்காரம். ताम् - மிக ப்ரஸித்திவாய்ந்தவளான அந்த அன்னையை, नियताः - உறுதியுடன், प्रणताः स्मः - நமஸ்காரம் செய்கிறோம்.

தேவர்கள் சொன்னார்கள்— (8)

(பொ - ரை) மிகவும் பிரகாசவடிவினளும், மஹாதேவனுடைய மனைவியும், ஸமஸ்த மங்களங்களுக்குக் காரணமாக இருப்பவளுக்கும் எப்பொழுதும் நமஸ்காரம். ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடைய ஸாம்யாவஸ்தையின் வடிவாயிருந்துகொண்டு உலகத்தோற்றத்திற்குக் காரணமாயும், ஸமஸ்த கல்யாணகுணங்களுக்கு இருப்பிடமாயு மிருக்கிறவளுக்கு நமஸ்காரம். இவ்விதச் சிறப்பு வாய்ந்த அன்னையாம் உன்னை நாங்கள் உறுதியுடன் நமஸ்காரம் செய்கிறோம். (9)

नमो देव्यै - நமோ தேவ்யை—என்பது அதர்வ ஸிரஸில்உள்ள ஒரு மந்திரமாகும்.

இவ்விடத்தில் प्रकृति - ப்ரக்ருதி —மூலப்ரக்ருதி என்றுவது, மூலமந்த்ரத்தின் வடிவமென்றுவது, அல்லது ப்ரத்யயத்தின் முன்னேயுள்ள ப்ரக்ருதி எனவும் கொள்ளலாம். இதற்கு ப்ரமாணம்,

प्रकृतिः पार्वती साक्षात्प्रत्ययस्तु महेश्वरः ।
अर्धनारीश्वरः शब्दः कामधुग्वः प्रसीदतु ॥

"ஸாக்ஷாத் பார்வதியே ப்ரக்ருதி. மஹேச்வரனே ப்ரத்யயம். ஸமஸ்த காமனைகளையும் (விருப்பங்கள்) கொடுக்கவல்ல இந்த அர்தநாரீச்வர: என்ற சப்தமானது உங்களுக்கு நன்மை பயப்பதாக" என்பது பொருள். எனவே ப்ரக்ருதியின் வடிவம் சப்த ப்ரஹ்மம் எனவும் கிடைப்பதாகும்.

नियताः - நியதா: —பொறிகளையடக்கி ப்ரஹ்மசர்யத்துடன் விளங்குபவர்கள்.

रौद्रायै नमो नित्यायै गौर्यै धात्र्यै नमो नमः ।
ज्योत्स्नायै चेन्दुरूपिण्यै सुखायै सततं नमः ॥ १० ॥

(ப - ரை) रौद्रायै - ருத்ரனைப்போல் குரூர வடிவமாயிருப்பவளுக்கு, नमः - நமஸ்காரம். नित्यायै - அழிவற்றவளுக்கும், धात्र्यै-உலகைப் போஷிப்பவளுக்கும், गौर्यै-பார்வதி வடிவாயுள்ளவளுக்கும், नमः, नमः - நமஸ்காரம், நமஸ்காரம். ज्योत्स्नायै - சந்திரிகை வடிவமாகவும், इन्दुरूपिण्यै - சந்த்ர வடிவமாவும், सुखायै-च-பரமானந்த வடிவமாக இருப்பவளுக்கும், सततम् - எப்பொழுதும், नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) ருத்ரனைப்போல குரூரமான வடிவத்தோடு கூடியவளும், மூன்று காலத்திலும் அழிவற்று நித்

யையாயிருப்பவளும், உலகைப் போஷணை செய்பவளுக்கும், பார்வதியாயிருப்பவளுக்கும் அநேகம் நமஸ்காரம். சந்திரிகை வடிவாயும், சந்த்ரன் வடிவாயும், பரமானந்த வடிவாயுமிருக்கிறவளுக்கு எப்பொழுதும் நமஸ்காரம். (10)

रौद्रा - ரௌத்ரா —நவரஸங்களில் ஒன்றுன ரௌத்ர ரஸவடிவாயிருப்பவள்.

धात्री - தாத்ரீ —உபமாதா.

सुखा - ஸுகா —ஸுகவடிவாயிருப்பவள் அல்லது அழகிய பொறிகளுடன் விளங்குபவள்.

नित्या - நித்யா —முக்காலத்திலும் அழிவற்று நிலைத்திருப்பவள். அதாவது —भूत-भविष्यत्-वर्तमान-பூத-பவிஷ்யத்-வர்தமான - இறந்தகாலம், வருங்காலம், நிகழ்காலம் இவைகளின் வடிவாய் இருப்பவள் என்பதாகும்.

कल्याण्यै प्रणतावृद्ध्यै सिद्ध्यै कूर्म्यै नमो नमः ।
नैर्ऋत्यै भूभृतां लक्ष्म्यै शर्वाण्यै ते नमो नमः ॥ ११ ॥

(ப - ரை) कल्याण्यै - கல்யாணவடிவாயிருப்பவளும், प्रणतावृद्ध्यै - நமஸ்காரம் செய்கின்றவர்களுக்கு குறைவற்ற நிறைவைக் கொடுப்பவளும், सिद्ध्यै - அணிமாமுதலிய ஸித்திகளின் வடிவாயிருப்பவளும், कूर्म्यै-பூமியின் பளுவைச் சுமப்பதற்காக கூர்மசக்தியின் வடிவைத்தாங்கியவளுமான (உனக்கு) नमः, नमः - நமஸ்காரம், நமஸ்காரம். नैर्ऋत्यै - அஸுரசக்தியின் வடிவாயிருப்பவளும், भूभृतां - लक्ष्म्यै - ராஜலக்ஷ்மியாயிருப்பவளும், शर्वाण्यै - சிவனுடைய பத்தினியாயுமுள்ள, ते-உனக்கு, नमः-நமஸ்காரம், नमः-நமஸ்காரம்.

(பொ - ரை) மக்களுக்கு மங்களங்களைக் கொடுக்கின்றவளும், நமஸ்காரம் செய்கின்றவர்களுக்கு குறைவற்ற நிறைவைக்கொடுப்பவளும், அணிமா முதலிய எட்டுவித ஸித்திகளின் வடிவாயுள்ளவளும், பூபாரத்தைச் சுமப்பதற்காக கூர்மாவதாரம் தாங்கிய மஹாவிஷ்ணுவின் சக்தியாயிருப்பவளுமான உனக்கு நமஸ்காரம் நமஸ்காரம், மற்றும் அஸுர சக்தியின் வடிவாயுள்ளவளும், ராஜலக்ஷ்மியாயும், பரமசிவனுடைய பத்நியாயும் இருக்கிற உனக்கு நமஸ்காரம்; நமஸ்காரம். (11)

எட்டுவித ஸித்திகள் :—

அணிமா, மஹிமா, கரிமா, லகிமா, ப்ராப்தி:, ப்ராகாம்யம், ஈசித்வம். வசித்வம் என்பன.

कल्याण्यै - கல்யாண்யை - மங்களவடிவினள்.

प्रणतौ - ऋद्ध्यै - ப்ரணதௌ - ருத்யை - என இரண்டு பதங்கள் - அதாவது நமஸ்காரம் செய்கிறவர்களிடத்தில் நிறைவின் (பரிபூர்ணம்) வடிவாயிருப்பவள்.

कूर्म्यै - கூர்ம்யை - கூர்மாவதாரம் செய்த மஹாவிஷ்ணுவினுடைய மஹிஷியாவள். அல்லது कु: - கு: - என்றால் பூமியாகும். ऊर्मि: - ஊர்மி:-என்றால் அலை-எனவே பூமியின் வடிவாகவும், அலையின் வடிவாகவும் இருப்பவள் என்பது பொருள்.
नैर्ऋत्यै - நைர்ருத்யை - நிர்ருதி ஸம்பந்தமான-அஸுர சக்தியின் அல்லது அலக்ஷ்மீ வடிவங்கொண்டவள்.

शर्वाणि - சர்வாணீ - சிவசக்தியின் வடிவம் கொண்டவள்.

दुर्गायै दुर्गपारायै सारायै सर्वकारिण्यै ।
ख्यात्यै तथैव कृष्णायै धूम्रायै सततं नमः ॥ १२ ॥

(ப - ரை) दुर्गायै - துக்கத்தோடு அடையப்பட்டவர்களுக்கு யோக்யமானவளும், दुर्गपारायै - ஸம்ஸாரத்திலிருந்து கரையேற்றுபவளும், सारायै - பலத்தின் வடிவாயிருப்பவளும், सर्वकारिण्यै - ஸமஸ்த வஸ்துக்களையும் உண்டுபண்ணுகிறவளும், ख्यात्यै - கீர்த்தியின் வடிவாயிருப்பவளும், तथा - एव - அவ்விதமே, कृष्णायै - கறுப்பு வர்ணமாயிருப்பவளும், धूम्रायै - தூம்ரவர்ணமாயிருப்பவளுமான உனக்கு, सततम् - எப்பொழுதும், नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) மிகவும் கிலேசத்தோடு அறியப்படுகிறவளும், உபாஸகர்களை ஸம்ஸாரக்கடலிலிருந்து கரை சேர்ப்பதில் கண்ணும் கருத்துமாயிருப்பவளும், பலத்தின் வடிவாயிருப்பவளும், கீர்த்தியின் வடிவாயிருப்பவளும், அவ்விதமே கறுப்பு வர்ணமாயிருப்பவளும், புகையின் (செங்கருப்பு) வர்ணமாயிருப்பவளுமான உனக்கு எப்பொழுதும் நமஸ்காரம். (12)

दुर्गा - துர்கா - மிகவும் சிரமப்பட்டு அறியப்படுகிறவள். தேவியை அறிவதற்கு மிகவும் க்லேசமான வ்ரதாதிகளையநுஷ்டித்தாலன்றி அறியமுடியாது என்பது பொருள்.

सर्वकारिणी - ஸர்வகாரிணீ—ஸகல ஜீவராசிகளையும் படைப்பதில் ஸ்வதந்த்ர முள்ளவள்.

ख्यात्यै -க்யாத்யை—ப்ருக்ருதி புருஷர்களுடைய பேதஞான வடிவாயிருப்பவள்.

कृष्णा - க்ருஷ்ணு —க்ருஷ்ணசக்திவடிவம் கொண்டவள்.

अतिसौम्यातिरौद्रायै नतास्तस्यै नमो नमः ।
नमो जगत्प्रतिष्ठायै देव्यै कृत्यै नमो नमः ॥ १३ ॥

(ப - ரை) अति-सौम्या-अति-रौद्रायै - மிகவும் அழகியவை களையும் மிகவும் கொடியவைகளையும் கடந்து இருக் கின்ற தேவியின் பொருட்டு, नताः - நமஸ்காரங்கள். तस्यै - அச்சிறப்பு வாய்ந்த விஷ்ணுமாயா வடிவினளுக்கு; नमः नमः - நமஸ்காரம், நமஸ்காரம் - जगत्प्रतिष्ठायै - சித்சக்தியின் வடிவத்தோடு உலகை நிலைக்கச் செய்பவளுக்கு, नमः - நமஸ்காரம் - देव्यै-தேவசக்தியின் வடிவாயிருப்பவளுக்கும், कृत्यै-செய்கையின் வடிவாய்த்திகழ்பவளுக்கும்; नमः - नमः - நமஸ்காரம் - நமஸ்காரம்.

(பொ - ரை) அழகியவைகளையும், அழகற்றவைகளை யும் கடந்து நிற்கும் அந்த விஷ்ணுமாயையாம் அன் னைக்கு எங்கள் நமஸ்காரம், சித் சக்தியின் வடிவாய்த்தி கழ்ந்து கொண்டு உலகை நிலைக்கச் செய்து கொண்டிருக் கிற தேவசக்தியாயும், செயலின் வடிவாகவும் இருப்பவ ளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம். (13)

अति-सौम्या - அதிஸௌம்யா —என்றதால் வித்தையின் வடி வாயிருந்துகொண்டு ஸம்ஸாரதாபத்தை நாசம் செய்பவள். அல்லது அழகிய ஸோமதேவதையின் (சந்த்ர) வடிவத்தோடு கூடியவள் எனவும் கொள்ளலாம்.

अति-रौद्रा - அதிரௌத்ரா —அவித்தையின் வடிவாயிருந்து கொண்டு ஸம்ஸாரதாபத்தை வளரச் செய்பவள். அல்லது ருத்ர தேவதையின் ஸம்பந்தமான ரௌத்ரீ சக்தியின் வடிவாயிருப்ப வள் எனவும் கொள்ளலாம்.

தேவியானவள் உபாஸகர்களுக்கு அழகிய வடிவத்தோடும், பக்தியற்றவர்களுக்கு மிகவும் கொடிய வடிவத்துடனும் காணப் படுகின்றவள் என்பது தாத்பர்யம். नमः नमः नमः - நம: நம: நம:

—என்றது. இச்சை, ஞானம், கிரியை என்ற மூன்று சக்தி களின் வடிவாய்த்திகழும் அன்னைக்கு மூன்று நமஸ்காரங்கள் எனச் சொல்லப்பட்டதாகும்.

जगत्प्रतिष्ठा - ஜகத்ப்ரதிஷ்டா — ஜீவராசிகளுக்கு ஆதார சக்தியா யிருப்பவள். அல்லது ஜீவராசிகளுடைய பிராணனை (உயிர்நிலையை) தரித்துக்கொண்டிருக்கும் மூலாதார பத்மம், அதற்கு இருப்பிடமாயிருப்பவள். அல்லது உலகம் நிலைக்க உபாதான காரணமாயிருப்பவள் எனவும் பொருளாகும்.

कृत्यै - க்ருத்யை —உலகத் தோற்றங்களுடைய ஆக்கல், அழித்தல், நிலைத்தல் என்ற முத்தொழிலைச் செய்வதில் முயற்சி யுடன் விளங்குபவள்.

या देवी सर्वभूतेषु विष्णुमायेति शब्दिता ।
नमस्तस्यै (१४) नमस्तस्यै (१५) नमस्तस्यै नमो नमः ॥१६॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், विष्णुमाया - விஷ்ணு மாயா, इति - என்று, शब्दिता - சொல்லப்படுகிறுளோ, तस्यै- அந்த தேவியின் பொருட்டு, नमः नमः नमः - நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவன் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், ஆகமங்களில் சொல்லப்பெற்ற விஷ்ணுமாயா என்ற வடிவத்தோடு இருக்கிறுளோ, அந்த தேவியின் பொருட்டு நமஸ்காரம், அந்த தேவியின் பொருட்டு நமஸ்காரம். அந்த தேவியின் பொருட்டு நமஸ் காரம். (16)

विष्णुमाया - விஷ்ணுமாயா —என்றது மழையைப் பொழி வது, தான்யங்களை உண்டுபண்ணுவது முதலிய பல காரியங்களை

விஷ்ணுமாயை என்ற சக்தியே செய்பவள் என வராஹபுராணம் சொல்லும். காளிகாபுராணத்திலும்,

अव्यक्तं व्यक्तरूपेण रज:सत्त्वतमोगुणैः ।
विभज्य यार्थं कुरुते विष्णुमायेति सोच्यते ॥

"எவள் ரஜஸ் ஸத்வ குணங்களினுல் அவ்யக்தமாயிருப்பதை வ்யக்தவடிவத்தோடு காரியங்களைப் பிரித்து இயங்கச்செய்கிருளோ அவளே விஷ்ணுமாயை எனச் சொல்லப்படுகிருள்" எனச் சுருக்கமாகச் சொல்லியிருக்கிறது.

இவ்விடத்தில் लक्ष्मीरूपेण - லக்ஷ்மீரூபேண —என்றதற்குப் பிறகு த்ருதிரூபேண என்றும், துஷ்டிரூபேண என்றதற்குப் பிறகு புஷ்டிரூபேண என்றும் இரண்டு மந்த்ரங்கள் வேறு தந்த்ரங்களில் காணப்படுகின்றன.

சிலர் கீர்த்தி, ப்ரஜ்ஞா, மேதா, ச்ருதி, ஸ்பூர்த்தி, முதலிய அனேக மந்த்ரங்களையும் சேர்த்துப் பாராயணம் செய்கின்றனர். இவை தந்த்ர ஸம்மதமல்லவையாதலால் பாராயணம் செய்வது கூடாது.

எனவே விஷ்ணுமாயா, சேதநா, புத்தி, நித்ரா, க்ஷுதா, சாயா, சக்தி, த்ருஷ்ணா, க்ஷாந்தி, ஜாதி, லஜ்ஜா, சாந்தி, ச்ரத்தா, காந்தி, லக்ஷ்மீ, வ்ருத்தி, ஸ்ம்ருதி, தயா, துஷ்டி, மாதா, ப்ராந்தி என்ற இவைகளே (21) மந்த்ரங்களாகும்.

மற்றும் இவ்விடத்தில் விஷ்ணுமாயா ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண வடிவாயிருப்பதுகொண்டு तस्यै - தஸ்யை — என்ற பதமும், नमः-நம: —என்ற பதமும் மூன்று மூன்று சேர்க்கப்பட்டிருக்கிறது. மேலும் காயிகம், வாசிகம், மாநஸிகம் என மூன்றைக்கொண்டு நமஸ்காரமும் மூன்றுதடவை சொல்லப்பட்டதாகக் கொள்ளலாம். அல்லது,

"प्रसादने संभ्रमेऽपि द्विस्त्रिरुक्तं न दुष्यति"

"மட்டற்ற மகிழ்ச்சியின் காரணத்தினுலோ, தாங்கமுடியாத பரபரப்பின் காரணத்தினுலோ, இரண்டு மூன்று தடவை ஒன்றையே திருப்பிச் சொல்லுதல் தோஷமாகாது'' என்ற நியாயத்தை அநுஸரித்தும், ப்ரதக்ஷிணம், நமஸ்காரம் முதலியவை மூன்று எண்ணிக்கைகளுக்கு குறையாமல் இருக்கவேண்டும் என்ற விதியையும் அநுஸரித்தும், இவ்விடத்தில் பக்தி, சிரத்தை இவைகளுடைய பெருமிதத்தின் காரணமான எழுச்சியால் மூன்று முறை சொன்னுர்கள் என்பதும் ஸாரமாகும்.

या देवी सर्वभूतेषु चेतनेत्यभिधीयते ।
नमस्तस्यै (१७) नमस्तस्यै (१८) नमस्तस्यै नमो नमः ॥१९॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु- ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், चेतना - ஜீவநாடி, इति - என்று, अभिधीयते - சொல்லப்படுகிருளோ, तस्यै, - அந்த சக்திக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிலும் சைதன்ய-அதாவது ஜீவநாடியாக விளங்குபவள் என்று சொல்லப்படுகிருளோ, அவளுக்கு நமஸ்காரம்.

இவ்விடத்தில் चेतना - சேதநா —என்ற பதமானது புத்தி என்னும் பொருளிலே கோசங்களில் காணப்படினும் இவ்விடம் இது புனருக்தியாகாது. சேதநா என்ற சப்தம் அந்த:கரணத்தினுடைய வியாபாரம். அல்லது நிர்விகல்பஞான வடிவான சித்சக்தியாகும். புத்தி - ஸவிகல்பக ஞானமாகும்.

या देवी सर्वभूतेषु बुद्धिरूपेण संस्थिता ।
नमस्तस्यै (२०) नमस्तस्यै (२१) नमस्तस्यै नमो नमः ॥२२॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु- ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், बुद्धिरूपेण - அந்த:கரண

வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அந்த சக்தியின் பொருட்டு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் புத்தியின் வடிவாக அதாவது அந்தஃகரண வடிவத்தோடு நன்கு நிலைத்திருக்கிறாளோ, அவளுக்கு நமஸ்காரம். (22)

या देवी सर्वभूतेषु निद्रारूपेण संस्थिता ।
नमस्तस्यै (२३) नमस्तस्यै (२४) नमस्तस्यै नमो नमः ॥२५॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், निद्रा-रूपेण - நித்ரையின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அந்த சக்திக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் நித்ரையின் வடிவாக நன்கு நிலைத்திருக்கிறாளோ அவளுக்கு நமஸ்காரம். (25)

निद्रा-நித்ரா—இது புறத்தேயுள்ள பொறிகள் அடங்கியிருப்பதற்கு அநுகூலமான ஒரு விகாரம், மாறுதல் அல்லது ஸுஷுப்தி அல்லது ஸ்வப்நாவஸ்தை அல்லது இந்த்ரியங்கள், மனஸ் இவைகளுடைய லயம் - ஒன்றல் என்பதும் ஆம்.

या देवी सर्वभूतेषु क्षुधारूपेण संस्थिता ।
नमस्तस्यै (२६) नमस्तस्यै (२७) नमस्तस्यै नमो नमः ॥२८॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், क्षुधा-रूपेण-பசியின் வடிவத்

தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் பசியின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (28)

क्षुधा - க்ஷுதா —பசி. இது புசிக்கவேண்டுமென்ற அவாவையுண்டுபண்ணுகிற ஜாடராக்நியினுடைய விகாரம்—மாறுதல். அல்லது ப்ருதிவீ ஸம்பந்தமான தாதுவினுடைய தளர்ச்சி எனவும் ஆம். பசியில்லாது பிராணிகள் ஸுகமாயிருக்கமுடியாது என்பது உலக வழக்கு.

या देवी सर्वभूतेषु छायारूपेण संस्थिता ।
नमस्तस्यै (२९) नमस्तस्यै (३०) नमस्तस्यै नमो नमः ॥३१॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், छाया-रूपेण - நிழலின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் நிழலின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ, அவளுக்கு நமஸ்காரம். (31)

छाया - சாயா —நிழல் ஒவ்வொரு வஸ்துவிலிருந்தும் உண்டாகின்ற ப்ரதிவஸ்து—அதே போன்ற உருவத்தின் தன்மை.

या देवी सर्वभूतेषु शक्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै (३२) नमस्तस्यै (३३) नमस्तस्यै नमो नमः ॥३४॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु-ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், शक्ति-रूपेण - சக்தியின் வடி

வத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் சக்தியின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்வளோ அவளுக்கு நமஸ்காரம். (34)

शक्ति - சக்தி —திறமை - ஸாமர்த்யம் அல்லது உத்ஸாஹம் எழுச்சி, அல்லது அர்தநாரீ வடிவான சக்தியாகும். அல்லது வஸ்துவினுடைய தர்மம் என்றுவது காரியத்தை யுண்டுபண்ணக் கூடிய திறமை என்றுவது கொள்ளலாம்.

या देवी सर्वभूतेषु तृष्णारूपेण संस्थिता ।
नमस्तस्यै (३५) नमस्तस्यै (३६) नमस्तस्यै नमो नमः ॥३७॥

(ப - ரை) या - எந்த देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், तृष्णा - रूपेण - லோபத்தின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै- அவளுக்கு नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் லோபத்தின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (37)

तृष्णा - த்ருஷ்ணு —லோபம் - அதாவது தன்னுடையது அல்லாத வஸ்துக்களை விரும்புவது அல்லது போகத்திலுள்ள விருப்பம் எனவும் ஆம்.

या देवी सर्वभूतेषु क्षान्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै (३८) नमस्तस्यै (३९) नमस्तस्यै नमो नमः ॥४०॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्व-भूतेषु- ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், क्षान्ति-रूपेण-பொறுமையின்

வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் பொறையின் வடிவாக நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (40)

क्षान्ति - க்ஷாந்தி—பொறை - அதாவது தனக்குப் பிறரால் செய்யப்பட்ட அபசாரத்திற்குத் (தீங்கு-குற்றம்) தனக்குத் திறமையிருந்தாலும் அதைப்பொருட்படுத்தாது பதில் அபகாரம் செய்யாதிருத்தல்.

या देवी सर्वभूतेषु जातिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(४१)नमस्तस्यै(४२)नमस्तस्यै नमो नमः ॥ ४३॥

(ப - ரை) या - எந்த, देवी-தேவியானவள், सर्वभूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், जाति-रूपेण - ஜாதியின் வடிவத்தோடு संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும் ஜாதியின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (43)

जातिः - ஜாதி:—அனேகங்களை ஒன்றுகச் சொல்லுவது.

या देवी सर्वभूतेषु लज्जारूपेण संस्थिता ।
नमस्तस्यै(४४)नमस्तस्यै(४५)नमस्तस्यै नमो नमः ॥ ४६ ॥

(ப - ரை) या - எந்த, देवी-தேவியானவன் सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், लज्जा-रूपेण-லஜ்ஜையின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும், லஜ்ஜையின் வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (46)

लज्जा - லஜ்ஜா—இது ஒரு சிறந்த ஆத்ம குணம் - செய்யத்தகாத காரியங்களில் பிறரிடமிருந்தோ, தன்னிடமிருந்தோ உண்டாகும் ஸங்கோசம்.

या देवी सर्वभूतेषु शान्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(४७)नमस्तस्यै(४८)नमस्तस्यै नमो नमः ॥ ४९ ॥

(ப - ரை) या - எந்த, देवी-தேவியானவள், सर्वभूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், शान्तिरूपेण - சாந்தியின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै- அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் சாந்தியின் வடிவங்கொண்டு நன்கு நிலைத்திருப்பவளோ, அவளுக்கு நமஸ்காரம். (49)

शान्तिः - சாந்தி:—காமம், க்ரோதம், லோபம், மோஹம், மதம், மாத்ஸர்யம் என்ற ஆறுவகையான அரிஷட்வர்க்கங்களை ஜயித்திருக்கிற மனோநிலையாகும்.

या देवी सर्वभूतेषु श्रद्धारूपेण संस्थिता ।
नमस्तस्यै(५०)नमस्तस्यै(५१)नमस्तस्यै नमो नमः ॥ ५२ ॥

(ப - ரை) या - எந்த, देवी - தேவியானவள், सर्वभूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், श्रद्धारूपेण - சிரத்தையின் வடிவாக, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் ச்ரத்தையின் வடிவாக நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (52)

श्रद्धा - சிரத்தா — இது வேதங்களிலே சொல்லப்பட்ட கர்மங்களை வழுவாது செய்து வருவதில் உண்டாகும் பற்று. ஆஸ்திக்யபுத்தி எனவும் ஆம்.

या देवी सर्वभूतेषु कान्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(५३)नमस्तस्यै(५४)नमस्तस्यै नमो नमः ॥ ५५ ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्वभूतेषु - ஸகல ஜீவராசிகளிடத்திலும், कान्ति-रूपेण - காந்தியின் வடிவாக संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் காந்தியின் வடிவாக நிலைத்துத் திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம். (55)

कान्तिः - காந்தி - சோபை—இது இந்திரிய நிக்ரஹத்தால் (பொறிகளை அடக்கி ஆளுவதால்) சரீரத்தில் ஏற்படுகின்ற ஒருவித தேஜஸினுடைய சக்தியாகும்.

या देवी सर्वभूतेषु लक्ष्मीरूपेण संस्थिता ।
नमस्तस्यै(५६)नमस्तस्यै(५७)नमस्तस्यै नमो नमः ॥ ५८ ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், लक्ष्मी-रूपेण - லக்ஷ்மியின் வடிவாக संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) எந்த தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் லக்ஷ்மியின் (நிறைவு) வடிவாக நிலைத்துத் திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம். (58)

लक्ष्मी - லக்ஷ்மீ - ஐச்வர்யம்—அல்லது சரீரசோபை.

या देवी सर्वभूतेषु वृत्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(५९)नमस्तस्यै(६०)नमस्तस्यै नमो नमः ॥ ६१ ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्वभूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், वृत्ति-रूपेण - ஜீவனோபாயத்தின் வடிவாக, संस्थिता - நன்கு நிலைத்திருக்கிறாளோ, तस्यै - அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் விருத்தியின் (ஜீவனோபாயத்தின்) வடிவாக நிலைத்துத்திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம்.

वृत्तिः - வ்ருத்தி :— ஜீவனோபாயம்.

या देवी सर्वभूतेषु स्मृतिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(६२)नमस्तस्यै(६३)नमस्तस्यै नमो नमः ॥ ६४ ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸகல ஜீவராசிகளிடத்திலும், स्मृति-रूपेण - நினைவின் வடிவத்தோடு संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு , नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் ஸ்ம்ருதியின் (நினைவின்) வடிவத்தோடு நிலைத்துத் திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம்.(64)

स्मृतिः - ஸ்ம்ருதி: — அனுபவித்த காரியத்தைக் குறித்து காலாந்தரத்தில் நினைத்தல்.

या देवी सर्वभूतेषु दयारूपेण संस्थिता ।
नमस्तस्यै(६५)नमस्तस्यै(६६)नमस्तस्यै नमो नमः ॥ ६७ ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், दया-रूपेण - தயையின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै- அவளுக்கு, नमः - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸமஸ்த ஜீவராசிகளிடத்திலும், தயையின் (ஜீவகாருண்யத்தின்) வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (67)

दया - தயா — தயை. இது எல்லா பிராணிகளிடத்திலும் கருணையுடன்-அன்புடன்-இருத்தல்.

या देवी सर्वभूतेषु तुष्टिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(६८)नमस्तस्यै(६९)नमस्तस्यै नमो नमः ॥ ७० ॥

(ப - ரை) या - யாதொரு, देवी - தேவியானவள், सर्व-भूतेषु - ஸகல ஜீவராசிகளிடத்திலும், तुष्टि-रूपेण-ஸந்தோஷத்தின் வடிவத்தோடு, संस्थिता - நன்கு நிலைத்திருப்பவளோ, तस्यै - அவளுக்கு, नम - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும், துஷ்டியின் (ஸந்தோஷத்தின்) வடிவத்தோடு நன்கு நிலைத்திருப்பவளோ அவளுக்கு நமஸ்காரம். (70)

तुष्टिः - துஷ்டி — ஸந்தோஷம். இது ஒரு சிறந்த ஆத்மகுணமாகும். ஒரு வஸ்துவிலும் ஆதரமில்லாதிருத்தல். ஆதுரம்-ஆவா. அல்லது கிடைத்தைக் கொண்டு திருப்தியடைவதும் ஆம்.

या देवी सर्वभूतेषु मातृरूपेण संस्थिता ।
नमस्तस्यै(७१)नमस्तस्यै(७२)नमस्तस्यै नमो नमः ॥ ७३ ॥

(ப - ரை) **या** - யாதொரு, **देवी** - தேவியானவள், **सर्व-भूतेषु** - ஸகல ஜீவராசிகளிடத்திலும், **मातृ-रूपेण** - அன்னையின் வடிவத்தோடு, **संस्थिता** - நன்கு நிலைத்திருப்பவளோ, **तस्यै** - அவளுக்கு, **नमः** - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் **மாத்ரு** (அன்னையின்,) வடிவத்தோடு நிலைத்துத் திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம். (73)

माता - மாதா — சரீரத்தில் ஒலி வடிவாயிலங்கும் அக்ஷரங்களுடைய அபிமானியாகிய தேவதை. அல்லது ஜநநீ-அன்னை அல்லது ப்ராஹ்மீ முதலிய மாத்ருகாகணங்களாவர்.

या देवी सर्वभूतेषु भ्रान्तिरूपेण संस्थिता ।
नमस्तस्यै(७४)नमस्तस्यै(७५)नमस्तस्यै नमो नमः ॥ ७६ ॥

(ப - ரை) **या** - யாதொரு, **देवी** - தேவியானவள், **सर्व-भूतेषु** - ஸகல ஜீவராசிகளிடத்திலும், **भ्रान्ति-रूपेण** - மயக்கத்தின் வடிவத்தோடு, **संस्थिता**-நன்கு நிலைத்திருப்பவளோ, **तस्यै** - அவளுக்கு, **नमः** - நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஸகல ஜீவராசிகளிடத்திலும் மயக்கத்தின் வடிவாக நிலைத்துத்திகழ்கின்றனளோ அவளுக்கு நமஸ்காரம். (76)

भ्रान्ति - ப்ராந்தி — மயக்கம்–இது வஸ்துவல்லாததில் அந்த வஸ்துவினுடைய தர்மத்தைத்தோற்றுவிக்கும் புத்தியின் தன்மையாகும். இதற்கு உதாஹரணம். பழுதையைப்பார்த்து பாம்பு என நினைத்தல்.

மயக்கம்—இல்லாத வஸ்துவில் இருப்பதென்ற புத்தி. கிளிஞ்சலைப் பார்த்ததும் வெள்ளியின் தோற்றம் உண்டாவது போலவும், பழுதையைப்பார்த்து பாம்பு என்பது போலவும் ஆம்.

इन्द्रियाणामधिष्ठात्री भूतानां चाखिलेषु या ।
भूतेषु सततं तस्यै व्याप्त्यै देव्यै नमो नमः ॥ ७७ ॥

(ப - ரை) **या** - யாதொரு சக்தியானவள், **अखिलेषु** - ஸமஸ்தமான, **भूतेषु** - பிராணிகளிடத்திலும், **इन्द्रियाणाम्** - பொறிகளுக்கும், மனத்திற்கும், **भूतानाम्** - ஐம்பெரும் பூதங்களுக்கும், **अधिष्ठात्री** - அதிஷ்டான தேவதையாகவும், **व्याप्त्यै**- வியாபிகையாகவுமிருக்கிருளோ, **तस्यै** - அந்த, **देव्यै** - தேவியின்பொருட்டு, **सततम्** - எப்பொழுதும், **नमः नमः** - நமஸ்காரம், நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு சக்தியானவள், ஸகல பிராணிகளிடத்திலும், கர்மேந்திரியங்களுக்கும், ஞானேந்திரியங்களுக்கும், மனத்திற்கும், ஐம்பெரும் பூதங்களுக்கும், ப்ரவ்ருத்தி, இவைகளுக்குக் காரணமாயும், வியாபிகையாயுமிருக்கிருளோ, அந்த தேவிக்கு எப்பொழுதும் நமஸ்காரம், நமஸ்காரம். (77)

அதாவது எந்த தேவியானவள் ஸகல பிராணிகளுடைய அந்தர் பாகத்திலே—உள்ளே-ஞான வடிவாயிருந்துகொண்டு ஞானேந்திரியங்களையும் ஞான விஷயங்களையும், ஸ்தூலமாகவும், ஸூக்ஷ்மமாகவும் இருக்கின்ற இந்திரியங்களையும் இயக்கச் செய்கின்ருளோ அந்த தேவிக்கு நமஸ்காரம் என்பது ஸாரம்.

चितिरूपेण या कृत्स्नमेतद्व्याप्य स्थिता जगत् ।
नमस्तस्यै(७८)नमस्तस्यै(७९)नमस्तस्यै नमो नमः ॥ ८० ॥

(ப - ரை) **या**-யாதொரு, (**देवी**-தேவியானவள்,) **चिति-रूपेण** - ஜீவசைதன்ய வடிவத்தோடு, **एतत्** - இந்த, **कृत्स्नम्** -

முழுவதுமான, जगत्-உலகை, व्याप्य-வியாபித்துக்கொண்டு, स्थिता - (நிலையாக) இருக்கிறாளோ, तस्यै - அந்த தேவிக்கு, नमः नमः नमः - நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம்.

(பொ - ரை) யாதொரு தேவியானவள் ஜீவச்சைதன்ய வடிவத்தோடு இந்த உலகமனைத்தும் வியாபித்துக் கொண்டு நிலைத்திருக்கிறாளோ, அவளுக்கு நமஸ்காரம், நமஸ்காரம், நமஸ்காரம். (80)

चिती - சிதி—நிர்விஷயக்ஸம்வித்ஞானம் அல்லது ப்ரக்ருதி. ப்ரத்யேக(தனிப்பட்ட)சைதன்யம். அல்லது ஜீவபாவம். அல்லது சித்சக்தியும் ஆம்.

स्तुता सुरैः पूर्वमभीष्टसंश्रया-
तथा सुरेन्द्रेण दिनेषु सेविता ।
करोतु सा नः शुभहेतुरीश्वरी
शुभानि भद्राण्यभिहन्तु चापदः ॥ ८१ ॥

या सांप्रतं चोद्धतदैत्यतापितै-
रस्माभिरीशा च सुरैर्नमस्यते ।
या च स्मृता तत्क्षणमेव हन्ति नः
सर्वापदो भक्तिविनम्रमूर्तिभिः ॥ ८२ ॥

(ப - ரை) पूर्वम् - முன்பு, सुरैः - தேவர்களால், स्तुता - துதிக்கப்பெற்றவளும், तथा - அவ்விதமே, सुरेन्द्रेण - தேவேந்திரனால், अभीष्ट-संश्रयात्-இஷ்டஸித்தியின் பொருட்டு, दिनेषु - ஒவ்வொரு தினமும்; सेविता - ஸேவிக்கப் பட்டவளு மான், ईशा - தலைவியாகிய, या - யாதொரு தேவியானவள், सांप्रतं - च - இப்பொழுதும், उद्धत-दैत्य-तापितैः - அஹங்காரம்

கொண்ட அஸுரர்களினுல் துன்புறுத்தப்பட்ட, **सुरैः** - தேவர்களாகிய, **अस्माभिः** - எங்களால், **नमस्यते** - நமஸ்காரம் செய்யப்பட்டாளோ, **या-च** - யாதொரு தேவியும், **भक्ति-विनम्र-मूर्तिभिः** - பக்தியின் நிமித்தம் விசேஷமாக நமஸ்காரம் செய்யப்பட்ட சரீரங்களோடு கூடிய (எங்களால்) **स्मृता**-நினைக்கப்பட்டாளோ, **तत्-क्षणम्-एव**-நினைத்த அந்த ஸமயத்திலேயே, **नः**-எங்களுடைய, **सर्वापदः-च**-எல்லா ஆபத்துக்களையும், **हन्ति**-நாசம் செய்தாளோ, **शुभ - हेतुः**-கல்யாண பரம்பரைகளுக்குக் காரணமாயுள்ள, **सा** - அந்த, **ईश्वरी** - அன்னையானவள், **नः**-எங்களுக்கு, **शुभानि** - மங்களங்களையும், **भद्राणि** - ஸுகங்களையும், **करोतु** - செய்யட்டும். **आपदः-च** - ஆபத்துக்களையும், **अभिहन्तु** - அழியச் செய்யட்டும்.

(பொ - ரை) பண்டு ப்ரஹ்மா முதலிய தேவர்களால் துதிக்கப்பட்டவளாயும், அவ்விதமே தேவேந்த்ரனுல் தனது இஷ்டகாரிய ஸித்தியின் பொருட்டு, ஒவ்வொரு நாளும் ஸேவிக்கப்பட்டவளாயும் ; இப்பொழுதும் தலைவியாயிருந்து கொண்டு அஹங்காரம் கொண்ட அஸுரர்களினுல் துன்புறுத்தப்பட்ட தேவர்களாகிய எங்களால் நமஸ்காரம் செய்யப்பட்டவளும், பக்தியின் காரணமாக மிகவும் கொண்டாடப்பட்ட சரீரங்களோடு கூடிய எங்களால் நினைக்கப்பட்ட அளவிலே எங்களுடைய ஸகலவிதமான ஆபத்துக்களையும் நாசம் செய்கிறவளாயு மிருக்கிற, ஸகல கல்யாணகுணங்களுக்கும் காரணமான அந்த அன்னையாம் பராசக்தி எங்களுக்கு மங்களங்களையும், ஸுகங்களையும் செய்யட்டும். ஆபத்துக்களையும் அழியச் செய்யட்டும். (82)

பண்டு - முன்பு மஹிஷாஸுரனை வதம் செய்த ஸமயம்.

தேவேந்த்ரன் ஸ்ரீதேவியை ஸேவித்து இஷ்டஸித்திகளை யடைந்த வரலாறு லக்ஷ்மீ தந்த்ரத்தில் காணப்படுகிறது.

ऋषिरुवाच ॥ ८३ ॥

एवं स्तवादियुक्तानां देवानां तत्र पार्वती ।
स्नातुमभ्याययौ तोये जाह्नव्या नृपनन्दन ॥ ८४ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்.—

(ப - ரை) नृपनन्दन - ஓ ஸுரதனே! पार्वती - பார்வதீ தேவீ, तत्र - அந்த ஹிமாலயத்தில், एवम् - இவ்விதம், स्तवाभियुक्तानाम् - துதிகளுடன் கூடிய, देवानाम् - தேவர்களுடைய, (எதிரில்) जाह्नव्याः - கங்கையினுடைய, तोये - ஜலத்தில், स्नातुम् - ஸ்நாநம் செய்வதற்கு, अभ्यायौ - வந்தாள்.

மஹர்ஷி சொன்னார்— (83)

(பொ - ரை) ஓ ஸுரதனே! பார்வதீ தேவியும் அந்த ஹிமாலயத்தில் இவ்விதம் துதி செய்கின்ற தேவர்களுடைய முன்னிலையில் கங்கையில் நீராடுவதற்கு வந்தாள். (84)

साब्रवीत्तान् सुरान् सुभ्रूर्भवद्भिः स्तूयतेऽत्र का ।
शरीरकोशतश्चास्याः समुद्भूताब्रवीच्छिवा ॥ ८५ ॥

(ப - ரை) सा - அந்த, सुभ्रूः - அழகிய புருவங்களுடைய பார்வதிதேவி, तान् - அந்த, सुरान् - தேவர்களை, अत्र - இவ்விடத்தில், भवद्भिः - உங்களால், का - எவள், स्तूयते - துதிக்கப்படுகிறாள் (इति - என்று) अब्रवीत् - வினவினாள். अस्याः - இந்த பார்வதிதேவியினுடைய, शरीर-कोशतः - சரீர கோசத்தினின்றும், समुद्भूता - உண்டான, शिवा - சிவா என்ற தேவீ, अब्रवीत्-च - கேட்கவும் செய்தாள்.

(பொ - ரை) வளைந்த புருவங்களுடன் வனப்புடன் விளங்கும் அந்த பார்வதீதேவியும், இவ்விதம் துதிக்கின்ற தேவர்களைப்பார்த்து இங்கு ஹிமாலயத்தில் யாரைத் துதிக்கின்றீர்கள், எனக் கேட்டாள். பார்வதீ தேவியினுடைய சரீர கோசத்திலிருந்து உண்டான கௌசிகி என்ற தேவியும் பதில் சொன்னாள். (85)

பண்டு பரமசிவன் பார்வதியைப் பார்த்து விளையாட்டாகக் காளி என அழைத்தார். அச்சமயம் தேவியும் கருப்புவர்ணமாக மாறினாள்.........அப்பொழுது தேவீ கேட்டாள் : நான் காளியாயிருப்பதாலன்றோ நீர் என்னைக் காளீ என அழைத்தீர், எனினும் உமது அந்த வார்த்தை வீணாக வேண்டாம். எனது சரீரம் வெண்மை நிறமாய் இல்லாததாலன்றோ என்னிடம் தங்களுக்கு அருவருப்பு உண்டாகியது எனச் சினந்து கொண்டாள்.

பரமசிவனும் பலவாறு தேவியைத் தேற்றிய பிறகு தேவியும் தன்னுடைய கருமைநிறத்தோடுகூடிய கோசத்தைக் (உடல்) களைவதற்குப் பரமசிவனுடைய அநுமதியோடுகூட கௌதமாச்ரமத்திற்குச் சென்று தவம் செய்தாள். அத்தவத்தின் பயனாக, 'ஸர்பமானது எவ்விதம் சட்டையைக் கழற்றுமோ, அவ்விதம் தனது கருமை நிறமான கோசத்தைக் கழற்றினாள்.

அச்சமயம் தேவீ கௌர (வெண்மை) நிறமான சரீரத்தோடு கூடத் தோன்றினாள். அக்காரணத்தால் 'கௌரீ' எனவும் பிரஸித்தமாகி பரமசிவனிடம் திரும்பிவந்தாள். இவ்விதம் பார்வதியினால் விடப்பட்ட அந்த கோசத்திலிருந்து (உடல்) தோன்றிய சக்தியானது மிகவும் அழகிய கருப்பு வர்ணத்தோடு கூடிய ஒரு கன்னிகையாக காக்ஷியளித்தாள். அக்கன்னிகையும் பார்வதியோடுகூடவே ஸஞ்சரித்துக் கொண்டிருந்தாள். அக் கௌசிகை என்ற கன்னிகையே இப்பொழுது தேவர்களுக்கு உத்தரம் (பதில்) சொன்னாள்.

இவ்வாறு சிவபுராணத்தில் வாயுஸம்ஹிதையிலும் இவ்விதமே வர்ணிக்கப்பட்டுள்ளது.

'சும்பன் நிசும்பன் என்று அஸுர ஸகோதரர் இருவர் இருந்தனர். அவர்களிருவரும் தவத்தின் பெருமையினுல் பரமேஷ்டியான பிரஹ்மாவினிடமிருந்து, "இவ்வுலகிலுள்ள புருஷர்களால் எங்களுக்கு அழிவு உண்டாகக் கூடாது. அயோநிஜையாயும், ஒரு பெண்ணினுடைய அவயவத்திலிருந்து உண்டானவளாயுமிருக்கிற ஒரு கன்னிகையாயும், அக்கன்னிகை புருஷஸம்ஸர்கம் இல்லாதவளாயும், மிகவும் பராக்ரமசாலியாகவும் இருக்க வேண்டும். இத்தகைய கன்னிகையை நாங்கள் விரும்பி எங்களுடைய பராக்ரமத்தால் அவளேயணுகி யுத்தம் செய்து அவளே ஜயித்து சிறைபிடிக்கவேண்டும் அல்லது அவளால் நாங்கள் மரணத்தையடையவேண்டும்" எனக்கேட்டனர். இதைக் கேட்ட நான்முகனும் அவ்விதமேயாகட்டும் எனச் சொல்லி மறைந்தார்.

மேலும் அதே வாயுஸம்ஹிதையில் வேறொரு இடத்தில் "சிவன் பார்வதியைப் பார்த்து கௌசிகீ என்பவள் யார்? எனக் கேட்டதற்கு, பார்வதீ உத்தரம் சொல்லும் வகையிலே ஓ ஸ்வாமி! என்னுல் ஸ்ருஷ்டிக்கப்பட்ட இக்கௌசிகையை நீர் அறியவில்லேயா? அப்படியானுல் கேளும்;மேலும் அக்கௌசிகையைப்போல உலகில் இதுவரையில் ஒருவள் உண்டாகவில்லே, இனியும் உண்டாகப்போவதில்லே. அவளுடைய வீர்யம், பராக்ரமம், இருப்பிடம்; அவ்விதமே யுத்தத்தில் சும்பநிசும்பர்களுடைய வதத்தின் காரணமாயேற்பட்ட பெருமை, பக்தர்களுக்கு விரும்பிய வரன்களேக் கொடுப்பது, தேவர்களுடைய ரக்ஷணே முதலிய பலவாருன அவளுடைய அதிசயங்களே ப்ரஹ்மன் அறிந்திருக்கிருர்" எனச் சொல்லப்பட்டிருக்கிறது.

स्तोत्रं ममैतत्क्रियते शुम्भदैत्यनिराकृतैः ।
देवैः समेतैः समरे निशुम्भेन पराजितैः ॥ ८६ ॥

(ப - ரை) **समरे** - யுத்தத்தில், **निशुम्भेन** - நிசும்பனுல், **पराजितैः** - தோல்வியடைந்தவர்களும், **शुम्भ - दैत्य - निराकृतैः** - சும்பன் என்ற அஸுரனுல் நிராகரிக்கப்பட்டவர்களுமான, **समेतैः** - எல்லா, **देवैः**-தேவர்களாலும், **मे**-என்னுடைய, **एतत्** - இந்த, **स्तोत्रम्** · துதியானது, **क्रियते** - செய்யப்படுகிறது.

(பொ - ரை) யுத்தத்தில் நிசும்பனுல் தோல்வியடைந்தவர்களும், சும்பனுல் நிராகரிக்கப்பட்டவர்களுமான ஸகல தேவர்களாலும் என்னுடைய இந்த ஸ்தோத்ரமானது செய்யப்படுகிறது. (86)

शुम्भ-दैत्य-निराकृतैः-சும்பதைத்யநிராகிருதை:—சும்பாஸுரன் ஸ்வர்கத்தினின்றும் தேவர்களைத் துரத்தியடித்தான் என்பது கருத்து.

शरीरकोशाद्यत्तस्याः पार्वत्या निःसृताम्बिका ।
कौशिकीति समस्तेषु ततो लोकेषु गीयते ॥ ८७ ॥

(ப - ரை) **यत्**-யாதொரு காரணத்தால், **तस्याः**-அந்த, **पार्वत्याः** - பார்வதி தேவியினுடைய, **शरीरकोशात्** - சரீரத்தினின்றும், **अम्बिका** - தேவியானவள், **निःसृता** - வெளியே வந்தாளோ, **ततः**-அக்காரணம் கொண்டு, **समस्तेषु** - ஸகல, **लोकेषु** - உலகங்களிலும், **कौशिकी - इति** - கௌசிகீ என்று, **गीयते**- சொல்லப்படுகிருள்.

(பொ - ரை) யாதொரு காரணத்தால் அந்த பார்வதீ தேவியினுடைய சரீரத்திலிருந்து ஸ்ரீதேவீ வெளிவந்தாளோ, அக்காரணம் கொண்டு எல்லா உலகங்களிலும் அந்த தேவியை கௌசிகீ என்று சொல்லப்படுகிறது. (87)

तस्यां विनिर्गतायां तु कृष्णाभूत्सापि पार्वती ।
कालिकेति समाख्याता हिमाचलकृताश्रया ॥ ८८ ॥

(ப - ரை) तस्याम् - அவள், विनिर्गतायां-तु - வெளிப்பட்டதும், सा - அந்த, पार्वती - अपि - பார்வதீ தேவியும், कृष्णा - கருப்பு வர்ணமுள்ள, कालिका - इति - காளிகை என்று, समाख्याता - பெயருடன் சொல்லப்பட்டவளாகவும், हिमाचल-कृताश्रया - ஹிமாலயத்தை (தனக்கு) இருப்பிடமாகக் கொண்டவளாகவும், अभूत् - ஆனாள்.

(பொ - ரை) அந்த கௌசிகீதேவீ வெளிப்பட்டதும் பார்வதீ தேவியும் கருப்பு வர்ணமாக ஆனாள். அக்காரணம் கொண்டு காளிகாதேவீ என்ற பெயரோடுகூட, ஹிமாலயத்தைத் தனது இருப்பிடமாகச்செய்து கொண்டாள். (88)

तस्यां विनिर्गतायां - தஸ்யாம் விநிர்கதாயாம்—தஸ்யாம்—அந்த பார்வதீ தேவியினிடமிருந்து யாதொரு கௌசிகீ என்பவள் உண்டானாளோ, அப்பொழுதே பார்வதீ தேவியும் க்ருஷ்ண (கருப்பு) வர்ணத்தோடு கூடிய காளிகா என்ற பெயருடன் எல்லா தேவர்களாலும் ப்ரார்த்தனை செய்யப்பட்ட ஸ்தலமான ஹிமவத்பர்வதத்தில் வஸித்து வந்தாள். அவள் அவ்விடத்திலிருந்து கங்கைக்கு நீராடச்செல்லவில்லை. ஏனெனில் தேவர்கள துதிக்கும் பொழுது அந்த ஸ்துதிகளை அங்கிகரித்த அக் கௌசிகீ தேவி அவர்களை அலக்ஷ்யம் செய்து வேறு இடத்திற்குச் சென்றாள் என்பது பொருத்தமில்லை. எனவே பார்வதியே தனது அவயவத்திலிருந்து உண்டான கௌசிகையை அங்கே இருக்கச் செய்து கங்கைக்கு நீராடச் சென்றாள் என்பது தான் இங்கு பொருத்தமாகும். இதையே வாயு ஸம்ஹிதையும் வலியுறுத்தும்.

"तत्कोशं सहसोत्सृज्य गौरी सा समजायत ।
तत्कोशादात्मनोत्सृष्टात्कौशिकीनाम नामतः ।
काली कालाम्बुदप्रख्या कन्यका समपद्यत ।"

"அக்கோசத்தை உடனே விட்டு அந்த தேவீ கௌரியாக ஆயினள். தன்னால் விடப்பட்ட அக்கோசத்திலிருந்து கௌசிகீ என்ற பெயரோடுகூட நீருண்ட மேகத்தின் காந்திக்கு நிகரான காளீ என்ற பெயரால் ஒரு கன்னிகை உண்டானாள்" என்பதாகும்.

மேலும் तस्यां विनिर्गतायां என்ற பாடத்தில் கௌரீ ஸ்நானம் செய்துவிட்டுப் பிறகு கயிலைக்குச் சென்றபொழுது பார்வதியே கருப்பு வர்ணமான காளிகை என்ற பெயருடன் ஹிமவத்பர்வதத்தில் வஸித்தாள் என்பது பொருளாகும் என குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

ततोऽम्बिकां परं रूपं बिभ्राणां सुमनोहरम् ।
ददर्श चण्डो मुण्डश्च भृत्यौ शुम्भनिशुम्भयोः ॥ ८९ ॥

(ப - ரை) ततः - பிறகு, शुम्भनिशुम्भयोः - சும்ப நிசும்பர்களுடைய, भृत्यौ - வேலைக்காரர்களாகிய, चण्डः - சண்டனும், मुण्डः-च - முண்டனும், परम् - மேன்மையானதும், सु-मनोहरम् - நன்கு மனதைக் கவரக்கூடியதுமான, रूपम् - வடிவத்தை, बिभ्राणाम् - தரித்தவளான, अम्बिकाम् - பார்வதியை, ददर्श - பார்த்தனர்.

(பொ - ரை) பிறகு சும்பநிசும்பர்களுடைய வேலைக்காரர்களான சண்டனும், முண்டனும், மேன்மையானதும், கண்டோர் மனதைக் கவருவதுமான லாவண்யத்தோடு விளங்குவதுமான உருவத்தைத் தாங்கிய காளிகா என்ற பெயரோடு கூடிய பார்வதியைப் பார்த்தனர். (89)

இவ்விடத்தில் பரம் ரூபம் என்றது கௌசிகீ என்ற பெயருடன் கூடிய வடிவமாகும். அல்லது மேன்மையும் நிகரற்று விளங்குவதுமான வடிவம், என்றுவது ; ஸ்தூலம், ஸூக்ஷ்மம், பரம்

என்ற தேவதையினுடைய மூன்று வடிவங்களில் மூன்ருவது வடிவமான **ப்ரம்** என்ருவது கொள்ளலாம்.

ताभ्यां शुम्भाय चाख्याता सातीव सुमनोहरा ।
काप्यास्ते स्त्री महाराज भासयन्ती हिमाचलम् ॥ ९० ॥

(ப - ரை) महाराज - ஓ அரசனே! हिमाचलम् - ஹிமாலயத்தை, भासयन्ती - விளங்கச் செய்கின்ற, का, अपि - எவளோ ஒரு, स्त्री - பெண்ணனவள், आस्ते - வஸித்துக்கொண்டிருக்கிருள். अतीव - மிகவும், सा - அவள், सु-मनोहरा - மனதைக்கவரும் அழகியாவள். ताभ्यां च - அவ்விருவராலும், शुम्भाय - சும்பனிடம், आख्यातम् - (இவ்விதம்) சொல்லப்பட்டது.

(பொ - ரை) ஓ அரசனே! ஹிமாலயத்தின் தாழ்வரையை விளங்கச்செய்து கொண்டிருக்கின்ற அழகிய பெண்ணொருத்தியைக் கண்டோம். அவள் மிகவும் கண்டோர் மனதைக் கவரும் அழகு வாய்ந்தவள், என்று அந்த காளிகாதேவியைக் குறித்துச் சும்பநிசும்பர்களிடம் அவனுடைய வேலைக்காரர்கள் இருவரும் அறிவித்தனர். (90)

नैव तादृक् क्वचिद्रूपं दृष्टं केनचिदुत्तमम् ।
ज्ञायतां काप्यसौ देवी गृह्यतां चासुरेश्वर ॥ ९१ ॥

(ப - ரை) असुरेश्वर - அஸுரர்களிற் சிறந்தவனே! क्वचित् - ஒரு இடத்திலும், केनचित् - எவராலும், तादृक् - அவ்விதப் பெருமை வாய்ந்த, उत्तमम् - நிகரற்ற, रूपम् - வடிவத்தை, न-एव-दृष्टम्-கண்டதுமில்லை, असौ - இவள். का-अपि - ஒரு, देवी - தேவஸ்த்ரீ (என்று) ज्ञायताम् - அறியுங்கள், गृह्यतां- கொள்ளவும் செய்யுங்கள்.

(பொ - ரை) அஸுரர்களிற் சிறந்த ஓ அரசனே ! இப் பூவுலகில் எங்கும் எவராலும் அவ்வளவு சிறந்த நிகரற்ற லாவண்யத்துடன் விளங்கும் வடிவை இதுவரை கண்டிருக்க முடியாது. அவள் ஒரு தேவஸ்த்ரீ என நீங்கள் அறிய வேண்டும். அவளை நீங்கள் கொண்டுவரவும் வேண்டும். (91)

स्त्रीरत्नमतिचार्वङ्गी द्योतयन्ती दिशस्त्विषा ।
सा तु तिष्ठति दैत्येन्द्र तां भवान् द्रष्टुमर्हति ॥ ९२ ॥

(ப - ரை) दैत्येन्द्र - ஓ அஸுரசிரேஷ்டனே! सा-तु- அவளோவெனில், स्त्रीरत्नम्-பெண்களுக்குள் சிறந்த ரத்னம் போன்றவள். अतिचार्वङ्गी - மிகவும் அழகிய அவயவங்களை யுடையவள், त्विषा - தனது சோபையினால், दिशः - திக்குகளை, द्योतयन्ती - விளங்கச் செய்துகொண்டு, तिष्ठति - இருக்கிறாள். भवान् - நீ, ताम् - அவளை, द्रष्टुम् - பார்ப்பதற்கு, अर्हति - தகுதியுள்ளவன்.

(பொ - ரை) ஓ அஸுரச்ரேஷ்ட ! அவள் அங்க (சரீர) காந்திகளினால் பத்துத் திக்குகளையும் பரவி ப்ரகாசித்துக் கொண்டு மிகவும் மனோஹரமாயிருக்கிற ஸ்த்ரீ என்று சொன்னால் மாத்திரம் போதாது, அவள் ஸ்ருஷ்டியிலுள்ள பெண்களிற் சிறந்த வநிதாரத்னம் எனச் சொல்லுவதும் மிகையாகாது, எனவே அவ்வுத்தம வநிதா ரத்னம் அங்கு இருப்பதைப்போய்ப்பார்த்து தாங்கள் அவசியம் கண்டு களிக்க வேண்டும். (92)

यानि रत्नानि मणयो गजाश्वादीनि वै प्रभो ।
त्रैलोक्ये तु समस्तानि सांप्रतं भान्ति ते गृहे ॥ ९३ ॥

(ப - ரை) प्रभो - ஓ தலைவனே! त्रैलोक्ये तु - மூவுலகிலும், गजाश्वादीनि - யானை குதிரை முதலிய, यानि - எவைகள், रत्नानि - ரத்னங்களும், मणयः - மணிகளும், (உண்டோ), तानि - அவைகள், समस्तानि - யாவும், सांप्रतम्-இப்பொழுது, ते - உன்னுடைய, गृहे - வீட்டில், भान्ति - விளங்குகின்றன, वै - அல்லவா ?

(பொ - ரை) ஓ தலைவனே! மூவுலகிலுமுள்ள, ஜாதிகளிற் சிறந்த கஜரத்னம் (யானை) அச்வரத்னம் (குதிரை) முதலியவைகளும், மற்றும் சிறந்தவைகளான ரத்னங்களும், பத்மராகம் முதலிய மணிகளும், இன்னும் உலகில் எந்த எந்த வஸ்துக்கள் சிறந்தவையோ அவைகள் யாவும் இப்பொழுது உன்னுடைய வீட்டில் விளங்கிக்கொண்டிருக்கிறதன்றோ! (93)

वै - வை - இது பிரஸித்தமான பொருளை விளக்குகிற அவ்யய பதம்.

ऐरावतः समानीतो गजरत्नं पुरन्दरात् ।
पारिजाततरुश्चायं तथैवोच्चैःश्रवा हयः ॥ ९४ ॥

(ப - ரை) पुरंदरात् - இந்த்ரனிடமிருந்து, ऐरावतम् - ஐராவதம் என்ற, गजरत्नम् - சிரேஷ்டமான யானையையும், अयम् - இந்த, पारिजाततरुः - பாரிஜாத விருக்ஷத்தையும், तथा - एव - அவ்விதமே, उच्चैःश्रवाः - உச்சை:ச்ரவஸ் என்ற, हयः - குதிரையும், समानीतः - கொண்டு வரப்பட்டது.

(பொ - ரை) ஓ தலைவனே! தேவேந்த்ரனிடமிருந்து ஐராவதம் என்ற சிறந்த யானையையும், பாரிஜாதம் என்ற சிறந்த கல்பக விருக்ஷத்தையும், உச்சை:ச்ரவஸ் என்ற சிறந்த குதிரையும் உன்னால் முன்பு கொண்டுவரப்பட்டதன்றோ? (94)

विमानं हंससंयुक्तमेतत्तिष्ठति तेऽङ्कणे ।
रत्नभूतमिहानीतं यदासीद्वेधसोऽद्भुतम् ॥ ९५ ॥

(ப - ரை) वेधसः - ப்ரஹ்மாவினுடைய, अद्भुतम् - ஆச்சரியமான, यत् - யாதொரு, विमानम् - விமானம், आसीत् - இருந்ததோ, हंस-संयुक्तम् - ஹம்ஸங்களோடு கூடியதும், रत्नभूतम् - சிறந்ததுமான, एतत् - இந்த (விமானம்) इह - இவ்விடம், आनीतम् - கொண்டுவரப்பட்டது, ते - உன்னுடைய, अङ्कणे - முற்றத்தில், तिष्ठति - இருக்கிறது.

(பொ - ரை) ஹம்ஸங்கள் பூட்டியதும், சிரேஷ்டமானதும், வியக்கத்தக்கதுமான ப்ரஹ்மதேவனுடைய விமானமானது உம்மால் கவரப்பட்டு இதோ முற்றத்தில் இருக்கிறதன்றோ! (95)

निधिरेष महापद्मः समानीतो धनेश्वरात् ।
किंजल्किनीं ददौ चाब्धिर्मालामम्लानपङ्कजाम् ॥ ९६ ॥

(ப - ரை) धनेश्वरात् - குபேரனிடமிருந்து, एषः - இந்த, महापद्मः - மஹாபத்மம் என்ற பெயருள்ள, निधिः - நிதியானது, समानीतः - கொண்டு வரப்பட்டது. अब्धिः - ஸமுத்திரம், किंजल्किनीम् - கேஸரங்களோடு கூடியதும், अम्लान-पङ्कजाम् - வாடாத தாமரைப் புஷ்பங்களோடு கூடியதுமான, मालां - च - மாலையையும், ददौ - கொடுத்தது.

(பொ - ரை) குபேரனிடமிருந்து மஹாபத்மம் என்ற இந்த நிதியும் உம்மால் கொண்டுவரப்பட்டது. ஸமுத்ரராஜன் கேஸரங்களுடன் கூடிய தாமரைப் புஷ்பங்களாலான வாடாத மாலையையும் கொடுத்துவிட்டான். (96)

छत्रं ते वारुणं गेहे काञ्चनस्रावि तिष्ठति ।
तथायं स्यन्दनवरो यः पुरासीत्प्रजापतेः ॥ ९७ ॥

(ப - ரை) वारुणम् - வருணஸம்பந்தமானதும், काञ्चन-स्रावि - தங்கத்தைப் பொழிகின்றதுமான, छत्रम् - வெண்குடையும், तथा - அவ்விதமே, यः - யாதொன்று, पुरा - பண்டு, प्रजापतेः - ப்ரஹ்மாவுக்கு, आसीत् - இருந்ததோ, अयम् - இந்த, स्यन्दन-वरः - சிரேஷ்டமான ரதமும், ते - உன்னுடைய, गेहे - வீட்டில், तिष्ठति - இருக்கிறது.

(பொ - ரை) ஸ்வர்ண வர்ஷத்தைப் பொழிகின்ற வருணனுடைய வெண்குடையும், அவ்விதமே முன்பு பிரஹ்மாவுக்கு இருந்த சிறந்த ரதமும் இப்பொழுது உன்னால் உனது வீட்டில் கொண்டு வந்து வைக்கப்பட்டிருக்கிறதன்றோ ! (97)

मृत्योरुत्क्रान्तिदा नाम शक्तिरीश त्वया हृता ।
पाशः सलिलराजस्य भ्रातुस्तव परिग्रहे ॥ ९८ ॥

(ப - ரை) ईश - ஓ தலைவனே! मृत्योः - காலதேவனுடைய, उत्क्रान्तिदा - மரணத்தைக் கொடுக்கிற, शक्तिः - சக்தியானது, त्वया - உன்னால், हृता - அபஹரிக்கப்பட்டது. सलिल-राजस्य - வருணனுடைய, पाशः - பாசாயுதமும், तव - உன்னுடைய, भ्रातुः - ஸஹோதரனுக்கு, परिग्रहे - சொந்தமாகியதன்றோ !

(பொ - ரை) ஓ தலைவனே! மரணத்தை உண்டாக்குகிறதான காலதேவனுடைய, உத்க்ராந்திதா என்ற சக்தியானது உன்னால் கவரப்பட்டது. அவ்விதமே

வருண தேவனுடைய பாசாயுதமும் உனது ஸஹோதர னுக்குச் சொந்தமாக இருக்கிறதன்றோ! (98)

उत्क्रान्तिदा - உத்க்ராந்திதா—மரணத்தைக் கொடுக்கவல்லது இது ப்ராணிகளுடைய ஆயுளின் முடிவில் ப்ராணனை இழுத்துச் செல்லுகின்ற யாதொரு சக்தியுண்டோ அதற்குப் பெயராகும். இதற்கு ப்ரமாணம் வருமாறு—

प्राणीनामायुषोऽन्ते या प्राणोत्कर्षणकारिणी ।
शक्तिः सोत्क्रान्तिदा..................... ॥

என்பதாகும்.

निशुम्भस्याब्धिजाताश्च समस्ता रत्नजातयः ।
वह्निश्चापि ददौ तुभ्यमग्निशौचे च वाससी ॥ ९९ ॥

(ப - ரை) अब्धिजाताः - ஸமுத்ரத்திலிருந்து உண் டானவைகளான, समस्ताः - எல்லாவிதமான, रत्नजाताः - ரத்ன ஸமூஹங்களும், निशुम्भस्य - நிசும்பனுடைய, (வீட்டிலிருக் கிறது) वह्निः - अपि - அக்நிதேவனும், तुभ्यम् - உனக்கு, अग्नि - शौचे - அக்நியில் நிர்மலமாக்கிய, वाससी-च - இரண்டு வஸ்த்ரங்களையும், ददौ - தானம் செய்தான்.

(பொ - ரை) ஸமுத்ரத்திலுண்டான ஸகல ரத்ன ஸமூஹங்களும் நிசும்பனுடைய வீட்டில் குவிந்திருக்கின் றன. அக்நிதேவனும் தங்களுக்கு அக்நியில் சுத்தம் செய் யப்பட்ட இரண்டு வஸ்த்ரங்களையும் தானம் செய்தா னன்றோ! (99)

एवं दैत्येन्द्र रत्नानि समस्तान्याहृतानि ते ।
स्त्रीरत्नमेषा कल्याणी त्वया कस्मान्न गृह्यते ॥ १०० ॥

(ப - ரை) दैत्येन्द्र - அஸுரச்ரேஷ்டனே! एवम् - மேலே சொல்லியது போல, समस्तानि - எல்லாவிதமான, रत्नानि - ரத்னங்களும், ते - உன்பொருட்டு, आहृतानि - கொண்டு வரப்பட்டன. एषा - இந்த, कल्याणी - அம்பிகையான, स्त्रीरत्नम् - ஸ்த்ரீரத்னமானது, त्वया - உன்னால், कस्मात् - எக்காரணத்தால், न-गृह्यते - எடுத்துக் கொள்ளப்படவில்லை.

(பொ - ரை) ஓ அஸுரோத்தம! முன்பு சொல்லியது போல ஸகல ரத்னங்களும் தங்களுக்காகக் கொண்டு வரப்பட்டன. இந்த அம்பிகையாகிய அழகிய ஸ்த்ரீரத்னத்தை மாத்திரம் எக்காரணத்தால் கொண்டு வரவில்லையோ! (100)

ऋषिरुवाच ॥ १०१ ॥

निशम्येति वचः शुम्भः स तदा चण्डमुण्डयोः ।
प्रेषयामास सुग्रीवं दूतं देव्या महासुरम् ॥ १०२ ॥

ऋषिः - மஹரிஷி, उवाच - சொன்னார்.

(ப - ரை) सः - அந்த, शुम्भः - சும்பன், तदा - அப்பொழுது, चण्ड-मुण्डयोः - சண்டமுண்டர்களுடைய, वचः - வார்த்தையை, इति - இவ்விதம், निशम्य - கேட்டு, महासुरम् - பெரிய அஸுரனை, सुग्रीवम् - ஸுக்ரீவன் என்ற, दूतम् - தூதனை, देव्याः - தேவியின் இருப்பிடத்திற்கு, प्रेषयामास - அனுப்பினன்.

மஹர்ஷி சொன்னார்— (101)

(பொ - ரை) இவ்விதம் அந்த சண்டமுண்டர்களுடைய வார்த்தையைக் கேட்டபொழுது, சும்பன் உடனே

ஸுக்ரீவன் என்ற பெயருள்ள பெரிய அஸுரனை தேவியினிடம் தூதனுக அனுப்பினுன். (102)

इति चेति च वक्तव्या सा गत्वा वचनान्मम ।
यथा चाभ्येति संप्रीत्या तथा कार्यं त्वया लघु ॥ १०३ ॥

(ப - ரை) मम - என்னுடைய, वचनात् - வார்த்தையைக் காரணமாகக் கொண்டு, गत्वा - சென்று, इति च, इति च - இவ்விதம் இவ்விதமென்று, सा - அவள், वक्तव्या - சொல்லப்படவேண்டும். यथा - எவ்விதம், संप्रीत्या - பிரியத்தோடுகூட, लघु - விரைவாக, अभ्येति - (அவள்) வருவாளோ, त्वया - உன்னுல், तथा - அவ்விதம், कार्यम् - செய்யவேண்டும்.

(பொ - ரை) என்னுடைய இந்த வார்த்தையைக் காரணமாகக்கொண்டு நீ அவ்விடம் சென்று, அவள் எவ்விதம் என்னிடம் பிரியத்தோடுகூட தானுகவே வருவாளோ, அவ்விதம் நீ செய்யவேண்டும். (103)

इति च, इति च - இதி ச, இதி ச—என்று இரண்டு தடவை சொல்லியது தன்னுல் சொல்லப்பட்ட அபிமானத்தால் ஏற்பட்ட அதிகாரத்தைக் குறிப்பதாகும்.

लघु - லகு, சீக்கிரம் என்றது அவனுடைய ஆசையை வெளியிடுவதாகும்.

இந்த வாக்கைக் கொண்டு சும்பநிசும்பர்கள் ரஜோகுணத்தை முக்கியமாகக் கொண்டவர்கள் என்பதையும் ஸூசனை செய்வதாகும். அக்காரணத்தால் அவர்களைக் கொல்லுவதற்கு ஸத்வகுணத்தை முக்யமாகக் கொண்ட அவதாரத்தை எடுத்தாள் என்பதும் ஸாரம்.

स तत्र गत्वा यत्रास्ते शैलोद्देशेऽतिशोभने ।
सा देवी तां ततः प्राह श्लक्ष्णं मधुरया गिरा ॥ १०४ ॥

(ப - ரை) यत्र - யாதொரு, अतिशोभने - மிகவும் மனோ ஹரமாயிருக்கிற, शैलोद्देशे - பர்வதப்பிரதேசத்தில், सा - அந்த, देवी - தேவி, आस्ते - வஸிக்கிருளோ, सः - அந்த தூதன், तत्र - அவ்விடத்திற்கு, गत्वा - சென்று, ततः - பிறகு, ताम् - அந்த தேவியை (அணுகி) श्लक्ष्णम् - மிருதுவாயும், मधुरया - இனிமையுடன் கூடியதான, गिरम् - வார்த்தையை, प्राह - சொன்னன்.

(பொ - ரை) ஸுக்ரீவன் என்ற அத்தூதனும் அந்த தேவீ வாஸம் செய்கின்ற மிகவும் அழகிய பர்வத ப்ர தேசத்தை யடைந்து, அவளோடு மிருதுவாயிருக்கின்ற இனிமையான வார்த்தைகளைச் சொன்னன். (104)

दूत उवाच ॥ १०५ ॥

देवि दैत्येश्वरः शुम्भस्त्रैलोक्ये परमेश्वरः ।
दूतोऽहं प्रेषितस्तेन त्वत्सकाशमिहागतः ॥ १०६ ॥

दूतः - தூதன், उवाच - சொன்னன்—

(ப - ரை) देवि - ஓ தேவி! त्रैलोक्ये - மூவுலகிலும், परमेश्वरः - சிறந்த தலைவனும், दैत्येश्वरः - அஸுரர்களிற் சிறந்தவனுயுமிருக்கிற, शुम्भः - சும்பன், (இருக்கிருன்) अहम् நான். तेन - அவனுல், प्रेषितः - அனுப்பப்பட்ட, दूतः - தூதன். इह - இவ்விடம், त्वत्-सकाशम् - உன்னுடைய ஸமீ பத்தை, आगतः - அடைந்தேன்.

தூதன் சொன்னன்— (105)

(பொ - ரை) ஓ தேவி! மூவுலகிலும் தலை சிறந்து விளங்குகின்ற அஸுரசிரேஷ்டனை சும்பன் என்ற

அஸுரசக்ரவர்த்தி ஒருவன் இருக்கிறான். நான் அவனால் உன்னிடம் அனுப்பப்பட்ட தூதனாகிய ஸுக்ரீவன் என்பவன். (106)

இவ்விடத்தில் அரசனாகவும், பட்டாரகனாகவும் இருக்கின்றவனுடைய மனைவியாக வரப்போவதை யுத்தேசித்து தூதனால் "தேவி" என்ற ஸம்போதனபதம் (விளி வேற்றுமை) உபயோகம் செய்திருக்கிறது என்பர் குப்தவதீ உரையாசிரியர்.

अव्याहताज्ञः सर्वासु यः सदा देवयोनिषु ।
निर्जिताखिलदैत्यारिः स यदाह शृणुष्व तत् ॥ १०७ ॥

(ப - ரை) यः - எவனொருவன், सदा - எப்பொழுதும், सर्वासु - ஸகல, देवयोनिषु - தேவதைகளுடைய விஷயத்திலும், अव्याहताज्ञः - வீணாகாத உத்திரவையுடையவனோ, निर्जिताखिलदैत्यारिः - ஜயிக்கப்பட்ட ஸகல தேவர்களையுமுடையவனோ, सः - அவன், यत् - யாதொரு (விஷயத்தை) आह - சொன்னானோ, तत् - அதை, शृणुष्व - கேட்பாயாக.

(பொ - ரை) எல்லா தேவர்களும் எவனுடைய உத்திரவைப் புறக்கணிக்காது பணிகின்றனரோ; அஸுரர்களுக்குப் பகைவர்களான தேவர்களை எவன் ஜயித்தவனோ; அந்தபராக்ரமசாலியான சும்பன் என்ற அஸுரன் சொன்னதைக் கேட்கவேண்டும். (107)

मम त्रैलोक्यमखिलं मम देवा वशानुगाः ।
यज्ञभागानहं सर्वानुपाश्नामि पृथक्पृथक् ॥ १०८ ॥

(ப - ரை) त्रैलोक्यम् - மூவுலகும், अखिलम् - எல்லாம், मम- என்னுடையது. देवाः - தேவர்கள், मम - என்னுடைய,

वशानुगाः - அபிப்பிராயத்தை யனுஸரிக்கின்றவர்கள். अहम् - நான், सर्वान् - எல்லாவிதமான, यज्ञभागान् - ஹவிர்பாகங்களை யும், पृथक् पृथक् - தனித்தனியே, उपाश्नामि - புசிக்கிறேன்.

(பொ - ரை) இம்மூவுலகும் என்னுடையதே. தேவர்கள் யாவரும் எனக்கு வசமான (அடிமை)வர்கள். நான் வேள்விகளில் கொடுக்கப்படும் ஹவிர்பாகங்களைத் தனித் தனியே புசித்து வருகிறேன். (108)

त्रैलोक्यवररत्नानि मम वश्यान्यशेषतः ।
तथैव गजरत्नं च हृतं देवेन्द्रवाहनम् ॥ १०९ ॥

(ப - ரை) त्रैलोक्यवररत्नानि - மூவுலகிலுமுள்ள சிறந்த ரத்னங்கள், अशेषतः - முழுவதும், मम - எனக்கு, वश्यानि - வசமானவைகள், तथा - एव - அவ்விதமே, देवेन्द्र-वाहनम् - இந்த்ரனுடைய வாஹனமாகிய, गजरत्नं-च - சிறந்த யானை யும், हृतम् - (என்னால்) கவரப்பட்டது.

(பொ - ரை) மூவுலகிலுள்ள ரத்னங்கள் யாவும் என்னுடைய அதிகாரத்தின் கீழ் இருப்பவைகள். அவ் விதமே இந்த்ரனுடைய சிறந்த ஐராவதம் என்ற கஜரத்ன மும் என்னால் கவரப்பட்டது. (109)

क्षीरोदमथनोद्भूतमश्वरत्नं ममामरैः ।
उच्चैःश्रवससंज्ञं तत्प्रणिपत्य समर्पितम् ॥ ११० ॥

(ப - ரை) क्षीरोद-मथनोद्भूतम्-பாற்கடலைக் கடைந்தபோது உண்டான, तत् - அந்த, उच्चैःश्रवससंज्ञम् - உச்சைःச்ரவஸ் என்ற பெயருள்ள, अश्व - रत्नम् - சிறந்த குதிரையானது,

अमरैः - தேவர்களால், **मम** - எனக்கு; **प्रणिपत्य** - நமஸ்காரம் செய்து, **समर्पितम्** - கொடுக்கப்பட்டது.

(பொ - ரை) தேவர்கள், பாலாழியைக் கடையும் பொழுது உண்டாகிய உச்சை:ச்ரவஸ் என்ற பெயருடன் கூடிய சிறந்த குதிரையை; விநயத்துடன் என்னை நமஸ்காரம் செய்து கொடுத்துவிட்டுச் சென்றனர். (110)

தேவர்கள் உச்சை: ச்ரவஸ் என்ற குதிரையை இந்த்ரனிடம் கொடுக்காது என்னுடைய பாதங்களில் ஸமர்ப்பணம் செய்தனர் என்று கருத்து.

यानि चान्यानि देवेषु गन्धर्वेषूरगेषु च ।
रत्नभूतानि भूतानि तानि मय्येव शोभने ॥ १११ ॥

(ப - ரை) **शोभने** - அழகியவளே! **देवेषु** - தேவர்களிடத்திலும், **गन्धर्वेषु** - கந்தர்வர்களிடத்திலும், **उरगेषु - च** - நாகர்களிடத்திலும், **यानि** - எவைகள், **अन्यानि - च** - வேறான வைகளாயும், **रत्नभूतानि** - ரத்னங்களாக இருக்கின்ற, **भूतानि** - வஸ்துக்கள் எவையுண்டோ, **तानि** - அவைகள், **मयि - एव** - என்னிடத்திலே இருக்கின்றன.

(பொ - ரை) ஓ அழகியவளே! தேவர்களிடத்திலும், கந்தர்வர்களிடத்திலும், நாகர்களிடத்திலுமுள்ள சிறந்த வஸ்துக்கள் எவைகளுண்டோ அவைகளெல்லாம் என்னிடமிருக்கின்றன. (111)

स्त्रीरत्नभूतां त्वां देवि लोके मन्यामहे वयम् ।
सा त्वमस्मानुपागच्छ यतो रत्नभुजो वयम् ॥ ११२ ॥

(ப - ரை) देवी - ஓ தேவி! लोके - உலகில், त्वाम् - உன்னை, स्त्रीरत्नभूताम् - பெண்களிற் சிறந்தவளென்று, वयम् - நாங்கள், मन्यामहे - நினைக்கிறோம். यतः - ஏனெனில், वयम् - நாங்கள், रत्नभुजः - ரத்னங்களை அனுபவிப்பவர்கள். सा - அந்த, त्वम् - நீ, अस्मान् - எங்களை, उपागच्छ - அடைய வேண்டும்.

(பொ - ரை) ஓ தேவி! உலகிலே தலைசிறந்த வனிதாரத்னம் நீதானென நாங்கள் நினைக்கிறோம். எனவே உத்தம ரத்னமாகிய நீ எங்களை வந்து அடையவேண்டும். எவ்விதத்திலும் நாங்கள் ரத்நாபஹாரி ஆதலால் உன்னை அநுபவிக்க எங்களுக்கு உரிமையுண்டு. (112)

मां वा ममानुजं वापि निशुम्भमुरुविक्रमम् ।
भज त्वं चञ्चलापाङ्गि रत्नभूतासि वै यतः ॥ ११३ ॥

(ப - ரை) चञ्चलापाङ्गी - சலிக்கின்ற கடைக்கண்களையுடையவளே! यतः - எக்காரணத்தால், त्वम् - நீ, रत्नभूता - அழகினால் சிறந்தவளாக, असि - விளங்குகிறாயோ, (அக்காரணம் கொண்டு) मां - वा - என்னையாவது, उरु-विक्रमम् - பெருகிய பராக்ரமத்தையுடைய, मम - என்னுடைய, अनुजम्- ஸஹோதரனாகிய, निशुम्भं-च - अपि - நிசும்பனையாவது, भज - ஸேவிக்கவேண்டும்.

(பொ - ரை) ஓ தேவி! ஸௌந்தர்யத்தால் சிறந்து விளங்குகின்ற நீ என்னையாவது, மஹாபராக்கிரமசாலியான என்னுடைய ஸஹோதரனாகிய நிசும்பனையாவது அடையவேண்டும். (113)

परमैश्वर्यमतुलं प्राप्स्यसे मत्परिग्रहात् ।
एतद् बुद्ध्या समालोच्य मत्परिग्रहतां व्रज ॥ ११४ ॥

(ப - ரை) त्वम् - நீ, मत्परिग्रहात् - என்னுடைய மனைவியாயிருந்துகொண்டு, अतुलम् - இணையற்றதும், परम् - சிறந்ததுமான, ऐश्वर्यम् - ஸம்பத்தை, प्राप्स्यसे - அடையப் போகிறாய், एतत् - இதை बुद्ध्या - புத்தியினால், समालोच्य - நன்கு ஆலோசித்து, मत् - परिग्रहताम् - எனக்கு மனைவியாயிருக்கும் தன்மையை, व्रज - அடைவாயாக.

(பொ - ரை) நீ என்னுடைய மனைவியாயிருந்தால் இணையற்றதும், சிறந்ததுமான திரண்ட ஸம்பத்தை அனுபவிப்பாய். இதை உனது புத்திகொண்டு நன்கு ஆலோசித்து, என்னுடைய மனையாயிருந்து விடு. (114)

ऋषिरुवाच ॥ ११५ ॥

इत्युक्ता सा तदा देवी गम्भीरान्तःस्मिता जगौ ।
दुर्गा भगवती भद्रा ययेदं धार्यते जगत् ॥ ११६ ॥

ऋषिः - மஹரிஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) दुर्गा - துர்கையும், भगवती - பெருகிய ஸம்பத்துக்கள் நிறைந்தவளும், भद्रा - க்ஷேமத்தின் வடிவானவளும், यया - எவளால், इदम् - இந்த, जगत् - உலகு, धार्यते - தரிக்கப்படுகிறதோ, सा - அந்த, देवी - தேவீ, तदा - அப்பொழுது, इति - இவ்விதம், उक्ता - சொன்னாள்: गम्भीरान्तः-स्मिता - ஆழ்ந்த அபிப்ராயத்தோடு கூடிய புன்னகையுடன், जगौ - சொன்னாள்.

மஹர்ஷி சொன்னார். (115)

(பொ - ரை) எந்த தேவியானவள், துர்கையின் வடிவாகவும், நிறைந்த ஸம்பத்துக்களையுடையவளாகவும், க்ஷேமத்தின் வடிவாகவும், இவ்வுலகைத் தரித்துக் கொண்டுமிருக்கிறாளோ, அந்த தேவீ (நிந்தையுடன்) ஆழ்ந்த அபிப்பிராயத்தோடு கூடிய மந்தஹாஸத்துடன் இவ்விதம் சொன்னாள். (116)

गम्भीरान्त:स्मिता - கம்பீராந்த:ஸ்மிதா—ஆழ்ந்த அபிப்ராயத்துடன் மனதிலே அரும்பிய மந்தஹாஸத்தோடு சிரித்தாள், என்றது இந்த சும்பநிசும்பர்களை வதம் செய்யவேண்டுமென்ற எண்ணத்துடன் தூதனைப் பார்த்துச் சிரித்தாள் என்பதை ஸூசனை செய்வதாகும்.

अन्त:स्मितम् - என்ற சொல்லுக்கு நிந்தை எனவும் பொருள் உண்டு.

देव्युवाच ॥ ११७ ॥

सत्यमुक्तं त्वया नात्र मिथ्या किंचित्त्वयोदितम् ।
त्रैलोक्याधिपतिः शुम्भो निशुम्भश्चापि तादृशः ॥ ११८ ॥

देवी - தேவி, उवाच - சொன்னாள்—

(ப - ரை) त्वया - உன்னால், अत्र - இந்த விஷயத்தில், सत्यम् - உண்மை, उक्तम् - சொல்லப்பட்டது. त्वया-உன்னால், किंचित् - கொஞ்சமும், मिथ्या - பொய்யானது, न - उदितम् - சொல்லப்படவில்லை. शुम्भः - சும்பனும், त्रैलोक्याधिपतिः - மூவுலகுக்கும் தலைவனே. निशुम्भः-अपि - நிசும்பனும், तादृशः- அப்படிப்பட்டவனே.

தேவீ சொன்னாள். (117)

(பொ - ரை) சும்பனைக்குறித்து நீ சொன்ன விஷயங்கள் யாவும் உண்மையே. கொஞ்சமும் பொய் என்பது கிடையாது. சும்பன், நிசும்பன் இருவரும் மூவுலகுக்கும் தலைவர்களே யாவர். (118)

किं त्वत्र यत्प्रतिज्ञातं मिथ्या तत्क्रियते कथम् ।
श्रूयतामल्पबुद्धित्वात् प्रतिज्ञा या कृता पुरा ॥ ११९ ॥

(ப - ரை) किं तु - ஆனால், अत्र - இவ்விஷயத்தில், यत् - யாதொரு, प्रतिज्ञातम् - பிரதிஜ்ஞையானது செய்யப்பட்டதோ, तत् - அது, कथम् - எவ்விதம், मिथ्या - பொய்யாக, क्रियते - செய்வது, पुरा - பண்டு (முன்பு) अल्पबुद्धित्वात् - குறைந்த புத்தியின் காரணமாக, या - யாதொரு. प्रतिज्ञा - பிரதிக்ஞையானது, कृतम् - செய்யப்பட்டதோ, श्रूयताम् - (அதை) கேள்.

(பொ - ரை) ஆனால் நான் அவ்விருவரையும் புருஷனாக வரிக்கும் விஷயத்தில், முன்பு என்னால் செய்யப்பட்ட பிரதிக்ஞை ஒன்று உண்டு. அதை எவ்விதம் பொய்யாக்குவது? என்னுடைய சிறிய புத்தியினால் செய்யப்பட்ட அந்த பிரதிக்ஞையைக் கேழ்ப்பாயாக. (119)

இவ்விதம் சொன்னது தனக்கும், தனது வடிவத்திற்கும் முன்மனேவியாபார வடிவான புத்திக்கும், அல்பத்வம்-ஏற்றத் தாழ்வு-என்பது இயற்கையேயாகும்.

अङ्गीकृतपरित्यागादनङ्गीकृतसंश्रयात् ।
मानिनी निरयं याति यावदाभूतसंप्लवम् ॥

“ அங்கீகாரம்-அதாவது-ப்ரதிக்ஞை-செய்ததைப் புறக்கணிப்பவளும், அநங்கீகாரம்-அதாவது ஒருவித ப்ரதிக்ஞையும்-செய்யாததை ஆச்ரயிப்பவளுமான மாநிநீ கல்பகோடி காலம் வரையில் நரகத்தையடைகிறுள் ” என்ற வசனமும் இதற்குச் சான்ருகும்.

योमां जयति संग्रामे यो मे दर्पं व्यपोहति ।
यो मे प्रतिबलो लोके स मे भर्ता भविष्यति ॥ १२० ॥

(ப - ரை) संग्रामे - யுத்தத்தில், यः - எவன், माम् - என்னை, जयति - ஜயிக்கிருனே, यः - எவன், मे - என்னுடைய, दर्पम् - கொழுப்பை, व्यपोहति-அகற்றுகிருனே, लोके - உலகில், यः - எவன், मे எனக்கு, प्रति-बलः - இணையுள்ள பலசாலியாக இருக்கிருனே, सः - அவன், मे - எனக்கு, भर्ता - புருஷனுக, भविष्यति - வரப்போகிருன்.

(பொ - ரை) யுத்தத்தில் என்னை எவன் ஜயிக்கிருனே; என்னுடைய அஹங்காரத்தை எவன் அகற்றுகிருனே; எனக்கு இணையுள்ள பலத்துடன் எவன் விளங்குகிருனே; அவனே எனக்குப் புருஷனுக வரப்போகிருன். (120)

“सहस्राणि ये रुद्राः ” - “ ஸஹஸ்ராணி யே ருத்ரா: ”—என்று ச்ருதியில் சொல்லப்பட்ட ருத்ரர்களெல்லோரும் புருஷத் தன்மையை அடைந்து தேவியின் ஸ்வரூபத்தையடைந்தனர். அதாவது தேவியினுடைய ஸாந்நித்யத்தை யடைந்தனர் என்பது ஸாரம். அவர்களைக் காட்டிலும் வேருன மஹாதேவன் எனக்கு புருஷனுக வரப்போகிருன் என்பதை ஸூசனை செய்வதாக குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

तदागच्छतु शुम्भोऽत्र निशुम्भो वा महासुरः ।
मां जित्वा किं चिरेणात्र पाणिं गृह्णातु मे लघु ॥ १२१ ॥

(ப - ரை) तत् - ஆகையால், महासुरः - பெரிய அஸுரனாகிய, शुम्भः - சும்பனோ, निशुम्भो - वा - நிசும்பனோ, अत्र - இவ்விடத்தில், आगच्छतु - வரட்டும், माम् - என்னை, जित्वा - ஜயித்து, लघु - விரைவாக, पाणिम् - கையை, गृह्णातु - பிடிக்கட்டும், अत्र - இவ்விஷயத்தில், चिरेण - காலதாமதம், किम् - ஏன்?

(பொ - ரை) ஆகையால் அஸுரசிரேஷ்டனாகிய சும்பனோ, நிசும்பனோ இவ்விடம் வந்து என்னை ஜயித்து விரைவாக என்னுடைய கையைப்பிடிக்கலாம். இவ்விஷயத்தில் கொஞ்சமும் காலதாமதம் செய்யவேண்டாம்.(121)

இவ்விடத்தில் लघु- லகு—என்ற பதம் உபயோகித்திருப்பது தேவிக்கு சும்பநிசும்பர்களை விரைவில் வதம் செய்யவேண்டுமென்ற ஆசையைக் குறிப்பதாகும்.

दूत उवाच ॥ १२२ ॥

अवलिप्तासि मैवं त्वं देवि ब्रूहि ममाग्रतः ।
त्रैलोक्ये कः पुमांस्तिष्ठेदग्रे शुम्भनिशुम्भयोः ॥ १२३ ॥

दूतः - தூதன், उवाच - சொன்னான்—

(ப - ரை) देवि - ஓ தேவி! त्वम् - நீ, अवलिप्ता - கர்வம் கொண்டவளாக, असि - இருக்கிறாய். एवम् - இவ்விதம், मम - என்னுடைய, अग्रतः - முன்னிலையில், मा-ब्रूहि - சொல்லவேண்டாம், त्रैलोक्ये - மூவுலகிலும், कः - எந்த, पुमान्-புருஷன்,

शुम्भ-निशुम्भयोः - சும்பநிசும்பர்களுடைய, अग्रे - முன்னிலையில், तिष्ठेत् - நிற்பவன்?

தூதன் சொன்னான். (122)

(பொ - ரை) ஓதேவி! நீ மிகவும் கர்வத்தோடு கூடியவளாக இருக்கிறாய். இவ்விதம் நீ எனது முன்னிலையில் சொல்லவேண்டாம். மூவுலகிலும் எவர்தான் சும்பநிசும்பர்களை யுத்தத்தில் எதிர்த்து நிற்கமுடியும்? (123)

अवलिप्ता - அவலிப்தா-அஹங்காரத்தின் காரணமாக விவேகத்தையிழந்தவள் என்பதாம்.

अन्येषामपि दैत्यानां सर्वे देवा न वै युधि ।
तिष्ठन्ति संमुखे देवि किं पुनः स्त्री त्वमेकिका ॥ १२४ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி! अन्येषाम् - மற்றுமுள்ள, दैत्यानाम् - अपि - அஸுரர்களோடும், युधि - யுத்தத்தில், सर्वे - எல்லா, देवाः - தேவர்களும், संमुखे - நேராக, न - तिष्ठन्ति-वै - நிற்கச் சக்தியற்றவர்களன்றோ! एकिका - தனியாக இருக்கிற, स्त्री - பெண்ணான, त्वम् - நீ, किं - पुनः - எம்மாத்திரம்?

(பொ - ரை) ஓதேவி! சும்பநிசும்பன் மட்டுமல்ல மற்றுமுள்ள தூம்ரலோசனன் முதலியவர்களோடும், தேவர்கள் கூட யுத்தத்தில் நேராக எதிர்த்து நிற்கமுடியாதென்றால், தனியே ஒருவளாயிருக்கிற பெண்ணாகிய நீ எவ்வளவு மாத்திரம்? (124)

इन्द्राद्याः सकला देवास्तस्थुर्येषां न संयुगे ।
शुम्भादीनां कथं तेषां स्त्री प्रयास्यसि संमुखम् ॥ १२५ ॥

(ப - ரை) एषाम् - இந்த, शुम्भादीनाम् - சும்பன் முதலியவர்களுடைய, संयुगे - யுத்தத்தில், इन्द्राद्या: - தேவேந்த்ரன் முதலிய, सकला: - ஸகல, देवा: - தேவர்க்ளும், न-तस्थु: - எதிர்த்து நிற்கமுடியவில்லை. तेषाम् - அவர்களுடைய, संमुखम् - ஸமீபத்தை, स्त्री - பெண்ணாகிய (நீ), कथम् - எவ்விதம், प्रयास्यसि - அடையப்போகிறாய்?

(பொ - ரை) ஓ தேவி! அந்த சும்பன் முதலியவர்களோடு யுத்தத்தில், தேவேந்த்ரன் முதலிய தேவர்களும் எதிர்த்து நிற்கமுடியவில்லை யென்றால் அபலையாகிய நீ அந்த சும்பநிசும்பர்களுடைய எதிரில் எவ்விதம் எதிர்த்து நிற்கமுடியும்? (125)

सा त्वं गच्छ मयैवोक्ता पार्श्वं शुम्भनिशुम्भयो: ।
केशाकर्षणनिर्धूतगौरवा मा गमिष्यसि ॥ १२६ ॥

(ப - ரை) सा - அந்த, त्वम् - நீ, मया - என்னால், उक्ता - एव - சொல்லப்பட்டவளாகவே, शुम्भ-निशुम्भयो: - சும்பநிசும்பர்களுடைய, पार्श्वम् - ஸமீபத்தை, गच्छ - அடைவாயாக. केशाकर्षण-निर्धूत-गौरवा - தலைமுடிகளைப் பிடித்து இழுத்துக் கொண்டு கௌரவம் போன பிறகு, मा - गमिष्यसि - போக வேண்டாம்.

(பொ - ரை) ஓ தேவி! என்னுடைய வார்த்தைகளைக் கேட்டுக் கொண்டு அந்த சும்பநிசும்பர்களுடைய ஸமீபத்தை அடையவேண்டும். தலைமுடிகளைப்பிடித்து இழுத்து, மதிப்பையிழந்த பிறகு அங்கு செல்லவும் வேண்டாம். (126)

देव्युवाच ॥ १२७ ॥

एवमेतद्बली शुम्भो निशुम्भश्चातिवीर्यवान् ।
किं करोमि प्रतिज्ञा मे यदनालोचिता पुरा ॥ १२८ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னாள்.

(ப - ரை) एवम् - இது ; एतत् - என்ன! शुम्भः - சும்பனும், निशुम्भः - च - நிசும்பனும், वली-பலமுள்ளவனும், अति-वीर्यवान्- மிகவும் வீர்யமுள்ளவனுமாவர், यत् - யாதொரு, मे - என்னுடைய, प्रतिज्ञा - ஆணை, पुरा - முன்பு, अनालोचिता - ஆலோசிக்கப்படவில்லை, किम् - என்ன, करोमि - செய்வேன். தேவீ சொன்னாள். (127)

(பொ - ரை) இது என்ன! சும்பனும் பலமுள்ளவனே ; நிசும்பனும் மிகுந்த பராக்ரமமுள்ளவனே; ஏனெனில் நான் முன்பின் ஆலோசிக்காமல் முன்பு ஆணையொன்றைச் செய்து கொண்டேன், இப்பொழுது நான் என்ன செய்யமுடியும் ? (129)

अतिवीर्यवान् - அதிவீர்யவான்-சும்பனும், நிசும்பனும் பல சாலிகளேயாவர், மிகவும் வலிமையுள்ளவர். அதாவது பலிக்கு ஸாதநமான பெரிய பசுக்கள் போன்றவர்கள்.

"मया तवात्रोपहृतौ चण्डमुण्डौ महापशू ।
युद्धयज्ञे स्वयं शुम्भं निशुम्भं च हनिष्यसि ॥

என்று ஏழாவது அத்தியாயம் 24 வது ச்லோகத்தில், சண்டனும், முண்டனும் யாகபசுக்களாகச் சொல்லப் போவதையும், அவ்விதமே சும்பநிசும்பர்கள் தேவியினால் யுத்த மென்னும் மஹா யஜ்ஞத்தில் பலியாகப் போகின்ற மஹாபசுக்கள் என்று சொல்லப்போவதையும் இங்கு ஸூசனை செய்வதாகும் என்பர் குப்தவதீ உரையாசிரியர்.

स त्वं गच्छ मयैवोक्तं यदेतत्सर्वमादितः ।
तदाचक्ष्वासुरेन्द्राय स च युक्तं करोतु यत् ॥ १२९ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
देवीदूतसंवादो नाम पञ्चमोऽध्यायः ॥ ५ ॥

(ப - ரை) सः - *அந்த,* त्वम् - *தூதனாகிய நீ,* गच्छ - *செல்.* मया - *என்னால்,* यत् - *யாதொன்று,* एतत् - *இது* उक्तम् - *சொல்லப்பட்டதோ,* तत् - *அந்த,* सर्वम् - एव - *முழுவதுமே,* आदृतः *ஆதரிக்கப்பட்டது.* असुरेन्द्राय-*அஸுரச்ரேஷ்டனுக்கு,* आचक्ष्व - *சொல்லு,* स - च - *அவனும்,* यत् - *எது,* युक्तम् - *உசிதமோ,* करोतु - (*அதை*) *செய்யட்டும்,*

(பொ - ரை) *ஓ தூதனே! நீ அவ்விடம் சென்று நான் சொன்னவைகளை எல்லாம் ஆதரவுடன் சும்பனிடத்தில் சொல். அவனும் உசிதம் போல் செய்யட்டும்.* (*129*)

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் தேவீதூத ஸம்வாதம் என்ற ஐந்தாவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ षष्ठोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

इत्याकर्ण्य वचो देव्याः स दूतोऽमर्षपूरितः ।
समाचष्ट समागम्य दैत्यराजाय विस्तरात् ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) इति - இவ்விதம், देव्याः - தேவியினுடைய, वचः - வார்த்தையை, आकर्ण्य - கேட்டு, अमर्ष-पूरितः - கோபத்தினால் நிறைந்த, सः - அந்த, दूतः - தூதன், समागत्य - வந்து, दैत्यराजाय - அஸுர அரசனுக்கு, विस्तरात् - விஸ்தாரமாக, समाचष्ट - சொன்னான்.

மஹர்ஷி சொன்னார். (1)

(பொ - ரை) அந்த தூதன் இவ்விதம் தேவியினுடைய வார்த்தையைக் கேட்டு, மிகுந்த கோபாவேசத்தோடு, சும்பாஸுரனிடத்தில் திரும்பிவந்து எல்லாவற்றையும் விஸ்தாரமாகச் சொன்னான். (2)

तस्य दूतस्य तद्वाक्यमाकर्ण्यासुरराट् ततः ।
सक्रोधः प्राह दैत्यानामधिपं धूम्रलोचनम् ॥ ३ ॥

(ப - ரை) असुरराट् - அஸுரர்களுக்கு அரசனான சும்பன், तस्य - அந்த, दूतस्य - தூதனுடைய, तत्- அந்த, वाक्यम्- வார்த்தையை, आकर्ण्य - கேட்டு, ततः - பிறகு, सक्रोधः - கோபத்தோடு கூடியவனாக, दैत्यानाम् - அஸுரர்களுக்கு,

अधिपः- தலைவனை, धूम्रलोचनम् - தூம்ரலோசனனை (பார்த்து) प्राह - சொன்னான்.

(பொ - ரை) அஸுரர்களுக்கு அரசனான சும்பன் அந்த தூதனுடைய வசனத்தைக் கேட்டு, மிகுந்த கோபம் கொண்டு, அஸுர ஸேனைகளுக்குத் தலைவனாகிய தூம்ர லோசனனைப் பார்த்துச் சொன்னான். (3)

धूम्रलोचनः - தூம்ரலோசன:—புகையின் வர்ணமான கண் களைக் கொண்டவன். அதாவது கருப்பும் சிவப்பும் கலந்த நிறம்.

हे धूम्रलोचनाशु त्वं स्वसैन्यपरिवारितः ।
तामानय बलाद्दुष्टां केशाकर्षणविह्वलाम् ॥ ४ ॥

(ப - ரை) हे धूम्रलोचन! - ஓ தூம்ரலோசன! त्वम् - நீ, स्व-सैन्य-परिवारितः - தன்னுடைய ஸேனைகளால் சூழப்பட்ட வனாக, ताम् - அந்த, दुष्टाम् - துஷ்டஸ்த்ரீயை, केशाकर्षण-विह्वलाम् - கேசத்தைப்பிடித்து இழுத்து உலுக்கி, आशु - விரைவில், बलात् - பலவந்தமாக, आनय - கொண்டுவா.

(பொ - ரை) ஓ தூம்ரலோசன! நீ உன்னுடைய படைகளைத் திரட்டிக்கொண்டு அந்த துஷ்ட ஸ்த்ரீயை பலவந்தமாகத் தலைமயிரைப்பிடித்து இழுத்து உலுக்கி, பலமிழக்கச் செய்து விரைவில் என்னிடம் கொண்டு வா. (4)

तत्परित्राणदः कश्चिद्यदि चोत्तिष्ठते परः ।
स हन्तव्योऽमरो वापि यक्षो गन्धर्व एव वा ॥ ५ ॥

(ப - ரை) तत्-परित्राणदः - அவளைக் காப்பாற்றுவதற்கு, परः - வேறு कश्चित् - ஒருவன், उत्तिष्ठते-यदि-वा - முயற்சிப்

பானேயாகில், सः - அவன், अमरः-अपि-वा - தேவனுயினும், यक्षः - யக்ஷனுயினும், गन्धर्वः-एव-वा - கந்தர்வனுயினும், हन्तव्यः- கொல்லப்படவேண்டும்.

(பொ - ரை) ஓ தூம்ரலோசன! அங்கு அவனை ரக்ஷிப்பதற்காக வேறு எவனுவது ஒருவன் முயற்சி செய்வானேயாகில், அவன் தேவனுயிருந்தாலும், யக்ஷனுக இருந்தாலும், கந்தர்வனுயிருந்தாலும் அவனை அவ்விடத்திலேயே கொன்று விடு. (5)

ऋषिरुवाच ॥ ६ ॥

तेनाज्ञप्तस्ततः शीघ्रं स दैत्यो धूम्रलोचनः ।
वृतः षष्ट्या सहस्राणामसुराणां द्रुतं ययौ ॥ ७ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னுர் :—

(ப - ரை) ततः - பிறகு, அந்த तेन - அந்த சும்பனுல், शीघ्रम् - விரைவில், आज्ञप्तः - உத்திரவிடப்பட்ட, सः - அந்த தூம்ரலோசனன் என்ற, दैत्यः - அஸுரன், सहस्राणां - षष्ट्या - ஆயிரங்களுடையஅறுபது எண்ணிக்கைகளைக்கொண்ட, असुराणाम् - அஸுரர்களுடைய, (கூட்டங்களினுல்,) वृतः - சூழப்பட்டு, द्रुतम् - விரைவாக, ययौ - சென்ருன்.

மஹர்ஷி சொன்னுர். (6)

(பொ - ரை) பிறகு சும்பனுல் நியமிக்கப்பட்ட அந்த தூம்ரலோசனன் என்ற அஸுரனும் அறுபதினுயிரம் அஸுரர்களோடு சூழப்பட்டவனுக தேவியினிடம் விரைவாகச் சென்ருன். (7)

स दृष्ट्वा तां ततो देवीं तुहिनाचलसंस्थिताम् ।
नगादोच्चैः प्रयाहीति मूलं शुम्भनिशुम्भयोः ॥ ८ ॥

(ப - ரை) ततः - பிறகு, सः - தூம்ரலோசனன், तुहिनाचल-संस्थिताम् - ஹிமவத்பர்வதத்தில் வஸிக்கின்ற, ताम् - அந்த, देवीम् - தேவியை, दृष्ट्वा - பார்த்து, शुम्भनिशुम्भयोः - சும்பநிசும்பர்களுடைய, मूलम् - ஸமீபத்தை, प्रयाहि - அடைவாயாக, इति - என்று, उच्चैः - உரத்தசப்தத்தோடு, जगाद - சொன்னாள்.

(பொ - ரை) பிறகு அந்த தூம்ரலோசனன் ஹிமாலயத்தில் வஸிக்கின்ற தேவியைக்கண்டு, 'சும்பநிசும்பனுடைய ஸமீபத்தை அடைவாயாக' என்று உரத்த சப்தத்தோடு சொன்னான். (8)

न चेत्प्रीत्याद्य भवती मद्भर्तारमुपैष्यति ।
ततो बलान्नयाम्यद्य केशाकर्षणविह्वलाम् ॥ ९ ॥

(ப - ரை) अद्य - இப்பொழுது, भवती - நீ, प्रीत्या - பிரியத்தோடுகூட, मद्-भर्तारम् - என்னுடைய யஜமானனாகிய சும்பனை, न-उपैष्यति-चेत् - அடையாவிட்டால், ततः - அக்காரணத்தால், अहम् - நான், अद्य - இப்பொழுதே, बलात् - பலவந்தமாக, केशाकर्षण-विह्वलाम् - கேசத்தைப் பிடித்து இழுத்து பரவசையாகச் செய்து, नयामि - கொண்டு போவேன்.

(பொ - ரை). ஓ தேவி! நீ ஸந்தோஷத்தோடு கூட என்னுடைய எஜமானனாகிய சும்பனுடைய ஸமீபத்தை யடையாவிட்டால், நான் இப்பொழுதே உன்னுடைய தலைமயிரைப்பிடித்து இழுத்து பரவசையாகச் செய்து பலாத்காரமாகக் கொண்டுபோவேன். (9)

देव्युवाच ॥ १० ॥

दैत्येश्वरेण प्रहितो बलवान् बलसंवृतः ।
बलान्नयसि मामेवं ततः किं ते करोम्यहम् ॥ ११ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னுள் :—

(ப - ரை) बलवान् - பலசாலியும், बलसंवृतः - ஸைன்யத்தால் சூழப்பட்டவனும், दैत्येश्वरेण - சும்பனுல், प्रहितः-அனுப்பப்பட்டவனுமான (நீ) बलात् - பலாத்காரத்தினுல், एवम् - இவ்விதம், माम् - என்னை, नयसि-கொண்டுபோகவேண்டுமேயாகில், ततः - அதற்காக, अहम् - நான், ते - உன்னிடம், किं-करोमि - என்னசெய்ய முடியும்.

தேவீ சொன்னுள். (10)

(பொ - ரை) ஓ தூம்ரலோசன! மிகுந்த பராக்ரமசாலியும், ஸைன்யத்தினுல் சூழப்பட்டவனும், சும்பனுல் தூதாக அனுப்பப்பட்டவனுமான நீ என்னை பலாத்காரமாகக் கொண்டு போக விரும்பினுல், உன்னேடு நான் என்ன செய்யமுடியும்? (11)

ऋषिरुवाच ॥ १२ ॥

इत्युक्तः सोऽभ्यधावत्तामसुरो धूम्रलोचनः ।
हुंकारेणैव तं भस्म सा चकाराम्बिका ततः ॥ १३ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னுர் :—

(ப - ரை) इति - இவ்விதம், उक्तः - சொல்லப்பட்ட, सः - அந்த, धूम्रलोचनः-தூம்ரலோசனன், என்ற, असुरः-அஸுரன், ताम् - அந்த தேவியின் (எதிரில்,) अभ्यधावत् - வேகத்துடன் தாவினுன். ततः - பிறகு, सा - அந்த, अम्बिका - தேவியான

வள், तम् - அவனை, हुंकारेण - एव - ஹுங்காரத்வனியினாலே, भस्म - சாம்பராக, चकार - செய்தாள்.

மஹர்ஷி சொன்னார். (12)

(பொ - ரை) இவ்விதம் தேவியினுடைய வார்த்தையைக்கேட்ட அந்த தூம்ரலோசனன், தேவியின் எதிரில் வேகமாகத் தாவினான். தேவியும் அவனைத் தன்னுடைய ஹுங்காரத்வனி(சப்த)யினாலேயே சாம்பராகச் செய்தாள். (13)

अथ क्रुद्धं महासैन्यमसुराणां तथाम्बिका ।
ववर्ष सायकैस्तीक्ष्णैस्तथा शक्तिपरश्वधैः ॥ १४ ॥

(ப - ரை) अथ - பிறகு, अम्बिका - தேவியானவள், तथा - அவ்விதம், क्रुद्धम् - கோபத்தையடைந்த, असुराणाम् - அஸுரர்களுடைய, महा-सैन्यम् - பெரிய ஸைன்யத்தை, तीक्ष्णैः - கூரியவைகளான, सायकैः - சரங்களினால், तथा - அப்படியே, शक्ति - परश्वधैः - வேல்களாலும், கோடாரிகளாலும், ववर्ष - பொழிந்தாள்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் அவ்விதம் கோபத்தை யடைந்த, அந்த அஸுரனுடைய பெரிய ஸைன்யத்தின் மீது கூரியவைகளான சரங்களையும், வேலாயுதங்களையும், கோடாரிகளையும் மழை போலப் பொழியத்தொடங்கினாள். (14)

ततो धुतसटः कोपात्कृत्वा नादं सुभैरवम् ।
चचारासुरसेनायां सिंहो देव्याः स्ववाहनः ॥ १५ ॥

(ப - ரை) ततः - பிறகு, कोपात् - கோபத்தினால், धुत-सटः - உதறப்பட்ட பிடரிரோமங்களோடு கூடிய, देव्याः - தேவியி

னுடைய, स्व-वाहनः - ஸொந்த வாஹனமாகிய, सिंहः- ஸிம்ஹ மானது, सु-भैरवम् - மிகவும் பயங்கரத்தோடு கூடிய, नादम् - சப்தத்தை, कृत्वा-செய்து, असुर-सेनायाम् - அஸுரஸேனையில், पपात - விழுந்தது.

(பொ - ரை) பிறகு கோபத்தின் காரணமாக உதறப் பட்ட (சிலிர்க்கப்பட்ட) பிடரி மயிர்களோடு கூடிய தேவி யினுடைய வாஹனமான ஸிம்ஹமானது, மிகவும் பயங்கர மானதோர் நாதத்தை எழுப்பிக்கொண்டு அஸுரஸைன் யத்திற்குள் புகுந்தது. (15)

தலைவன் (ஸேனநாயகன்) இல்லாத ஸைன்யங்களோடு தேவீ யுத்தம் செய்வது உசிதமல்ல என நினைத்து ஸிம்ஹம் யுத்தம் செய்தது என்பது கருத்து.

कांश्चित्करप्रहारेण दैत्यानास्येन चापरान् ।
आक्रान्त्या चरणेनान्यान् जघान स महासुरान् ॥ १६ ॥

(ப - ரை) सः - அந்த ஸிம்ஹமும், कर-प्रहारेण - கைகளு டைய அடிகளினுலும், कांश्चित् - சில, दैत्यान् - அஸுரர்களை, आस्येन - முகத்தினுலும், अपरान् - च - மற்றவர்களையோ, आक्रान्त्या - ஆக்ரமணத்தினுலும், अधरेण - च - உதட்டினுலும், अन्यान् - महासुरान् - வேறு சில பெரிய அஸுரர்களையும், जघान - கொன்றது.

(பொ - ரை) அந்த ஸிம்ஹமானது சில அஸுரர் களை கைகளால் அறைந்தும், வேறு சிலரை வாயினுல் கடித்தும், மற்றுஞ் சில மஹாஸுரர்களை பாதங்களினுல் ஆக்ரமித்து (மேலே பாய்ந்து) உதட்டினுலும் கடித்துக் கொன்றது. (16)

केषांचित्पाटयामास नखैः कोष्ठानि केसरी ।
तथा तलप्रहारेण शिरांसि कृतवान् पृथक् ॥ १७ ॥

(ப - ரை) केसरी - ஸிம்ஹமானது, केषांचित् - சில அஸுரர்களுடைய, कोष्ठानि - வயிற்றுக்குள்ளிருக்கிற சிறு குடல்களை, नखैः - நகங்களால், पाटयामास - கிறிப்பிளந்தது. तथा - அப்படியே, तल-प्रहारेण - உள்ளங்கைகளினுல், அடித்து, शिरांसि - தலைகளை, पृथक् - வேருக, कृतवान् - செய்தது.

(பொ - ரை) அந்த ஸிம்ஹமானது சில அஸுரர்களுடைய வயிற்றின் நடுவிலுள்ள சிறு குடல்களை நகங்களால் கிழித்தும், அவ்விதமே கைகளால் அறைந்தும், மற்றுஞ்சிலருடைய சிரஸுகளை வேருகவும் செய்தது.(17)

कोष्ठम् - கோஷ்டம்—ஹிருதயம் என்பதுமாம்.

तल-प्रहारः-தல-ப்ரஹாரः—தலம்—கை விரல்களை நிமிர்த்துப் பிடித்துக்கொள்வது. அடிக்க முற்படும்பொழுது இவ்விதம் கையை ஓங்கி அடிப்பது இயல்பு.

विच्छिन्नबाहुशिरसः कृतास्तेन तथापरे ।
पपौ च रुधिरं कोष्ठादन्येषां धुतकेसरः ॥ १८ ॥

(ப - ரை) तथा - அப்படியே, तेन - அந்த ஸிம்ஹத்தினுல், अपरे - மற்றவர்களும், विच्छिन्न-बाहु-शिरसः - விசேஷமாக சேதிக்கப்பட்ட கைகளோடும், சிரஸுகளோடும் கூடியவர்களாக, कृत्वा - செய்து, धुत-केसरः - உதறப்பட்ட பிடரிமயிர்களையுடையதாகக்கொண்டு, अन्येषाम् - மற்றுஞ் சிலருடைய, कोष्ठात् - உதரப்ரதேசத்திலிருந்து, रुधिरं - च - ரத்தத்தையும், पपौ - பருகியது.

(பொ - ரை) சௌர்யமுள்ள அந்த ஸிம்ஹமானது அப்பகைவர் ஸைந்யத்திலுள்ள சில அஸுரர்களுடைய கைகளையும், தலைகளையும் முறித்தும், பிடரிமயிர்களை உதறிக்கொண்டு உத்ஸாஹத்தோடு கூட வேறு சிலருடைய வயிற்றைக் கிழித்தும் அவர்களுடைய ரத்தத்தையும் பருகியது. (18)

क्षणेन तद्बलं सर्वं क्षयं नीतं महात्मना ।
तेन केसरिणा देव्या वाहनेनातिकोपिना ॥ १९ ॥

(ப - ரை) देव्याः-தேவியினுடைய, वाहनेन-வாஹனமாயும், अतिकोपिना - மிகுந்த கோபத்தையுடையதும், महात्मना - பெரிய சரீரத்தையுமுடைய, तेन - அந்த, केसरिणा - ஸிம்ஹத்தினல், क्षणेन - நொடிப் பொழுதில், तत् - அந்த, सर्वम् - எல்லா, वलम् - ஸைன்யமும், क्षयम् - நாசத்தை, नीतम् - அடையச் செய்தது.

(பொ - ரை) தேவியின் வாஹனமாயும், அதிக கோபத்தையுடையதும், பெரிய சரீரத்தோடு பலம் மிகுந்ததுமான அந்த ஸிம்ஹத்தினல் ஒரு நொடிப்பொழுதில் அப்பகைவர்களுடைய ஸைன்யமானது நாசம் செய்யப்பட்டது. (19)

श्रुत्वा तमसुरं देव्या निहतं धूम्रलोचनम् ।
बलं च क्षयितं कृत्स्नं देवीकेसरिणा ततः ॥ २० ॥

चुकोप दैत्याधिपतिः शुम्भः प्रस्फुरिताधरः ।
आज्ञापयामास च तौ चण्डमुण्डौ महासुरौ ॥ २१ ॥

(ப - ரை) तम् - அந்த, धूम्रलोचनम् - தூம்ரலோசன் என்ற, असुरम् - அஸுரனை, देव्या - தேவியினால், निहतम् - கொல்லப்பட்டான் (என்பதையும்) ततः - பிறகு, देवी-केसरिणा - தேவியினுடைய ஸிம்ஹத்தினால், कृत्स्नम् - முழுவதுமான, सैन्यम् - ஸைன்யமும், क्षयितम् - நாசமாகியது, (என்பதையும்) श्रुत्वा - கேட்டு, दैत्याधिपतिः - அஸுரர்களுக்குத் தலைவனான, शुम्भः - சும்பன், प्र-स्फुरिताधरः - துடிக்கப்பட்ட உதட்டை உடையவனாய்க் கொண்டு, चुकोप - கோபித்தான், तौ - அந்த, चण्ड-मुण्डौ - சண்டன் முண்டன் என்ற, महासुरौ - (இரண்டு) அஸுரர்களையும், आज्ञापयामास-கட்டளையிட்டான்.

(பொ - ரை) தேவி அந்த தூம்ரலோசனன் என்ற அஸுரனை வதம் செய்ததையும், அவனுடைய வாஹன மாகிய ஸிம்ஹமானது அவனுடைய ஸைன்யங்களை அழித்ததையும் கேழ்விப்பட்ட அஸுரர்களுக்குத் தலைவனான அந்த சும்பன், அடங்காக் கோபத்துடன் உதடு துடிக்க, அருகிலிருந்த சண்டமுண்டர்களைப் பார்த்து இவ்விதம் கட்டளையிட்டான். (20, 21)

हे चण्ड हे मुण्ड बलैर्बहुभिः परिवारितौ ।
तत्र गच्छत गत्वा च सा समानीयतां लघु ॥ २२ ॥

(ப - ரை) हे चण्ड ! - ஓ சண்டனே! हे मुण्ड ! - ஓ முண்டனே! बहुभिः - கணக்கற்ற, बलैः - ஸைன்யங்களோடு, परि-वारितौ-சூழப்பட்டவர்களாக, तत्र-அவ்விடத்திற்கு, गच्छत- (நீங்கள் இருவரும்) செல்லுங்கள், गत्वा - அவ்விடத்திற் குச் சென்று, सा-च - அவளையும், लघु - தாமதியாமல், समा-नीयताम् - கொண்டுவாருங்கள்.

(பொ - ரை) ஓ சண்டமுண்டர்களே! நீங்கள் இருவரும் கணக்கற்ற ஸேனைகளைத் திரட்டிக்கொண்டு, அந்த ஹிமாலயத்தின் தாழ்வரைக்குச் சென்று, அங்கு வாஸம் செய்கின்ற அப்பெண்ணைத் தாமதியாமல் கொண்டு வாருங்கள். (22)

केशेष्वाकृष्य बद्ध्वा वा यदि वः संशयो युधि ।
तदाशेषायुधैः सर्वैरसुरैर्विनिहन्यताम् ॥ २३ ॥

(ப - ரை) केशेषु - கேசங்களில், (கைகளைக் கொடுத்து) आकृष्य - இழுத்தாவது, बध्द्वा-वा - கயிறு கொண்டு இறுகப் பிணித்தாவது (இவ்விடம் கொண்டுவாருங்கள்) युधि - யுத்தத்தில், वः - உங்களுக்கு, संशयः - यदि - ஸந்தேஹம் உண்டாகில், तदा - அப்பொழுது, सर्वैः-ஸமஸ்தமான, असुरैः - அஸுரர்களோடும், अशेषायुधैः - எல்லா ஆயுதங்களினுலும், विनिहन्यताम् - கொன்று விடுங்கள்.

(பொ - ரை) நீங்கள் இருவரும் அவளைத் தலைமுடிகளில் கைகளைக் கொடுத்துக் கொண்டு வாருங்கள். அல்லது கயிற்ருல் நன்கு பிணித்துக் கட்டிக்கொண்டு வாருங்கள். உங்களுக்கு யுத்தம் செய்வதில் ஸந்தேஹம் ஏதாவது உண்டானுல், எல்லா அஸுரர்களையும் ஒன்று திரட்டி ஆயுதங்களால் அவளைக்கொன்றுவிடுங்கள். (23)

இவ்விடத்தில் இரண்டு வகையாக தேவியைப் பிடித்துக் கொண்டு வரவேணுமெனக் கட்டளையிடுகிருன். ஒன்று தலைமயிரைப் பிடித்து இழுத்து வருவது. மற்ருென்று கயிற்றினுல் நன்கு பிணித்துக் கட்டி இழுத்துவருவது என்பது.

तस्यां हतायां दुष्टायां सिंहे च विनिपातिते ।
शीघ्रमागम्यतां बद्ध्वा गृहीत्वा तामथाम्बिकाम् ॥ २४ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
धूम्रलोचनवधो नाम षष्ठोऽध्यायः ॥ ६ ॥

(ப - ரை) दुष्टायाम् - துஷ்டகுணமுள்ள, तस्याम् - அந்த தேவி, हतायाम् - கொல்லப்பட்டாலும், सिंहे - च - ஸிம்ஹமும், वि-निपातिते - விழ்த்தப்பட்டாலும், अथ - பிறகு, ताम् - अम्बिकाम् - அந்த அமபிகையை, गृहीत्वा - பிடித்து, बद्ध्वा - கட்டி, शीघ्रम् - வேகமாக, आगम्यताम् - வாருங்கள்.

(பொ - ரை) துஷ்டத்தன்மையுடன் கூடிய அவளை யும, ஸிம்ஹத்தையும் கொன்றுவது, இல்லாவிட்டால் அவளைப்பிடித்துக் கட்டிக் கொண்டாவது நீங்கள் விரைவில் வாருங்கள். (24)

இந்த ச்லோகத்திற்கு, அவளை வதம் செய்து அவளுடைய சவத்தையாவது, அப்படியில்லாவிட்டால் அந்தத்தேவியை ஜீவனுடுகூடப் பிடித்துக்கட்டி, தலைமயிரைப் பிடித்து இழுத்துக் கொண்டாவது வாருங்கள். என்று சிலர் உரை எழுதுகின்றனர்.

இவ்விடத்தில், முதலில் பொங்கி எழுந்த கோபத்தின் காரணத்தினுலுண்டாகிய மனவெழுச்சியால் அவளைக் கொல்லச் சொன்னுன். பிறகு கொஞ்சம் மனவெழுச்சி சமனமானதும் கட்டிப் பிடித்துக்கொண்டு வரச்சொன்னுன் என்பது கருத்து. இந்நிகழ்ச்சி மனிதஸ்வபாவத்திற்கு இயற்கையேயாகும்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் தூம்ரலோசன வதம் என்ற ஆருவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ सप्तमोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

आज्ञप्तास्ते ततो दैत्याश्चण्डमुण्डपुरोगमाः ।
चतुरङ्गबलोपेता ययुरभ्युद्यतायुधाः ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) ततः - பிறகு, आज्ञप्ताः - நியமிக்கப்பட்டவர்களான, चण्ड-मुण्ड-पुरोगमाः - சண்டனையும், முண்டனையும் முன்னிட்டுக்கொண்டவர்களான, ते - அந்த, दैत्याः - அஸுரர்கள், चतुरङ्गबलोपेता - சதுரங்க ஸைன்யங்களோடுகூட, अभ्युद्यतायुधाः - உயர்த்திப் பிடித்த ஆயுதங்களையுடையவர்களாக, ययुः - சென்றனர்.

மஹர்ஷி சொன்னார்

(பொ - ரை) பிறகு சும்பாஸுரனால் நியமிக்கப்பட்ட அந்த அஸுரர்கள் சண்டன் முண்டன் இவ்விருவர்களையும் முன்னிட்டுக்கொண்டு சதுரங்க ஸைன்யங்களோடுகூட, ஆயுதங்களை உயர்த்திப்பிடித்துக்கொண்டு யுத்தத்திற்குச் சென்றனர். (2)

ददृशुस्ते ततो देवीमीषद्धासां व्यवस्थिताम् ।
सिंहस्योपरि शैलेन्द्रशृङ्गे महति काञ्चने ॥ ३ ॥

(ப - ரை) ततः - பிறகு, ते - அவர்கள், महति - உயர்ந்ததாயும், काञ्चने - தங்கமயமாயுமிருக்கிற, शैलेन्द्र-शृङ्गे - ஹிமயத்தின் கொடுமுடியில், सिंहस्य-उपरि - ஸிம்ஹத்தின் மீது,

ईषद्धासाम् - சிறிது புன்முறுவலுடன், व्यवस्थिताम् - இருக்கிற, देवीम् - தேவியை, ददृशुः - பார்த்தனர்.

(பொ - ரை) பிறகு சண்ட முண்டர்கள் முதலிய அஸுரர்கள் உயர்ந்ததாயும், தங்கமயமாயுமிருக்கிற ஹிமாலயத்தினுடைய கொடுமுடியில் ஸிம்ஹத்தின் மீது சிறிது மலர்ந்த மந்தஹாஸத்தோடு அமர்ந்திருக்கும் அம்பிகையைப் பார்த்தனர். (3)

ते दृष्ट्वा तां समादातुमुद्यमं चक्रुरुद्यताः ।
आकृष्टचापासिधरास्तथान्ये तत्समीपगाः ॥ ४ ॥

(ப - ரை) उद्यताः - உத்ஸாஹத்தோடு கூடிய, ते - அவர்கள், तां - தேவியை, दृष्ट्वा - பார்த்து, समादातुम् - பிடிப்பதற்கு, उद्यमम् - முயற்சியை, चक्रुः - செய்தனர். तथा - அவ்விதமே, अन्ये - மற்றவர்களும், आकृष्ट - चापासि-धराः - உருவப்பட்ட வில்லோடும், வாளோடும் கூடியவர்களாக, तत् - समीपगाः - அந்த தேவியினுடைய ஸமீபத்தையும் அடைந்தனர்.

(பொ - ரை) உத்ஸாஹத்தோடு கூடிய அஸுரர்களிற் சிலர் அவளைப் பார்த்ததும் பிடிப்பதற்கு முயற்சித்தனர். அவ்விதமே மற்றவர்களும் உருவிய வில்லோடும் வாளோடும் கூடியவர்களாக தேவியின் ஸமீபத்தையடைந்தனர். (4)

आकृष्टचापासिधराः-ஆக்ருஷ்டசாபாஸிதரா:—காது வரையில் இழுத்து நாணேற்றிய வில்லோடும், உறையிலிருந்து உருவிய வாளோடும் கூடியவர்கள் என்பதும் பொருளாம்.

அவர்கள் தேவியை யணுகினர். அல்லது தேவியைப் பிடிப்பதில் முயற்சியுள்ள அஸுரர்களை ரக்ஷிப்பதற்கு அவளுடைய ஸமீபத்தை யடைந்தனர் என்றும் சொல்லலாம்.

ततः कोपं चकारोच्चैरम्बिका तानरीन् प्रति ।
कोपेन चास्या वदनं मसीवर्णमभूत्तदा ॥ ५ ॥

(ப - ரை) ततः - பிறகு, अम्बिका - தேவியானவள், तान् - அந்த, अरीन्-प्रति - பகைவர்களைக்குறித்து, उच्चैः - மிகவும், कोपम् - கோபத்தை, चकार - செய்தாள். तदा - அப்பொழுது, अस्याः - அவளுடைய, वदनम् - முகமானது, मसीवर्णम् - கருப்பு வர்ணமாக, अभूत् - ஆகியது.

(பொ - ரை) பிறகு தேவியானவள் பகைவர்களைக் கண்டதும் அடங்காக் கோபங் கொண்டாள். அக்கோபத்தின் காரணமாக அவளுடைய முகமானது மைபோலக் கருத்தது. (5)

இவ்விடத்தில் சண்டன் முதலியவர்கள் மிகவும் தாமஸ குணத்துடன் கூடியவர்களாகையால் அவர்களை அழிப்பதற்கு தாமஸீ தேவியினுடைய அவதாரம் சொல்லப்படுகிறது.

भ्रुकुटीकुटिलात्तस्या ललाटफलकाद् द्रुतम् ।
काली करालवदना विनिष्क्रान्तासिपाशिनी ॥ ६ ॥

(ப - ரை) तस्याः - அவளுடைய, भ्रुकुटी-कुटिलात् -வளைந்த புருவத்தோடு கூடிய, ललाट-फलकात् - விசாலமான நெற்றியிலிருந்து, द्रुतम् - சீக்கிரமாக, करालवदना - பயங்கரமான முகத்தை யுடையவளும், असि - पाशिनी - வாளையும், கயிற்றையும் கையில் தரித்தவளுமான, काली - காளீ என்ற பெயரோடு கூடிய தேவியானவள், विनिष्क्रान्ता - வெளிப்பட்டாள்.

(பொ - ரை) அப்பொழுது அவளுடைய வளைந்த புருவத்தோடு கூடிய விசாலமான நெற்றியிலிருந்து, பயங்கரமான முகத்தோடு, கையில் வாளையும் கயிற்றையும் தரித்துக்கொண்டு வெகு வேகமாக காளீ என்ற தேவியானவள் வெளிப்பட்டாள். (6)

विचित्रखट्वाङ्गधरा शिरोमालाविभूषणा ।
द्विपिचर्मपरीधाना शुष्कमांसातिभैरवा ॥ ७ ॥
अतिविस्तारवदना जिह्वाललनभीषणा ।
निमग्नारक्तनयना नादापूरितदिङ्मुखा ॥ ८ ॥

(ப - ரை) सा - தேவி, विचित्र - खट्वाङ्गधरा - விசித்திரமான கட்வாங்கத்தைத் தரித்துக் கொண்டும், शिरोमाला-विभूषणा - மண்டையோடுகளை மாலையாயணிந்தவளும், द्वीपि-चर्म-परीधाना- புலித்தோலை இடுப்பிலணிந்தவளும், शुष्कमांसा - உலர்ந்த மாம்ஸத்தையுடையவளும், अति - भैरवा - மிகவும் பயங்கரமாயுள்ளவளும், अति-विस्तार-वदना - மிகவும் விஸ்தாரமான முகத்தையுடையவளும், जिह्वा-ललन-भीषणा - தொங்குகிற நாக்கால் பயங்கரமானவளும், निमग्नारक्तवदना - குழிந்ததும், சுற்றிலும் சிவந்ததுமான கண்களோடு கூடியவளும், नादा-पूरितदिङ्मुखा - கர்ஜனையால் நிரம்பிய திசைகளையுடையவளுமாவாள்.

(பொ ரை) அந்த காளிகா தேவியானவள், விசித்ரமான மண்டையோடுகள் கோர்க்கப்பட்ட தண்டத்தையுடையவளும், மனிதர்களின் மண்டையோடுகளை மாலையாக அணிந்தவளும், புலித்தோலை ஆடையாயணிந்தவளும், உலர்ந்த மாம்ஸத்தோடு கூடியவளும், மிகவும் பயங்

கர்மான வடிவத்தோடும், விசாலமான முகத்தோடு கூடியவளும், நீண்டு தொங்குகிற நாக்கினுல் பயங்கரமாயிருப்பவளும், குழி விழுந்து சுற்றிலும் சிவந்ததுமான கண்களையுடையவளும், கண்ட (தொண்டை) கர்ஜனையால் எட்டு திக்குகளையும் நிரப்பிக்கொண்டுமிருப்பவளுமாவாள். (7, 8)

खट्वाङ्गधरा - கட்வாங்கதரா—நரமுண்டமாலே. அதாவது மனுஷ்யர்களுடைய தலைகள் கோர்த்த தண்டம். (குண்டாந்தடி) இதுவே கட்வாங்கம் என்ற தண்டு எனவும் ஆம்.

शुष्कमांसा - சுஷ்கமாம்ஸா—எலும்பும் தோலுமுள்ள சரீரம், என்பதாம்.

सा वेगेनाभिपतिता घातयन्ती महासुरान् ।
सैन्ये तत्र सुरारीणामभक्षयत तद्बलम् ॥ ९ ॥

(ப - ரை) सा - அந்த காளிகாதேவீ, वेगेन - வேகத்தோடு, अभिपतिता - எதிரில் குதித்தாள். महासुरान् - பெரிய அஸுரர்களை, घातयन्ती - அடித்துக்கொண்டு, तत्र - அந்த, सैन्ये - ஸைன்யத்தில், सुरारीणाम् - அஸுரர்களுடைய, तद्बलम् - அந்த ப்ரஸித்தமான ஸைன்யத்தை, अभक्षयत - விழுங்கினுள்.

(பொ - ரை) அந்தக் காளிகா தேவியானவள், வெகு வேகத்தோடு எதிரில் குதித்து, அந்தப் பெரிய அஸுரர்களை அடித்தாள். அவர்களுடைய ப்ரஸித்தமான அந்த ஸைன்யத்தையும் விழுங்கினுள். (9)

पार्ष्णिग्राहाङ्कुशग्राहीयोधघण्टासमन्वितान् ।
समादायैकहस्तेन मुखे चिक्षेप वारणान् ॥ १० ॥

(ப - ரை) पार्ष्णिग्राहाङ्कुशग्राहीयोधघण्टासमन्वितान् - யானையினுடைய பின்புறத்தை ரக்ஷிக்கிறவனேடும், முன்புறத்தி

லிருக்கிற தோட்டியோடும், யானையின் மீதிருக்கிற யுத்த வீரனுடனும், பின்பக்கம் தொங்குகின்ற மணிகளோடும் கூடிய, वारणान् - யானைகளை, एक-हस्तेन - ஒருகையினுல், समादाय - பிடித்துச் சுருட்டி, मुखे - வாயில், चिक्षेप - எறிந்தாள்.

(பொ - ரை) அக்காளிகாதேவியும் பார்ஷ்ணிக் ராஹனேடும், (பின் செல்லுகிறவன்) அங்குசக்ராஹியோடும், (மாவெட்டி) யானைமீதிருக்கும் போர் வீரனேடும், இரு புறமும் தொங்குகின்ற மணிகளோடும் கூடிய யானைகளை ஒரு கையினுல் வாரியெடுத்துப் பந்து போல சுருட்டி விழுங்கினுள். (10)

पार्ष्णिग्राही - பார்ஷ்ணிக்ராஹீ - யானையினுடைய பின்புறத்தைக் காப்பவன்.

अङ्कुशग्राही - அங்குசக்ராஹீ - யானையின் முன்புறத்தில் நிற்கின்ற தோட்டி - மாவெட்டிக்காரன்.

घण्टा - கண்டா - இது யானையின் முதுகில் இரு புறமும் தொங்கவிடப்பட்ட அலங்கார மணிகளாகும். இந்த மணிகள் யானையினுடைய சோம்பல், உறக்கம் இவைகளைத் தடுப்பனவாம்.

तथैव योधं तुरगै रथं सारथिना सह ।
निक्षिप्य वक्त्रे दशनैश्चर्वयन्त्यतिभैरवम् ॥ ११ ॥

(ப - ரை) तथा-एव - அதுபோலவே, योधम् - குதிரை வீரனை, तुरगैः-குதிரைகளோடும், रथम् - தேரையும், सारथिना-सह - ஸாரதியோடு கூடவும், वक्त्रे - வாயில், निक्षिप्य - வைத்துக்கொண்டு, दशनैः - பற்களால், अति - भयंकरम् - மிகவும் பயங்கரமாயிருக்கும்படி, चर्वयन्त - மென்று தின்றுள்.

(பொ - ரை) அது போலவே அந்த காளிகாதேவீ குதிரை வீரர்களை குதிரைகளோடும், தேர்களை ஸாரதிகளோடும் வாயில் வைத்துப் பற்களால் மிகவும், பயங்கரமாயிருக்கும்படி கடித்துத்தின்ருள். (11)

एकं जग्राह केशेषु ग्रीवायामथ चापरम् ।
पादेनाक्रम्य चैवान्यमुरसान्यमपोथयत् ॥ १२ ॥

(ப - ரை) एकम् - ஒரு அஸுரனை, केशेषु - தலைமுடிகளில், जग्राह - பிடித்தும், अथ - பிறகு, अपरं - च - மற்ருெருவனையும், ग्रीवायाम् - கழுத்தில், (பிடித்தும்) अन्यम् - வேருெருவனை, पादेन - एव - காலினலேயே, आक्रम्य - மிதித்தும், अन्यम् - மற்ருெருவனை, उरसा - च - மார்பினலும், अपोथयत् - நாசம் செய்தாள்.

(பொ - ரை) அக்காளிகாதேவீ ஓரஸுரனை தலைமுடிகளிலும், மற்ருெருவனைக் கழுத்திலும் பிடித்தாள், வேருெருவனைக் காலால் மிதித்தும், இன்னுமொருவனை மார்பிலடித்தும் கொன்ருள். (12)

तैर्मुक्तानि च शस्त्राणि महास्त्राणि तथासुरैः ।
मुखेन जग्राह रुषा दशनैर्मथितान्यपि ॥ १३ ॥

(ப - ரை) तैः - அந்த, असुरैः - அஸுரர்களால், मुक्तानि - விடப்பட்ட, शस्त्राणि - ஆயுதங்களும், महास्त्राणि - च - பெரிய பாணங்களும், तथा - அவ்விதமே, रुषा - கோபத்தோடு கூடிய, मुखेन - முகத்தினல், जग्राह - பிடித்து, दशनैः - பற்களால், मथितानि - अपि - கடித்துத்தின்னவும் செய்தாள்.

(பொ - ரை) அக்காளிகாதேவீ சண்டன் முண்டன் முதலிய அஸுரர்களால் விடப்பட்ட ஆயுதங்களையும், பெரிய பாணங்களையும், அடங்காக் கோபத்துடன் முகத்திஞல் பிடித்துக்கடித்துப் புசித்தாள். (13)

बलिनां तद्बलं सर्वमसुराणां दुरात्मनाम् ।
ममर्दाभक्षयच्चान्यानन्यांश्चाताडयत्तथा ॥ १४ ॥

(ப - ரை) महात्मनाम् - வலுவுள்ள சரீரத்தோடு கூடியவர்களும், बलिनाम् - பலசாலிகளாயிருப்பவர்களுமான, असुराणाम् - அஸுரர்களுடைய, तत् - அந்த, सर्वम् - ஸமஸ்தமான, बलम् - ஸைன்யத்தை, ममर्द - அழித்தாள். अन्यान् - च- மற்றும் சிலரையும், अभक्षयत् - புசித்தாள். तथा - அவ்விதமே, अन्यान् - च - வேறு சிலரையும், अताडयत् - அடித்தாள்.

(பொ - ரை) அக்காளிகா தேவீ; வலியதான சரீரத்தோடு கூடியவர்களாயும், பலசாலிகளுமான அந்த அஸுரர்களுடைய சதுரங்கஸைன்யம் முழுவதையும் அழித்தும், சிலரைப்புசித்தும், வேறு சிலரை அடிக்கவும் செய்தாள். (14)

असिना निहताः केचित्केचित्खट्वाङ्गताडिताः ।
जग्मुर्विनाशमसुरा दन्ताग्राभिहतास्तथा ॥ १५ ॥

(ப - ரை) केचित् - சில, असुराः - அஸுரர்கள், असिना - வாளால், निहताः - கொல்லப்பட்டனர். केचित् - சிலர், खट्वाङ्गताडिताः - மண்டையோடுகள் கோர்க்கப்பட்ட தண்டத்திஞல் அடிக்கப்பட்டனர். तथा - அவ்விதமே, दन्ताग्राभिहताः- பற்களுடைய நுனிகளால் கடிக்கப்பட்டு, विनाशम् - நாசத்தை, जग्मुः - அடைந்தனர்.

(பொ - ரை) சில அஸுரர்கள் காளிகாதேவியினுடைய வாளால் வெட்டுண்டு இறந்தனர்; வேறு சிலர் மண்டையோடுகள் கோர்க்கப்பட்ட தண்டத்தினுல் அடிபட்டு மரித்தனர். மற்றும் சிலர் பற்களுடைய நுனிகளால் கடிக்கப்பட்டு நாசத்தையுமடைந்தனர். (15)

क्षणेन तद्बलं सर्वमसुराणां निपातितम् ।
दृष्ट्वा चण्डोऽभिदुद्राव तां कालीमतिभीषणाम् ॥ १६ ॥

(ப - ரை) **क्षणेन** - ஒரு க்ஷணத்தில், **असुराणाम्**-அஸுரர்களுடைய, **तत् - बलम्** - அந்த ஸைன்யம், **सर्वम्** - முழுவதும், **निपातितम्** - வீழ்த்தப்பட்டதை, **दृष्ट्वा** - பார்த்து, **चण्डः** - சண்டன், **अति - भीषणाम्**-மிகவும் பயங்கரமாயிருக்கிற, **ताम्**-அந்த, **कालीम्**-காளிகாதேவியை, **अभि - दुद्राव** - (நோக்கி) எதிரில் ஓடிவந்தான்.

(பொ - ரை) காளிகாதேவீ ஒரு நொடிப்பொழுதில் அஸுரர்களுடைய சதுரங்கஸைன்யங்கள் முழுவதையும் யுத்தகளத்தில் வீழ்த்தியதைக்கண்ட சண்டன், அடங்காக் கோபம் கொண்டு காளியைத் தாக்குவதற்கு எதிரில் ஓடிவந்தான். (16)

शरवर्षैर्महाभीमैर्भीमाक्षीं तां महासुरः ।
छादयामास चक्रैश्च मुण्डक्षिप्तैः सहस्रशः ॥ १७ ॥

(ப - ரை) **महासुरः** - பெரிய அஸுரனுகிய சண்டன், **महा-भीमैः** - மிகவும் பயங்கரங்களான, **शरवर्षैः** - சரவர்ஷங்களாலும், **मुण्डः** - முண்டன், **सहस्रशः** - அனேகம் தடவை, **क्षिप्तैः**- எறியப்பட்ட, **चक्रैः** - **च** - சக்ராயுதங்களினுலும், **भीमाक्षीम्** -

பயங்கரமான கண்களையுடைய, ताम् - அக்காளிகாதேவியை, छादयामास - மறைத்தான்.

(பொ - ரை) உடனே சண்டன் குரூரமான கண்களையுடைய அந்த காளிகாதேவியின்மீது பயங்கரமான பாணங்களைப் பொழியத்தொடங்கினன். அவ்விதமே முண்டனும் ஆயிரக்கணக்கான சக்ராயுதங்களை தேவியின் மீது எறிந்து அவளை மறைத்து விட்டான். (17)

சண்டன் சரவர்ஷங்களைப் பொழிந்தும், முண்டன் பல தடவை எறியப்பட்ட சக்ராயுதங்களைக் கொண்டும் தேவியை மறைத்தான் என்பது ஸாரம். முன் ச்லோகத்தில் 'சண்டன்' எதிர்த்து ஓடிவந்தான் என்று சொல்லப்பட்டது. அவ்விடத்தில் முண்டனும் எதிர்த்து ஓடிவந்தான் எனச்சேர்க்கவேண்டும்.

तानि चक्राण्यनेकानि विशमानानि तन्मुखम् ।
बभुर्यथार्कबिम्बानि सुबहूनि घनोदरम् ॥ १८ ॥

(ப - ரை) तानि - அந்த, अनेकानि - அனேகங்களான, चक्राणि - சக்ராயுதங்கள், तत् - मुखम्-அந்த தேவியினுடைய முகத்தை, (வாயை) विशमानानि - பிரவேசித்தபொழுது, घनोदरम् - மேகத்தினுடைய நடுவையடைந்த, सु-बहूनि-கணக்கற்றவைகளான, अर्क-बिम्बानि-यथा - சூரியபிம்பங்களைப்போல, बभुः - பிரகாசித்தன.

(பொ - ரை) கணக்கற்ற சக்ராயுதங்களும், தேவியினுடைய முகத்தை(வாயை)யடைந்தவுடன், மேகத்தின் நடுவிற் செல்லுகின்ற சூரியமண்டலங்களைப்போல ப்ரகாசித்தன.

ततो जहासातिरुषा भीमं भैरवनादिनी ।
काली करालवक्त्रान्तर्दुर्दर्शदशनोज्ज्वला ॥ १९ ॥

(ப - ரை) ततः - பிறகு,- भैरव - नादिनी - பயங்கரமான சப்தத்தோடு கூடியவளும், कराल-वक्त्रान्त-दुर्दर्श-दशनोज्ज्वला - பயங்கரமான வாயினுடைய மத்தியத்தில் பார்க்கமுடியாத பற்களால் பிரகாசித்துக்கொண்டிருக்கிறவளுமான, काली - காளிகாதேவீ, अति - रुषा - அளவுகடந்த கோபத்தோடு, भीमम् - பயங்கரமாக, जहास - சிரித்தாள்.

(பொ - ரை) பிறகு பயங்கரமான சப்தத்தோடு அட்டஹாஸம் செய்து கொண்டு, அதிபயங்கரமான முகத்தின் நடுவில் பார்ப்பதற்கும் முடியாத கோரைப்பற்களோடு பிரகாசிக்கின்ற அந்த தேவியானவள் மிகுந்த கோபத்துடன் பயங்கரமாகச்சிரிததாள். (19)

उत्थाय च महासिं हं देवी चण्डमधावत ।
गृहीत्वा चास्य केशेषु शिरस्तेनासिनाच्छिनत् ॥ २० ॥

(ப - ரை) देवी - தேவியானவள், महासिम् - பெரிய கத்தியை, उत्थाय - உயர்த்திப்பிடித்து, हम् - ஹம் என்ற சப்தத்தோடு, चण्डम् - சண்டனை, अधावत - च - எதிர்த்து ஓடியும் வந்தாள். अस्य - இவனுடைய, केशेषु - தலைமுடிகளில், गृहीत्वा - பிடித்து, तेन - அந்த, असिना - கத்தியினால், शिरः च - தலையையும், अच्छिनत् - கொய்தாள்.

(பொ - ரை) அக்காளிகாதேவீ வலுவுள்ள பெரிய கத்தியை உயர்த்திப்பிடித்துக் கொண்டு ஹம் என்ற சப்தத்தோடு, சண்டனுடைய எதிரில் ஓடிவந்து அவனுடைய தலைமயிரைப்பிடித்து இழுத்து, அந்த வாளால் அவனுடைய தலையைக் கொய்தாள். (20)

"हम् - ஹம்" என்ற ஹூங்கார சப்தமானது எல்லைமீறிய கோபம் உண்டாகும் பொழுது உண்டாவது இயற்கை.

अथ मुण्डोऽभ्यधावत्तां दृष्ट्वा चण्डं निपातितम् ।
तमप्यपातयद् भूमौ सा खड्गाभिहतं रुषा ॥ २१ ॥

(ப - ரை) अथ - பிறகு, मुण्डः - முண்டன், चण्डम् - சண்டனை, नि-पातितम् - வீழ்த்தியதை, दृष्ट्वा - பார்த்து, ताम्- அக்காளிகாதேவியை (எதிர்த்து) अभ्यधावत् - ஓடிவந்தான். सा - अपि - அந்த தேவியும், तम् - அவனை, रुषा - கோபத்தினுல், खड्गाभिहतम् - வாளால் அடித்து, भूमौ - பூமியில், अपातयत् - வீழ்த்தினுள்.

(பொ - ரை) பிறகு சண்டன் அடிபட்டு நிலத்தில் விழுந்ததைப் பார்த்த அவனுடைய ஸஹோதரனுன முண்டன் மூர்க்காவேசத்தோடு தேவியின் எதிரில் ஒடிவந்தான். அவனையும் கோபத்தோடுகூடப் பிடித்துத் தனது கத்தியினுல் அடித்து நிலத்தில் சாய்த்தாள். (21)

खड्गाभिहतम् - கட்காபிஹதம் - முன்பு உயர்த்திப்பிடித்த கத்தியினுலேயே அடித்தாள் என்பது கருத்து.

हतशेषं ततः सैन्यं दृष्ट्वा चण्डं निपातितम् ।
मुण्डं च सुमहावीर्यं दिशो भेजे भयातुरम् ॥ २२ ॥

(ப - ரை) ततः - பிறகு, हत-शेषम् - (கொல்லப்பட்டது போக) மீதியிருக்கிற, सैन्यम् - அஸுரஸைன்யமானது, चण्डम् - சண்டனையும், सु-महा-वीर्यम् - மஹாவீர்யனுன, मुण्डं-च- முண்டனையும், निपातितम् - வீழ்த்தியதை, दृष्ट्वा - பார்த்து, भयातुरम् - பயத்தால் கலக்கமடைந்து, दिशः - திக்குகளைபும், भेजे - அடைந்தது.

(பொ - ரை) பிறகு தேவியினுல் கொல்லப்பட்டது போக எஞ்சிய ஸைன்யமானது, சண்டனையும், மஹா

பராக்ரமசாலியான முண்டனையும் நிலத்தில் வீழ்த்திய தைக்கண்டு, பயத்தால் கலக்கமடைந்து நான்கு திக்கு களிலும் சிதறிச் சென்றுவிட்டது. (22)

शिरश्चण्डस्य काली च गृहीत्वा मुण्डमेव च ।
प्राह प्रचण्डाट्टहासमिश्रमभ्येत्य चण्डिकाम् ॥ २३ ॥

(ப - ரை) काली - காளிகாதேவீ, चण्डस्य - சண்டனு டைய, शिर: - च - சிரஸையும், मुण्डम्-एव-च-முண்டனுடைய சிரஸையும், गृहीत्वा - எடுத்துக்கொண்டு, प्र-चण्डाट्टहास-मिश्रम् - மிகவும் கோரமான அட்டஹாஸத்தோடு கூட, चण्डिकाम् - சண்டிகையை, अभ्येत्य - அடைந்து, प्राह - சொன்னாள்.

(பொ - ரை) காளிகாதேவியானவள் சண்டமுண் டர்களுடைய சிரஸுகளை எடுத்துக் கொண்டு, மிகவும் கோரமான அட்டஹாஸத்தோடுகூட சண்டிகா தேவி யைப்பார்த்துச் சொன்னாள். (23)

मया तवात्रोपहृतौ चण्डमुण्डौ महापशू ।
युद्धयज्ञे स्वयं शुम्भं निशुम्भं च हनिष्यसि ॥ २४ ॥

(ப - ரை) अत्र - இந்த யுத்தமாகிய யாகத்தில், तव- உனக்கு, चण्डमुण्डौ - சண்டன் முண்டன் என்றவர்களை, मया - என்னால், उपहृतौ - கொண்டுவரப்பட்டன. त्वम् - நீ, युद्ध-यज्ञे - யுத்தமென்னும் யாகத்தில், महा - पशू - பெரிய பசுக் களான, शुम्भं-निशुम्भं-च - சும்பன் என்பவனையும், நிசும்பன் என்பவனையும், हनिष्यसि - கொல்லப்போகிறாய்.

(பொ - ரை) ஓ தேவி! இந்த யுத்தமென்னும் யாகத் திலே சண்டன், முண்டன் என்ற இரண்டு பசுக்களை நான்

உனக்குக் கொண்டுவந்து கொடுத்தேன். அவ்விதமே சும்பன், நிசும்பன் என்ற இரு பசுக்களையும் இந்த யுத்தமென்னும் யஜ்ஞத்தில் நீயே கொல்லப்போகிறாய். (24)

ऋषिरुवाच ॥ २५ ॥

तावानीतौ ततो दृष्ट्वा चण्डमुण्डौ महासुरौ ।
उवाच कालीं कल्याणी ललितं चण्डिका वचः ॥ २६ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) ततः - பிறகு, कल्याणी - நல்வார்த்தைகளைச் சொல்லுகிற, चण्डिका - சண்டிகையானவள், तौ - அந்த, महासुरौ - பெரிய அஸுரர்களான, चण्डमुण्डौ - சண்டமுண்டர்களை, आनीतौ - கொண்டு வந்ததை, दृष्ट्वा - பார்த்து, कालीम्- காளியை, (குறித்து) ललितम्-மனோஹரமான, वचः - வார்த்தைகளை, उवाच - சொன்னாள்.

மஹர்ஷி சொன்னார்— (25)

(பொ - ரை) பிறகு நல்மொழிநவிலும் அச்சண்டிகா தேவியானவள், அந்த மஹாஸுரர்களான சண்டமுண்டர்களைக் கொண்டுவந்த காளிகாதேவியைப்பார்த்து, இனிமையான வார்த்தைகளைச் சொன்னாள். (26)

काली - காளீ - நெற்றியிலிருந்து உண்டானவள்.

चण्डिका - சண்டிகா - கௌசிகீ தேவியாவள்.

यस्माच्चण्डं च मुण्डं च गृहीत्वा त्वमुपागता ।
चामुण्डेति ततो लोके ख्याता देवी भविष्यसि ॥ २७ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
चण्डमुण्डवधो नाम सप्तमोऽध्यायः ॥ ७ ॥

(ப - ரை) त्वम् - நீ, यस्मात् - யாதொருகாரணத்தால், चण्डं-च - சண்டனையும், मुण्डं - च - முண்டனையும், गृहीत्वा - பிடித்து, उपागता - கொண்டுவந்தாயோ, ततः- அக்காரணத்தால், लोके - உலகில், चामुण्डा - சாமுண்டா என்று, ख्याता - சொல்லப்பட்ட, देवी - தேவியாக, भविष्यसि - இருக்கப் போகிறாய்.

(பொ - ரை) ஓ! காளி! நீ சண்முண்டர்களைப் பிடித்துக்கொண்டு வந்த காரணத்தால், உலகத்தில் சாமுண்டா என்ற திருநாமத்தோடு விளங்கப்போகிறாய்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் சண்ட முண்டர்களுடைய வதம் என்ற ஏழாவது அத்தியாயம் இவண் முற்றும்.

अष्टमोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

चण्डे च निहते दैत्ये मुण्डे च विनिपातिते ।
बहुलेषु च सैन्येषु क्षयितेष्वसुरेश्वरः ॥ २ ॥

ततः कोपपराधीनचेताः शुम्भः प्रतापवान् ।
उद्योगं सर्वसैन्यानां दैत्यानामादिदेश ह ॥ ३ ॥

ऋषिः - *மஹர்ஷி* ; - उवाच - *சொன்னர்*—

(*ப - ரை*) चण्डे - *சண்டன், என்ற,* दैत्ये - *அஸுரன்,* निहते-च - *கொல்லப்பட்ட பொழுதும்,* मुण्डे - *முண்டன் என்ற அஸுரன்,* वि-नि-पातिते-च - *கீழே விழ்த்தப்பட்ட பொழுதும்,* बहुलेषु - *கணக்கற்ற,* सैन्येषु - *ஸேனைகள்,* क्षयितेषु-च - *நாசத்தையடைந்த பொழுதும்,* ततः - *பிறகு,* प्रतापवान् - *பராக்ரம சாலியும்,* असुरेश्वरः - *அஸுரர்களுக்குத் தலைவனுமான,* शुम्भः - *சும்பாஸுரன்.* कोप - पराधीन-चेताः - *கோபத்திற்கு அடிமையான மனதையுடையவனுகி,* दैत्यानाम् - *அஸுரர்களைக் கொண்ட,* सर्व-सैन्यानाम् - *எல்லா ஸேனைகளுக்கும்,* उद्योगम् - *யுத்தம் செய்வதற்கான முயற்சியை,* आदिदेश - *கட்டளையிட்டான்.*

மஹர்ஷி சொன்னர்— (1)

(*பொ - ரை*) *சண்டனும், முண்டனும், கணக்கற்ற ஸேனைகளும் மடிந்த பிறகு, மஹாபராக்ரமசாலியும், அஸுரர்களுக்குத் தலைவனுமாகிய சும்பன் அளவுகடந்த கோபத்*

திற்கு அடிமையான சித்தத்தையுடையவனுய்க் கொண்டு, தேவியோடு யுத்தம் செய்வதற்கான முயற்சியைச் செய்வதற்கு எல்லா அஸுர ஸேனைகளுக்கும் கட்டளையிட்டான்.

असुरेश्वरः - அஸுரேச்வர :—அஸுரர்களுக்குத் தலைவன். அல்லது அஸுக்கள்-ப்ராணன்கள். இவைகளை, ராதி-எடுப்பபவன், அதாவது காலன் எனப்பொருள், அக்காலனும் ஈச்வர வடிவம் கொண்டவன், அவனுக்கு அடிமைப்பட்டவன், அதாவது ஆஸந்ந மரணத்தை-மரணத்தையணுகியவன்-யுடையவன் எனவும் கொள்ளலாம்.

अद्य सर्वबलैर्दैत्याः षडशीतिरुदायुधाः ।
कम्बूनां चतुराशीतिर्निर्यान्तु स्वबलैर्वृताः ॥ ४ ॥

(ப - ரை) अद्य - இப்பொழுது, उदायुधाः - ஆயத்தம் செய்த ஆயுதங்களோடு கூடியவர்களான, दैत्याः - அஸுரர்கள், षडशीतिः-எண்பத்தாறும், सर्व-बलैः - ஸமஸ்த சதுரங்க ஸைன்யங்களோடும், कम्बूनाम् - கம்புகளுடைய, चतुराशीतिः - எண்பத்து நான்கும், स्व - बलैः - தனது ஸைன்யங்களால், वृताः - சூழப்பட்டவர்களாக, निर्यान्तु புறப்பட்டனர்.

(பொ - ரை) இப்பொழுது, முக்கியர்களான எண்பத்தாறு அஸுரர்களும், தயாராகச் செய்யப்பட்ட ஆயுதங்களோடும், எல்லாவிதமான சதுரங்க ஸைந்யங்களோடு கூடவும், கம்புகன் என்ற பெயருள்ள எண்பத்துநான்கு அஸுரக் கூட்டங்களும் அவரவர்களுடைய ஸைன்யங்களால் சூழப்பட்டவர்களாகவும், தேவியோடு யுத்தம் செய்வதற்குப் புறப்பட்டனர். (4)

कम्बूनाम् - கம்பூனம்-கம்புகன் என்ற பெயருடன் கூடிய குலத்தில் ஜனித்தவர்கள்.

कोटिवीर्याणि पञ्चाशदसुराणां कुलानि वै।
शतं कुलानि धूम्राणां निर्गच्छन्तु ममाज्ञया ॥ ५ ॥

(ப - ரை) कोटि - वीर्याणि - கோடிவீர்யர்கள் என்ற பெயருள்ள, असुराणाम् - அஸுரர்களுடைய, कुलानि-वै - குலங்கள், पञ्चाशत् - ஐம்பதும், धूम्राणाम् - தூம்ர வம்சத்திலுண்டான, कुलानि - குலங்கள், शतानि - நூறுகளும், मम - என்னுடைய, आज्ञया - கட்டளையினல், निर्गच्छन्तु - போகட்டும்.

(பொ - ரை) என்னுடைய கட்டளையினல் கோடிவீர்யர்கள் என்ற ஐம்பது அஸுரக் கூட்டங்களும், தூம்ர வம்சத்திலுதித்தவர்களான நூறு அஸுரக் கூட்டங்களும் புறப்பட்டுச் செல்லட்டும். (5)

कालका दौर्हृदा मौर्याः कालकेयास्तथासुराः।
युद्धाय सज्जा निर्यान्तु आज्ञया त्वरिता मम ॥ ६ ॥

(ப - ரை) कालकाः - காலகன் என்ற வம்சத்திலுதித்தவர்களும், दौर्हृदाः - துர்ஹ்ருத் என்ற குலத்திலுதித்தவர்களும், मौर्याः - முரன் என்பவனுடைய குலத்திலுதித்தவர்களும், तथा - அவ்விதமே, कालकेयाः - காலகையினுடைய பிள்ளைகளான, असुराः - அஸுரர்களும், मम - என்னுடைய, आज्ञया - கட்டளையினல், त्वरिताः - வேகத்தோடு கூடியவர்களாக, युद्धाय - யுத்தத்திற்கு, सज्जाः - ஆயத்தமுள்ளவர்களாக, निर्यान्तु - செல்லட்டும்.

(பொ - ரை) என்னுடைய உத்திரவினல் காலகன் என்ற வம்சத்தில் பிறந்தவனும், துர்ஹ்ருத் என்ற வம்சத்திலுதித்தவர்களும், முரன் என்பவனுடைய வழியில் தோன்

றியவர்களும், அவ்விதமே காலகை என்பவளுடைய புத்திரர்களுமான எல்லா அஸுரர்களும், ஒரு கணமும் தாமதியாது இப்பொழுதே யுத்தத்திற்கு ஆயத்தஞ்செய்து விரைவாகச் செல்லட்டும். (6)

इत्याज्ञाप्यासुरपतिः शुम्भो भैरवशासनः ।
निर्जगाम महासैन्यसहस्रैर्बहुभिर्वृतः ॥ ७ ॥

(ப - ரை) इति - என்று, आज्ञाप्य - கட்டளையிட்டு, भैरवशासनः - பயங்கரமான உத்திரவையுடைய, शुम्भः - சும்பன் என்ற, असुरपतिः - அஸுரர்களுக்குத் தலைவன், बहुभिः - கணக்கற்ற, महा-सैन्य-सहस्रैः - பெருத்த ஸேனைகளின் ஆயிரங்களோடு, वृतः - சூழப்பட்டவனாக, निर्जगाम - வெளியே வந்தான்.

(பொ - ரை) இவ்விதம் தன்னுடைய ஸேனைகளுக்குக் கட்டளையிட்டு மிகவும் பயங்கரமான ஆஜ்ஞையையுடைய அந்த அஸுரர்களுக்கு அரசனான சும்பன், ஆயிரக்கணக்கான ஸேனைகளால் சூழப்பட்டவனாக தேவியுடன் யுத்தம் செய்வதற்கு வெளியே புறப்பட்டான். (7)

भैरव-शासनः - பைரவசாஸநः—ஆஸந்ந மரணத்தோடு கூடியவனாக ம்ருத்யுவினுடைய கட்டளையையுடையவன் எனவும் பொருளாம்.

आयान्तं चण्डिका दृष्ट्वा तत्सैन्यमतिभीषणम् ।
ज्यास्वनैः पूरयामास धरणीगगनान्तरम् ॥ ८ ॥

(ப - ரை) अति-भीषणम् - மிகவும் பயங்கரமான, तत् - அந்த, सैन्यम् - ஸேனையானது, आयान्तम् - வந்து கொண்டிருப்பதை, दृष्ट्वा - பார்த்து, चण्डिका - சண்டிகாதேவியானவள்,

ज्या-स्वनैः-நாணொலிகளினால், धरणी-गगनान्तरम् - பூமி, ஆகாசம் மத்யம் (இடைவெளி) இப்பிரதேசங்களை, पूरयामास-நிரம்பியதாகச் செய்தாள்.

(பொ - ரை) மிகவும் பயங்கரமான அட்டஹாஸத்தோடுகூட வந்து கொண்டிருக்கும் அந்த ஸைன்யத்தைப் பார்த்துச் சண்டிகாதேவியும், தன்னுடைய வில்லில் நாணைப்பூட்டி, அவ்வொலிகளால் பூமி, ஆகாயம், அந்தரிக்ஷம் (இடைவெளி) இவைகளை நிரம்பச் செய்தாள். (8)

ततः सिंहो महानादमतीव कृतवान् नृप।
घण्टास्वनेन तन्नादमम्बिका चोपबृंहयत्॥ ९ ॥

(ப - ரை) नृप - ஓ அரசனே! ततः - பிறகு, सिंहः - ஸிம்ஹமானது, अति-इव - மிகவும், महा-नादम् - பெரிய சப்தத்தை, कृतवान् - செய்தது. अम्बिका - च - தேவியும், घण्टा-स्वनेन - மணியின் ஒலியால், तम् - அந்த, नादम् - ஸிம்ஹநாதத்தை, उप - बृंहयत् - பெருகச் செய்தாள்.

(பொ - ரை) ஓ அரசனே! பிறகு ஸிம்ஹமானது பல தடவை மிகவும் பயங்கரமான பெரிய கர்ஜனையைச் செய்தது. தேவியும் தன்னுடைய மணியின் நாதத்தினால் அந்த ஸிம்ஹத்தினுடைய கர்ஜனையை பன்மடங்காகப் பெருகச் செய்தாள். (9)

धनुर्ज्यासिंहघण्टानां नादापूरितदिङ्मुखा।
निनादैर्भीषणैः काली जिग्ये विस्तारितानना॥ १० ॥

(ப - ரை) धनुर्ज्या-सिंह-घण्टानाम्-நாணினுடையவும், ஸிம்ஹத்தினுடையவும், மணியினுடையவும், नादापूरित - दिङ्मुखा -

நாதங்களினுல் நிரப்பப்பட்ட திசைகளையுடைய வளாயும், भीषणैः - பயங்கரங்களான, निनादैः - சப்தங்களினுல், विस्तारितानना - விஸ்தீர்ணமாகச்செய்த முகத்தையுடையவளான, काली - காளிகாதேவீ, जिग्ये - வெற்றியுடன் விளங்கினுள்.

(பொ - ரை) இவ்விதம் வில்லின் நாண்கயிறு; ஸிம்ஹம், மணி இவைகளுடைய சப்தங்களால் நிரப்பப்பட்ட திசைகளையுடையவளும், பயங்கரமான சப்தங்களோடு விஸ்தீர்ணமான முகத்தையுடையவளுமான காளிகாதேவீ (வாயைப்பிளந்துகொண்டு) வெற்றியுடன் விளங்கிக் கொண்டிருந்தாள். (10)

तन्निनादमुपश्रुत्य दैत्यसैन्यैश्चतुर्दिशम्।
देवी सिंहस्तथा काली सरोषैः परिवारिताः ॥ ११ ॥

(ப - ரை) तत् - அந்த, निनादम् - சப்தத்தை, उप - श्रुत्य - கேட்டு, स-रोषैः - கோபத்தோடு கூடியவைகளான, दैत्य-सैन्यैः - அஸுரஸைன்யங்களினுல், देवी - தேவியும், सिंहः - ஸிம்ஹமும், तथा - அவ்விதமே, काली - காளிகாதேவியும், चतुर्दिशम् - நான்கு திசையையும், परि-वारिताः - சுற்றிலும் சூழ்ந்து கொண்டனர்.

(பொ - ரை) அந்த பயங்கரமான சப்தங்களைக் கேட்டு கோபாவேசத்தோடு கூடியவைகளான அந்த அஸுர ஸைன்யங்கள் அம்பிகையையும், ஸிம்ஹத்தையும், அவ்விதமே காளியையும் நான்கு புறத்திலும் சூழ்ந்து கொண்டன. (11)

एतस्मिन्नन्तरे भूप विनाशाय सुरद्विषाम्।
भवायामरसिंहानामतिवीर्यबलान्विताः ॥ १२ ॥

ब्रह्मेशगुहविष्णूनां तथेन्द्रस्य च शक्तयः ।
शरीरेभ्यो विनिष्क्रम्य तद्रूपैश्चण्डिकां ययुः ॥ १३ ॥

(ப - ரை) भूप - ஓ அரசனே! एतस्मिन् - இந்த, अन्तरे - ஸமயத்தில், सुर-द्विषाम् - அஸுரர்களுடைய, वि-नाशाय-நாசத்தின் பொருட்டும், अमर-सिंहानाम् - தேவச்ரேஷ்டர்களுடைய भवाय - அபிவிருத்தியின் பொருட்டும், अति - वीर्य - बलान्विताः- மிகவும் திறமையோடும், பலத்தோடும் கூடியவர்களான, ब्रह्मेश - गुह - विष्णूनाम् - ப்ரஹ்மா, பரமேச்வரன், ஸுப்ரஹ்மண்யன், விஷ்ணு இவர்களுடையவும், तथा - एव - அவ்விதமே, इन्द्रस्य - இந்த்ரனுடைய, शक्तयः - சக்திகளும், शरीरेभ्यः - சரீரங்களிலிருந்து, वि-निष्क्रम्य - வெளியே புறப்பட்டு, तद् - रूपैः - அந்த ப்ரஹ்மா முதலியவர்களுடைய வடிவங்களோடு கூட, चण्डिकाम् - சண்டிகாதேவியை, ययुः - அடைந்தன.

(பொ - ரை) ஓ ஸுரதனே! இந்த ஸமயத்தில் அஸுரர்களை நாசம் செய்வதற்காகவும், தேவதைகளுடைய நன்மைக்காகவும், ப்ரஹ்மா, பரமேச்வரன், ஸுப்ரஹ்மண்யன், விஷ்ணு, இந்திரன் இவர்களுடைய திறமைவாய்ந்தவைகளும், மிகவும் பலமுள்ளவைகளுமான சக்திகள் அவரவர்களுடைய சரீரங்களிலிருந்து உண்டாயின. அவைகளும் ப்ரஹ்மா முதலியவர்களுடைய அந்த வடிவங்களோடு கூடியவைகளாக சண்டிகா தேவியை அடைந்தன. (12,13)

ப்ரமாவினுடைய சரீரத்திலிருந்து **ப்ரஹ்மாணியும்**, மஹேச்வரனுடைய சரீரத்திலிருந்து **மாஹேச்வரியும்**, குமாரசரீரத்திலிருந்து **கௌமாரியும்**, விஷ்ணுவினுடைய சரீரத்திலிருந்து **வாராஹீ, நாரஸிம்ஹீ** இருவரும், இந்த்ரனுடைய சரீரத்திலிருந்து **ஐந்த்ரீ தேவியும்**, உண்டாயினர் என்பது கருத்து.

यस्य देवस्य यद्रूपं यथा भूषणवाहनम्।
तद्वदेव हि तच्छक्तिरसुरान् योद्धुमाययौ॥ १४ ॥

(ப - ரை) यस्य - எந்த, देवस्य - தேவனுடைய, यत् - எந்த. रूपम् - வடிவமோ, तथा - அவ்விதமே, भूषण-वाहनम् - ஆபரணங்களும், வாஹநங்களும், तद्वत् - एव - हि - அது போலவே, तत् - शक्तिः - அந்த சக்தியானது, असुरान् - அஸுரர்களை, योद्धुम् - யுத்தம் செய்வதற்கு, आययौ - வந்தது.

(பொ - ரை) எந்த தேவனுக்கு எந்த வடிவமோ, எந்த எந்த வாஹனமோ, அலங்காரமோ அப்படியே அந்த அந்த சக்தியானது அஸுரர்களோடு யுத்தம் செய்ய வந்தது. (14)

हंसयुक्तविमानाग्रे साक्षसूत्रकमण्डलुः ।
आयाता ब्रह्मणः शक्तिर्ब्रह्माणी साभिधीयते ॥ १५ ॥

(ப - ரை) हंस-युक्त-विमानाग्रे - அன்னங்களொடு கூடிய விமானத்தில், साक्षसूत्र - कमण्डलुः - ஜபமாலையோடும், ஜலபாத்திரத்தோடும் கூடியதாக, ब्रह्मणः - பிரஹ்மாவினுடைய, शक्तिः - சக்தியானது, आ-याता - வந்தது, सा - அந்த சக்தியானது, ब्रह्माणी - ப்ரஹ்மாணீ என்று, अभिधीयते - சொல்லப்படுகிறது.

(பொ - ரை) ப்ரஹ்மாணீ என்ற ப்ரஹ்மதேவனுடைய சக்தியானவள் ஜலபாத்திரத்தையும், ஜபமாலையையும் கையில் தரித்துக்கொண்டு ஹம்ஸங்கள் பூட்டிய விமானத்தில் வந்தாள்.

माहेश्वरी वृषारूढा त्रिशूलवरधारिणी ।
महाहिवलया प्राप्ता चन्द्ररेखाविभूषणा ॥ १६ ॥

(ப - ரை) वृषारूढा - காளையின் மீது அமர்ந்து, त्रिशूल-वर - धारिणी - சூலமென்ற சிறந்த ஆயுதத்தைத் தரித்துக் கொண்டு, महाहि - वलया - பெரிய ஸர்பங்களாலாகிய வளைய லோடு, चन्द्ररेखा-विभूषणां - சந்த்ரகலையை ஆபரணமாகக் கொண்டு, माहेश्वरी - மஹேச்வரீ என்ற தேவியானவள், प्राप्ता - வந்தாள்.

(பொ - ரை) மாஹேச்வரீ என்ற மஹேச்வரனுடைய சக்தியானவள், சிறந்த சூலாயுதத்தையும், பெரிய ஸர்ப்பங் களாலான (தக்ஷகன், அநந்தன்) தோள்வளையங்களையும், சந்த்ரகலையை ஆபரணமாகவும் சூடிக்கொண்டு, வ்ருஷப வாஹனத்தின்மீது அமர்ந்துகொண்டு வந்தாள். (16)

कौमारी शक्तिहस्ता च मयूरवरवाहना ।
योद्धुमभ्याययौ दैत्यानम्बिका गुहरूपिणी ॥ १७ ॥

(ப - ரை) शक्ति-हस्ता - சக்தி யென்ற வேலாயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டவளும், मयूर-वर-वाहना - சிரேஷ்ட மான மயிலை வாஹனமாகக் கொண்டவளும், गुह-रूपिणी - ஸுப்ரஹ்மண்யனுடைய வடிவத்தை தரித்தவளுமான, अम्बिका - தேவியாகிய, कौमारी - கௌமாரீ (ஸுப்ரஹ்மண்ய னுடைய) என்ற சக்தியானவள், दैत्यान् - அஸுரர்களை, योद्धुम् - யுத்தம் செய்வதற்கு, अभ्याययौ - எதிரில்வந்தாள்.

(பொ - ரை) தேவியாகிய கௌமாரீ என்ற ஸுப் ரஹ்மண்யனுடைய சக்தியானவள், சக்தி என்ற வேலாயு தத்தைக் கையில் தாங்கியவளாக, சிறந்த மயில் வாஹ

னத்தின் மீது அமர்ந்துகொண்டு அஸுரர்களோடு யுத்தம் செய்வதற்கு வந்தாள். (17)

तथैव वैष्णवी शक्तिर्गरुडोपरि संस्थिता ।
शङ्खचक्रगदाशार्ङ्गखड्गहस्ताभ्युपाययौ ॥ १८ ॥

(ப - ரை) **तथा - एव** - அவ்விதமே, **वैष्णवी** - விஷ்ணுவின் ஸம்பந்தமான, **शक्तिः** - சக்தியானவள், **गरुडोपरि** - கருட வாஹனத்தின்மேல், **संस्थिता** - இருந்துகொண்டு, **शङ्ख-चक्र-गदा-शार्ङ्ग-खड्ग-हस्ता** - சங்கு, சக்ரம், கதை, வில், கத்தி இவைகளைக் கையில் தரித்துக் கொண்டு, **अभ्युपाययौ** - எதிரில் வந்தாள்.

(பொ - ரை) அவ்விதமே விஷ்ணுவின் ஸம்பந்தமான வைஷ்ணவிசக்தியானவள், சங்கத்தையும், சக்கரத்தையும், கதாயுதத்தையும், வில்லையும், கத்தியையும், எடுத்துக்கொண்டு, கருடவாஹனத்தின் மீதமர்ந்தவளாக அஸுரர்களுடன் யுத்தம் செய்வதற்காக வந்து சேர்ந்தாள். (18)

சங்கம் - பாஞ்சஜன்யம், சக்ரம்-ஸுதர்சனம், கதை-கௌமோதகீ, சாரங்கம்-வில், கட்கம்-நந்தகம். வில் என்று சொன்னதால் பாணத்தையும் கொள்ளவேண்டும். கருடவாஹனத்தின் மீது வைஷ்ணவீ வடிவையெடுத்த தேவியானவள் கைகளில் சங்கம், சக்ரம், கதை, சார்ங்கம், கத்தி பாணம் இவைகளைத் தரித்துக்கொண்டு வந்தாள் என்பது. இக்கருத்தையே வாமனபுராணம்,

" बाहुभिर्गरुडारूढा शङ्खचक्रगदासिनी ।
शार्ङ्गबाणधरायाता वैष्णवी विष्णुरूपिणी ॥

கருட வாஹநத்தின் மீதமர்ந்து கொண்டு கைகளில் சங்கம், சக்கரம், கதை, கத்தி, சார்ங்கம், பாணம் இவைகளைத் தரித்துக் கொண்டு விஷ்ணுவினுடைய வடிவத்தை யடைந்த வைஷ்ணவீ சக்தியானவள் வந்தாள்'' எனக் கூறும். இதனால் வைஷ்ணவீ தேவீ ஆறு கைகள் உள்ளவள் என்பதும் கிடைப்பதாகும்.

यज्ञवाराहमतुलं रूपं या बिभ्रतो हरेः ।
शक्तिः साप्यायया तत्र वाराहीं बिभ्रती तनुम् ॥ १९ ॥

(ப - ரை) अतुलम् - இணையற்ற, यज्ञ-वाराहम् - யஜ்ஞவ ராஹத்தினுடைய ஸம்பந்தமான, रूपम् - வடித்வதை, बिभ्रतः - தாங்கிக்கொண்டு, हरेः - விஷ்ணுவினுடைய, या - யாதொரு, शक्तिः - சக்தியானது உண்டோ, सा-अपि - அந்த சக்தியும், तत्र - அவ்விடத்திற்கு, वाराहीम् - வராஹஸம்பந்தமான, तनुम् - (பெண்) மூர்த்தியை बिभ्रती - தரித்துக்கொண்டு, आययौ - வந்து சேர்ந்தது.

(பொ - ரை) இணையற்ற யஜ்ஞவராஹமூர்த்தியினுடைய வடிவைத்தாங்கிய விஷ்ணுவினுடைய சக்தியானது வராஹ சரீரத்தைத்தரித்துங்கொண்டு, வாராஹீ என்ற பெயரோடு அவ்விடத்திற்கு வந்து சேர்ந்தது. (19)

वाराही - வாராஹீ-யஜ்ஞ வராஹவடிவம் கொண்ட வராஹ மூர்த்தியினுடைய அம்சமாதலால் இவள் விஷ்ணுவின் அம்சம் கொண்டவள் என்பதையும் ஸூசனை செய்வதாகும்.

नारसिंही नृसिंहस्य बिभ्रती सदृशं वपुः ।
प्राप्ता तत्र सटाक्षेपक्षिप्तनक्षत्रसंहतिः ॥ २० ॥

(ப - ரை) तत्र - அந்த யுத்தகளத்தில், सटाक्षेप - क्षिप्त- नक्षत्र - संहतिः - பிடரிமயிர்களுடைய தாடனத்தால் சிதறிய

நக்ஷத்ரக்கூட்டங்களையுடைய, नारसिंही - நரஸிம்ஹஸம்பந்த மான சக்தியானது, नृसिंहस्य - நரஸிம்ஹத்திற்கு, सदृशम् - ஸமானமான, वपु: - சரீரத்தை, बिभ्रती - தரித்துக்கொண்டு, प्राप्ता - வந்தது.

(பொ - ரை) தோளின்மேல் துவளுகின்ற பிடரிமயிர்களுடைய சலனங் (அசைதல்) களால் நாலாபக்கங்களிலும் சிதறிய நக்ஷத்ரக் கூட்டங்களையுடையதான நரஸிம்ஹத்தையனுஸரித்த சக்தியானது நாரஸிம்ஹீ என்ற பெயருடன் அந்த யுத்தகளத்திற்கு வந்துசேர்ந்தது. (20)

वज्रहस्ता तथैवैन्द्री गजराजोपरि स्थिता ।
प्राप्ता सहस्रनयना यथा शक्रस्तथैव सा ॥ २१ ॥

(ப - ரை) तथा - एव - அவ்விதமே, यथा - எவ்விதம், शक्र: - இந்த்ரனோ, तथा-एव - அவ்விதமே, वज्र - हस्ता - வஜ்ராயுதத்தைக் கையில் தரித்துக்கொண்டு, गज - राजोपरि - ஐராவதத்தினுடைய முதுகின் மீது, स्थिता - இருந்துகொண்டு, सहस्र-नयना - ஆயிரம் கண்களோடு கூடியவளாக, सा - அந்த, ऐन्द्री - இந்த்ரனை யனுஸரித்த ஐந்த்ரீ என்ற சக்தியானவள், प्राप्ता - வந்தாள்.

(பொ - ரை) அவ்விதமே தேவேந்த்ரனைப்போலவே கையில் வஜ்ராயுதத்தை தரித்து, ஐராவதம் என்ற யானையின் மீதேறிக்கொண்டு, ஆயிரம் கண்களோடு கூடியவளாக ஐந்த்ரீ என்ற இந்த்ரசக்தியானவள் அவ்விடம் வந்தாள். (21)

இவ்விதம் ப்ரஹ்மாணீ, மாஹேச்வரீ, கௌமாரீ, வைஷ்ணவீ வாராஹீ, நாரஸிம்ஹீ, ஐந்த்ரீ என்ற இவ்வேழு சக்திகளும் தோன்றிய வரலாறுகள் விளக்கப்பட்டன.

ततः परिवृतस्ताभिरीशानो देवशक्तिभिः ।
हन्यन्तामसुराः शीघ्रं मम प्रीत्याह चण्डिकाम् ॥ २२ ॥

(ப - ரை) ततः - பிறகு, ताभिः - அந்த, देव - शक्तिभिः - தேவசக்திகளால், परि-वृतः - சூழப்பட்ட, ईशानः - ஈசான தேவன், मम - என்னுடைய, प्रीत्या - இஷ்டத்தால், शीघ्रम् - சிக்கிரம், असुराः - அஸுரர்கள், हन्यताम् - கொல்லப் படட்டும், (इति - என்று), चण्डिकाम् - சண்டிகையை, आह - சொன்னர்.

(பொ - ரை) பிறகு அந்த தேவசக்திகளால் சூழப் பட்ட பரமேச்வரன் ‘என்னுடைய ப்ரீதியின் காரணமாக விரைவில் அஸுரர்களை அழிக்கவேண்டும்’ என்று சண் டிகாதேவியைப் பார்த்துச் சொன்னர். (22)

ततो देवीशरीरात्तु विनिष्क्रान्तातिभीषणा ।
चण्डिकाशक्तिरत्युग्रा शिवाशतनिनादिनी ॥ २३ ॥

(ப - ரை) ततः - பிறகு, अति - भीषणा - மிகவும் பயங்கர மாயும், अत्युग्रा - மிகவும் குரூரமாயும், शिवा-शत-निनादिनी - கணக் கற்ற நரிகளுடைய சப்தங்களோடு கூடியதாயுமிருக்கிற, चण्डिका - शक्तिः - சண்டிகையினுடைய சக்தியானது, देवी - शरीरात् - தேவியினுடைய சரீரத்திலிருந்து, विनिष्क्रान्ता - வெளியே வந்தது.

(பொ - ரை) பிறகு தேவியினுடைய சரீரத்திலிருந்து அதிகபயங்கரமானவையும், மிகவும் குரூர முள்ளனவையு மான நரிகளுடைய சப்தங்களோடு கூடிய சண்டிகா சக்தி யானது வெளிக்கிளம்பியது. (23)

चण्डिका-शक्तिः - சண்டிகாசக்தி ப்ராஹ்மீ, மஹேச்வரீ, வைஷ்ணவீ, என்ற மூன்று சக்திகளைக் காட்டிலும் மிகுந்த திறமையுடன் விளங்குபவள். ஒருவராலும் ஜயிக்க முடியாதவள். கௌசிகீ என்பவளைத் தோற்றுவித்தவள், எனவே இவ்விடம் பரமேச்வரனைத் தூதனாக நியமித்ததும் பொருத்தமே யாகும் என்பர் நாகேச பட்டர்.

सा चाह धूम्रजटिलमीशानमपराजिता ।
दूतत्वं गच्छ भगवन् पार्श्वं शुम्भनिशुम्भयोः ॥ २४ ॥

(ப - ரை) अपराजिता - எவராலும் ஜயிக்கமுடியாத, सा-च - அந்த சண்டிகா சக்தியும், धूम्र-जटिलम् - சிவந்த சடையோடு கூடிய, ईशानम्-பரமசிவனை (பார்த்து), भगवन् - ஓ பகவானே! त्वम् - நீர், दूतः - தூதனாக, शुम्भ - निशुम्भयोः - சும்ப நிசும்பர்களுடைய, पार्श्वम् - ஸமீபத்தை, गच्छ - அடைய வேண்டும், आह - (என்று) சொன்னாள்.

(பொ - ரை) எவராலும் ஜயிக்க முடியாதவளான அந்த சண்டிகாதேவீ, சிவந்த சடைகளுடன் கூடிய பரமசிவனைப்பார்த்து, 'ஓ பகவானே! நீர் சும்பநிசும்பர்களுடைய ஸமீபத்திற்குத் தூதராகச் செல்லவேண்டும்' எனச் சொன்னாள். (24)

दूतत्वं-गच्छ - தூதத்வம் - கச்ச - என்பது தூதன் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்வாயாக, அல்லது ஓ தூத! நீ அந்த சும்பநிசும்பர்களுடைய ஸமீபத்தையடைவாயாக எனவும் கொள்ளலாம்.

धूम्र-जटिलम् - தூம்ரஜடிலம்-என்பது அஸுர விஷயமான கோபக்கனல் நிறைந்த புகைவர்ணமான செந்நிறம், ஜடிலம். சடைமுடியுடன் கூடியவன் என்பதும் ஆம்.

भगवन् - பகவன் - என்ற ஸம்போதந பதத்தால் பரமசிவனை தேவீ வச்யப் படுத்துவதாக கூடார்த்த தீபிகை என்ற உரையை இயற்றிய ஆசிரியர் கூறுவர். அதாவது நீயோ ஆறுவித ஐச்வர்யங்களுக்கும் தலைவன் - அவ்விதமிருக்க உன்னை இக்காரியத்தில் (தாழ்மையான காரியம் என்பது) நியமித்தது நியாயமன்று என்பதையும் நான் உணருவேன். அப்படியிருந்தும் இச்சமயம் நியமிப்பது மிகவும் அவச்யமாயிருப்பதோடு வேறு ஒருவரும் இக்காரியத்திற்குத் தகுதியல்லவாதலால் உன்னை நியமிக்க முன் வந்தேன் என்ற பொருளும் கிடைப்பதாகும் என்பதாம்.

ब्रूहि शुम्भं निशुम्भं च दानवावतिगर्वितौ।
ये चान्ये दानवास्तत्र युद्धाय समुपस्थिताः ॥ २५ ॥

(ப - ரை) अति - गर्वितौ - மிகவும் கர்வத்தையடைந்த, दानवौ - அஸுரர்களான, शुम्भम् - சும்பனையும், निशुम्भं - च - நிசும்பனையும், तत्र - அவ்விடத்தில், युद्धाय - யுத்தத்தின் பொருட்டு, ये - எவர்கள், समुपस्थिताः - வந்திருக்கிறார்களோ, अन्ये - மற்றவர்களான, दानवाः - च - அஸுரர்களையும், ब्रूहि - சொல்ல வேண்டும்.

(பொ - ரை) ஓ பகவானே! நீர் மிதமிஞ்சிய அஹங்காரிகளான சும்பன், நிசும்பன் என்ற இரண்டு அஸுரர்களிடமும், அவ்விடம் யுத்தத்தின் பொருட்டு வந்து கொண்டிருக்கின்ற மற்ற அஸுரர்களிடமும் இவ்விதம் சொல்லவேண்டும். (25)

त्रैलोक्यमिन्द्रो लभतां देवाः सन्तु हविर्भुजः।
यूयं प्रयात पातालं यदि जीवितुमिच्छथ ॥ २६ ॥

(ப - ரை) जीवितुम् - ஜீவப்பதற்கு, इच्छथ-यदि - விருப்பம் இருக்குமேயாகில், यूयम्-நீங்கள், पातालम्-பாதாளத்தை-प्रयात - அடையுங்கள். इन्द्रः - தேவேந்திரன், त्रैलोक्यम् - மூவுலகையும், लभताम् - அடையட்டும், देवाः - தேவர்கள், हविर्भुजः-ஹவிர்பாகத்தைப் புசிப்பவர்களாக, सन्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) நீங்கள் பிழைத்திருக்கவேண்டுமென்ற ஆசையுடன் இருந்தால் பாதாளத்திற்குச் செல்லுங்கள். தேவேந்த்ரன் மூவுலகையும் அடையட்டும், தேவர்களும் ஹவிர்பாகங்களைப் புசிப்பவர்களாக இருக்கட்டும். (26)

बलावलेपादथ चेद्भवन्तो युद्धकाङ्क्षिणः ।
तदागच्छत तृप्यन्तु मच्छिवाः पिशितेन वः ॥ २७ ॥

(ப - ரை) अथ - चेत् - அப்படி இல்லாவிட்டால், भवन्तः - நீங்கள், बलावलेपात् - பலத்தினுல் கொழுப்படைந்த காரணத்தால், युद्धकाङ्क्षिणः - யுத்தத்தில் விருப்பமுள்ளவர்களாக இருந்தால், तदा - அப்பொழுது,(யுத்தகளத்திற்கு) வாருங்கள், मत् - शिवाः - என்னுடைய நரிகள், वः - உங்களுடைய, पिशितेन - மாம்ஸத்தினுல், तृप्यन्तु - திருப்தியடையட்டும்.

(பொ - ரை) அப்படி இல்லாவிட்டால் புஜபலபராக்ரமத்தின் காரணமாகக் கொழுப்படைந்த நீங்கள், யுத்தத்தில் ஆசையுள்ளவர்களாக இருந்தாலும் என்னோடு யுத்தத்திற்கு வாருங்கள். உங்களுடைய மாம்ஸங்களை என்னுடை நரிகள் புசித்து மகிழ்ச்சியை யடையட்டும். (27)

यतो नियुक्तो दौत्येन तया देव्या शिवः स्वयम् ।
शिवदूतीति लोकेऽस्मिंस्ततः सा ख्यातिमागता ॥ २८ ॥

(ப - ரை) यतः - எக்காரணத்தால், तया - அந்த, देव्या - தேவியினுல், शिवः - பரமசிவன், दौत्येन- தூதகாரியத்தினுல், नियुक्तः - நியமிக்கப்பட்டாஞே, सा - அந்த சண்டிகாதேவீ, अस्मिन् - இந்த, लोके-உலகில், शिवदूती - சிவதூதீ, इति - என்ற, ख्यातिम् - ப்ரஸித்தியை, आगता - அடைந்தாள்.

(பொ - ரை) எக்காரணத்தால் அந்த தேவியினுல், பரமசிவன் தூதனுக நியமிக்கப்பட்டாஞே, அக்காரணம் கொண்டு அந்த சண்டிகாதேவிக்கு இவ்வுலகில் சிவதூதீ என்ற ப்ரஸித்தமான திருநாமமும் உண்டாகியது. (28)

तेऽपि श्रुत्वा वचो देव्याः शर्वाख्यातं महासुराः ।
अमर्षापूरिता जग्मुर्यत्र कात्यायनी स्थिता ॥ २९ ॥

(ப - ரை) ते - அந்த, असुराः - अपि - சும்பநிசும்பர்களும், शर्वाख्यातम् - சிவனுல் சொல்லப்பட்ட, देव्याः - தேவியினுடைய, वचः - வார்த்தையை, श्रुत्वा - கேட்டு, अमर्ष-पूरिताः- கோபத்தால் நிறைந்தவர்களாக, कात्यायनी-தேவியானவள், यतः - எந்ததிக்கில், स्थिता - இருக்கிருளோ (அவ்விடத்தை) जग्मुः - அடைந்தனர்.

(பொ - ரை) அந்த சும்ப நிசும்பர் இருவரும் பரமேச்வரனுல் சொல்லப்பட்ட சண்டிகாதேவியினுடைய வார்த்தையைக் கேட்டு, அளவுகடந்த கோபத்தோடுகூட அந்த காத்யாயநீதேவீ எந்ததிக்கில் இருக்கிருளோ அவ்விடத்தை நாடிச்சென்றனர். (29)

कात्यायनी - காத்யாயநீ—மூலசக்திகளோடு வேறுபடாத காரணத்தால் இவ்விதத்திருநாமம் உண்டாகியது. कतः - கதः என்ற மஹர்ஷியின் பெண் காத்யாயிநீ என **மந்த்ர கைரவம்** கூறும்.

ततः प्रथममेवाग्रे शरशक्त्यृष्टिवृष्टिभिः ।
ववर्षुरुद्धतामर्षास्तां देवीममरारयः ॥ ३० ॥

(ப - ரை) ततः - பிறகு, अमरारयः - அஸுரர்கள், उद्धतामर्षाः - பொங்கி எழுந்தகோபத்தையுடையவர்களாக, प्रथमम् - முதலிலேயே, ताम् - அந்த, देवीम् - தேவியைக் குறித்து, अग्रे-(மார்புக்கு) எதிரில், शर-शक्त्यृष्टि-वृष्टिभिः- பாணங்கள், வேலாயுதங்கள், கத்திகள் இவைகளை மழைகளினாலே போல, ववर्षुः - பொழிந்தனர்.

(பொ - ரை) பிறகு சும்பன் முதலிய அஸுரர்கள் பொங்கியெழுந்த கோபத்தோடுகூட முதலில் அந்த தேவியினுடைய மார்புக்கு எதிரில் பாணங்களையும், வேலாயுதங்களையும், கத்திகளையும், மழைபோலப்பொழியச்செய்தனர். (30)

उद्धत - உத்தத - என்ற பதம் கொண்டு இந்த சரவர்ஷங்களினால் ஸ்ரீ தேவியைக் கொல்லமுடியாது என்ற விவேகம் சிறிதும் இல்லாதவர்கள் என்பதையும் ஸூசனை செய்வதாகும்:

सा च तान् प्रहितान् बाणान् शूलशक्तिपरश्वधान् ।
चिच्छेद लीलयाध्मातधनुर्मुक्तैर्महेषुभिः ॥ ३१ ॥

(ப - ரை) सा - च - அந்த தேவியும், प्रहितान् - (அவர்களால்) அனுப்பப்பட்ட, तान् - அந்த, बाणान् - பாணங்களையும், शूल-शक्ति-परश्वधान् - சூலம், வேல், கோடாலி இவைகளையும், लीलया - விளையாட்டினால், आध्मात - धनुर्मुक्तैः - எங்கும் பரவிய சப்தத்தோடு கூடிய வில்லினால் விடப்பட்ட, महेषुभिः - பெரிய பாணங்களால், चिच्छेद - அறுத்தாள்.

(பொ - ரை) அந்த சண்டிகாதேவீ அஸுரர்களால் பிரயோகம் செய்யப்பட்ட, பாணம், சூலம், வேல், கோடாலி இவைகளையெல்லாம், தனது வில்லில் பூட்டிய நாணெலி யுடன் கூடிய பெரிய பாணங்களால் விளையாட்டாகவே ஸுலபமாகவே அறுத்துவிட்டாள். (31)

तस्याग्रतस्तथा काली शूलपातविदारितान्।
खट्वाङ्गपोथितांश्चारीन् कुर्वती व्यचरत्तदा ॥ ३२ ॥

(ப - ரை) तदा - அப்பொழுது, तथा - அவ்விதமே, कालिका - காளிகாதேவி, शूल-पात-विदारितान् - சூலாயுதத்தினல் குத்திப்பிளக்கப்பட்டவர்களாயும், अन्यान् - மற்றும் சில அஸுரர்களை, खट्वाङ्ग - पोथितान् - च - மண்டையோடுகள் கோர்த்த தண்டத்தினல் கொல்லப்பட்டவர்களாயும், कुर्वती - செய்துகொண்டு, तस्याः - அந்த தேவியினுடைய, अग्रतः - எதிரில், व्यचरत् - ஸஞ்சரித்தாள்.

(பொ - ரை) அப்பொழுது அவ்விதமே அந்த காளி காதேவியும், சிலரை சூலத்தால் குத்திப்பிளந்தும், மற் றுஞ்சிலரை மண்டையோடு கோர்த்த தண்டத்தினல் வெட்டி வீழ்த்திக்கொண்டும், தேவியின் எதிரில் ஸஞ் சரித்துக் கொண்டிருந்தாள். (32)

कमण्डलुजलाक्षेपहतवीर्यान् हतौजसः।
ब्रह्माणी चाकरोच्छत्रून् येन येन स्म धावति ॥ ३३ ॥

(ப - ரை) ब्रह्माणी-च - ப்ரஹ்மசக்தியும், येन-येन - எந்த எந்த திக்கில், धावति - स्म - செல்லுகிருளோ, (அவ்விட முள்ள சத்துருக்களை), कमण्डलु - जलाक्षेप - हत-वीर्यान् - கமண்

டலுவிலிருக்கும் ஜலத்தினல் போக்கடிக்கப்பட்ட வீர்யத்தை யுடையவர்களாயும், हतौजसः - நாசம் செய்யப்பட்ட ஓஜஸையுடையவ்ர்களாயும், अकरोत् - செய்தாள்.

(பொ - ரை) அந்த யுத்தத்தில் ப்ரஹ்மாணியும் தான் ஸஞ்சரித்த திக்குகளிலெல்லாம் கமண்டலு (ஜலபாத்திரம்) விலுள்ள ஜலத்தினல் சத்துருக்களை ப்ரோக்ஷணம் செய்து அவர்களுடைய வீர்யத்தையும், ஓஜஸையும் மழுங்கச்செய்தாள். (33)

माहेश्वरी त्रिशूलेन तथा चक्रेण वैष्णवी ।
दैत्यान् जघान कौमारी तथा शक्त्यातिकोपना ॥ ३४ ॥

(ப - ரை) माहेश्वरी - மஹேச்வரனுடைய சக்தியானவள், त्रिशूलेन - சூலத்தினலும், तथा - அவ்விதமே, वैष्णवी - விஷ்ணுசக்தியானவள், चक्रेण - சக்ராயுதத்தினலும், तथा - அவ்விதமே, अति - कोपना - மிகவும் கோபத்தோடு கூடியவளான, कौमारी - ஸுப்ரஹ்மண்யனுடைய சக்தியானவள், शक्त्या - வேலாயுதத்தினலும், दैत्यान् - அஸுரர்களை, जघान- கொன்றனர்.

(பொ - ரை) அந்த யுத்தத்தில் மாஹேச்வரீ திரிசூலத்தாலும், அவ்விதமே, வைஷ்ணவீ சக்ராயுதத்தாலும், அளவுகடந்த கோபத்தோடுகூடியவளான கௌமாரீ வேலாயுதத்தாலும் அந்த அஸுரர்களை முறையே கொன்றனர்.

अतिकोपना - அதிகோபநா - என்ற பதத்தை முறையே ஒவ்வொரு தேவிக்கும் வருவித்துக்கொள்ள வேணும் என மந்த்ர கைரவம் என்ற உரையின் ஆசிரியர் கூறுவர்.

ऐन्द्रीकुलिशपातेन शतशो दैत्यदानवाः ।
पेतुर्विदारिता भूमौ रुधिरौघप्रवर्षिणः ॥ ३५ ॥

(ப - ரை) ऐन्द्री-कुलिश-पातेन - இந்திரசக்தியான வஜ்ராயுதத்தினுல் அடிப்பட்ட (காரணத்தால்), शतशः - நூற்றுக் கணக்கான, दैत्य-दानवाः - அஸுரர்களும், ராக்ஷஸர்களும், विदारिताः - பிளக்கப்பட்டனர். रुधिरौघ - प्रवर्षिणः - ரத்தப்ரவாஹத்தைப் பொழிந்தவண்ணம், भूमौ - நிலத்தில், पेतुः - சாய்ந்தனர்.

(பொ - ரை) ஐந்த்ரீ சக்தியினுடைய வஜ்ராயுதத்தினுல் அடிபட்டகாரணத்தால் நூற்றுக்கணக்கான அஸுரர்களும், ராக்ஷஸர்களும பிளக்கப்பட்டு, தாரை தாரையாக வழிந்தோடுகின்ற ரத்தத்தையுடையவர்களாய்க்கொண்டு பூமியின்மீது சாய்ந்தனர். (35)

दैत्यदानवाः - தைத்யதானவா:—திதி என்பவளுக்குப் பிறந்தவர்கள் தைத்யர்கள். தநு என்பவளுக்குப் பிறந்தவர்கள் தானவர்கள்.

तुण्डप्रहारविध्वस्ता दंष्ट्राग्रक्षतवक्षसः ।
वाराहमूर्त्या न्यपतंश्चक्रेण च विदारिताः ॥ ३६ ॥

(ப - ரை) वाराह-मूर्त्या-வாராஹீ சக்தியினுல், तुण्ड-प्रहार-विध्वस्ताः - மூக்கினுல் அடிக்கப்பட்டு நொறுங்கியவர்களும், दंष्ट्राग्र-क्षत - वक्षसः - கோரைப்பற்களின் நுனியினுல் கிழிக்கப்பட்ட மார்பையுடையவர்களும், चक्रेण-சக்ராயுதத்தால், विदारिताः-च-பிளக்கப்பட்டவர்களுமாக, न्यपतन् - விழுந்தனர்.

(பொ - ரை) வராஹமூர்த்தியின் வடிவங்கொண்ட வாராஹீதேவியானவள் தனது மூக்கினுல் சிலரை அடித்து

நொறுக்கியும், மற்றும், சிலரை தன்னுடைய கோரைப் பற்களின் நுனியால் மார்பைக்கிழித்தும், வேறு சிலரை சக்ராயுதத்தினல் பிளந்தும் கீழே வீழ்த்தினள். (36)

नखैर्विदारितांश्चान्यान् भक्षयन्ती महासुरान् ।
नारसिंही चचाराजौ नादापूर्णदिगम्बरा ॥ ३७ ॥

(ப - ரை) नारसिंही - நரஸிம்ஹசக்தியானவள், नखैः - நகங்களால், महासुरान् - பெரிய அஸுரர்களை, विदारितान् - பிளந்து கொண்டும், अन्यान्-மற்றவர்களை, भक्षयन्ती-புசித்துக் கொண்டும், नादापूर्ण-दिगम्बरा - சப்தங்களால் நிறைந்ததிக்கு களோடும், ஆகாசத்தோடும் கூடியவளாக, आजौ - யுத்தத்தில், चचार - ஸஞ்சரித்தாள்.

(பொ - ரை) நரஸிம்ஹ மூர்த்தியின் வடிவங்கொண்ட நாரஸிம்ஹீ என்ற சக்தியானவள், தன்னுடைய நகங்களால் சிலரைக்கிழித்துக் கொண்டும், மற்றும் சிலரைப் புசித்துக் கொண்டும், நாதங்களால் (சப்தங்களால்) திக்குகளையும், ஆகாயத்தையும் நிரப்பிக்கொண்டும் அந்த யுத்தகளத்தில் ஸஞ்சரித்தாள். (37)

चण्डाट्टहासैरसुराः शिवदूत्यभिदूषिताः ।
पेतुः पृथिव्यां पतितांस्तांश्चखादाथ सा तदा ॥ ३८ ॥

(ப - ரை) असुराः - அஸுரர்கள், चण्डाट्टहासैः - பயங்கரமான அட்டஹாஸங்களால், शिवदूत्यभि-दूषिताः - சிவதூதியினல் மூர்ச்சையை யடையச்செய்தவர்களாகவும், विदारिताः- பிளக்கப்பட்டவர்களாகவும், भूमौ-பூமியில், पेतुः-விழுந்தனர்- अथ-பிறகு, तदा - அப்பொழுது, सा - அவள், तान् - அவர்களை, चखाद - புசித்தாள்.

(பொ - ரை) பிறகு சிவதூதீ என்ற சக்தியினுல் பயங்கரமான அட்டஹாஸத்தோடு கூட, அவ்வஸுரர்கள் பிளக்கப்பட்டவர்களாக மூர்ச்சையோடு கூட பூமியில் விழுந்தனர். தேவியும் அவர்களை த்தின்றெழித்தாள். (38)

इति मातृगणं क्रुद्धं मर्दयन्तं महासुरान्
दृष्ट्वाभ्युपायैर्विविधैर्नेशुर्देवारिसैनिकाः ॥ ३९ ॥

(ப - ரை) इति - இவ்விதம், विविधैः - பலவிதங்களான, अभ्युपायैः - யுத்தத்திற்குரிய உபாயங்களால், महासुरान्- பெரிய அஸுரர்களை, मर्दयन्तम् - கொல்லுவதை (பார்த்து) क्रुद्धम् - கோபத்தையடைந்த, मातृगणम् - மாத்ருகணத்தையும், दृष्ट्वा - பார்த்து, देवारि-सैनिकाः - அஸுர ஸைன்யங்கள், नेशुः - ஓடின.

(பொ - ரை) இவ்விதம் பலவித யுத்தோபாயங்களைக் கொண்டு பெரிய பெரிய அஸுரர்களை கோபத்தோடு நாசம் செய்கின்ற மாத்ருகணங்களைக் கண்ட அந்த அஸுர ஸைன்யங்களனைத்தும் சிதறியோடின. (39)

मातृगणम् - மாத்ருகணம் —மாத்ருகணமாவது—

व्राह्मी च वैष्णवी रौद्री कौमारी शिवदूतिका ।
ऐन्द्री च नारसिंही च वाराही चाष्टमातरः ॥

என்பது. ப்ராஹ்மீ, வைஷ்ணவீ, ரௌத்ரீ, கௌமாரீ, சிவதூதிகா, ஐந்த்ரீ, நாரஸிம்ஹீ, வராஹீ என்பவாாவர் என **மந்த்ரகைரவம்** கூறும்.

पलायनपरान् दृष्ट्वा दैत्यान् मातृगणार्दितान् ।
योद्धुमभ्याययौ क्रुद्धो रक्तबीजो महासुरः ॥ ४० ॥

(ப - ரை) रक्त-बीजः - ரக்த பீஜன் (என்ற), महासुरः - பெரிய அஸுரன், दैत्यान् - அஸுர்களை, मातृ-गणार्दितान् - மாத்ருகணங்களால் பீடிக்கப்பட்டவர்களையும், पलायन-परान् - ஓட்ட மெடுப்பதில் கருத்துள்ளவர்களையும், दृष्ट्वा - பார்த்து, क्रुद्धः - கோபம் கொண்டவனாக, योद्धुम् - யுத்தம் செய்வதற்கு, अभ्याययौ - எதிரில் வந்தான்.

(பொ - ரை) ரக்தபீஜன் என்ற பெரிய அஸுரனானவன், மாத்ருகணங்களால் பீடிக்கப்பட்டு நான்கு திசைகளிலும் சிதறி ஓடிக்கொண்டிருக்கிற அஸுரஸைன்யங்களைக் கண்டு பொங்கியெழுகின்ற கோபத்துடன் யுத்தத்திற்கு வந்தான். (40)

रक्तबीजः - ரக்தபீஜன்—ரக்தத்தைக் காரணமாகக்கொண்டு பிறந்தவன்.

रक्तबिन्दुर्यदा भूमौ पतत्यस्य शरीरतः ।
समुत्पतति मेदिन्यास्तत्प्रमाणो महासुरः ॥ ४१ ॥

(ப - ரை) अस्य - இந்த ரக்தபீஜனுடைய, शरीरतः - சரீரத்திலிருந்து रक्त-बिन्दुः - ரத்தத்தின் பிந்து (துளி) வானது, यदा - எப்பொழுது, भूमौ - பூமியில், पतति - விழுகின்றதோ, तत्-प्रमाणम् - அந்த ரக்த பீஜனைப்போல், महासुरः - பெரிய அஸுரன், मेदिन्याः - பூமியிலிருந்து, समुत्पतति - தோன்றினன்.

(பொ - ரை) இந்த ரக்தபீஜனுடைய சரீரத்திலிருந்து ஒரு துளி ரத்தமானது பூமியின் மீது விழுந்தாலும், அச்சிறிய துளி ரத்தத்திலிருந்து அவனுக்கு நிகரான மற்றொரு மஹாஸுரன் தோன்றினன். (41)

युयुधे स गदापाणिरिन्द्रशक्त्या महासुरः ।
ततश्चैन्द्री स्ववज्रेण रक्तबीजमताडयत् ॥ ४२ ॥

(ப - ரை) सः - அந்த, महासुरः - பெரிய அஸுரன், गदा-पाणिः - கதையைக் கையில் கொண்டு, इन्द्र-शक्त्या - இந்த்ர சக்தியோடு, युयुधे - யுத்தம் செய்தான், ततः - பிறகு, ऐन्द्री - (அந்த) இந்த்ர சக்தி, स्व-वज्रेण - தன்னுடைய, வஜ்ராயுதத்தால், रक्त-बीजम् - ரக்த பீஜனை, अताडयत् - அடித்தாள்.

(பொ - ரை) அந்த மஹாஸுரனாகிய ரக்தபீஜன் கதாயுதத்தைக் கையில் கொண்டு ஐந்த்ரீ என்ற இந்த்ர சக்தியோடு யுத்தம் செய்தான். அச்சக்தியும் தன்னுடைய வஜ்ராயுதத்தால் அவனை அடித்தாள். (42)

कुलिशेनाहतस्याशु बहु सुस्राव शोणितम् ।
समुत्तस्थुस्ततो योधास्तद्रूपास्तत्पराक्रमाः ॥ ४३ ॥

(ப - ரை) कुलिशेन - வஜ்ராயுதத்தினாலே, आहतस्य - அடிபட்ட (அவனுடைய சரீரத்திலிருந்து) बहु - அளவற்ற, शोणितम् - ரத்தமானது, आशु - வேகமாக, सुस्राव - பெருகியது. ततः - பிறகு, तत्-पराक्रमाः - அவனைப் போன்ற பராக்ரமத்தோடு கூடிய, तद्-रूपाः - அவனைப்போன்ற வடிவங்களான, योधाः - யுத்த வீரர்கள், समुत्तस्थुः - எழுந்தனர்.

(பொ - ரை) வஜ்ராயுதத்தினாலே அடிபட்ட அந்த ரக்தபீஜனுடைய சரீரத்திலிருந்து அளவற்ற திவலைகளோடு கூடிய ரக்தமானது வெகு விரைவில் பெருகியது. அந்த ரத்தத் துளிகளினின்றும், அவனைப்போன்ற பராக்ரமத்தோடு கூடிய யுத்தவீரர்கள் பலர் தோன்றினர். (43)

यावन्तः पतितास्तस्य शरीराद्रक्तबिन्दवः ।
तावन्तः पुरुषा जातास्तद्वीर्यबलविक्रमाः ॥ ४४ ॥

(ப - ரை) तस्य - அவனுடைய, शरीरात् - சரீரத்திலிருந்து, यावन्तः - எவ்வளவு, रक्त-बिन्दवः - ரக்தபிந்துக்கள், पतिताः - விழுந்தனவோ, तावन्तः - அவ்வளவு, तद्वीर्य-बल-विक्रमाः - அவனைப்போன்ற பலமும், திறமையுங்கொண்ட, पुरुषाः - புருஷர்கள், जाताः - உண்டானார்கள்.

(பெ - ரை) அந்த ரக்தபீஜனுடைய சரீரத்திலிருந்து எவ்வளவு ரத்தத் துளிகள் கீழே விழுந்தனவோ, அவைகளிலிருந்து மிகுந்த புஜபலமும், திறமையும் கொண்ட அவனைப்போன்ற பல புருஷர்கள் உண்டானார்கள். (44)

ते चापि युयुधुस्तत्र पुरुषा रक्तसंभवाः ।
समं मातृभिरत्युग्रशस्त्रपातातिभीषणम् ॥ ४५ ॥

(ப - ரை) तत्र - அந்த யுத்தத்தில், रक्त-संभवाः - ரத்தத்திலிருந்து தோன்றிய, ते - அந்த, पुरुषाः-च-अपि - புருஷர்களும், मातृभिः-समम् - மாத்ருகணங்களோடுகூட, अत्युग्र-शस्त्र-पातातिभीषणम् - மிகவும் குரூரமானசஸ்த்ராயுதங்களுடைய அடிகளால், அதிபயங்கரமாக, युयुधुः - யுத்தம் செய்தனர்.

(பொ - ரை) அந்த யுத்தத்தில் ரத்தத்திலிருந்து உண்டானவர்களான அந்த அஸுரர்கள் அனைவரும், மாத்ரு கணங்களோடு கூட மிகவும் குரூரமாகவும், அதிபயங்கரமாகவுமிருக்கின்ற சஸ்த்ரங்களுடைய ப்ரஹாரங்(அடி)களோடும் யுத்தம் செய்தனர். (45)

पुनश्च वज्रपातेन क्षतमस्य शिरो यदा ।
ववाह रक्तं पुरुषास्ततो जाताः सहस्रशः ॥ ४६ ॥

(ப - ரை) **पुनः-च** - மறுபடியும், **वज्र-पातेन** -வஜ்ராயுதத்தின் அடியினல், **अस्य** இந்த ரக்த பீஜனுடைய, **शिरः** - சிரஸானது, **यदा** - எப்பொழுது, **क्षतम्** - அறுக்கப்பட்டதோ (அப்பொழுதே) **रक्तम्** - ரத்தமானது, **ववाह** - பெருக்கெடுத்து ஓடியது. **ततः** - பிறகு, **सहस्रशः** - ஆயிரக்கணக்கான, **पुरुषाः** - புருஷர்கள், **जाताः** - உண்டானர்கள்.

(பொ - ரை) மறுபடியும் வஜ்ராயுதத்தினல் அடிபட்ட இந்த ரக்தபீஜனுடைய சிரஸானது அறுக்கப்பட்டபொழுது ரத்தமானது பெருக்கெடுத்து ஓடியது. அந்த ரத்தப்ரவாஹத்திலிருந்து ஆயிரக்கணக்கான யுத்த வீரர்கள் மறுபடியும் தோன்றினர். (46)

वैष्णवी समरे चैनं चक्रेणाभिजघान ह ।
गदया ताडयामास ऐन्द्री तमसुरेश्वरम् ॥ ४७ ॥

(ப - ரை) **समरे** - யுத்தத்தில், **वैष्णवी-च** - விஷ்ணுசக்தியும், **एनम्** - இந்த ரக்த பீஜனை, **चक्रेण** - சக்ராயுதத்தால், **अभिजघान-ह**-அடித்தாள். **ऐन्द्री** - ஐந்த்ரீசக்தியானவள், **तम्** - அந்த, **असुरेश्वरम्** - அஸுரசிரேஷ்டனை, **गदया** - கதாயுதத்தினல், **ताडयामास** - அடித்தாள்.

(பொ - ரை) யுத்தத்தில் வைஷ்ணவிசக்தியும் இந்த ரக்தபீஜனை சக்ராயுதத்தால் சேதனம் செய்தும், அவ்விதமே ஐந்த்ரீசக்தியும் அந்த அஸுரேச்வரனை கதாயுதத்தாலும் அடித்தாள். (47)

एन्द्रीतम् - ஐந்த்ரீதம்—என்று ஒரே பதமாகக் கொண்டு ஐந்த்ரீசக்தியினிடமிருந்து திரும்பி, தனக்கு எதிரில் வந்த ரக்த பீஜனை வைஷ்ணவீசக்தி சக்ராயுதத்தால் ஹிம்ஸித்து கதையினுலும் அடித்தாள் என நாகேசபட்டர் கூறுவர்.

वैष्णवीचक्रभिन्नस्य रुधिरस्रावसंभवैः ।
सहस्रशो जगद्व्याप्तं तत्प्रमाणैर्महासुरैः ॥ ४८ ॥

(ப - ரை) **वैष्णवी-चक्र-भिन्नस्य** - விஷ்ணு சக்தியினுடைய சக்ராயுதத்தால் பிளக்கப்பட்ட, **रुधिर-स्राव-संभवैः** - ரத்தப்ரவாஹத்திலிருந்து உண்டாகிய, **तत्-प्रमाणैः** - அவனுக்கு ஸமானமாயிருக்கின்ற, **सहस्रशः**-ஆயிரக்கணக்கான, **महासुरैः** - பெரிய அஸுரர்களினுல், **जगत्** - உலகம், **व्याप्तम्** - நிரம்பியது.

(பொ - ரை) வைஷ்ணவீ சக்தியினுடைய சக்ராயுதத்தினுலே பிளக்கப்பட்ட ரக்தபீஜனுடைய ரத்தப் பெருக்கிலிருந்து அவனுக்கு ஸமானமாயுள்ள பலத்தோடு கூடிய ஆயிரக்கணக்கான மஹாஸுரர்களினுல் இவ்வுலகம் நிரம்பியது. (48)

शक्त्या जघान कौमारी वाराही च तथासिना ।
माहेश्वरी त्रिशूलेन रक्तबीजं महासुरम् ॥ ४९ ॥

(ப - ரை) **कौमारी** - கௌமாரீ சக்தியானவள், **शक्त्या** - வேலாயுதத்தாலும், **तथा** - அவ்விதமே, **वाराही** - வாராஹீ சக்தியானவள், **असिना-च** - கத்தியினுலும், **माहेश्वरी**-மாஹேச்வரீ சக்தியானவள், **त्रि-शूलेन** - மூன்று முனையுள்ள சூலாயுதத்தினுலும், **रक्त-बीजम्** - ரக்தபீஜனென்ற, **महासुरम्** - மஹாஸுரனை, **जघान** - அடித்தனர்.

(பொ - ரை) அந்த ரக்தபீஜனென்ற மஹாஸுரனை கௌமாரீ வேலாயுதத்தாலும், அவ்விதமே வாராஹீ கத்தியி ைலும், மாஹேச்வரீ மூன்று முனையுள்ள சூலாயுதத்தாலும் அடித்தனர். (49)

स चापि गदया दैत्यः सर्वा एवाहनत्पृथक् ।
मातृः कोपसमाविष्टो रक्तबीजो महासुरः ॥ ५० ॥

(ப - ரை) स - அந்த, रक्त-बीजः - ரக்தபீஜனென்ற, महासुरः - மஹாஸுரனை, दैत्यः-अपि - தைத்யனும், कोप-स-माविष्टः - கோபத்தோடு கூடியவனுக, गदया - கதாயுதத்தால், सर्वाः - ஸமஸ்தமான, मातृः - மாத்ருகணங்களையும், पृथक्-एव - தனித்தனியாகவே, अहनत्-च - அடித்தான்.

(பொ - ரை) அந்த ரக்தபீஜனென்ற மஹாஸுரனை தைத்யனும் கோபாவேசம் கொண்டு அந்த மாத்ருகணங்கள் எல்லோரையும் தனித்தனியாக தனது கதாயுதத்தால் அடித்தான். (50)

तस्याहतस्य बहुधा शक्तिशूलादिभिर्भुवि ।
पपात यो वै रक्तौघस्तेनासञ्छतशोऽसुराः ॥ ५१ ॥

(ப - ரை) शक्ति-शूलादिभिः - வேல், சூலம், முதலியவைகளினுல், बहुधा - பலவிதமாக, आहतस्य - அடிக்கப்பட்ட, तस्य- அவனுடைய, यः -யாதொரு, रक्तौघः - ரத்தஸமூஹமானது, पपात-वै - விழுந்ததோ, तेन - அக்காரணத்தால், शतशः- நூற்றுக் கணக்கான, असुराः - அஸுரர்கள், आसन् - உண்டானார்கள்.

(பொ - ரை) வேல், சூலம் முதலியவைகளால் பல விதமாக அடிக்கப்பட்ட அந்த ரக்தபீஜனுடைய ரத்த ஸமூஹம் பூமியின் மீது விழுந்ததும் நூற்றுக்கணக்கான அஸுரர்கள் மீண்டும் உண்டாயினர். (51)

तैश्चासुरासृक्संभूतैरसुरैः सकलं जगत् ।
व्याप्तमासीत्ततो देवा भयमाजग्मुरुत्तमम् ॥ ५२ ॥

(ப - ரை) असुरा-सृक्-संभूतैः - அந்த ரக்தபீஜனுடைய ரத்தப்பெருக்கிலிருந்து உண்டான, तैः அந்த, असुरैः - அஸுரர்களினுல், सकलम् - ஸமஸ்தமான, जगत्-च - உலகமும், व्याप्तम् - பரவியதாக, आसीत् - இருந்தது, ततः - அக்காரணத்தால்देवाः-தேவர்கள், उत्तमम्-நிரதிசயமான, भयम् - பயத்தை, आ-जग्मुः - அடைந்தனர்.

(பொ - ரை) அந்த ரக்தபீஜனுடைய ரத்தப் பெருக்கிலிருந்து உண்டாகிய அந்த அஸுரர்களினுல் இந்த உலகம் முழுவதும் பரவியதாகச் செய்யப்பட்டது. அதைக் கண்ட தேவர்களும் என்றுமில்லாத பயத்தையடைந்தனர். (52)

तान् विषण्णान् सुरान् दृष्ट्वा चण्डिका प्राह सत्वरा ।
उवाच कालीं चामुण्डे विस्तीर्णं वदनं कुरु ॥ ५३ ॥

(ப - ரை) चण्डिका - சண்டிகாதேவீ, तान् - அந்த, विषण्णान् - துக்கத்தோடு கூடிய, सुरान् - தேவர்களை, दृष्ट्वा - பார்த்து, सत्वरा - விரைவாக, प्राह - சொன்னுள், चामुण्डे - ஓ சாமுண்டே! वदनम् - வதனத்தை (வாயை) विस्तीर्णम् - விஸ்தாரமாக, कुरु - செய், कालीम् - (என்று) காளிகாதேவியை (பார்த்து) उवाच - சொன்னுள்.

(பொ - ரை) என்றுமில்லாத மிகுந்த வியாகூலத்தையடைந்த அந்த தேவர்களைக்கண்டு, சண்டிகாதேவியானவள் பரபரப்புடன் இவ்விதம் கூறினாள். "'ஓ சாமுண்டே! நீ உன்னுடைய வாயைப் பெரிதாகச் செய்துகொள்" என்று சொன்னாள். (53)

प्राह सत्वरा - ப்ராஹ ஸத்வரா—என்றவிடத்தில், प्राहसत् - ப்ராஹஸத்-த்வரா—எனப் பிரித்துக்கொண்டு, சண்டிகாதேவியானவள், ரக்தபீஜனுடைய செய்கையைக் கண்டு மிகுந்த வியாகூலத்தையடைந்த தேவர்களைப்பார்த்து "நீங்கள் என்னுடைய பராக்ரமத்தை உண்மையாக அறியாத காரணத்தினாலன்றோ இவ்விதம் கலக்கமடைகிறீர்கள்" எனச்சொல்லி நகைத்தாள். என்று பொருள் கூறுவர் நாகேசபட்டரும், சாந்தநவீ உரையாசிரியரும்.

मच्छस्त्रपातसंभूतान् रक्तबिन्दून् महासुरान्।
रक्तबिन्दोः प्रतीच्छ त्वं वक्त्रेणानेन वेगिता ॥ ५४ ॥

(ப - ரை) त्वम् - நீ, मच्छस्त्र-पात-संभूतान् - என்னுடைய, ஆயுதங்களால், அடிபட்டு விழுவதிலிருந்து உண்டாகின்ற, रक्त-बिन्दून् - ரத்தபிந்துக்களை, वेगिता - வேகத்தோடு கூடியவளாக, अनेन - இந்த, वक्त्रेण - வாயினால், रक्तबिन्दोः - ரத்தபீஜனுடைய ஸமீபத்திலிருந்துகொண்டு, प्रतीच्छ - வாங்கிக்கொள்.

(பொ - ரை) ஓ சாமுண்டே! நீ என்னுடைய ஆயுதங்களால் அடிபட்டு விழுகின்ற ரத்தத்துளி பூமியில் விழாதபடி உன்னுடைய வாயைப்பெரிதாகச் செய்து அந்த அஸுரனுடைய ஸமீபத்தில் இருந்து கொண்டு குடித்துவிடு. (54)

भक्षयन्ती चर रणे तदुत्पन्नान् महासुरान् ।
एवमेव क्षयं दैत्यः क्षीणरक्तो गमिष्यति ॥ ५५ ॥

(ப - ரை) तद्-उत्पन्नान् - ரத்தபீஜனுடைய ரத்தத்திலிருந்து உண்டான, महासुरान् - மஹாஸுரர்களை, भक्षयन्ती - புசிக்கின்றவளாக, रणे - யுத்தத்தில், चर - ஸஞ்சரி. एषः - இந்த, दैत्यः - அஸுரன், एवम् - இவ்விதம், क्षीण-रक्तः - நாசத்தையடைந்த ரத்தமுள்ளவனாக, क्षयम् - அழிவை, गमिष्यति - அடைவான்.

(பொ - ரை) ஓ, சாமுண்டே! நீ ரக்தபீஜனுடைய ரத்தத்திலிருந்து உண்டான மஹாஸுரர்களை புசித்துக்கொண்டு யுத்தகளத்தில் ஸஞ்சாரம் செய். இந்த ரக்தபீஜனும், ரத்தங்கள் முழுவதும் க்ஷீணமாகி நாசத்தையடைவான். (55)

भक्ष्यमाणास्त्वया चोग्रा न चोत्पत्स्यन्ति चापरे ।
इत्युक्त्वा तां ततो देवी शूलेनाभिजघान तम् ॥ ५६ ॥

(ப - ரை) त्वया-உன்னால், भक्ष्यमाणाः - புசிக்கப்பட்டவர்களாய்க்கொண்டு, उग्राः-கொடிய அஸுரர்களான, अपरे-மற்றவர்கள், न-उत्पत्स्यन्ति-च - உண்டாக மாட்டார்கள், देवी - சண்டிகாதேவியும், ताम्-அந்தகாளிகாதேவியைக்குறித்து, इति-என்று, उक्त्वा-சொல்லி, तम् - அந்த ரக்தபீஜனை, शूलेन - சூலத்தினால், अभिजघान-च - அடிக்கவும் செய்தாள்.

(பொ - ரை) ஓ சாமுண்டே! நீ இவ்விதம் புசித்துக்கொண்டிருந்தால் கொடியவர்களான மற்ற அஸுரர்கள் உண்டாகமாட்டார்கள் என்று காளிகா தேவியோடு

சொல்லிவிட்டு, அந்த ரக்தபீஜனைத் தனது சூலாயுதத்தால் அடிக்கவும் செய்தாள். (56)

मुखेन काली जगृहे रक्तबीजस्य शोणितम् ।
ततोऽसावाजघानाथ गदया तत्र चण्डिकाम् ॥ ५७ ॥

(ப - ரை) काली - காளிகாதேவீ, मुखेन - முகத்திஞல், रक्तबीजस्य - ரத்தபீஜனுடைய, शोणितम् - ரத்தத்தை, जगृहे - குடித்தாள், तत्र - அந்த யுத்தத்தில், ततः - பிறகு, असौ - இந்த ரக்தபீஜன், गदया - கதையினல், चण्डिकाम् - சண்டிகா தேவியை, आजघान - அடித்தான்.

(பொ - ரை) காளிகாதேவியும் தன்னுடைய வாயினல் ரக்தபீஜனுடைய ரத்தத்தைப் பருகினள். பிறகு அந்த யுத்தகளத்தில் அவன தனது கதாயுதத்தால் சண்டிகாதேவியை அடித்தான். (57)

न चास्या वेदनां चक्रे गदापातोऽल्पिकामपि ।
तस्याहतस्य देहात्तु बहु सुस्राव शोणितम् ॥ ५८ ॥

(ப - ரை) गदा-पातः - கதையினல் வீழ்த்தப்பட்டாலும், अस्याः - தேவிக்கு, अल्पिकाम् अपि - கொஞ்சம்கூட, वेदनाम् - வேதனையை, न-चक्रे - செய்ய வில்லை. आहतस्य - சண்டிகையினுடைய சஸ்த்ரத்தால் அடிபட்ட, तस्य - அவனுடைய, देहात्-तु - சரீரத்திலிருந்தோ, बहु-शोणितम् - ஏராளமான ரத்தமானது, सुस्राव-च - பெருகவும் செய்தது.

(பொ - ரை) ரக்தபீஜனுடைய கதையினல் அடிக்கப்பட்டாலும், அது சண்டிகாதேவிக்குக் கொஞ்சம் கூட வலியை யுண்டாக்கவில்லை. ஆனல் சண்டிகாதேவியி

னுடைய சஸ்த்ரத்தினல் அடிபட்ட அந்த ரக்தபீஜனுடைய சரீரத்திலிருந்து மிகுந்த அளவில் ரத்தம் பெருகத் தொடங்கியது. (58)

यतस्ततस्तद्वक्त्रेण चामुण्डा संप्रतीच्छति ।
मुखे समुद्गता येऽस्या रक्तपातान् महासुराः ।
तांश्चखादाथ चामुण्डा पपौ तस्य च शोणितम् ॥ ५९ ॥

(ப - ரை) चामुण्डा - சாமுண்டாதேவி, तत् - அந்த ரத்தத்தை, यतः-ततः - அங்குமிங்கும், वक्त्रेण - வாயினல், सं-प्रतीच्छति - உட்கொண்டு रक्त-पातान् - ரக்தபீஜனுடைய ரத்தத்தின் வீழ்ச்சியைக் காரணமாகக் கொண்டு, ये - எந்த, महासुराः - பெரிய அஸுரர்கள், अस्याः - இந்த சாமுண்டியினுடைய, मुखे - வாயினுள்ளே, समुद्गताः - உண்டானர்களோ, तान् - அவர்களை, अथ - உடனே, चामुण्डा - சாமுண்டாதேவி, चखाद - புசித்தாள். तस्य - அந்த ரக்தபீஜனுடைய, शोणितं-च - ரத்தத்தையும், पपौ - பருகினள்.

(பொ - ரை) சாமுண்டா தேவியானவள் அந்த ரத்தத்தை வாயினல் அங்குமிங்கும் எடுத்து உட்கொண்டதும், அதிலிருந்து எவ்வளவு அஸுரர்கள் உண்டானர்களோ, அவ்வளவு அஸுரர்களையும் சாமுண்டாதேவி புசித்துவிட்டு, அந்த ரக்தபீஜனுடைய ரத்தத்தையும் குடித்தாள். (59)

देवी शूलेन वज्रेण बाणैरसिभि ऋष्टिभिः ।
जघान रक्तबीजं तं चामुण्डापीतशोणितम् ॥ ६० ॥

(ப - ரை) देवी - சண்டிகாதேவி, शूलेन - சூலத்தினலும், वज्रेण - வஜ்ராயுதத்தினலும், बाणैः - பாணங்களின

லும், असिभि: - கத்திகளினலும், ऋष्टिभि: - தடிகளினலும், चामुण्डा-पीत-शोणितम् - சாமுண்டாதேவியினல் பருகப்பட்ட ரத்தத்தையுடைய, रक्तबीजम् - அந்த ரக்தபீஜனே, जघान - அடித்தாள்.

(பொ - ரை) சண்டிகாதேவியானவள் சூலம், வஜ்ரம், சரங்கள், கத்திகள் இவைகளைக்கொண்டு, சாமுண்டா தேவியினல் பருகப்பட்ட ரத்தத்தையுடைய அந்த ரக்த பீஜனே அடித்தாள். (60)

स पपात महीपृष्ठे शस्त्रसंघसमाहतः ।
नीरक्तश्च महीपाल रक्तबीजो महासुरः ॥ ६१ ॥

(ப - ரை) महीपाल - ஒ அரசனே! सः - அந்த, रक्तबीजः - ரக்தபீஜனென்ற, महासुरः - மஹாஸுரன், शस्त्र-संघ-समाहतः - சஸ்த்ர ஸமூஹங்களால் நன்கு தாக்கப்பட்டவனுக. नीरक्तः - च - கொஞ்சமும் ரத்தமில்லாதவனுக, मही-पृष्ठे - பூமியின் மீது पपात - விழுந்தான்.

(பொ - ரை) ஒ அரசனே! அந்த ரக்தபீஜன் என்ற மஹாஸுரனும் ஆயுதக்கூட்டங்களால் நன்கு அடிக்கப் பட்டவனுக ஒரு துளிரத்தமும் இல்லாமல் நிலத்தின் மீது சாய்ந்தான். (61)

ततस्ते हर्षमतुलमवापुस्त्रिदशा नृप ॥ ६२ ॥
तेषां मातृगणास्तस्मिन् ननर्तासृङ्मदोद्धतः ॥ ६३ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
रक्तबीजवधो नामाष्टमोऽध्यायः ॥ ८ ॥

(ப - ரை) नृप - ஓ அரசனே! त्रिदशाः - தேவர்கள், ततः - பிறகு, अतुलम् - இணையற்ற, हर्षम् - ஸந்தோஷத்தை, अवापुः - அடைந்தனர். मातृ-गणाः - மாத்ருகணங்கள், तस्मिन् - அந்த யுத்தகளத்தில், तेषां - அந்த ரக்தபீஜன் முதலிய அஸுரர்களுடைய, असृङ-मदोद्धताः - ரக்த பானத்தினால் மதம் கொண்டவர்களாக, ननर्तुः - நர்த்தனம் செய்தனர்.

(பொ - ரை) ஓ அரசனே! பிறகு அந்த தேவர்கள் ஈடு இணையற்ற ஸந்தோஷத்தை அடைந்தனர். அந்த யுத்தகளத்தில் ப்ரஹ்மாணீ முதலிய மாத்ருசக்திகளும் ரக்தபீஜன் முதலிய அஸுரர்களுடைய ரத்தத்தைப் பானம் செய்து மதங்கொண்டவர்களாக ஆனந்த தாண்டவம் செய்தனர். (62, 63)

இவ்விடத்தில் ரத்தபானம் செய்தனர் என்றது யுத்தகளத்தில் **வீரபானம்** செய்யும் மரபையனுஸரித்ததாகும். இக்கருத்தையே கோசகாரரும்; वीरपाणं तु यत्पानं वृत्ते भाविनि वा रणे - வீரபாணம் து யத்பானம் வ்ருத்தே பாவினி வா ரணே—எனச் சொல்லுவர். **வீரபானம்** (கூழடுதல்) என்பது யுத்தத்தின் ஆரம்பத்திலாவது, முடிவிலாவது செய்யும் பானத்திற்குப் பெயராகும். அது மதம் உண்டாவதற்கு மத்யமாகவோ, அல்லது வெற்றியைக் குறிப்பதற்கான ரத்தபானமாகவோ இருக்கலாம் என்பது கருத்து.

கூழடுதல் - வென்றிகொண்ட வீரர் மகிழ்வுற மதுவோ, குருதி, மாமிசமிவற்றையோ சுட்டுச் சாப்பிடுதலாம். என தக்கயாகப் பரணி கூறும்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் ரக்தபீஜ வதம் என்ற எட்டாவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ नवमोऽध्यायः

राजोवाच ॥ १ ॥

विचित्रमिदमाख्यातं भगवन् भवता मम ।
देव्याश्चरितमाहात्म्यं रक्तबीजवधाश्रितम् ॥ २ ॥

राजा - *அரசன்,* **उवाच** - *சொன்னுன்—*

(ப - ரை) **भगवन्** - *ஓ பகவானே!* **भवता** - *உம்மால்,* **मे** - *எனக்கு,* **रक्तबीज - वधाश्रितम्** - *ரக்தபீஜவதத்தையனுஸரித்த,* **विचित्रम्** - *ஆச்சரியமான,* **इदम्** - *இந்த,* **देव्याः** - *தேவியினுடைய,* **चरित - माहात्म्यम्** - *சரித்திரமாஹாத்ம்யமானது,* **आख्यातम्** - *சொல்லப்பட்டது.*

அரசன் சொன்னுன்— (1)

(பொ - ரை) *ஓ மஹர்ஷியே! ரக்தபீஜ வதத்தையனுஸரித்ததாயும், ஆச்சரியமாயுமிருக்கிற இந்த தேவீ சரித மாஹாத்ம்யமானது எனக்கு உம்மால் சொல்லப் பட்டது.* (2)

भवता मम - *என்றவிடத்தில்* **भवता अमम** - *பவதா அமம - எனப் பிரித்துக் கொண்டு 'அமம' என்ற பதத்தை 'பகவன்!' என்ற பதத்திற்கு விசேஷணமாக கொள்வர் மந்தகைரவ உரையாசிரியர். அமம - அஹங்காரத்தை யகற்றியவர் என்பது பொருள்.*

भूयश्चेच्छाम्यहं श्रोतुं रक्तबीजे निपातिते ।
चकार शुम्भो यत्कर्म निशुम्भश्चातिकोपनः ॥ ३ ॥

(ப - ரை) रक्तबीजे - ரக்தபீஜன், निपातिते - கொல்லப் பட்டபொழுது, अति-कोपन: - மிகவும் கோபத்தோடு கூடிய, शुम्भः - சும்பனும், निशुम्भः-च-நிசும்பனும், भूयः - மறுபடியும், यत् - யாதொரு, कर्म-காரியத்தை, चकार-செய்தனரோ, अहम् - நான், श्रोतुम् - (அதை) கேட்பதற்கு, इच्छामि - விரும் புகிறேன்.

(பொ - ரை) ஓ மஹர்ஷியே! ரக்தபீஜன் என்ற அஸுரன் தேவியினுல் கொல்லப்பட்டபொழுது, அதிக மான கோபத்தையடைந்த சும்பனும் நிசும்பனும் எந்த காரியத்தைச் செய்தனரோ, அதைக் கேட்க விரும்பு கிறேன். (3)

ऋषिरुवाच ॥ ४ ॥

चकार कोपमतुलं रक्तबीजे निपातिते ।
शुम्भासुरो निशुम्भश्च हतेष्वन्येषु चाहवे ॥ ५ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னுர் —

(ப - ரை) आहवे - யுத்தத்தில், रक्तबीजे - ரக்தபீஜன், निपातिते (सति) - வீழ்த்தப்பட்டபொழுது, अन्येषु - च - மற்ற வர்களும், हतेषु - நாசமானபொழுது, शुम्भासुरः - சும்பன் என்ற அஸுரனும், निशुम्भः - च - நிசும்பன் என்ற அஸுரனும், अतुलम् - இணையற்ற, कोपम् - கோபத்தை, चकार - செய்தனர்.

மஹர்ஷி சொன்னுர்— (4)

(பொ - ரை) ஓ அரசனே! யுத்தகளத்தில் ஸ்ரீதேவியி னுல் ரக்தபீஜனென்ற மஹாஸுரன் கொல்லப்பட்டதும், அவ்விதமே மற்றவர்களும் நாசமடைந்ததைக் கண்ட

சும்பன், நிசும்பன் என்ற அவ்விரு அஸுரர்களும் எல்லை மீறிய கோபத்தை யடைந்தனர். (5)

हन्यमानं महासैन्यं विलोक्यामर्षमुद्वहन् ।
अभ्यधावन्निशुम्भोऽथ मुख्ययासुरसेनया ॥ ६ ॥

(ப - ரை) अथ - பிறகு, निशुम्भः - நிசும்பன், हन्यमानम् - கொல்லப்பட்ட, महा - सैन्यम् - பெரியஸேனையை, विलोक्य - பார்த்து, अमर्षम् - அடக்கமுடியாத கோபத்தை, उद्वहन् - வஹித்துக்கொண்டு, मुख्यया-முக்யமான, असुर-सेनया-அஸுர ஸேனையோடு கூட, अभ्यधावत् - ஓடினன்.

(பொ - ரை) பிறகு நிசும்பன் அந்த வலிமைபொருந்திய ஸைன்யம் அழிந்ததையும் கண்டு, அடக்க முடியாத கோபத்தை யடைந்தவனாக, தனது பிரதானமான அஸுரஸைன்யத்தோடுகூட தேவியைக் கொல்லுவதற்காக ஓடினன். (6)

तस्याग्रतस्तथा पृष्ठे पार्श्वयोश्च महासुराः ।
संदष्टौष्ठपुटाः क्रुद्धा हन्तुं देवीमुपाययुः ॥ ७ ॥

(ப - ரை) अस्य - அவனுடைய, अग्रतः - எதிரிலும், पृष्ठे - பின்புறத்திலும், तथा - அவ்விதமே, पार्श्वयोः-च - இரு புறங்களிலும், महासुराः - பெரிய அஸுரர்கள், संदष्टौष्ठपुटाः - கடிக்கப்பட்ட உதடுகளையுடையவர்களாக, क्रुद्धाः கோபம் மடைந்தவர்களாய்க் கொண்டு, देवीम् - தேவியை, हन्तुम् - கொல்லுவதற்கு, उपाययुः - ஸமீபத்தையடைந்தனர்.

(பொ - ரை) அந்த நிசும்பனுடைய முன்னேயும், பின்னேயும், இருபக்கங்களிலும் மஹாஸுரர்கள் அதிக

கோபத்தோடு கூட உதடுகளைக் கடித்துக்கொண்டு தேவியைக் கொல்லுவதற்கு அவளுடைய ஸமீபத்தை யடைந்தனர். (7)

आजगाम महावीर्यः शुम्भोऽपि स्वबलैर्वृतः ।
निहन्तुं चण्डिकां कोपात् कृत्वा युद्धं तु मातृभिः ॥ ८ ॥

(ப - ரை) महा-वीर्यः - பெரிய பராக்ரமசாலியான, शुम्भः-अपि - சும்பனும், स्व-बलैः - தன்னுடைய ஸைன்யங்களால், वृतः - சூழப்பட்டவனாக, मातृभिः - மாத்ருகணங்களோடு, युद्धम् - யுத்தத்தை, कृत्वा - செய்து, कोपात् - तु - கோபத்தின் காரணமாக, चण्डिकाम् - சண்டிகையை, नि - हन्तुम् - கொல்லு வதற்கு, आजगाम - வந்தான்.

(பொ - ரை) மிக பராக்ரமசாலியான அந்த சும்ப னும் தனது ஸேனைகளால் சூழப்பட்டவனாக, மாத்ருகணங் களோடு யுத்தம் செய்து விட்டு, அடங்காக் கோபத்தோடு சண்டிகாதேவியைக் கொல்லுவதற்காக அவ்விடம் வந்து சேர்ந்தான். (8)

ततो युद्धमतीवासीद्देव्याः शुम्भनिशुम्भयोः ।
शरवर्षमतीवोग्रं मेघयोरिव वर्षतोः ॥ ९ ॥

(ப - ரை) ततः - பிறகு, वर्षतोः - பொழிகின்ற, मेघयोः - इव - இரண்டு மேகங்களைப்போல, अतीव - மிகவும், उग्रम् - பயங்கரமான शर-वर्षम् - பாணங்களைப்பொழிகின்ற, शुम्भ-निशुम्भयोः - சும்ப நிசும்பர்களுக்கு, देव्या - தேவியோடுகூட, अतीव - கடுமையான, युद्धम् - யுத்தம், आसीत् - உண்டாகியது.

(பொ - ரை) பிறகு, மழையைப் பொழிகின்ற இரண்டு கார்மேகங்களைப் போல மிகவும் பயங்கரமான பாணங்களைப் பொழிந்து கொண்டிருக்கிற அந்த சும்ப நிசும்பர்களுக்கு, தேவியோடுகூட கடுமையான யுத்தம் மூண்டது. (9)

चिच्छेदास्तांश्छरांस्ताभ्यां चण्डिका स्वशरोत्करैः ।
ताडयामास चाङ्गेषु शस्त्रौघैरसुरेश्वरौ ॥ १० ॥

(ப - ரை) ताभ्याम् - அவர்களால், अस्तान् - எறியப் பட்ட, शरान् - பாணங்களை, चण्डिका - சண்டிகா தேவீ, स्व-शरोत्करैः - தனது பாணங்களுடைய கூட்டங்களால், चिच्छेद - அறுத்தாள், असुरेश्वरौ - அஸுரச்ரேஷ்டர் இருவரையும், अङ्गेषु - சரீரங்களில், शस्त्रौघैः - பாணம் முதலிய ஆயுதஸமூஹங்களால், ताडयामास - அடித்தாள்.

(பொ - ரை) அந்த சும்பநிசும்பர்கள் இருவரும் ப்ரயோகம் செய்த பாணங்களையெல்லாம், சண்டிகாதேவி தன்னுடைய சர ஸமூஹங்களால் ஒடித்து அஸுரேச்வரர்களான அவ்விருவர்களுடைய அங்கங்களிலும் அடித்தாள். (10)

निशुम्भो निशितं खड्गं चर्म चादाय सुप्रभम् ।
अताडयन्मूर्ध्नि सिंहं देव्या वाहनमुत्तमम् ॥ ११ ॥

(ப - ரை) निशुम्भः - நிசும்பன், निशितम् - கருக்குள்ள, खड्गम् - கத்தியையும், चर्म-च-கவசத்தையும், आदाय-எடுத்து, देव्याः - தேவியினுடைய, उत्तमम् - சிரேஷ்டமான, वाहनम् - வாஹனமாகிய, सिंहम्-ஸிம்ஹத்தை, मूर्ध्नि-தலையில், अताडयत्- அடித்தான்.

(பொ - ரை) நிசும்பன் மிகவும் கருக்குள்ள வாளையும், பளபளப்பான கவசத்தையும், எடுத்துக்கொண்டு தேவியினுடைய சிரேஷ்டமான ஸிம்ஹத்தினுடைய தலையில் அடித்தான். (11)

ताडिते वाहने देवी क्षुरप्रेणासिमुत्तमम् ।
निशुम्भस्याशु चिच्छेद चर्म चाप्यष्टचन्द्रकम् ॥ १२ ॥

(ப - ரை) **वाहने**-வாஹமானது, **ताडिते** - அடிக்கப்பட்ட பொழுது, **देवी** - தேவியானவள், **क्षुरप्रेण** - கத்தியினால், **निशुम्भस्य** - நிசும்பனுடைய, **उत्तमम्** - சிரேஷ்டமான, **असिम्** - கத்தியையும், **अष्ट-चन्द्रकम्** - எட்டு சந்த்ரனுடைய வடிவமாக, எழுதப்பட்ட, **चर्म - च** - கவசத்தையும், **आशु** - விரைவில், **चिच्छेद** - அறுத்தாள்,

(பொ - ரை) தேவியினுடைய வாஹனத்தை நிசும்பன் அடித்த பொழுது, தேவியும் தனது கூரிய கத்தியினால், நிசும்பனுடைய சிறந்த வாளையும், ரத்னங்களைக் கொண்டு நிர்மாணம் செய்யப்பட்ட எட்டு சந்த்ரவடிவத்தோடு கூடிய கவசத்தையும் அறுத்துத் தள்ளினாள். (12)

छिन्ने चर्मणि खड्गे च शक्तिं चिक्षेप सोऽसुरः ।
तामप्यस्य द्विधा चक्रे चक्रेणाभिमुखागताम् ॥ १३ ॥

(ப - ரை) **चर्मणि**-கவசமும், **खड्गे - च** - வாளும், **छिन्ने** - அறுக்கப்பட்ட பொழுது, **सः** - அந்த, **असुरः** - அஸுரன், **शक्तिम्** - வேலாயுதத்தை, **चिक्षेप** - எறிந்தான். **अस्य** - இந்த நிசும்பனுடைய, **अभि-मुखागताम्** - எதிர்த்து வருகின்ற, **ताम् - अपि** - அந்த வேலாயுதத்தையும், **चक्रेण** - சக்ரத்தினால், **द्विधा**- இரண்டாக, **चक्रे** - செய்தாள்.

(பொ - ரை) அந்த நிசும்பனுடைய வாளும், கவசமும் முறிக்கப்பட்டபொழுது, அவன் வேலாயுதத்தை எறிந்தான். தன்னை எதிர்த்து வருகின்ற அந்த வேலாயுதத்தையும் தேவி தன்னுடைய சக்ரத்தினுல் இரண்டாகத் துண்டித்தாள். (13)

कोपाध्मातो निशुम्भोऽथ शूलं जग्राह दानवः ।
आयान्तं मुष्टिपातेन देवी तच्चाप्यचूर्णयत् ॥ १४ ॥

(ப - ரை) अथ - பிறகு, कोपाध्मातः - கோபம் கொண்டு ஜ்வலிக்கின்ற, निशुम्भः-நிசும்பன் என்ற, दानवः - அஸுரன், शूलम् - சூலாயுதத்தை, जग्राह - பிரயோகம் செய்தான், देवी - தேவியானவள், आयान्तम् - எதிரில் வருகின்ற, तत्-च-अपि- அந்த சூலத்தையும், मुष्टि-पातेन-முஷ்டியின் அடியால், अचूर्णयत् பொடியாகச் செய்தாள்.

(பொ - ரை) பிறகு கோபத்தால் ஜ்வலிக்கின்ற அந்த நிசும்பனும் சூலாயுதத்தை ப்ரயோகம் செய்தாள் தன்னை எதிர்த்து வருகின்ற சூலாயுதத்தையும் தேவியானவள் தனது முஷ்டியினுல் அடித்துப் பொடியாக்கினுள். (14)

आविध्याथ गदां सोऽपि चिक्षेप चण्डिकां प्रति ।
सापि देव्या त्रिशूलेन भिन्ना भस्मत्वमागता ॥ १५ ॥

(ப - ரை) अथ - பிறகு, सः-अपि - அவனும், गदाम् - கதையை, आविध्य - சுழற்றி, चण्डिकां-प्रति - சண்டிகையைக் குறித்து, चिक्षेप - எறிந்தான். सा - अपि - அந்த கதையும், देव्या-தேவியினுல், त्रिशूलेन-த்ரிசூலத்தினுல், भिन्ना - பிளக்கப் பட்டது. भस्मत्वम्-சாம்பற்தன்மையை, आगता-அடைந்தது.

(பொ - ரை) பிறகு அந்த நிசும்பாஸுரனும் கதாயுதத்தைச் சுழற்றி, சண்டிகா தேவியின்மீது எறிந்தான். அந்த கதாயுதமும் தேவியினுடைய த்ரிசூலத்தால் பிளக்கப்பட்டு சாம்பராகியது. (15)

ततः परशुहस्तं तमायान्तं दैत्यपुंगवम् ।
आहत्य देवी बाणौघैरपातयत भूतले ॥ १६ ॥

(ப - ரை) ततः - பிறகு, परशुहस्तम् - கோடாலியைக் கையில் கொண்டு, आयान्तम् - வருகின்ற, तम् - அந்த, दैत्य पुंगवम्-அஸுரசிரேஷ்டனை, देवी-தேவியானவள், बाणौघैः-பாணஸமூஹங்களினால், आहत्य - அடித்து, भूतले-பூமியில், अपातयत - வீழ்த்தினாள்.

(பொ - ரை) பிறகு கோடலியைக் கையில் எடுத்துக் கொண்டு எதிரில் வருகின்ற அந்த அஸுரசிரேஷ்டனை, தேவியானவள் தனது பாணஸமூஹங்களால் அடித்து நிலத்தில் வீழ்த்தினாள். (16)

तस्मिन् निपतिते भूमौ निशुम्भे भीमविक्रमे ।
भ्रातर्यतीव संक्रुद्धः प्रययौ हन्तुमम्बिकाम् ॥ १७ ॥

(ப - ரை) तस्मिन् - அந்த, भीम-विक्रमे - பயங்கரமான பராக்ரமத்தையுடைய, निशुम्भे - நிசும்பன் என்ற, भ्रातरि - ஸஹோதரன், भूमौ - பூமியில், निपतिते - விழுந்தபொழுது, अतीव-மிகவும் संकुद्धः-கோபத்தையடைந்த சும்பன், अम्बिकाम्-தேவியை (குறித்து), योद्धुम् - யுத்தம் செய்வதற்கு, प्रययौ-சென்றான்.

(பொ - ரை) பயங்கரமான பராக்ரமத்தை யுடையவனாகிய நிசும்பன் என்ற ஸஹோதரன் நிலத்தில் வீழ்ந்

ததைக் கண்ட சும்பனும் மிகுந்த கோபாவேசங் கொண்டு சண்டிகாதேவியோடு யுத்தம் செய்வதற்காகப் புறப்பட்டான். (17)

स रथस्थस्तथात्युच्चैर्गृहीतपरमायुधैः ।
भुजैरष्टाभिरतुलैर्व्याप्याशेषं बभौ नभः ॥ १८ ॥

(ப - ரை) तथा அவ்விதமே, रथस्थः-ரதத்தில் இருந்து கொண்டு, सः - அவன், अति - उच्चैः - மிகவும் சிறந்தவைகளான, गृहीत - परमायुधैः - எடுத்துக்கொண்ட விசேஷமான ஆயுதங்களைக் கொண்டவைகளும், अतुलैः - நிகரில்லாதவைகளுமான, अष्टभिः - எட்டு, भुजैः - புஜங்களினால், अशेषम्- முழுவதுமான, नभः - ஆகாயத்தை, व्याप्य - வியாபித்துக் கொண்டு, बभौ - இருந்தான்.

(பொ - ரை) அவ்விதமே சும்பாஸுரன் தேரில் ஏறிக் கொண்டு, மிகவும் சிறந்தவைகளான ஆயுதங்களை, நிகரில்லாத தனது எட்டுக்கைகளிலும் தரித்துக்கொண்டு ஆகாசம் முழுவதையும் வியாபித்துக்கொண்டிருந்தான்.(18)

அந்த சும்பன் ஸாமுத்ரிகாலக்ஷணத்தில் சொல்லியவாறு மிகவும் உயர்ந்த புஜங்களைக் (கைகளை) கொண்டு விளங்கியதால் ஆகாயத்தை யள்ளாவி நின்றுகொண்டு விளங்கினன் என்பது தாத்பர்தம்.

तमायान्तं समालोक्य देवी शङ्खमवादयत् ।
ज्याशब्दं चापि धनुषश्चकारातीव दुःसहम् ॥ १९ ॥

(ப - ரை) देवी-சண்டிகாதேவி, आयान्तम्-(எதிரில்)வந்து கொண்டிருக்கின்ற, तम्-அந்த சும்பனை, समालोक्य-பார்த்து, शङ्खम् - சங்கத்தை, अवादयत् - வாசித்தாள். अतीव-மிகவும்,

दुःसहम् - பொறுக்கமுடியாத, धनुषः-வில்லினுடைய, ज्या-शब्दं च - अपि - நாணொலியையும், चकार - செய்தாள்.

(பொ - ரை) இவ்விதம் வந்துகொண்டிருக்கின்ற அந்த சும்பனைக் கண்ட தேவியானவள் தனது சங்கத்தை யெடுத்து ஊதினாள், அவ்விதமே பொறுக்கமுடியாத வில்லினுடைய நாணொலியையும் முழக்கினாள். (19)

पूरयामास ककुभो निजघण्टास्वनेन च ।
समस्तदैत्यसैन्यानां तेजोवधविधायिना ॥ २० ॥

(ப - ரை) समस्त-दैत्य-सैन्यानाम् - ஸமஸ்தமான அஸுர ஸைன்யங்களுடைய, तेजो-वध-विधायिना-தேஜஸுகளை நாசம் செய்கிறதான, निज - घण्टा - स्वनेन-च - தனது மணியினுடைய சப்தத்தாலும், ककुभम् - திசைகளை, पूरयामास - நிரப்பினாள்.

(பொ - ரை) எல்லா அஸுரஸைன்யங்களுடைய வீர்யத்தை நாசம் செய்கிறதான தனது மணியினுடைய ஒலியினால் திசைகளை நிரப்பினாள். (20)

இவ்விடத்தில் घण्टा-स्वनेन-च-கண்டாஸ்வநேந-ச—என்ற சகாரத்தால் சங்கங்களுடைய நாதங்களாலும், நாண்களுடைய டங்காரங்களினாலும். மணிகளுடைய ஒலிகளினாலும் திசைகளை நிரப்பிக்கொண்டிருந்தது என்பதுவும் தாத்பர்யமாகும்.

ततः सिंहो महानादैस्त्याजितेभमहामदैः ।
पूरयामास गगनं गां तथोपदिशो दश ॥

(ப - ரை) ततः - பிறகு, सिंहः - ஸிம்ஹமானது, त्याजितेभ-महामदैः - போக்கடிக்கப்பட்ட யானைகளுடைய மதங்களை யுடைய, महा-नादैः - பெரிய சப்தங்களினால், गगनम् - ஆகாயத்

தையும், गाम् - பூமியையும், दश उप-दिशः - பத்துத்திசைகளை யும், पूरयामास - நிரப்பியது.

(பொ - ரை) பிறகு ஸிம்ஹமானது யானைகளுடைய வலியதான மதங்களைப் போக்கி (இடி முழக்கம் போன்ற) கர்ஜனையினால் பத்துத்திசைகளையும் நிறைத்து விட்டது

ततः काली समुत्पत्य गगनं क्ष्मामताडयत् ।
कराभ्यां तन्निनादेन प्राक्स्वनास्ते तिरोहिताः ॥ २२ ॥

(ப - ரை) ततः - பிறகு, काली - காளிகாதேவி, गगनम् ஆகாயத்தை, समुत्पत्य - துள்ளிக்குதித்து, क्ष्माम् - பூமியை, कराभ्याम् - கைகளினால், अताडयत् - அடித்தாள். तत्-निनादेन - அந்த சப்தத்தால், ते - அந்த, प्राक्-स्वनाः - முன்பு இருந்த சப்தங்கள், तिरोहिताः - மறைந்தன.

(பொ - ரை) பிறகு காளிகாதேவியானவள் ஆகா யத்தில் துள்ளிக் குதித்து பூமியைத் தனது கைகளினால் அடித்தாள். அந்த சப்தத்தினால் முன்பு உண்டான சப் தங்களும் மறைந்தன. (22)

समुत्पत्य-ஸமுத்பத்ய-என்றது-உத்பதனம்—அதாவது ஆகா யத்தை நோக்கி, துள்ளி யெழும்பி பூமிக்கு வருவதாகும்.

अट्टाट्टहासमशिवं शिवदूती चकार ह ।
तैः शब्दैरसुरास्त्रेसुः शुम्भः कोपं परं ययौ ॥ २३ ॥

(ப - ரை) शिवदूती - சிவதூதி, अशिवम् - அதிபயங்கர மான, अट्टाट्टहासम् - அதிர்ச்சியுடன் கூடிய மந்தஹாஸத்தை, चकार-ह - செய்தாள், तैः - அந்த, शब्दैः - சப்தங்களினால், असुराः - அஸுரர்கள், त्रेसुः - பயத்தை யடைந்தனர், शुम्भः -

சும்பன், परम् - அதிகமான, कोपम् - கோபத்தை, ययौ - அடைந்தான்.

(பொ - ரை) சிவதூதீ என்ற மாத்ருகையானவள் என்றும் காணாத மிகவும் பயங்கரமான அவமதிப்புடன் கூடிய சிரிப்பைச் செய்தாள். அந்த அட்டாஹாஸத்தினுடைய சப்தங்களினால் அஸுரர்களனைவரும் பயத்தை யடைந்தனர். அதைக் கண்ட சும்பனுக்கு கோபமும் அதிகமாகப் பொங்கி யெழுந்தது. (23)

अट्टाट्टहासम् அட்டாட்டஹாஸம் - என்றது சத்ருக்களை அதிக்ரமித்து மேலும் மேலும் துரத்தித்துரத்திக் கொல்லுவதையும் குறிப்புதாகும் என **மந்தகைரவம்** கூறும்.

दुरात्मंस्तिष्ठ तिष्ठेति व्याजहाराम्बिका यदा ।
तदा जयेत्यभिहितं देवैराकाशसंस्थितैः ॥ २४ ॥

(ப - ரை) दुरात्मन् - ஓ துஷ்டனே! तिष्ठ-तिष्ठ - நில், நில், इति - என்று, यदा - எப்பொழுது, अम्बिका - தேவியானவள், व्याजहार - சொன்னாளோ, तदा - அப்பொழுது, आकाश-संस्थितैः - ஆகாசத்தில் வஸிக்கின்ற, देवैः - தேவர்களினால், जय - ஜயமுண்டாவதாக, इति - என்று, अभिहितम् - சொல்லப் பட்டது.

(பொ - ரை) ஓ துஷ்டனே நில்! நில்!! என்று தேவியானவள் சொல்லிய பொழுது, ஆகாயத்தில் வஸிக்கின்ற தேவர்கள், "உனக்கு ஜயமுண்டாகுக" என்று ஜய கோஷம் செய்தனர். (24)

आकाश-संस्थितः-ஆகாசஸம்ஸ்தித:—ஆகாசத்திலிருப்பவர்கள் என்றது, தேவிக்கும் அஸுரர்களுக்கும் நிகழும் யுத்தத்தைப் பார்ப்பதற்காக வந்து கூடின தேவர்கள் எனத் தாத்பர்யம்.

शुम्भेनागत्य या शक्तिर्मुक्ता ज्वालातिभीषणा ।
आयान्ती वह्निकूटाभा सा निरस्ता महोल्कया ॥ २५ ॥

(ப - ரை) शुम्भेन - சும்பனால், आगत्य - அடுத்துவந்த, ज्वालाति-भीषाणा - தேஜஸினால் மிகவும் பயங்கரமான, या - யாதொரு, शक्तिः - வேலானது, मुक्ता - விடப்பட்டதோ, सा - அது, वह्निकूटाभा - நெருப்புக்கூட்டடங்களைப் போன்ற சோபையுடன், आयान्ती - வரும் பொழுது, (देव्याः - தேவியினுடைய) महोल्कया - மஹோல்கம் என்ற பெயரோடு கூடிய ஆயுதத்தால், निरस्ता - தடுக்கப்பட்டது.

(பொ - ரை) சும்பனால் விடப்பட்டு எதிர்த்து வந்த வேலாயுதமானது, நெருப்புக்கூட்டங்களைப்போல ஜ்வாலைகளைக் கக்கிக்கொண்டு வரும்பொழுது, அந்த வேலாயுதத்தைத் தேவியானவள் தனது மஹோல்கா என்ற ஆயுதத்தால் தடுத்துவிட்டாள். (25)

महोल्का - மஹோல்கா—இது கொள்ளிக்கட்டையைப்போல் மிகுந்த ப்ரகாசத்துடன் விளங்கும் ஒருவித சக்தியைக் கொண்ட ஆயுத விசேஷம் என குப்தவதியும், மந்த்ரகைரவமும் கூறும்.

सिंहनादेन शुम्भस्य व्याप्तं लोकत्रयान्तरम् ।
निर्घातनिःस्वनो घोरो जितवानवनीपते ॥ २६ ॥

(ப - ரை) अवनीपते - ஓ அரசனே! शुम्भस्य - சும்பனுடைய, सिंह - नादेन - ஸிம்ஹநாதத்தைப் போன்ற நாதத்தினால், लोक-त्रयान्तरम् - மூவுலகினுடைய நடுவெளியும், व्याप्तम्- பரவப்பட்டது. घोरः - குரூரமான, निर्घात-निः - स्वनः - இடிமுழக்கம் போன்ற சப்தமானது, जितवान् - ஜயிக்கப்பட்டது.

(பொ - ரை) ஓ அரசனே! சும்பனுடைய ஸிம்ஹ நாதமானது மூவுலகின் நடுவெளியையும் பரவிக்கொண்டது. மேலும் அந்த இடிமுழக்கத்தையும் குரூரமான சப்தமானது ஜயித்தது. (26)

தேவீ சக்தியினுடையவும், சும்பனுடைய சக்தியினுடையவும் எதிரொலியின் காரணமாக பரஸ்பரம் உண்டாகிய சப்தமானது, சும்பன் செய்த ஸிம்ஹ நாதத்தைக் காட்டிலும் தேவியினுடைய எதிரொலியாலுண்டாகிய சப்தமானது எங்கும் பரவி நின்றது எனத் தாத்பர்யம்.

शुम्भमुक्तान् शरान् देवी शुम्भस्तत्प्रहितान् शरान् ।
चिच्छेद स्वशरैरुग्रैः शतशोऽथ सहस्रशः ॥ २७ ॥

(ப - ரை) अथ - பிறகு, शुम्भ-मुक्तान् - சும்பனால் விடப்பட்ட, शरान् - சரங்களை, देवी - தேவியும், तत् - प्रहितान् - தேவியால் அனுப்பப்பட்ட, शरान् - சரங்களை, शुम्भः - சும்பனும், उग्रैः - கொடியவைகளான, स्व-शरैः - தங்கள் சரங்களினால், शतशः - நூற்றுக் கணக்காகவும், सहस्रः - ஆயிரக்கணக்காகவும், चिछेद - அறுத்தாள்.

(பொ - ரை) பிறகு சும்பனால் விடப்பட்ட பாணங்களை தேவியும், தேவியினால் விடப்பட்ட சரங்களை சும்பனும், நூற்றுக் கணக்காகவும், ஆயிரக்கணக்காகவும், கொடியவைகளான தங்கள் பாணங்களால் அறுத்தனர். இவ்விதம் இவ்விருவருடைய பராக்ரமமானது யுத்தகளத்தில் ஸமமாகவே தோன்றியது. (27)

ततः सा चण्डिका क्रुद्धा शूलेनाभिजघान तम् ।
स तदाभिहतो भूमौ मूर्च्छितो निपपात ह ॥ २८ ॥

(ப - ரை) ततः - பிறகு, सा - அந்த, चण्डिका - சண்டிகாதேவி, क्रुद्धा - கோபத்தையடைந்து, तम् - அவனை, शूलेन - சூலத்தினல், अभि-जघान - அடித்தாள். सः - அவன், तदा - அப்பொழுது, अभि-हतः - அடிக்கபபட்டு, मूर्च्छितः - மூர்ச்சையடைந்தவனுக, भूमौ - பூமியில், नि-पपात - விழுந்தான்.

(பொ - ரை) பிறகு கோபத்தையடைந்த சண்டிகா தேவியானவள் சூலத்தினல் அந்த சும்பனை அடித்தாள். அடிப்பட்ட அவன் மூர்ச்சையடைந்து பூமியின் மீது விழுந்தான். (28)

ततो निशुम्भः संप्राप्य चेतनामात्तकार्मुकः ।
आजघान शरैर्देवीं कालीं केसरिणं तथा ॥ २९ ॥

(ப - ரை) ततः - பிறகு निशुम्भः - நிசும்பன், चेतनाम् - ஞாபகத்தை, सं-प्राप्य-அடைந்து, आत्त-कार्मुकम् - எடுக்கப்பட்ட வில்லையுடையவனுக, शरैः - பாணங்களினல், देवीम् - தேவியையும், कालीम्-காளிகையையும், तथा - அவ்விதமே, केसरिणम्-ஸிம்ஹத்தையும், आ-जघान - அடித்தான்.

(பொ - ரை) அப்பொழுது நிசும்பன் மூர்ச்சை தெளிந்து, ஞாபகசக்தியைப் பெற்று கையில் வில்லை எடுத்துக்கொண்டு, தேவியையும், காளிகையையும், ஸிம்ஹத்தையும் அடித்தான். (29)

पुनश्च कृत्वा बाहूनामयुतं दनुजेश्वरः ।
चक्रायुधेन दितिजश्छादयामास चण्डिकाम् ॥ ३० ॥

(ப - ரை) दितिजः - திதியின் புத்ரனை, दनुजेश्वरः - அஸுரர்களுக்கு அரசன், पुनः-च - மறுபடியும், बाहूनाम्- கை

களுடைய, अयुतम् - பதினாயிரத்தை, कृत्वा - செய்து, चक्रायुतेन - சக்ரங்களுடைய பதினாயிரத்தோடு, चण्डिकाम् - சண்டிகா தேவியை, छादयामास - மறைத்தான்.

(பொ - ரை) திதியின் புத்திரனும், அஸுரேச்வரனுமான அந்த நிசும்பன் மீண்டும் பதினாயிரம் கைகளையுண்டாக்கிக்கொண்டு, அக்கைகளினால் பதினாயிரம் சக்ராயுதங்களையும் தரித்தவனாக தேவியை மறைத்தான். (30)

ततो भगवती क्रुद्धा दुर्गा दुर्गार्तिनाशिनी ।
चिच्छेद तानि चक्राणि स्वशरैः सायकांश्च तान् ॥ ३१ ॥

(ப - ரை) ततः - பிறகு दुर्गार्ति-नाशिनी - கஷ்டங்களையும் பீடைகளையும் நாசம் செய்கிறவளும், भगवती - பகவதியாயுமிருக்கிற, दुर्गा - துர்காதேவியானவள், क्रुद्धा - கோபமடைந்து स्व-शरैः - தன்னுடைய பாணங்களால், तानि - அந்த, चक्राणि - சக்ரங்களையும், तान् - அந்த, सायकान् - च - பாணங்களையும், चिच्छेद - அறுத்தாள்.

(பொ - ரை) பிறகு கஷ்டங்களையும், பீடைகளையும், நாசம் செய்கிறவளும், பகவதியாயுமிருக்கிற துர்க்காதேவியானவள் மிகுந்த கோபத்தையடைந்து, தனது பாணங்களினால் அவனுடைய சக்ரங்களையும், பாணங்களையும் அறுத்தாள். (31)

ततो निशुम्भो वेगेन गदामादाय चण्डिकाम् ।
अभ्यधावत वै हन्तुं दैत्यसेनासमावृतः ॥ ३२ ॥

(ப - ரை) ततः - பிறகு, निशुम्भः - நிசும்பன், वेगेन - வேகத்தோடு, गदाम् - கதாயுதத்தை, आदाय - எடுத்து,

दैत्य-सेना-समावृतः - அஸுரஸேனைகளால் சூழப்பட்டவனுக, चण्डिकाम् - சண்டிகாதேவியை, हन्तुम् - கொல்லுவதற்கு अभ्यधावत-वै - ஓடிவந்தான்.

(பொ - ரை) உடனே நிசும்பன் மிகவும் வேகத்தோடு கதாயுதத்தை எடுத்துக்கொண்டு அஸுரஸேனைகளால் சூழப்பட்டனுக தேவியைக் கொல்லுவதற்கு எதிரில் ஓடிவந்தான். (32)

तस्यापतत एवाशु गदां चिच्छेद चण्डिका ।
खड्गेन शितधारेण स च शूलं समाददे ॥ ३३ ॥

(ப - ரை) आपतत-एव - வரும்பொழுதே, तस्य - அவனுடைய, गदाम् - கதாயுதத்தை, चण्डिका - சண்டிகாதேவி, शित-धारेण - கூரிய முனையையுடைய, खड्गेन கத்தியினுல், आशु- வேகமாக, चिच्छेद - அறுத்தாள். स - च - அவனும், शूलम् - சூலத்தை, समाददे - எடுத்தான்.

(பொ - ரை) அவன் வரும்பொழுதே, அவனுடைய கதாயுதத்தை தேவீ தன்னுடைய கூரிய முனையுள்ள கத்தியினுல் வெகுவேகமாக அறுத்து விட்டாள், உடனே அவனும் சூலாயுதத்தை எடுத்துக்கொண்டான். (33)

शूलहस्तं समायान्तं निशुम्भममरार्दनम् ।
हृदि विव्याध शूलेन वेगाविद्धेन चण्डिका ॥ ३४ ॥

(ப - ரை) चण्डिका - சண்டிகாதேவீ, अमरार्दनम् - தேவர்களை ஹிம்ஸை செய்பவனும், शूल-हस्तम्-சூலத்தைக்கையில் கொண்டவனும், समायान्तम् - எதிர்த்துவருபவனுமான, निशुम्भम् - நிசும்பனை, वेगाविद्धेन - வேகத்தோடு சுழற்றி

எறியப்பட்ட, शूलेन - சூலத்தினால், हृदि - மார்பில், विव्याध - குத்தினாள்.

(பொ - ரை) தேவர்களை ஹிம்ஸை செய்பவனும், கையில் சூலத்தைக் கொண்டவனும், எதிர்த்து வருபவனுமான அந்த நிசும்பனை, தேவியானவள் வேகத்தோடு கூட சுழற்றப்பட் சூலாயுதத்தால் மார்பில் குத்தினாள்.(34)

भिन्नस्य तस्य शूलेन हृदयान्निःसृतोऽपरः ।
महाबलो महावीर्यस्तिष्ठेति पुरुषो वदन् ॥ ३५ ॥

(ப - ரை) शूलेन-சூலத்தினால், भिन्नस्य - பிளக்கப்பட்ட, तस्य - அவனுடைய, हृदयात् - மார்பிலிருந்து, महा-बलः - மஹாபல முள்ளவனும், महा-वीर्यः - மஹாவீர்யமுள்ளவனுமான, अपरः - மற்றொரு, पुरुषः புருஷன், तिष्ठ - நில், इति - என்று, वदन् - சொல்லிக்கொண்டே, निःसृतः - புறப்பட்டான்.

(பொ - ரை) தேவியினுடைய சூலாயுதத்தால் பிளக்கப்பட்ட நிசும்பனுடைய மார்பிலிருந்து மிகவும் பலசாலியாயும், வீர்யமிக்கவனுயுமான வேறொரு புருஷன் 'நில்' என்று சொல்லிக கொண்டே வெளியே புறப்பட்டு வந்தான். (35)

तस्य निष्क्रामतो देवी प्रहस्य स्वनवत्ततः ।
शिरश्चिच्छेद खड्गेन ततोऽसावपतद्भुवि ॥ ३६ ॥

(ப - ரை) ततः - பிறகு, देवी - தேவியானவள், स्वनवत् - சப்தத்தோடு கூடியதாக, प्रहस्य -சிரித்து, निष्क्रामतः-வெளியே புறப்பட்ட, तस्य - அவனுடைய, शिरः - சிரஸை, खड्गेन - கத்தியினால், चिच्छेद - அறுத்தாள். ततः - பிறகு, असौ - இவன், भुवि - பூமியில், अपतत् - விழுந்தான்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் உரக்கச் சிரித்துக்கொண்டு அவனுடைய ஹிருதயத்திலிருந்து புறப்பட்ட அப்புருஷனுடைய சிரஸை வாளால் வெட்டினாள். அவனும் பூமியில் விழுந்தான். (36)

ततः सिंहश्चखादोग्रदंष्ट्राक्षुण्णशिरोधरान् ।
असुरांस्तांस्तथा काली शिवदूती तथापरान् ॥ ३७ ॥

(ப - ரை) ततः - பிறகு, सिंहः - ஸிம்ஹம், उग्र-दंष्ट्रा-क्षुण्ण-शिरो-धरान् - குரூரமான கோரைப்பற்களினால் நசுக்கப்பட்ட சிரஸுகளையுடைய, तान् - அந்த, असुरान् - அஸுரர்களையும், तदा - அப்பொழுது, काली - காளிகாதேவியும், अपरान् - மற்றவர்களையும், तथा - அவ்விதமே, शिवदूती - சிவதூதியானவள், (अपरान् - மற்றவர்களையும்) चखाद - புசித்தாள்.

(பொ - ரை) பிறகு ஸிம்ஹமானது குரூரமான கோரைப் பற்களினால் அந்த அஸுரர்களுடைய தலைகளை நொறுக்கிப் புசித்தது. மற்றும் சில அஸுரர்களை காளிகாதேவியும், வேறு சிலரை சிவதூதியும் முறையே புசித்தனர். (37)

कौमारीशक्तिनिर्भिन्नाः केचिन्नेशुर्महासुराः ।
ब्रह्माणीमन्त्रपूतेन तोयेनान्ये निराकृताः ॥ ३८ ॥

(ப - ரை) केचित्-சில, महा-सुराः - பெரிய அஸுரர்கள், कौमारी-शक्ति-निर्भिन्नाः - கௌமாரீ சக்தியினால் பிளக்கப்பட்டனர். अन्ये - வேறு சிலர், ब्रह्माणी-मन्त्र-पूतेन-ப்ரஹ்மாண்ீ மந்த்ரத்தால் பரிசுத்தமாக்கச் செய்த, तोयेन - ஜலத்தினால், निराकृताः - கொல்லப்பட்டனர்.

(பொ - ரை) கௌமாரீ தேவியும் தனது வேலாயுதத்தால் சில பெரிய அஸுரர்களைப் பிளந்தாள். ப்ரஹ்மாணீ சக்தியும் மந்த்ரத்தால் பரிசுத்தமான தனது கமண்டலுவிலிருக்கும் ஜலத்தால் மற்றும் சிலரைக் கொன்றாள். (38)

माहेश्वरीत्रिशूलेन भिन्नाः पेतुस्तथापरे ।
वाराहीतुण्डघातेन केचिच्चूर्णीकृता भुवि ॥ ३९ ॥

(ப - ரை) तथा - அவ்விதமே, अपरे - மற்றவர்களும், महेश्वरी-त्रिशूलेन-மஹேச்வரியினுடைய த்ரிசூலத்தால், भिन्नाः- பிளக்கப்பட்டனர். केचित् - சிலர், वाराही-तुण्ड-घातेन-வாராஹீ தேவியின் மூக்கினுடைய அடியினால், भुवि - பூமியில், चूर्णीकृताः - நொறுக்கப்பட்டனர்.

(பொ - ரை) அவ்விதமே மற்ற அஸுரர்களும் மாஹேச்வரியினுடைய த்ரிசூலத்தால் பிளக்கப்பட்டனர். சிலர் வாராஹீ தேவியின் மூக்கினுடைய அடியினால் நொறுக்கப்பட்டு பூமியில் விழுந்தனர். (39)

खण्डं खण्डं च चक्रेण वैष्णव्या दानवाः कृताः ।
वज्रेण चैन्द्रीहस्ताग्रविमुक्तेन तथापरे ॥ ४० ॥

(ப - ரை) दानवाः - அஸுரர்கள், वैष्णव्या - வைஷ்ணவீ சக்தியினால், चक्रेण - சக்ரத்தாலும், तथा - அவ்விதமே अपरे - வேறு சிலர், ऐन्द्री-हस्ताग्र-विमुक्तेन - இந்த்ர சக்தியினுடைய கைகளின் நுனியால் விடப்பட்ட, वज्रेण-च - வஜ்ராயுதத்தால், खण्डं-खण्डम् - துண்டுதுண்டாக, कृताः - செய்யப்பட்டனர்.

(பொ - ரை) சில அஸுரர்களை வைஷ்ணவீ சக்தி தனது சக்ராயுதத்தினாலும் ஐந்த்ரீதேவி தனது கைகளினால்

எறியப்பட்ட வஜ்ராயுதத்திஞலும், துண்டம் துண்டமாகச் செய்தனர். (40)

केचिद्विनेशुरसुराः केचिन्नष्टा महाहवात् ।
भक्षिताश्चापरे कालीशिवदूतीमृगाधिपैः ॥ ४१ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
निशुम्भवधो नाम नवमोऽध्यायः ॥ ९ ॥

(ப - ரை) केचित् - *சில*, असुराः - *அஸுரர்கள்*, महाहवात्- *பெரிய யுத்தத்தின் காரணமாக*, विनेशुः - *நாசமடைந்தனர்.* केचित्-*சிலர்*, नष्टाः -*ஓடினர்.* अपरे - *மற்றவர்கள்*, काली-शिवदूती-मृगाधिपैः - *காளிகாதேவியிஞலும், சிவதூதியிஞலும், ஸிம்ஹத்திஞலும்*, भक्षिताः - च - *புசிக்கப்பட்டனர்.*

(பொ - ரை) *சில அஸுரர்கள், அந்த மஹாயுத்தத்தில் மரித்தனர். வேறு சிலர் ஓடிவிட்டனர், எஞ்சிய சிலர் காளிகாதேவியிஞலும், சிவதூதியிஞலும், ஸிம்ஹத்தாலும் புசிக்கப்பட்டனர்.* (41)

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் நிசும்ப வதம் என்ற ஒன்பதாவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ दशमोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

निशुम्भं निहतं दृष्ट्वा भ्रातरं प्राणसंमितम् ।
हन्यमानं बलं चैव शुम्भः क्रुद्धोऽब्रवीद्वचः ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) शुम्भः - சும்பன், निहतम् - கொல்லப்பட்டவனும், प्राणसंमितम्-ப்ராணனுக்குச் சமமானவனும், भ्रातरम्-ஸஹோதரனுமான, निशुम्भम् - நிசும்பனையும், हन्यमानम् - கொல்லப்படுகின்ற, बलं-च-एव - ஸைன்யத்தையும், दृष्ट्वा - பார்த்து, क्रुद्धः - கோபித்தவனாகி, वचः - வார்த்தையை, अब्रवीत् - சொன்னான்.

மஹர்ஷி சொன்னார்— (1)

(பொ - ரை) தனது பிராணனுக்குச் சமமானவனும், ஸஹோதரனுமான நிசும்பன் கொல்லப்பட்டதையும், அவ்விதமே தனது ஸைன்யம் கொல்லப்படுவதையும் கண்டு கோபத்தோடு கூட இந்த வார்த்தையைச் சொன்னான். (2)

बलावलेपाद् दुष्टे त्वं मा दुर्गे गर्वमावह ।
अन्यासां बलमाश्रित्य युध्यसे यातिमानिनी ॥ ३ ॥

(ப - ரை) दुष्टे - துஷ்டத்தன்மை வாய்ந்த, दुर्गे- ஓ துர்கே! त्वम् - நீ, बलावलेपात् - புஜபலம் கொண்ட அஹங்காரத்தின் காரணமாக, गर्वम् - கர்வத்தை, मा-आवह-அடை

யாதே. या - எவள், अन्यासाम् - மற்றவர்களுடைய, बलम्-
பலத்தை, आश्रित्य - ஆச்ரயித்து, अति-मानिनी-மிகவும் ரோஷ
முள்ள (நீ) युद्ध्यसे - யுத்தம் செய்கிறுயே !

(பொ - ரை) துஷ்டையாகிய ஓ துர்கே! நீ பலத்
தின் காரணமான அஹங்காரத்தினல் கர்வத்தை யடை
யாதே. மிகவும் மானமுள்ள (கர்வமுள்ள) நீ மற்ற ஸ்த்ரீ
களுடைய உதவியைக் கொண்டன்றே என்னோடு யுத்தம்
செய்கிறுய். (3)

देव्युवाच ॥ ४ ॥

एकैवाहं जगत्यत्र द्वितीय का ममापरा ।
पश्यैता दुष्ट मय्येव विशान्त्यो मद्विभूतयः ॥ ५ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னுள்—

(ப - ரை) दुष्ट - ஓ துஷ்டனே ! अत्र - இந்த, जगति -
உலகில், अहम् - நான், एका-एव - ஒருவளே. मम - எனக்கு,
द्वितीया-இரண்டாவதான, अपरा-வேருெருவள், का-எவள் ?
एताः-இவர்கள், मद्विभूतयः- என்னுடைய சக்தியின் மஹிமை
களாவர். मयि-एव - என்னிடத்திலேயே, बिशन्त्यः - பிர
வேசிக்கின்றவர்கள். पश्य - பார்.

தேவீ சொன்னுள்— (4)

(பொ - ரை) ஓ துஷ்டனே ! இவ்வுலகில் நான் ஒரு
வளே தனித்திருப்பவள். என்னேக்காட்டிலும் இரண்டா
வதான வேருெருவள் கிடையாது. இங்கு இருக்கின்ற
ப்ரஹ்மாணீ முதலியவர்கள் என்னுடைய சக்தியின் மஹி
மையால் தோன்றியவர்களே. அவர்கள் எல்லோரும்
என்னிடம் லயம் (மறைவு) அடைவதைப் பார். (5)

இச்செய்யுளில் "एकैवाहम्-நான் ஒருவளே" என்றது "एक-मेवाद्वितीयम्" "வஸ்து ஒன்றே இரண்டல்ல" என்ற ச்ருதியினுடைய தாத்பர்யமாகும். அதாவது நான் பரமாத்ம வடிவம் கொண்டவள். என்னைத் தவிர வேறொரு பராசக்தி யார்? இவர்கள் எல்லோரும் எனது விபூதிகளின் (லீலை) பெருமையாலன்றோ உண்டாகியவர்கள். இவர்களனைவரும் என்னிடம் ஒடுங்குவதையும் பார் என்பதும் ஆம்.

இவ்விடத்தில் एका-ஏகா-ஸஜாதீயமாகவும், விஜாதீயமாகவுமுள்ள பேதத்தோடு கூடாதவளாயிருக்கும் நிலையையும் சொல்லப்பட்டது. இதுவேதான் ப்ரஹ்மத்தின் லக்ஷணமும். परा-பரா அந்யா-தன்னைக் காட்டிலும் வேறுபட்டது. எனப் பொருள். அவ்விதம் இல்லாதவள் அன்னை யென்பது தாத்பர்யம். पश्य-பச்ய-என்றது கொண்டு அநுபவத்தில் நிகழ்கின்ற பேதம் உண்மை அல்ல என்பதையும் குறிப்பதாகும். अहम्-அஹம்-நான் என்றது அஹங்கார வடிவாகவும், மாயாவடிவாகவும் சண்டிகை என்ற பெயரோடு கூடியவளாயிருப்பதால் நான் ஒருவளே தனித்திருப்பவள். தேவியாக-எங்கும் ப்ரகாசிப்பவளாக-இருக்கின்ற என்னைக் காட்டிலும் வேறான வ்யக்தி (வடிவம்) எங்கே தோன்றுவது? ஓரிடத்திலும் தோன்றாது. அப்படித் தோன்றினாலும் அது என்னுடைய அம்சமேயாகும்.

மற்றும் जगत्यत्र - ஜகத்யத்ர-என்றவிடத்தில் - ஜகதீ - அத்ர என பதம் பிரித்துக்கொண்டு ஜகதீ உலகம். அதாவது யாவும் ஒன்றாக இருக்கும் உலகும் நானே, எனக்கும் உலகுக்கும், உலகுக்கும் எனக்கும் வேறுபாடு ஒன்றுமில்லை. இவ்விதமிருக்கும் நிலையிலே, என்னைக்காட்டிலும் இரண்டாவதாக இருக்கும் வடிவம் எவ்விடத்திலிருந்து தோன்றும். ஓ துஷ்ட! எனது அம்சத்திலிருந்து உண்டானவர்களும், என்னுடைய தேஜோ (ஒளி) வடிவங்களாகவும் ஆன ப்ரஹ்மாணீ முதலியவர்களனைவரும் இதோ

என்னிடத்திலேயே ப்ரவேசிப்பதையும் பார்ப்பாயாக என்பது ஸாரம்.

இதற்கு உதாஹரணம் வருமாறு—

जगतो नाहमन्यास्यां स्यान्मदन्यजगच्च न ।
जगतो मम चाप्यैक्याद्यक्तिरन्या ततोऽस्ति का ।

अहं च जगती चैका जगती मन्मयी यतः ।
दुग्धाद्दधि चाप्येकं दधि दुग्धमयं यतः ॥

இச்செய்யுள்களின் பொருள் வருமாறு—உலகைக் காட்டிலும் நான் வேறாக இருக்கவில்லை. என்னைக்காட்டிலும் உலகும் வேறானது அல்ல. உலகுக்கும் எனக்கும் ஒன்றிய தன்மை (ஐக்யம்) இருப்பதாலேயே என்னைக் காட்டிலும் வேறொரு வடிவம் எங்கே இருக்கமுடியும். நானும் உலகும் ஒன்றே. ஏனெனில் எனது வடிவாகவே உலகம் இருப்பதாலன்றோ! அது எவ்விதமெனில் பாலைக்காட்டிலும் தயிர் வேறல்ல. ஒன்றேயன்றோ. தயிரும் பால் மயமாயிருக்கின்றதன்றோ! என்பதும் ஆம்,

மேலும். दुष्ट - ஓ துஷ்ட! கொடியவன் என்றது—

परस्त्रीलोलुपत्वेन स्वस्त्री त्यक्ता तु धैर्यतः ।
हन्ति वैवस्वतो राजा नृणामायुःशतं च यत् ।

मद्वाक्यं हि शिवेनोक्तं त्वया त्यक्तं दुरात्मना ।
अतस्त्वां शुम्भ हस्याजौ हतदैवं हतप्रभम् ॥

அதாவது—எவனொருவன் பரஸ்த்ரீயினிடத்தில் விருப்பம் கொண்டு துணிச்சலுடன் தனது மனைவியைப் புறக்கணிக்கின்றானோ! அவன் நூறு வயது நிரம்பியவனாயினும் தர்மராஜன் கொல்லுவானன்றோ! அவ்விதமே ஓ சும்ப! நீயும் பரஸ்த்ரீயினிடத்தில் விருப்பம் கொண்டு இவனால் சொல்லப்பட்ட என்னுடைய வார்த்தையையும் புறக்கணித்தாயன்றோ!—அலக்ஷ்யம் செய்தாயன்றோ!—உன்னைப்போல கொடிய குணமுள்ளவன்

ஒருவனும் கிடையாது. அதற்காகவே நான் உன்னைக் இந்த யுத்த களத்தில் கொல்லப்போகிறேன், என்னுடைய இந்த வார்த்தையானது இப்பொழுது உனது உணர்வில் தோன்ருவிட்டாலும் கூடிய சீக்கிரம் அநுபவத்தில் நீ காணப்போகிருய் என்ற கருத்துடன் சொல்லப்பட்டதாகும் என்பது ஸாரமாகும்.

ततः समस्तास्ता देव्यो ब्रह्माणीप्रमुखा लयम् ।
तस्या देव्यास्तनौ जग्मुरेकैवासीत्तदाम्बिका ॥ ६ ॥

(ப - ரை) ततः - பிறகு, ताः-அந்த, समस्ताः - ஸமஸ்தமான, ब्रह्माणी-प्रमुखाः-ப்ரஹ்மாணீ முதலிய, देव्याः - தேவிகள், तस्याः - அந்த, देव्याः - சண்டிகா தேவியினுடைய, तनौ-एव-சரீரத்திலேயே, लयम् - லயத்தை, जग्मुः - அடைந்தனர், तदा - அப்பொழுது, अम्बिका - தேவீ, एका - एव - ஒருவளே आसीत् - இருந்தாள்.

(பொ - ரை) பிறகு ப்ரஹ்மாணீ முதலிய தேவிகள் அனைவரும் சண்டிகாதேவியினுடைய சரீரத்திலேயே லயத்தை யடைந்தனர். அப்பொழுது தேவீ ஒருவளே தனியாக இருந்தாள். (6)

देव्युवाच ॥ ७ ॥

अहं विभूत्या बहुभिरिह रूपैर्यदास्थिता ।
तत्संहृतं मयैकैव तिष्ठाम्याजौ स्थिरो भव ॥ ८ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னாள்—

(ப - ரை) इह - இந்த யுத்தகளத்தில், अहम् - நான், विभूत्या - ஐச்வர்யத்தினால், (திறமை) बहुभिः - பலவிதங்களான, रूपैः - வடிவங்களோடு, यत् - யாதொரு கூட்டத்தை,

आस्थिता - அடைந்தேனே, तत् - அக்கூட்டமானது, मया என்னால், संहृता - இழுக்கப்பட்டது. एका - एव - (நான்) ஒருவளாகவே, तिष्ठामि - நிற்கிறேன். आजौ - யுத்தத்தில், स्थिरः- ஸ்திரமுள்ளவனாக, भव - (நீ) இருப்பாயாக.

தேவீ சொன்னாள்:— (7)

(பொ - ரை) நான் இந்த யுத்தகளத்தில் எனது ஐச்வர்யத்தின் (திறமை) காரணமாகப் பல வடிவங்களைப் படைத்தேன். அந்த வடிவங்களும் என்னால் இழுக்கப்பட்டு என்னிடத்தில் ஒடுக்கத்தை யடைந்தன. இப்பொழுது யுத்தகளத்தில் நான் ஒருவளாகவே இருக்கிறேன்; நீயும் யுத்தத்தில் தளர்ச்சி யடையாது நிலைத்திருப்பாயாக. (8)

तत् - தத் என்ற பதத்திற்கு அநேக வடிவங்களோடு கூடியிருக்கும் நிலை எனவும் பொருள் கொள்ளலாம்.

ऋषिरुवाच ॥ ९ ॥

ततः प्रववृते युद्धं देव्याः शुम्भस्य चोभयोः ।
पश्यतां सर्वदेवानामसुराणां च दारुणम् ॥ १० ॥

ऋषिः - மஹர்ஷி, - उवाच - சொன்னார்—

(ப - ரை) ततः பிறகு, पश्यताम् - பார்த்துக் கொண்டிருக்கின்ற, सर्व-देवानाम् - எல்லா தேவர்களுக்கும், असुरणां-च- அஸுரர்களுக்கும், दारुणम् - பயங்கரமான, युद्धम् - யுத்தமானது, देव्याः - தேவிக்கும், शुम्भस्य - சும்பனுக்கும், उभयोः- च - இருவருக்கும், प्रववृते - உண்டாகியது.

மஹர்ஷி சொன்னர்:— (9)

(பொ-ரை) பிறகு ஸகலதேவர்களும், அஸுரர்களும் பார்த்துக்கொண்டிருக்கும் பொழுதே தேவிக்கும், சும்பனுக்கும் பயங்கரமானதோர் யுத்தம் தொடங்கியது.

शरवर्षैः शितैः शस्त्रैस्तथा शस्त्रैः सुदारुणैः ।
तयोर्युद्धमभूद्भूयः सर्वलोकभयंकरम् ॥ ११ ॥

(ப-ரை) शितैः - கூரியவைகளான, शरवर्षैः - சரவர்ஷங்களாலும், तथा-அவ்விதமே, शस्त्रैः-வில்லுகளினலும், दारुणैः - பயங்கரங்களான, अस्त्रैः-च-एव-அம்புகளாலும், तयोः-அவ்விருவருக்கும், भूयः-அடிக்கடி, सर्व-लोक-भयंकरम् - எல்லா உலகங்களுக்கும் பயத்தை யுண்டாக்குகிற, युद्धम् - யுத்தமானது, अभूत् - உண்டாகியது.

(பொ-ரை) மிகவும் கூரியவைகளான பாணவர்ஷங்களாலும், அவ்விதமே பயங்கரமான சஸ்த்ரங்களாலும், கொடியவைகளான அஸ்த்ரங்களாலும் அவ்விருவருக்கும் அடிக்கடி உலகம் கண்டு நடுங்கும்படியான யுத்தம் மூண்டது. (11)

இவ்விடத்தில் ஆயுதங்களுடைய ஸாம்யத்தால் (நிகரான) யுத்த ஸாம்யமும். ஆயுதங்களுடைய பேதத்தினல் யுத்தபேதமும் உண்டாகியது. மிகவும் கொடியவைகளாயிருக்கின்ற சஸ்த்ரங்களைக் கொண்டும் கைகளுடைய நுனிகளால் எடுக்கத்தக்க கத்தி முதலியவைகளைக் கொண்டும் ஸர்வலோக பயங்கரமான யுத்தம் உண்டாகியது. அதாவது பலத்தினலும், ஆயுதங்களாலும் ஒருவருக்கொருவர் ஸமானமாகவே இருந்ததால் இவ்விருவருக்குள் ஜயபராஜயம் எவருக்கு என்பதைச் சொல்லமுடியாத வண்ணம் யுத்தம் நிகழ்ந்தது என்பது தாத்பர்யம்.

दिव्यान्यस्त्राणि शतशो मुमुचे यान्यथाम्बिका ।
बभञ्ज तानि दैत्येन्द्रस्तत्प्रतीघातकर्तृभिः ॥ १२ ॥

(ப - ரை) अथ - பிறகு, अम्बिका - தேவியானவள், यानि - எந்த, दिव्यानि - திவ்யங்களான, अस्त्राणि - அம்புகளை, शतशः - நூற்றுக்கணக்காக, मुमुचे - விட்டாளோ, तानि - அவைகளை, दैत्येन्द्रः - சும்பன், तत्-प्रतीघात-कर्तृभिः - அவைகளை நாசம் செய்கின்ற மாற்று அஸ்த்ரங்களால், बभञ्ज - ஒடித்தான்.

(பொ - ரை) பிறகு தேவியானவள் நூற்றுக்கணக்காக ப்ரயோகம் செய்த அந்த திவ்யாஸ்த்ரங்களையெல்லாம் அஸுரர்களுக்குத் தலைவனான சும்பன் தனது பெரிய அஸ்த்ரங்களால் அவைகளை முறித்துக் கீழே விழ்த்தினான். (12

प्रतीघातकर्तृभिः-ப்ரதிகாதகர்த்தருபி:—அவைகளுடைய நாசத்தைச் செய்கின்ற மாற்று அஸ்த்ரங்களால் எனச் சொல்லியது. தேவியால் விடப்பட்ட ஆக்னேயாஸ்த்ரங்களை வாருணாஸ்தரங்கள் கொண்டும், வாருணாஸ்த்ரங்களை வாயவ்யாஸ்த்ரங்கள் கொண்டும், வாயவ்யாஸ்த்ரங்களை பந்நகாஸ்த்ரங்கள் கொண்டும், பந்நகாஸ்த்ரங்களை, காருடாஸ்த்ரங்கள் கொண்டும், இவ்விதம் அஸ்த்ரசஸ்த்ரஸித்தங்களான ப்ரத்யஸ்த்ரங்களுடைய — மாற்று அஸ்த்ரங்கள்—உதவியால் அந்த சும்பன் தேவியினுடைய அஸ்த்ரங்களை முறியடித்தான் என்பது ஸாரம்.

मुक्तानि तेन चास्त्राणि दिव्यानि परमेश्वरी ।
बभञ्ज लीलयैवोग्रहुंकारोच्चारणादिभिः ॥ १३ ॥

(ப - ரை) परमेश्वरी - சண்டிகாதேவி, तेन - அந்த சும்பனால், मुक्तानि - விடப்பட்ட, दिव्यानि - சிறந்தவைகளான,

अस्त्राणि - च - அம்புகளையெல்லாம், उग्र-हुंकारोच्चारणादिभिः-பயங்கரமான ஹூங்காரத்தின் உச்சாரணங்களினால், लीलया-एव விளையாட்டாகவே, बभञ्ज - ஒடித்தாள்.

(பொ - ரை) அச் சண்டிகாதேவியும், சும்பனால் விடப்பட்ட சிறந்த அம்புகளை யெல்லாம், தனது பயங்கரமான ஹூம்கார சப்தங்களினால் விளையாட்டாகவே (வெகு ஸுலபமாக) ஒடித்தாள். (*13*)

ततः शरशतैर्देवीमाच्छादयत सोऽसुरः ।
सापि तत्कुपिता देवी धनुश्चिच्छेद चेषुभिः ॥ १४ ॥

(ப - ரை) ततः - பிறகு, सः - அந்த, असुरः - அஸுரன், देवीम् - சண்டிகையை, शर-शतैः - நூற்றுக்கணக்கான பாணங்களினால், आच्छादयत - மறைத்தான். सा - அந்த, देवी-अपि - சண்டிகையும், तत् - அது காரணமாக, कुपिता - கோபத்தோடு கூடியவளாய்க் கொண்டு इषुभिः - பாணங்களால், धनुः - வில்லை, चिच्छेद - முறித்தாள்.

(பொ - ரை) பிறகு அந்த சும்பன் நூற்றுக்கணக்கான பாணங்களைக் கொண்டு, தேவியை மறைத்துவிட்டான். அதன் காரணமாக தேவியும் மிகுந்த கோபத்தை யடைந்து தன்னுடைய பாணங்களால் அவனுடைய வில்லை ஒடித்தாள். (*14*)

छिन्ने धनुषि दैत्येन्द्रस्तथा शक्तिमथाददे ।
चिच्छेद देवी चक्रेण तामप्यस्य करे स्थिताम् ॥ १५ ॥

(ப - ரை) अथ - பிறகு, दैत्येन्द्रः - அஸுரர்களுக்குத் தலைவனான சும்பன், तथा - அவ்விதமே, धनुषि - வில்லானது

छिन्ने (सति) - முறிக்கப்பட்ட பொழுது, शक्तिम् - வேலாயுதத்தை, आददे - எடுத்தான். देवी - சண்டிகை, अस्य - இவனுடைய, करे - கையில், स्थिताम् - இருந்த, ताम्-अपि - அந்த வேலாயுதத்தையும், चक्रेण - சக்ராயுதத்தினல், चिच्छेद - அறுத்தாள்.

(பொ - ரை) பிறகு அஸுரசிரேஷ்டனுன அந்த சும்பன் தனது வில் முறிந்ததைக் கண்டவுடன், சக்தியென்னும் ஆயுதத்தை எடுத்தான். அவன் கையிலிருந்த அச்சக்தி யென்னும் ஆயுதத்தை தேவியானவள் தனது சக்ராயுதத்தால் அறுத்தெறிந்தாள். *(15)*

ततः खड्गमुपादाय शतचन्द्रं च भानुमत ।
अभ्यघावत्तदा देवीं दैत्यानामधिपेश्वरः ॥ १६ ॥

(ப - ரை) ततः - பிறகு, दैत्यानाम् - அஸுரர்களுடைய अधिपेश्वरः - தலைவர்களுக்கு எஜமானனுகிய சும்பன், खड्गम् - வாளையும், भानुमत् - பிரகாசமுள்ள, शत-चन्द्रम् - சதசந்த்ர மென்னும் கவசத்தை, उपादाय - எடுத்து, ताम् - அந்த, देवीम् - தேவியைக்குறித்து, अभ्यधावत - தாவினன்.

(பொ - ரை) பிறகு அஸுரர்களுடைய தலைவர்களுக்கெல்லாம் நாயகனுன அந்த சும்பன் ஸூர்யகிரணங்களைப் போல ஒளியுடன் விளங்கும் கத்தியையும், மிகவும் பிரகாசத்தோடு கூடிய சதசந்தர மென்ற கவசத்தையும் எடுத்துக்கொண்டு தேவியை நோக்கி எதிரில் ஓடிவந்தான். *(16)*

शत-चन्द्रं - च-சதசந்த்ரம் ச—என்ற இடத்தில் சகாரத்தைக் கொண்டு வாளும், கவசமும் தரித்த அச்வஸாரதிகளோடு கூடியவன் (குதிரை யோட்டுபவர்கள்-காஸாரிகள்) எனக் கொள்ள

வேணும், சதசந்த்ரம்-என்பது செயற்கையாகச் செய்யப்பட்ட நூறு சந்த்ரர்களோடு கூடிய கவசம் என்பது பொருள்.

तस्यापतत एवाशु खड्गं चिच्छेद चण्डिका ।
धनुर्मुक्तैः शितैर्बाणैश्चर्म चार्ककरामलम् ॥ १७ ॥

(ப - ரை) चण्डिका - சண்டிகாதேவீ, आपततः-एव - வந்துகொண்டிருக்கும் பொழுதே, आशु - வேகமாக, धनुर्मुक्तैः - வில்லுகளால் விடப்பட்ட, शितैः - கூரியவைகளான, बाणैः - பாணங்களால் अर्क - करामलम् - ஸூர்ய கிரணங்கள் போன்ற ஒளியையுடைய, तस्य - அவனுடைய, खड्ग - च - கத்தியையும், चर्म - च - கவசத்தையும், चिच्छेद - முறித்தாள்.

(பொ - ரை) அச்சும்பன் நேரில் ஓடிவரும்பொழுதே, சண்டிகையானவள் தனது வில்லைப்பூட்டிக் கூரிய பாணங்களைக் கொண்டு, ஸூர்ய கிரணங்களைப்போல பளபளப்பாக ப்ரகாசிக்கிற அவனுடைய கத்தியையும், கவசத்தையும் ஒரு நொடிப்பொழுதில் அறுத்து வீழ்த்தினாள். (17)

हताश्वः स तदा दैत्यश्छिन्नधन्वा विसारथिः ।
जग्राह मुद्गरं घोरमम्बिकानिधनोद्यतः ॥ १८ ॥

(ப - ரை) तदा - அப்பொழுது, सः - அந்த, दैत्यः - அஸுரன், हताश्वः-கொல்லப்பட்ட குதிரையையும், छिन्न-धन्वा- முறிக்கப்பட்ட வில்லையும், वि-सारथिः - கொல்லப்பட்ட ஸாரதியையுமுடைவனாக, अम्बिका - निधनोद्यतः - தேவியைக் கொல்லுவதற்கான முயற்சியுள்ளவனாய்க்கொண்டு. घोरम् - பயங்கரமான, मुद्गरम् - கதாயுதத்தை, जग्राह - எடுத்தான்.

(பொ - ரை) அப்பொழுது கொல்லப்பட்ட குதிரையையுடையவனும், முறிக்கப்பட்ட வில்லையும், விநாசத்தை

யடைந்த ஸாரதியையுமுடைய அச்சும்பன் தேவியைக் கொல்லுவதற்கான முயற்சியுடன் கோரமான கதாயுதத்தை எடுத்தான். (18)

चिच्छेदापततस्तस्य मुद्गरं निशितैः शरैः ।
तथापि सोऽभ्यधावत्तां मुष्टिमुद्यम्य वेगवान् ॥ १९ ॥

(ப - ரை) आपततः - அடுத்துவருகிற, तस्य - அவனுடைய, मुद्गरम् - கதையை, निशितैः - கூரியவைகளான, शरैः - பாணங்களால், चिच्छेद - முறித்தாள். तथा - अपि - அப்படி இருந்தாலும், सः - அவன், वेगवान् - வேகத்தோடு கூடியவனாய்க்கொண்டு, मुष्टिम् - கையை, उद्यम्य - உயர்த்திச் சுருட்டிக்கொண்டு, ताम् - அவளை, अभ्यधावत् - தொடர்ந்து ஓடி வந்தான்.

(பொ - ரை) சண்டிகாதேவீ அடுத்துவரும் அவனுடைய கதாயுதத்தைத் தனது கூரிய பாணங்களால் அறுத்துவிட்டாள். அப்படி இருந்தாலும், அவன் தொடர்ந்து வேகத்தோடு கூட கைகளைச் சுருட்டிக் கொண்டு குத்துவதற்காக தேவியின் எதிரில்ஓடிவந்தான்.

स मुष्टिं पातयामास हृदये दैत्यपुंगवः ।
देव्यास्तं चापि सा देवी तलेनोरस्यताडयत् ॥ २० ॥

(ப - ரை) सः - அந்த, दैत्य-पुंगवः - அஸுரர்களுக்குள் சிறந்தவனான சும்பன், देव्याः - தேவியினுடைய, हृदये - மார்பில், मुष्टिम् - கையை, पातयामास - வீழ்த்தினான். सा - அந்த, देवी-च - சண்டிகையும், तलेन - கரதலத்தால், तम्-अपि - அவ்வஸுரனையும், उरसि - மார்பில், अताडयत् - அடித்தாள்.

(பொ - ரை) அஸுரர்களிற் சிறந்தவனான அச்சும்பன், சண்டிகாதேவியினுடைய மார்பில் தனது கைகளைச் சுருட்டிப் பிடித்துக் கொண்டு வேகமாகக் குத்தினான். அச்சண்டிகையும் அவனுடைய மார்பில் தனது கையினால் அடித்தாள். (20)

दैत्य-पुंगव:-தைத்யபும்கவ:—அஸுரர்களில் தலைசிறந்தவன். இவ்விடத்தில்,

"स्युरुत्तरपदे व्याघ्रपुंगवर्षभकुञ्जराः ।
सिंहशार्दूलनागाद्याः पुंसि श्रेष्ठार्थवाचकाः ।"

என்பது **கோசம்.** இச்செய்யுளின் பொருள் வருமாறு. व्याघ्रः (வ்யாக்ர:) पुंगवः (பும்கவ:) ऋषभः (ரிஷப:) कुञ्जरः (குஞ்சர:) सिंहः (ஸிம்ஹ:) शार्दूलः (சார்தூல:) नागः (நாக:) என்ற ஏழுபதங்களும் வடமொழியில் ஸமாஸத்தில் உத்தரபதமாகக் கடைசியில் சேரும்பொழுது சிரேஷ்டம்-சிறந்தது-என்ற பொருளிலே வழங்குவனவாம். இதற்கு உதாஹரணங்கள்—**மநுஜவ்யாக்ர:, நரபும்கவ:, ராஜர்ஷப:, நரகுஞ்சர: நரஸிம்ஹ: நரசார்தூல: நரநாக:;** என்பவைகள்.

तलप्रहाराभिहतो निपपात महीतले ।
स दैत्यराजः सहसा पुनरेव तथोत्थितः ॥ २१ ॥

(ப - ரை) **सः**-அந்த, **दैत्य-राजः** - அஸுரர்களுக்கு அரசனான சும்பன், **तल-प्रहाराभि-हतः**-கைகொண்டு பலமாக அடிக்கப்பட்டு, **मही - तले** - நிலத்தில், **निपपात** - வீழ்ந்தான். **सः** - அவன், **सहसा** - வேகமாக, **पुनः** - மறுபடியும், **तथा-एव** - அவ்விதமே, **उत्थितः** - எழுந்தான்.

(பொ - ரை) அந்த அஸுரவரசனாகிய சும்பன் தேவியினுடைய கையால் பலமாகத் தாக்குண்டதும் நிலத்தின்

மீது விழுந்தான்; உடனே வெகுவேகமாக மறுபடியும் முன் போலவே எழுந்தான். (21)

उत्पत्य च प्रगृह्योच्चैर्देवीं गगनमास्थितः ।
तत्रापि सा निराधारा युयुधे तेन चण्डिका ॥ २२ ॥

(ப - ரை) (सः - அவன்) उत्पत्य - தாவிக்குதித்து, देवीम् - சண்டிகாதேவியை, प्र-गृह्य - பிடித்து, उच्चैः - பலமாக, गगनम् - ஆகாயத்தை, (குறித்து) आस्थितः - அடைந்தான். तत्र-अपि - அவ்விடத்திலும், सा - அந்த, चण्डिका - சண்டிகா தேவீ, निराधारा - ஒரு ஆதாரமும் இல்லாமல், तेनः - அவனோடு கூட, युयुधे -யுத்தம் செய்தாள்.

(பொ - ரை) அச்சும்பன் உடனே தேவியின் மீது தாவிக்குதித்து அவளைப் பிடித்துக்கொண்டு வேகமாக ஆகாயத்தை அடைந்தான். அவ்விடத்திலும் ஒருவித உதவியும் இல்லாமல் அவனோடு கூட சண்டிகையும் சண்டை செய்தாள். (22)

இச்செய்யுளில், निराधारा-நிராதாரா-என ஒரு வார்த்தை உபயோகம் செய்யப்பட்டிருக்கிறது, வடமொழியில்-நி:-என்ற உபஸர்கத்திற்கு நிச்சயம்-உறுகி-பிஷேதம்-தடுத்தல்-எனப் பொருளாம். அதாவது நானே ஸர்வசக்திகளோடு கூட சத்ருக்களைக் யழிக்கப்போகிறேன் என்னும் உறுதியைப் புலப்படுத்தும் ஞானத்திற்கு - நினைவிற்கு - ஆதாரமாயிருப்பதாம் எனவும் பொருள் ஆகும்.

மற்றும்: सानिराधार-ஸாநிராதாரா-ஸா-அநிராதாரா—என்று பதத்தைப் பிரித்துக் கொண்டு சப்த ப்ரஹ்ம வடிவான ஆகாசத்தில் இருக்கும் காரணமாக ஆதாரத்தோடு கூடியவளாக சண்டிகாதேவீ இருந்தாள். ஆதாரமில்லாமல் இருக்கவில்லை என்பது தாத்பர்யம்.

இவ்விடத்தில், சப்தப்ரஹ்மம் மந்த்ரதத்துவமும், மந்த்ரதத்துவம் சண்டிகையும், சண்டிகாதேவீ ஆகாசவடிவும், அந்த ஆகாச வடிவம் எங்கும், வ்யாபித்திருக்கிற விபுவாகவும், அந்த விபுவும் நிராதாரமாகவும் இருப்பதாம். இவைகள் தேவியினுடைய ஐச்வர்யங்கள். (லீலா விபூதிகளாம்) இச்சண்டிகையும் இந்த ஐச்வர்யங்களோடு கூடியவளாதலால் நிராதாரா என அழைக்கப்பட்டது என்பதும் ஸாரம்.

नियुद्ध खे तदा दैत्यश्चण्डिका च परस्परम् ।
चक्रतुः प्रथमं सिद्धमुनिविस्मयकारकम् ॥ २३ ॥

(ப - ரை) तदा - அப்பொழுது, खे - ஆகாசத்தில், दैत्यः - அஸுரனும், चण्डिका-च - சண்டிகையும், परस्परम् - ஒருவருக்கொருவர், सिद्ध-मुनि-विस्मय-कारकम् - ஸித்தர்களுக்கும், முனிவர்களுக்கும் ஆச்சர்யத்தைச் செய்கிற, नियुद्धम् - பாஹுயுத்தத்தை, प्रथमम् - முதலில், चक्रतुः - செய்தனர்.

(பொ - ரை) அப்பொழுது ஆகாசத்தில் சும்பாஸுரனும், சண்டிகையும் ஒருவருக்கொருவர் ஸித்தர்களும், முனிவர்களும் கண்டு வியக்கும்படியான கைச்சண்டையை முதலில் (முஷ்டியுத்தம்) செய்தனர். (23)

ततो नियुद्धं सुचिरं कृत्वा तेनाम्बिका सह ।
उत्पाट्य भ्रामयामास चिक्षेप धरणीतले ॥ २४ ॥

(ப - ரை) अम्बिका - சண்டிகை, तेन - सह - அவனோடு கூட, सु-चिरम्-வெகுகாலம், नियुद्धम्-கைச்சண்டையை, कृत्वा-செய்து, ततः - பிறகு, उत्पाट्य-(அவனை) உயரப்பிடித்து, भ्राम-यमास-சுழற்றினள். धरणीतले - நிலத்தில், चिक्षेप - எறிந்தாள்.

(பொ - ரை) சண்டிகாதேவியானவள், அச்சும்பனேடு கூட வெகு காலம் மல்ல யுத்தம் செய்துவிட்டு, முடிவில் அவனே உயர்த்திப் (நிலை பெயர்த்து-இடத்தை விட்டு அகற்றி) பிடித்துப் பந்துபோல் சுழற்றி நிலத்தின் மீது எறிந்தாள். (24)

स क्षिप्तो धरणीं प्राप्य मुष्टिमुद्यम्य वेगितः ।
अभ्यधावत दुष्टात्मा चण्डिकानिधनेच्छया ॥ २५ ॥

(ப - ரை) क्षिप्तः - எறியப்பட்டவனும், दुष्टात्मा - துஷ்ட குணமுள்ளவனுமான, सः-அந்த சும்பன், धरणीम् - பூமியை, प्राप्य - அடைந்து, वेगितः - வேகமாக, चण्डिका-निधनेच्छया- தேவியைக் கொல்லுவதற்கான விருப்பத்தோடு, मुष्टिम् - கையை, उद्यम्य - உயர்த்திக் கொண்டு, अभ्य - धावत- தொடர்ந்து ஓடிவந்தான்.

(பொ - ரை) அந்த துஷ்டஸ்வபாவமுள்ள சும்பனும் தேவியினுல் எறியப்பட்டு நிலத்தை யடைந்ததும், வெகு வேகமாகச் சண்டிகாதேவியைக் கொல்லுவதற்கு ஆசை யுடன் தனது முஷ்டியை உயர்த்திக் கொண்டு அவள் மீது தாவினுன். (25)

तमायान्तं ततो देवी सर्वदैत्यजनेश्वरम् ।
जगत्यां पातयामास भित्त्वा शूलेन वक्षसि ॥ २६ ॥

(ப - ரை) आयान्तम् - எதிர்த்து வருகின்ற, सर्व-दैत्य-जनेश्वरम् - ஸகல அஸுரஜனங்களுக்கும் தலைவனுன तम् - அவனே, ततः - பிறகு, देवी - சண்டிகையானவள், वक्षसि - மார்பில், शूलेन - சூலாயுதத்தால், भित्वा - பிளந்து, जगत्याम् - நிலத்தில், पातयामास - வீழ்த்தினுள்.

(பொ - ரை) பிறகு தனக்கு எதிரில் ஓடி வந்து கொண்டிருக்கின்றவனும், எல்லா அஸுரர்களுக்கும் தலைவனுமான, அச் சும்பனை, சண்டிகையானவள் தனது சூலாயுதத்தினால் அவனுடைய மார்பைப் பிளந்து நிலத்தின் மீது வீழ்த்தினாள். (26)

स गतासुः पपातोर्व्यां देवीशूलाग्रविक्षतः ।
चालयन् सकलां पृथ्वीं साब्धिद्वीपां सपर्वताम् ॥ २७ ॥

(ப - ரை) **देवी-शूलाग्र-विक्षतः**-தேவியினுடைய சூலத்தின் நுனியால் குத்தி எறியப்பட்ட (அந்த சும்பன்), **साब्धि-द्वीपाम्**-ஸமுத்ரங்களோடு கூடிய தீவுகளோடும், **सपर्वताम्** - மலைகளோடும் கூடிய, **सकलाम्** - முழுவதுமான, **पृथ्वीम्** - பூமியை, **चालयन्** - நடுங்கச் செய்து, **गतासुः** - போக்கப்பட்ட பிராணனையுடையவனாய்க் கொண்டு, **उर्व्याम्** - பூமியில், **पपात** - விழுந்தான்.

(பொ - ரை) சண்டிகையினுடைய சூலத்தின் நுனியால் குத்தி எறியப்பட்ட அவன் ஸமுத்ரங்கள், தீவுகள், பர்வதங்கள் இவைகளோடு கூடிய பூமண்டலம் முழுவதையும் நடுங்கச் செய்துகொண்டு தனது பிராணனையும் இழந்து கீழே விழுந்தான். (27)

ततः प्रसन्नमखिलं हते तस्मिन् दुरात्मनि ।
जगत्स्वास्थ्यमतीवाप निर्मलं चाभवन्नभः ॥ २८ ॥

(ப - ரை) **तस्मिन्** - அந்த, **दुरात्मनि** - துராத்மாவான சும்பன், **हते** - (सति) - கொல்லப்பட்டபொழுது, **ततः**-பிறகு, **अखिलम्** - முழுவதுமான, **प्रसन्नम्** - ஸந்தோஷத்தையடை

யந்த, जगत् - உலகம், अतीव - மிகவும், स्वास्थ्यम्-ஸுகத்தை, आप - அடைந்தது. नभः - च-ஆகாசமும், निर्मलम्-தெளிவாக, अभवत् - ஆகியது.

(பொ - ரை) துராத்மாவான அச்சும்பன் அழிந்ததும் சராசரங்களாலான வஸ்துக்கள் நிறைந்த இவ்வுலகம் முழுவதும் களிப்புடன் ஸுகத்தை யடைந்தது. ஆகாசமும் இருள் நீங்கித் தெளிவாக விளங்கியது. (28)

उत्पातमेघाः सोल्का ये प्रागासंस्ते शमं ययुः ।
सरितो मार्गवाहिन्यस्तथासंस्तत्र पातिते ॥ २९ ॥

(ப - ரை) प्राक् - முன்பு, सोल्काः - கொள்ளிக்கட்டைகளுடன் கூடிய, ये - எந்த, उत्पात-मेघाः - துர்நிமித்தத்தை ஸூசனைசெய்கின்ற மேகங்கள் தோன்றினவோ, ते-அவைகள், शमम् - சாந்தியை, ययुः - அடைந்தன. तथा - அவ்விதமே, तत्र - அவ்விடத்தில், पातिते - (அவன்) விழுந்த பொழுது, सरितः - நதிகளும், मार्ग-वाहिन्यः - நேர்வழிகளிலே யடைந்தனவாக, आसन् - இருந்தன.

(பொ - ரை) அச்சும்பன் அழிவதற்கு முன்பு தோன்றிய சில உத்பாதங்களை விளைவிக்கின்ற மேகங்களும் அவன் இறந்ததும் சமனமடைந்தன; அவ்விதமே அவன் விழுந்ததும் ஆறுகளும் நேர் வழியிலே ஓடுவதற்கு ஆரம்பித்தன. (29)

ततो देवगणाः सर्वे हर्षनिर्भरमानसाः ।
बभूवुर्निहते तस्मिन् गन्धर्वा ललितं जगुः ॥ ३० ॥

(ப - ரை) ततः - பிறகு, तस्मिन् - அந்த சும்பன், निहते- கொல்லப் பட்டபொழுது, सर्वे - எல்லா, देव-गणाः - தேவ கணங்களும், हर्ष-निर्भर-मानसाः- ஆனந்தம் நிறைந்த மனதோடு கூடியவர்களாக, बभूवुः - ஆனார்கள். गन्धर्वाः - கந்தர்வர் களும், ललितम् - அழகாக இருக்கும்படி, जगुः-பாடினார்கள்.

(பொ - ரை) பிறகு, சண்டிகாதேவியினால் அச் சும்பாஸுரன் கொல்லப்பட்ட பொழுது ஸகலதேவகணங் களும் உள்ளம் பூரித்து ஆனந்த பரவசமடைந்தனர். கந்த வர்களும் அழகாக கானம் செய்தனர். (30)

अवादयंस्तथैवान्ये ननृतुश्चाप्सरोगणाः ।
ववुः पुण्यास्तथा वाताः सुप्रभोऽभूद्दिवाकरः ॥ ३१ ॥

(ப - ரை) 'तथा - एव - அவ்விதமே, अन्ये - மற்றதேவர் களும், अवादयत् - வாத்யங்களை முழங்கினர். अप्सरो-गणाः-च - அப்ஸரஸ்த்ரீகளும், ननृतुः - நர்த்தனம் செய்தனர், तथा - அவ்விதமே, पुण्याः-பரிசுத்தங்களான, वाताः-காற்றுக்களும், ववुः - வீசின. दिवाकरः - ஸூர்யன், सुप्रभः - நல்ல ஒளியை யுடையவனாக, अभूत् - ஆனான்.

(பொ - ரை) அவ்விதமே மற்றதேவர்களும் வாத்யங் களை வாசித்தனர். அப்ஸரஸ்த்ரீகளும் கூட்டம் கூட்ட மாக நடனமாடினர். பரிசுத்தமான காற்றுக்களும் வீசத் தொடங்கின. ஸூர்யனும் நல்ல காந்தியுடன் பிரகாசித் தான். (31)


जज्वलुश्चाग्नयः शान्ताः शान्ता दिग्जनितस्वनाः ॥ ३२ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
शुम्भवधो नाम दशमोऽध्यायः ॥ १० ॥

(ப - ரை) अग्नय: - அக்னிகளும், शान्ता: - சாந்தமுள்ளவைகளாக, जज्वलु: - ஜ்வலித்தன. दिक्-जनित-स्वना:-च - திக்குகளில் உண்டான சப்தங்களும், शान्ता:' - சமனத்தையடைந்தன.

(பொ - ரை) அக்னிகளும் சாந்தமாக ஜ்வலித்தன, திக்குகளில் உண்டான சப்தங்களும் சாந்தியடைந்தன.

இவ்விதம் ஸ்ரீமார்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமஹாத்ம்யத்தில் சும்ப வதம் என்ற பத்தாவது அத்தியாயம் இவண் முற்றும்.



B. S. & F. Mart "Pen Corner" 113, Armenian St. Madras.

अथैकादशोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

देव्या हते तत्र महासुरेन्द्रे सेन्द्राः सुरा वह्निपुरोगमास्ताम् ।
कात्यायनीं तुष्टुवुरिष्टलाभाद्विकासिवक्त्राब्जविकाशिताशाः ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னார்—

(ப - ரை) देव्या - தேவியினால், तत्र - அந்த யுத்த களத்தில், महासुरेन्द्रे - அஸுர ச்ரேஷ்டன், हते - கொல்லப் பட்டபொழுது, सेन्द्राः - இந்த்ரனோடு கூடியவர்களும், वह्नि-पुरोगमाः - அக்நியை முன்னிட்டுக் கொண்டவர்களுமான, सुराः-தேவர்கள், इष्ट-लाभात् - (தங்களுடைய) விருப்பம் நிறைவேறிய காரணத்தால், विकासि-वक्त्राः-तु - மலர்ந்த முகங்களை யுடையவர்களாயும், विकाशिताशाः - பிரகாசிக்கின்ற திக்குகளை யுடையவர்களாயும், कात्यायिनीम् - சண்டிகா தேவியை, तुष्टुवुः - துதித்தனர்.

மஹர்ஷி சொன்னார்— (1)

(பொ - ரை) அஸுரர்களில் தலைசிறந்தவனான சும்பன், மஹாதேவியினால் யுத்தகளத்தில் கொல்லப்பட்டதும், இந்த்ரனோடு கூடிய தேவர்கள் அக்நியை முன்னிட்டுக் கொண்டு தங்கள் தங்கள் அபிலாஷைகளின் (விருப்பங்கள்) ஸித்தியின் காரணமாயுண்டாகிய ஆனந்தத்தால் (சந்த்ரனைப்போல) மலர்ந்த முகத்தோடுகூட ப்ரகாசிக்கின்ற திக்குகளையுடையவர்களாய்க் கொண்டு அந்த காத்யாயநீதேவியைத் துதித்தனர். (2)

இவ்விடத்தில் சண்டிகைக்கும், காத்யாயநிக்கும் வேறுபாடு கிடையாது அக்காரணத்தால் "காத்யாயநீ" எனவும் வழங்கப்பட்டது.

सुराः - ஸுரா:—என்றது ஞானம், ஐச்வர்யம் முதலியவைகளால் நன்கு ப்ரகாசிக்கின்றவர்கள் என்பதாம்.

विकाशिताशाः - விகாசிதாசா:—என்றது. நன்கு மலர்ந்தது. அதாவது தங்களுடைய துன்பம் நீங்கிய காரணத்தால் நிர்மலமான மனதில் தோன்றிய அபிப்பிராயங்களுடன் கூடியவர்கள் எனவும் பொருந்தும்.

देवि प्रपन्नार्तिहरे प्रसीद प्रसीद मातर्जगतोऽखिलस्य ।
प्रसीद विश्वेश्वरि पाहि विश्वं त्वमीश्वरी देवि चराचरस्य ॥ ३ ॥

(ப - ரை) प्रपन्नार्ति-हरे - சரணமடைந்தவர்களுடைய துக்கத்தைத் துடைப்பவளே! देवि! ஓ அன்னையே! प्रसीद- அனுக்ரஹம் செய்வாயாக! अखिलस्य - ஸமஸ்தமான, जगतः - உலகங்களுக்கும், मातः - அன்னையாகிய ஓ தேவி! प्रसीद - அனுக்ரஹம் செய்வாயாக! विश्वेश्वरि - உலகங்களுக்குத் தலைவியாகிய ஓ அன்னையே! विश्वम् - உலகை, पाहि - காப்பாற்றுவாயாக. देवि - ஓ அன்னையே! त्वम् - நீ, चराचरस्य- ஸ்தாவரஜங்கமங்களுக்கு, ईश्वरी - தலைவியன்றோ.

இந்த ச்லோகம் முதல் 'நாராயணீ ஸூக்தம்' என்ற ஸ்துதி ஆரம்பிக்கப்படுகிறது—

(பொ - ரை) தன்னைச் சரணமடைந்தவர்களுடைய துக்கத்தைத் துடைப்பவளே! ஓதேவி! அனுக்ரஹம் செய்வாயாக. உலகங்களுக்கு அன்னையாம் ஓதேவி! அனுக்ரஹம் செய்வாயாக. மூவுலகுக்கும் தலைவியாகிய

ஓ அன்னையே! உலகைக் காப்பாற்றுவாயாக. நீ ஸமஸ்த சராசரங்களுக்கும் தலைவியன்றோ ! (3)

प्रपन्नार्ति-हरे -ப்ரபந்நார்த்திஹரே-என்றதால் தனது சரணாரவிந்தங்களைப்பற்றிய பக்தர்களுடைய துன்பத்தை யகற்றுவது தேவியின் கோபமேயாகும். அந்த கோபமும் இப்பொழுது ஸபலமாகிவிட்டது. அதாவது எங்களுடைய பகைவர்களும் உனது கோபத்தால் அழிந்தனர். ஆகையால் கோபம் வேண்டாம். கோபத்தால் ஆகவேண்டியது இனி ஒன்றும் கிடையாது. எங்களை மலர்ந்த முகத்துடன் அனுக்ரஹம் செய்வாயாக என்பதும் கிடைப்பதாகும் என கூடார்த்த தீபிகை கூறும்.

प्रसीद-मातः-जगतोऽखिलस्य- ப்ரஸீத - மாதர்-ஜகதோ-ऽகிலஸ்ய- அன்னைக்குக் கோபம் வந்தால் குழந்தைக்குப் பால் கிடைக்காதன்றோ ! அதுபோல எங்களுக்கு உன்னை விட சரணமடைவதற்கு வேறு எவர் இருக்கின்றனர். ஒருவரும் இல்லையன்றோ ! ஆகையினால் கோபத்தை விட்டு ப்ரஸன்னையாக (தெளிந்த முகத்துடன்) இருப்பாயாக.

विश्वेश्वरी - விச்வேச்வரீ—உலகங்களின் தோற்றத்திற்கு நீ இருப்பிடமாயிருப்பவளன்றோ! அக்காரணத்தால் உன்னை ஜகன்மாதா எனவும் அழைப்பது.

இவ்விடத்தில், **प्रसीद** - ப்ரஸீத—என மூன்று தடவை சொன்னது தேவர்களுக்குத் தேவியினிடமுள்ள ஆர்வத்தின் மிகுதியைக் குறிப்பதாகும். **त्वम् - ईश्वरी-देवि-चराचरस्य** - த்வமீச்வரீ தேவி-சராசரஸ்ய-என்றதால் தேவி ! நீயே இச்சராசரங்களுக்குத் தலைவியென்றது. தேவீ ஒருவளே இச்சாரசரங்களுக்குத் தலைவியாயிருந்துகொண்டு ஸ்வதந்தரத்தோடு ஐந்துவித க்ருத்யங்களை (தொழிலை) நடத்துபவள். மற்ற தேவர்கள் அனைவரும் பரதந்தர்கள். அதாவது தேவியினுடைய சக்திக்குக் கீழ்படிந்தவர்கள் என்பதை ஸூசனை செய்வதாகும்.

त्वमीश्वरी-देवि-चराचरस्य - த்வமீச்வரீ-தேவி - சராசரஸ்ய— ஓ அன்னையே! இந்தப் பிரபஞ்சசத்திற்கு உன்னைக்காட்டிலும் வேறு ஒருவரும் தலைவராயிருக்க முடியாதன்றோ! ப்ரஹ்மன் முதலிய தேவர்களும் உன்னுடைய சக்தியையடைந்து உனக்கு அதீனமாயிருந்துகொண்டு உலகம் தோன்றுகையில் ஸ்ருஷ்டியைச் செய்தும், அவ்விதமே விஷ்ணு காப்பாற்றுவதும், பிறகு ஊழியின் முடிவிலே ருத்ரன் அழிப்பதும் உனது ஆணையின் வன்மையினலன்றோ! ஆகையினல் நீ ஒருவளே உலகம் அனைத்தும் ஆட்சி புரிந்து ஸ்வதந்தரத்துடன் இருந்துவருகிருய் என்பது ஸாரம் என கூடார்த்த தீபிகைகூறும்.

आधारभूता जगतस्त्वमेका महीस्वरूपेण यतः स्थितासि ।
अपां स्वरूपस्थितया त्वयैतदाप्याय्यते कृत्स्नमलङ्घ्यवीर्ये ॥ ४ ॥

(ப - ரை) त्वम् - நீ, यतः - யாதொரு காரணத்தால், मही-स्वरूपेण - பூமியின் வடிவத்தோடு, स्थिता - நிலைத்து, असि- இருக்கிருயோ, (அக்காரணத்தால்) जगतः - உலகத்திற்கு, आधारभूता - ஆதாரமாயிருக்கின்றவளும், (त्वम् - நீ,) एका - ஒருவளே, अलङ्घ्यवीर्ये - அசைக்கமுடியாத வீர்யமுள்ளவளே! अपाम् - ஜலங்களுடைய, स्वरूप-स्थितया - வடிவத்தோடு கூடியவளாகிய, त्वया - உன்னல், एतत् - இந்த, कृत्स्नम् - உலகம் முழுவதும், आप्याय्यते - வளர்ச்சியடைகிறது.

(பொ-ரை) ஓ அன்னையே! உனது திருமேனி பூமியினுடைய வடிவாயிருப்பது கொண்டு உலகத்திற்கு ஆதாரமாயிருப்பவளும் நீயேயன்றோ! பிறரால் அசைக்க முடியாத வீர்யத்தை (பராக்ரமத்தை)யுடைய ஓ அன்னையே! உனது திருமேனி ஜலத்தின் வடிவாயிருப்பது

கொண்டு இவ்வுலகம் முழுவதையும் வளரச் செய்பவளும் நீயே யன்றோ ! (4)

இந்த ச்லோகத்தினல் ஸ்ரீதேவிக்கு ஸர்வாத்மகத்வம் (அதாவது எல்லா வஸ்துக்ககளிலும் பரவியிருப்பது) சொல்லப்பட்டது.

त्वं वैष्णवी शक्तिरनन्तवीर्या विश्वस्य बीजं परमासि माया ।
संमोहितं देवि समस्तमेतत्त्वं वै प्रसन्ना भुवि मुक्तिहेतुः ॥ ५ ॥

(ப - ரை) (देवि - ஓ தேவி!) त्वम् - நீ, अनन्त-वीर्या-அளவற்ற வீர்யமுள்ள, वैष्णवी - விஷ்ணு ஸம்பந்தமான, शक्तिः - சக்தியன்றோ! विश्वस्य - ப்ரபஞ்சத்திற்கு, बीजम् - (ஆதி காரணமான) வித்தல்லவா! सा - அந்த, परमा - உத்க்ருஷ்டமான, माया - அவித்யா வடிவான சக்தியாகவும், असि - இருக்கிருய். देवि - ஓ தேவி! एतत् - இந்த (தோற்றமளிக்கும் உலகம்), समस्तम्-முழுவதும், संमोहितम् - (உன்னல்) நன்கு மறைக்கப்பட்டது. त्वम् - நீ, प्रसन्ना-பிரஸன்னமானல், भुवि-உலகில், मुक्ति-हेतुः-वै - முக்திக்கு ஹேதுவாக (காரணமாக) இருக்குமன்றோ !

(பொ - ரை) ஓ அன்னேயே ! அளவற்ற வீர்யமுள்ள விஷ்ணுவினுடைய சக்தியாகவும், இந்த ப்ரபஞ்சத்தோற்றங்களுக்கு மூலகாரணமான வித்தின் வடிவாயிருப்பவளும், யாவற்றிற்கும் மேலான மாயாவடிவத்தோடு இருப்பவளுமான உன்னலன்றோ இச்சராசரங்களனைத்தும் மோஹிக்கச் செய்யப்படுகின்றன. நீ அனுக்ரஹம் செய்தால் இவ்வுலகிலேயே முக்தியை யடைவதற்கும் காரணமாயிருக்குமன்றோ ! (5)

இந்த ச்லோகத்தின் முதல் பாதத்தினல் தேவியினுடைய பரிபாலனசக்தியையும், இரண்டாவது பாதத்தால் காரண சக்தி

யையும், மூன்ருவது பாதத்தால் தேவியே அவித்யா (மாயா) வடிவாயிருந்து கொண்டு உலகை மோஹிக்கச்செய்து மக்களுக்கு ஸம்ஸார பந்தத்தைக் கொடுப்பவள் என்பதையும், நான்காவது பாதத்தால் அந்த தேவியே ப்ரஸன்னேயாயிருந்து (வித்யாசக்தி) கொண்டு என்றும் அழியாநிலையாம் மோக்ஷத்தையும் கொடுப்பவள் என்பதையும் விளக்கப்படுகிறது.

विद्याः समस्तास्तव देवि भेदाः स्त्रियः समस्ताः सकला जगत्सु ।
त्वयैकया पूरितमम्बयैतत् का ते स्तुतिः स्तव्यपरापरोक्तिः ॥ ६ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி! समस्ताः - ஸமஸ்தமான, विद्याः - வித்தைகளும், जगत्सु - உலகங்களில், सकलाः - அறுபத்துநான்கு கலைகளோடு கூடிய, समस्ताः - ஸமஸ்தமான, स्त्रियः - ஸ்த்ரீகளும், तव - உன்னுடைய, भेदाः - பேதங்களன்றோ! एतत् - இந்த உலகம், त्वया - உன்னால், एकया - ஒருவளான, अम्बया - அன்னேயால், पूरितम् - நிறைவாகச் செய்யப்பட்டது, (अतः - ஆகையால்) स्तव्य-परापरोक्तिः - ஸ்துதி செய்வதற்கு யோக்யமான வஸ்துவிற்கு முக்கியமாயும், கௌணமாயுமுள்ள வசனத்தோடு கூடிய, ते - உனது திருவடிக்கு, स्तुतिः - ஸ்துதியென்பது, का - எம்மாத்திரம்?

(பொ - ரை) ஓ அன்னேயே! எல்லா வித்தைகளும், உலகத்திலுள்ள அறுபத்துநான்கு கலைகளோடு கூடிய ஸகல ஸ்த்ரீகளும் உனது திருமேனியின் அம்சங்களேயன்ருே! இங்கு தோற்றமளிக்கும் இச்சராசர வடிவாயமைந்த ப்ரபஞ்சமும் அன்னேயாகிய உன்னால் நிறைந்ததன்ருே! அக்காரணத்தால் துதிப்பதற்கு யோக்யதையுள்ள வஸ்துவை பராவடிவாகவும், அபராவடிவாகவுமுள்ள வாக்குகளும் உன்னேக்காட்டிலும் வேருனது இல்

லையன்றோ. ஆகவே எவ்விதம் உன்னை ஸ்துதி செய்யய முடியும்? (6)

विद्या: - வித்யா:—ஸாங்க்யம், யோகம், பாசுபதம், பாஞ்ச ராத்ரம், வேதாந்தம் முதலிய மோக்ஷசாஸ்த்ரங்கள் எனவும் கொள்ளலாம், அல்லது பதினெட்டுவித்தைகளாகும். அவை—

"अङ्गानि वेदाश्चत्वारो मीमांसा न्यायविस्तर: ।
धर्मशास्त्रं पुराणानि विद्य ह्येताश्चतुर्दश ॥
आयुर्वेदो धनुर्वेदो गान्धर्वश्चेति ते त्रय: ।
अर्थशास्त्रं चतुर्थं च विद्या ह्यष्टादशैव ता: ॥"

சிக்ஷை, கல்பம், வ்யாகரணம், நிருக்தம், ஜ்யோதிஷம், சந்தஸ் என இவ்விதம் ஆறு அங்கங்கள், ரிக், யஜுஸ், ஸாமம், அதர்வணம் என இவ்விதம் வேதம் நான்கு. மீமாம்ஸை ஒன்று, ந்யாய விஸ்தரம் ஒன்று, தர்மசாஸ்த்ரம் ஒன்று, புராணங்கள் ஒன்று. இவ்விதமாக பதினான்கு. ஆயுர்வேதம், தநுர்வேதம், காந்தர்வம், அர்த்தசாஸ்த்ரம் இவ்விதமாக நான்கு, ஆக பதினெட்டு வித்தைகள். இந்த பதினெட்டு வித்தைகளும் உன்னைக் காட்டிலும் வேறு படாதவைகள் என்பது தாத்பர்யம்.

இந்த உலகமும் உனது திருவடியினால் வ்யாபித்திருப்பதன்றோ! இந்நிலையிலேயே உனது திருவடியை எவ்விதம் போற்றிப் புகழமுடியும். போற்றத்தக்க வஸ்துவுக்கு முக்யமாயும், கௌணமாயுமுள்ள கீர்த்தனமே ஸ்துதியெனச் சொல்லுவது. இவ்விதம் சொன்னால் எங்கும் வியாபித்திருக்கின்ற உனக்கு கௌணம், முக்யம், என்ற ஸ்துதியும் கிடையாது என்றால் அந்த ஸ்துதி பரா முதலிய நான்கு வகையான வாக்குகளின் வடிவேயாகும்.

மேலும், ஸ்துதிக்கத்தக்க வஸ்துவில் அதற்கு நிகரான வேறொரு வஸ்துவினுடைய குணத்தைச் சிறப்பித்து ஆரோபணம் செய்வது ஸ்துதியாகும் என்றால் இங்கு ஸர்வவ்யாபினியாயிருக்கிற பராசக்தி வடிவாம் நீ எங்களைக் (தேவர்களை) காட்டிலும் வேறுபட்டவள் அல்லவாதலால் அதுவும் இங்கு பொருந்தாது.

அல்லது ஸ்துதிக்குத்தக்க வஸ்துவைக்குறிக்கின்ற பராயென வும், அபரா எனவும் உள்ள வாக்குகள் என்ருல் அவையும் உனது திருவடியிலிருந்து தோன்றியதால் அந்த ஸ்துதியும் உனதே யன்ரோ ! மேலும் ;

“ सूक्ष्माकुण्डलिनीमध्ये ज्योतिर्मात्रा ह्यणीयसी ।
अश्रोत्रविषया तस्मादुद्गता चोर्ध्वगामिनी ।
स्वयंप्रकाशा पश्यन्ती सुषुम्नामाश्रिता भवेत् ॥
सैव हृत्पङ्कजं प्राप्य मध्यमा नादरूपिणी ।
अन्तःसंजल्पमात्रा स्यादविभक्तोर्ध्वगामिनी ।
सैवोरःकण्ठतालुस्था शिरोघ्राणद्विजोपगा ।
जिह्वामूलोष्ठनिश्योतवर्णव्यूहपरिग्रहा ।
शब्दप्रपञ्चजननी श्रोत्रग्राह्या तु वैखरी ॥”

இவைகளின் பொருள் வருமாறு—“மூலாதாரத்திலுள்ள குண்டலிநீ சக்தியில் ஒளியின் வடிவாய் மிகவும் நுண்ணியதும் மெல்லியதுமாக உண்டாகும் சப்தத்தையே பரா வாக் எனவும், அது அவ்விடத்திலிருந்து மேல் நோக்கி நாபியில் செல்லும்பொ ழுது உண்டாகும் சப்தத்தையே பச்யந்தீ வாக் எனவும், அவ்விடத் தினின்றும் ஹ்ருதயத்திற்குச் செல்லும்பொழுது உண்டாகின்ற நாதத்தோடு கூடிய ஸூக்ஷ்மபீஜத்தையே மத்யமா வாக் எனவும், அந்த மத்யமா என்ற வாக்கே மறுபடியும் மார்பு, கழுத்து, தாடை, சிரஸ், மூக்கு, நாக்கு, பற்கள், உதடு, இந்த எட்டு ஸ்தானங்களி லும் உறைந்துகொண்டு வெளியே வரும்பொழுது, பிறருடைய செவிக்குப் புலனுகி உணர்வையுண்டுபண்ணுகிற அக்ஷரவடிவான சப்தத்தையே வைகரீவாக் எனவும் அறிஞர் சொல்லுவர்.” இந்த நால்வகை வாக்குகளுடைய பேதங்களும் வேறு தந்திரங்களில் விஸ்தாரமாக விளக்கப்பட்டுள்ளன.

இந்த நால்வகை வாக்குகளையே வேதத்திலும் வர்ணிக்கப் பட்டுள்ளது—

" चत्वारि वाक् परिमिता पदानि तानि विदुर्ब्राह्मणा ये मनीषिणः ।
गुहा त्रीणि निहिता नेङ्गयन्ति तुरीयं वाचो मनुष्या वदन्ति ॥"

"வாக்குகள்' நால்வகையாகும். அவைகளை அறிஞர்கள்—அந்தணர்கள்—அறிவர். அவைகளில் முதல் மூன்றும் மறைந்திருப்பனவாம்; வெளியே மக்களிடையே செவிப்புலனுகாதவை. நான்காவதான வைகரீ வாக்கையே மக்கள் பேசிவருகின்றனர்" என்பது கருத்து.

सकला: - ஸகலா:—கலைகளோடு கூடியவைகள், என்பது கொண்டு அறுபத்து நான்கு கலைகளுடன் கூடிய வித்தைகள் எனவும், பதினறு காமகலைகளோடு கூடிய ஸ்த்ரீகள் எனவும் பொருள் கொள்ளலாம். அறுபத்து நான்கு கலைகளைக்குறித்து சைவதந்த்ரத்தில் அடியில் வருமாறு விளக்கப்பட்டுள்ளன.

(1) கீதம்
(2) வாத்யம்
(3) ந்ருத்யம்
(4) நாட்யம்
(5) ஆலேக்யம்
(6) திலகம்
(7) தண்டுலகுஸுமசலீ விகாரம்
(8) புஷ்பாஸ்தரணம்
(9) தசநவஸநாங்காநாம் ராகம்
(10) மணிபூமிகர்ம
(11) சயநரசனம்
(12) உதக வாத்யம்
(13) சித்ரயோக:
(14) சித்ரமால்யக்ரதநவிகல்ப:
15) சேகராபீடயோஜநம்
(16) நேபத்யயோக:
(17) கர்ணபத்ர பங்கி
(18) ஸுகந்தயுக்தி:
(19) பூஷணயோஜநம்
(20) ஐந்த்ரஜாலம்
(21) க்ரௌஞ்சமாரயோக:
(22) ஹஸ்தலாகவம்
(23) சித்ரசாகாபூபபுக்தவிகார ப்ரக்ரியா
(24) பாநகரஸராகாஸவ யோஜநம்
(25) ஸூசீயவநகர்ம
(26) ஸூத்ரக்ரீடா
(27) டமருகவீணுவாத்யாநி
(28) ப்ரேஹேளிகா
(29) ப்ரதிமாலா
(30) துர்வஞ்சகயோக:

(31) புஸ்தகவாசநம்
(32) நாடகாக்யாகாதர்சநம்
(33) காவ்யஸமஸ்யாபூரணம்
(34) பட்டிகிவேத்ரபாண விகல்பா:
(35) தர்க்ககர்மாணி
(36) தக்ஷணம்
(37) வாஸ்துவித்யா
(38) ரூபரத்நபரீக்ஷா
(39) தாதுவாத:
(40) மணிராகஞாநம்
(41) ஆகாரஞாநம்
(42) வ்ருக்ஷாயுர்வேதயோகா:
(43) மேஷகுக்குடலாவக யுத்தவிதி:
(44) சுகஸாரிகாப்ரலாபநம்
(45) உத்ஸாதநம்
(46) கேசமார்ஜநம்
(47) அக்ஷரமுஷ்டிகாகதநம்
(48) ச்லோகதர்கவிகல்ப:
(49) தேசபாஷாஞாநம்
(50] புஷ்பசகடிகா
(51) நிமித்தஞாநம்
(52) யந்த்ரமாத்ருகா
(53) தாரணமாத்ருகா
(54) ஸம்வாச்யம்
(55) மாநஸீகாவ்யக்ரியா
(56) அபிதாநகோச:
(57) ச்சந்தோஞாநம்
(58) க்ரியாவிகல்ப:
(59) ச்சலிதகயோக:
(60) வஸ்த்ரகோபநாநி
(61) த்யூதவிசேஷ:
(62) ஆகர்ஷணக்ரீடா
(63) பாலக்ரீடநாநி
(64) வைநாயகிநாம் வையாஸகிநாம் ச வித்யாநாம் ஞாநம்

என்பனவாம். இக்கலைகளின் விளக்கங்களை **சுக்ரநீதி, ஸோமநாதர்** இயற்றிய **மாநஸோல்லாஸம்** முதலியவைகளில் விஸ்தாரமாகக் காணலாம். இவைகளுக்குப் பொருள் எழுதினல் புத்தகம் பெருகிவிடும். ஆதலால் பெயர்களை மாத்திரம் கொடுக்கப் பட்டுள்ளன.

सर्वभूता यदा देवि भुक्तिमुक्तिप्रदायिनी ।
त्वं स्तुता स्तुतये का वा भवन्तु परमोक्तय: ॥ ७ ॥

(ப - ரை) देवि-ஓ தேவி! त्वम्-நீ, सर्वं - भूता - ஸமஸ்த ப்ரபஞ்சவடிவினள். भुक्ति-मुक्ति-प्र-दायिनी-(ஸ்வர்க)ஸுகத்தை

யும், மோக்ஷத்தையும் கொடுக்கின்றவள்; यदा - எப்பொழுது, त्वं - நீ, स्तुता - ஸ்துதி செய்யப்பட்டாயோ, तदा - அப்பொழுது, स्तुतये - துதியின் பொருட்டு, का-वा - எவை தான், परमोक्तय: - சிரேஷ்டமான வசனங்களாக, भवन्तु - உள்ளன?

(பொ - ரை) ஓ அன்னையே! நீ ப்ரபஞ்ச வடிவாயிருப்பவளன்றோ! ஸ்வர்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுக்கின்றவளன்றோ! எனவே துதிசெய்தாலும் மேலான வாக்குகளாகிய வேதங்கள் உன்னுடைய ஸ்தோத்ர விஷயத்தில் எவ்வளவு மாத்திரம்? (7)

सर्वभूता - ஸர்வபூதா—என்றது. தன்னை பக்தியோடு கூட உபாஸிப்பவர் எவராயினும் ஏற்றத்தாழ்வு இல்லாது எப்பொழுதும் - அதாவது ஒரு குறிப்பிட்ட காலமல்லாது - அவரவர்கள் விரும்பும் ஸ்வர்கத்தையோ, மோக்ஷத்தையோ, அல்லது இரண்டையுமோ கொடுத்து அவர்களை ஆதரிப்பவள். அக்காரணத்தாலேயே அந்த பக்தர்கள் உன் வசப்பட்டுத் தன்னையும் மறந்து துதிப்பதில் முனைந்துள்ளனர். அவர்களுடைய உள்ளத்தினின்றும் சிறந்த துதிகளின் வடிவாம் மாதுர்யமான வாக்குகளும் பெருகி வெளியே வருகின்றன. என கூடார்த்ததீபிகை கூறும்.

सर्वगा - ஸர்வகா - எங்கும் நிறைந்தவள்.

देवी - தேவீ - பிரகாசித்துக் கொண்டிருப்பவள்.

सर्वस्य बुद्धिरूपेण जनस्य हृदि संस्थिते ।
स्वर्गापवर्गदे देवि नारायणि नमोऽस्तु ते ॥ ८ ॥

(ப - ரை) देवि - ஓ அன்னையே! सर्वस्य - ஸமஸ்தமான; जनस्य - ஜனத்தினுடைய; हृदि - ஹ்ருதயத்தில்; बुद्धि-रूपेण - புத்தியின் வடிவாக; सं-स्थिते-நிலைத்திருப்பவளே! स्वर्गापवर्गदे-

ஸ்வர்கத்தையும், மோக்ஷத்தையும் கொடுப்பவளே ! **நாரயணி** - ஓ நாராயணி ! **தே** - உனக்கு; **நம:** - நமஸ்காரம் ; **அஸ்து** - இருக்கட்டும்.

இந்த சுலோகம் முதல் பதினாறு ச்லோகங்களால் நாராயணீ ஸ்துதி சொல்லப்படுகிறது. சிலர் பதினெட்டும், சிலர் பத்தொன்பதும் ச்லோகங்கள் கொண்டது நாராயணீ ஸ்துதியென்று பாராயணம் செய்து வருகின்றனர். அவை வேறு தந்திரங்களில் ஸ்வீகரிக்கப்பட்டாலும், இவ்விடத்தில் ஸ்வீகரிக்கப்படவில்லை.

(பொ - ரை) ஓ அன்னையே! ஸகலஜனங்களுடைய ஹ்ருதயத்திலும், புத்தியின் வடிவா யமர்ந்திருப்பவளே ! ஸ்வர்கத்தையும் மோக்ஷத்தையும் கொடுப்பவளே ! ஓ நாராயணி ! உனக்கு நமஸ்காரம். (8)

நாராயணி - நாராயணீ - என்ற பதத்திற்கு ஜீவஸமூஹத்திற்கு இருப்பிடமாயிருப்பவள் என்பது பொருள். அல்லது நாராயணனுடைய சக்தி, அல்லது ஜலத்திற்கு ஆதாரமாயிப்பவள், அல்லது மனிதஸமூஹத்திற்கு அடைக்கலமாயிருப்பவள், அதாவது அந்தர்யாமி வடிவினள். அல்லது நிர்மலமான (குற்றமற்ற) வைகுண்டத்தை இருப்பிடமாகக் கொண்டவன், அல்லது ஜீவ ஸமூஹத்தை அறிந்து கொண்டிருப்பவள், அல்லது குணங்களை இருப்பிடமாகக் கொண்டு விளங்குபவள், அல்லது ஸ்ருஷ்டி கர்த்தாவாகிய ப்ரஹமனுக்கு ஆதாரமாயிருந்துகொண்டு விளங்குபவள், அல்லது வாஸுதேவனுடைய பிள்ளையின் வடிவம் காண்டவள், அதாவது க்ருஷ்ணசக்தி எனவும் ஆம்.

இச்செய்யுளுக்கு, தேவியானவள் நிச்சயவடிவான ஞானத்தின் மூலம் ஸ்வர்கத்தையும், மோக்ஷத்தையும் கொடுக்கின்ற சுத்தஸத்வ குணத்தை முக்யமாகக் கொண்ட விஷ்ணுசக்தியின் வடிவாயிருப்பவள் என்று நாகேசப்பட்டர் பொருள் கூறுவர்.

இவ்விடத்தில் நாராயணீ சப்தமானது விஷ்ணு மாயையைக் குறிப்பதாகும். ஏனெனில் "विष्णुमायां प्रतुष्टुवुः - விஷ்ணுமாயாம் ப்ரதுஷ்டுவு:" என முன்பு சொல்லப்பட்டதன்றே! ஆகையால் பார்வதியினுடைய சரீரத்திலிருந்து இந்த விஷ்ணுமாயை உண்டாயினள் என்றதாலும், பார்வதிக்கும் பத்மையாம் நாராயணிக்கும் உண்மையில் வேறுபாடு கிடையாது என்பதையும் ஸூசனை செய்யப்பட்டது எனவும் ஆம்.

सर्वस्य बुद्धिरूपेण - ஸர்வஸ்ய புத்திரூபேண—என்றது உலகில் யாவரும் புத்தியினல் ஒன்றை நிச்சயம் செய்து அதை வாயினுல் சொல்லுவதை அனுபவத்தில் காணலாம். இக்கருத்தையே ச்ருதியும் சொல்லும். "यद्धि मनसा ध्यायति तद्वाचा वदति - யத்தி மனஸா த்யாயதி தத்வாசா வததி—அதாவது எதை மனதால் நினைக்கப்படுகிறதோ அதை வாக்கின் உதவியால் சொல்லப்படுகிறது என்பதாம். எனவே வாக்கின்-சொல்லின்-தோற்றத்திற்கு புத்தியே ஆதாரமாவதால் அந்த புத்தியும் உனது திருமேனியின் வடிவாய்த் திகழ்வதால் உன்னைப் புகழ்வதற்கும், அறிந்து கொள்வதற்கும் ஸுலபமாக முடியும் எனவும் பொருள் கூறுவர் கூடார்த்த தீபிகையின் ஆசிரியர்.

कलाकाष्ठादिरूपेण परिणामप्रदायिनि ।
विश्वस्योपरतौ शक्ते नारायणि नमोऽस्तु ते ॥ ९ ॥

(ப - ரை) कला-काष्ठादि-रूपेण - கலை, காஷ்டை முதலிய கால வடிவங்களைக் கொண்டு, परिणाम-प्रदायिनि - பரிணாமத்தைக் கொடுக்கின்றவளே! विश्वस्य - உலகத்தினுடைய, उपरतौ - அவஸான (முடிவு) விஷயத்தில், शक्ते - திறமையுள்ளவளே! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) கலை, காஷ்டை, க்ஷணம், முஹூர்த்தம், முதலிய வடிவங்களைக் கொண்டு கால பரிணாமத்தைச் செய்கின்றவளே! உலகின் முடிவிலே எஞ்சிய சக்தியின் வடிவாயிருப்பவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம்.

कलाकाष्ठादिरूपेण- கலாகாஷ்டாதிரூபேண—" अष्टादश निमेषास्तु काष्ठा त्रिंशत्तु ताः कलाः" - அஷ்டாதச நிமேஷாஸ்து காஷ்டாத்ரிம் சத்து தா: கலா:—என்ற வசனத்திற்கிணங்க காஷ்டை என்பது பதினெட்டு நிமிஷங்கள் கொண்டது. கலையென்பது முப்பது காஷ்டைகள் கொண்டது. இவ்விதமுள்ள காஷ்டை, கலை, க்ஷணம், முஹூர்த்தம், அஹோராத்ரம், பக்ஷம், ருது, அயநம், ஸம்வத்ஸரம் என்ற காலவடிவத்துடன் பால்ய யௌவந வார்த் திக்யங்களான வயோ (ஆயுஸ்) விசேஷங்கள் மூலம் மக்களை வித விதமாகத் தோன்றும்படி செய்பவள் என்பது தாத்பர்யம். இவ் விடம் பரிணமம் என்றது "பாலானது எவ்விதம் தயிராக பரி ணமிக்கின்றதோ, அதுபோல ஒரே வஸ்துவானது வேறு வடிவத் தையடைவதாகும். எனவே காலத்தால் மக்களுக்கும் இவ்வளவு காலம் வரையில் பால்யம், இவ்வளவு காலம் வரை யௌவநம் முதலியன போன்ற அவஸ்தைகளும் பரிணமமேயாகும் என்ப தும் கிடைப்பதாகும்.

பரிணமம் என்பது மக்களுடைய அவஸ்தா விசேஷமாகும். அக்காரணத்தால் தேவிக்கு அகண்ட (எங்கும் பரவியது) கால வடிவத்தையும் இங்கு ஸூசனை செய்யப்பட்டது என்றும் மீண் டும், विश्वस्योपरतौ शक्ते - விச்வஸ்யோபரதௌ சக்தே—எனச் சொல்லப்பட்டது எனவும் நாகேசபட்டர் கூறுவர்.

सर्वमङ्गलमाङ्गल्ये शिवे सर्वार्थसाधिके ।
शरण्ये त्र्यम्बके देवि नारायणि नमोऽस्तु ते ॥ १० ॥

(ப - ரை) सर्व-मङ्गल-माङ्गल्ये-ஸர்வ மங்களுக்கும் மங்கள வடிவாயிருப்பவளே! शिवे-கல்யாண வடிவே! सर्वार्थ-साधिके -

ஸமஸ்த புருஷார்த்தங்களையும் ஸாதித்துக் (ஸம்பாதித்து) கொடுப்பவளே! **शरण्ये** - சரணமடையத்தக்கவளே! **त्र्यम्बके** - மூன்றுகண்களோடு கூடியவளே! **गौरि** - வெண்ணிறம் பொருந்தியவளே! **नारायणि** - ஓ நாராயணி! **ते** - உனக்கு **नमः** - நமஸ்காரம்.

(பொ - ரை) ஸகல மங்களங்களுக்கும் மங்கள வடிவாயிருப்பவளே! கல்யாண வடிவாயிருப்பவளே! ஸமஸ்த புருஷார்த்தங்களையும் ஸம்பாதித்துக் கொடுப்பவளே! சரணமடையத்தக்கவளே! மூன்று கண்களைக் கொண்டவளே! வெண்ணிறம் பொருந்திய திருமேனியைக் கொண்டவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (*10*)

शिवा - சிவா-பார்வதி அல்லது மங்களவடிவினள். **त्र्यम्बके**- த்ரியம்பகே-ஸோமன், ஸூர்யன், அக்னி இவர்களை மூன்று கண்களாகக் கொண்டவள். உமாதேவி அல்லது ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேச்வரன் என்ற மூவரையும் ரக்ஷகர்களாக கொண்டவள், அதாவது உமையும், ரமையுமானவள். **गौरि** - கௌரி- உமா அல்லது ரஹஸ்யமாக மனதால் த்யானம் செய்யத்தக்கவள், அல்லது வெண்ணிறத்துடன் கூடியவள், அல்லது அருணவர்ணத்துடன் கூடியவள் என்பதும் ஆகும்.

सृष्टिस्थितिविनाशानां शक्तिभूते सनातनि ।
गुणाश्रये गुणमये नारायणि नमोऽस्तु ते ॥ ११ ॥

(ப - ரை) **सृष्टि-स्थिति-विनाशानाम्**-ஸ்ருஷடி, ஸ்திதி, ஸம்ஹாரங்களுடைய **शक्ति-भूते**-சக்தி வடிவாயிருப்பவளே! **सनातनि** - நித்யமாயிருப்பவளே! **गुणाश्रये** - முக்குணங்களுக்கும் இருப்பிடமாயிருப்பவளே! **गुणमये** - குணங்களின் வடிவாயமைந்தவளே! **नारायणि** - ஓ நாராயணி! **ते** - உனக்கு, **नमः** - நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ - ரை) உலகத்தோற்றங்களாம் ஆக்கல், அழித்தல், நிலை நிறுத்தல், என்றவைகளில் திறமையுடன் விளங்குபவளே! நித்யமாயிருப்பவளே! ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுக்கும் இருப்பிடமாயுள்ளவளே! குணங்களின் வடிவானவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (11)

सृष्टि-स्थिति-विनाशानाम्- ஸ்ருஷ்டிஸ்திதிவிநாசானும்-என்றதால் ஸ்ருஷ்டியில் **ப்ராஹ்மீ** சக்தியாகவும், ஸ்திதியில் **வைஷ்ணவீ** சக்தியாகவும் விநாசத்தில் **மாஹேச்வரீ** சக்தியாகவும் விளங்குபவள் என்பதையும் குறிக்கும்.

இந்த ச்லோகத்தினுடைய முற்பகுதியால் ப்ரஹ்மா முதலியவர்களுடைய ஸ்ருஷ்டிக்குக் காரணமாயிருப்பவளென்றும், இரண்டாவது பகுதியால் நித்யையாயும் மஹதாதிகளான குணங்களுக்கு ஆச்ரய (ஆதாரம்) மாக இருப்பவளென்றும், தோற்றமளிக்கும் குணங்களால் உண்டாகின்ற விகாரங்களோடு கூடியவள் எனவும் கிடைப்பதாகும் என **நாகேசபட்டர்** பொருள் கூறுவர்.

शरणागतदीनार्तपरित्राणपरायणे।
सर्वस्यार्तिहरे देवि नारायणि नमोऽस्तु ते ॥ १२ ॥

(ப - ரை) शरणा-गत-दीनार्त-परित्राण-परायणे-சரணமடைந்த தீனர்களுடைய துன்பத்தைத் துடைத்து பரித்ராணம் (ரக்ஷை) செய்வதில் கண்ணும் கருத்துமாயிருப்பவளே! सर्वस्य - ஸமஸ்த லோகத்தினுடைய, आर्ति-हरे - பீடையை அபஹரிப்பவளே! देवि - ஓ தேவி! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) சரணாகதியடைந்தவர்களுடைய துன்பத்தைத் துடைத்துக் காத்தருளுவதில் கண்ணும் கருத்

துமாயிருப்பவளே! ஸகல உலகங்களுடைய பீடைகளை யும் களைந்து அருள் வடிவாய் நிற்பவளே! ஓ தேவி! நாராயணி! உனக்கு நமஸ்காரம். (12)

दीनः -தீன:-பிறவி முதலியவைகளால் பீடிக்கப்பட்டவர்கள். आर्ताः - ஆர்த்தா: - திருடர், அக்னி விஷம் முதலியவைகளால் துன்பத்தையடைந்தவர்கள். परायणा - பராயணா—என்ற சொல் லுக்கு காரியத்திலேயே கண்ணும் கருத்துமாயிருப்பது என்பது தாத்பர்யம்.

हंसयुक्तविमानस्थे ब्रह्माणीरूपधारिणि।
कौशाम्भःक्षुरिके देवि नारायणि नमोऽस्तु ते॥ १३ ॥

(ப - ரை) हंस-युक्त-विमानस्थे - ஹம்ஸங்களோடு கூடிய விமானத்தில் அமர்ந்தவளே! ब्रह्माणी-रूप-धारिणि - ப்ராஹ்மீ என்னும் வடிவத்தைக் கொண்டவளே! कौशाम्भः क्षुरिके - கமண்டலுவை ஆயுதமாகக் (கத்தியாக) கொண்டவளே! देवि - ஓ தேவி! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) ஹம்ஸங்களோடு கூடிய விமானத்தில் அமர்ந்தவளே! பிராஹ்மீ என்ற வடிவத்தைக் கொண்ட வளே! குசத்தால் (தர்பை) மந்தரித்த ஜலத்தைத் தெளிப்பவளே! (கமண்டலுவை) - ஜலபாத்திரத்தை (கத் தியாக) ஆயுதமாகக் கொண்டவளே! ஓ தேவி! நாரா யணி! உனக்கு நமஸ்காரம். (13)

कौशाम्भः क्षुरिका - கௌசாம்ப: க்ஷுரிகா - ஜலபாத்திரத்தி லுள்ள தர்பையோடு கூடிய ஜலத்தை ப்ரோக்ஷணம் செய்பவள். அதாவது தர்பையோடு கூடிய ஜலத்தை ஆயுதமாகக் கொண்ட வள். இக்கருத்தையே எட்டாவது அத்தியாயத்திலும் சொல்லப் பட்டிருக்கிறது.

त्रिशूलचन्द्राहिधरे महावृषभवाहिनि ।
माहेश्वरीस्वरूपेण नारायणि नमोऽस्तु ते ॥ १४ ॥

(ப - ரை) माहेश्वरी-स्वरूपेण-மாஹேச்வரீ என்ற வடிவத்தோடு, त्रिशूल-चन्द्राहि-धरे - சூலத்தையும், பாதிமதியையும், ஸர்பங்களையும் தரித்தவளே! महा-वृषभ-वाहिनि-மஹாவிருஷபத்தை வாஹநமாகக் கொண்டவளே! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) மாஹேச்வரீ என்ற சக்தியின் வடிவத்தோடு திரிசூலத்தையும், பாதிமதியையும், நாகங்களையும் ஆபரணமாகத் தரித்துக்கொண்டவளே! மஹா விருஷபத்தை (காளை) வாஹநமாகக் கொண்டவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (14)

मयूरकुक्कुटवृते महाशक्तिधरेऽनघे ।
कौमारीरूपसंस्थाने नारायणि नमोऽस्तु ते ॥ १५ ॥

(ப - ரை) मयूर-कुक्कुट-वृते - மயில், கோழி இவைகளால் சூழப்பட்டவளே! महा-शक्ति-धरे - பெரிய வேலாயுதத்தைத் தரித்தவளே! अनघे - பாபமற்றவளே! कौमारी-रूप-संस्थाने - ஸுப்ரஹ்மண்யனுடைய சக்தியாகிய கௌமாரீ என்ற சக்தியின் வடிவைக் கொண்டவளே! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) மயிலோடும், கோழியோடும் சூழப்பட்டவளே! வலியதான வேலாயுதத்தைக் கொண்டவளே! குற்றமற்றவளே! ஸுப்ரஹ்மண்யனுடைய சக்தியின் வடிவான கௌமாரீ என்ற சக்தியின் வடிவைக் கொண்டவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (15)

" कुक्कुटः ककुभे पिञ्छे पुत्रे च चरणायुधे " என்பது **மேதிநீகோசம். कुक्कुटः** என்ற சப்தத்திற்கு காட்டுக்கோழி, மயில், பீலி, புத்ரன், கோழி எனப் பல பொருள்கள் உள்ளன. உண்மையில் இவ்விடத்தில் மயூரமும், குக்குடமும் ஸுப்ரஹ்மண்ய ஸ்வாமியினுடைய ஆவரண பூஜையிலுள்ள மூன்ருவது ஆவரணத்திலிருக்கின்ற தேவதைகளாவர். சிவார்சந சந்த்ரிகையில் ஸுப்ரஹ்மண்ய மநு (மந்த்ரம்) ப்ரகரணத்தில் அடியில் வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

" दलाग्रेषु च पूर्वादि यजेद्देवाननन्तरम् ।
देवसेनापतिं शक्तिं विघ्नं कुक्कुटमेव च ।
मेधां मयूरं वज्रं च द्वीपं लोकेश्वरांस्ततः ।

" பிறகு தளங்களின் மேல் கிழக்கு முதலிய திக்குகளில் முறையே தேவர்களை பூஜை செய்ய வேண்டும். அவர்களாவன—தேவஸேநாபதி, சக்தி, விக்னம், குக்குடம், மேதை, மயூரம், வஜ்ரம், த்வீபம் என்பவர்கள். பிறகு லோகேச்வரர்களை ஆராதிக்க வேண்டும்" என்பதேயாகும்.

ஸ்கந்தனுல் சூரபத்மன் கொல்லப்பட்ட பொழுது அவன் மயிலும் கோழியுமாக ஸ்வாமியினுடைய வாஹனமாகவும், கொடியாகவும் ஆனுன் என்ற வரலாற்றை ஸ்காந்தபுராணத்தில் விஸ்தாரமாகக் காணலாம்.

शङ्खचक्रगदाशार्ङ्गगृहीतपरमायुधे ।
प्रसीद वैष्णवीरूपे नारायणि नमोऽस्तु ते ॥ १६ ॥

(ப - ரை) शङ्ख-चक्र-गदा-शार्ङ्ग-गृहीत-परमायुधे - சங்கு, சக்ரம், கதை, வில்லு என்ற உத்க்ருஷ்டமான (மேலான) ஆயுதங்களைத் தரித்தவளே! वैष्णवी-रूपे - வைஷ்ணவீ என்ற சக்தியின் வடிவாயிருப்பவளே! प्रसीद - அனுக்ரஹம் சேய்வா

யாக! **नारायणि** - ஓ நாராயணி! **ते** - உனக்கு, **नमः** - நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ - ரை) சங்கு, சக்ரம், கதை, வில் என்ற சிறந்த ஆயுதங்களைத் தரித்துக்கொண்டவளே! விஷ்ணுசக்தி என்ற வைஷ்ணவி வடிவத்தோடு கூடியவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (16)

वैष्णवी-रूपे - வைஷ்ணவீரூபே - பெரிய உலகை ரக்ஷிப்பதில் முயற்சியுடன் கூடிய விஷ்ணு சக்தியின் வடிவாயிருப்பவள் எனத் தாத்பர்யம்.

गृहीतोग्रमहाचक्रे दंष्ट्रोद्धृतवसुंधरे ।
वराहरूपिणि शिवे नारायणि नमोऽस्तु ते ॥ १७ ॥

(ப - ரை) **गृहीतोग्र-महा-चक्रे** - பயங்கரமாயும், பெரியதாயுமிருக்கிற சக்ரத்தைக் கொண்டவளே! **दंष्ट्रोद्धृत-वसुंधरे** - கோரைப் பற்களால் உயர்த்திய பூமியை யுடையவளே! **वराह-रूपिणि** - வராஹ வடிவைக்கொண்டவளே! **शिवे** - மங்கள வடிவே! **नारायणि** - ஓ நாராயணி! **ते** - உனக்கு, **नमः** - நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ - ரை) மிகவும் பயங்கரமானதும், சிறந்ததுமான சக்ராயுதத்தைக் கொண்டவளே! அவனியைத் (பூமியை) தனது கோரைப் பற்களால் உயர்த்திப் பிடித்தவளே! வராஹ வடிவங்கொண்டவளே! மங்கள வடிவே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (17)

नृसिंहरूपेणोग्रेण हन्तुं दैत्यान् कृतोद्यमे ।
त्रैलोक्यत्राणसहिते नारायणि नमोऽस्तु ते ॥ १८ ॥

(ப - ரை) उग्रेण - பயங்கரமான, नृसिंह-रूपेण-நரஸிம்ஹ வடிவத்தோடு, दैत्यान् - அஸுரர்களை, हन्तुम् - கொல்லுவதற்கு, कृतोद्यमे - செய்யப்பட்ட முயற்சியையுடையவளே! त्रैलोक्य-त्राण-सहिते - மூவுலகையும் காப்பாற்றுபவளே! नारायणि- ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்-

(பொ - ரை) பயங்கரமான நரஸிம்ஹ (நாரஸிம்ஹீ சக்தி) வடிவத்தோடு அஸுரர்களைக் கொல்லுவதற்கான முயற்சியை யுடையவளே! மூவுலகையும் பரிபாலனம் செய்யும் திறமை யுள்ளவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம்.

किरीटिनि महावज्रे सहस्रनयनोज्ज्वले ।
वृत्रप्राणहरे चैन्द्रि नारायणि नमोऽस्तु ते ॥ १९ ॥

(ப - ரை) किरीटिनि - சிறந்த கிரீடத்தைத் தரித்தவளே! महा-वज्रे - மஹத்தான வஜ்ராயுதத்தைத் தரித்தவளே! सहस्र-नयनोज्ज्वले - ஆயிரம் கண்களொடு பிரகாசிக்கின்றவளே! वृत्र-प्राण-हरे - வ்ருத்திரன் என்ற அஸுரனுடைய ப்ராணனை அபஹரித்தவளே! ऐन्द्री - च - ஐந்த்ரீ என்ற இந்த்ர சக்தியின் வடிவினளே! नारायणि - ஓ நாராயணி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) சிறந்த கிரீடத்தைத் தரித்தவளே! பெருமையும், வலிமையும் கொண்ட வஜ்ராயுதத்தைத் தரித்தவளே! ஆயிரம் கண்களால் பரம சோபையுடன் பிரகாசிக்கின்றவளே! வ்ருத்திரன் என்ற அஸுரனைக் கொன்றவளே! இந்த்ரனின் ஸம்பந்தமான ஐந்த்ரீ என்ற சக்தியின் வடிவாயமைந்தவளே! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். (19)

33

शिवदूतीस्वरूपेण हतदैत्यमहाबले ।
घोररूपे महारावे नारायणि नमोऽस्तु ते ॥ २० ॥

(ப - ரை) **शिवदूती-स्वरूपेण** - சிவதூதியின் வடிவாயமைந்தவளே ! **हत-दैत्य-महाबले** - அழிக்கப்பட்ட அஸுரர்களுடைய மஹாபலத்தையுடையவளே ! **घोर-रूपे** - பயங்கர வடிவங்கொண்டவளே ! **महा-रावे** - பெரிய சப்தங்களோடு கூடியவளே ! **नारायणि** - ஓ நாராயணி ! **ते** - உனக்கு, **नमः** - நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ - ரை) சிவதூதீ என்ற சக்தியின் வடிவாயமைந்தவளே ! வலிமை மிக்க ஸைன்யங்களோடு கூடிய அஸுரர்களை அழித்தவளே ! பயங்கரமான உருவத்தைக் கொண்டவளே ! இடிபோல் முழங்கும் பயங்கரமான சப்தங்களையுடையவளே ! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம்.

दंष्ट्राकरालवदने शिरोमालाविभूषणे ।
चामुण्डे मुण्डमथने नारायणि नमोऽस्तु ते ॥ २१ ॥

(ப - ரை) **दंष्ट्रा-कराल-वदने**-கோரைப்பற்களோடு கூடிய பயங்கரமான முகத்தையுடையவளே ! **शिरो-माला-विभूषणे**-சிரஸுகளாகிய மாலையை ஆபரணமாகக் கொண்டவளே ! **मुण्ड-मथने**-முண்டனை அழித்தவளே ! **चामुण्डे** - ஓ சாமுண்டே! **नारायणि** - ஓ நாராயணி ! **ते** - உனக்கு, **नमः** - நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ - ரை) கோரைப் பற்களால் பயங்கரமாகத் தோற்றமளிக்கும் திருமுகத்தைக் கொண்டவளே ! தலைகளாலாகிய மாலையை ஆபரணமாகக் கொண்டவளே ! முண்டன் என்ற அஸுரனை அழித்தவளே ! ஓ காளி ! ஓ நாராயணி ! உனக்கு நமஸ்காரம். (21)

लक्ष्मी लज्जे महाविद्ये श्रद्धे पुष्टि स्वधे ध्रुवे ।
महारात्रि महामाये नारायणि नमोऽस्तु ते ॥ २२ ॥

(ப - ரை) **लक्ष्मि** - ஓ லக்ஷ்மி! **लज्जे** - லஜ்ஜையின் வடிவாயிருப்பவளே! **महा-विद्ये** - உபநிஷதங்களின் வடிவாயிருப்பவளே! **श्रद्धे** - ஆஸ்திக்யபுத்தியின் வடிவாயிருப்பவளே! **पुष्टि**-புஷ்டியின் வடிவாயிருப்பவளே! **स्वधे**-பித்ருக்களின் த்ருப்தியின் வடிவாயிருப்பவளே! **ध्रुवे** - ஸ்திரமாயிருப்பவளே! **महा-रात्रि**-மஹாப்ரளய வடிவாயிருப்பவளே! **महा-माये** - ஸர்வஜகத்திற்கும் காரணமான மஹாமாயா வடிவாயிருப்பவளே! **नारायणि** - ஓ நாராயணி! **ते**-உனக்கு, **नमः**-நமஸ்காரம், **अस्तु** - இருக்கட்டும்.

(பொ ரை) லக்ஷ்மியின் வடிவாயும், லஜ்ஜையின் வடிவாயும், உபநிஷதங்களின் வடிவாயும், ஆஸ்திக்ய புத்தியின் வடிவாயும், புஷ்டியின் வடிவாயும், பித்ருக்களின் த்ருப்தியின் வடிவாயும், ஸ்திரமாயிருப்பவளும், மஹாப்ரளய வடிவாயிருப்பவளும், மஹாமாயா வடிவாயிருப்பவளுமான ஓ நாராயணி! உன்க்கு நமஸ்காரம். (22)

लक्ष्मीः - லக்ஷ்மீ - ஸம்பத்துக்குத் தேவதை. **लज्जा** - லஜ்ஜை - புத்தியின் விருத்தி. **महा-विद्या** - மஹாவித்யா - ப்ரஹ்மவித்தை **श्रद्धा** - ச்ரத்தா - ஆஸ்திக புத்தி. **पुष्टि** - புஷ்டி - போஷகசச்தி. **स्वधा**-ஸ்வதா-பித்ருக்களைக்குறித்துச் செய்யும் கர்ம. **ध्रुवा**-த்ருவா என்றது யாகத்திலே செய்யப்படுகின்ற ஸ்வாஹா என்ற சொல்லேக்குறிக்கும். சிலர் நித்யா-அழிவற்றவள் - எனச்சொல்லுவர். **महा-रात्रिः** - மஹாராத்ரி: - ப்ரஹ்மராத்ரி என்பதாம். **महा-माया** - மஹாமாயா - ஐந்துபர்வ (கணு) ங்களோடு கூடிய அவித்யையாகும் என கூடார்த்ததீபிகை கூறும்.

லக்ஷ்மீதந்த்ரத்திலும் இந்த அவித்யையைக் குறித்து ;

तमो मोहो महामोहस्तामिस्रो ह्यन्ध एव च ।
अविद्या पञ्च पर्वैषा तमसो गतिरुत्तमा ॥

தம:, மோஹ:, மஹாமோஹ:, தாமிஸ்ர:, அந்ததாமிஸ்ர: என அவித்தையானது ஐந்து பர்வங்களோடு (கணுக்கள்) கூடியதாகும். இவை உத்தமமான தமோகதியை யடைவிப்பதாகும். அதாவது அர்ச்சிராதி மார்க்கத்திற்கு உரியவைகள் என்பது தாத்பர்யம்.'' எனச் சொல்லியுள்ளது.

मेधे सरस्वति वरे भूति बाभ्रवि तामसि ।
नियते त्वं प्रसीदेशे नारायणि नमोऽस्तु ते ॥ २३ ॥

(ப - ரை) मेधे - தாரணசக்தியோடு கூடிம புத்தியின் வடிவாயிருப்பவளே ! सरस्वति - வாக்தேவதையின் வடிவாயமைந்தவளே ! वरे - சிறந்தவளே ! भूति - ஸத்வ குணத்தை ப்ரதானமாகக் கொண்டவளே ! वाभ्रवि - ரஜோ குணத்தை ப்ரதானமாகக் கொண்டவளே ! तामसि - தமோ குணத்தை ப்ரதானமாகக் கொண்டவளே ! नियते - விதியின் வடிவாய் விளங்குபவளே! ईशे-தலைவியே! त्वं-நீ, प्रसीद - அனுக்ரஹம் செய். नारायणि - ஓ நாராயணி ! ते - உனக்கு, नमः - நமஸ்காரம் अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) தாரணசக்தியோடுகூடிய புத்தியின் வடிவாயும், வாக்தேவதையாகவும், சிறந்தவளாயும், ஸத்வம் ரஜஸ் தமஸ் என்ற முக்குணங்களையும் முக்யமாகக் கொண்டவளும், முக்குணங்களுக்கும் முன்னே விளங்கும் மூலசக்தியாயிருப்பவளும், தலைவியாயிருப்பவளுமான நீ அனுக்ரஹம் செய்வாயாக! ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம், (23)

मेधा - மேதா - ஒருவஸ்துவை சீக்கிரம் உணரும் சச்தியே மேதா அதாவது புத்தி என்பது. शिवा - சிவா-சாம்பவீ சக்தி.

இவ்விடத்தில் 'பூதி, பாப்ரவீ, தாமஸீ' என்று சொன்னதால் ஸ்ரீதேவீ முறையே ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குண வடிவங்களைக் கொண்டவள் எனவும், நியதி' என்றதால் முக்குணங்களையும் கடந்த நிற்கும் மூலசக்தி எனவும் நாகேசபட்டர் பொருள் விளக்கம் கொடுப்பர்.

सर्वस्वरूपे सर्वेशे सर्वशक्तिसमन्विते ।
भयेभ्यस्त्राहि नो देवि दुर्गे देवि नमोऽस्तु ते ॥ २४ ॥

(ப - ரை) सर्व-स्वरूपे - ஸமஸ்தவஸ்துவின் வடிவாயிருப்பவளே! सर्वेशे - ஸமஸ்த வஸ்துக்களுக்கும் தலைவியாயிருப்பவளே! सर्व-शक्ति-समन्विते - ஸமஸ்த சக்திகளுடனும் கூடியவளே! देवि - ஓ தேவீ! नः - எங்களை, भयेभ्यः - பயங்களிலிருந்து, त्राहि - காப்பாற்று, दुर्गे-देवि - ஓ துர்கா தேவி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) ஸகல வஸ்துக்களின் வடிவாயிருப்பவளும், ஸகலவஸ்துக்களுக்கும் தலைவியாயிருப்பவளும், ஸகல சக்திகளோடு கூடியவளுமான ஓ அன்னையே! எங்களை பயங்களிலிருந்து காப்பாற்றுவாயாக. ஓ துர்கா தேவி! உனது திருவடிகளுக்கு நமஸ்காரம். (24)

இச்செய்யுளில் 'தேவி' என இரண்டு ஸம்போதநங்கள் (விளிவேற்றுமை) உபயோகம் செய்யப்பட்டுள்ளன. அவைகளை இரண்டு வாக்கியங்களாகக் கொண்டு புநருக்தி என்ற தோஷம் கிடையாது என்பர் குப்தவதீ உரையாசிரியர்.

இச்செய்யுளுக்கு சாந்தநவீ உரையாசிரியர் அடியில் வருமாறு பொருள் விளக்கம் கொடுப்பர்—"மூவுலகின் வடிவாகவும்,

ஸர்வப்ரபஞ்சத்திற்கும் தலைவியாகவும், ஸாமர்த்யம் (திறமை) முதலிய சக்திகளோடும், ப்ராஹ்மீ முதலிய சக்திகளோடு கூடியவளாகவும் இருக்கிற உனது திருவடி எங்களைத் துன்பத்தினின்றும் காப்பாற்றுவதாக. ஓ துர்கே தேவி! உனது திருவடிக்கு நமஸ்காரம்.

सर्वस्वरूपे– ஸர்வஸ்வரூபே — ஸர்வஸ-அரூபே-என பதம் பிரித்துக் கொண்டு ப்ரபஞ்சத்திலே தோற்றமளிக்கின்ற ஸகல வஸ்துக்களிலும் அரூபியாய் - அந்தர்யாமியாய் - கண்களுக்குப் புலப்படாது - இருப்பவள் என்பதுமாம்.

இச்செய்யுளுக்குப் பிறகு அதிகமாக ஒரு செய்யுள் சில புத்தகங்களில் காணப்படுகிறது.

सर्वतः पाणिपादं ते सर्वतोऽक्षिशिरोमुखे ।
सर्वतः श्रवणघ्राणे नारायणि नमोऽस्तु ते ॥

எங்கும் பரவி நிற்கும் கால்களையும், கைகளையும், எங்கும் பரவி நிற்கும் கண்கள், மூகம் இவைகளையும், எங்கும் பரவி நிற்கும் செவிகள், மூக்கு இவைகளையும் கொண்டு விளங்குகின்ற ஓ நாராயணி! உனக்கு நமஸ்காரம். அதாவது உலகிலே எந்த வஸ்துவிலும் அன்னையின் அம்சம் இல்லாத இடம் கிடையாது என்பது ஸாரம் - அல்லது விச்வரூபியாய் உள்ளவள் எனவும் ஆம்.

நாராயணி—என்றது-திவ்ய ஞானத்திற்கு ஸாதநமாயிருக்கின்ற சரீரத்தினுடைய கை கால் முதலிய அவயவங்களுடைய வளர்ச்சிக்கு அதி தேவதை என்பது பொருளாகும் எனவும் சொல்லுவர்.

एतत्ते वदनं सौम्यं लोचनत्रयभूषितम् ।
पातु नः सर्वभूतेभ्यः कात्यायनि नमोऽस्तु ते ॥ २५ ॥

(ப - ரை) ते - உன்னுடைய, सौम्यम् - அழகான, लोचन-त्रय-भूषितम् - மூன்று நேத்ரங்களால் அலங்கரிக்கப்பட்ட,

एतत् - இந்த, वदनम् - முகம், नः - எங்களை, सर्व-भूतेभ्यः - ஸமஸ்த பூதங்களிலிருந்தும், पातु - காப்பாற்றட்டும், कात्यायनि - ஓ காத்யாயனி!' ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்.

(பொ - ரை) ஓ அன்னையே: அழகிய மூன்று கண்களோடு பிரகாசிக்கின்ற உன்னுடைய இந்த முகமானது ஸகல பூதங்களிலிருந்தும் எங்களைக் காப்பாற்றட்டும். ஓ காத்யாயனி! உனக்கு நமஸ்காரம். (25)

कात्यायनि - காத்யாயனி - காத்யாயனமஹர்ஷியினுடைய ஆச்ரமத்தில் பிறந்தவள் என்பது.

ज्वालाकरालमत्युग्रमशेषासुरसूदनम् ।
त्रिशूलं पातु नो भीतेर्भद्रकालि नमोऽस्तु ते ॥ २६ ॥

(ப - ரை) ज्वाला-करालम् - ஜ்வாலைகளினால் பயங்கரமாயும், अत्युग्रम् - மிகவும் கொடுமையாகவும், अशेषासुर-सूदनम् - எல்லா அஸுரர்களையும் நாசம் செய்கிறதாயுமிருக்கிற, त्रिशूलम् - த்ரிசூலம் என்ற ஆயுதமானது, नः - எங்களை, भीते - பயத்திலிருந்து, पातु - ரக்ஷிக்கட்டும், भद्रकालि - ஓ பத்ரகாளி! ते - உனக்கு, नमः - நமஸ்காரம், अस्तु - இருக்கட்டும்

(பொ - ரை) ஜ்வாலைகளால் மிகவும் பயங்கரமாயும், மிகவும் கொடுமைவாய்ந்ததாகவும், அஸுர ஸமூஹங்களையழிப்பதுமான உன்னுடைய த்ரிசூலம் என்ற ஆயுதமானது எங்களை பயத்திலிருந்து ரக்ஷிக்கட்டும். ஓ காளிகா தேவி! உனக்கு நமஸ்காரம். (26)

हिनस्ति दैत्यतेजांसि स्वनेनापूर्य या जगत् ।
सा घण्टा पातु नो देवि पापेभ्यो नः सुतानिव ॥ २७ ॥

(ப - ரை) देवि ! ஓ தேவி ! या - யாதொரு, घण्टा - மணியானது, स्वनेन - சப்தத்தால், जगत् - மூவுலகையும், आपूर्य - நிரப்பி, दैत्य-तेजांसि - அஸுரர்களுடைய காந்திகளை, हिनस्ति - நாசம் செய்கிறதோ, सा - அந்த மணியானது, अनः- அன்னையானவள், सुतान् इव - பிள்ளைகளைப்போல, नः - எங்களை பापेभ्यः - பாபங்களிலிருந்து, पातु - ரக்ஷிக்கட்டும்,

(பொ - ரை) ஓ அன்னையே! உன்னுடைய திருக்கரத்திலிருக்கின்ற யாதொரு மணியானது தனது சப்தத்தால் மூவுலகையும் நிரப்பி, அஸுரர்களுடைய காந்திகளை மழுங்கச் செய்கின்றதோ, அந்த மணியானது, அன்னையானவள் பிள்ளைகளைக் காப்பாற்றுவதுபோல், எங்களையும் பாபங்களிலிருந்து ரக்ஷிக்கட்டும. (27)

असुरासृग्वसापङ्कचर्चितस्ते करोज्ज्वलः ।
शुभाय खड्गो भवतु चण्डिके त्वां नता वयम् ॥ २८ ॥

(ப - ரை) चण्डिके-ஓ சண்டிகே ! असुरासृग्वसा-पङ्क-चर्चितः - அஸுரர்களுடைய ரத்தமும், கொழுப்பும் சேர்ந்த சேற்றில் தோய்க்கப்பட்டதும், ते - உன்னுடைய, करोज्ज्वलः - கையில் பிரகாசித்துக் கொண்டிருப்பதுமான, खड्गः - கத்தியானது, शुभाय - மங்களத்தின் பொருட்டு, भवतु - இருக்கட்டும். वयम् - நாங்கள், त्वाम् - உன்னை, नताः - வணங்குகிறோம்.

(பொ - ரை) ஓ சண்டிகே! அஸுரர்களுடைய ரத்தத்திலும், கொழுப்பிலும் தோய்ந்தும், உன்னுடைய திருக்கரத்தில் பிரகாசித்துக் கொண்டிருப்பதுமான கத்தியானது எங்களுடைய க்ஷேமத்தின் பொருட்டு இருக்கட்டும். நாங்களும் உன்னை வணங்குகிறோம். (28

रोगानशेषानपहंसि तुष्टा रुष्टा तु कामान् सकलानभीष्टान् ।
त्वामाश्रितानां न विपन्नराणां त्वामाश्रिता ह्याश्रयतां प्रयान्ति ॥ २९ ॥

(ப-ரை) त्वं - நீ, तुष्टा - ஸந்தோஷமடைந்தால், अशेषान् - ஸமஸ்தமான, रोगान् - உபத்ரவங்களையும், रुष्टा-तु- கோபத்தையடைந்தாலோ, सकलान्-ஸமஸ்தமான, अभीष्टान् - இஷ்டமுள்ள, कामान् - விருப்பங்களையும், अपहंसि - அழிக்கிருய். त्वाम् - உன்னை, आश्रितानाम् - அடைக்கலமடைந்த, नराणाम् - மனிதர்களுக்கு, विपत् - துன்பம், न - கிடையாது, त्वाम् - உன்னை, आश्रिता: - ஆச்ரயித்தவர்களை, आश्रयताम् - வேறுமனிதர்களால் ஆச்ரயிக்கப்பட்ட நிலையை, प्रयान्ति-हि- அடைகின்றனர் என்பது பிரஸித்தமன்ருே!

(பொ-ரை) ஓ அன்னையே! நீ ஸந்தோஷமடைந்தால் ஸகல ரோகங்களையும் நாசம் செய்கிருய். நீ கோபித்தாலோ ஸகல மனோரதங்களையும் இல்லாமல் செய்துவிடுகிருய். உன்னை அடைக்கலமடைந்தவர்களுக்குத் துன்பமென்பது ஒரு நாளும் கிடையாது. உன்னைச் சரணகதியடைந்தவர்கள் மற்றவர்களாலும் ஸேவிக்கப் படுகின்றனர் என்பது பிரஸித்தமன்ருே! (29)

एतत्कृतं यत्कदनं त्वयाद्य धर्मद्विषां देवि महासुराणाम् ।
रूपैरनेकैर्बहुधात्ममूर्तिं कृत्वाम्बिके तत्प्रकरोति कान्या ॥ ३० ॥

(ப-ரை) देवि - ஓ தேவி! अम्बिके - அன்னையே! अद्य - இப்பொழுது, त्वया - உன்னால், आत्म-मूर्तिम् - தனது சரீரத்தை, अनेकै: - பலவிதமான, रूपै: - வடிவங்களால், बहुधा - பலவிதங்களாக, कृत्वा - செய்து, धर्म-द्विषाम् - தர்மத்திற்குப் பகைவர்களான், महासुराणाम् - மஹாஸுரர்களு

டைய, यत् - யாதொரு, कदनम् - நாசமானது, कृतम् - செய் யப்பட்டதோ, तत्-एतत् - அந்த இக்காரியத்தை, अन्या - வேறு, का - எவர், प्रकरोति - செய்வர் ?

(பொ - ரை) ஓ அன்னையே! இப்பொழுது உன் ஞல் உனது சரீரத்தை ப்ராஹ்மீ முதலிய வடிவங்களால் பலவிதமாகச் செய்து, தர்மத்திற்கு பரம விரோதிகளான அஸுரர்களுடைய நாசமானது செய்யப் பட்டதன்ரோ! இந்த மஹத்தான காரியத்தை உன்னைத் தவிர வேறு எவர் தான் செய்யமுடியும். ஒருவராலும் முடியாது. (30)

विद्यासु शास्त्रेषु विवेकदीपेष्वाद्येषु वाक्येषु च का त्वदन्या ।
ममत्वगर्तेऽतिमहान्धकारे विभ्रामयस्येतदतीव विश्वम् ॥ ३१ ॥

(ப - ரை) विद्यासु - வித்தைகளும், शास्त्रेषु - சாஸ்த்ரங் களும், विवेक-दीपेषु - உபநிஷதங்களும், आद्येषु-वाक्येषु - வேத வாக்யங்களும் உண்டாயிருக்கும்பொழுது, या - எந்த் தேவி யானவள். एतत् - இந்த, विश्वम् - உலகை, अति-महान्धकारे-மிக வும் பெரியதான இருட்டையுடைய, ममत्वगर्ते - அஹங்கார மென்ற குழியில், अतीव - மிகவும், विभ्रामयति - மயங்கச்செய் கிருளோ, (सा)-அந்த தேவியும், त्वत् - உன்னைக் காட்டிலும், अन्या - வேருனவள், का - எவள்?

(பொ - ரை) இந்த்ரஜாலம் முதலிய வித்தைகளும், மனுஸ்ம்ருதி முதலிய சாஸ்த்ரங்களும், உபநிஷதங்களும், வேத வாக்யங்களுமான இவைகளெல்லாம் இருக்கும் பொழுது, இந்த ப்ரபஞ்சத்தை மிகவும் அஜ்ஞானவடிவ மான மோஹாந்தகாரத்தில் மூழ்கி அஹங்காரமென்ற படுகுழியில் விழச்செய்கின்ற ஓ அன்னையே! இவைகளெல் லாம் விஷ்ணுமாயாவடிவான உனது சக்தியின் பெரு

மையே யன்ரே! உன்னைக் காட்டிலும் வேறு எவர்தான் இவ்விதம் செய்யமுடியும்? (31)

रक्षांसि यत्रोग्रविषाश्च नागा यत्रारयो दस्युबलानि यत्र ।
दावानलो यत्र भवाब्धिमध्ये तत्र स्थिता त्वं परिपासि विश्वम् ॥३२॥

(ப - ரை) यत्र - எவ்விடத்தில், रक्षांसि - ராக்ஷஸர்கள் இருக்கின்றனரோ, उग्र-विषाः-கொடியவிஷங்களைக் கொண்ட, नागाः-च-நாகங்களும், यत्र-எவ்விடத்தில் இருக்கின்றனவோ, अरयः-பகைவர்கள், यत्र - எவ்விடத்தில் இருக்கின்றனரோ, दस्यु-बलानि - திருடர்களுடைய கூட்டங்கள், यत्र - எவ்விடத்தில் இருக்கின்றதோ, दावानलः - காட்டுத்தீ, यत्र - எவ்விடத்தில் இருக்கின்றதோ! तथा - அவ்விதமே, अब्धि-मध्ये - ஸமுத்ரத்தின் நடுவிலும், तत्र - அந்த இடத்திலும், स्थिता - இருந்துகொண்டு, त्वम् - நீ, विश्वम् - உலகை, परिपासि - காப்பாற்றுகிருய்.

(பொ - ரை) ஓ அன்னையே! ராக்ஷஸர்கள், கொடிய விஷமுள்ள ஸர்பங்கள், பகைவர்கள், திருடர்களுடைய கூட்டங்கள் இவர்களுடைய ஸங்கடத்திநின்றும், காட்டுத்தீயினுடைய உபத்ரவத்திநின்றும், ஸமுத்ரத்தின் மத்யத்திலிருந்து உண்டாகிற ஆபத்திநின்றும் ஆங்காங்கு நீ இருந்து கொண்டு இந்த ப்ரபஞ்சத்தை பரிபாலனம் செய்கிருயன்ரே! (32)

विश्वेश्वरी त्वं परिपासि विश्वं विश्वात्मिका धारयसीति विश्वम् ।
विश्वेशवन्द्या भवती भवन्ति विश्वाश्रया ये त्वयि भक्तिनम्राः ॥ ३३ ॥

(ப - ரை) त्वं - நீ, विश्वेश्वरी - உலகத்திற்கு தலைவியாயிருக்கிருய். विश्वम्-இவ்வுலகை. परिपासि - காப்பாற்றுகிருய்.

(त्वं - நீ,) विश्वात्मिका - ப்ரபஞ்ச வடிவாயிருக்கிறாய். इति - என்ற காரணத்தால், विश्वम् - உலகத்தை, धारयसि - தரிக்கிறாய். भवती - நீ, विश्वेश-वन्द्या - லோகநாதர்களால் வணங்கப் படுகிறாய். ये - எவர்கள், त्वयि - உன்னிடத்தில், भक्तिनम्राः - பக்தியோடு வணங்கப்படுகின்றரோ, विश्वाश्रयाः - (அவர்கள்) உலகத்திற்கு ஆச்ரயிக்கத் தக்கவர்களாக, भवन्ति - இருக்கின்றனர்.

(பொ - ரை) ஓ அன்னையே! நீ இவ்வுலகத்திற்குத் தலைவியாயிருக்கிறாய்! அக்காரணத்தால் இவ்வுலகைக் காப்பாற்றுகிறாய். நீயே ப்ரபஞ்ச வடிவாயிருப்பது கொண்டு இந்த ப்ரபஞ்சத்தையும் தரித்துக் கொண்டிருக்கிறாய். நீ இந்த்ரன் ப்ரம்ஹா முதலிய லோகநாதர்களால் வணங்கப்படுகிறாய். பக்தியோடு கூட உன்னை எவர்கள் வணங்குகின்றனரோ, அவர்கள் உலகத்திற்கு அடைக்கலமாக இருக்கின்றனர். (33)

देवि प्रसीद परिपालय नोऽरिभीते-
र्नित्यं यथासुरवधादधुनैव सद्यः ।
पापानि सर्वजगतां प्रशमं नयाशु
उत्पातपाकजनितांश्च महोपसर्गान् ॥ ३४ ॥

(ப - ரை) देवि - ஓ தேவி! प्रसीद - அனுக்ரஹம்செய். यथा - எவ்விதம், असुर-वधात्-அஸுர வதத்தின் காரணமாக, अधुना-एव - இப்பொழுதே, सद्यः - நொடிப்பொழுதில் नः - எங்களை, (तथा - அவ்விதம்), अरि-भीतेः - பகைவர்களுடைய பயத்திலிருந்து, नित्यम्-எப்பொழுதும், परि-पालय - காப்பாற்றுவாயாக. सर्व-जगताम् - ஸமஸ்த உலகங்களுடைய, पापानि -

பாபங்களையும், उत्पात-पाक-जनितानि-அதர்மத்திலிருந்து உண்டாகியவைகளான, महोपसर्गान् - பெரிய உத்பாதங்களையும், (உபத்ரவங்களையும்) आशु - விரைவில் प्रशमम् - சாந்தியை, नय - அடையச் செய்யவேண்டும்.

(பொ - ரை) ஓ அன்னையே! நீ அனுக்ரஹம் செய்ய வேண்டும்! எவ்விதம் ஒருநொடிப்பொழுதில் கொடிய அஸுரர்களை இப்பொழுது அழித்தாயோ! அவ்விதமே எங்களைப் பகைவர்களுடைய பயத்திலிருந்து பரிபாலனம் செய்யவேண்டும். மற்றும், மூவுலங்களுடைய பாபங்களையும்; உத்பாதங்களால் ஏற்பட்ட மஹத்தான உபத்ரவங்களையும், சமனமடையச் செய்யவேண்டும். (34)

प्रणतानां प्रसीद त्वं देवि विश्वार्तिहारिणि ।
त्रैलोक्यवासिनामीड्ये लोकानां वरदा भव ॥ ३५ ॥

(ப - ரை) विश्वार्ति-हारिणि - உலகங்களுடைய துன்பங்களைத் துடைப்பவளே! देवि! ஓ தேவி! प्रणतानाम् - பக்தியோடு கூட வணங்குகின்றவர்களுக்கு, प्रसीद - அனுக்ரஹம் செய். त्रैलोक्य-वासिनाम् - மூவுலகங்களிலும் வஸிக்கின்றவர்களுக்கும், ईड्ये - துதிக்கப்படும் பெருமையை யுடையவளே, (त्वम् - நீ) लोकानाम् - உலகங்களுக்கு, वरदा-வரத்தைக் கொடுப்பவளாக, भव - இருப்பாயாக.

(பொ - ரை) உலகங்களுடைய துக்கத்தைத் துடைப்பவளே! ஓ அன்னையே! பக்தியோடுகூட உன்னை ஸேவிப்பவர்களுக்கு அனுக்ரஹம் செய்யவேண்டும். மூவுலகத்திலும் வஸிக்கின்ற ஜனங்களால் துதிக்கப பெற்றவளே! நீ உலகங்களுக்கு வரத்தைக் கொடுப்பவளாக இருக்க வேண்டும். (35)

देव्युवाच ॥ ३६ ॥

वरदाहं सुरगणा वरं यन्मनसेच्छथ ।
तं वृणुध्वं प्रयच्छामि जगतामुपकारकम् ॥ ३७ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னாள்—

(ப - ரை) सुरगणाः - ஓ தேவகணங்களே! अहम् - நான், वरदा - வரத்தைக்கொடுப்பவள். यत् - யாதொரு, वरम् - வரத்தை. मनसा - மனதால், इच्छथ - விரும்புகின்றீர்களோ, जगताम् - உலகங்களுக்கு, उपकारकम् - உபகாரத்தைச்-செய்கின்ற, तम् - அந்த வரத்தை, वृणुध्वम् - வேண்டிக் கொள்ளுங்கள். प्रयच्छामि - கொடுக்கிறேன்.

தேவீ சொன்னாள். (36)

(பொ - ரை) ஓ தேவகணங்களே! நான் பக்தர்களுக்கு வரத்தைக் கொடுக்கின்றவள். நீங்களும் மனதினால் எந்த வரத்தை விரும்புகின்றீர்களோ, உலகங்களுக்கு உபகாரமாயிருக்கிற அந்த வரத்தைக் கேட்டுக் கொள்ளுங்கள், நான் கொடுக்கிறேன். (37)

देवा ऊचुः ॥ ३८ ॥

सर्वाबाधाप्रशमनं त्रैलोक्यस्याखिलेश्वरि ।
एममेव त्वया कार्यमस्मद्वैरिविनाशनम् ॥ ३९ ॥

देवाः - தேவர்கள், उवाच - சொன்னார்கள்—

(ப - ரை) अखिलेश्वरि - ஸகல ப்ரபஞ்சங்களுக்கும் தலைவியாய ஓ அன்னையே! त्रैलोक्यस्य - மூவுலகினுடைய, सर्वाबाधाप्रशमनम् - ஸகல துக்கங்களையும் தணியச் செய்வதான, अस्मत् - எங்களுடைய, वैरि-वि-नाशनम् - பகைவர்களுடைய

நாசத்தை, एवम्-एव - இவ்விதமே, त्वया - உன்னுல், कार्यम् - செய்யப்படவேண்டும்.

தேவர்கள் சொன்னுர்கள். (38)

(பொ - ரை) இந்த ப்ரபஞ்சத்திற்கே தலைவியாகிய ஓ அன்னையே! மூன்று உலகத்தினுடைய ஸகல துக்கங்களையும் தணியச் செய்வதான எங்களுடைய பகைவர்களின் நாசத்தை நீ இவ்விதமே எப்பொழுதும் செய்து வரவேண்டும். (39)

देव्युवाच ॥ ४० ॥

वैवस्वतेऽन्तरे प्राप्ते अष्टाविंशतिमे युगे ।
शुम्भो निशुम्भश्चैवान्यावुत्पत्स्येते महासुरौ ॥ ४१ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னுள்—

(ப - ரை) वैवस्वतेऽन्तरे - வைவஸ்வத மந்வந்தரத்தில், अष्टाविंशतितमे - இருபத்தெட்டாவதாகிய, युगे - யுகமானது, प्राप्ते - வரும்பொழுது, शुम्भः - சும்பனென்றும், निशुम्भः - நிசும்பனென்றும், अन्यौ - வேருன, महासुरौ - பெரிய இரண்டு அஸுரர்கள், उत्पत्स्येते - உண்டாகப் போகின்றனர்.

தேவீ சொன்னுள். (40)

(பொ - ரை) ஓ தேவர்களே! வைவஸ்வதமந்வந்தரத்தில் இருபத்தெட்டாவது யுகம் வரும்பொழுது, சும்பன் என்றும், நிசும்பன் என்றும் வேறு இரண்டு பெரிய அஸுரர்கள் உண்டாகப் போகின்றனர். (41)

युगे - யுகே - சதுர்யுகத்தில் அதாவது த்வாபர்யுகத்தினுடைய கடைசியிலும், கலியுகத்தின் ஆரம்பத்திலும் எனத் தாத்பர்யம்.

नन्दगोपगृहे जाता यशोदागर्भसंभवा ।
ततस्तौ नाशयिष्यामि विन्ध्याचलनिवासिनी ॥ ४२ ॥

(ப - ரை) ततः - பிறகு, नन्दगोप-गृहे - நந்தகோபனுனுடைய வீட்டில், यशोदा-गर्भ-संभवा - யசோதையினுடைய கர்பத்தில் புத்திரியாக, जाता - (நான்) பிறந்து, विन्ध्याचल-निवासिनी - விந்திய மலேச்சாரலில் வஸித்துக்கொண்டு, तौ - அவ்விருவர்களேயும், नाशयिष्यामि - அழிக்கப் போகிறேன்.

(பொ - ரை) அப்பொழுது நந்தகோபன் என்ற யாதவ மன்னனுடைய வீட்டில் யசோதையின் கர்பத்தில் நான் பெண்ணுகப் பிறந்து, விந்தியமலேச்சாரலில் (விந்த்ய வாஸிநீ என்ற திரு நாமத்துடன்) வஸித்துக்கொண்டு அந்த சும்பநிசும்பர் இருவர்களேயும் நாசம் செய்யப்போகிறேன். (42)

நந்தகோபனுடைய புத்ரியாக அவதரித்த இந்த தேவியானவள் லக்ஷ்மியினுடைய அம்சத்தைக் கொண்டவள்.

नन्दा भगवती नाम या भविष्यति नन्दजा ।
कनकोत्तमकान्तिः सा सुकान्तिकनकाम्वरा ।
कमलाङ्कुशपाशाब्जैरलंकृतचतुर्भुजा ।
इन्दिराकमला लक्ष्मीः सा श्रीरुक्माम्बुजासना ॥

என மூர்த்தி ரஹஸ்யத்திலும் சொல்லப்பட்டிருக்கிறது. இவைகளுடைய விளக்கங்களே அங்கு கண்டு கொள்ள வேண்டும்.

पुनरप्यतिरौद्रेण रूपेण पृथिवीतले ।
अवतीर्य हनिष्यामि वैप्रचित्तांश्च दानवान् ॥ ४३ ॥

(ப - ரை) पुनः-अपि - மறுபடியும், अति-रौद्रेण - மிகவும் பயங்கரமான, रूपेण - உருவத்தோடு; पृथिवीतले - பூமியில்

अवतीर्य - அவதரித்து, वैप्रचित्तान् - விப்ரசித்தன் என்ற அஸுரனுடைய புதல்வர்களான, दानवान्-च - தானவர்களையும், हनिष्यामि - கொல்லப்போகிறேன்,

(பொ - ரை) மறுபடியும் மிகவும் பயங்கரமானதோர் வடிவத்துடன் பூமியில் அவதரித்து, விப்ரசித்தன் என்ற அஸுரனுடைய புதல்வர்களான தானவர்களையும் கொல்லப்போகிறேன். (43)

वैप्रचित्तान् வைப்ரசித்தாந் - என்றது விப்ரசித்தனுடைய வழியில் தோன்றியவர்கள் என குப்தவதீ கூறும்.

भक्षयन्त्याश्च तानुग्रान् वैप्रचित्तान् महासुरान् ।
रक्ता दन्ता भविष्यन्ति दाडिमीकुसुमोपमाः ॥ ४४ ॥

(ப - ரை) उग्रान् - கொடியவர்களாயும், महासुरान् - பெரிய அஸுரர்களாயும் இருக்கிற, तान् - அந்த, वैप्रचित्तान् - விப்ரசித்தனுடைய புதல்வர்களை, भक्षयन्त्याः - புசிக்கின்ற என்னுடைய, दन्ताः - பற்கள், रक्ताः - च - சிவப்பாகவும், दाडिमी - कुसुमोपमाः - மாதுளைப் புஷ்பத்திற்கு நிகரானவைகளாகவும், भविष्यन्ति - ஆகப்போகின்றன.

(பொ - ரை) கொடியவர்களாயும், பெரியவர்களாயுமிருக்கிற அந்த விப்ரசித்தனுடைய புதல்வர்களை நான் புசிக்கும் பொழுது, என்னுடைய பற்கள் மாதுளைப்புஷ்பத்திற்கு நிகரான சிவந்த நிறமுள்ளவைகளாக ஆகப்போகின்றன. (44)

இவ்விடத்தில் அன்னைக்கு எல்லா அவயங்களும் ரக்தவர்ணங்களாயிருப்பதுகொண்டு "ரக்தசாமுண்டா" என அழைக்கவேண்டும். எனினும் பற்களோ அதிகமாகச் சிவந்திருப்பதன் காரணமாக 'ரக்ததந்திகா' எனவும் அழைக்கலாயிற்று.

ततो मां देवताः स्वर्गे मर्त्यलोके च मानवाः ।
स्तुवन्तो व्याहरिष्यन्ति सततं रक्तदन्तिकाम् ॥ ४५ ॥

(ப - ரை) ततः - பிறகு, स्वर्गे - ஸ்வர்கத்தில், देवताः - தேவதைகளும், मर्त्य-लोके - பூமியில், मानवाः-च - மனிதர்களும், माम् - என்னை, सततम् - எப்பொழுதும், स्तुवन्तः - துதித்துக் கொண்டு, रक्त-दन्तिकाम् - ரக்ததந்திகை என்று, व्याहरिष्यन्ति - சொல்லப் போகின்றனர்.

(பொ - ரை) பிறகு அக்காரணத்தால், தேவலோகத்தில் தேவர்களும், மர்த்ய (பூமி) லோகத்தில் மனிதர்களும், என்னை ரக்ததந்திகை என்று எப்பொழுதும் துதிக்கப் போகின்றனர். (45)

இந்த ரக்ததந்திகா தேவீ காளியினுடைய அம்சம் கொண்டவள்- இந்த தேவியினுடைய கேசங்களும், எல்லா அவயவங்களும், ஆயுதங்களும், ரத்த(சிவந்த) நிறமாயிருக்கின்ற காரணத்தால் "ரக்தசாமுண்டா" எனச் சொல்லவேண்டும். இவ்விதம் தேவிக்கு பல நாமங்கள் உண்டாயினும் "ஸர்வத்ராஹம்" எனச் சொல்லியது கொண்டு சாக்தர்கள் அபேதமாகவே-ஒன்ருகவே-அபிப்பிராயப்படுகின்றனர் என நாகேசப்படர் கூறுவர்.

भूयश्च शतवार्षिक्यामनावृष्ट्यामनम्भसि ।
मुनिभिः संस्मृता भूमौ संभविष्याम्ययोनिजा ॥ ४६ ॥

(ப - ரை) भूयः - च - மறுபடியும், शत-वार्षिक्याम् - நூறு வருஷம் முழுவதும், अनावृष्ट्याम् - மழைபெய்யாததால், अनम्भसि - ஜலமில்லாதபொழுது, भूमौ - பூமியில், मुनिभिः - முனிவர்களால், संस्मृता - நன்கு ஸ்மரிக்கப்பட்டவளாக, अयोनिजा - அயோநிஜையென்ற திருநாமத்தோடு, संभविष्यामि - உண்டாகப்போகிறேன்.

(பொ - ரை) மறுபடியும் நூறுவருஷம் மழைபெய்யாததுகொண்டு, பூமியில் ஜலமில்லாதபொழுது, முனிவர்களால் நான் நன்கு நினைத்து துதிக்கப்பெற்று அயோநிஜை என்ற திருநாமத்துடன் அவதரிக்கப்போகிறேன். (46)

ततः शतेन नेत्राणां निरीक्षिष्यामि यन्मुनीन् ।
कीर्तयिष्यन्ति मनुजाः शताक्षीमिति मां ततः ॥ ४७ ॥.

(ப - ரை) ततः - பிறகு, नेत्राणां-शतेन - நூறு கண்களைக் கொண்டு, मुनीन् - முனிவர்களை, निरीक्षिष्यामि - பார்க்கப் போகிறேன், यत् - (என்பது) யாதென்று உண்டோ, ततः - அக்காரணத்தால், माम् - என்னை, मनुजाः - மனிதர்கள், शताक्षीम्-इति - சதாக்ஷீ' என்று, कीर्तयिष्यन्ति - சொல்லப் போகிறார்கள்.

(பொ - ரை) பிறகு நூறுகண்களால் முனிபுங்கவர்களை நான் பார்க்கப்போகிறபடியால், அக்காரணத்தால் என்னை மனிதர்கள் சதாக்ஷீ (நூறுகண்களையுடையவள்) என அழைக்கப்போகின்றனர். (47)

சதாக்ஷீ, சாகம்பரீ, துர்கா என்ற தேவியினுடைய ஸ்தானங்கள் க்ருஷ்ணா, வேணீ, துங்கபத்ரா என்ற நதிக்கு நடுவில் ஸஹ்யபர்வதத்திலிருந்து கொஞ்சம் கிழக்குதிக்கில் உள்ளன என குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

ततोऽहमखिलं लोकमात्मदेहसमुद्भवैः ।
भरिष्यामि सुराः शाकैरा वृष्टेः प्राणधारकैः ॥४८ ॥

(ப - ரை) सुराः - ஓ தேவர்களே, ततः - பிறகு, अहम् - நான், आत्म-देह-समुद्भवैः-என்னுடைய சரீரத்திலிருந்து உண்டானவைகளும், प्राण-धारकैः-ஜீவனைப் போஷணை செய்கின்ற

வைகளுமான, शाकैः - நெற்பயிர்களைக் கொண்டு, आ वृष्टेः - மழை பெய்யும் வரையில், अखिल-लोकम् - எல்லா உலகத்தையும், भरिष्यामि - ரக்ஷிக்கப்போகிறேன்.

(பொ - ரை) ஓ தேவர்களே! பின்னையும் நான் என்னுடைய சரீரத்திலிருந்து உண்டானவையும், ஜீவனைப் போஷணை செய்கின்றவையுமான சாகம் (கீரைமுதலிய பதார்த்தங்கள்,) முதலியவைகளைக் கொண்டு மழைபெய்கிறவரையில் ஸமஸ்தலோகங்களையும் போஷணை செய்யப் போகிறேன். (48)

சாகம்—மழையில்லாமல் கொடிய பஞ்சம் உண்டாகும் பொழுது தனது சரீரத்திலிருந்து உண்டான சாகம்—கீரை—முதலியவைகளைக் கொண்டு ப்ராணிகளை பரணம் (காப்பாற்றுவது) செய்வதால் தேவிக்கு இப்பெயர் உண்டாகியது. சாகம் என்பது தண்டு புஷ்பம், நுனியிலுள்ள கொழுந்து முதலியவைகளுடன் கூடியது. இதற்கு ப்ரமாணம்—

"पत्रमूलकरीराग्रफलकाण्डास्थिरूढका: ।
त्वक् पुष्पं कवचं चेति शाका दशविधा: स्मृता: ॥'

என்பது.

வைவஸ்வத மந்வந்தரத்திலே நாற்பதாவது யுகத்திலெ சதாக்ஷீ, சாகம்பரீ என்ற தேவிகளுடைய அவதாரமாகும். இதற்கு ப்ரமாணம்-லக்ஷ்மீதந்த்ர வசனமாகும்.

"यस्मिन्नेवान्तरे शक्र चत्वारिंशत्तमे युगे ।
शाकंभरीं स्तुवन् ध्यायन् जपन् संपूजयन्नमन् ।
अक्षयामश्नुते भूतिमन्न पानं भवान्तरे ।"

ஓ இந்த்ர! எந்த மந்வந்தரத்தின் நடுவில் நாற்பதாவது யுகத்தில் சாகம்பரீ தேவியை த்யாநத்தினாலும், ஜபத்தினாலும் பூஜையினாலும் வணக்கத்தினாலும் ஸந்தோஷிக்கச் செய்து அந்ந

பாநாதிகளான குறைவிலா ஸம்பத்தையும் மக்கள் அடைகின்றனரோ. இந்த யுகத்திலே தான் துர்காதேவியினுல் துர்கமன் என்ற அஸுரனுடைய வதமும் நிகழ்ந்தது என நாகேசபட்டர் கூறுவர்.

शाकंभरीति विख्यातिं तदा यास्याम्यहं भुवि ॥ ४९ ॥

तत्रैव च वधिष्यामि दुर्गमाख्यं महासुरम् ।

दुर्गादेवीति विख्यातं तन्मे नाम भविष्यति ॥ ५० ॥

(ப - ரை) तदा - அப்பொழுது, भुवि - உலகில், अहम् - நான், शाकंभरी - சாகம்பரீ என்று, विख्यातिम् - கீர்த்தியை, यास्यामि - அடையப்போகிறேன். तत्र-एव-அவ்விடத்திலேயே, दुर्गमाख्यम् - துர்க்கமன் என்ற பெயருள்ள, महासुरम् பெரிய அஸுரனை, विधिष्यामि-च - கொல்லவும் போகிறேன். तत् - அக்காரணத்தால், मे எனக்கு, विख्यातम् - பிரஸித்தமான, दुर्गादेवी - इति नाम - துர்காதேவீ என்ற திருநாமமும், भविष्यति- உண்டாகப்போகிறது.

(பொ - ரை) அப்பொழுது நான் பூமியில் சாகம்பரீ என்ற பெயரோடு கீர்த்தியை அடையப் போகிறேன். அச்சமயத்திலே, துர்கமன் என்ற பெரிய அஸுரனை நான் வதம் செய்யப் போவதால் எனக்கு துர்காதேவீ என்ற பிரஸித்தமான திருநாமமும் உண்டாகப்போகிறது. (49,50)

இந்த சாகம்பரீ தேவீ பார்வதியினுடைய அம்சமானவள்.

"शाकंभरी शताक्षी सा सैव दुर्गा प्रकीर्तिता ।

उमा गौरी सती चण्डी कालिकेशा च पार्वती ॥"

சாகம்பரீ, சதாக்ஷீ, இவர்கள் துர்கை எனவும் சொல்லப்படுவது. உமா, கௌரீ, ஸதீ, சண்டீ, காளிகா, ஈசா. பார்வதீ இவைகளெல்லாம் பார்வதியின் அம்சங்களேயாகும் என்பது.

पुनश्चाहं यदा भीमं रूपं कृत्वा हिमाचले ।
रक्षांसि भक्षयिष्यामि मुनीनां त्राणकारणात् ॥ ५१ ॥
तदा मां मुनयः सर्वे स्तोष्यन्त्यानम्रमूर्तयः ।
भीमादेवीति विख्यातं तन्मे नाम भविष्यति ॥ ५२ ॥

(ப - ரை) पुनः-च- மறுபடியும், अहम् - நான், यदा - எப்பொழுது, हिमाचले - ஹிமவத்பர்வதத்தில், भीमम् - பயங்கரமான, रूपम्-வடிவத்தை, कृत्वा-எடுத்து, मुनीनाम् - மஹர்ஷிகளுடைய, त्राण-कारणात् - ரக்ஷிணயின் காரணத்தால், रक्षांसि - ராக்ஷஸர்களை, भक्षयिष्यामि - புசிக்கப்போகிறேன். तदा - அப்பொழுது, माम् - என்னை, आनम्र-मूर्तयः - நன்கு வணங்கிய சரீரங்களையுடைய, सर्वे - எல்லா, मुनयः - முனிவர்களும், स्तोष्यन्ति - துதிக்கப்போகின்றனர். तत् - அக்காரணத்தால், मे - எனக்கு, भीमादेवी - इति - பீமாதேவீ என்ற, विख्यातं-नाम - பிரஸித்தமான திருநாமம், भविष्यति-உண்டாகப்போகிறது.

(பொ - ரை) மறுபடியும் நான் ஹிமவத்பர்வதத்தில் பயங்கரமான வடிவத்தை எடுத்துக்கொண்டு, முனிவர்களை ஸம்ரக்ஷிப்பதற்காக கொடிய ராக்ஷஸர்களை புசிக்கப்போவதால் வஸிஷ்டர் முதலிய முனிவர்களெல்லோரும் பக்தியினால் நன்கு வணங்கிய சரீரங்களோடு ஸ்துதி செய்து என்னை பீமாதேவீ என்ற பிரஸித்தமான திருநாமம் கொண்டு அழைக்கப் போகின்றனர். (51, 52)

பீமாதேவியினுடைய அவதாரம் இன்னும் உண்டாகவில்லையென்றும், வைவஸ்த மந்வந்தரத்தில் ஐம்பதாவது சதுர்யுகத்தில் உண்டாகப்போவதாகும் எனவும் லக்ஷ்மீதந்த்ரத்தில் சொல்லியிருப்பதாகச் சிலர் சொல்லுகின்றனர். உண்மையில் ரக்ததந்திகா, சாகம்பரீ, சதாக்ஷீ, துர்கா, பீமா, ப்ராமரீ இந்த ஆறு அவதா

ரங்களும் வருங்காலத்தில் நடைபெறப்போவனவாகும். மூலத்தில் भूयश्च, पुनश्चाहम् , पुनरपि என்ற பதங்களைக் கொண்டு உத்தரோத்தர (அடுத்தடுத்துள்ளது) காலத்திலேதான் சொல்லப்பட்டதாகக் கிடைக்கிறது.

अस्मिन्नेवान्तरे शक्र चत्वारिंशत्तमे युगे—'' என ஆரம்பித்து சதாக்ஷியினுடைய அவதாரத்தையும், "चतुर्युगेऽत्र पञ्चाशत्तमे मुनिभिर्चिता ''—ஐம்பதாவது மங்வந்தரத்தின் சதுர்யுகத்தில் முனிவர்களால் பூஜிக்கப்பட்டவளாக (வேண்டப்பட்டவளாக) என ஆரம்பித்து பீமாதேவியினுடைய அவதாரத்தையும். "युगे षष्टितमे कश्चिदरुणो नाम दानव: - அறுபதாவது சதுர்யுகத்தில் அருணன் என்ற பெயரோடு கூடிய ஒரு அஸுரன்'' என ஆரம்பித்து ப்ராமரீ தேவியினுடைய அவதாரத்தையும் குறித்து லக்ஷ்மீ தந்தரத்தில் விளக்கியுள்ளது.

எனினும் இப்பொழுது நடந்துகொண்டிருக்கிற ச்வேத வராஹ கல்பத்திற்கு முன்பு உன்டாகிய கல்பத்தில் இந்த தேவிகளுடைய அவதாரங்கள் மங்வந்தரயுக பேதத்தால் உண்டாயிருப்பவையேயாகும். இக்காலத்திலும் சாகம்பரீ முதலிய தேவிகளை ஆங்காங்கு குலதேவதைகளாக த்யாநம் செய்தும், பூஜை செய்தும்; வருகின்றனர் என அறியவேண்டும்'' என்று குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

இந்த பீமாதேவீ காளிகாதேவியின் அம்சமாவள். இதற்கு ப்ரமாணம்—

"भीमापि नीलवर्णैव दंष्ट्रादर्शनभासुरा ''

என்பதாகும்.

यदारुणाख्यस्त्रैलोक्ये महाबाधां करिष्यति ।
तदाहं भ्रामरं रूपं कृत्वासंख्येयषट्पदम् ॥ ५३ ॥
त्रैलोक्यस्य हितार्थाय वधिष्यामि महासुरम् ।
भ्रामरीति च मां लोकास्तदा स्तोष्यन्ति सर्वतः ॥ ५४ ॥

(ப - ரை) यदा - எப்பொழுது, त्रैलोक्ये - மூவுலகிலும், अरुणाख्यः - அருணன் என்ற அஸுரன், महाबाधाम् - பெரிய பீடையை, करिष्यति - செய்யப்போகிருனே. तदा - அப்பொழுது, अहम् - நான், असंख्येय-षट्पदम् - கணக்கற்ற வண்டுகளோடு கூடிய, भ्रामरम्-வண்டுகளின் ஸம்பந்தமான வடிவத்தை, कृत्वा - எடுத்து, त्रैलोक्यस्य-மூவுலகத்தினுடைய, हितार्थाय - நன்மையின் பொருட்டு, महासुरम् - பெரிய அஸுரனை, वधिष्यामि - கொல்லப்போகிறேன். तदा- அப்பொழுது, लोकाः - ஜனங்கள், सर्वतः - எங்கும், भ्रामरी - ப்ராமரீ, इति - என்று, माम् - என்னை, स्तोष्यन्ति - துதிக்கப்போகின்றனர்.

(பொ - ரை) அருணன் என்ற மஹாஸுரன் மூவுலகைப் பெரிதும் பீடிக்கும் பொழுது, நான் கணக்கற்ற வண்டுகளால் நிறைந்த கருவண்டின் வடிவத்தையெடுத்துக்கொண்டு, மூவுலகையும் ரக்ஷிப்பதற்காக அந்த மஹாஸுரனை கொல்லப்போகிறேன், அப்பொழுது ஜனங்கள் என்னை எல்லாவிடத்திலும் ப்ராமரீ எனத் துதிக்கப் போகின்றனர். (53, 54)

ப்ராமரீதேவீ, என்பவள் பீமரதிகாகிநீ நதிகளுடைய ஸங்கமத்திலுள்ள **'அநுகுண்டம்'** என்ற க்ஷேத்ரத்திலும், அவ்விடத்திலிருந்து கொஞ்சம் கிழக்குத் திக்கிலுள்ள **'ஸந்நதீ'** என்ற க்ஷேத்ரத்திலும், **"சந்த்ரலாபரமேச்வரீ"** என்ற பெயருடன் விளங்கிக் கொண்டிருக்கின்ற தேவியே எங்களுடைய குலதெய்வமுமாகும் என்பர் குப்தவதீ உரையாசிரியரான ஸ்ரீபாஸ்கரராயர்.

इत्थं यदा यदा बाधा दानवोत्था भविष्यति ।
तदा तदावतीर्याहं करिष्याम्यरिसंक्षयम् ॥ ५५ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
नारायणीस्तुतिर्नामैकादशोऽध्यायः ॥ ११ ॥

(ப - ரை) इत्थम् - இவ்விதம், यदा-यदा - எப்பொழுது, எப்பொழுது, दानवोत्था - அஸுரர்களிடமிருந்து உண்டாகிய, बाधा - பீடையானது, भविष्यति - உண்டாகிறதோ, तदा तदा - அப்பொழுது அப்பொழுது, अहम् - நான், अवतीर्य - அவதரித்து, अरि-संक्षयम् - சத்ருநாசத்தை, करिष्यामि - செய்யப் போகிறேன்.

(பொ - ரை) இவ்விதம் அஸுரர்களிடமிருந்து எவ்வெப்பொழுது பீடையானது உண்டாகிறதோ, அவ்வப்பொழுது, பூமியில் நான் அவதரித்து சத்துருக்களுடைய நாசத்தைச் செய்யப்போகிறேன். (55)

மூலத்தில் तदा - अवतीर्य - ததா - அவதீர்ய அவ்வப்பொழுது அவதரித்து - என்றதால் ஏலாம்பா, துலஜா, ஏகவீரா, யோகலா, முதலிய பெயர்களோடு கூடிய அவதாரங்களையும் கொள்ள வேண்டும். இந்த அவதாரங்களுடைய விளக்கங்களை பத்மபுராணத்தில் நூற்றெட்டு தேவீதீர்த்தங்களுடைய வரிசைகளைச் சொல்லுமிடத்தில் அறியலாம் என குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மந்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் நாராயணீ ஸ்துதி என்ற பதினேராவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ द्वादशोऽध्यायः

देव्युवाच ॥ १ ॥

एभिः स्तवैश्च मां नित्यं स्तोष्यते यः समाहितः ।
तस्याहं सकलां बाधां शमयिष्याम्यसंशयम् ॥ २ ॥

देवी - தேவி, उवाच - சொன்னாள்—

(ப - ரை) यः - எவனொருவன், समाहितः - ஸ்திரமான மனதோடு, एभिः - இந்த, स्तोत्रैः च - ஸ்தோத்திரங்களினால், नित्यम् - தினந்தோறும், माम् - என்னை, स्तोष्यते - துதிசெய்கிறானோ, तस्य - அவனுடைய, सकलाम् - ஸமஸ்தமான, बाधाम् - உபத்ரவத்தை, अहम् - நான், नाशयिष्यामि - நாசம் செய்கிறேன், असंशयम् - ஸந்தேஹமில்லை.

தேவி சொன்னாள்— (1)

(பொ - ரை) இந்த ஸ்தோத்ரங்களைக் கொண்டு என்னை எவனொருவன் ஸ்திரமான சித்தத்தோடு தினந்தோறும் துதிசெய்கிறானோ, அவனுடைய ஸகல உபத்ரவங்களையும் நான் நாசம் செய்கிறேன். இவ்விஷயத்தில் யாதொரு ஸந்தேஹமும் கிடையாது. (2)

एभिः स्तवैश्च -ஏபி: ஸ்தவைஃச-இந்த ஸ்தோத்ரங்களினால் என்று சொன்னது ப்ரஹ்மாவினாலும், இந்த்ரன் முதலிய தேவர்களாலும், செய்யப்பட்ட ஸ்துதி என்பதாம்.

तस्याहं सकलां बाधाम् -தஸ்யாஹம் ஸகலாம் பாதாம்-என்றவிடத்தில், தஸ்ய-அஹம்ஸ கலாம்-பாதாம்-எனப்பதம் பிரித்துக் கொண்டு - ஹம்ஸ:-ஸூர்யன் - பரமாத்மா - "“असावादित्यो ब्रह्मा அஸாவாதித்யோ ப்ரஹ்மா-என்பது ச்ருதி. ஹம்ஸத்தினுடைய

கலை. அஹம்ஸகலா-மோஹமென்றும் மமதை (நான் என்ற அபிமானம்) வடிவாயமைந்த ஸம்ஸாரமாகும். அந்த ஸம்ஸார பந்தத்தை நிச்சயமாக அகற்றும் திறமை வாய்ந்தவள் என்பதும் கிடைப்பதாகும். அல்லது அஹம்கார வடிவாயமைந்த எல்லாவித பாதைகளையும்-துன்பங்களையும்-சமநம் செய்பவள் என்பதும் பொருந்தும் என சாந்தநவீ உரையாசிரியர் கூறுவர்.

मधुकैटभनाशं च महिषासुरघातनम् ।
कीर्तयिष्यन्ति ये तद्वद्वधं शुम्भनिशुम्भयोः ॥ ३ ॥
अष्टम्यां च चतुर्दश्यां नवम्यां चैकचेतसः ।
श्रोष्यन्ति चैव ये भक्त्या मम माहात्म्यमुत्तमम् ॥ ४ ॥

न तेषां दुष्कृतं किंचिद् दुष्कृतोत्था न चापदः ।
न भविष्यति दारिद्र्यं न चैवेष्टवियोजनम् ॥ ५ ॥

(ப - ரை) ये - எவர்கள் मधुकैटभ-नाशम् - மதுகைடபர்களுடைய நாசத்தையும், महिषासुर-घातनं - च - மஹிஷாஸுர வதத்தையும், तद्वत् - அதுபோலவே, शुम्भनिशुम्भयोः - சும்ப நிசும்பர்களுடைய, वधं - च - வதத்தையும், कीर्तयिष्यन्ति - சொல்லுகிறார்களோ, ये எவர்கள், एक-चेतसः - ஒரே மனதை யுடையவர்களாக, अष्टम्यां - च - அஷ்டமியிலும், चतुर्दश्यां - च - சதுர்தசியிலும், नवम्यां - च - நவமியிலும், मम - என்னுடைய, उत्तमम् - சிறந்ததான, माहात्म्यम् - மாஹாத்ம்யத்தை, (பெருமையை) भक्त्या - பக்தியோடு கூட, श्रोष्यन्ति-च - கேட்கின்றார்களோ, तेषाम् - அவர்களுக்கு, पापम् - பாபமானது, न-किंचित् - ஒரு துளியும் கிடையாது. दुष्कृतोत्थाः - பாபங்களிலிருந்து உண்டான, आपदः-च - விபத்துக்களும், न - இல்லை. दारिद्र्यम् - தரித்திரத்தன்மையும், न-भविष्यति -

உண்டாகாது. इष्ट-वियोजनम् - பந்துக்களுடைய பிரிவும், न - கிடையாது.

(பொ - ரை) எவர்கள் மதுகைடபர்களுடைய நாசத்தையும், மஹிஷாஸுரவதத்தையும், அதுபோலவே சும்பநிசும்பர்களுடைய வதத்தையும் சொல்லுகின்றனரோ; எவர்கள் ஸ்திரசித்தத்துடன், அஷ்டமியிலும், சதுர்தசியிலும், நவமியிலும் என்னுடைய உத்தமமான (சிறந்ததான) மாஹாத்ம்யத்தை பக்தியோடுகூட கேட்கின்றனரோ அவர்களுக்கு பாபமென்பது ஒரு துளிகூட கிடையாது. கெட்ட கர்மங்களிலிருந்து உண்டாகின்ற ஆபத்துக்களும் அணுகாது. அவர்களுக்கு வறுமையென்பதுவும் உண்டாகாது. பந்துக்களுடைய பிரிவும் உண்டாகாது. (3-5)

शत्रुतो न भयं तस्य दस्युतो वा न राजतः ।
न शस्त्रानलतोयौघात् कदाचित्संभविष्यति ॥ ६ ॥

(ப - ரை) तस्य - அவனுக்கு, शत्रुतः - பகைவனிடமிருந்து, உண்டாகிய, भयम् - பயமானது, न - கிடையாது, दस्युतः-திருடனிடமிருந்தும், राजतः-वा - அரசனிடமிருந்தும், न - (பயம்) கிடையாது, शस्त्रानल-तोयौघात् - சஸ்த்ரத்தினின்றும், நெருப்பிலிருந்தும், ஜலப்ரவாஹத்திலிருந்தும், कदाचित् - ஒரு பொழுதும், न-संभविष्यति - (பயமானது) உண்டாகாது.

(பொ -ரை) என்னுடைய மாஹாத்ம்யத்தைச் சொல்லுகிறவனுக்கோ, கேட்கின்றவனுக்கோ, பகைவனிடமிருந்தோ, திருடனிடமிருந்தோ, அரசனிடமிருந்தோ, சஸ்த்ர (பாண) ங்களிலிருந்தோ), நெருப்பிலிருந்தோ,

நீரோட்டத்திலிருந்தோ ஒருபொழுதும் பயமென்பது உண்டாகாது. (6)

तस्मान्ममैतन्माहात्म्यं पठितव्यं समाहितैः ।
श्रोतव्यं च सदा भक्त्या परं स्वस्त्ययनं महत् ॥ ७ ॥

(ப - ரை) तस्मात् - அக்காரணத்தால், समाहितैः - ஸ்திர சித்த முடையவர்களால், परम् - சிறந்ததாயும், महत् - பெரியதாயும், स्वस्त्ययनम् - மங்களத்தினுடைய மார்கமாயுமிருக்கிற, मम - என்னுடைய, एतत् - இந்த, माहात्म्यम् - மாஹாத்மியத்தை, भक्त्या - பக்தியோடு கூட, सदा - எப்பொழுதும், पठितव्यम्-படிக்கவேண்டும், श्रोतव्यं-च-கேட்கவும் வேண்டும்.

(பொ - ரை) அக்காரணத்தால் சிறந்ததாயும் பூஜிக்கத்தக்க தாயும், மங்களத்தை யடைவதற்கு வழியாக (காரண) வுமிருக்கிற என்னுடைய மாஹாத்ம்யத்தை மனிதர்கள் ஸ்திர சித்தத்தோடுகூட பாராயணம் செய் வேண்டும். அவ்விதமே கேட்கவும் வேண்டும். (7)

उपसर्गानशेषांस्तु महामारीसमुद्भवान् ।
तथा त्रिविधमुत्पातं माहात्म्यं शमयेन्मम ॥ ८ ॥

(ப - ரை) मम - என்னுடைய, माहात्म्यम्-மாஹாத்ம்யமானது, महामारी-समुद्भवात् - மஹாமாரியினிடமிருந்து உண்டான, अशेषान् - ஸமஸ்தமான, उपसर्गान्-तु - உபத்ரவங்களையும் கூட, तथा - அவ்விதமே, त्रिविधम् - மூவகையான, उत्पातम् - உபத்ரவத்தையும், शमयेत् - தணியச்செய்யும்.

(பொ - ரை) என்னுடைய மாஹாத்ம்யமானது மஹாமாரீ (அம்மை) முதலியவைகளான ஸகல உபத்ரவங்களையும், அவ்விதமே, ஆத்யாத்மிகங்கள், ஆதி

பௌதிகங்கள், ஆதிதைவிகங்கள் என்ற மூன்று வகையான உத்பாதங்களையும் நாசம் செய்யும். (8)

ஆத்யாத்மிகங்கள்—தங்களிடமிருந்து உண்டாகிய ராகம், த்வேஷம் முதலியவைகளிலிருந்து உண்டாகும் துன்பங்கள்.

ஆதிபௌதிகங்கள்—பூதம், ப்ரேதம், பிசாசங்கள் இவைகளின்றும், உண்டாகும் உபத்ரவங்களாகும்.

ஆதி தைவிகங்கள்—இடி தாரித்ர்யம் முதலியவைகளிலிருந்து உண்டாகும் உபத்ரவங்கள்.

அல்லது பூமி, அந்தரிக்ஷம், ஸ்வர்கம் இவைகளிலிருந்து உண்டாகும் ஸங்கடங்களையும்-உத்பாதங்களையும்-குறிப்பிடலாம்.

" भूर्लोकोऽयं स्मृतो भूमिरन्तरिक्षं भुवः स्मृतम् ।
स्वराख्यश्च तथा स्वर्गस्त्रैलोक्यं तदिदं स्मृतम् ॥ "

என்றவாறு பூமியிலிருந்து உண்டாகும் உத்பாதங்கள் பூகம்பம் (பூமி அதிர்ச்சி) முதலியன. அந்தரிக்ஷத்திலிருந்து உண்டாகும் உத்பாதங்கள் மப்பு, மந்தாரம்இல்லாமல் திடீரெனத் தோன்றும் இடி மின்னல் முதலியன. ஸ்வர்கத்திலிருந்து உண்டாகும் உத்பாதங்கள் கூட்டம் கூட்டமாக பல நக்ஷத்ரங்கள் சேர்ந்து விழுவது முதலியவையாகும்.

महामारी-समुद्भवाम् - மஹாமாரீ ஸமுத்பவாம் - என்றது ஜன ஸமூஹத்தை நாசம் செய்கின்ற தேவதைகளைக் குறிப்பதாகும். அதாவது:-வைஸூரி, காலரா முதலியன.

यत्रैतत्पठ्यते सम्यङ्नित्यमायतने मम ।
सदा न तद्विमोक्ष्यामि सांनिध्यं तत्र मे स्थितम् ॥ ९ ॥

(ப - ரை) यत्र - எவ்விடத்தில், मम - என்னுடைய, आयतने - வீட்டில், एतत् - இந்த மாஹாத்ம்யம், नित्यम् - தினந்தோறும், सम्यक्-நன்கு, पठ्यते - படிக்கப்படுகின்றதோ, तत् - அந்த வீட்டை, सदा - எப்பொழுதும், न - विमोक्ष्यामि-

விடமாட்டேன், तत्र - அவ்விட்டில், मे - என்னுடைய, सांनिध्यम् - ஸாந்நித்யமானது, स्थितम् - இருக்கும்.

(பொ - ரை) எந்த வீட்டில் என்னுடைய இந்த மாஹாத்ம்யமானது தினந்தோறும் பாராயணம் செய்ய படுகின்றதோ, அந்த வீட்டை நான் ஒரு பொழுதும் விடமாட்டேன். அவ்விடத்தில் என்னுடைய நிலைத்த வாஸமானது எப்பொழுதும் இருந்து கொண்டிருக்கும். (9)

सम्यक - ஸம்யக் - என்றதால் அர்த்தாநுஸந்தானத்துடன். அதாவது, பொருளையறிந்து-பாராயணம் செய்ய வேண்டும் என்பதும் கிடைப்பதாகும். மேலும்,

“आधारे स्थापयित्वा तु पुस्तकं वाचयेत्ततः।
हस्तसंस्थापनाद्देवि निहत्यर्धफलं ततः।
यावन्न पूर्यतेऽध्यायस्तावन्न विरमेत्पठन्।
अनुक्रमं पठेद्देवि शिरःकम्पादिकं त्यजेत्।
भ्रमादध्यायमध्ये चेद्विरामो भवति प्रिये
पुनरध्यायमारभ्य पठेत्सर्वं मुहुस्ततः।
हुनेत्प्रदीपिते वह्नौ तिलधान्यादितण्डुलान्।
धर्मकामार्थसंसिद्ध्यै मोक्षार्थी पायसं हुनेत॥”

புஸ்தகத்தை ஒரு பீடத்தில் (சிக்குப்பலகையில்) வைத்துப் படிக்கவேண்டும். கையில் வைத்துக் கொண்டு படித்தால் பாதி பலன்தான் கிடைக்கும். பாராயணம் செய்யும் பொழுது ஒவ்வொரு அத்யாயத்தையும் இடையில் நிறுத்தாமல் ஆரம்பம் முதல் கடைசி வரையிலும் தலையையசைக்காமல் பாராயணம் செய்ய வேண்டும். மறதியினால் அத்யாயம் விட்டுபோனால் திரும்பவும் அடிமுதல் ஆரம்பித்து முழுவதும் பாராயணம் செய்யவேண்டும். நன்கு ப்ரகாசிக்கின்ற அக்னியில் திலம்(எள்ளு) முதலிய தான்யங்களையும், தண்டுலங்களையும் (அரிசி) தர்மம், அர்த்தம், காமம் இவைகளுடைய ஸித்தியின் பொருட்டும், பாயஸத்தை மோக்ஷ-

ஸித்தியின் பொருட்டும் ஹோமம் செய்யவேண்டும் என **வாராஹீ தந்த்ரம்** கூறும்.

बलिप्रदाने पूजायामग्निकार्ये महोत्सवे ।
सर्वं ममैतच्चरितमुच्चार्यं श्राव्यमेव च ॥ १० ॥

(ப - ரை) **बलि - प्रदाने** - பலிகொடுப்பதிலும், **पूजायाम्** - பூஜையிலும், **अग्नि-कार्ये** - ஹோமகார்யத்திலும், **महोत्सवे** - மஹோத்ஸவ காலத்திலும், **मम** - என்னுடைய, **एतत्** - இந்த, **चरितम्** - சரிதமானது, **सर्वम्** - முழுவதும், **उच्चार्यम्** - உச்சரிக்கப்படவேண்டும். **श्राव्यम्** - **एव** - **च** - கேட்கப்படவும் வேண்டும்.

(பொ - ரை) என்னை உத்தேசித்துக் கொடுக்கப்படுகின்ற பலிதானத்திலும், பூஜையிலும், ஹோமம் செய்யும் பொழுதும்,மஹோத்ஸவகாலத்திலும் என்னுடையஇந்த சரிதத்தை முழுவதும் பாராயணம் செய்யவும் வேண்டும். கேட்கப்படவும் வேண்டும். (*10*)

இவ்விடத்தில் பலிப்ரதானம் முதலியவைகளுக்கும், தேவீ மாஹாத்ம்ய பாராயணம், சிரவணம் முதலியவைகளுக்கும் அங்காங்கிபாவமுண்டு எனவும் கிடைப்பதாகும்.

बलि-प्रदाने-பலி-ப்ரதானே-மஹாநவமி முதலிய புண்யகாலங்களில் தேவியை உத்தேசித்துக் கொடுக்கப்படும் ஆடு முதலியமிருகபலியைக் குறிப்பதாயினும் இந்த பலியானது க்ஷத்ரிய வைச்ய சூத்ரர்களுக்கு மாத்திரமேயல்லாது ப்ராஹ்மணனுக்கு விதிக்கப்படவில்லை யென்பதை பல உரையாசிரியர்களும் தக்கப்ரமாணங்களுடன் எடுத்துக்காட்டி யிருக்கின்றனர்.

पूजायाम् - பூஜாயாம் - புஷ்பங்களால் தொடுத்தமாலைகளையும், புஷ்பங்களையும் பூஜா காலத்தில் ஸமர்பணம் செய்வதா

கும். அல்லது வஸ்தரம், மாலே, சந்தனம், குடை, சாமரம், முதலிய அலங்காரங்களைக் கொண்டு குமாரிகளையும், ஸுவாஸிநிகளையும் அர்ச்சிக்கவேண்டுமென்பதையும் குறிப்பதாகும்.

अग्नि-कार्ये - அக்நி-கார்யே—பங்குனி மாஸத்தில் செய்கின்ற அக்நிஜ்வாலார்ச்சநம், அல்லது தேவீமாஹாத்ம்ய மாலாமந்த்ரம் கொண்டு புரஸ்சரணத்தோடு முடிவிலே செய்யப்படும் ஹோமம் எனவும் ஆம்.

महोत्सवे - மஹோத்ஸவே--ஒவ்வொருமாஸத்திலும் தேவியைக் குறித்துத் தனித்தனியே அநுஷ்டித்து வருகின்ற உத்ஸவங்களாகும். அவை—(1) சைத்ரமாஸத்தில் (சித்திரை) வஸந்தோத்ஸவம் (2) வைசாக மாஸத்தில் (வைகாசி) வாரணபுஷ்பப்ரசாயிகோத்ஸவம். (3) ஜ்யேஷ்ட மாஸத்தில் (ஆனி) ஜலக்ரீடோாஸவம். (4) ஆஷாடத்தில். (ஆடியில்) இந்த்ரத்வஜோத்தாநேத்ஸவம். (5) ச்ராவணத்தில் (ஆவணியில்) தோலாந்தோலோத்ஸவம். (6) பாத்ரபதத்தில் (புரட்டாசி) இந்த்ரபாணிதநுரர்சநோத்ஸவம். (7) ஆச்வயுஜத்தில் (ஐப்பசி) சாரதோத்ஸவம். (8) கார்த்திகத்தில் (கார்த்திகை) தீபோத்ஸவம். (9) மார்கசீர்ஷத்தில் (மார்கழி) மநாதயோத்ஸவம். (10) பௌஷத்தில் (தை) நிதிபூஜோத்ஸவம். (11) மாகத்தில் (மாசி) மேருத்ஸவம். (12) பால்குநத்தில் (பங்குனி) கந்தர்வோத்ஸவம் என்பன.

அல்லது மஹோத்ஸவம் என்பதற்கு மந்த்ரதீக்ஷை வடிவமான யஜ்ஞத்தையாவது அல்லது (सुधा) ஸுதோத்ஸவத்தையாவது கொள்ளலாம், இவைகளுடைய விளக்கங்களை வேறு தந்தரங்களில் விரிவாகக் காணலாம்.

जानताजानता वापि बलिपूजां तथा कृताम् ।
प्रतीक्षिष्याम्यहं प्रीत्या वह्निहोमं तथा कृतम् ॥ ११ ॥

(ப - ரை) तथा - அவ்விதமே, जानता - அறிவுள்ளவனயினும், अजानता-अपि-वा-அறிவற்றவனயிருந்தாலும், कृताम्-

செய்யப்பட்ட, बलि-पूजाम् - பலியையும், பூஜையையும், तथा - அவ்விதமே, कृतम् - செய்யப்பட்ட, वह्नि-होमम् - அக்நியில் செய்யப்பட்ட ஹோமத்தையும், अहम् - நான், प्रीत्या - பிரியத்தோடு கூட, प्रतीक्षिष्यामि - ஸ்வீகரித்துக் கொள்ளுகிறேன்.

(பொ - ரை) சாஸ்திரங்களில் சொல்லிய விதிவிலக்குகளைப் பரிசிலனம் செய்கின்ற ஞானத்தோடு கூடினவனுயினும், கூடாதவனுயினும், அவனுல் செய்யப்பட்ட பலி, பூஜை, ஹோமம், இவை யாவும் என்னுடைய மாஹாத்மயத்தின் உச்சாரணத்தோடு கூடினுல் போதுமானது, நான் ஸந்தோஷத்தோடுகூட அவைகளை எடுத்துக் கொள்ளுகிறேன். (11)

ज्ञात्वा कर्माणि कुर्वीत - ஞாத்வா கர்மாணி குர்வீத—என்ற ப்ரமாணத்தை யனுஸரித்து ஞானத்திற்கு கர்மா அங்கமானது கொண்டு கர்மஸ்வரூபத்தினுடைய ஞானமில்லாது செய்கின்ற பலி முதலிய கர்மங்களுக்குண்டாகிய குறைவானது இந்த தேவீ மாஹாத்ம்ய பாராயணம், ச்ரவணம் (கேட்டல்) முதலியவைகளால் நிவர்த்தியாகிவிடுமென்பது ஸாரம்.

शरत्काले महापूजा क्रियते या च वार्षिकी ।
तस्यां ममैतन्माहात्म्यं श्रुत्वा भक्तिसमन्वितः ॥ १२ ॥
सर्वाबाधाविनिर्मुक्तो धनधान्यसुतान्वितः ।
मनुष्यो मत्प्रसादेन भविष्यति न संशयः ॥ १३ ॥

(ப - ரை) शरत्काले-சரத்காலத்தில், वार्षिकी - च-வர்ஷா காலத்திலும்- या - யாதொரு, महा-पूजां - மஹாபூஜையானது, क्रियते - செய்யப்படுகிறதோ, तस्याम् - அந்த பூஜையில், मम - என்னுடைய, एतत् - இந்த, माहात्म्यम् - மாஹாத்

ம்யத்தை, भक्ति-समन्वित: - பக்தியோடுகூடியவனுன, मनुष्य: - மனிதன், श्रुत्वा - கேட்டு, मत्प्रसादेन - என்னுடைய, அனுக்ரஹத்தினுல், सर्वाबाधा-विनिर्मुक्त: - எல்லாவித பீடைகளிலிருந்தும் விடுப்பட்டவனுகவும், धन-धान्य-सुतान्वित: - தன் தான்யங்களோடும், புத்திரர்களோடும் கூடியவனுகவும், भविष्यसि - ஆகிருன், संशय: - ஐயம், न - இல்லை.

(பொ - ரை) சரத்காலத்திலும், வர்ஷாகாலத்திலும் யாதொரு மஹாபூஜையானது செய்யப்படுகிறதோ; அந்த பூஜையில் இந்த தேவீமாஹாத்ம்யத்தை பக்தியோடு கூட கேட்கின்றவன், ஸ்ரீதேவியினுடைய அனுக்ரஹத்தால் ஸகல துன்பங்களிலிருந்தும் விடுபட்டு, தனதான்ய ஸந்தானஸம்பத்துக்களோடு கூடியவனுக ஆகிருன். இதில் ஸயமில்லை. (*12, 13*)

शरत्काले - சரத்காலே-சாரதாநவராத்ரியிலும், वार्षिकी - வார்ஷிகீ- வஸந்த நவராத்ரியிலும், தேவியினுடைய மஹாபூஜையும், தேவீமாஹாத்ம்யபாராயணமும் செய்யவேண்டும். இந்த இரண்டு நவராத்ரிகளைக்குறித்து தேவீபாகவதத்திலும், "प्रतिसंवत्सरं कार्यं शारदं वार्षिकं तथा - ஒவ்வொரு வருஷத்திலும் சரத்ஸம்பந்தமான காலத்திலும், வர்ஷாஸம்பந்தமான காலத்திலும், பூஜை செய்ய வேண்டும்" என தந்த்ரங்களிலும் சொல்லியிருக்கிறது. இவ்விடத்தில் 'வார்ஷகீ' என்ற வார்த்தைக்கு ப்ரதி வர்ஷம் எனச் சிலர் பொருள் கூறுகின்றனர். அது சரியல்ல என குப்தவதீ உரையாசிரியர் கூறுவர்.

श्रुत्वा ममैतन्माहात्म्यं तथा चोत्पत्तय: शुभा: ।
पराक्रमं च युद्धेषु जायते निर्भय: पुमान् ॥ १४ ॥

(ப - ரை) मे - என்னுடைய, एतत् - இந்த, माहात्म्यम् - மாஹாத்ம்யத்தையும், तथा - அவ்விதமே, शुभा: - மங்கள

கரங்களான, उत्पत्तय: - च - தோற்றங்களையும், युद्धेषु - யுத்தங்களிலுள்ள, पराक्रमं - च - பராக்ரமத்தையும், श्रुत्वा - கேட்டு, पुमान् - புருஷன், निर्भय: - பயமில்லாதவனாக, जायते - ஆகிறான்.

(பொ - ரை) என்னுடைய இந்த மாஹாத்ம்யத்தையும், ப்ரஹ்மாணி முதலிய மங்களகரமான அவதாரங்களையும், யுத்தங்களிலுள்ள எனது பராக்ரமங்களையும் கேட்கின்ற புருஷன் பயமற்றவனாக ஆகிறான். (14)

रिपवः संक्षयं यान्ति कल्याणं चोपपद्यते ।
नन्दते च कुलं पुंसां माहात्म्यं मम शृण्वताम् ॥ १५ ॥

(ப - ரை) मम - என்னுடைய, माहात्म्यम् - மாஹாத்ம்யத்தை, शृण्वताम् - கேட்கின்ற, पुंसाम् - புருஷர்களுடைய, रिपवः - பகைவர்கள், संक्षयम् - நாசத்தை, यान्ति - அடைகின்றனர். कल्याणम् - மங்களமானது, उपपद्यते - च - உண்டாகும். कुलम् - வம்சம், नन्दते - च - விருத்தியடையும்.

(பொ - ரை) என்னுடைய மாஹாத்ம்யத்தை கேட்கின்ற புருஷர்களுடைய பகைவர்கள் நாசமடைகின்றனர். அந்த பக்தர்களுக்கு க்ஷேமமுண்டாவதோடு வம்சமும் அபிவிருத்தியடைகிறது. (15)

शान्तिकर्मणि सर्वत्र तथा दुःस्वप्नदर्शने ।
ग्रहपीडासु चोग्रासु माहात्म्यं शृणुयान्मम ॥ १६ ॥

(ப - ரை) सर्वत्र - எல்லாவிதமான, शान्तिकर्मणि - சாந்திகர்மாவிலும், तथा - அவ்விதமே, दुःस्वप्न-दर्शने - கெட்ட ஸ்வப்நம் காணும்பொழுதும், उग्रासु - கொடியவைகளான, ग्रह-पीडासु -च - நவக்ரஹங்களுடைய, பீடைகளிலும், मम -

என்னுடைய, **माहात्म्यम्** - மாஹாத்ம்யத்தை, **शृणुयात्** - கேட்கவேண்டும்.

(பொ - ரை) எல்லா சாந்திகர்மத்திலும், அவ்விதமே கெட்ட கனவு காணும் பொழுதும், நவக்ரஹங்களுடைய கொடிய பீடைகளிலும் என்னுடைய மாஹாத்ம்யத்தைக் கேட்கவேண்டும். (16)

இங்கு விசேஷ ஸந்தர்பங்களிலும் இந்த தேவீமாஹாத்ம்யத்தினுடைய பாராயணம் முதலியவைகள் வேண்டுமென்பது வலியுறுத்தப்படுகிறது. 'ச்ருணுயாத்' எனச் சொன்னது கொண்டு பாராயணம் செய்ய வேண்டுவதோடு—கேட்கவும் வேண்டும்—என்பதும் அடங்கியுள்ளதென அறியவேண்டும்.

उपसर्गाः शमं यान्ति ग्रहपीडाश्च दारुणाः ।
दुःस्वप्नं च नृभिर्दृष्टं सुस्वप्नमुपजायते ॥ १७ ॥

(ப - ரை) **उपसर्गाः** - உபத்ரவங்களும், **दारुणाः** - கொடியவைகளான, **ग्रहपीडाः** - **च** - நவக்ரஹபீடைகளும், **शमम्** - நாசத்தை, **यान्ति** - அடைகின்றன. **नृभिः** - மனிதர்களால், **दृष्टम्** - காணப்பட்ட, **दुः-स्वप्नम्** - கெட்ட ஸ்வப்னமும், **सुस्वप्नम्** - நல்லஸ்வப்னமாக, **जायते-च** - உண்டாகும்.

(பொ - ரை) உத்பாதங்களும், நவக்ரஹங்களால் ஏற்பட்ட பயங்கரமான பீடைகளும் நாசமடையும். மனிதர்களால் காணப்படுகின்ற கெட்ட ஸ்வப்னமும் நல்லஸ்வப்னமாக ஆகும். (17)

बालग्रहाभिभूतानां बालानां शान्तिकारकम् ।
संघातभेदे च नृणां मैत्रीकरणमुत्तमम् ॥ १८ ॥

(ப - ரை) **बाल-ग्रहाभि-भूतानाम्** - பாலர்களை உபத்ரவம் செய்கின்ற பூதங்களால் ஆக்ரமிக்கப்பட்ட, **बालानाम्** - குழந்தைகளுக்கு, **शान्ति-कारकम्** - சாந்தியை (சமனத்தை) செய்யும். **नृणाम्** - நண்பர்களான மனிதர்களுக்குள், **संघातभेदे** - தமக்குள்ள கலஹத்தில், **उत्तमम्** - உத்தமமான, **मैत्री-करणम्**- நட்பை உண்டுபண்ணும்.

(பொ - ரை) என்னுடைய இந்த மாஹாத்ம்யம் பாலக்ரஹங்களான பூதங்களால் பீடிக்கப் பட்ட பாலர்களுக்குச் சாந்தியை(சமனத்தை) யுண்டுபண்ணும். நண்பர்களுக்குள் பகையேற்பட்டால் அப்பகையை நீக்கி உத்தமமான நட்பைப் பெருகச் செய்யும். (*18*)

दुर्वृत्तानामशेषाणां बलहानिकरं परम् ।
रक्षोभूतपिशाचानां पठनादेव नाशनम् ॥ १९ ॥

(ப - ரை) **पठनात्-एव**-என்னுடைய மாஹாத்ம்யத்தை பாராயணம் செய்வதனாலேயே, **अशेषाणाम्** - ஸமஸ்தமான, **दुर्वृत्तानाम्** - கெட்ட நடத்தை யுள்ளவர்களுக்கு, **परम्** - மிகவும், **बल-हानि-करम्**-பலத்தின் அழிவைச் செய்யும். **रक्षो-भूत-पिशाचानाम्**-ரக்ஷஸ்ஸுகளுடையவும், பூதங்களுடையவும், பிசாசங்களுடையவும், **नाशनम्** - நாசத்தைச் செய்யும்.

(பொ - ரை) என்னுடைய மாஹாத்ம்ய பாராயணமானது, ஸகல துஷ்டர்களுடைய பலத்தை யழிப்பதாகவும், ரக்ஷஸ்ஸுகளுக்கும், பூதங்களுக்கும், பிசாசங்களுக்கும், நாசத்தைச் செய்வதாகவும் இருக்கும். (*19*)

दुर्वृत्तानाम्-துர்வ்ருத்தானும். கெட்டநடத்தையுள்ளவர்கள். இவ்விடத்தில்,

"वादी मूकति रङ्कति क्षितिपतिर्वैश्वानरः शीतति
क्रोधी शान्तति दुर्जनः सुजनति क्षिप्रानुगः खञ्जति ॥"

"வாதீ மூகதி ரங்கதி க்ஷிதிபதிர்வைச்வாநர: சீததி।
க்ரோதீ சாந்ததி துர்ஜந: ஸுஜநதி க்ஷிப்ராநுக: கஞ்ஜதி ॥"

என்ற ச்லோகத்திலுள்ள ப்ரஸித்தமான பலனைக் கொடுக்கவல்லது இந்த தேவீயுபாஸனை என குப்தவதீ உரையாசிரியர் சொல்லுவர்.

सर्वं ममैतन्माहात्म्यं मम संनिधिकारकम् ।
पशुपुष्पार्घधूपैश्च गन्धदीपैस्तथोत्तमैः ॥ २० ॥

विप्राणां भोजनैर्होमैः प्रोक्षणीयैरहर्निशम् ।
अन्यैश्च विविधैर्भोगैः प्रदानैर्वत्सरेण वा ॥ २१ ॥

प्रीतिर्मे क्रियते सास्मिन् सकृदुच्चरिते श्रुते ।
श्रुतं हरति पापानि तथारोग्यं प्रयच्छति ॥ २२ ॥

(ப - ரை) **मम** - என்னுடைய, **एतत्** - இந்த, **माहात्म्यम्**- மாஹாத்ம்யமானது, **सर्वम्** - முழுவதும். **मम** - என்னுடைய, **संनिधि-कारकम्** - ஸாந்நித்யத்தைச் செய்யவல்லது. **पशु-पुष्पार्घ-धूपैः-च** - பசுக்கள், புஷ்பங்கள் பூஜைக்கு அங்கங்களான (தேன், நெய் முதலியவை) தூபங்கள் இவைகளாலும், **तथा**- அவ்விதமே, **उत्तमैः** - சிறந்தவைகளான, **गन्धदीपैः** - வாஸனைகளைக்கொண்ட தீபங்களினால், **अहर्निशम्** - பகலும் இரவும், **विप्राणाम्** - ப்ராஹ்மணர்களுடைய, **भोजनैः** - போஜனங்களினாலும், **होमैः** - ஹோமங்களினாலும், **प्रोक्षणीयैः** - அபிஷேகங்களினாலும், **अन्यैः** - மற்ற, **विविधैः** - பலவகைகளான, **भोगैः-च**- போகங்களினாலும், **प्रदानैः** - தானங்களினாலும், **वत्सरेण** - ஒரு

வருஷத்தைக்கொண்ட, या - யாதொரு, प्रीतिः - ப்ரீதியானது, मे - எனக்கு, क्रियते - செய்யப்படுகிறதோ, सा - அந்த ப்ரீதியானது, अस्मिन् - இந்த மாஹாத்ம்யமானது, सकृत् - ஒரு தடவை, उच्चरिते - வாசிக்கப்பட்டாலும், श्रुते - கேட்கப்பட்டாலும், पापानि - பாபங்களை, हरति - நாசம் செய்கிறது. तथा - அவ்விதமே, श्रुतम् - தேவீமாஹாத்ம்ய ச்ரவணம், आरोग्यम् - ஆரோக்யத்தை, प्रयच्छति - கொடுக்கிறது.

(பொ - ரை) என்னுடைய இந்த மாஹாத்ம்யம் முழுவதும் ஸாந்நித்யத்தை (அனுக்ரஹத்தை) உண்டாக்கும். பசுக்களைக் கொண்டு செய்கிற பலி; புஷ்பங்கள், அர்க்யங்கள், தூபங்கள், உத்தமங்களான கந்த வகைகளும், தீபங்களும், ப்ராஹ்மணஸந்தர்பணங்கள், ஹோமங்கள், அபிஷேகங்கள், வேறான பலவகை போகங்கள், தானங்கள் இவைகளெல்லாம் ஒருவருஷம் முழுவதும் பகலும் இரவும் செய்து வந்தால் எனக்கு யாதொரு ப்ரீதியுண்டாகுமோ, அந்த ப்ரீதியானது என்னுடைய இந்த மாஹாத்ம்யத்தை ஒரு தடவை வாசிக்கவாவது, கேட்கவாவது செய்தால் உண்டாகும். இந்த மாஹாத்ம்ய ச்ரவணமானது எல்லாவிதமான பாபங்களையும் நாசம் செய்யும், ஆரோக்யத்தையும் உண்டுபண்ணும். (20-22)

अर्घम्-அர்கம். இது எட்டு அங்கங்களுடையது, அதாவது—

“ आपः क्षीरकुशाग्राणि दधिचन्दनमक्षताः ।
तिला यवाश्च सिद्धार्थाः अष्टाङ्गोऽर्घः प्रकीर्तिताः ॥

ஜலம், பால், குசாக்ரங்கள் (தர்பைகளுடைய நுனிகள் அதாவது கூர்ச்சம்,) தயிர், சந்தனம் அக்ஷதை, எள்ளு, யவம் இவைகளே எட்டு அங்கங்கள் (உருப்புக்கள்) என்பன.

प्रोक्षणीयैः - ப்ரோக்ஷணீயை : என்றதால் பஞ்சாமிர்தம், பன்னீர் முதலியவைகளைக் கொண்டு அபிஷேகம் செய்விப்பது எனவும் ஆம்.

रक्षां करोति भूतेभ्यो जन्मनां कीर्तनं मम ।
युद्धेषु चरितं यन्मे दुष्टदैत्यनिबर्हणम् ॥ २३ ॥
तस्मिन् श्रुते वैरिकृतं भयं पुंसां न जायते ।
युष्माभिः स्तुतयो याश्च याश्च ब्रह्मर्षिभिः कृताः ॥ २४ ॥
ब्रह्मणा च कृतास्तास्तु प्रयच्छन्ति शुभां मतिम् ।

(ப - ரை) मम - என்னுடைய, जन्मनाम् - தோற்றங்களுடைய, (அவதாரங்கள்) कीर्तनम् - புகழானது, भूतेभ्यः - பூதங்களிலிருந்தும், रक्षाम् - ரக்ஷையை, करोति - செய்கிறது, युद्धेषु - யுத்தங்களில், यत् - யாதொரு, दुष्ट-दैत्य-निबर्हणम् - கொடிய அஸுரர்களை வதம் செய்த, मे - என்னுடைய, चरितम् - சரிதமுண்டோ, तस्मिन् - அந்த சரிதத்தை, श्रुते - கேட்டால், पुंसाम् - புருஷர்களுடைய, वैरि-कृतम् - பகைவர்கள் காரணமாக ஏற்பட்ட, भयम् - பயமானது, न-जायते - உண்டாகாது. युष्माभिः - உங்களால், कृताः - செய்யப்பட்ட, याः - யாதொரு, स्तुतयः-च - ஸ்துதிகளுண்டோ, ब्रह्मर्षिभिः - ப்ரஹ்மர்ஷிகளால், कृताः - செய்யப்பட்ட, याः - யாதொரு, स्तुतयः-च - ஸ்துதிகளுண்டோ, ताः - அவைகளும், ब्रह्मणा-च-ப்ரஹ்மாவினாலும், कृताः-तु - செய்யப்பட்டவைகளும், शुभाम् - நல்ல, मतिम् - புத்தியை, प्रयच्छन्ति - கொடுக்கின்றன.

(பொ - ரை) எனது அவதாரங்களுடைய கீர்த்தனமானது பூதங்களிலிருந்து உண்டாகும் துன்பங்களை

யகற்றி காப்பாற்றும். யுத்தங்களில் கொடிய அஸுரர்களை வதம் செய்ததாகவுள்ள யாதொரு என்னுடைய சரிதமுண்டோ அதைக் கேட்டால், மனிதர்களுக்குப் பகைவர்களிடமிருந்து உண்டாகும் பயம் விலகும். தேவர்களாகிய உங்களாலும், ப்ரஹ்மர்ஷிகளாலும், செய்யப்பட்ட துதிகளும், ப்ரஹ்மாவினல் செய்யப்பட்ட துதிகளும் பாராயணம் செய்யப்பட்டால், நல்ல மங்களகரமான மதியையும் கொடுக்கும். (23, 24)

युष्माभिः स्तुतयः-யுஷ்மாபி: ஸ்துதய: - என்றது கொண்டு தேவீ ஸூக்தத்தையும், நாராயணீ ஸூக்தத்தையும் குறிப்பதாகும். ब्रह्मर्षिभिः - ப்ரஹ்மர்ஷிபி:—என்றதால் ப்ரஹ்மாவினுலும், காணப்பட்டது மஹிஷாந்தகரி ஸூக்தம் எனக்கிடைப்பதாகும். பரஹ்மர்ஷிசப்தம் கொண்டு ஸுமேதஸ் மஹர்ஷியால் செய்யப்பட்ட 'तथापि ममतावर्ते' - ததாபி மமதாவர்தே - என்றவைகள் எனச் சிலர் கூறுகின்றனர். பிரஹ்மாவினுல் காணப்பட்டது 'விச்வேச்வரீம் ஜகத்தாத்ரீம், என்ற ஸூக்தத்தைக்குறிக்கும். லக்ஷ்மீ தந்தரத்தில் இந்த மூன்று ஸூக்தங்களுக்கும் அநாதித்வத்தை அதாவது வேதம் போல-நித்யமாய் நிலேத்திருக்கும் தன்மையை சொல்லியிருப்பதால் இவ்விடத்தில் 'कृताः - க்ருதா:—'என்ற பதத்திற்கு செய்யப்பட்டவை என்ற பொருள் கொள்ளக் கூடாது. அவர்களால் காணப்பட்டவை எனக் கொள்ளவேண்டுமென்று குப்தவதீ உரையாசிரியரும் நாகேசப்பட்டரும் கூறுவர்

शुभां मतिम् - ஶுபாம் மதிம்-என்றதால் மோக்ஷத்திற்குக் காரணமான நல்ல அறிவு எனவும் கொள்ளலாம்.

अरण्ये प्रान्तरे वापि दावाग्निपरिवारितः ॥ २५ ॥

दस्युभिर्वा वृतः शून्ये गृहीतो वापि शत्रुभिः ।

सिंहव्याघ्रानुयातो वा वने वा वनहस्तिभिः ॥ २६ ॥

राज्ञा क्रुद्धेन चाज्ञप्तो वध्यो बन्धगतोऽपि वा ।
आघूर्णितो वा वातेन स्थितः पोते महार्णवे ॥ २७ ॥
पतत्सु चापि शस्त्रेषु संग्रामे भृशदारुणे ।
सर्वाबाधासु घोरासु वेदनाभ्यर्दितोऽपि वा ॥ २८ ॥

स्मरन् ममैतच्चरितं नरो मुच्येत संकटात् ।

(ப - ரை) अरण्ये- காட்டில், दावाग्नि-परिवारितः अपि-वा- காட்டுத்தீயினால், சூழப்பட்டவனாயிருந்தாலும், प्रान्तरे - தூரத்திலுள்ள, வழியிலும், दस्युभिः - திருடர்களாலும், वृतः-वा - சூழப்பபட்டவனாகிலும், शून्ये - ஜனஸஞ்சாரமில்லாதவிடத்தில், शत्रुभिः - பகைவர்களால், गृहीतः-अपि-वा - பீடிக்கப்பட்டவனாயிருந்தாலும், वने - காட்டில், सिंह-व्याघ्रानुयातः-वा - ஸிம்ஹங்களாலும், புலிகளாலும், துரத்தப்பட்டவனாயிருந்தாலும், वनहस्तिभिः - காட்டானைகளால் சூழப்பட்டாலும், क्रुद्धेन - கோபத்தோடுகூடிய, राज्ञा - அரசனால், वध्यः - கொல்லுவதற்கு யோக்கிதையுள்ளவனாக, आज्ञप्तः-च - கட்டளையிடப்பட்டவனாயிருந்தாலும், बन्धः-गतः-अपि-वा - சிறையையடைந்தவனாயினும், -महार्णवे-கடலில், पोते-கப்பலில், स्थितः - இருந்துகொண்டு, वातेन - காற்றினால், अघूर्णितः - वा - கலக்கப்பட்டவனாயிருந்தாலும், भृश-दारुणे - மிகவும், கொடியதான, संग्रामे - யுத்தத்தில், पतत्सु - விழுகின்ற, शस्त्रेषु-अपि-च - சஸ்த்ரங்களையுடையவனாயிருந்தாலும், घोरासु-கொடியவைகளான, सर्वा-बाधासु -ஸமஸ்த ஸங்கடங்களிலும், वेदनाभ्यर्दितः-वा अपि - கொடிய வேதனைகளால் பீடிக்கப்பட்டவனாயிருந்தாலும், मम-என்னுடைய, एतत्-இந்த, चरितम् - சரிதத்தை,

स्मरन् - ஸ்மரணம் செய்தால், **संकटात्** - உபத்ரவங்களிலிருந்து, **मुच्येत** - விடுதலை யடைகிருன்.

(பொ - ரை) காட்டிலே காட்டுத்தீயினுல் சூழப்பட்டவனுயிருந்தாலும், ஜனஸஞ்சாரமில்லாத தூரமான வழியில் திருடர்களால் சூழப்பட்டவனுக இருந்தாலும், பகைவர்களால் பீடிக்கப்பட்டவனுக இருந்தாலும், காட்டில் வாழுகின்ற ஸிம்ஹம், புலி, கரடி முதலிய கொடிய வனவிலங்குகளால் துரத்தப்பட்டவனுயிருந்தாலும், காட்டானைகளால் சூழப்பட்டவனுயிருந்தாலும், சினங்கொண்ட அரசனுல் கொல்லுவதற்கோ, அல்லது சிறையிடுவதற்கோ தூதர்களால் கட்டளையிடப்பட்டவனுயிருந்தாலும், பெருங்கடலின் நடுவே கப்பலில் இருந்து கொண்டு காற்றுல் பலமாகத் தாக்கப்பட்டவனுயிருந்தாலும், யுத்தகளத்திலே பாணங்களால் துளைக்கப்பட்டிருந்தவனுயினும், இன்னும் இவை போன்ற கொடியவைகளாயிருக்கின்ற ஸமஸ்த ஸங்கடங்களுடைய வேதனைகளால் பீடிக்கப்பட்டவனுயிருந்தாலும், என்னுடைய உத்தமமான இந்த சரிதத்தை நினைத்த அளவிலே அந்தத் துன்பங்களிலிருந்தும் அவன் விடுதலை பெறுகிருன். (25, 28)

मम प्रभावात् सिंहाद्या दस्यवो वैरिणस्तथा ॥ २९ ॥

दूरादेव पलायन्ते स्मरतश्चरितं मम ॥ ३० ॥

(ப - ரை) **मम** - என்னுடைய, **प्रभावात्** - மஹிமையினுலே - **सिंहाद्याः** - ஸிம்ஹம் முதலியவைகளும், **दस्यवः** - திருடர்களும், **तथा** - அவ்விதமே, **वैरिणः** - பகைவர்களும், **मम** - என்னுடைய, **चरितम्** - சரிதத்தை, **स्मरतः** - ஸ்மரணம் செய்

கின்றவர்களுக்கு, दूरात् - வெகு தூரத்திலிருக்கும்படி, पाला-यन्ते - ஓடுகின்றனர்.

(பொ - ரை) என்னுடைய இந்த திவ்ய சரிதத்தை அடிக்கடி ஸ்மரணம் (சிந்தை) செய்கின்ற ஜனங்களுக்கு, ஸிம்ஹம் முதலிய துஷ்ட மிருகங்களும், வெகுதூரம் விலகி நிற்கும்; திருடர்களும், பகைவர்களும் என்னுடைய மஹிமையினுல் அவர்களை விட்டு வெகுதூரம் ஓடுகின்றனர். (29, 30)

ऋषिरुवाच ॥ ३१ ॥

इत्युक्त्वा सा भगवती चण्डिका चण्डविक्रमा ॥ ३२ ॥
पश्यतां सर्वदेवानां तत्रैवान्तरधीयत ।

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னுர்—

(ப - ரை) चण्ड-विक्रमा - பயங்கரமான பராக்ரமத்தை யுடையவளும், भवगती - ஷாட்குண்யங்களினுல் நிறைந்தவளுமான, सा - அந்த, चण्डिका - சண்டிகாதேவியானவள், इति - இவ்விதம், उक्त्वा-சொல்லிவிட்டு, पश्यताम् - பார்த்துக் கொண்டிருகின்ற, देवानाम् - தேவர்களுடைய, (முன்னிலையிலே) अन्तरधीयत - மறைந்தாள்.

மஹர்ஷி சொன்னுர்— (31)

(பொ - ரை) பயங்கரபராக்ரமத்தை யுடையவளும், ஷாட்குண்ய ஸம்பத்துக்களையுமுடையவளான; அந்த சண்டிகாதேவியானவள் இவ்விதம் சொல்லிவிட்டு, தேவர்கள் பார்த்துக் கொண்டிருக்கும் பொழுதே அவர்கள் முன்னிலையில் மறைந்துவிட்டாள். (32)

तेऽपि देवा निरातङ्काः स्वाधिकारान् यथा पुरा ॥ ३३ ॥
यज्ञभागभुजः सर्वे चक्रुर्विनिहतारयः ।

(ப - ரை) विनिहतारयः - நாசம் செய்யப்பட்ட பகைவர்களையுடையவர்களும், निरातङ्काः - அகற்றப்பட்ட ஆதங்கத்தை (துக்கம்) யுடையவர்களுமான, ते-அந்த, सर्वे - எல்லா, देवाः-अपि - தேவர்களும், पुरा - முன்பு, यथा - எவ்விதமிருந்ததோ அவ்விதமே, स्वाधिकारान् - தங்களுடைய அதிகாரங்களையும், यज्ञभाग-भुजः - ஹவிர்பாகங்களையும், चक्रुः - அடைந்தனர்.

(பொ - ரை) அந்த ஸகல தேவர்களும், தேவியினுடைய உதவியினுல் பகைவர்களை நாசம் செய்து, துக்கத்தையகற்றி, முன்பு எவ்விதம் இருந்ததோ அவ்விதமே தங்கள் தங்கள் அதிகாரங்களையும், ஹவிர்பாகங்களையும் கைவரப்பெற்றனர். (33)

दैत्याश्च देव्या निहते शुम्भे देवरिपौ युधि ॥ ३४ ॥
जगद्विध्वंसिनि तस्मिन् महोग्रेऽतुलविक्रमे ।
निशुम्भे च महावीर्ये शेषाः पातालमाययुः ॥ ३५ ॥

(ப - ரை) युधि - யுத்தத்தில், देव्या - தேவியினுல், दैत्याः - च - அஸுரர்களும், देव-रिपौ-தேவர்களுக்குச் சத்ருவான, शुम्भे - சும்பன், निहते-सति - கொல்லப்பட்டபொழுதும், अतुल - विक्रमे - இணையில்லா பலத்தையுடையவனும், महोग्रे - மிகவும் கொடியவனும், जगत्-विध्वंसिनि - உலகத்தை நாசம் செய்பவனும், महावीर्ये - மிகுந்த பலமுள்ளவனுமான, निशुम्भे-च - நிசும்பனும் (கொல்லப்பட்ட பொழுது,

शेषाः - மற்ற அஸுரர்கள், पातालम् - பாதாளத்தை, आययुः - அடைந்தனர்.

(பொ-ரை) தேவர்களுக்குப் பகைவனான சும்பன் தேவியால் நாசம் செய்யப் பட்டதும், அவ்விதமே உலகை நாசம் செய்கிறவனும், அளவற்ற பராக்ரமத்தையுடையவனும, மஹாபராக்ரமசாலியும், மிகவும் கொடியவனுமாகிய நிசும்பனும் நாசமடையவே, மற்ற அஸுரர்கள் அனைவரும் பாதாள லோகத்தை யடைந்தனர். (34, 35)

एवं भगवती देवी सा नित्यापि पुनः पुनः ।
संभूय कुरुते भूप जगतः परिपालनम् ॥ ३६ ॥

(ப-ரை) एवम् - இவ்விதம், भगवती - ஆறுகுணங்களும் நிரம்பிய, सा - देवी - அந்த தேவியானவள், नित्या - अपि - நித்யையாயிருந்த பொழுதிலும், पुनः - पुनः - அடிக்கடி, संभूय - உண்டாகி, हे-भूप !-ஓ அரசனே! जगतः - உலகத்தினுடைய, परि-पालनम् - ரக்ஷணையை, कुरुते - செய்கிருள்.

(பொ-ரை) ஓ அரசனே! இவ்விதம் ஆறுகுணங்களும் நிறைந்து விளங்கும் தேவியானவள் நித்யையாயிருந்தாலும், அடிக்கடி அவதாரம் செய்து இவ்வுலகை ரக்ஷித்து வருகிருள்.

तयैतन्मोह्यते विश्वं सैव विश्वं प्रसूयते ।
सायाचिता च विज्ञानं तुष्टा ऋद्धिं प्रयच्छति ॥ ३७ ॥

(ப-ரை) तया - அந்த தேவியால், एतत् -இந்த, विश्वम्- உலகம், मोह्यते - மோகமடைய செய்யப்படுகின்றது, सा-एव- அவளே, विश्वम् - இவ்வுலகை, प्रसूयते - உற்பத்தி செய்

கிருள். सा - அந்த தேவியானவள், अयाचिता - ஒன்றையும் எதிர்பார்க்காது ஆராதித்து வந்தால், विज्ञानं - च - விஜ்ஞானத்தையும், तुष्टा - பலனை உத்தேசித்து ஆராதித்தால் ஸந்தோஷமடைந்தவளாய்க்கொண்டு, ऋद्धिम् - ஸம்பத்தையும், प्र - यच्छति - கொடுக்கிருள். मनुजेश्वर - ஓ அரசனே! तया - அவளால், एतत् - இந்த, सकलम् - முழுவதுமான, ब्रह्माण्डम् - பரஹ்மாண்டமும், व्याप्तम्-வியாபிக்கப்பட்டுள்ளது.

(பொ - ரை) அவளால் இவ்வுலகம் மோஹமடையும்படி செய்யப்படுகிறது. அவளே இவ்வுலகத்தை தோற்றுவிக்கிருள். ஓ அரசனே! (அந்த தேவியை யாசித்தால் தெளிவான ஞானத்தையும், அவள் ஸந்தோஷமடைந்தால் ஸம்பத்தையும் கொடுக்கிருள்.) அந்த தேவியினுலே இவ்வுலகம் படைக்கப்படுகிறது, நிஷ்காமனையாக ஆராதித்து வந்தால் அவள் மோக்ஷத்தைக் கொடுக்கவல்ல ஞானத்தையும், காமனோடு ஆராதித்தால் ஐச்வர்யத்தையும் கொடுக்கிருள். (37)

व्याप्तं तयैतत्सकलं ब्रह्माण्डं मनुजेश्वर ।
महाकाल्या महाकाले महामारीस्वरूपया ॥ ३८ ॥

(ப - ரை) मनुजेश्वर - ஓ அரசனே! महाकाले - மஹாப்ரளய காலத்தில், महाकाल्या - மஹாகாளி வடிவத்தோடும், महामारी-स्वरूपया - மஹாமாரீவடிவத்தோடும், இருப்பவள். तया - அந்த தேவியினுல், एतत् - இந்த सकलं - ஸமஸ்தமான, ब्रह्माण्डं - ப்ரஹ்மாண்டம் முழுவதும், व्याप्तं - வ்யாபிக்கப் பட்டிருக்கிறது.

(பொ - ரை) பிறப்பற்றவளாய் நிலைத்திருப்பவளாயினும் அந்த தேவியே ஸகல ஜீவராசிகளுடைய ஊழிக்

காலத்திலே தமோகுணவடிவாம் மஹாகாளீ எனவும், மஹாமாரீ எனவும் சொல்லப்படுகிருள். (38)

महाकाली - மஹாகாளீ - மஹத்தான காலவடிவம். அதாவது மஹாகாலாக்நிருத்திரனுடைய மனைவியாவள். महामारी-स्वरूपा - மஹாமாரீ-ஸ்வரூபா - மஹாப்ரளய காலத்திலுண்டாகும் அக்னிஜ்வாலையின் வடிவத்தோடு கூடியவள் என்பதும் ஆம். மேலும்;

" मृत्युजिह्वा महामारी जगत्संहारकारिणी ।
महारात्रिर्महानिद्रा महाकाल्यतितामसी ।
सैव कालानज्वाला सैव विद्या तमःप्रसूः ।
सैव मोहप्रसूर्मृत्युः सैव सर्वाधिदेवता ॥"

மஹாமாரீ ம்ருத்யுவின் நாக்கின் வடிவாயிருந்து கொண்டு உலக நாசத்தைச் செய்பவளும், மஹாராத்ரீ, மஹாநித்ரா, மஹாகாளீ, தாமஸீ எனவும் அவளே கல்பாந்த காலத்தில் தோன்றும் அக்நி ஜ்வாலையின் வடிவாகவும், அவளே வித்தையின் வடிவாகவும், தாமஸத்தை(அவித்தை) உண்டுபண்ணுபவளாகவும் அவளே மோஹத்தை உண்டுபண்ணும் ம்ருத்யுவின்வடிவாகவும், அவளே எல்லாதேவதைகளுக்கும் தலைவியாகவுமிருப்பவள் என்பதாம்.

सैव काले महामारी सैव सृष्टिर्भवत्यजा ।
स्थितिं करोति भूतानां सैव काले सनातनी ॥ ३९ ॥

(ப - ரை) सा-एव-அவளே, काले - ப்ரளயகாலத்தில், महामारी - மஹாமாரியாகவும், सा - एव - அவளே, अजा - பிறப்பற்றவளாயினும், सृष्टिः - ஸ்ருஷ்டியாகவும், भवति - ஆகிருள், काले - ஸ்திதி காலத்தில் सा-एव - அவளே, सनातनी - ஸநாதனியாகவும், भूतानाम् - பிராணிகளுடைய, स्थितिम् - ஸ்திதியை, करोति - செய்கிருள்.

(பொ - ரை) அவ்விதமே அந்த தேவீ ப்ரளயகாலத்தில் மஹாமாரீ வடிவத்தோடு உலகை ஸம்ஹாரம் செய்கிருள். அவ்விதமே அந்த தேவியானவள் ஜீவராசிகளுடைய உத்பத்திகாலத்தில் ஸத்வகுணத்தையே முக்கியமாகக் கொண்டு படைப்புக்குக் காரணமாயிருப்பவள். அவ்விதமே அந்த தேவியானவள் ஜீவராசிகளுடைய பாலனகாலத்தில் ரஜோகுணத்தையடைந்து ரக்ஷிக்கின்ருள் என்பதுவும் தாத்பர்யம். (38, 39)

भवकाले नृणां सैव लक्ष्मीर्वृद्धिप्रदा गृहे ।
सैवाभावे तथालक्ष्मीर्विनाशायोपजायते ॥ ४० ॥

(ப - ரை) नृणाम् - மனிதர்களுடைய, गृहे - வீட்டில், भव-काले-ஸம்பத்காலத்தில், सा-एव - அவளே, वृद्धि-प्रदा - விருத்தியைக் கொடுக்கிற, लक्ष्मी: - லக்ஷ்மியாயுமிருக்கிருள், तथा - அவ்விதமே, अभावे - ஆபத்காலத்தில், सा-एव - அவளே, अलक्ष्मी: - அலக்ஷ்மீயாகவும், विनाशाय - நாசத்தின் பொருட்டு, उपजायते - உண்டாகிருள்.

(பொ - ரை) மனிதர்களுடைய வீட்டில் ஸம்பத்காலத்தில் அந்த தேவியே அபிவிருத்திக்குக் காரணமான லக்ஷ்மியாகவும், அவ்விதமே ஆபத்காலத்தில் அந்த தேவியே விநாசத்தின் பொருட்டு அலக்ஷ்மியாகவும் இருக்கிருள். (40)

स्तुता संपूजिता पुष्पैर्धूपगन्धादिभिस्तथा ।
ददाति वित्तं पुत्रांश्च मतिं धर्मे गतिं शुभाम् ॥ ४१ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये
देव्याश्चरितमाहात्म्यं नाम द्वादशोऽध्यायः ॥ १२ ॥

(ப - ரை) (सा - அந்த தேவீ) स्तुता - ஸ்துதிக்கப்படும் பொழுது, तथा - அவ்விதமே, पुष्पै: - புஷ்பங்களாலும், धूपगन्धादिभि: - தூபம் சந்தனம் முதலியவைகளைக் கொண்டு, संपूजिता - நன்கு முறைப்படி பூஜிக்கப்படும்பொழுது, वित्तम् - ஐச்வர்யத்தையும், पुत्रान् - च - புத்ரர்களையும், धर्मे - தர்மத்திலே, (தோய்ந்த) मतिम्-புத்தியையும், शुभाम् - நல்ல தான, गतिम् - கதியை (மார்கத்தை) யும், ददाति - கொடுக்கிருள்.

(பொ - ரை) அந்த தேவியை ஸ்துதி செய்து, புஷ்பங்களாலும், தூபங்களாலும், தீபங்களாலும், சந்தனங்களாலும் நன்கு ஆராதித்து வந்தால், ஸம்பத்தையும், புத்திரர்களையும், தர்மத்திலே தோய்ந்த புத்தியையும், மோக்ஷத்தையும் கொடுக்கிருள். (41)

முன் ச்லோகத்தில் சொன்னது போல தேவியினுடைய ஸாந்நித்யம் (அருள்) இல்லாத காலத்திலும் அந்த ஸாந்நித்யம் உண்டாகும் வழியை இந்த ச்லோகம் வலியுறுத்தும்.

இவ்விதம் ஸ்ரீமார்க்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மன்வந்தரத்தில் தேவீமாஹாத்ம்யத்தில் தேவீசரித மாஹாத்ம்யமென்ற பன்னிரண்டாவது அத்தியாயம் இவண் முற்றும்.

अथ त्रयोदशोऽध्यायः

ऋषिरुवाच ॥ १ ॥

एतत्ते कथितं भूप देवीमाहात्म्यमुत्तमम् ।
एवं प्रभावा सा देवी ययेदं धार्यते जगत् ॥ २ ॥

ऋषिः - மஹர்ஷி - उवाच - சொன்னார்.

(ப - ரை) हे-भूप - ஓ அரசனே! एतत् - இந்த, उत्तमम् - சிறந்த, देवी-माहात्म्यम् - தேவினுடைய மாஹாத்ம்யத்தை, ते- உனக்கு, कथितम् - சொல்லப்பட்டது. यया - யாதொருதேவி யினால், इदम् - இந்த, जगत् - உலகமானது, धार्यते - தரிக்கப் படுகிறதோ,! सा - அந்த, देवी - தேவியானவள், एवम् - இப்பெருமை வாய்ந்த, प्रभावा - மஹிமையையுடையவள். மஹர்ஷி சொன்னார். (1)

(பொ - ரை) ஓ அரசனே! எந்த தேவியானவள் இங்கு தோற்றமளிக்கும் ஸர்வப்ரபஞ்சத்தையும் தாங்கிக் கொண்டிருக்கிறளோ, அந்த தேவியானவள் இவ்விதச் சிறப்பு வாய்ந்த மஹிமையோடு விளங்குகின்றவள். எனவே இந்த உத்தமமான தேவீ மாஹாத்ம்யத்தை நான் உனக்குச் சொன்னேன். (2)

विद्या तथैव क्रियते भगवद्विष्णुमायया ।
तया त्वमेष वैश्यश्च तथैवान्ये विवेकिनः ।
मोह्यन्ते मोहिताश्चैव मोहमेष्यन्ति चापरे ॥ ३ ॥

तामुपैहि महाराज शरणं परमेश्वरीम् ॥ ४ ॥

आराधिता सैव नृणां भोगस्वर्गापवर्गदा ॥ ५ ॥

(ப - ரை) भगवद्-विष्णु-मायया - ஆறுவித ஐச்வர்யங்களும் நிறைந்த விஷ்ணுவினுடைய மாயையினுல், विद्या - ஞானமும், तथा-एव - அவ்விதமே, क्रियते - உண்டாக்கப்படுகிறது, तया - அந்த தேவியினுல், त्वम् - நீயும், एषः - இந்த, वैश्यः-च - வைச்யனும், तथा-एव - அவ்விதமே, विवेकिनः - அறிவுள்ளவர்களான, अन्ये - மற்றவர்களும், मोह्यन्ते - இப்பொழுது மோஹத்தையடையச் செய்தனர். मोहितः-च-एव- முன்பு மோஹமடைந்தனர். अपरे - வேறு சிலர், मोहम् - மோஹத்தை, एष्यन्ति-च - அடையவும் போகின்றனர். महाराज - ஓ அரசனே, ताम् - அந்த, परमेश्वरीम् - பரமேச்வரியை, शरणम् - சரணத்தை, उप-एहि - அடையுங்கள். आराधिता- ஆராதிக்கப்பட்ட, सा-एव - அந்த தேவியே, नृणाम् - மனிதர்களுக்கு, भोग-स्वर्गापवर्गदा - இம்மை, மறுமை, விடுதலை இம்மூன்றையும் கொடுப்பவள்.

(பொ - ரை) ஆறுவித ஐச்வர்யங்களும் நிறைந்த ஸ்ரீ மஹாவிஷ்ணுவினுடைய அந்த மாயையானவள் ஞானத்தைக் கொடுப்பவள். அந்த தேவியேதான் உன்னையும், இந்த வைச்யனையும் விவேகிகளான மற்றவர்களையும் இப்பொழுது மோஹிக்கவும், முன்பு மோஹமடையவும் செய்தாள். மற்றவர்களையும் மோஹமடையச் செய்யப் போகிருள். ஓ அரசனே! நீங்கள் அந்த பரமேச்வரியை சரணமடைந்தால் அந்த தேவியே இவ்வுலக ஸுகங்களையும், அவ்வுலக (ஸ்வர்க) ஸுகங்களையும், மோக்ஷத்தையும் கொடுப்பவளாகவும் இருப்பாள். (3, 5)

मार्कण्डेय उवाच ॥ ६ ॥

इति तस्य वचः श्रुत्वा सुरथः स नराधिपः ।
प्रणिपत्य महाभागं तमृषिं संशितव्रतम् ॥ ७ ॥
निर्विण्णोऽतिममत्वेन राज्यापहरणेन च ।
जगाम सद्यस्तपसे स च वैश्यो महामुने ॥ ८ ॥
संदर्शनार्थमम्बाया नदीपुलिनमास्थितः ।

मार्कण्डेयः - மார்கண்டேயர், उवाच - சொன்னார்.

(ப - ரை) इति - இவ்விதம், तस्य - அந்த ஸுமேதஸ மஹர்ஷியினுடைய, वचः - வார்த்தையை, श्रुत्वा - கேட்டு, सुरथः - ஸுரதன் என்ற, नराधिपः - அரசன், महा-भागम् - மஹாபாக்யசாலியும், संशित-व्रतम् - தவத்தில் முனிந்தவரு மான, तम्-அந்த, ऋषिम्-மஹர்ஷியை, प्रणिपत्य-நமஸ்கரித்து, ममत्वेन-மமதையோடு, राज्यापहरणेन-च-ராஜ்யத்தைக் கவர்ந்து கொண்ட காரணத்தாலும், अति-மிகவும், निर्विण्णः-துக்கத்தை யடைந்தவனாய்க் கொண்டு, सद्यः - உடனே, तपसे - தவத் தின் பொருட்டு, जगाम - சென்றான். सः - அந்த, वैश्यः-च - வைச்யனும், (சென்றான்). महा-मुने - ஓ மஹர்ஷியே! अम्बायाः - தேவியினுடைய, संदर्शनार्थम् - தர்சனத்தின் பொ ருட்டு, नदी-पुलिनम् - நதிக்கரையை, आस्थितः - அடைந்தான்.

மார்க்கண்டேயர் சொன்னார்— (6)

(பொ - ரை) இவ்விதம் அந்த ஸுமேதஸ் என்ற மஹர்ஷியினுடைய வார்த்தையைக் கேட்ட அந்த ஸுரத னென்ற அரசனும், மஹாபாக்யசாலியும், தவத்திலே முனிந்தவருமாகிய அந்த மஹர்ஷியை நமஸ்காரம் செய்து,

மமதைகொண்டு, பகைவர்கள் ராஜ்யத்தைக் கவர்ந்த காரணத்தால் மிகவும் துக்கத்தை யடைந்தவனுய்க் கொண்டு உடனே தவத்திற்காகச் சென்ருன். ஓ மஹா முனே! அந்த வைச்யனும் அவ்விதமே தவத்திற்குச் சென்ருன். அவ்விருவரும், ஸ்ரீதேவியை நேரில் காணுவதற்காக நதி தீரத்தையும் அடைந்தனர். (7, 8)

संदर्शनार्थम् अम्बायाः - ஸம்தர்சனர்த்தம் அம்பாயா: —தூரீயையாகிய தேவியை ப்ரத்யக்ஷமாகக் காண்பதற்காக என்பது ஸாரம்.

स च वैश्यस्तपस्तेपे देवीसूक्तं परं जपन् ॥ ९ ॥

तौ तस्मिन् पुलिने देव्याः कृत्वा मूर्तिं महीमयीम् ॥ १० ॥

अर्हणां चक्रतुस्तस्याः पुष्पधूपाग्नितर्पणैः ।

(ப - ரை) सः-च - அந்த ஸுரதனும், वैश्यः - வைச்யனும், परम्-சிறந்ததான, देवी-सूक्तम् - ஸ்ரீதேவீ ஸூக்தத்தை, जपन् - ஜபம் செய்து கொண்டு, तपः - தவத்தை, तेपे - செய்தான். तस्मिन् - அந்த, पुलिने - மணற்திட்டில், तौ - அவர்களிருவம், महीमयीम् - மண்ணைக் கொண்டு, देव्याः - தேவியினுடைய, मूर्तिम् - வடிவத்தை, कृत्वा - செய்து, तस्याः- அந்த தேவிக்கு, पुष्प-धूपाग्नि-तर्पणैः - புஷ்பங்களாலும்: தூபங்களாலும், ஹோமங்களாலும், தர்பணங்களாலும், अर्हणाम् - பூஜையை, चक्रतुः - செய்தனர்.

(பொ - ரை) அந்த ஸுரதனும், வைச்யனும், பரம சிரேஷ்டமான ஸ்ரீதேவீஸூக்தத்தை ஜபம் செய்து கொண்டு, அந்த மணற்திட்டில் அவர்களிருவரும் மணல்களைக் கொண்டு ஸ்ரீதேவியினுடைய திவ்யமங்களவிக்ர

ஹத்தை நிர்மாணம் செய்து, அந்த விக்ரஹத்தை புஷ்பங்களைக் கொண்டும், தூபங்களைக் கொண்டும், ஹோமங்களைக் கொண்டும், தர்ப்பணங்களைக் கொண்டும் வழிபட்டு வந்தனர். (9, 10)

தேவீஸூக்தமென்பது ரிக்வேதத்தில் பிரஸித்தமாயிருக்கிற ஸூக்தமெனச் சிலர் சொல்லுகின்றனர். உண்மையில் தேவீஸூக்த மென்பது ஐந்தாவது அத்யாயத்திலே "नमो देव्यै महादेव्यै" "நமோ தேவ்யை மஹாதேவ்யை" என ஆரம்பிக்கும்ஸ்துதிக்கே தேவீஸூக்தமென்பதாம். ஸர்வதேவதைகளின் வடிவாகவும், கூடஸ்தையாகவும் இருக்கிற மஹாலக்ஷ்மியைப் பற்றியுள்ள அந்த ஸ்தோத்ரம், சும்பன் முதலிய அஸுரர்களுடைய நாசத்தை விரும்பிய தேவர்களால் காணப்பட்டதாகுமன்றோ! அது எல்லாத்துயரங்களையும் நாசம் செய்து, குறைவிலா ஸம்பத்துக்களையும் கொடுக்கவல்லதுமாம். மேலும் ஸுரதவைச்யர்களால் தங்கள் துயரம் நீங்கி மறுபடியும் ஸம்பத்துக்களை அடைவதற்காக ஜபம் செய்யப்பட்டதுமாம். "நமோதேவ்யை மஹாதேவ்யை" என ஆரம்பத்தில் தேவீபதம் ப்ரயோகித்திருப்பதால் இதுவேதான் தேவீஸூக்தம் என்பதும் உசிதமாகும். லக்ஷ்மீ தந்த்ரமும் இதையேதான் வலியுறுத்தும்.

" प्राणाध:संस्थितं बीजं व्योमबीजं हुताशन: ।
त्रिकोणबिन्दुनादाढ्यं प्रणवादिनमोऽन्तकम् ।
अम्बिकासिद्धिदं ज्ञेयं देवीसूक्तं परं स्मृतम् ।

என்பதும் ப்ரமாணமாகும் என நாகேசபட்டர் கூறுவர்.

निराहारौ यताहारौ तन्मनस्कौ समाहितौ ॥ ११ ॥
ददतुस्तौ बलिं चैव निजगात्रासृगुक्षितम् ।

(ப - ரை) तौ - அவ்விருவரும், यताहारौ - அல்ப ஆஹாரத்தையுடையவர்களாயும், निराहारौ - ஆஹாரத்தை

விட்டவர்களாகவும், तन्मनस्कौ - அந்தத் தேவியையே மன தில் உருவகப்படுத்தியவர்களாயும், समाहितौ - பொறிகளை யடக்கியவர்களாயும், निज-गात्रासृगुक्षितम् - தங்களுடைய சரீ ரங்களில் சொரியும் ரத்தத்தால் நனைத்த, बलिम् - பலியை, ददतुः - एव-च - கொடுக்கவும் செய்தனர்.

(பொ - ரை) அவ்விருவரும் ஆஹாரத்தைக் கொஞ் சம் கொஞ்சமாகக் குறைத்துக் கொண்டு, முடிவில் உண வையும் மறந்து, ஸ்ரீதேவியையே ஒருமுனைப்படுத்திய மனதோடு, பொறிகளை யடக்கியவர்களாக, தங்களுடைய சரீரங்களிலுள்ள ரத்தத்தை ப்ரோக்ஷணம் செய்து, பலி தானமும் கொடுத்தனர். (11)

அந்த ஸுரதனும், வைச்யனும் ரக்தமயமான பலியைக் கொடுத்தனர் எனச் சொல்லபட்டது. இது அரசனை க்ஷத்ரிய னுக்குரிய ராஜஸ பூஜையானதால் உசிதமேயாகும். மோக்ஷத்தை விரும்பிய வைச்யனுக்கோவெனில் ப்ராஹ்மணன் ஸாத்விகபூஜை யைக் கொண்டு ராஜஸ பலத்தையடைவதுபோல, இந்த வைச்ய னும் ராஜஸபூஜைகொண்டு ஸாத்விகபலத்தை யடைவதும் விரோதமாகாது என நாகேசப்பட்டர் கூறுவர்.

एवं समाराधयतोस्त्रिभिर्वर्षैर्यतात्मनोः ॥ १२ ॥

परितुष्टा जगद्धात्री प्रत्यक्षं प्राह चण्डिका ॥ १३ ॥

(ப -ரை) त्रिभिः - மூன்று, वर्षैः - வர்ஷங்கள் கொண்டு, एवं - இவ்விதம், समाराधयतोः - நன்கு ஆராதிக்கின்றவர்க ளும், यतात्मनोः - ஜயிக்கப்பட்ட சித்தத்தை யுடையவர் களுமான அவ்விருவர்களுக்கும், जगद्धात्री - உலகைத்தரிக் கின்ற, चण्डिका - சண்டிகாதேவி, परितुष्टा - மிகவும் ஸந்தோஷ மடைந்தவளாக, प्रत्यक्षम् - நேரில் வந்து, प्राह - சொன்னாள்.

(பொ - ரை) இவ்விதம் சித்தத்தை ஜயித்தவர்களும், விதிவழியே ஆராதிப்பவர்களுமான அவ்விருவாகளுக்கும், உலகைத் தரித்துக் கொண்டிருக்கிற சண்டிகாதேவீ மிகுந்த ஸந்தோஷத்துடன் நேரில் ப்ரத்யக்ஷமாகிச் சொன்னுள். (*12, 13*)

देव्युवाच ॥ १४ ॥

यत्प्रार्थ्यते त्वया भूप त्वया च कुलनन्दन ।
मत्तस्तत्प्राप्यतां सर्वं परितुष्टा ददामि तत् ॥ १५ ॥

देवी - தேவீ, उवाच - சொன்னுள்—

(ப - ரை) हे भूप - ஓ அரசனே! त्वया - உன்னுலும், कुल-नन्दन - ஓ வைச்யனே! त्वया-च - உன்னுலும், यत् - யாதொன்று, प्रार्थ्यते - வேண்டப்பட்டதோ, तत् - அந்த, सर्वम् - எல்லாவற்றையும், मत्तः - என்னிடமிருந்து, प्राप्यताम् - பெற்றுக் கொள்ளுங்கள். परितुष्टा-ஸந்தோஷத்தையடைந்த (நான்), वाम् - உங்களுக்கு, ददामि - கொடுக்கிறேன்.

தேவீ சொன்னுள்— (*14*)

(பொ - ரை) ஓ அரசனே! ஓ வைச்யனே! நீங்கள் இருவரும் எதை விரும்புகிறீர்களோ, அதையெல்லாம் என்னிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள். நான் உங்களுடைய தவத்தைக் கண்டு உள்ளம் பூரித்தவளாய் உங்கள் இருவருக்கும் தானம் செய்கிறேன். (*15*)

मार्कण्डेय उवाच ॥ १६ ॥

ततो वव्रे नृपो राज्यमविभ्रंश्यन्यजन्मनि ।
अत्रैव च निजं राज्यं हतशत्रुबलं बलात् ॥ १७ ॥

मार्कण्डेय: - மார்க்கண்டேயர், उवाच - சொன்னுர்—

(ப - ரை) ततः - பிறகு, नृपः - அரசனும், अन्य जन्मनि - வேறு (மற்றொரு) ஜன்மத்திலும், अविभ्रंशि - கையைவிட்டு நழுவாத, राज्यम् - ராஜ்யமும், अत्र-अपि - இப்பிறவியிலும், बलात् - பலம் கொண்டு, हत-शत्रु-बलम् - நாசம் செய்யப்பட்ட சத்துரு பலத்தோடு கூடிய, निजम् - தன்னுடைய, राज्यम् - ராஜ்யத்தையும், वव्रे - வரித்தான்.

மார்க்கண்டேயர் சொன்னுர்— (16)

(பொ - ரை) பிறகு அந்த ஸுரத மஹாராஜனும், வரப்போகிற ஜன்மத்திலும், தனது கையை விட்டு நழுவாத ராஜ்யத்தையும், இந்த ஜன்மத்தில் தன்னுடைய பலத்தின் காரணமாக நாசம் செய்யப்பட்ட பகைவர்களுடைய பலத்தோடு கூடியதுமான தன்னுடைய ராஜ்யத்தையும் வரித்தான் (யாசித்தான்) (17)

सोऽपि वैश्यस्ततो ज्ञानं वव्रे निर्विण्णमानसः ।
ममेत्यहमिति प्राज्ञः सङ्गविच्युतिकारकम् ॥ १८ ॥

(ப - ரை) ततः - பிறகு, निर्विण्ण-मानसः - விரக்தியையடைந்த சித்தத்தையுடையவனும், प्राज्ञः - சிறந்த அறிவுள்ளவனுமான, सः - அந்த, वैश्यः-अपि - வைச்யனும், मम-इति - என்னுடையது என்றும், अहम् - इति - நான் என்றதுமான, सङ्ग-विच्युति-कारणम् - ஸம்பந்தத்தினுடைய நாசத்திற்குக் காரணமான, ज्ञानम् - ஞானத்தை, वव्रे - வரித்தான்.

(பொ - ரை) பிறகு விரக்தியையடைந்த சித்தத்தையுடையவனும், சிறந்த மேதையுள்ளவனுமான அந்த வைச்யனும், என்னுடையதென்றும், நானென்றுமுள்ள

ஸம்பந்தங்களை நாசம் செய்கின்ற ஞானத்தை ஸ்ரீதேவியி னிடமிருந்து யாசித்தான். (18)

प्राज्ञः - ப்ராஜ்ஞ:—மோக்ஷத்தில் விருப்பம் உண்டானது கொண்டு மிகவும் புத்திசாலி என்பது தாத்பர்யம்.

देव्युवाच ॥ १९ ॥

स्वल्पैरहोभिर्नृपते स्वं राज्यं प्राप्स्यते भवान् ॥ २० ॥
हत्वा रिपूनस्खलितं तव तत्र भविष्यति ॥ २१ ॥

देवी - தேவி, उवाच - சொன்னாள்—

(ப - ரை) (हे भूपते - ஓ அரசனே !), भवान् - நீ, स्वल्पैः - குறைந்தவைகளான, अहोभिः - நாட்களினால், स्वम् - தன்ன தான, राज्यम् - ராஜ்யத்தை, प्राप्स्यते - அடையப் போகிறாய். रिपून्-பகைவர்களையும், हत्वा - நாசம் செய்து, तव - உனக்கு, तत्र - அந்த ராஜ்யத்தில், अस्खलितम् - நழுவாத்தன்மையும், भविष्यति - உண்டாகப் போகிறது.

தேவி சொன்னாள்— (19)

(பொ - ரை) ஓ அரசனே ! நீ இன்னும் கொஞ்ச நாளில் உனது ராஜ்யத்தையடையப் போகிறாய். அவ் விடத்திலுள்ள பகைவர்களையும் நாசம் செய்து அந்த ராஜ்யமும் உனக்கு நிலையாயிருக்கப்போகிறது. (20, 21)

मृतश्च भूयः संप्राप्य जन्म देवाद्विवस्वतः ॥ २२ ॥
सावर्णिको नाम मनुर्भवान् भुवि भविष्यति ॥ २३ ॥

(ப - ரை) भवान् - நீ, मृतः - च - மரித்தாலும், भूयः - மறுபடியும், विवस्वतः-देवात् - ஸூர்ய தேவனிடமிருந்து, जन्म - பிறவியை, संप्राप्य - அடைந்து, भुवि - பூமியில், सावर्णिकः -

नाम - ஸாவர்ணி என்ற பெயருள்ள, मनुः மனுவாக, भविष्यति- ஆகப்போகிருய்.

(பொ - ரை) நீ இந்த சரீரத்தை நழுவவிட்டாலும், மறுபடியும் பூமியில் ஸூர்ய தேவனிடமிருந்து ஜநித்து, ஸாவர்ணி என்ற பெயரோடு கூடிய மனுவாக வரப்போகிருய். (22, 23)

वैश्यवर्य त्वया यश्च वरोऽस्मत्तोऽभिवाञ्छितः ॥ २४ ॥

तं प्रयच्छामि संसिद्धयै तव ज्ञानं भविष्यति ॥ २५ ॥

(ப-ரை) वैश्य-वर्य ! - ஓ ! வைச்ய சிரேஷ்டனே, अस्मत्तः- என்னிடமிருந்து, यः - யாதொரு, वरः-च - வரமானது, अभि-वाञ्छितः விரும்பப்பட்டதோ, तम् - அந்த வரத்தை, संसिद्धौ - மோக்ஷ ஸித்தியின் பொருட்டு, प्रयच्छामि - கொடுக்கிறேன். तव - உனக்கு, ज्ञानम् - ப்ரஹ்ம ஞானம், भविष्यति - உண்டாகப்போகிறது.

(பொ-ரை) வைச்யருக்குள் உத்தமனை ஓ ஸமாதே! நீ என்னிடமிருந்து யாதொரு வரத்தை விரும்பினயோ, அந்த வரத்தை உனக்கு மோக்ஷ ஸித்தியின் பொருட்டு நான் கொடுக்கிறேன். அதனல் ப்ரஹ்ம ஞானமும் ஸித்திக்கலாகும். (24, 25)

अस्मत्तः - அஸ்மத்த:—என்ற பன்மையானது தேவி எங்கும் வியாபித்திருப்பவள் என்பதைக் குறிப்பதாகும்.

मार्कण्डेय उवाच ॥ २६ ॥

इति दत्त्वा तयोर्देवी यथाभिलषितं वरम् ॥ २७ ॥

बभूवान्तर्हिता सद्यो भक्त्या ताभ्यामभिष्टुता ।

मार्कण्डेयः - மார்க்கண்டேயர், उवाच - சொன்னர்—

(ப - ரை) इति - என்று, देवी - தேவி, तयोः - அவர்களுக்கு, यथाभि-लषितम् - இஷ்டப்பட்டதான, वरम् - வரத்தை, दत्वा - கொடுத்து, ताभ्याम् - அவர்களால், भक्त्या - பக்தியோடு, अभिष्टुता - நன்கு துதிக்கப்பெற்றவளாக, सद्यः உடனே, अन्तर्हिता - மறைந்தவளாக, बभूव-ஆகப்போகிருள்.

மார்க்கண்டேயர் சொன்னர்— (26)

(பொ - ரை) இவ்விதம் சண்டிகா தேவியானவள் அவ்விருவருக்கும், அவர்கள் விரும்பிய வரத்தைக் கொடுத்து, அவர்களால் நன்கு ஸ்துதி செய்யப்பெற்றவளாக அவ்விடத்திலிருந்து உடனே மறைந்தாள். (27)

एवं देव्या वरं लब्ध्वा सुरथः क्षत्रियर्षभः ॥ २८ ॥

सूर्याज्जन्म समासाद्य सावर्णिर्भविता मनुः ॥ २९ ॥

(ப - ரை) एवम् - இவ்விதம், क्षत्रियर्षभः - க்ஷத்திரியச்ரேஷ்டனை, सुरथः-ஸுரதன், देव्याः-தேவியினிடமிருந்து, वरम् - வரத்தை, लब्ध्वा - பெற்று, सूर्यात्-ஸூர்யனிடமிருந்து, जन्म - பிறப்பை, समासाद्य - அடைந்து, सावर्णिः - ஸாவர்ணி என்ற, मनुः - மனுவாக, भविता - ஆகப்போகிருன்.

(பொ-ரை) இவ்விதம் க்ஷத்ரியர்களில் உத்தமனுகிய அந்த ஸுரதன், தேவியினுடைய அனுக்ரஹத்தைப் பெற்றுக் கொண்டு, ஸூர்யனிடமிருந்து பிறவியையடைந்து, ஸாவர்ணி என்ற மனுவாக வரப்போகிருன்.

सावर्णिर्भविता मनुः ॐ ॥

इति श्रीमार्कण्डेयपुराणे सावर्णिके मन्वन्तरे देवीमाहात्म्ये सुरथवैश्ययोर्वरप्रदानं नाम त्रयोदशोऽध्यायः ॥ १३ ॥

(ப - ரை) **सावर्णिः** - ஸாவர்ணி என்ற, **मनुः** - மனு வாக, **भविता** - வரப்போகிருன்.

இவ்விடத்தில் **सावर्णिर्भविता मनुः** - ஸாவர்ணிர்பவிதா மநு:— என்ற புநருக்தியானது காத்யாயநீ தந்த்ரத்தை அனுஸரித்து ஆசாரம் காரணமாகவும் சொல்லப்பட்டதாகும். மேலும், 'மார்க்கண்டேய' என ஆரம்பித்து 'மநு:' என்று முடிவடைந் திருக்கிறது. மகாரத்தை முதலாவதாகவும் நுகாரத்தைக் கடைசி யாகவும் கொண்டிருப்பதால் **மநு** என்ற சப்தத்திற்கு மந்த்ரம் என்ற பொருள் உள்ளதினுலும் இந்த **ஸப்தசதீ மஹாமாலா** மந் த்ரமுமாகும். இதன் பெருமையைக் குறித்து **லக்ஷ்மீதந்த்ரம்** பின்வருமாறு கூறும்.

सम्पक् हृदिस्थिता सेयं जन्मकर्मावलिस्तुतिः ।
एतां द्विजमुखाज्ज्ञात्वा अधीपानो नरः सदा ॥
विध्यूयनिखिलां मायां सम्यग्ज्ञानं समश्नुते ।
सर्वसंपद आप्नोति धुनोति सकलापदः ॥

இவைகளுடைய பொருள் விளக்கங்களை முகவுரையில் காண்க. எனவே இந்த **மஹாமாலாமந்த்ரம்** மக்களுக்கு எல்லாவி தமான ஸித்திகளையும் கொடுக்கும் திறமைவாய்ததாகும் என்பது விளக்கப்பட்டது. சுபம்.

ஸாவர்ணிகள்—ஸூர்யஸாவர்ணி, தக்ஷஸாவர்ணி, ப்ரஹ்ம ஸாவர்ணி, தர்மஸவர்ணி ருத்ரஸாவர்ணி, ரௌப்யஸாவர்ணி, பௌத்யஸாவர்ணி என்று வரப்போகிற ஏழு மனுக்களில் முத லாவதான ஸாவர்ணி மனு என தாத்பர்யம்.

இவ்விதம் ஸ்ரீமார்கண்டேய புராணத்தில் ஸாவர்ணிக மன்வந்தரத்தில் ஸ்ரீதேவீ மாஹாத்ம்யத்தில் ஸுரதவைச்யர்களுடைய வரப்ரதானம் என்ற பதின்மூன்ருவது அத்தியாயம் இவண் முற்றும்

प्राधानिकरहस्यम् (१)

अस्य श्रीरहस्यत्रयस्य—

ब्रह्म-विष्णु-रुद्रा ऋषयः। अनुष्टुप् छन्दः। महाकाली-महालक्ष्मी-महासरस्वत्यो देवताः। महालक्ष्मीर्बीजम्। श्रीः शक्तिः। दुर्गा कीलकम्। अभीष्टफलसिद्धयर्थे जपे विनियोगः।

राजोवाच—


भगवन्नवतारा मे चण्डिकायास्त्वयोदिताः।
एतेषां प्रकृतिं ब्रह्मन् प्रधानं वक्तुमर्हसि ॥ १ ॥

राजा - *அரசன்*, उवाच - *சொன்னன்*—

(*ப - ரை*) भगवन् - *ஓ பகவானே!*, चण्डिकायाः - *சண்டிகாதேவியினுடைய*, अवताराः - *அவதாரங்கள்*, त्वया - *உன்ஞல்*, मे - *எனக்கு*, उदिताः - *சொல்லப்பட்டன*. एतेषां - *இந்த அவதாரங்களுடைய*, प्रकृतिम् - *மூலப்ரக்ருதியாகிய*, प्रधानम् - *ப்ரதானத்தை*, ब्रह्मन् - *ஓ ப்ரஹ்மனே!*, वक्तुम् - *சொல்லுவதற்கு*, अर्हसि - *(நீரே) தகுதியுள்ளவராக இருக்கிறீர்.*

அரசன் சொன்னன்—

(பொ - ரை) ஓ பகவானே! நீர் சண்டிகாதேவியினுடைய அவதாரங்களை எனக்குச் சொன்னீர். இந்த அவதாரங்களுடைய மூலகாரணமாயும், முக்கியமாயுமுள்ள, தேவியைக் குறித்து, ஓ ப்ராஹ்மணசிரேஷ்ட! நீரே சொல்வதற்குத் தகுதியுள்ளவர். (1)



உபாஸ்யமான (ஆராதிக்கத்தக்க) தேவதைகளில் முக்யமாக இருக்கின்ற தேவியையும், உபாஸனையினுடைய ஸம்பரதாயத்தையும் இங்கு ஸுரதன் ஸுமேதஸ் இருவர்களுடைய ஸம்வாத ரூபமாக வெளியிடப்படுகிறது.

चण्डिकाया: - சண்டிகாயா: - अवतारा: - அவதாரங்கள் என்றது, சண்டிகையினுடைய பலவிதமான (தோற்றங்கள்) வடிவங்களைக்குறிப்பனவாகும். துஷ்டர்களான அஸுரர்களை அழிப்பதற்கு அந்த அந்த துஷ்டர்களுக்குத் தக்கதான வடிவங்களையெடுப்பதே அவதாரமெனப்படும். சண்டிகை - மங்களவடிவினள். இச்சண்டிகாசப்தத்தினுடைய பலவகையான பொருள் விளக்கங்கள் முன்பு கொடுக்கப்பட்டிருக்கின்றன.

आराध्यं यन्मया देव्याः स्वरूपं येन तद् द्विज ।
विधिना ब्रूहि सकलं यथावऽत् प्रणतस्य मे ॥ २ ॥

(ப - ரை) द्विज - ஓ ப்ராஹ்மண! मया - என்னால், येन - எந்த, विधिना - முறையோடு, देव्याः - தேவியினுடைய, यत् - யாதொரு, स्वरूपम् - வடிவமானது, आराध्यम् - ஆராதிப்பதற்குத் தகுதியுள்ளதோ, सकलम् - முழுவதுமான तत् - அந்த வடிவத்தை प्रणतस्य - வணங்குகிற, मे - எனக்கு, यथावत् - உள்ளபடி, ब्रूहि - சொல்லுவீராக.

(பொ - ரை) ஓ அந்தண! நான் தேவியை எவ்விதம் ஆராதிக்கவேண்டுமோ, அந்த முறைகளையெல்லாம், உன்னை வணங்குகிற எனக்கு உள்ளவாறு சொல்ல வேண்டும். (2)

ऋषिरुवाच—

इदं रहस्यं परममनाख्येयं प्रचक्षते ।
भक्तोऽसीति न मे किंचित् तवावाच्यं नराधिप ॥ ३ ॥

ऋषिः - மஹர்ஷி, उवाच - சொன்னர்—

(ப - ரை) इदम् - இந்த, परमम् - உத்தமமான, रहस्यम्- ரஹஸ்யத்தை, अनाख्येयम् - செல்லத்தக்கதல்ல (என்று). प्रचक्षते - சொல்லுகின்றனர். नराधिप - ஒ அரசனே! मे - என்னுடைய, भक्तः - பக்தனுக, असि - இருக்கிருய். इति - என்று, तव - உனக்கு, अवाच्यम् - சொல்லக்கூடாதது, किंचित् न - ஒன்றுமில்லே.

மஹர்ஷி சொன்னர்—

(பொ - ரை) இந்த உத்தமமான ஸ்வரூபம் மிகவும் ரஹஸ்யமானது; இதைச் சொல்லக்கூடாதென மஹாத்மாக்களுடைய கட்டளேயாகும். ஓ அரசனே! ஆனுலும் தேவியினுடையவும், குருவினுடையவும், பக்தனுக நீ இருக்கிருய். ஆதலால் உனக்குச் சொல்லக்கூடாதது ஒன்றுமில்லே. (3)

இந்நூலின் துவக்கத்திலே வர்ணித்துள்ள ப்ரஹ்மமே **சண்டிகா** என்ற பதம் கொண்டு சொல்லப்பட்ட உபாஸனு வடிவமாகும். அந்த சண்டிகைக்கு மஹாகாளீ, மஹாலக்ஷ்மீ, மஹாஸரஸ்வதீ என்ற வ்யஷ்டிகளான மூன்று வடிவங்களுண்டு. அவைகளுடைய ஸமஷ்டி வடிவமான சண்டிகை துரீயையும், நிர்குணவடிவாகவும், வடிவமற்றவளாகவும், புலப்படாதவளும், மூன்று அவதாரங்களிலும் அடங்கியவளாகவும் இருப்பவள். அந்த சண்டிகையினுடைய அவதாரங்களே இவ்விடம் ஸ்ருஷ்டிக்ரமத்தோடு சொல்ல ஆரம்பிக்கிறர்.

सर्वस्याद्या महालक्ष्मीस्त्रिगुणा परमेश्वरी ।
लक्ष्यालक्ष्यस्वरूपा सा व्याप्य कृत्स्नं व्यवस्थिता ॥ ४ ॥

(ப - ரை) सर्वस्य - ஸகல கார்யப்ரபஞ்சத்திற்கும், (அவதாரங்களுக்கும்) आद्या - முதன்மையாகவுள்ளவளும்,

त्रिगुणा - முக்குணங்களுடைய ஸாம்யாவஸ்தையின் வடிவா யுள்ளவளும், परमेश्वरी - யாவற்றினும் மேன்மையுடையவ ளுமாயிருப்பவள், महालक्ष्मी: - மஹாலக்ஷ்மியாவள். सा - அந்த மஹாலக்ஷ்மியும், लक्ष्यालक्ष्य-स्वरूपा - காணப்பெற்றதும், காணப்பெறாததுமான வடிவத்தையுடையவளாக, कृत्स्नम् - இவ்வுலகம் முழுவதையும், व्याप्य - வியாபித்து (பரவிக் கொண்டு), व्यवस्थिता - நிலைத்திருக்கிறாள்.

(பொ - ரை) இங்கு தோற்றமளிக்கின்ற ஸமஸ்த கார்யப்ரபஞ்சத்திற்கும், எல்லா அவதாரங்களுக்கும், ஆதியாக இருப்பவளும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடைய ஸமான நிலையிலிருக்கின்ற வடிவத் தைக் கொண்டவளும், யாவற்றிலும் மேன்மையுடன் விளங்குபவள் மஹாலக்ஷ்மியாவள். அந்த மஹாலக்ஷ்மீ காணப்பட்டவளாகவும் காணப்படாதவளுமான வடி வத்தைக் கொண்டவளுமாக இவ்வுலகம் முழுவதையும் பரவிக்கொண்டு நிலைத்திருக்கிறாள்.

இவ்விடத்தில் மஹாலக்ஷ்மீ என்பது ஸாத்விக ராஜஸ தாமஸ வடிவங்களாயிருப்பது எனக் கொள்ளவேண்டும். மஹாலக்ஷ்மி மஹாஸரஸ்வதி மஹகாளியென்ற மூர்த்தி களுடைய வ்யஷ்டி வடிவும், துரீயையுமாயிருக்கிற சண்டி கையினுடைய நாமாந்தரமாகும்.

सदाशिवाङ्कमारूढा शक्तिरित्याह्वया शिवा ।
महालक्ष्मीरिति ख्याता सर्वदेवगुणान्विता ॥

"ஸதாசிவனுடைய மடியையடைந்து, சக்தியென்று அழைக்கப் பெறுகின்ற சிவா (மங்களவடிவு) என்பவளே, ஸமஸ்த தேவதைகளுடைய குணங்களோடு கூடிய மஹா லக்ஷ்மியெனச் சொல்லப்படுகிறாள்." என்பது சிவபுராண

வசனமாகும். இவ்விடத்தில் லக்ஷ்யா-ஸகுணவடிவாயிருப்பவள். அலக்ஷ்யா-நிர்குணவடிவாயிருப்பவள் அல்லது ஞானஸ்வரூபமாயிப்பவள் என்பது பொருளாகும். (4)

மத்றும், எல்லா தேவதைகளுக்கும் ஸ்தூலம் என்றும், ஸூக்ஷ்மம் என்றும் இரண்டு ரூபங்களுண்டு. அவைகளில் ஸூக்ஷ்மம் மந்த்ரவாச்யமாகவும், அந்த அந்த உபாதிவிசிஷ்டமான சைதந்யரூபமாகவும் இருப்பது. ஸ்தூலமென்பது ஸூக்ஷ்மோபாஸகர்களான பக்தர்களை அநுக்ரஹம் செய்வதாயும், அந்த ஸூக்ஷ்ம வடிவையே கரசரணுதி அவயவங்களோடு கூட அவலம்பிக்கத் தக்கதாகக் காணப்படுகின்றஆக்ருதி விசேஷமுமாகும் என்பதாம். ஸூக்ஷ்மம் சர்ம சக்ஷுஸ்ஸுக்குப் புலப்படாத ப்ரஹ்மத்தின் வடிவாம். ஸதூலம் சர்மசக்ஷுஸ்ஸுக்குப் புலப்படுகின்ற வடிவத்தோடு கூடிய மாயாஸ்வரூபமாகும். மஹாலக்ஷ்மீ இந்த இரண்டு ரூபத்தோடு கூடிய மாயாசபலித ப்ரஹ்ம ரூபிணியாயும், முக்குணத்தன்மையையும் கொண்டு, மஹாலக்ஷ்மீ உலகம் முழுவதும் வியாபித்துப் பரிபூர்ணமாயிருப்பவள். எவ்விதம் கார்யமாகிய குடம் காரணமான மண்ணினல் வியாபித்திருக்குமோ, அதுபோல இக்கார்ய ரூபமான உலகமும் காரணமான ஸச்சிதாநந்த வடிவாம் மாயாசபலித ப்ரஹ்மத்தால் வியாபிக்கப்பட்டிருக்கிறது என்பது கருத்து.

मातुलिङ्गं गदां खेटं पानपात्रं च बिभ्रती ।
नागं लिङ्गं च योनिं च बिभ्रती नृप मूर्धनि ॥ ५ ॥
तप्तकाञ्चनवर्णाभा तप्तकाञ्चनभूषणा ।
शून्यं तदखिलं स्वेन पूरयामास तेजसा ॥ ६ ॥

(ப - ரை) नृप - ஓ அரசனே !, मातुलिङ्गम् - மாதுளம் பழத்தையும், गदाम् - கதையையும், खेटम् - பரிசையையும், पान-पात्रं-च - பானபாத்ரத்தையும், बिभ्रती - தரித்துக் கொண்

டும், मूर्धनि -சிரஸில், नागम् - ஸர்ப்பத்தையும், लिङ्गं-च - லிங் கத்தையும், योनिं-च-யோநியையும், बिभ्रती-தரித்துக் கொண் டவளாயும்; तप्त-काञ्चन-वर्णाभा - உருக்கியஸ்வர்ணத்தைப் போன்ற சோபையையுடையவளும், तप्त-काञ्चन-भूषणा - உருக் கிய பொன்னுலான அழகிய ஆபரணங்களையணிந்தவளும், शून्यम् - தனது சக்தியினுல் சூன்ய வடிவான, तत् - अखिलम् - இந்த உலகம் முழுவதையும், स्वेन - தன்னுடைய, तेजसा - தேஜஸ்ஸினுல், पूरयामास - நிரப்பினுள்.

(பொ - ரை) ஓ அரசனே! நான்கு கைகளிலும் முறை யே மாதுலிங்கம், கதை, கேடயம், பானபாத்ரம் இவை களைத் தரித்துக் கொண்டவளும், சிரஸில் ஸர்ப்பம், லிங் கம், யோநி இவைகளைத் தரித்துக்கொண்டவளும், உருக் கிய தங்கத்தைப்போன்ற திருமேனியைக் கொண்டவ ளும், அவ்விதப் பொன்னுளாகிய திருவாபரணங்களை யணிந்தவளுமான மஹாலக்ஷ்மியானவள், தன்னுடைய சக்தியினுல் சூன்யமாகச்செய்த இவ்வுலகம் முழுவதையும் தன்னுடைய தேஜஸ்ஸினுல் நிரப்பியவளாக இருக்கிருள்.

இவ்விடத்தில் பக்தர்களுக்குப் புலப்படக்கூடிய ஸ்தூல வடிவம் சொல்லப்படுகிறது. மாதுலிங்கம் முதலிய ஆயு தங்களை நான்கு கைகளிலும், நாகம் முதலிய மூன்றையும் சிரஸிலும் தரித்துக் கொண்டவள் மஹாலக்ஷ்மியாவள். புருஷனைக் குறிக்கின்ற லிங்கமானது ருத்ரனையும், ஸ்த்ரீ யைக் குறிக்கின்ற யோனியானது மஹாவிஷ்ணுவையும், (விஷ்ணுவானவர் பெண்வடிவமும் ஆண்வடிவமும் கொண்டவர். "विष्णुर्योनिं कल्पयतु" "விஷ்ணுர்யோநிம் கல்ப யது என்பது ச்ருதியாகும்.) நாகம் ப்ரஹ்மனையும் குறிப் பிடுவதாகும். அக்காரணத்தால் மஹாலக்ஷ்மிக்கு ஸ்த்ரீ

புருஷவடிவமும் உண்டு என்பதும் கிடைக்கின்றது. அந்த மஹாலக்ஷ்மியானவள், மஹாப்ரளயத்தில் ஸ்தூலவடிவங்களெல்லாம் நாசத்தையடைந்து கேவலம் ஸம்ஹார வடிவமாயிருக்கிற இவ்வுலகில் சித்தின் வடிவான தன்னுடைய தேஜஸ்ஸினல் வியாபித்திருக்கிருள். (5, 6)

இந்த ஆயுதங்களைக் குறித்து ரேணுகாமஹாத்ம்யம் பின்வருமாறு கூறும் :

"दक्षिणाधःकरे पात्रमूर्ध्वे कौमोदकीं तथा ।
वामेऽथ खेटकं धत्ते श्रीफलं तदधः करे ॥
बिभ्रती मस्तके लिङ्गं पूजनीया विभूतये ॥"

"வலது கையில் பானபாத்திரத்தையும், மேல்கையில் கௌமோதகியையும், இடதுகையில் கேடயத்தையும், கீழ்க்கையில் ஸ்ரீபலத்தையும், (பில்வப்பழம்) சிரஸில் லிங்கத்தையும் தரித்துக் கொண்டிருப்பவளாகத் தியானம் செய்து விபூதியின் (ஐச்வர்யம்) பொருட்டு பூஜிக்கவேண்டும் என்பது. மேலும் ஆயுதங்களுடைய உட்பொருள் விளக்கம் வருமாறு—

"मातुलिङ्गं कर्मवृन्दं क्रियाशक्त्यात्मिका गदा ।
ज्ञानशक्त्यात्मकं खेटं तुर्यवृत्तिस्तु पानकम् ॥
लिङ्गं पुरुष इत्युक्तो योनिस्तु प्रकृतिः स्मृता ।
नागः कालः समाख्यातः संबन्धस्तु तयोर्द्वयोः ।
त्रयाणामप्यधिष्ठानं यतः स्यात्परमेश्वरी ।
नवार्णमन्त्रमध्यस्थमायाबीजस्वरूपिणी ॥

"மாதுளம்பழம் தரித்திருப்பது கொண்டு ஸகல கர்மங்களுக்கும் உரித்தான பலன்களைக் கொடுப்பவள் எனவும், கதையை வைத்துக்கொண்டிருப்பதால் க்ரியாவடிவான விக்ஷேப சக்தி எனவும், கேடயத்தைக் கொண்டிருப்பதால் ஞானசக்தியின் வடிவான ஆவரணசக்தி எனவும், பானபாத்ரம் வைத்திருக்கும்

காரணத்தால் எப்பொழுதும் ஆநந்தாநுபவரஸத்தைப் பருகுகின்றவள் எனவும் அறியவேண்டும்.

லிங்கத்தைப் புருஷனுகவும், யோநியை ப்ரக்ருதியாகவும், நாகத்தை பிரக்ருதி புருஷர்களுடைய ஸம்பந்த வடிவான காலமாகவும் கொள்ளவேண்டும். தேவீ அவைகளைத் தரித்துக் கொண்டிருப்பதால் ப்ரக்ருதி புருஷர்களுக்கும், காலத்திற்கும் அதிஷ்டான ப்ரஹ்மரூபிணியாக இருக்கிருள் என்பதும் கிடைப்பதாகும்.

இந்த மஹாலக்ஷ்மீ நவாக்ஷரீமந்த்ரத்திலுள்ள மாயாபீஜ வடிவாயிருப்பவள், இந்த பீஜமானது புவனேச்வரீ பீஜமாகும் என தந்த்ரசாஸ்த்ரங்கள் கூறுகின்றன. ஏனெனில் மஹாலக்ஷ்மீ, மாதுலிங்கம், கதை, கேடயம், பாநபாத்ரம் என்பவைகளையும், புவனேச்வரீ, பாசம், அங்குசம், வரதம், அபயம் என்பவைகளையும், தரித்துக் கொண்டிருப்பதால் ஸ்தூல வடிவில் த்யாநபேதம் கொண்டு பேதவ்யவஹாரமுண்டானலும் ஸூக்ஷ்மவடிவம் கொண்டு, மாயாபீஜமாத்ரத்தன்மை கொண்டும் மஹால்க்ஷ்மிக்கும், புவனேச்வரிக்கும் அபேதமே ஸித்திப்பதாகும்.

शून्यं तदखिलं लोकं विलोक्य परेमेश्वरी ।
वभार रूपमपरं तमसा केवलेन हि ॥ ७ ॥

(ப - ரை) परमेश्वरी -மஹாலக்ஷ்மியானள்; तत् - அந்த; अखिलम् - ஸமஸ்த; लोकम् - உலகத்தையும்; शून्यम् - சூன்யமாக; (இருப்பதை) विलोक्य - பார்த்து; केवलेन-तमसा - கேவல (முக்யமாக) தமோகுணத்தின் உபாதியைக் கொண்டு; अपरम् - வேருெரு; रूपम् - வடிவத்தை; वभार - हि - தரித்தாளல்லவா.

(பொ - ரை) அந்த மஹாலக்ஷ்மியானவள், இந்த உலகம் முழுவதும் சூன்மாயிருப்பதைக் கண்டு, தமோ

குணத்தின் உதவியை முக்யமாகக் கொண்டு வேறொரு வடிவத்தை எடுத்துக்கொண்டாள். அதாவது பிரளய காலத்தில் அதிஷ்டாதாக்களால் (அதிகார புருஷர்கள்—ப்ரஹ்மா, விஷ்ணு, ருத்ரன் முதலியவர்கள்) சூன்யமாயிருக்கின்ற இவ்வுலகமனைத்தையும் பார்த்து, தமோ குணத்தின் உதவிகொண்டு வேறொரு வடிவத்தை மஹாகாளீ எடுத்தாள் என்பது கருத்து. மாயையோடு கலந்த பரப்ரஹ்மத்தினுடைய ஸத்து, சித்து, ஆனந்தம் என்ற மூன்று வடிவங்களுக்கும், ஸத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களுடைய ஸாம்யாவஸ்தையும் உண்டு. பிரளய காலத்தில் ஒடுங்கிய ப்ராணிகளுடைய கர்மத்தின் ஏற்றத் தாழ்வு கொண்டு அந்த தமோகுணமானது தனது நிலையி னின்றும் கொஞ்சம் இளகியது போல் ஆகும். அப்பொழுது இளகிய கேவலதமோகுண வடிவமான அந்த மாயையானது தமோகுணத்தில் அபிமானம் கொண்ட "மஹாகாளீ" என்ற பெயரோடு கூடிய ஒரு ஸ்வரூபத்தை ஆச்ரயிப்பதாகும். இவவிடத்தில் மஹாலக்ஷ்மி ஸாம்யாவஸ்தையை அபிமானிப்பவள். மஹாகாளீ தமோகுணத்தை அபிமானிப்பவள் என்பதும் தாத்பர்யமாகும். அதாவது மஹாலக்ஷ்மியே மஹாகாளியாயும் பரிணமித்தாள் என்பது ஸாரம். (7)

सा भिन्नाञ्जनसंकाशा दंष्ट्राञ्चितवरानना ।
विशाललोचना नारी बभूव तनुमध्यमा ॥ ८ ॥

खड्गपात्रशिरःखेटैरलंकृतचतुर्भुजा ।
कबन्धहारं शिरसा बिभ्राणा शिरसां स्रजम् ॥ ९ ॥

(ப - ரை) सा - அந்த மஹாகாளியானவள்; भिन्नाञ्जन-संकाशां - துகளாக்கியமைக்கல்லின்வர்ணத்தோடு விளங்குபவளும்; दंष्ट्राञ्चित-वरानना - பற்களைக் கொண்டு மனோஹரமாக விளங்கும் முகத்தோடு கூடியவளும்; विशाल-लोचना - விஸ்தீர்ணமான கண்களையுடையவளும்; तनु-मध्यमा - நுண்ணிய இடையையுடையவளும்; नारी-பெண் வடிவாகவும்; खड्ग-पात्र-शिरः - खेटैः - வாள், சிரஸ், பாத்திரம், பரிசை இவைகள் கொண்டு अलंकृत-चतुर्भुजा - அலங்காரமாகச் செய்யப்பட்ட நான்கு கைகளையுடையவளும்; कबन्ध-हारम् - முண்டங்களை மாலையாக மார்பிலணிந்தும்; शिरसां स्रजम् - சிரஸுகளாலாகிய மாலையை; शिरसा-சிரஸினால், बिभ्राण - தரித்துக் கொண்டவளுமாக; बभूव - ஆனாள்.

(பொ - ரை) அந்த மஹாகாளியானவள் பொடித்து துகளாகச்செய்த அஞ்சன (மை) கல்லின் நிறத்தோடு கூடியவளும்; கோரைப்பற்களால் மனோஹரமாயிருக்கிற முகத்தோடு கூடியவளும், விஸ்தீர்ணங்களான கண்களோடு கூடியவளும், நுண்ணிய இடையையுடையவளும், பெண்வடிவம் கொண்டவளும் வாள், பாத்ரம் சிரஸ், பரிசமென்ற ஆயுதங்களால் அலங்கரிக்கப்பட்ட நான்கு கைகளோடு கூடியவளும்; மார்பில் முண்டங்களை (தலையில்லாத உடல்கள்) மாலை யாகவும்; சிரஸில் மண்டையோடுகளாலான மாலையையுமணிந்து கொண்டவளுமாக விளங்கினாள். (8-9)

இவ்விடத்தில் பின்னம் என்றும் அபின்னம் என்றும் பதத்தை பிரித்துக்கொள்ள வேணும். அந்த காளிகாதேவீ மூலதேவியாக மஹாலக்ஷ்மியினிடமிருந்து பின்னமாகவும் (வேறாகவும்) அந்த மூலதேவிக்கு அபின்னமாகவும் (ஒன்றாகவும்) இருப்பவள் என்பது கருத்து.

सा प्रोवाच महालक्ष्मीं तामसीं प्रमदोत्तमाम् ।
नाम कर्म च मे मातर्देहि तुभ्यं नमो नमः ॥

(ப - ரை) तामसी - தமோகுணவடிவாயும்; प्रमदोत्तमा - பெண் ஸமூஹத்திற்குள் சிறந்தவளுமான; सा - அந்த மஹாகாளி, महालक्ष्मीम् - மஹாலக்ஷ்மியைப் பார்த்து; प्रवोच - சொன்னாள். मातः - ஓ அன்னையே! मे எனக்கு; नाम - பெயரையும்; कर्म च - தொழிலையும்; देहि - கொடு; तुभ्यम् - உனக்கு; नमः - नमः - அனேகம் நமஸ்காரம்.

(பொ - ரை) தமோகுண ஸம்பந்தத்தையடைந்தவளாயினும் பெண்கள் ஸமூஹத்திற்குள் சிறந்தவளான, அந்த மஹாகாளியானவள், மஹாலக்ஷ்மியைப்பார்த்து, ஓ அன்னையே! எனக்குரிய பெயரையும், கர்மங்களையும் கொடுக்கவேண்டுகிறேன். (கட்டளையிடவேண்டுகிறேன்) உனக்கு அநேக நமஸ்காரங்கள் என்று சொன்னாள்.

இந்த சுலோகம் அநேககோசங்களில் காணப்பட்டாலும் ஸ்ரீபாஸ்கரராயர் இதை எடுத்துக்கொள்ளவில்லை.

तां प्रोवाच महालक्ष्मीस्तमसीं प्रमदोत्तमम् ।
ददामि तव नामानि यानि कर्माणि तानि ते ॥ १० ॥

(ப - ரை) महालक्ष्मीः-மஹாலக்ஷ்மியானவள், प्रमदोत्तमाम्- பெண்களுக்குள் சிறந்தவளாயும், तामसीम् - தமோகுணத்தைக் கொண்டவளுமான; ताम् - அந்த மஹாகாளியைப் (பார்த்து) तव உனக்கு; यानि - எந்த; नामानि - பெயர்களும்; ते - உனக்கு; (यानि) कर्माणि - எவ்வித கர்மங்களும் உண்டோ; तानि - அவைகளை; ददामि - கொடுக்கிறேன். (என்று) प्रोवाच - சொன்னாள்.

(பொ - ரை) மஹாலக்ஷ்மியானவள், பெண்களுக்குள் சிறந்தவளும், தமோகுணத்தை முக்யமாகக் கொண்டவளு மான காளிகாதேவியைப் பார்த்து உனக்கு உரித்தான பெயர்களையும், செயல்களையும் நான் கொடுக்கிறேன் எனச் சொன்னாள். (10)

महामाया महाकाली महामारी क्षुधा तृषा ।
निद्रा तृष्णा चैकवीरा कालरात्रिर्दुरत्यया ॥ ११ ॥

इमानि तव नामानि प्रतिपाद्यानि कर्मभिः ।
एभिः कर्माणि ते ज्ञात्वा योऽधीते सोऽश्नुते सुखम् ॥ १२ ॥

(ப - ரை) महामाया - மஹாமாயை யென்றும்; महाकाली- மஹாகாளீ யென்றும்; महामारी - மஹாமாரீ யென்றும்; क्षुधा - க்ஷுதை (பசி) யென்றும்; तृषा - த்ருஷா (தாகம்) என்றும்; निद्रा - நித்ரை (தூக்கம்) என்றும்; तृष्णा - த்ருஷ்ணை (ஆசைப் பெருக்கம்) என்றும் ; एक-वीरा - தனித்த ஒரு வீராங்கனை என்றும்; काल-रात्रिः - காளராத்ரியென்றும்; दुरत्यया - காப்பாற்றுகிற ஸ்வபாவத்தோடு கூடியவளென் றும்; इमानि-இந்த नामानि - பெயர்களை तव - உனக்கு; कर्मभिः- கர்மங்களோடு; प्रतिपाद्यानि - வெளியிடப்பட்டன; एभिः - இந்த நாமங்களைக்கொண்டு, ते - உன்னுடைய; कर्माणि - தொழில்களை; ज्ञात्वा - அறிந்து; यः - எவன்; अधीते - ஜபம் செய்கிறானோ; सः - அவன் ; सुखम् - ஸுகத்தை ; अश्नुते - அடைகிறான்.

(பொ - ரை) ப்ரஹ்மாதிகளையும், மோஹமடையச் செய் வதால் மஹாமாயை யென்றும், அவர்களை நிர்மாணம் செய்வதால் மஹாகாளி என்றும்; அவர்களை அழிப்பதால்

மஹாமாரீ என்றும், அவித்யாதிகளை கபளம் (விழுங்குவது) செய்வதால் **க்ஷுதை**யென்றும்; பக்தர்களுடைய பகைவர்களை அழிப்பதில் மிகவும் தாஹமுள்ளவள் ஆதலால் **த்ருஷா** என்றும், யோகநித்ரையென்ற ஸமாதி வடிவத்தோடு இருப்பதால் **நித்ராதேவி**யென்றும்; (யோகநித்ரைக்கு அதிஷ்டானமாயிருப்பவள் என்பது கருத்து.) பக்தர்கள் செய்கின்ற பக்தியில் விருப்பமுள்ளவளாகையால் **த்ருஷ்ணு** என்றும்; ப்ரபஞ்சத்தினுடைய பராக்ரம வடிவாயமைந்தவள் நீ ஒருவளேயாதலால் வீராங்கனையான உன்னை **ஏகவீரா** என்றும்; யாவற்றையும் அழிக்கும் காரணத்தால் **காளராத்ரீ** தேவியெனவும், அவ்விதமே யாவற்றையும் பரிபாலிப்பதால் **துரத்யயா** எனவும் இந்த பத்து நாமங்களும், உன்னுடைய தொழில்களைக்கொண்டு வெளியிடப்பட்டன. இவ்விதம் பத்து நாமங்களைக் கொண்டு உன்னுடைய தொழில்களையறிந்து அவைகளை அடிக்கடி எவனொருவன் ஜபம் செய்கிறானோ, அவன் ஸுகத்தை யனுபவிக்கிறான்.

இவ்விடத்தில் **மஹாமாயா** என்ற பதத்திற்கு அடியில் வருமாறு பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

गर्भान्तर्ज्ञानसंपन्नं प्रेरिते सूति मारुतैः ।
उत्पन्नं ज्ञानरहितं कुरुते या निरन्तरम् ॥

पूर्वातिपूर्वसंस्कारसंघातेन नियोज्य च ।
अहरादौ ततो मोहममत्वज्ञानसंशयम् ॥

क्रोधोपरोधलोभेषु क्षिप्त्वा क्षिप्त्वा पुनः पुनः ।
पश्चात्कामेन संयोज्य चिन्तायुक्तमहर्निशम् ॥

अमोदयुक्तं व्यसनं सक्तं जन्तुं करोति या ।
महामायेति सा प्रोक्ता तेन सा जगदीश्वरी ॥

"கர்ப்பத்தில் ஞானம் நிறைந்திருக்கிற சிசுவானது ஸூதிகாவாயுவினால் தூண்டப்பட்டு ஜனிக்கும்பொழுது, அச்சிசுவினுடைய ஞானத்தை மறைக்கின்ற யாதொரு சக்தியுண்டோ, அச்சக்திக்கே மஹாமாயா எனப்பெயர், எந்தச்சக்தியானது முந்தின ஜன்மங்களில் செய்த கர்மங்களுக்குள்ள வாஸனையைச் சேர்த்து, 'நான், எனது' என்னும் அபிமானங்களையுண்டாக்கி, காமம், க்ரோதம் முதலியவைகளோடுகூடச் சேர்த்து மோஹத்தையடைச் செய்கின்றதோ அந்த சக்தியேதான் மஹாமாயா என்பதாம். மேலே சொன்ன பெயர்கள் யாவும் தேவிபுராணத்தில் காளிகாநாமநிர்வசனாத்யாயத்தில் இதேபோல மற்ற நாமங்களுக்கும் விஸ்தாரமாகப் பொருள் விளக்கங்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. (11, 12)

तामित्युक्त्वा महालक्ष्मीः स्वरूपमपरं नृप ।
तत्त्वाख्येनातिशुद्धेन गुणेनेन्दुप्रभं दधौ ॥ १३ ॥

(ப - ரை) नृप - ஓ அரசனே! महालक्ष्मीः - மஹாலக்ஷ்மியானவள். ताम् - அந்த மஹாகாளியை (பார்த்து), इति - இவ்விதம், उक्त्वा - சொல்லி, अति-शुद्धेन - மிகவும் சுத்தமான, सत्त्वाख्येन - ஸத்வம் என்று சொல்லப்பட்ட, गुणेन - குணத்தினால், इन्दु-प्रभाम् - பூரணசந்த்ரனுக்கு ஸமானமான காந்தியையுடைய, अपरम् - மற்றொரு स्वरूपम् - வடிவத்தை दधौ - தரித்தாள்.

(பொ - ரை) ஓ அரசனே! மஹாலக்ஷ்மியானவள் அந்த மஹாகாளியைப் பார்த்து இவ்விதம் சொல்லி

விட்டு, மிகவும் சுத்தமாயிருக்கிற ஸ்த்வ குணத்தைக் கொண்டு பூர்ண சந்திரனுக்குத் துல்யமான (நிகரான) மற்றொருருவடிவை எடுத்துக் கொண்டாள். அதாவது மஹாலக்ஷ்மியானவள் மஹாஸரஸ்வதியாக ஆனாள் என்பது கருத்தாகும். (13)

अक्षमालाङ्कुशधरा वीणापुस्तकधारिणी ।
सा बभूव वरा नारी नामान्यस्यै च सा ददौ ॥ १४ ॥

(ப - ரை) सा - அந்த ஸரஸ்வதீதேவியும், अक्षमाला-ङ्कुश - धरा - ஜபமாலையையும், அங்குசத்தையும் (மாவெட்டி) தரித்துக் கொண்டும், वीणा-पुस्तक-धारिणी - வீணையையும், புஸ்தகத்தையும் தரித்துக் கொண்டும், वरा - உத்தமமான, नारी - ஸ்த்ரீயாக, बभूव - ஆனாள். अस्यै - இந்த ஸரஸ்வதிக்கு, सा च - அந்த மஹாலக்ஷ்மியும், नामानि - பெயர்களை, ददौ - கொடுத்தாள்.

(பொ - ரை) அவள் ஜபமாலை, மாவெட்டி, வீணை, புஸ்தகம் இவைகளை (நான்கு கைகளிலும்), தரித்துக் கொண்ட ஓர் உத்தம ஸ்த்ரீயாக விளங்கினாள். அந்த மஹாலக்ஷ்மீ இவளுக்குண்டாகிய பெயர்களையும், தொழில்களையும் வழங்கினாள். (14)

महाविद्या महावाणी भारती वाक्सरस्वती ।
आर्या ब्राह्मी कामधेनुर्वेदगर्भा च धीश्वरी ॥ १५ ॥

(ப - ரை) महाविद्या - மஹாவித்யா என்றும், महावाणी - மஹாவாணீயென்றும், भारती - பாரதீ யென்றும், वाक् - வாக்தேவீ யென்றும், सरस्वती - ஸரஸ்வதீயென்றும், आर्या - ஆர்யை என்றும், ब्राह्मी - ப்ராஹ்மீயெனவும், कामधेनुः -

காமதேனுவென்றும், वेदगर्भा - च - வேதகர்பா என்றும், धीश्वरी - புத்தீச்வரீயென்றும் பெயர்களாம்.

முன்பு சொல்லப்பட்ட इमानि तव नामानि - இவைகள் உன்னுடைய பெயர்கள் என்ற ச்லோகம் இவ்விடத்தில் பத்து நாமங்களிலும் ஸம்பந்திப்பதாகும்.

(பொ - ரை) மஹாவித்தையின் வடிவினள் எனவும், வாக்குகளுக்கு அதிதேவதையாயிருப்பதால் மஹாவாணீ எனவும்; எல்லாக்கலைகளையும் பரிப்பதால் பாரதீ எனவும், சொல்லின் வடிவானது கொண்டு வாக் எனவும், ஸரஸ்வ யெனவும், ஞானத்தை விரும்புகின்றவர்களால் அர்ச்சிக் கப்படுவதால் ஆர்யா சிரேஷ்டை (சிறந்தவள்) யெனவும், ப்ரஹ்மனுடைய ஸம்பந்தமுள்ள காரணத்தால் ப்ராஹ்மீ என்றும், விரும்பியவற்றைக் கொடுப்பதால் காமதேனு என வும், வேதங்களைத் தன்னிடத்தே கொண்ட காரணத்தால் வேதகர்பாயெனவும்; புத்தியின் தலைவியாதலால் தீச்வரீ தேவி யெனவும் பத்துவிதமான பெயர்களோடு பிரஸித்த மானாள். (15)

अथोवाच महालक्ष्मीर्महाकाली सरस्वतीम् ।
युवां जनयतां दिव्यौ मिथुने स्वानुरूपतः ॥ १६ ॥

(ப - ரை) अथ - பிறகு, महालक्ष्मीः - மஹாலக்ஷ்மியான வள், महाकालीम् - மஹாகாளியையும், महासरस्वतीं - மஹா ஸரஸ்வதியையும், (பார்த்து) युवाम् - நீங்கள் இருவரும், स्वानुरूपतः - தங்கள் தங்கள் குணத்திற்கு அநுஸரணையாக, दिव्यौ - மஹிமை வாய்ந்தவைகளான, मिथुनौ - இரட்டைகளை जनयताम् - உண்டாக்குங்கள். (என்று) उवाच - சொன்னாள்.

(பொ - ரை) பிறகு மஹாலக்ஷ்மீ, மஹாகாளியையும், மஹாஸரஸ்வதியையும் பார்த்து, நீங்கள் இருவரும் உங்களுடைய குணத்திற்கு அநுகூலமாயிருக்கின்ற பெருமை வாய்ந்த இரண்டு ஸ்த்ரீ புருஷர்களை உண்டாக்குங்கள் என்று சொன்னாள். (16)

इत्युक्त्वा ते महालक्ष्मीः ससर्ज मिथुनं स्वयम् ।
हिरण्यगर्भौ रुचिरौ स्त्रीपुंसौ कमलासनौ ॥ १७ ॥

(ப - ரை) **महालक्ष्मीः** - மஹாலக்ஷ்மியானவள், **ते** - அவ்விருவர்களுக்கும், **इति** - இவ்விதம், **उक्त्वा** - சொல்லிவிட்டு, **स्वयम्** - தானாக, **हिरण्यगर्भौ** - ஞானஸம்பந்நமாயும், **रुचिरौ** - மனோஹரமாயும், **कमलासनौ** - பத்மாஸனத்தில் இருப்பதுமான, **स्त्रीपुंसौ** - ஸ்த்ரீ புருஷவடிவமாயுமுள்ள, **मिथुनम्** - இரட்டையை - **ससर्ज** - ஸ்ருஷ்டி செய்தாள்.

(பொ - ரை) மஹாலக்ஷ்மியானவள் இவ்விதம் அவர்களிடம் சொல்லிவிட்டு முதலில் தானாகவே ஒரு மிதுனத்தை ஸ்ருஷ்டி செய்தாள். அந்த மிதுனமும் ஞானம் நிறைந்து, மனோஹரமான பத்மாஸனத்தை இருப்பிடமாகக் கொண்டு ஸ்த்ரீபுருஷ வடிவமாக விளங்கியது.

இங்கு **மிதுனம்** என்ற பதத்திற்கு புத்திரனும், புத்ரியுமாகிய ஸஹோதர ஸஹோதரிகள் என்பது பாஸ்கரர் உரையாகும். (17)

ब्रह्मन् विधे विरिञ्चेति धातरित्याह तं नरम् ।
श्रीः पद्मे कमले लक्ष्मीत्याह माता स्त्रियं च ताम् ॥ १८ ॥

(ப - ரை) **माता** - மஹாலக்ஷ்மியானவள், **ब्रह्मन्** - ஒ ப்ரஹ்மனே, **विधे** - ஓ விதியே ! **विरिञ्च** - ஓவிரிஞ்சியே ! **इति** -

என்றும், धातः - ஓ தாதாவே ! इति - என்றும், तम् - அந்த, नरम् - புருஷனை, आह - சொல்லி அழைத்தாள். श्रीः - ஓ ஸ்ரீயே! पद्मे-ஓ பத்மே, कमले-ஓ கமலே ! लक्ष्मि-ஓ லக்ஷ்மியே, इति-என்றும், ताम् - அந்த, स्त्रियं - च - பெண்ணையும், आह - சொல்லி அழைத்தாள்.

(பொ - ரை) மஹாலக்ஷ்மியாகிய அன்னையானவள் ஸ்ருஷ்டி செய்யப்பட்ட புருஷனை ப்ரஹ்மனென்றும், விதியென்றும், விரிஞ்சனென்றும், தாதாவென்றும், அவ்விதமே அப்பெண்ணை ஸ்ரீயென்றும், பத்மா வென்றும், கமலா வென்றும், லக்ஷ்மியென்றும் அழைத்தாள். (18)

महाकाली भारती च मिथुने सृजति स्म ह ।
एतयोरपि रूपाणि नामानि च वदामि ते ॥ १९ ॥

(ப - ரை) महा-काली-மஹாகாளியும், भारती-च - ஸரஸ்வதியும், मिथुने - ஒவ்வொரு இரட்டையை, सृजति - स्म - ह - ஸ்ருஷ்டிசெய்தனர். एतयोः - இந்த இரண்டு மிதுனங்களுடைய, रूपाणि- अपि - வடிவங்களையும், नामानि-च - பெயர்களையும், ते - உனக்கு, वदामि - சொல்லுகிறேன்.

(பொ - ரை) மஹாகாளியும் மஹாஸரஸ்வதியும் ஒவ்வொரு மிதுனத்தையும் முறையே ஸ்ருஷ்டி செய்தனர். இந்த இரண்டு மிதுனங்களுடைய ஸ்வரூபத்தையும், நாமங்களையும் நான் உனக்குச் சொல்லுகிறேன். (19)

नीलकण्ठं रक्तबाहुं श्वेताङ्गं चन्द्रशेखरम् ।
जनयामास पुरुषं महाकाली सितां स्त्रियम् ॥ २० ॥

(ப - ரை) महाकाली - மஹாகாளியானவள், नील-कण्ठम् - நீலநிறமுடைய கழுத்தோடு கூடியவனையும், रक्त - बाहुम् -

சிவந்தகைகளோடு கூடியவனையும், श्वेताङ्गम् - வெளுத்த சரீரத்தை யுடையவனும், चन्द्र - शेखरम् - சந்த்ரனை அலங்காரமாக சிரஸில் அணிந்தவருமான, पुरुषम् - புருஷனையும், सिताम् - வெளுத்தநிறத்தோடு கூடிய, स्त्रियम् பெண்ணையும் जनयामास - உண்டு பண்ணினன்.

(பொ - ரை) மஹாகாளியானவள், நீல நிறத்தோடு கூடிய கழுத்தையுடையவனும்; சிவந்த கைகளையுடையவனும், வெளுத்த திருமேனியையுடையவனும்; சந்த்ர கலையைத் தலையில் ஆபரணமாக அணிந்தவனுமான புருஷனையும், வெளுத்த நிறத்தோடு கூடிய பெண்ணையும் ஸ்ருஷ்டி செய்தாள்.

வெளுப்பான வர்ணத்தோடு கூடிய இந்த மிதுனத்தை ஸ்ருஷ்டி செய்தது கொண்டு மஹாகாளியானவள் தன்னுள் ஸத்வகுணத்தையும் கொண்டவள் என்பது கிடைக்கின்றது. (21)

स रुद्रः शंकरः स्थाणुः कपर्दी च त्रिलोचनः ।
त्रयी विद्या कामधेनुः सा स्त्री भाषा स्वराक्षरा ॥ २१ ॥

(ப - ரை) सः - அந்த புருஷன், रुद्रः - ருத்ரன் என்றும், शंकरः - சங்கரன் என்றும், स्थाणुः-ஸ்தாணுவென்றும், कपर्दी - கபர்தியெனவும், त्रिलोचनः - च - முக்கண்ணன் என்றும், सा - அப்பெண், त्रयी - த்ரயீ என்றும், विद्या - வித்யா என்றும், कामधेनुः - காமதேனு வென்றும், स्त्री: - பெண்ணென்றும், भाषा - பாஷா என்றும், स्वराक्षरा - ஸ்வராக்ஷரா என்றும் (அழைக்கப்பெற்றனர்)

(பொ - ரை) அப்புருஷன்; உலகை யழிப்பதால் ருத்ரன் என்றும்; பக்தர்களுக்கு மங்களத்தை-ஸுகத்தை-

கொடுப்பதால் **சங்கரன்** என்றும்; அசைவற்று ஸ்திரமாயிருப்பதால் **ஸ்தாணு** என்றும்; சடைமுடிகளைத் தரித்திருப்பதால் **கபர்தீ** என்றும்; மூன்று கண்களோடு விளங்குவதால் **த்ரிலோசனன்** என்றும் அழைக்கப் பெற்றான். அவ்விதமே அப்பெண்ணும் வேதவடிவாயிருப்பதால் **த்ரயீ** என்றும, ஞானவடிவாக விளங்குவதால் **வித்யா** என்றும், பக்தர்களுக்கு வேண்டிய ஸகல மனோரதங்களையும் கொடுப்பதால் **காமதேனு** என்றும், பெண்ணின் வடிவாயிருப்பதால் **ஸ்திரீ** என்றும், பாஷையின் வடிவாயிருப்பதால் **பாஷா** என்றும்; ஸ்வரங்களின் வடிவாகவும், வ்யஞ்ஜனங்கள்-அக்ஷரங்கள்-வடிவாகவுமிருப்பதால் **ஸ்வராக்ஷரா** என்றும் அழைக்கப் பெற்றாள். (22)

स्वराक्षरा - ஸ்வராக்ஷரா - என்றவிடத்தில் ஸ்வரா - உதாத்தானுதாத்த ஸ்வரிதங்கள் எனவும், **अक्षरा** - அழிவற்றவள் - அதாவது நித்யமாயுள்ளவள் எனவும் கொள்ளலாம்.

सरस्वतीं स्त्रियं गौरीं कृष्णं च पुरुषं नृप ।
जनयामास नामानि तयोरपि वदामि ते ॥ २२ ॥

(ப - ரை) **नृप** - ஓ அரசனே! **सरस्वती** - மஹாஸரஸ்வதீ, **गौरीम्** - ஸ்வர்ணநிறமுள்ள, **स्त्रियम्** - பெண்ணையும், **कृष्णम्** - நீலவர்ணத்தோடு கூடிய, **पुरुषं** - **च** - புருஷனையும், **जनयामास** - உண்டுபண்ணினாள், **तयोः** - **अपि** - அவ்விருவருடையவும், **नामानि** - பெயர்களை, **ते** - உனக்கு, **वदामि** - சொல்லுகிறேன்.

(பொ - ரை) ஓ அரசனே! மஹாஸரஸ்வதீ தேவியானவள் ஸ்வர்ணநிறமுள்ள ஒரு பெண்ணையும், நீலநிறமுள்ள ஒரு புருஷனையும் உண்டுபண்ணினாள். அவ்விருவருடைய பெயர்களையும் உனக்குச் சொல்லுகிறேன். (22)

विष्णुः कृष्णो हृषीकेशो वासुदेवो जनार्दनः ।
उमा गौरी सती चण्डी सुन्दरी सुभगा शिवा ॥ २३ ॥

(ப - ரை) **विष्णुः** - வியாபகனுயிருப்பவன். **कृष्णः** - கார் மேகம் போன்ற நிறமுள்ளவன். **हृषीकेशः** - பொறிகளுக் குள்ளே மறைந்திருப்பவன்—அந்தர்யாமியாயிருப்பவன். **वासुदेवः** - பொறிகளை விளங்கச் செய்பவன், **जनार्दनः** - துஷ்ட ஜனங்களைப் பீடிப்பவன். **उमा** - மஹாதபஸ்விநீ, **गौरी** - பொன்னிறமுள்ளவள். **सती** - மஹாபதிவ்ரதை, **चण्डी** - ரொம்பவும் கோபமுள்ளவள். **सुन्दरी** - ரொம்பவும் அழகுள் ளவள். **सुभगा** - பெருகிய பாக்யத்தையுடையவள். **शिवा** - மங்கள வடிவத்தையுடையவள்.

(பொ - ரை) அப்புருஷன் எங்கும் பரவியிருப்பதால் **விஷ்ணு** என்றும், நீருண்டமேகம் போன்ற நிறத்தைக் கொண்டதால் **கிருஷ்ணன்** என்றும், இந்திரியங்களையும் கடந்து நிற்பதால் **ஹ்ருஷீகேசன்** என்றும், பொறிகளை விளங்கச் செய்வதால் **வாஸுதேவன்** என்றும்; துஷ்டர்களை சிக்ஷிப்பதால் **ஜநார்தனன்** என்றும் அழைக்கப் பெற்ருன். அவ்விதமே அப்பெண்ணும்; தீவிரமான தவத்தோடு விளங்குவதால் **உமா** என்றும், பொன்னிறமுள்ள அவயவத் தையுடைய காரணத்தால் **கௌரீ** என்றும், மஹாபதிவ்ர தையாயிருப்பதால் **ஸதீ** எனவும், அதிக கோபத்தை யுடைய காரணத்தால் **சண்டீ** எனவும், சிறந்த ரூபலாவண் யத்தோடு கூடியதால் **ஸுந்தரீ** எனவும், ஸகல பாக்யங்களை யும் கொண்ட காரணத்தால் **ஸுபகா** எனவும், ஸகல மங் கள வடிவாயிருப்பதால் **சிவா** எனவும் அழைக்கப் பெற் ருள். (23)

एवं युवतयः सद्यः पुरुषत्वं प्रपेदिरे ।
चक्षुष्मन्तोऽनुपश्यन्ति नेतरेऽतद्विदो जनाः ॥ २४ ॥

(ப - ரை) **एवम्** - இவ்விதம், **युवतयः** - அப்பெண்களும், **पुरुषत्वम्** - புருஷத்தன்மையை, **प्रपेदिरे** - அடைந்தனர், **चक्षुष्मन्तः** - ஞானக்கண்ணுள்ளவர்கள், **अनुपश्यन्ति** - பார்க்கின்றனர். **इतरे** - மற்றவர்களான, **अतद्विदः** - அதை (மாயை) யறியாத, **जनाः** - ஜனங்கள், **न** - அறிவதில்லை.

(பொ - ரை) இவ்விதம் அப்பெண்கள் புருஷத்தன்மையடைந்ததை ஞானக்கண்ணுள்ள ஞானிகள் அறிகின்றனர். மற்றவர்கள் அந்த மாயாசக்தியைக் காண்பது முடியாது. (24)

இவ்விதம் மூன்று மிதுனங்களை ஸ்ருஷ்டி செய்து அவர்களுடைய விவாஹத்திற்கு புருஷர்கள் இல்லாததால் கந்யகாதானம் செய்து தம்பதிகளாக வேண்டுமெனக்கருதி தானுகவே இந்த இரண்டு வடிவங்களைத் தரித்தாள். மஹாலக்ஷ்மீ பிரஹ்மவடிவத்தையும், மஹாகாளீ ருத்ரவடிவத்தையும், மஹாஸரஸ்வதி விஷ்ணு வடிவத்தையும் முறையே அடைந்தனர். இவ்வடிவங்கள் ஸாதாரணமான கண்களுக்குப் புலப்படாதவை - கண்களுடைய குணபௌஷ்கல்யம் (நிறைவு) கொண்டு ஞானக்கண்கள் படைத்தவர்களே காணமுடியும் என்பது கருத்து.

ब्रह्मणे प्रददौ पत्नीं महालक्ष्मीर्नृप त्रयीम् ।
रूद्राय गौरीं वरदां वासुदेवाय च श्रियम् ॥ २५ ॥

(ப - ரை) **नृप** - ஓ அரசனே! **महालक्ष्मीः** - மஹாலக்ஷ்மியானவள், **त्रयीम्** - ஸரஸ்வதியை, **ब्रह्मणे** - ப்ரஹ்மாவுக்கு, **पत्नीम्** - மனைவியாகவும், **वरदाम्** - வரங்களைக் கொடுக்கின்ற,

गौरीम् - கௌரியை, रुद्राय - ருத்ரனுக்கும், श्रियम् - லக்ஷ்மியை, वासुदेवाय - च - வாஸுதேவனுக்கும், प्रददौ - கொடுத்தாள்.

(பொ - ரை) ஓ அரசனே! மஹாலக்ஷ்மியானவள், ஸரஸ்வதியை ப்ரஹ்மாவுக்கும், வரத்தைக் கொடுக்கின்ற கௌரியை ருத்ரனுக்கும், லக்ஷ்மியை வாஸுதேவனுக்கும் கன்யாதானமாகக் கொடுத்தாள். (25)

स्वरया सह संभूय विरञ्चोऽण्डमजीजनत् ।
बिभेद भगवान् रुद्रस्तद्गौर्या सह वीर्यवान् ॥ २६ ॥

(ப - ரை) विरिञ्चः - ப்ரஹ்மாவும், स्वरया -सह-ஸரஸ்வதியோடு கூட, संभूय - சேர்ந்து, अण्डम् - ப்ரஹ்மாண்டத்தை, अजीजनत्-உண்டு பண்ணினர். वीर्यवान्-வீரத்தோடு கூடிய, रुद्रः-भगवान्-ருத்ரபகவான், गौर्या सह-கௌரியோடு கூட, तत् - அந்த ப்ரஹ்மாண்டத்தை, बिभेद - அழித்தார்.

(பொ-ரை) ப்ரஹ்மாவும் ஸரஸ்வதியோடுகூட சேர்ந்து இந்த ப்ரஹ்மாண்டத்தை படைத்தான். ருத்ரபகவானே கௌரியோடு கூட அந்த ப்ரஹ்மாண்டத்தை (ஊழிக்காலத்தில் கர்மஸமூஹங்களோடு கூடியிருக்கிற அவ்வண்டத்தை) யழித்தார். (26)

अण्डमध्ये प्रधानादिकार्यजातमभून्नृप ।
महाभूतात्मकं सर्वं जगत्स्थावरजङ्गमम् ॥ २७ ॥
पुपोष पालयामास तल्लक्ष्म्या सह केशवः ।
संजहार जगत्सर्वं सह गौर्या महेश्वरः ॥ २८ ॥

(ப - ரை) नृप - ஓ அரசனே! अण्डमध्ये - அந்த ப்ரஹ்மாண்டத்தின் நடுவில், प्रधानादि -மூலப்ருகிருதி மஹத்

அஹங்காரம் முதலிய, **कार्यजातम्** - தத்வஸமூஹமானது, **अभूत्** - உண்டாகியது, **महा-भूतात्मकम्** - பஞ்சபூதங்களின் வடிவான, **स्थावरजङ्गमम्** - சராசரங்களுடன் கூடிய, **तत्** - அந்த, **सर्वम्** - ஸமஸ்தமான, **जगत्** - உலகை, **केशवः**- விஷ்ணுவானவர், **लक्ष्म्या सह** - லக்ஷ்மியோடு கூட, **पुपोष** - வளர்த்தும், **पालयामास** - பாதுகாக்கவும் செய்தார். **महेश्वरः** - மஹேச்வரன், **गौर्या-सह** - கௌரியோடு கூட, **सर्वम्** - ஸமஸ்தமான, **जगत्** - உலகையும், **संजहार** - ஸம்ஹாரம் செய்தார்.

(பொ - ரை) ஓ அரசனே! அந்த ப்ரஹ்மாண்டத்தில் நடுவில் மூலப்ரகிருதி, மஹத், அஹங்காரம் முதலிய தத்துவ ஸமுஹம் உண்டாகியது. பஞ்சபூதங்களுடைய வடிவாயமைந்த சராசரங்களோடுகூடியதான உலகம் முழுவதையும் விஷ்ணுபகவான் லக்ஷ்மியோடுகூட வளர்த்துப் பாதுகாத்து வந்தார். மஹேச்வரனே கௌரியுடன் கூட அவ்வுலகத்தை அழித்தார். (27, 28)

महालक्ष्मीरेव मता राजन् सर्वेश्वरेश्वरी ।
निराकारा च साकारा सैव नानाभिधानभृत् ॥ २९ ॥
नामान्तरैर्निरूप्यैषा नाम्ना नान्येन केनचित् ।

॥ इति प्राधानिकरहस्यम् ॥ १ ॥

(ப - ரை) **राजन्** - ஓ அரசனே! **महालक्ष्मीः-एव** - மஹாலக்ஷ்மியே, **सर्वेश्वरेश्वरी** - எல்லா ஈவச்வரர்களுக்கும், ஈவரிகளுக்கும், ஈச்வரியாயிருப்பவள் என்பது, **मता** - ஸம்மதம். **निराकारा**-உருவமற்றவளும், **साकारा-च** - உருவத்தோடு கூடியவளும், **नानाभिधान-भृत्**-பலவிதமான பெயர்களை தரிக்கின்றவளுமான, **सा-एव** - அந்த மஹாலக்ஷ்மியே, **नामान्तरैः** -

வேறு நாமங்களினுல், **निरूप्या** - நிரூபிக்கப்பட்டவளுமான, **एषा** - இவள், **अन्येन** - வேருன, **केनचित्** - ஏதாவதொரு, **नाम्ना** - பெயரினுல், **न** - நிரூபிக்கப்படுபவள் இவளல்ல.

(பொ - ரை) ஓ ராஜனே! எல்லா ஈச்வரர்களுக்கும், ஈச்வரிகளுக்கும் ஈச்வரியாயுள்ளவள் (தலைவி) மஹாலக்ஷ்மியேயாவள் என்பது வேதம், சாஸ்த்ரம், புராணம், இதிஹாஸம், ஆகமம், உபநிஷத்துகள் இவைகளுடைய அபிப்பிராயமாகும். உருவத்தோடு கூடாதவளும். மாம்ஸசக்ஷுஸ்ஸுக்கு புலப்படக்கூடிய உருவத்தோடு கூடியவளாயும், (லக்ஷ்யா லக்ஷ்யஸ்வரூபங்களை வஹிக்கின்றவன்) மஹாகாளீ முதலிய பல நாமங்களைத் தரிப்பவளும், அந்த மஹாலக்ஷ்மியேயாவள். மஹாமாயா முதலிய நாமங்களைக் கொண்டும், மஹாவித்யா முதலிய நாமங்களைக் கொண்டும் நிரூபிக்கப்பட்டவளும் இந்த மஹாலக்ஷ்மியேயாவள். இந்த மஹாலக்ஷ்மீ வேருன ஏதாவதொரு நாமம் கொண்டு நிரூபிக்கப்பட்டவளல்ல. ஸமஸ்த நாமங்களைக் கொண்டும் நிரூபிக்கப்பட்டவளாகும். (29)

துரீயையான மஹாலக்ஷ்மிக்கு நாமங்கள் கிடையாததால் வ்யஷ்டிவடிவம் கொண்ட மற்றவர்களான மஹாகாளீ முதலியவர்களுடைய நாமங்களைக் கொண்டு அவள் நிருபணம் செய்யப்பட வேண்டியவளாக இருக்கிருள். ஸமஷ்டியாயும் துரீயையாயும் இருக்கிற அம்மஹாலக்ஷ்மியை விட்டு, வ்யஷ்டிகள் மூன்றுக்கும் நடுநிலையாயுள்ள மஹாலக்ஷ்மியே ஸர்வோத்தமா என்று சொல்லியது உபாஸகர்களிடத்திலுள்ள அபிமானத்தின் காரணமாக எழுந்த க்ரந்தத்தினுடைய ஸரஸமான அபிப்பிராயமாகும்.

இந்த தேவீமாஹாத்ம்யத்தில் நான்கு ஸ்துதிகளுண்டு, அவைகளில் **தேவீஸூக்தம்** மஹாகாளீ முதலிய மூன்று தேவதை

களினின்றும் அபின்னமானயும், துரீயையாயுமிருக்கிற மஹாலக்ஷ்மியை ஸ்துதிப்பதும், மற்ற மூன்றும் முறையே ஸகுணவடிவங்களான காளீ முதலிய மூன்று மூர்த்திகளேயும் ஸ்துதி செய்வதாகும்.

சிலர் துரீயையான மஹாலக்ஷ்மியை உபாஸித்தால் போதுமானது என்றும், வ்யஷ்டி வடிவங்களான காளீ முதலியவைகள் முக்கிய மல்லவென்றும், மஹாகாளியும், மஹாலக்ஷ்மியும், மஹாஸரஸ்வதியும் முறையே மூன்று சரிதங்களுக்கும் தேவதைகளெனவும், மஹாலக்ஷ்மீ நவாக்ஷரீமந்திரத்தினுடைய தேவதை எனவும் கூறுகின்றனர். அப்பொழுது தேவீமாஹாத்மயம் கொண்டு மஹாலக்ஷ்மி உபாஸிக்குத்தக்க தேவதை அல்லவென்றும், மஹாகாளீ முதலியவர்கள்தான் உபாஸிக்கத்தக்கவர்கள் என்பதும் கிடைப்பதாகும். லக்ஷ்மீதந்த்ரத்தில் தேவியினுடைய தசாவதாரங்களே வர்ணிக்கும் பொழுது முதலாவதாக மஹாலக்ஷ்மியையும், பிறகு மஹாகாளீ முதல் ப்ராமரீ வரையிலுள்ள ஒன்பது அவதாரங்களேயும் சொல்லியிருக்கிறது. அது பின்வருமாறு—

“ एतासां परमा प्रोक्ता कूटस्था सा महीयसी ।
महालक्ष्मीर्महाभागा प्रकृतिः परमेश्वरी ॥

अमुष्याः सावताराया महालक्ष्म्या ममानघ ।
जन्मानि चरितैः सार्धं स्तोत्रैर्वैभववादिभिः ॥

कथितानि पुरा शक्र वसिष्ठेन महात्मना ।
स्वारोचिषेऽन्तरे राज्ञे सुरथाय महात्मने ॥
समाधये च वैश्याय प्रणतायावसीदते । ”

என இவ்விதம் சொல்லியிருப்பது கொண்டு தேவீமாஹாத்மயம் துரீயையாயிருக்கிற மஹாலக்ஷ்மியினுடைய ஜன்மங்களேயும் சரிதங்களேயும் வர்ணிப்பதாகையால் மேலே சொன்ன அபிப்பிராயம் ஊர்ஜிதமாகிறது. அக்காரணம் கொண்டு மூன்று சரிதங்களின் வடிவான இந்த தேவீமாஹாத்மயத்தாலும், நவாக்ஷரீ

மந்த்ரத்தாலும் உபாஸிக்கத்தக்க தேவதையானது வ்யஷ்டி த்ரயங்களுடைய அபிமானியாயும், ஸமஷ்டி ஸ்வரூபிணியாயும் இருக்கிற ஸ்ரீமஹாலக்ஷ்மியேயாவள் என்பது ஸித்தமாகிறது.

ஸ்ரீமஹாலக்ஷ்மீ நிர்குணமாயிருப்பினும், ஸகுணமாகவும் பலவகையான நாமரூபங்களோடு கூடியவள் என்பனபோன்ற விஷயங்களை எமது தேவீ அதர்வ சிர உபநிஷத்தின் உரையில் விரிவாகக் காணலாம்.

இவ்விதம் ப்ராதானிகரஹஸ்யம்
இவண் முற்றும்.

अथ वैकृतिरहस्यम् (२).

ऋषिरुवाच—

त्रिगुणा तामसी देवी सात्त्विकी या त्रिधोदिता ।
सा शर्वा चण्डिका दुर्गा भद्रा भगवतीर्यते ॥ १ ॥

(ப - ரை) या - யாதொரு தேவியானவள், त्रिगुणा - தமோகுணத்தையும், ஸத்வகுணத்தையும், ரஜோகுணத்தையுமுடைய லக்ஷ்மீயெனவும், तामसी - தமோகுணவடிவான, देवी - காளியென்றும், सात्विकी - ஸத்துவகுணத்தைக் கொண்டவளான ஸரஸ்வதீயென்றும், त्रिधा - மூன்றுவிதமாக, उदिता - சொல்லப்பட்டாளோ, सा- அந்ததேவீ, शर्वा - சர்வா என்றும், चण्डिका- சண்டிகை என்றும், दुर्गा- துர்கை என்றும், भद्रा - பத்ரை என்றும், भगवती- பகவதீ என்றும், ईर्यते - சொல்லப்படுகிருள்.

(பொ - ரை) தமோகுணத்தையும், ஸத்வகுணத்தையும், ரஜோகுணத்தையும் கொண்டவள் ஸ்ரீமஹாலக்ஷ்மீ, தமோகுணத்தையே முக்கியமாகக்கொண்டவள் மஹாகாளீ, ஸத்வ குணத்தையே முக்கியமாகக் கொண்டவள் மஹாஸரஸ்வதீ. இவ்விதம் மூன்று விதமாக்ச்சொல்லப்பட்ட அந்ததேவியை சர்வா, சண்டிகா, துர்கா, பகவதீ எனவும் சொல்லப்படும். (1)

சர்வா முதலிய தேவிகள் புருஷஸம்பந்தமில்லாத ஸ்வதந்த்ர சக்திகளாவர் என்பது ஸாரம், மஹாலக்ஷ்மீ மூன்று விதமாக இருந்த பொழுதிலும், உண்மையில் ஒருவளேயாவள், அவள் சர்வா என்ற பல நாமங்களோடு விளங்குபவள்.

योगनिद्रा हरेरुक्ता महाकाली तमोगुणा ।
मधुकैटभनाशार्थं यां तुष्टावाम्बुजासनः ॥ २ ॥

(ப - ரை) अम्बुजासनः - ப்ரஹ்மனும், मधुकैटभनाशार्थम् - மதுகைடபர்களுடைய நாசத்தின் பொருட்டு, याम् - எந்த தேவியை, तुष्टाव - ஸ்தோத்ரம் செய்தாரோ, हरेः - மஹாவிஷ்ணுவினுடைய, योगनिद्रा - யோகநித்ரையாயும், तमोगुणा - தமோகுணவடிவாயுமிருக்கிற, सा - அந்ததேவி, महाकाली - மஹாகாளியென்று, उक्ता - சொல்லப்பட்டாள்.

(பொ - ரை) ப்ரஹ்மாவும் மதுகைடபர்களுடைய நாசத்திற்காக எந்த தேவியை ஸ்தோத்திரம் செய்தாரோ, அந்த தேவியானவள், மஹாவிஷ்ணுவினுடைய யோக நித்ராவடிவாயிருப்பவளும், தமோகுணவடிவாயிருப்ப வளுமான மஹாகாளியென்றும் சொல்லப்பட்டாள். (2)

अम्बुजासनः - அம்புஜாஸந:—தாமரைப் புஷ்பத்தை ஆஸந மாக (இருக்கை) கொண்டவள்.

दशवक्त्रा दशभुजा दशपादाञ्जनप्रभा ।
विशालया राजमाना त्रिंशल्लोचनमालया ॥ ३ ॥

(ப - ரை) (सा - அந்தமஹாகாளீ) दशवक्त्रा - பத்து முகங்களைக் கொண்டவள். दजभुजा - பத்துக்கைகளைக் கொண்டவள். दशपादा - பத்துக்கால்களைக் கொண்டவள். अञ्जनप्रभा- அஞ்சனக்கல்லினுடைய ப்ரபை போன்ற பிரபை யோடு கூடியவள். विशालया - விஸ்தீர்ணமான, त्रिशत्-लोचन-मालया-முப்பது கண்களைக் கொண்டவரிசையோடு, राजमाना - விளங்குகின்றவள்.

(பெ - ரை) அந்த மஹாகாளியும் பத்து முகங்களோடும், பத்துக் கைகளோடும், பத்து பாதங்களோடும் கூடியவளாகவும், அஞ்சனக்கல்லின் காந்தி போன்ற காந்தியையுடைவளும், விஸ்தீர்ணமான முப்பது கண்களைக் கொண்டவரிசையோடு விளங்குபவளுமாவள்.

स्फुरद्दशनदंष्ट्राभा भीमरूपापि भूमिप ।

रूपसौभाग्यकान्तीनां सा प्रतिष्ठा महाश्रियाम् ॥ ४ ॥

(ப - ரை) भूमिप - ஓ அரசனே! सा - அந்ததேவீ, स्फुरत्-दशन-दंष्ट्राभाः - ப்ரகாசிக்கின்ற தந்தங்களுடையவும், கோரைப்பற்களுடைய சோபையோடும் கூட भीमुरूपा-अपि - பயங்கரவடிவத்தோடு இருந்தாலும், रूप-सौ-भाग्यकान्तीनाम् - உருவங்களுக்கும், மங்களங்களுக்கும், காந்திகளுக்கும், महाश्रियाम् - பெருகிய ஐச்வர்யங்களுக்கும், प्रतिष्ठा - இருப்பிடமாயுள்ளவளுமாவள்.

(பெ - ரை) ஓ அரசனே! அந்த மஹாகாளியானவள், ப்ரகாசிக்கின்ற பற்களோடும், கோரைப்பற்களோடும் விளங்கிக்கொண்டு பார்ப்பதற்கு பயங்கரவடிவத்தோடு இருந்தாலும், அழகுக்கும், மங்களங்களுக்கும், காந்திகளுக்கும், பெருகிய ஐச்வர்யங்களுக்கும் இருப்பிடமாயுள்ளவள். (4)

இந்த மஹாகாளீ பகைவர்களுக்குப் பயங்கர வடிவாக, இருந்த பொழுதிலும், பக்தர்களுக்கு அழகிய வடிவாகவும், ஸௌந்தர்யம் ஸம்பத்து முதலியவைகளைக் கொடுப்பவளும் ஆவள் என்பது கருத்து.

खड्गबाणगदाशूलशङ्खचक्रभुसुण्डिभृत् ।

परिघं कार्मुकं शीर्षं निश्च्योतद्रुधिरं दधौ ॥ ५ ॥

एषा सा वैष्णवी माया महाकाली दुरत्यया ।
आराधिता वशीकुर्यात्पूजाकर्तुश्चराचरम् ॥ ६ ॥

(ப - ரை) (सा-அந்த தேவி) खड्ग-बाण-गदा-शूल-शङ्ख-चक्र-भुसु-ण्डिभृत्-வாள், சரம், கதை, சூலம், சங்கம், சக்ரம், புஸுண்டி இந்த ஆயுதங்களைத்தரித்தவளும், परिघम् - இரும்பு உலக்கையையும், कार्मुकम् - வில்லையும், निश्च्योतत्-रुधिरम् - பெருகிவழிகின்ற உதிரத்தையுடைய, शीर्षम् - தலையையும், दधौ - தரித்தவளுமான, सा - அந்த, एषा-இந்த, वैष्णवी-माया-விஷ்ணுமாயையானவள், दुरत्यया - கடக்கமுடியாத, महाकाली - மஹாகாளியானவள், आराधिता - ஆராதிக்கப்பட்டால், पूजा-कर्तुः - பூஜைசெய்கிற பக்தனுக்கு, चराचरम्-சராசரமான இவ்வுலகம் முழுவதையும், वशीकुर्यात् - வசியமாகும்படி செய்வாள்.

(பெ - ரை) வாள், சரம், கதை, சூலம், சங்கம், சக்ரம், புஸுண்டி, இரும்பு உலக்கை, வில், ரத்தம் சொரிகின்ற சிரஸ் இந்த ஆயுதங்களைத்தரித்துக் கொண்டவளான விஷ்ணுமாயா என்ற கடக்க முடியாதவளான அந்த மஹாகாளீ பக்தர்களால் ஆராதனை செய்யப்பட்டால் சராசரங்கள் நிறைந்த உலகமனைத்தையும் அடிமையாகும் படிசெய்வாள். (5, 6)

सर्वदेवशरीरेभ्यो याविर्भूतामितप्रभा ।
त्रिगुणा सा महालक्ष्मीः साक्षान्महिषमर्दिनी ॥ ७ ॥

(ப - ரை) या-எந்த தேவியானவள், सर्व-देव-शरीरेभ्यः - ஸகலதேவர்களுடைய சரீரங்களிலிருந்து, अमित-प्रभा - அளவற்ற காந்தியோடுகூடியவளாக, आविर्भूता-உண்டானாளோ

सा - அந்த தேவீ, **त्रिगुणा** - மூன்று குணங்களோடு கூடியவளும், **साक्षात्-महिमर्दिनी** - ஸாக்ஷாத் மஹிஷமர்திநியுமான, **महालक्ष्मी** - மஹாலக்ஷ்மியாவள்.

(பெ - ரை) ஸகல தேவர்களுடைய சரீரங்களிலிருந்து அளவற்ற ப்ரகாசத்தோடு வெளியே வந்த அந்த தேவியானவள், ஸத்வம் ரஜஸ், தமஸ் என்ற முக்குணங்களோடு கூடியவளும், ஸாக்ஷாத் மஹிஷாஸுர மர்திநியுமாயிருப்பவள் ஸ்ரீமஹாலக்ஷ்மியேயாவள். (7)

श्वेतानना नीलभुजा सुश्वेतस्तनमण्डला ।
रक्तमध्या रक्तपादा नीलजङ्घोरुरुन्मदा ॥ ८ ॥

(ப - ரை) (**सा** - அந்த தேவீ) **श्वेतानना** - நிர்மலமான (வெண்மை) முகத்தோடு கூடியவளும், **नीलभुजा** - நீலநிறமுள்ள புஜங்களையுடையவளும், **सु-श्वेत-स्तन-मण्डला** - நன்கு வெளுத்த கொங்கைகளுடைய வட்டங்களையுடையவளும், **रक्त-मध्या** - சிவந்த நிறத்துடன் கூடிய நுண்ணிய இடையையுடைவளும், **रक्त-पादा** - சிவந்த பாதங்களையுடையவளும், **नील-जङ्घोरुः** - நீலநிறமுள்ள முழங்கால்களோடும், தொடைகளோடு கூடியவளும், **उन्मदा** - உத்க்ருஷ்ட, (சிறந்த) மதத்தோடு, கூடியவளுமாவள்.

(பெ - ரை) அந்த மஹாலக்ஷ்மீ நிர்மலமான முகத்தோடும், நீலநிறமான கைகளோடும், நன்ருக வெளுத்த கொங்கைகளுடைய வட்டங்களோடும், சிவந்த நிறமுள்ள நுண்ணிய இடையோடும், சிவந்த பாதங்களோடும், நீல நிறமான முழங்கால்களோடும், தொடைகளோடும், உத்க்ருஷ்டமான மதத்தோடும் கூடியவள். (8)

முகத்தினுடைய நிர்மலமானது (வெண்மை) சிவனுடைய அம்சத்திலிருந்து உண்டானது. கொங்கைகளுடைய வெண்மை யானது ஸோமனுடைய அம்சத்திலிருந்து உண்டானது. இவ் விதம் ஒவ்வொன்றையும் மத்யமசரிதத்தில் சொல்லியிருப்பதை அனுஸரித்து ஊஹித்துக் கொள்ளவேண்டும்.

सुचित्रजघना चित्रमाल्याम्बरविभूषणा ।
चित्रानुलेपना कान्तिरूपसौभाग्यशालिनी ॥ ९ ॥

(ப - ரை) (सा - அந்த தேவீ) सु-चित्र-जघना - ஆச்சரிய மான ஜகனங்களோடு(கடிதடம்)கூடியவளும், चित्र-माल्याम्बर-विभूषणा - மனதைக்கவருகின்ற மாலைகளோடும் வஸ்த்ரங்க ளோடும், ஆபரணங்களோடும் கூடியவளும், चित्रानुलेपना- வியப்பை யுண்டுபண்ணுகிற மையைத் தீட்டிக்கொண்டவ ளும், कान्ति-रूप-सौभाग्य-शालिनी - காந்திகளாலும், அழகுகளா லும், ஸௌபாக்யங்களாலும் நிறைந்தவளுமாவள்.

(பெ - ரை) அந்த மஹாலக்ஷ்மீ, அதிசயமான நிதம் பத்தோடு (கடிதடம்) கூடியவளும், மனதைக்கவருகின்ற வஸ்த்ரங்கள், ஆபரணங்கள் இவைகளோடு கூடியவளும், வியப்புடன் விளங்கும் கரிய அஞ்சனத்தைத் தரித்த வளும், காந்திகளாலும், அழகுகளாலும், ஸௌபாக்யங் கள் நிறைந்தவளாகவும் விளங்குபவள். (9)

अष्टादशभुजा पूज्या सा सहस्रभुजा सती ।
आयुधान्यत्र वक्ष्यन्ते दक्षिणाधःकरक्रमात् ॥ १० ॥

(ப - ரை) सा-அவள், सहस्रभुजासती - அளவற்ற கை களோடு கூடியிருந்தாலும், अष्टादश भुजा - பதினெட்டுக் கை களுடன் கூடியவளாக, पूज्या - பூஜை செய்யத்தக்கவள்.

अत्र - இவ்விடத்தில், दक्षिणाधःकरक्रमात्-வலது பக்கம் தாழ்ந்த கை முதல், आयुधानि - ஆயுதங்களை, वक्ष्यन्ते - சொல்லுகிறேன்.

